

*Rai Sahib T. M. Ponnoosawmy Pillay*

# GNANAMBIKAI

**(With Pictures)**

## A TAMIL NOVEL

BY

**T. M. Ponnoosawmy Pillay, Rai Sahib,**

*Retired Treasurer, Paper Currency Office, Rangoon,*

*(Author of Kamalatchi, Vijayasundaram, Gnanasambandari, Sivagnanam, Gnanappragasam and Harichandra.)*

MADRAS-1

SECOND EDITION.

MADRAS

Printed by Thompson & Co., at the "Minerva" Press,

33, Popham's Broadway.

1919

*All Rights Reserved.*

*Wrapper · Re. 1-8.* *Postage Extra.*

உ

கடவுள் துணை

# ஞானாம்பிகை

(படங்களுடன்)

(கமலாக்ஷி, விஜயசுந்தரம், ஞானசம்பந்தம், சிவஞானம், ஞானப்பிரகாசம், அரிச்சந்திரன் இயற்றியவர்)

இரங்கூன் பேபர் கரென்ஸி ஆபீஸ் பொக்கிஷதாரராக இருந்த

ராய் சாயிப்

திரிசிரபுரம் ம. பொன்னுசாமி பிள்ளை

இயற்றியது.

இரண்டாம் பதிப்பு.

சென்னை:

தாம்ஸன் அண்டு கம்பெனியில்

பதிப்பிக்கப்பட்டது.

1919

*All Rights Reserved.*

ராப்பர் ரூ 1—8—0 தபால் வர்த்தனை வேறு.

10334.

உ

கடவுள் துணை

# முகவுரை

இதற்குமுன் கமலாக்ஷி விஜயசுந்தரம் ஞானசம்பந்தம் என்னும் மூன்று கற்பனைக்கதைகளை யான் எழுதி வெளியிட்டிருந்தேன். இப்பொழுது ஞானம்பிகை என்னும் இதனை வெளியிடுகிறேன். சில மாதங்களில் சிவஞானம், ஞானப்பிரகாசம் என்பன வெளிவரும்.

கௌரவமான துரைத்தன உத்தியோகத்தில் நெடுநாள் சேவை செய்து இப்போது உபகாரச் சம்பளம் பெற்று தேகயாத்திரை செய்துகொண்டிருப்பினும் என்காலத்தை வீணில் கழிக்காமல் சிறுவர் சிறுமிகளுடைய நன்மையையும் விநோதத்தையும் கருதி உலகானுபவத்தையொட்டி இக்கதைகளை எழுதத் துணிந்தேன்.

திரிசிரபுரம் எனது ஜன்மபூமியாதலால், இளமையில் தென்னாட்டுத் தமிழ்மக்களிடையில் வளர்ந்து வேளாளர் முதலாயினோருடைய குடிவாழ்க்கை வகைகளையும் அவர்கள் இயல்பையும் நான் நெருக்கமாகப் பழகி யறிந்திருந்தேன். இரங்கூன் நான் துரைத்தன

சேவை செய்திருந்த இடமாகையால், நாட்டுக் கோட்டை நகரத்து ஸாவகாரிகளான வேளாண் செட்டிகளோடு கொடுக்கல் வாங்கல் ஸம்பந்தமாக நெருங்கிப் பழகி அவர்கள் இயல்பையும் அறிந்திருக்கிறேன். ஆகவே என்னுடைய கதைகள் பெரும்பாலும் வேளாண்குடி மக்களையும் வேளாண் செட்டிகளையுமே பற்றியிருக்கும்.

பொருள் உற்பத்திக்குக் காரணமான வேளாண் குடிகளும் பொருள் பரவுதற்குக் காரணமான வேளாண் செட்டிகளும் நெடுங்காலமாய்த் தென்னாட்டின் வளப்பத்துக்கு ஆதாரமானவர்கள் என்பது பழைய தமிழ் நூல்களாலும் கர்ன பரம்பரையான வரலாறுகளாலும் தெளிவான விஷயம். இப்படிப்பட்டவர்களிடத்தில் காலாந்தரமாக வழங்கிவருகின்ற ஸதாசாரங்களின் இடையில் சில துராசாரங்களும் கிளைத்துத் தலைகாட்டி வருவது தற்காலத்தில் பிரத்தியக்ஷமான விஷயம். அவைகளுள் எளிதில் சீர்திருத்திக் கொள்ளக்கூடிய சிலவற்றை எடுத்துக்காட்டினால், அவர்கள் அவைகளைவிலக்கவும் அதனால் நமது தேசம் சிறப்படையவும் ஒருவாறு முகாந்தரம் ஏற்படுமென்பதே இக்கதைகளை எழுதுவதில் நான் முக்கியமாய்க் கொண்டிருக்கும் உட்கருத்து.

லௌகிக ஸித்தி யடைவதே தற்காலத்தில் பாலர்களுக்கு நோக்கமாக இருக்கின்றது: ஆத்ம விசாரணை செய்வது ஏகதேசமாக இருக்கின்றது. இதற்குப் பரிகாரமாகச சில பெரியோர்கள் அங்கங்கே ஆத்மார்த்

தமான காலக்ஷேபங்களை நடத்தி வருகின்றனர். அவர்கள் ஸங்கீத ஸாஹித்யத்தைச் சார்பாகக் கொண்டு நடத்துதலால், பாலர்களுடைய மனம் ஸங்கீதத்தில் மாத்திரம் செல்லுகின்றது. ரஸமான கற்பிதக் கதைகளின் இடையில் கதா நாயகர்கள் ஆத்மபோதம் அடையுமாறு முயற்சி செய்து ஸமய சித்தாந்தத்தை உணர்ந்ததாகப் புனைந்துரைப்பின், பாலர்களுடைய மனம் அதில் செல்லுதலாய் நமது தேசத்தில் வைதிக மார்க்கமும் தளிர்த்தோங்குவதற்கு ஒரு முகாந்தரம் ஏற்படும் என்பதும் இக்கதைகளை எழுதுவதில் யான் ஒருபுடை கொண்டிருக்கும் உட்கருத்து.

இக்கருத்தை உட்கொண்டு பின்வருமாறு செய்திருக்கிறேன். முதல் கற்பிதக்கதையான கமலாக்ஷியில் வேறு ஸமயத்தவர்களுடைய ஆக்ஷேபணைகளுக்கு ஒருவாறு ஸமாதானம் சொல்லியிருக்கிறது. இரண்டாவது விஜயஸுந்தரம் என்பதில் பரமுத்தியடையும் உபாயம் சொல்லியிருக்கிறது. அதன்மேல் எழுதலுற்ற கற்பிதக்கதையில் சிவஞானசித்தியாரில் கண்ட 12 சூத்திரக்கருத்துக்களையும் விளக்கவேண்டும் என்கிற அவா உண்டாகி ஞானசம்பந்தம் என்பதில் 1-வது பதியிலக்கணத்தையும் ஞானாம்பிகை என்பதில் 2-வது அத்வைத விலக்கணத்தையும் விளக்கியிருக்கிறேன். மற்றப் பத்தில் 3-வது பசுவிலக்கணம் 4-வது அவத்தையிலக்கணம் 5-வது பாசமோசநலக்ஷணம் 6-வது பதிபாச தரிசநவிலக்கணம் 7-வது ஆன்மதரிசன விலக்கணம் ஆகிய இவைகளை சிவஞானம் என்னும் கற்பிதக்கதையிலும், 8-வது ஞானஞ்ஞான விலக்கணம்

9-வது ஆன்மசுத்தியிலக்கணம் 10-வது மலமோசன விலக்கணம் 11-வது பக்தியினிலக்கணம் 12-வது அடியவரிலக்கணம் ஆகிய இவைகளை ஞானப்பிரகாசம் என்னும் கற்பிதக்கதையிலும் விளக்குவேன்.

கற்பனைக் கதைகளின் அமைப்பையும் போக்கையும் நடையையும் முடிவையும் ஆராய்ந்து நிதானிப்பது ரசிகர்களுக்கே இயலுதலான காரியம். ஆகவே என் கதைகளைப்பற்றி யான் வேறு பாயிரங்கூறல் இயலாது. என்னுடைய கமலாக்ஷியின் இரண்டாம் பதிப்பு ஈராயிரமும் இரண்டு வருடகாலத்தில் செலவாகி மூன்றும் பதிப்பை விரைவில் வெளியிட நேர்ந்தால், ஏனைக் கதைகளும் தமிழ் மக்களுக்கு அங்கீகாரம் ஆகக்கூடும் என்கிற நிச்சயத்தோடு நான் இப்போது வெளிப்போந்தேன். அவர்களுடைய அங்கீகாரமே எனக்கு சிரமபரிகாரம். நான் பெறுதற்குரிய பேறும் அதுவே. சுபம்.

தி. ம. பொ.

# INTRODUCTION

Gnanambikai is the fourth of a series of Tamil Novels by Rai Sahib T. M. Ponnuswami Pillai, Retired Treasurer, Paper Currency, Rangoon. With a simple plot this novel is more interesting and more humanizing than its predecessors.

A barren wife longing for a heir to enjoy the princely fortune of her husband instigates her husband to marry a second wife. When the second wife brings forth a child, a brother of the first wife seduces his sister with objects of self aggrandizement. This seduction is the basis of this novel. The victim thereof is the heroine.

The heroine is a perfect model of maidenhood. As servant girl she is subject to severe trials and she passes successfully through the ordeal. With self-sacrifice as talisman and tact as philosophers stone, she is ever bent on converting vice into golden virtue. She appears to be a paradox in whom meet the extremes, ingenuousness and ingenuity. Versatility is her crowning virtue. I may be condemed as verbose, if I should say more.

The conclusion is, as usual with this author, a masterpiece of art. It is, as it were, a magic lantern throwing romantic images of mercy and benevolence, gratitude and amelioration, virtue and its reward.

There is another bit of philosophic pabulum in the XIX chapter. A comparative study of our sects shows

that Saiva Sidhanta and Visishtadhvaita are only twins of Hindu Religious Philosophy. The cardinal points of salvation concur with those of some of the exotic religions. Dear Reader, whoever you are, only substitute the name of your God here in the place of Siva, *mutatis—mutandis.* You will find your Religious philosophy reflected here. So I assure you that this chapter need not bias you.


We ought to be thankful to the author for giving our sons and daughters such flavoursome and balmy treats of fiction.'

The unavoidable delay caused in printing the book has forced upon me this pleasant task of introducing it, which otherwise should have fallen on better shoulders.

PERAMBUR,<br>8th July 1913.

T. CHELVAKESAVAROYAN.

# முதல் பாகம்




என் அம்மா இன்று இவ்வளவு நேரம் ? (14-ம் பக்கம் பார்க்க.)

உ

கடவுள் துணை

# ஞானாம்பிகை

## 1—ம் அத்தியாயம்.

திருவருளை முன்னிட்டு நாம் எழுதும் இக்கதை தென்னாட்டைப் பற்றியது. தொண்டமான் சீமை என்று வழங்கும் புதுக்கோட்டைக்கு ஏறக்குறைய இருபது மைல் தூரத்தில், பல வளங்கள் நிறைந்து, பெருந் தனவந்தர்களாகிய நகரத்தார் குடியேறியிருக்கும், காரைக்குடிக்கு அருகில் முத்துப்பட்டணம் என்னொரு கிராமம் உண்டு. அந்தக் கிராமத்தில், நாற்புறமும் மதிற்சுவரெடுத்து விநோதமாகக் கட்டிய ஓர் மெத்தை வீட்டில், இரவு எட்டுமணிக்கு மேல்மெத்தையிலுள்ள அறையில், இருபத்திரண்டு அல்லது ஒன்றிரண்டு அதிகம் இருக்குமென்று நிதானிக்கத்தக்க வயதும், ஐந்தரையடி உயரமும், கறுத்த தேகமும், சுருண்ட கேசமும், குறுகிய நெற்றியும், கறுத்தடர்ந்த புருவமும் சிறுத்த விழிகளும், நீண்டநாசியும், வெண்மையாய் ஒன்றன்மேல் ஒன்றேறிய பல்வரிசையும், பரந்த முகமும், நீண்ட கழுத்தும், விசாலமாகிய மார்பும், பருத்த தோள்களும், நீண்ட கரங்களும், அதிகம் பருத்த தேகமும் உள்ள ஒருவன் ஆழ்ந்த யோசனையில் உட்கார்ந்திருந்தான்

அவனைப்போன்ற சாயலும் ஏறக்குறைய முப்பத்தைந்து வயதும் உள்ள ஓர் பெண்பிள்ளை, விலையுயர்ந்த நகைகளை அணிந்து குரநாட்டுச்சேலை கட்டியிருந்தவள், அவ்வறைக்குள் வந்து, "தம்பி! சின்னசாமி! என்ன பெருத்த யோசனையில் இருக்கிறாய்?" என்று கேட்டாள்.

**சின்னசாமி.**—அக்காள்! நான் தங்களுடைய நன்மையைக் கோரியும் எங்களுடைய நன்மையைக் கருதியும் சொல்லியயாவும் ஆற்றில் கரைத்த புளிபோல் ஆயின. தாங்கள் அத்தானை வேறு விவாகம் செய்துகொள்ளத் தூண்டிய காலத்தில், அதைத் தடுக்க எவ்வளவு சொன்னேன்? "நாயகன் தனக்கு வேறு விவாகம் வேண்டாமென்று சொல்வதைக் கேட்டும் சும்மா இராமல் செங்கமலத்தம்மாள் வேலாயுதம் பிள்ளையைத் தொந்தரவு செய்கிறாளே! அதன் ஸூகம் பின்னால் தெரியும்" என்று பலர் சொல்லிக்கொள்வதாக நான் தெரிவித்ததைக் கேட்காமல் எங்களைத் துன்பத்தில் அழுத்திவிட்டீர்கள். இப்பொழுதிருக்கும் நிலையைப் பார்த்தால் எனக்கு அதிகம் பயமாக இருக்கிறதே.

**செங்கமலத்தம்மாள்.**—தம்பி! நீ கவலைப்படுகிறது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. எனக்குக் குழந்தைகள் பிறக்காமற் போனபின், எங்களுடைய சொத்தை யார் வைத்தாளுகிறது?

**சின்னசாமி.**—தாங்கள் என்ன கிழவியாய்விட்டீர்களா? தங்களுக்கு இனிமேல் குழந்தை பிறக்காதா? தங்களுக்கு வயது சரியாக முப்பத்தைந்து ஆகவில்லையே! நம்முடைய தாயார் இருபது வயதில் தங்களைப் பெற்று, அனேக வருடங்களுக்குப்பின் என்னைப் பெற்று, அதன்பின்னும் இருவரைப் பெறவில்லையா?

**செங்கமலத்தம்மாள்.**—பெண் பிள்ளைகள் முப்பத்தைந்து பரியந்தம் குழந்தைகளைப் பெறாமலிருந்தால், பின் அவர்களுக்குக் கர்ப்பம் உண்டாவது ஏகதேசம்.

**சின்னசாமி.**—*தங்களுக்குக் குழந்தையில்லாமல் போனால், சவி காரம் ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது ?*

**செங்கமலத்தம்மாள்.**—*சவிகாரப் எடுத்து அவர்களால் படுந் துன்பத்தை நாம் கண்ணால் பார்த்துக்கொண் டிருப்பதால், அது விஷயத்தைக் குறித்து நினைப்பதே எனக்கு பயமாக இருக்கிறது.*

**சின்னசாமி.**—*நம்முடைய தங்கையையாவது மறு தாரமாக அத்தானுக்குக் கொடுத்திருக்கலாம். அதையும் கெடுத் தீர்கள்.*

**செங்கமலத்தம்மாள்.**—*தங்கை பழனியாயி பருவமடைய நாளாகுமென்றும், என் நாயகனுக்குக் குழந்தை இல்லாமற் போக எதாகிலும் வியாதி அவருக்கிருந்தால் நம்முடைய தங்கைக்கும் குழந்தை இல்லாமற் போகுமே என்றும், அவளை வேண்டா மென்றேன். தம்பி ! இதெல்லாம் ஏன் சொல்லுகிறாய் ? எனக்குக் குழந்தை இல்லாமற்போன பின், எனக்கு என்ன வேண்டும் ? வயிற்றுக்குச் சோறும் உடுத்துக்கொள்ள வஸ்திரமுந்தானே வேண்டும். வேறென்ன வேண்டியிருக்கிறது ?*

**சின்னசாமி.**—*அக்காள் ! தாங்கள் தங்களுக்கு வேண்டியதை மட்டும் சொன்னீர்களே யன்றி எங்களை முற்றிலும் மறந்து விட்டீர்கள். நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள். ஒருவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தால், அவனுக்கு ஆர்மேல் அதிகம் அன்பிருக்கும். இளையவள் மேலல்லவா? மூத்தாளுக்குக் குழந்தைக ளில்லாமல் இளையவளுக்குக் குழந்தைக ளுண்டானால், நாயகனுக்கு இன்னும் அன்பு அதிகம் அவள்மேல் உண்டாகு மல்லவா ! அப்பொழுது மூத்தாளின் கதி என்ன ? வீட்டில் வேலைசெய்து வயிறு வளர்க்கவேண்டியதே ! ஆனதால், தங்களை இனி வேலாயுதம்பிள்ளை வீட்டில் வேலைக்காரி யென்றே சொல்ல வேண்டும். எவ்விதமெனில், தங்களுக்கோ குழந்தைகள் இல்லை ; தங்களுடைய சக்களத்திக்குக் குழந்தைகள்*

உண்டு. தன் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டிய வேலை அவளுடையது. வீட்டுவேலை முழுதும் செய்யவேண்டிய கடமை உங்களுடையது. தாங்கள் வேலை செய்யாமல் சும்மா இருந்தால், தங்களுடைய நாயகன் என்ன சொல்லுவார் ? " அவள் குழந்தைகளோடு அவஸ்தைப்படுகிறாளே. நீ விட்டு வேலையாகிலும் செய்யக் கூடாதா ? " என்று சொல்லமாட்டாரா ? அப்பொழுது என்ன முடிவானது ? செங்கமலத்தம்மாளை வேலாயுதம் பிள்ளையின் மனைவி யென்று சொல்லாமல், அவர் வீட்டு வெள்ளாட்டியென்றே சொல்லவேண்டும். அவ்விதம் சொல்லாமற்போனாலும், சம்பளமில்லாமல் வயிற்றுச் சோற்றுக் வேலைசெய்யும் மனைவியென்றும் சொல்லலாம். நான் சொல்வதெல்லாம் தங்களுக்குக் கோபத்தைத் தரக்கூடிய தாயின், என்னை மன்னிக்கவேண்டும். நான் சொல்ல வேண்டியது கட்டாயமா யிருந்ததால் சொன்னேன்.

சின்னசாமி சொல்வதை யெல்லாம் கேட்டிருந்த செங்கமலம், பெருமூச்செறிந்து, கண்களில் நீர்ததும்ப, " தம்பி ! கெடுமதி கண்ணுக்குத் தெரியா தென்றவிதம் முடிந்ததே ! ஒருத்தி வந்தால் அவள் நமக்கு உதவியாக இருப்பாள் என்ற நம்பிக்கையோடு உன் அத்தானை விவாகம் செய்துகொள்ள வேண்டினேன். இப்பொழுது முத்தம்மாள் கர்ப்பமானபிறகு நான் அவள் வீட்டு வேலைக்காரியாக இருக்கிறேன் என்பது எனக்கு நன்றாய்த் தெரிகிறது. உன் அத்தான் இருக்குந்தனையும் அவளைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு இவ்வூரைவிட்டுப் போகேன் என்று சொல்லிக்கொண்டிருந்தவரை, செட்டியாரல்லவா கட்டாயப்படுத்தி அனுப்பினார். நீ சொல்வது போல், ஒன்று மில்லாமல் இருந்த காலத்திலேயே அவளைத் தூக்கிக் கொண்டு திரிந்தவர், அவள் பிள்ளையையாவது பெண்ணையாவது பெற்றால், அவளைத் தெய்வமாகப் பார்த்துக்கொண் டிருப்பாரேயன்றி என்னை இனிமேல் கவனிக்கப்போகிறாரோ ?" என்று கண்களில் நீரை வடியவிட்டாள்.

சின்னசாமி.—அக்காள் ! தாங்கள் துக்கப்படுவதைப் பார்க்க என்னால் முடியவில்லை. இனிமேல் நாம் என்ன செய்கிறது ? முத்தம்மாள் கர்ப்பவேதனை படுகிறாளென்று சொல்லியனுப்பினீர்களே ! அவள் பிள்ளை பெற்றுவிட்டாளா ?

செங்கமலத்தம்மாள்.—இல்லை. நாம் என்ன செய்தால் உத்தமமென்று நினைக்கிறாய் ?

சின்னசாமி.—என்ன செய்கிறதென்பது எனக்கும் தெரியவில்லை.

என்று சிலநேரம் யோசித்திருந்து "மருத்துவிச்சி நாம் சொல்வதைக் கேட்பாளா ?" என்று மெதுவாகத் தன் தமக்கையைக் கேட்டான்.

செங்கமலத்தம்மாள்.—அவளை நான் அறியாமையால் அவள் மனதை எவ்விதம் அறிந்து சொல்லமுடியும் ? பொருள் கிடைக்கிறதா யிருந்தால், சிலவேளை நம் இஷ்டப்பிரகாரம் நடப்பாளென்றே நினைக்கிறேன்.

சின்னசாமி.—தாங்கள் அவளைப் பார்க்கவேண்டாம். நானே பார்த்துத் திருமயத்துக்குப் போகிறேன் (என்று சில வார்த்தைகளை இரகசியமாகச் சொல்லி எழுந்தான்).

செங்கமலத்தம்மாள்.—நீ இவ்விடம் இருந்தால் எனக்கு உதவியாக இருப்பாயென்றே உன்னை வரும்படி கேட்டுக்கொண்டேன். நீயும் இங்கில்லாமற் போனால், நான் என்ன செய்கிறது ?

சின்னசாமி.—வீட்டில் தோட்டக்காரன் இருப்பதால் தாங்கள் ஒன்றுக்கும் கவலை கொள்ளவேண்டாம். நான் வருவது அவசியமானால் சொல்லியனுப்புங்கள் ; உடனே வருகிறேன் (என்று நீங்கினான்).

சின்னசாமி நீங்கியவுடன், செங்கமலம் கீழே இறங்கி வந்து கர்ப்பவேதனைபடும் அறைக்குள் சென்று, அவளுக்குத்

தேறுதலைச் சொல்லி அவ்விடத்தி லிருந்த பெண்பிள்ளைக ளோடு வார்த்தையாடிக்கொண்டிருந்து, தன் தங்கை படும் வேதனையைப் பார்க்க முடியவில்லை யென்று அவர்களைக் கவன மாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லி, அவ்விடத்தை விட்டு நீங்கி ஞன். நெடுநேரத்திற்குப் பின், மேல்மெத்தையிலிருந்த செங் கமலத்திடம் ஓர் பெண்பிள்ளை ஓடிவந்து " அம்மா ! உனக்கு மகள் பிறந்தாள். அக்குழந்தை என்ன ஸௌந்தரமாக இருக் கிறது ! தங்கவிக்கிரகத்துக்கும் அதற்கும் யாதொரு வித்தியாச மும் இல்லை. வந்து பாருங்கள் '' என்று அழைத்துப்போனாள். செங்கமலம் அறைக்குள் சென்று குழந்தையைப் பார்த்தாள். மருத்துவிச்சி செங்கமலத்தைப் பார்த்து " அம்மா ! குழந்தை தொப்புள் அறுக்கவேண்டும்'' என்றதற்கு அவளிடம் ஒரு ரூபா கொடுத்தாள். மருத்துவிச்சி அதைப் பெற்று ஸந்தோஷ மடைந்து வேண்டியதைச் செய்துகொண்டிருந்தாள்.

மூன்றுநாள் இரவு பதினொருமணிக்குச் செங்கமலம் சில பெண்களோடு மேல்மெத்தையில் உட்கார்ந்து வார்த்தை யாடிக் கொண் டிருக்கும்பொழுது, மருத்துவிச்சி அவ்விடம் வந்து, " அம்மா ! பிறந்த குழந்தைக்கு இருந்தாற்போ லிருந்து கைகால்க ளெல்லாம் இழுத்தது பின் இல்லாமலிருந்து பின் இழுத்து; பின் இல்லாமலிருந்து சற்று நேரத்துக்கு முன்னும் இழுத்தது. இப்படி அடிக்கடி விட்டுவிட்டு இழுத்துக்கொண் டிருக்கிறது. சற்றுநேரம் பார்த்துக்கொள்ளுங்கள். நான் வைத்தியரிடம் சென்று அண்டத்தைலம் வாங்கிவருகிறேன் '' என்றாள்.

செங்கமலத்தம்மாள், " ஐயோ ! இதென்ன அநியாயம் ! மருத்துவிச்சி இவ்விதம் சொல்லுகிறாளே ! நான் என்ன செய் வேன் !'' என்றழுது குழந்தையைப் பார்க்க எழுந்தோடினாள். கூட இருந்த பெண்களும் செங்கமலத்தோடு சென்று அறைக் குள் புகாமல் வெளியிலிருந்து பார்த்து, " அம்மா ! இப்பொழுது குழந்தை சும்மா தூங்குகிறது. நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். சிறு குழந்தைகளுக்கு இசிப்பு வருகிறது உண்டு.

அதற்கு வைத்தியனிடம் அண்டத்தைலம் வாங்கிப் பூசினால் உடனே சௌக்கியமாய்விடும். இதற்காக நீ கவலை கொள்ள வேண்டாம்'' என்றார்கள்.

மருத்துவிச்சி, ''ஆம் அம்மா! நான் எத்தனை குழந்தைகளுக்கு இசிப்பு வந்ததைப் பார்த்திருக்கிறேன். அவைகளுக்கெல்லாம் அண்டத்தைலமே வாங்கிப் பூசிக் குணப்படுத்தியிருக்கிறேன். முத்தம்மாள் இன்னம் கண்களைத் திறக்காமலே இருக்கிறாள். நான் விரைவில் போய்வருகிறேன்'' என்று நீங்கினாள்.

செங்கமலத்தம்மாள் ''குழந்தைக்கு இசிப்பு வந்தால் அதைப் பார்க்க என்னால் முடிகிறதில்லை. நான் அந்த கோரத்தைப் பார்க்காமல் அவ்விடத்தைவிட்டு நீங்கிவிடுகிறது வழக்கம். இப்பொழுது அவ்விதம் நீங்கிவிட முடியுமா! நீங்களெல்லாம் அறைக்குள் வரமாட்டீர்கள். வந்தால் தலைமுழுகவேண்டும்'' என்று குழந்தையருகில் உட்கார்ந்தாள்.

செங்கமலத்தம்மாளோடு சென்ற பெண்பிள்ளைகள் வெளியிலிருந்தே ''அம்மா தூங்குகிற குழந்தையை எழுப்ப வேண்டாம். மருத்துவிச்சி வந்தவுடன் அண்டத்தைலத்தைப் பூசுங்கள். குழந்தைக்கு ஒன்றும் இல்லை'' என்று சொல்லி நீங்கினார்கள். பெண்பிள்ளைகள் நீங்கியவுடன் செங்கமலமும் அவ்விடத்தில் இராமல் தன்னறைக்குள் வந்து படுத்துக்கொண்டாள். இரண்டுமணி நேரத்திற்குப் பின், மருத்துவிச்சி செங்கமலத்தை வந்துபார்த்து ''அம்மா! காரியம் மிஞ்சிப்போய்விட்டது. நான் என்ன செய்வேன்? நான் வைத்தியனிடத்தில் அண்டத்தைலமும் வாங்கிவந்து தேகமெல்லாம் பூசி என்னென்னமோ செய்துபார்த்தேன். என்னுடைய உழைப்பெல்லாம் பிரயோசனப்படாமல் போய்விட்டதே'' என்று கண்கலங்கினாள்.

செங்கமலத்தம்மாள், ''முத்தம்மாள் என்ன செய்கிறாள்?'' என்று கேட்க, மருத்துவிச்சி ''இன்னம் தூக்கத்தோடிருக்கிறார்கள். இன்னம் இரண்டொரு மணிநேரத்தில் மயக்

கம் தெளியும்போல் காண்கிறது முத்தம்மாள் கைகால்களை அசைக்காமலிருந்தவர்கள் இப்பொழுது கைகால்களை அங்குமிங்கும் எடுத்துப் போட்டுக்கொண் டிருக்கிறார்கள்" என்று சொல்லி முத்தம்மாள் படுத்திருக்கும் அறைக்குள் சென்றாள். செங்கமலம் அவ்வறைக்குள் சென்று உட்கார்ந்து தலைமயிரை அவிழ்த்துப் போட்டுக்கொண்டு பெருங்குரலோடு ஒப்பாரி சொல்லி அழுதுகொண்டிருந்தாள். தோட்டக்காரன் செங்கமலத்தம்மாளின் அழுகுர லோசையைக் கேட்டு ஓடிவந்து, பிறந்த குழந்தை இறந்துபோனதென்று மருத்துவிச்சியால் அறிந்து, அக்கம்பக்கத்தாருக்குப் போய்ச் சொன்னான். அவர்களெல்லாம் வந்து செங்கமலத்தின் துக்கத்தை ஆற்றி, "மூன்று நாள் சிசுவுக்காகவா அழுகிறது ? போ போ ! பைத்தியக்காரி ! முத்தம்மாள் என்ன கிழவியாய்விட்டாளா ! இனி பிள்ளைகுட்டிகளைப் பெறமாட்டாளா ?" என்று தேறுதலைச் சொல்லி, குழந்தையின் தேகம் முகமெல்லாம் அண்டத்தைலம் பூசியிருக்கவே அருவருப்படைந்து, அதை ஒருவரும் தொடாமல், மஞ்சள் நனைத்த துணி கொண்டுவரச்செய்து அதை மருத்துவிச்சியால் சுருட்டி ஓர்பக்கம் வளர்த்திவிட்டு, தெரிவிக்க வேண்டியவர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொண் டிருந்தார்கள். முத்தம்மாளும் கண்விழித்துத் தான் பெற்ற குழந்தை இருக்கும் கோலத்தைப் பார்த்துக் கண்களில் தாரை தாரையாக நீரை வடியவிட்டுக்கொண்டிருந்தாள். அவளைப் பார்ப்பவர்களெல்லாம் "முத்தம்மா ! நீ அழக்கூடாது. அழுதால் உனக்கு நளிர் கண்டுவிடும். என்னமோ நீ கொடுத்துவைக்கவில்லை என்றும் நீ சுமக்கவேண்டிய கடனுக்குப் பத்துமாதம் சுமந்தாய் என்றும் நினைத்துக் கொள்ளவேண்டியதை விட்டு, மூன்று நாள் சிசுவுக்காகத் துக்கப்பட்டு அழலாமா ? இனி நீ பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள மாட்டாயா ?" என்று அவளுக்குத் தைரியம் சொல்லிக்கொண் டிருந்தார்கள்.

விடிந்தபின் யாவரும் வந்து, பிரேதத்தை வீட்டின் பின்புறத்தி லுள்ள தோட்டத்தில் புதைத்துவிட்டு, செங்

கமலத்துக்குத் தைரியஞ் சொல்லி நீங்கினார்கள். முத்தம்மாள் முதலில் அதிகம் கவலைகொண் டிருந்தாலும், பின் நாளுக்கு நாள் பலர் சொல்வதைக்கேட்டுக் கவலையற்றிருந்தாள். செங்கமலமும் முத்தம்மாள் தேகம் வலிவேற வேண்டியதைச் செய்துகொண்டிருந்தாள்.

மூன்று மாதத்துக்குப் பின், செங்கமலம் முத்தம்மாளைப பார்த்து, " அம்மா ! வீட்டில் சும்மா இருந்து காலம் கழிப்பதை விடச் சிலநாள் நான் தனித்து வெளியில் சென்று ஸ்தல தரிசனை செய்து வரலாமென்று யோசித்திருக்கிறேன். உன்னுடைய இஷ்டம் எப்படி?" என்று கேட்டாள்.

முத்தம்மாள்.—" அக்காள் ! தாங்கள் ஸ்தல தரிசனைக்குப் போனால் நான்மட்டும் தனித்து வீட்டில் இருக்கமுடியுமா ? நானும் தங்களோடு வருகிறேன் " என்றாள்.

செங்கமலத்தம்மாள்.—அம்மா ! முத்து ! உன்னுடைய தேகம் இன்னும் முற்றிலும் ஸௌக்கிய மாகவில்லை. இதற்குள் நீ வெளியில் போகக்கூடாது. நீ வீட்டிலேயே இருக்க வேண்டும். தோட்டக்காரன் மனைவியை இரவில் உனக்குத் துணையாக வந்து படுத்துக்கொள்ளச் சொல்லிப் போகிறேன். நான் போய் இரண்டு மூன்று வாரத்துக்குள் வந்துவிடுகிறேன்.

முத்தம்மாள்.—அக்காள் ! தாங்கள் எனக்குத் துணை தேடினீர்களே யன்றித் தங்களோடு போகத் தங்களுக்குத் துணை தேடியிருக்கிறீர்களா ?

செங்கமலத்தம்மாள்.—அம்மா ! நீ எனக்காக கவலைப்பட வேண்டாம். நாட்டுக்கோட்டைச் செட்டிப் பெண்கள் அநேகர் ஸ்தலதரிசனைக்குப் போகிறார்கள். நான் அவர்களுடைய துணைப்பற்றிப் போகிறேன்.

என்று முத்தம்மாளுக்குச் சொல்லி, முத்தம்மாளும் தானும் வீட்டி லிருக்கும்பொழுது போட்டுக்கொண்டிருக்கும் நகைகள் நீங்கலாக மற்ற நகைகளை யெல்லாம் இருப்புப்பெட்டி

யில் வைத்துப் பூட்டி, சாவியைச் செட்டியார்வீட்டில் கொடுத்து விட்டு, செட்டிப் பெண்கள் துணேயோடு ஸ்தலதரிசனைக்குச் சென்ருள்.

செங்கமலத்தம்மாள் நீங்கிய மூன்ரும் நாள் இரவு எட்டு மணிக்கு, முத்தம்மாள் வீட்டுக்குள் உட்கார்ந்து தோட்டக்காரன் மனேவியை எதிர்பார்த்திருக்கும் பொழுது, ஒர் வண்டி வீட்டுக் கெதிரில் வந்து நின்றது. வண்டிக்காரன் வீட்டுக்குள் வந்து "செங்கமலத்தம்மாள் யார்?" என்று கேட்டான்.

**முத்தம்மாள்.**—"செங்கமலத்தம்மாளே ஏன் தேடுகிருய்? அந் தம்மாள் ஊரில் இல்லேயே" என்ருள்.

**வண்டிக்காரன்.**—"அம்மா! செங்கமலத்தம்மாளுடைய சகோதரன் சின்னசாமிபிள்ளே மாடுவிடுகிற வேடிக்கையைப் பார்க்கப் போயிருந்தார். அவர் நின்றிருந்த இடத்திற் கருகில் மாடு ஓடிவர அம்மாட்டைத் தான் பிடிக்கிறேன் என்று ஓடினுர். அவரை அம்மாடு கீழே தள்ளி வயிற்றில் கொம்பால் குத்தி ஓடிவிட்டது. அவருக்கு குடல் வெளிப் பட்டு மூர்ச்சையானுர். அவரை வண்டியி லேற்றிக் கொண்டு வந்து வீட்டில் போட்டிருக்கிறது. ஆனதால் செங்கமலத்தம்மாளே அழைத்துவரச சொல்லி வண்டி யனுப்பினுர்கள். அவர்கள் இல்லாமற் போனது மிக்க பரிதாபம்" என்ருன்.

முத்தம்மாள் திடுக்கிட்டு "ஐயோ! நான் என்ன செய் வேன்! என்தமக்கை இங்கில்லாத காலத்தில் இவ்வித ஆபத்து நேர்ந்ததே! என் தமக்கை இல்லாமற் போனுலும் நான் வருகிறேன" என்று வீட்டுக்குள் சென்று, கட்டுப்புடவைகள் இரண்டும் தன்னிடத்திலிருந்த ரூபாவில் பத்தும் எடுத்துக் கொண்டு, வீட்டைப் பூட்டிச் சாவியை எடுத்துக்கொண்டு, தோட் டக்காரனுக்கும் அவன் மனேவிக்கும் சொல்லிவரும்படி வண் டிக்காரனுக்கு அடையாளஞ் சொல்லி அவனே அனுப்பினுள். அவன் சொல்லிவந்தேன் என்று வண்டியில் ஏறினுன். முத்தம்

மாளும் தன் கைமூட்டையோடு வண்டியில் ஏறினாள். வண்டிக்காரன் மாடுகளை வேகமாக நடத்திக்கொண்டு போனான். முத்தம்மாள் சின்னசாமிபிள்ளைக்கு நேரிட்ட விபத்தை நினைத்து அழுதுகொண்டே "நம்முடைய தமக்கை எங்கிருக்கிறாளோ? அவளுக்கு இந்த ஸமாசாரத்தை எவ்விதம் எட்டவிடுகிறது?" என்ற யோசனையோ டிருக்கும்பொழுது, திருமயத்துக் கருகில் நின்றிருந்த இருவர், வண்டிக்காரனைக் கூவி, வண்டி எங்குபோகிறதென்று கேட்டார்கள்.

வண்டிக்காரன் வண்டியை நிறுத்தி, வண்டி திருமயத்துக்குப்போகிற தென்றான். நின்றிருந்த இருவரில் ஒருவன் வண்டிக்காரன் இன்னானென் றறிந்து, "அப்பா! வண்டிக்காரா! சின்னசாமி பிள்ளையை இங்கு வைத்திருப்பது கூடாதென்று தஞ்சாவூருக்குக் கொண்டுபோயிருக்கிறார்கள். அவர் தமக்கை வந்தால் அந்தம்மாளை நேராகத் தஞ்சாவூருக்கு வரச் சொன்னார்கள். நாங்களும் சின்னசாமிப் பிள்ளையைப் பார்க்கப் போகிறோம்" என்றான.

**முத்தம்மாள்.**—அவர்களைப் பார்த்து "ஐயா! அவர்கள் வீட்டில் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

**இருவரிலொருவன்.**—"வீட்டில் ஒருவருமில்லை. எல்லாரும் தஞ்சாவூருக்கே போயிருக்கிறார்கள்" என்றான்.

**முத்தம்மாள்.**—"அப்பா வண்டிக்காரா! நாம் தஞ்சாவூருக்குப் போகாமல் அவர்கள் வீட்டுக்குப் போவதில் பிரயோசனம் இல்லை. நீ பெரியமனது செய்து புதுக்கோட்டைக்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போனால், அவ்விடமிருந்து ஜட்கா வண்டியில் ஏறித் தஞ்சாவூர் போகலாம். நீ நேராக ஓட்டவேண்டும்" என்று கெஞ்சினாள்.

**வண்டிக்காரன்.**—"அம்மா! நான் என்ன செய்வேன்! மாடுகள் அதிகதூரம் நடந்திருக்கிறது. திருமயந்தானே என்று மாடுகளைத் துரத்திக்கொண்டு வந்தேன். தாங்கள் கெஞ்சுவதால்நான் இந்த ஸமயத்தில் தடைசெய்கிறது நியாயமல்ல.

என்று அவன் புதுக்கோட்டைக்கேவண்டியைக்கொண்டு போனான். விடியற்காலை முத்தம்மாள் புதுக்கோட்டையைச் சேர்ந்தாள். வண்டியோடு வந்த இருவரும், முத்தம்மாள் தனி ஜட்காவண்டியிற் போகவும், தாங்கள் வேறுவண்டியில் ஏறி, பகல் ஒருமணிக்குத் தஞ்சாவூரைச் சேர்ந்தார்கள். வண்டியி லிருந் திறங்கி வண்டிக்காரனுக்குக் கொடுக்கவேண்டியதை முத் தம்மாள்கொடுத்தவுடன், அவ்விருவரும் முத்தம்மாளைப்பார்த்து, "அம்மா! நாங்கள் சின்னசாமிபிள்ளையைப் பார்க்க வைத்திய சாலைக்குப் போகவேண்டும். தாங்கள் எங்களோடு வந்தால், அவ ரைக் கொண்டுபோய் வைத்திருக்கும் வைத்தியசாலையைக் காட்டு கிறோம். அங்கு போனாலும். அவரை உடனே பார்க்கமுடியுமோ முடியாதோ தெரியவில்லை. எதற்கும் நாம் காலைக்கடனை முடித் துக்கொண்டு ஏதாகிலும் ஆகாரம் பார்த்துப் பின்போவது உத்த மம்" என்றார்கள்.

முத்தம்மாள், "அண்ணன்மார்களே! எனக்கு எதுவும் வேண்டுவதில்லை. ஆயினும் நான் தனித்து அவரைப் போய்ப் பார்க்க முடியாமலிருப்பதால், நானும் உங்களோடு வருகிறேன். நீங்கள் வைத்தியசாலைக்குப் போகும்பொழுது என்னை அழைத் துப்போகவேண்டும்" என்று அவர்களுடன் சென்றாள்.

அவர்கள் முத்தம்மாளை ஓர் வீட்டுக்குள் அழைத்துப் போய், அங்கு பெண்பிள்ளைகளும ஆடவர்களும் இருப்பதைக் காட்டி, "அம்மா! தாங்கள் விரைவில் காலைக்கடனை முடித்து வாருங்கள்" என்றனுப்பினார்கள். அவ்வீட்டி லிருந்த பெண் பிள்ளை முத்தம்மாளை அழைத்துப்போய்க் காலைக்கடனை முடித் துக்கொள்ளச் செய்தாள். பின்பு ஒரு பிராமணன் ஆகாரம் கொண்டுவந்து கொடுத்தான். சாப்பிட்டபின் அவ்விருவரும் வருவாரென்று எதிர்பார்த்திருந்தும் அவர்கள் வராமையைக் கண்டு, முத்தம்மாள் அவ்வீட்டுப் பெண்பிள்ளையை அடுத்து, "அம்மா! அந்த அண்ணன்மார்கள் இன்னும் வரவில்லையே, எப்பொழுது வருவார்கள்?" என்று கேட்டாள்.

**வீட்டுப்பெண்பிள்ளை.**—*எந்த அண்ணன்மார்களைத் தேடித் திரிகிறாய் ?*

**முத்தம்மாள்.**—*என்னை இவ்விடம் அழைத்து வந்தார்களே ; அவர்களைத் தேடுகிறேன். என்னை வைத்தியசாலைக்கு அழைத்துப்போகிறேன் என்றவர்கள் இன்னும் வர வில்லையே.*

**வீட்டுப்பெண்பிள்ளை.**—*(நகைத்து) எந்த வைத்தியசாலைக்கு அழைத்துக்கொண்டு போவதாகச் சொன்னார்கள் ? அவர் கள் இனி ஏன் வரப்போகிறார்கள்? அவர்களுடைய வேலை முடிந்ததால் அவர்களுக்கிடைக்கவேண்டியதைப் பெற்றுக் கொண்டு போயிருப்பார்கள்.*

**முத்தம்மாள்.**—*என்ன வேலையை முடித்துத் தங்களுக்குக் கிடைக்கவேண்டியதைப் பெற்றுக்கொண்டு போயிருப்பார் கள் என்கிறீர்கள் ?*

**வீட்டுப்பெண்பிள்ளை.**—*இந்த வீட்டிலிருப்பவர்கள் யாரென்று உனக்குத் தெரியவில்லைபோல் காண்கிறது. இந்த வீட் டுக் செஜமான், மோரிஸ், பினுங்கு, கண்டி முதலிய இடங்க ளுக்கு ஆள் ஏற்றுகிறவர். ஒரு ஆண்பிள்ளையை அழைத்து வந்தால் இவ்வளவென்றும் பெண்பிள்ளையை அழைத்து வந்தால் இவ்வளவென்றும், பொருள் கொடுக்கிறார். ஆன தால் உன்னை அழைத்துவந்தவாகள் தங்களுக்குக் கிடைக் கவேண்டிய தொகையைப் பெற்றுப் போயிருப்பார்கள். நீ எந்த ஊருக்குப் போகவேண்டுமென்று வந்திருக்கிறாய்? உன்னிஷ்டத்தைச் சொன்னால், நீ இஷ்டங்கொண்ட ஊருக்கே அனுப்பச் சொல்லுகிறேன்.*

**முத்தம்மாள்.**—*நான் எந்த ஊருக்கும் போக வந்தவளல்ல. என் னுடைய சகோதரன் வைத்தியசாலையில் இருப்பதால், அவ ரைப் பார்க்கவே வந்தேன். இனி இங்கிருப்பதில் பிரயோ சனம் இல்லை. நானேயாவது போய் வைத்தியசாலை எங்கி ருக்கிறதென்று விசாரித்துப் போக வேண்டும் (என்று எழுந்து வெளியிற்போக எத்தனித்தாள்).*

**வீட்டுப்பெண்பிள்ளை.**—அம்மா ! நீ அவசரப்பட்டு போக எத்தனிக்கவேண்டாம். உன்னை வெளியில் விட்டுவிடவா கதவை மூடிக் காவலாளிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

வீட்டுப்பெண்பிள்ளை சொல்வதைக் கவனிக்காமல் முத்தம்மாள் ஓடிக் கதவு மூடிப் பூட்டியிருப்பதைக் கண்டு " இனி நான் என்ன செய்யப்போகிறேன் ?'' என்று தலையில் அடித்துக் கொண்டு, " என் தலைவிதி இவ்விதமாகவா இருக்கிறது '' என்று கதறி அழுதுகொண்டிருந்தாள்.

---

## 2—ம் அத்தியாயம்.

முன் அத்தியாயத்தில் குறிப்பிட்ட ஸம்பவம் நேரிட்டுப் பதினுன்கு வருடங்கள் ஆயின. காரைக்காலுக்கு எட்டு மைல் தூரத்தில்உள்ள தரங்கன்பாடியில் கடற்கரைக்கு அருகில்உள்ள தெருவில், இரண்டாவது வீட்டில், நீண்ட கூந்தலும், விளைந்த நெற்றியும் கறுத்தடர்ந்த புருவமும், பெருத்த கண்களும், எடுப்பாயுள்ள நாசியும், சிறுத்த இதழ்களும், வெண்மையான சரியொத்த பல்வரிசைகளும், பரநத முகமும், பொன்னிறமும், பருத்திராத தேகமும், நாலரையடி உயரமும், பதினுன்கு அல்லது ஒன்றிரண்டு அதிகமென்று மதிக்கத்தகுந்த வயதும் உள்ளவளாய், அழுக்கேறி அனேகவிடத்தில் கிழிந்திருக்கும் பாவாடையும் அநேக துண்டுகள் போட்டுத் தைத்த இரவிக்கையும் ஒரு பழைய தாவணியும் அணிந்துகொண்டிருந்த பெண் ஒருத்தி அடிக்கடி வெளியில் வருவதும் வீட்டுக்குள் போவதுமாய் இருந்தாள். இருக்கும்பொழுது, கிழிந்த சேலையைக் கட்டிக்கொண்டு நாற்பது அல்லது ஐந்தாறு அதிகமென்று மதிக்கத்தகுந்த வயதுள்ள ஓர் பெண்பிள்ளை கையில் சில பாத்திரங்களை எடுத்து வருவதைப் பார்த்த பெண், எதிரோடி அவள் கையிலிருந்ததை வாங்கிக்கொண்டு, "ஏன் அம்மா இன்று இவ்வளவு நேரம்? மணி

இரண்டிருக்குமே ! அடுத்தவீட்டு ஆத்தாள் கடையில் வாங்கி வந்த அரிசியைத் தீட்டிக்கொடுக்கச் சொன்னூர்கள். நான் தீட்டிக்கொடுத்தேன். அந்த ஆத்தாள் அதற்கு முக்காற்படி நொய் கொடுத்தார்கள். அதைக் கொண்டுவந்து சமைத்து வைத்திருக்கிறேன், பாருங்கள்" என்று தன் தாயை அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினுள். அதைத் தாய் கண்டு மகிழ்ந்து, "அம்மா ! ஞானும்பிகை ! உன்னுடைய காலமும் என்னுடைய காலமும் இவ்விதம் முடிந்தது. நாம் என்ன செய்யலாம் ! உண்ணச் சோறும் உடுக்க வஸ்திரமும் இல்லாமல் அலைகிறோம். யார் எதைக் கொடுப்பார்களோ வென்று எதிர்ப்பார்க்க வேண்டியதா யிருக்கிறது. உண்ணுமுலேயும் அவள் மகள் ஞானும்பிகையும் கஞ்சிக்கலேகிறூர்களென்று யாவரும் அறிந்தாலும், நம்மை அழைத்து வேலேயிட்டுக் கூலிகொடுப்பார் இல்லேயே ! நான் காலேயிலிருந்து இதுபரியந்தம் செய்த வேலேக்குக் கூலியாக இதைக் கொடுத்தார்கள்" என்று ஒருவருக்குப் போதாத சாதத்தைக் காட்டினுள்.

**ஞானும்பிகை.**—அம்மா! நாம் என்ன செய்யலாம்? நமக்கு அகப்பட்டதோடு திருப்தி அடையவேண்டுமே யொழிய அதிகம் ஆசைப்படக்கூடாது. தாங்கள் கொண்டுவந்த சாதத்தைத் தாங்கள் சாப்பிட்டுப் பின நான் சமைத்துவைத்திருப்பதில் கொஞ்சம் சாப்பிட்டுப்பாருங்கள்.

**உண்ணுமுலேயம்மாள்.**—வேண்டாம் ! நீ சாதத்தைச் சாப்பிடு. நான் நொய்யரிசிச் சாதத்தைச் சாப்பிடுகிறேன்.

இருவரும் இங்ஙனம் வாதாடி, முடிவாக உண்ணுமுலே கொண்டுவந்த சாதத்தை அவளேயே சாப்பிடச்செய்தும், நொய்யரிசிச் சாதத்தை ஞானும்பிகை சாப்பிட்டும், இருவரும் கைகழுவிக்கொண்டபின், ஞானும்பிகை தன்தாயைப் பார்த்து, "அம்மா! நாம் இந்த ஊருக்கு வருமுன் பசியாறச் சாப்பிட்டுக்கொண்டிருந்தோ மல்லவா ?" என்ருள்.

**உண்ணுமுலேயம்மாள்.**—" ஆம் ! என் கண்மணி ! அப்பொழுது

என் கையில் கொஞ்சம் காசு இருந்தது. அதனால் நம்முடைய கஷ்டம் தெரியாமலிருந்தது" என்றாள்.

**ஞானம்பிகை.**—நான் தங்களுக்கு ஆண்பிள்ளையாகப் பிறந்திருந்தால் தங்களுக்கு எவ்வளவு அனுகூலமா யிருக்கும்? நான் கூலிவேலை செய்தாவது தங்களைக் காபபாற்றுவேனல்லவா? நான் பெண்ணாய்ப் பிறந்த தோஷம் தங்களைக் கஷ்டப்படவிட்டு நான் சும்மா இருந்து காலத்தைக் கழிக்கிறேன்.

**உண்ணாமுலையம்மாள்.**—ஆண்பிள்ளை யிருந்தால் தரித்திரம் நீங்கிவிடுமென்று நினைக்கிறாயா? அப்படி நினைக்கவேண்டாம். 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு.' ஆண்பிள்ளையாகப் பிறந்து வயதேறினால், அவன் பெற்றவளைக் கவனிக்கமாட்டான். அல்லாமலும் பெற்றோரிடம் அடையவேண்டியதை யெல்லாம் அடைந்து, அவர்களுடைய உதவி வேண்டியதில்லை யெனக் கண்டபின், மனைவியோடிருந்துகொண்டு, பெற்ற தந்தையைக் கண்டாலும் திரும்பிப் பாராமல் திரியும் துன்மார்க்கர் இல்லையென்றோ நினைக்கிறாய்? அனேகர் இருக்கிறார்கள். 'மாதா மனமெரிய வாழாய் ஒருநாளும்' என்பதை அறியாமலிருக்கிறார்கள். நீ அப்பாவிகளைப் பார்த்திராததால் அவ்விதம் சொல்லுகிறாய்.

**ஞானம்பிகை.**—பெற்ற பெண்கள் அவ்விதம் செய்கிறதில்லையா? அதுவும் இருக்கிறது.

**உண்ணாமுலையம்மாள்.**—பெண்கள் பருவமடைந்து ஒருவரோடு வாழ்ந்திருந்தால், அவர்கள் தாய்தந்தைக்கு ஒன்றும் செய்யாமற்போனாலும், அது குற்றமாகாது. 'வாழ்மனைப் பண்டம் தாய்மனைக் கேறில் தாய்மனை பாழ்மனை யாகும்' ஆகையால் அவள்மேல் குற்றம் சொல்லுவது எவ்விதம்? அது கிடக்கட்டும். இப்பொழுதிருக்கும் கஷ்டத்தைவிட நமக்கு இன்னும் அதிக கஷ்டம் வரும்போல் காண்கிறது.

ஞானம்பிகை.—ஏன் அவ்விதம் சொல்லுகிறீர்கள் ?

உண்ணுமுலையம்மாள்.—அடி என் கண்மணி ! நான் தற்காலம் வேலை செய்துகொண்டிருக்கும் வீட்டுக்கு எஜமான் கோபாலகிருஷ்ணபிள்ளையைக் காஞ்சீபுரத்திற்கு மாற்றி விட்டார்களாம். அவர் மனைவி என்னைத் தங்களோடு வரும் படியாகக் கேட்டுக்கொண்டார்கள். எனக்குச் சாப்பாடு போட்டு மாதம் இரண்டு ரூபாவும் வருடத்துக்கு இரண்டு சேலையும் கொடுப்பதாகச்சொன்னார்கள். 'நான் எனக்கிருக் கும் பெண்ணை யார் வீட்டில் விட்டுவருவேன், வரமுடி யாது' என்று சொல்லிவிட்டேன். ஆயினும் அவர்கள் என்னை விட்டுவிடக்கூடாது என்றிருக்கிறார்கள். நான் அவர்களோடு போகமுடியாததலால், அவர்கள் இவ்வூரை விட்டுப் போய்விட்டபின், நாம் என்ன செய்கிறது ? நாம் இன்னும் அதிக கஷ்டம் படும்படி நேரிட்டாலும் நேரிடும்.

ஞானம்பிகை.—அம்மா! தாங்கள் அவர்களோடு போவதே உத்த மம். தாங்கள் என்னால் கஷ்டத்தை அனுபவித்துக்கொண் டிருக்கவேண்டாம். நான் எங்கேயாகிலும் ஓர்வேலை செய்து வயிறு வளர்த்துக்கொள்ளுகிறேன்.

உண்ணுமுலையம்மாள்.—(ஞானம்பிகையைக் கட்டிப் பிடித்து முத்தங்கொடுத்து) என் கண்மணி ! உன்னைத் துன்பப்பட விட்டு நான் போய் ஸுகத்தோடிருக்க என்மனம் ஒப்புமா! நமக்குப் படியளக்கிறவன் நாம்எங்கிருந்தாலும் அளப்பான்.

ஞானம்பிகை.—அம்மணி ! தாங்கள் என்னைக் கவனித்து என் னுடைய நன்மையைக் கோரி என்னோடிருந்து தாங்கள் தங்களுடைய தளர்ந்தகாலத்தில் துன்பமடைவது கூடாது. நான் தங்களைப் பார்க்கும்பொழுதெல்லாம் என்னை அது வருத்திக்கொண்டிருக்கும். தாங்கள் ஸௌகரியத்தோடு இருக்கிறீர்களென்று கேள்விப்படுவேனாகில், அது என்னை ஸந்தோஷத்தில் அழுத்திவிடும். பெற்ற பெண் தன் தாயை ஸந்தோஷப்படுத்துவதை விட்டு, அவர்களைத் துன் பத்தில் அழுத்திக்கொண்டிருப்பதோ அழகு ? நம்முடைய

ஸம்ரட்சணையைக் கருதித் தாங்கள் சங்கடப்படும்பொழு தெல்லாம், மனதுக்குள்ளாவது என்னால் இந்தத் துன் பத்தை அனுபவிக்கிறதாக நினைக்கமாட்டீர்களா ?

**உண்ணாமுலையம்மாள்.**—அம்மா ! ஞானம்பிகை ! நான் பெற்ற பெண்ணால் துன்பத்தை அனுபவிக்கிறேன் என்று நினைப் பேனா ? நீயும் இவ்விதம் சொல்லலாமா ? உன் தந்தை இறந்தபின் அவருக்குப்பதிலாக உன்னைப்பார்த்துக்கொண் டிருப்பதே எனக்கு ஆறுதலையாயிருக்க, அதைவிட்டு என் னைப் போகச் சொல்லுகிறாயே ; இது நியாயமா (என்று முத்தமிட்டாள்).

**ஞானம்பிகை.**—அம்மா ! பறவைகள் குஞ்சுகளுக்கு இரை கொண்டுவந்து கொடுத்துக் காப்பாற்றி, அக்குஞ்சுகளுக்குச் சிறகு முளைத்த உடன் அவைகளையே இரைதேடித் தின்னும்படி விடவில்லையா ?

**உண்ணாமுலையம்மாள்,**—என்னைப் பறவையைப்போல் நினைத் தோ உன்னைவிட்டுப் போகச் சொல்லுகிறாய் ? உன்னை விட்டுப்போக எனக்கு மனம் துணியுமா ?

**ஞானம்பிகை.**—அம்மா ! பகவன் என்பவருக்கு ஆதி யென் பவள் மனைவியானபின், அவள் தன் நாயகனோடு போகவேண்டும் என்றபொழுது, அவர் தன் மனை வியை அழைத்துப்போக மனங்கொள்ளாமல், “ நீ பெற்ற பிள்ளைகளைப் பெற்ற இடத்தில் விட்டுவருகிறேன் என்று வாக்குக்கொடுத்தால், நான் அழைத்துப்போகி றேன் ” என்றதற்கு அவள் இசைந்து போகும்பொழுது, ஓர் பெண் குழந்தையைப் பெற்றாள். அதைவிட்டுப் பிரிய மனங்கொள்ளாமல் வருந்தியபொழுது, அக்குழந்தை,

> இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
> விட்டசிவ னும்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
> பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாய்
> நெஞ்சமே யஞ்சாதே நீ.

என்று ஒரு பாடலைச் சொல்லிப் பெற்றவளுடைய மனதை தைரியப்படுத்தியது. ஆதி என்பவள் ஏழு பிள்ளைகளைப் பெற்று அவைகளை விட்டுப் பிரிய மனம் வருந்திய பொழுதெல்லாம், ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு வெண்பாவைப்பாடி அவளை அனுப்பிவிட்டது. அச்சரித்திரத்தைக் கேட்டதில்லையா ? அவ்விதம் குழந்தையாயிராமல் நான் என் ஸம்ரக்ஷணைக்காக வேண்டியதைச் செய்து கொள்ள எனக்கு வயதிருக்கிறதே. தாங்கள் கவலையற்று என்னைவிட்டுப் போகலாம் (என்று நகைத்தாள்).

**உண்ணுமுலையம்மாள்.**—அம்மா ! உன்னைப் பள்ளியில் வைத்துக் கல்வியைக் கற்றுக்கொடுக்கச்சக்தி எனக்கு இல்லாதிருந்தும், நீ உன் அக்கறையாகக் கல்வி கற்றுக்கொண்டு வாசித்திருந்ததில் ஒன்றிரண்டைச் சொல்லி என் மனதைக் கலக்கிவிடுகிறாய். என்னுடைய ஸௌகரியத்தின் நிமித்தம் நான் உன்னைவிட்டு நீங்கினால், பார்க்கிறவர்களெல்லாம் என்னை நிந்திக்கார்களா ? என்னை யாவரும் நிந்திக்கும்படியான காரியத்தையா செய்யும்படி கற்றுக் கொடுக்கிறாய் ? நீயோ ஸமீபத்தில் பருவமடைவாய்போல் காண்கிறது. இந்த ஸமயத்தில் உன்னைவிட்டு நீங்குதல் பெருங்குற்ற மாகும். நீ இளந்தையாதலால், ஒன்றையும் கருதாது, உலகம் இன்னதென்று தெரியாது பேசுகிறாய்.

“ இந்த ஸமயத்தில் எனக்காகிலும் ஓர் வேலை கிடைத்தால், இருவரும் கவலையற் றிருக்கலாம்” என்று ஞானம்பிகை சொல்லும்பொழுது, இருபது அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கததகுந்த வாலிபன் ஒருவன் வீட்டுக்குள் வந்து, ஞானம்பிகையின் அழகைக் கண்டு ஆச்சரியப்பட்டு, உண்ணுமுலையைப் பார்த்து, “ அம்மா ! நான் இப்பக்கம் வந்தேன். வெயிலால் உங்கள்வீட்டுத் தாழ்வாரத்தில் தங்க நேர்ந்தது. அங்கு நான் இருந்த நேரத்தில் நீங்களிருவரும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டிருந்தேன். என் தமக்கைக்கு ஐந்து குழந்தைகள் உண்டு.

அவர்கள் தன் குடும்ப காரியங்களுக்கு ஒத்தாசையாக ஒரு சிறிய பெண்துணை வேண்டுமென்று தேடித்திரிகிறார்கள். தங்களுக்கு இஷ்டமிருந்தால் தங்கள் குமாரத்தியைப் பேசி வைக்கலாம். தஙகளுடைய குமாரத்தியை என் தமக்கை தன் குமாரத்தியைப் போல் எண்ணிப் பார்த்துக்கொள்ளுவார்கள். தாங்கள் எந்த விஷயத்திலும் கவலைகொள்ள வேண்டியதில்லை" என்றான்.

**உண்ணாமுலையம்மாள்.**—"தம்பி! நாங்கள் நற்குலத்திற் பிறந்தவர்கள். என் நாயகன் உயிரோ டிருக்கும்பொழுது க்ஷேமமாக வாழ்ந்திருந்தோம். அவா காலஞ்சென்றபின் நாங்கள் கஷ்ட திசை அடைந்திருக்கிறோம். ஒருவர் வீட்டில் வேலை செய்வதை விட்டு ஏதாகிலும் வியாபாரம் செய்யலாம் என்று நினைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று யோசித்துக்கொண் டிருக்கிறேன். வியாபாரஞ்செய்தால் நாங்களிவரும் ஒருவரை யொருவர் விட்டும் பிரிய அவசியம் இல்லை. ஆயினும் அதற்கும் அற்பமுதலாகிலும் வேண்டுமே" (என்று துக்கத்தோடு சொல்லியிருந்தாள்).

அப்பொழுது அவ்வீட்டில் குடியிருக்கும் வேறொரு பெண்பிள்ளை வந்து, அங்கிருந்த வாலிபனைப் பார்த்து, "ஆ! தம்பி நடேசா! நீயா இங்கிருப்பது? நான் யாரோவென்று நினைத்திருந்தேன். எது அத்திப்பூத்ததுபோல் இங்கு வந்தாய்? உன் அத்தான் சாமியாபிள்ளையும் உன் தமக்கை பழனியாயி அம்மாளும் சிறுவர்களும் க்ஷேமந்தானே?" என்று கேட்டாள்.

**நடேசன்.**—எல்லாரும் க்ஷேமமே! தாங்கள் அப்பக்கம் ஏன் வருகிறதில்லை? என தமக்கையும் செலலாயி யம்மாள் வருகிறதில்லை யென்று தஙகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

**செல்லாயியம்மாள்.**—என்னை ஏன் தேடிக்கொண் டிருக்கிறார்

கள் ? நான் காரைக்காலுக்குப் போய் என் மருமகன் வீட்டில் சிலநாள் இருந்து நேற்றுதான் வந்தேன்.

**நடேசன்.**—சிறுவர்களை வைத்துச் சமாளித்துக்கொண்டு அதனோடு சமையல்வேலையும் செய்துகொள்வது தமக்கையால் முடியவில்லை. ஆதலால் தங்களிடம் சொல்லி வீட்டில் வேலை செய்ய ஓர் பெண்ணைத் தேடிக்கொள்ளவே தங்களைத்தேடிக்கொண் டிருக்கிறார்கள்.

**செல்லாயியம்மாள்.**—ஏன் ? உன் தாயார் இருந்தார்களே !

**நடேசன்.**—என் தாயார் திருமயத்துக்குப் போய்விட்டார்கள். என் தாயார் வீட்டில் இல்லாததால், என் தமயன் மனைவி தன்மூப்பாய் யாவும் செய்கிறாள் எனக் கேள்விப்பட்டு, அங்கே போயிருக்கிறார்கள். அல்லாமலும், அவர்களுக்கு வயதாய் விட்டதால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

**செல்லாயியம்மாள்.**—ஒன்றும் செய்ய முடியாமற் போனாலும், சிறுவர்களையாவது பார்த்துக்கொள்ளக் கூடுமே ! சில வேளை உன் பெரிய தமக்கையைப் பார்க்க முத்துப்பட்டணம் போயிருக்கிறார்களோ என்னமோ ? உன் அத்தான் வேலாயுதம் பிள்ளை ஸமாசாரம் ஏதாகிலும் கேள்விப்பட்டீர்களா ?

**நடேசன்.**—அவர் தன் இரண்டாவது மனைவிக்குக் குழந்தை பிறந்து இறந்து போனபின் ஒருதடவை ஊருக்கு வந்தார். மூத்தமனைவி ஊரிலில்லாத காலம் பார்த்து, இளைய மனைவி தன்னிடத்திலிருந்த நகைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு மோரீசுக்குப போய்விட்டாள எனவறிந்து, அவர் கோலாலம் பூருக்குப் போனவர் மீண்டும் வரவில்லை. அவரைக் குறித்துப் பலவிதம் சொல்லுகிறார்கள்.

**செல்லாயியம்மாள்.**—என்ன சொல்லுகிறார்கள் ?

**நடேசன்.**—சிலர் அவர் கோலாலம்பூரில் இல்லையென்றும், அதற் கடுத்த ஊரில் ஓர் பெண்பிள்ளையோடு இருக்கிறா

ரென்றும், சிலர் அவர் இறந்துவிட்டாரென்றும், சிலர் அவர் சொந்தமாகக் கடை வைத்துக்கொண்டு பெருந்தனவந்தரா யிருக்கிறாரென்றும் சொல்லுகிறார்கள்.

**செல்லாயியம்மாள்.**—அவர் முன் கூட்டாளியா யிருந்த கடையின் முதலாளியால் எல்லா ஸங்கதியும் அறியலாமே!

**நடேசன்.**—என் அத்தான் வேலாயுதம் பிள்ளைக்கு எஜமானாக இருந்த செட்டியார் காலம் சென்றார். அவருடைய பிள்ளைகள் பாகம் பிரித்துக்கொண்டபின், அக்கடையை விட்டு விலகிக்கொண்டார்கள். அவர்களும் கோலாலம்பூர் கடையை ஒடுக்கிவிட்டார்கள். ஆனதால் என் அத்தானுடைய நிலையைக் கண்டுகொள்ள முடியவில்லை.

**செல்லாயியம்மாள்.**—உன் அத்தான் இரண்டாவது மனைவி மோரீசுக்குப் போய்விட்டது உண்மைதானே?

**நடேசன்.**—அதில் என்ன ஸந்தேகம்! மோரீசிலிருந்து யாருக்கோ கடிதம் வந்ததென்றும், அதில் அவள் மோரீசில் ஒருவனுக்குப் பெண்டாட்டியாக இருந்து நாலைந்து பிள்ளைகளைப் பெற்றபின் அவன் இறந்து போனானென்றும், அவள் இங்கிருந்து கொண்டுபோன நகைகளை யெல்லாம் தொலைத்துவிட்டுத்தன்னுடைய பிள்ளைகளோடு சாப்பாட்டுக்கே அலைகிறாளென்றும் எழுதியிருந்ததை என் தமக்கை கேட்டுவந்து அழுதுகொண்டிருந்தார்கள், புருடனைத் துரோகஞ்செய்து போகிறவள் எக்காலத்தும் கடைத்தேறமாட்டாள்.

**செல்லாயியம்மாள்.**—ஆம்! அது உண்மையே! நாம் நெடுநேரம் வீண்வார்த்தை யாடிக்கொண் டிருந்தோம். நான் சற்று நேரம் பொறுத்து உன் தமக்கையை வந்து பார்ப்பதாகச் சொல்.

நடேசன் ஞானம்பிகையைக் காட்டி, "இந்தப் பெண் நம்முடைய வீட்டுக்கு வரக்கூடுமென்று நினைக்கிறேன். தாங்கள் அவளுடைய தாயினிடத்தில் பேசி அவளை அழைத்துவரவேண்

டும்" என்று சொல்லி, தானும் உண்ணாமுலை யம்மாளும் பேசிக் கொண்டிருந்ததையும் அவர்கள் பேசியிருந்ததையும் தெரி வித்து, பின் உண்ணாமுலை யம்மாளிடத்தும் செல்லாயியம் மாளிடத்தும் விடைபெற்று நீங்கினான்.

**உண்ணாமுலையம்மாள்.**—அம்மா செல்லாயி! உனக்கு அவர்கள் குடும்பம் நன்றாய்த் தெரியும்போல் இருக்கிறதே.

**செல்லாயியம்மாள்.**—ஆம்! பழனியாயி நல்ல மனுஷி! நமது ஞானம்பிகை அவர்கள் வீட்டில் போயிருப்பது உத்தம மே! நீ இவ்விடத்தில் இல்லாமற் போனாலும், நான் ஸமீ பத்தில் இருப்பதால் பார்த்துக்கொள்ளக்கூடும். ஞானம் பிகை விஷயத்தில் நீ கவலை கொள்ளவேண்டாம்.

பின்பு செல்லாயியம்மாள் உண்ணாமுலையம்மாளை அழைத்துக்கொண்டுபோய்ப் பழனியாயி அம்மாளிடம் வார்த் தையாடி வீட்டுக்கு வந்தபின், ஞானம்பிகையை அழைத்து, "அம்மா ஞானம்பிகை! உனக்கு நல்ல இடமே கிடைத்தது. ஆனால் உன்மேல் சிறுவர்கள் ஆசைகொள்ளும் விதம் நீ அவர் களை அடிக்காமல் வசப்படுத்திக்கொண்டால், எல்லாம் உனக்கு எளிதாகவே இருக்கும். சம்பளம் மாதம் ஒன்றரைரூபாவும் வரு டத்துக்கிரண்டு பாவாடையும் இரண்டு இரவிக்கையும் இரண்டு தாவணியும் வாங்கிக்கொடுப்பதாகச் சொல்லுகிறாள். பழனியாயி அம்மாள் மகள் பள்ளிக்கூடத்துக்குப் போகிறவ ளாதலால், அவளை ஓர் வேலையையும் செய்யவிடாமல் வளர்க்கிறார்கள். அவள் அதிகம் வளர்ந்துவிட்டதால் அவளுக்கு முன் தைத் திருந்த பாவாடை இரவிக்கை யெல்லாம் சரிப்படாமற் போய் விட்டன. அவைகள் ஒரு பெட்டி நிறைய இருக்கின்றன. அவை களையெல்லாம் உனக்குக் கொடுப்பதாகவும் சொல்லுகிறாள்" என்றாள்.

**உண்ணாமுலையம்மாள்.**—அம்மா செல்லாயி! நீ சொல்வதெல் லாம் சரியே! பழனியாயி அம்மாளுக்குக் கோகிலம்பாள், சுப்பிரமணியன், தங்கவேலு, சரவணம், பாலு என்று

ஐந்து குழந்தைகள் இருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் வேண்டியதைச் செய்து சமையல் வேலையையும் செய்ய ஞானம்பிகையால் முடியுமா? ஞானம்பிகையால் முடியாத வேலையைச் செய்யும்படி நாம் கொண்டுபோய் விட்டுவிட்டால், பின் அவளல்லவா துக்கப்படுவாள். அதை நாம் யோசித்துப் பார்க்காமல் அவசரப்பட்டுச் செய்வது நன்றல்லவென்று யோசிக்கிறேன். நான் ஸமீபத்தில் இருந்தாலும் எனக்கு ஒழிந்த நேரத்தில் போய் ஞானம்பிகைக்கு உதவி செய்யக்கூடும். நான் என்ன செய்வேன் (என்று கண்கலங்கினாள்).

செல்லாயியம்மாள்.—அம்மா உண்ணாமுலை! நீ ஏன் கவலை கொள்ளுகிறாய்? பழனியாயி மிகவும் நல்லவள் என்று முன்னமே உனக்குச் சொல்லியிருக்கிறேன். அவள் பிள்ளைகுட்டி பெற்றவள். ஆகலால் ஞானம்பிகைக்கு அதிக கஷ்டத்தைக்கொடுக்கமாட்டாள். அவளே சமையல்வேலைகளையெல்லாம பார்த்துக்கொள்ளுவாள். ஞானம்பிகை தன்னால் அவ்வீட்டில் வேலைசெய்ய முடியவில்லையென்று சொல்லுவாளாயின், அப்பொழுது அவளை நான் வேறிடத்தில் பார்த்து வைக்கிறேன். நான் ஸமீபத்தில் இருப்பதால் நீ பயப்பட அவசியமில்லை.

உண்ணாமுலைக்கு இவ்விதம் தைரியஞ் சொல்லியபின், ஞானம்பிகையைப் பழனியாயி அம்மாளிடத்தில் மறுநாள்காலையில் கொண்டுபோய் விடுவதே உத்தமமென்று முடிவாயிற்று.

## 3—ம் அத்தியாயம்.

திரங்கன்பாடிக் கோட்டைக்கு வெளியிலிருக்கும் கடை களுக்குப் போகும் கோட்டைவாயில் வழியன்றிக் குறுக்கு வழியாகப் போக மதிற்சுவரை இடித்து உண்டாக்கிய மதில் வாயிலுக்கு அருகிலுள்ள ஒரு மெத்தைவீட்டில், இரவு ஒன்பது மணிக்கு, சாமியாபிள்ளை கீழ்வீட்டின் கூடத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர், "பழனியாயி!" என்று தன் மனைவியை அழைத்தார். அவள் ஓடிவந்து "ஏன் அழைத்தீர்கள்?" என்றாள்.

**சாமியாபிள்ளை.**—எங்கே போய்விட்டாய்? சாப்பிட்டுக்கொண் டிருக்கும்பொழுது அருகில்நின்று வேண்டியதைப் பார்த் துப் பரிமாறாமல் ஓடிவிடுகிறாயே!

**பழனியாயியம்மாள்.**—நான் எங்கும் போகவில்லை. தங்க ளுக்கு வேண்டியதையே எடுத்துவரப் போனேன்.

**சாமியாபிள்ளை.**—ஞானம்பிகை எங்கே? அப்பெண்ணைக் கொண்டுவரச் சொன்னால் கொண்டு வருகிறாள். நீ ஏன் போகவேண்டும்?

**பழனியாயியம்மாள்.**—ஞானம்பிகை குழந்தை பாலுக்கு சாதம் ஊட்டிக்கொண்டிருக்கிறாள். யார் ஊட்டினாலும் சாப்பிடாமல் அக்காளே ஊட்டவேண்டுமென்று ஞானம் பிகையையே கூப்பிடுகிறான்.

**சாமியாபிள்ளை.**—நம்முடைய சிறுவர்களெல்லாம் எதற்கும் ஞானம்பிகையையே கூப்பிடுகிறார்கள். அவளும் முகங் கோணாமல் அவர்களுக்கு வேண்டியதை அறிந்து செய் கிறாள். அவள் நம்முடைய வீட்டுக்கு வந்து சரியாக ஒரு மாதம் ஆகவில்லை. இதற்குள் கோகிலம்பாளும் பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் அவளையே தேடித் திரிகிறாள்.

**பழனியாயியம்மாள்.**—காலை உபாத்தியாயர் வந்து தங்களிடம் பேசியிருந்து போனாரே; என்ன பேசிக்கொண்டிருந்தார்?

**சாமியாபிள்ளை.**—விசேடம் ஒன்றுமில்லை. "சிறுவர்களுக்கு வீட்டில் பாடம் சொல்லிக்கொடுக்க ஆள் வைத்திருக்கிறாற் போல் காணப்படுகிறதே! யார் வந்து சொல்லிக் கொடுக்கிறார்கள்? எனக்குச சொன்னால் நான் வந்து கற்றுக் கொடுக்கமாட்டேனா?" என்று வருத்தப்பட்டார். "ஒருவரும் வந்து கற்றுக்கொடுக்கவில்லையே. ஏன் அவ்விதம் சொல்லுகிறீர்?" என்றேன். அவர் நகைத்து, "தாங்கள் சொல்லாமற்போனாலும் எனக்குத் தெரியாமற் போய் விடுமா?" என்றார். நான் "ஒருவரும் வந்து சொல்லிக் கொடுக்கவில்லை" யென்று அவர் நம்பிக்கை யடையும் விதம் சொன்னபின், அவர் ஆச்சரியப்பட்டு, "சிறுவர்கள் முன் வாசித்திருந்ததைவிட நன்றாய் வாசித்து வருகிறார்கள். ஆனதால் யாராகிலும் வீட்டில் பாடம் சொல்லிக் கொடுக்கிறாரோ என்று நினைத்தேன்" என்று சொல்லிப் போனார்.

**பழனியாயியம்மாள்.**—பகலில் தங்களுக்கு உத்தியோகம் ஸரியாயிருக்கிறது. உத்தியோகத்திலிருந்து மாலை வந்தவுடன் தாங்கள் தங்களுடைய சிநேகர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டுக்குப் போய்விடுகிறதால், தங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை, நம்முடைய சிறுவர்களுக்கு வீட்டில் பாடம் சொல்லிக்கொடுக்க வேறொரு உபாத்தியாயர் இல்லை யென்று எவ்விதம் சொல்லக்கூடும்? ஒருவர் வந்து கற்றுக் கொடுப்பதாலல்லவா கோகிலம்பாள் முதற் கொண்டு யாவரும் நன்றாய் வாசிக்கிறாகள்.

**சாமியாபிள்ளை.**—என்ன சொன்னாய! வேறொரு உபாத்தியாயர் வந்து சொல்லிக்கொடுக்கிறாரா? அவர் யார்?

**பழனியாயியம்மாள்.**—அவரைத் தாங்கள் அடிக்கடி இவ்வீட்டில் பார்த்திருக்கிறீாகளே (என்று நகைத்தாள்).

**சாமியாபிள்ளை.**—நான் அவரைப் பார்த்திருக்கிறேனா? அவ

ரைப் பார்த்திருப்பதாகக் காணவில்லை. அவர் எப்பொழுது வந்து பின் எப்பொழுது போகிறார்?

"அவர் நம்முடைய வீட்டுக்கு வந்தபின் போகவில்லை. அவரைக் காட்டுகிறேன் வாருங்கள்" என்று சாமியாபிள்ளை சாப்பிட்டபின் பழனியாயி அவரை மேல்மெத்தைக்கு அழைத்துப்போய், "வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள அறையின் கதவு மூடப்பட்டு அறைக்குள் சிறுவர்கள் வாசிப்பதைப் பாருங்கள்" (என்று கதவிடுக்கில் பார்க்கச் சைகைசெய்தாள். சாமியாபிள்ளை தன் மனைவி சொல்லியவிதம் பார்த்துக்கொண்டிருந்தார்).

**கோகிலம்பாள்.**—அக்காள்! நான் போட்டிருக்கும் கணக்கு ஸரியாக இருக்கிறதா? அதைப் பார்த்து வேறு கணக்குப் போட்டுக் கொடுங்கள்.

ஞானம்பிகை, ஒரு கையால் பாலுக்குச சாதம் ஊட்டிக் கொண்டு, மற்றக் கையால் கோகிலாம்பாள் கொடுத்த சிலேட்டுப் பலகையை வாங்கிப்பார்த்து "அம்மா கோகிலம்! நீ போட்ட கணக்கு முற்றிலும் ஸரியாக இருந்தாலும், முடிவில் கழித்ததில் ஒரு தப்பிதம் செய்துவிட்டாய். இவ்வித தப்பிதமெல்லாம் தெரியாமையால் நேர்வதல்ல: அசாக்கிரதையால் நேர்வதே. தெரியாமல் செய்தால் தோஷமில்லை. அசாக்கிரதையால்மட்டும் தப்பிதம் செய்யக்கூடாது. அதை இன்னொரு முறை இங்கிருந்து செய்" என்று கொடுத்துவிட்டு, "தம்பி! சுப்பிரமணியம்! உன் இங்கிலீஷ் பாடமெல்லாம் வருமென்று சொல்லி நாளை உபாத்தியாயரிடத்தில் அடிபடவேண்டாம். உனக்கு வருமென்ற (பொயெட்ரியை) செய்யுளைச் சொல் பார்க்கலாம்" என்று அவனிடம் இருந்த புத்தகத்தை வாங்கி அவன் சொல்லியதைக் கேட்டு அவனை அணைத்து முத்தங் கொடுத்து, "ஒரு தப்பிதமும் இல்லாமல் சரியாகச் சொன்னாய். நான் தம்பிகளுடைய பாடம் கேட்டு முடியும் பரியந்தம் நீ அதையே வாசித்துக்கொண்டிருக்க வேண்டும். பொயெட்ரி படித்தால் அதை வாசகத்தைப்போல் வாசிக்காமல் நான் படிப்பதுபோல் படிக்கவேண்டும்" என்று தான் சந்தத்தோடு வாசித்

துக்காட்டி, புத்தகத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, "தம்பி தங்கவேலு உன் பாடம் என்ன வருமா? தம்பி ! சரவணம் ! உங்களிருவரில் யார் முதலில் பாடம் ஒப்பிக்கிறீர்களோ அவர்களுக்கு இரண்டு முத்தம் கொடுப்பேன் " என்று சாதம் ஊட்டிக் கொண்டிருந்தாள்.

சாமியாபிள்ளை தன் மனைவியைச் சந்தடிசெய்யாமல் கீழ் வீட்டுக் கழைத்துவந்து "பழனியாயி! இது என்ன அதிசயம்! ஞானம்பிகை ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தவளென்றும் அவளும் அவள் தாயும் வீட்டுவேலை செய்து காலங்கழிக்கிறார்களென்றும் சொன்னாயே ! ஞானம்பிகைக்கிருக்கும் கல்வியைப் பார்த்தால் அவள் ஓர் தனவந்தன் மகளா யிருக்கவேண்டுமென்றல்லவா நினைக்க வேண்டியதாயிருக்கிறது?" என்றார்.

**பழனியாயியம்மாள்.**—ஞானம்பிகைக்கிருக்கும் கல்வி முதலியவைகளைப் பார்க்க எனக்கே வியப்பைத் தந்ததானால், உங்களுக்கு எப்படியிருக்கும்? அவள் தாய் நம்முடைய வீட்டில் விட்டுப்போனபின், ஞானம்பிகை வீட்டு வேலைகளை யாதொரு குறைவு மில்லாமலும், என்னை யாதொரு வேலையைச் செய்யவிடாமலும், தானே செய்துகொண்டு வருகிறாள். அவள் நம்முடைய வீட்டுக்கு வந்த சில நாள்களுக்குப்பின் கோகிலம்பாள் இங்கிலீஷ் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, " என்ன வாசிக்கிறாய்?" என்று கேட்டாள். கோகிலம்பாள் "நான் வாசிக்கும் புத்தகத்தின் பெயரைச் சொன்னால் உனக்குத் தெரியுமோ? நான் என பாடத்தை வாசிக்கிறேன " என்று நகைத்தாள். ஞானம்பிகையும் நகைத்து " எனக்கும் கொஞ்சம் வாசிக்கத் தெரியும் " என்று சொல்லிச் சமையலறைக்குள் சென்றாள். கோகிலம்பாள் அவளைப் பரிகாசம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு அவள் பின் சென்று, தன் கையிலிருந்த புத்தகத்தை அவளிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னாள். ஞானம்பிகை புத்தகத்தை வாங்கிப்பார்த்து " இது மூன்றாம்பாட புத்தகம்.

இதுதானு வாசிக்கிருய்?" என்று சொல்லி வாசித்துக் காட்டிஞள். கோகிலம்பாள் அதிக ஆச்சர்யப்பட்டுத் தன் ஸகோதரரை அழைத்துவந்து, "ஞானம்பிகை வாசிக்கிறதைப் பாருங்கள்" என்று மீண்டும வாசிக்கச் சொன்ஞள். ஞானம்பிகை வாசிப்பதைக்கண்டு "உனக்குத் தமிழ் வாசிக்கத் தெரியுமா?" என்று தாங்கள் வைத்திருக்கும் புத்தகங்களைக் கொடுத்து "இதை வாசி, இதை வாசி" என்று அனேக புத்தகங்களைக் கொடுத்து, அவள் நன்ருய் வாசிப்பதைக் கண்டு அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "எங்களுக்கெல்லாம் நீ உபாத்தியாராக இருந்து இரவில் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும்" என்று அன்றிரவு அவளிடத்தில் யாவரும் படித்துக் கொண்டிருப்பதை நான் கண்டு அதிசயப்பட்ட பொழுது, கோகிலம்பாள் நடந்தது யாவும் சொன்ஞள். "நீ எவ்விதம் கல்வியைக் கற்றுக்கொண்டாய்?" என்று நான் ஞானம்பிகையைக் கேட்டபொழுது, அவள் "அவகாசத்தில் சொல்லுகிறேன்" என்ருள். அவள் சற்றேனும் ஓய்ந்திராமல் வேலை செய்துகொண் டிருப்பதால், நான் மீண்டும் அவளைக் கேட்கவில்லை. அவளுக்கு வாசிக்கத் தெரிவதோடு, பின்னல் வேலையெல்லாம் நன்ருயத் தெரியும்.

**சாமியாபிள்ளை.**—ஞானம்பிகையை ஒருவர் பார்த்தால், அவள் ஒரு தனவந்தன் மகளென்றே சொல்லுவர். அவள் எவ்விதம் கல்வி கற்றுக்கொண்டாளென அறிய எனக்கு அதிக விருப்பம் இருக்கிறது.

இருவரும் இங்ஙனம் பேசியிருக்கையில் அன்று யாவரும் சாப்பிட்டுப் படுத்துக் கொள்ளப் போகும்பொழுது, சாமியாபிள்ளை ஞானம்பிகையை அழைத்து, "அம்மா! ஞானம்பிகை! நீ இன்று சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும போது கேட்டு நான் கொண்ட ஆச்சரியத்துக்கு அளவில்லை. உன் தகப்பஞர் என்ன வேலை செய்துகொண்டிருந்தார்? நீ எவ்வி

தம் கல்வியை இங்கிலிஷ் பாங்குடன் கற்றுக்கொண்டாய் ? நீ வெட்கப்படாமல் சொல்ல வேண்டும்'' என்று கேட்டார்.

ஞானம்பிகை.—ஐயாவே ! என் தந்தை நீடாமங்கலத்தில் பிறந்தவர். அவருக்குச் சொந்த நிலமில்லாமல் அவ்வூரை விட்டு அனேக விடங்களுக்குச் சென்று அனேகரிடத்தில் நிலத்தை வாரத்துக்கு வாங்கிப் பயிரிட்டுக் காலங்கழித்துக் காலஞ்சென்றாரென்று என் தாயார் சொல்லக் கேள்விப்பட்டதேயன்றி நான் அவரை அறியேன். நான் என் தாய் வயிற்றி லிருக்கும்பொழுதே அவர் இவ்வுலகத்தை விட்டு நீங்கினர். என் தந்தை காலஞ்சென்றபின், அவர் வைத்துப்போனதை யெல்லாம் பணமாக்கிக்கொண்டு அனேக விடங்களுக்குச் சென்று என் தாயார் பல வியாபாரங்களைச் செய்து நஷ்டமடைந்தாள். அப்பால் தஞ்சாவூரில் ஒரு தாசில்தார் வீட்டில் என் தாயாரும் நானும் வேலை செய்திருந்தோம். எனக்கு அப்பொழுது வயது பத்திருக்கும். தாசில்தாருக்குப் பதினைந்து வயதுள்ள ஒரு ஆண்பிள்ளையும் பன்னிரண்டு வயதும் எட்டு வயது முள்ள இரண்டு பெண்களும் ஒரு கைக் குழந்தையும் ஆக நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். தாசில்தார் வீட்டில் அனேக சேவகர் இருந்தமையால், கைக்குழந்தையை எடுத்து வைத்துக் கொண்டிருப்பதை விட எனக்கு வீட்டு வேலை வேறொன்று மில்லை. சிறுவர்கள் விளையாடும்பொழுது "அதைக் கொண்டுவா; இதைக் கொண்டுவா'' என்று எனக்கு வேலையிட்டு, என்னையும் சேர்த்துக்கொணடு விளையாடுவார்கள். அதனால் நான் அவர்களுக்குச சினேகமானேன். தாசில்தார் தன் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக் கனுப்பினால் அவ்விடத்தில் நன்றாய்க் கல்வி கற்றுக்கொள்ள முடியாதென்று, ஒரு பிராமணனால் வீட்டில் இங்கிலிஷும் தமிழும், ஒரு பெண்பிள்ளையால் தையல் பின்னல் வேலையும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு

செய்திருந்தார். பெரிய பிள்ளைகள் அதிக வாசித்திருந் தார்கள். இளையபெண் முதற்புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தது. அப்பெண்ணுக்கு உபாத்தியாயர் சொல் லிக் கொடுக்கும்பொழுது நான் பார்த்திருந்தேன். தாசீல் தார் மனைவி, என் தாயாருக்குச் சம்பளம் கொடுக்கும் பொழுது, என்னிடத்திலும் அரைரூபா கொடுப்பார்கள். நான் அதை என் தாயைக் கேட்டு எடுத்துக்கொண்டு, பள் ளிக்கூடத்துக்குப் போகும் பிள்ளைகள் மூலமாக இங்கிலிஷ் தமிழ் முதற் புத்தகங்களை வாங்கி, ஒருவருக்கும் தெரியா மல் சிறு பெண் பாடத்தை யொட்டியே இரவில் வாசித்து வந்தேன். ஆனால் அப்பெண்ணுக்கு வித்தை விரைவில் ஏறாமலிருந்ததால் எனக்குப் பெருஞ்சங்கடமா யிருந்தது. பெரிய பெண்ணும், விளையாட்டில் அதிக கவனத்தைச் செலுத்தியிருந்ததால், தான் படித்ததை மறந்து மறந்து போகும். ஒருதடவை உபாத்தியாயர் அப்பெண்ணைக் கோபித்து நீ முன் வாசித்ததை மறந்து விட்டதால் மீண் டும் வாசியென்று முதலிலிருந்து சொல்லிக் கொடுத்தார். அது எனககு அனுகூலமாய் முடிந்தது. அப்பெண் பழ சென்று எறிந்து போட்டுவிடும் புத்தகங்களையும் நான் எடு த்து வைத்துக்கொண்டு நானும் பெரிய பெண்ணுடைய பாடத்தை யொட்டியே வாசித்துவந்தேன். உபாத்தியாயர் பையனுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியாய்ச் சொல்லிக் கொடுப்பது தனக்கு அதிக கஷ்டமாயிருக்கிறதென்று இரு வருக்கும் ஒரே பாடமாக வைத்துச் சொல்லிக்கொடுத்துக் கொண்டு வந்தார். நான் அவர்களோடு உபாத்தியாயர் போட்டுக்கொடுக்கும் கணக்கு முதலானவைகளைக் கற்று வந்ததோடு, பெண்பிள்ளை கற்றுக்கொடுக்கும் தையல் பின் னல் வேலைகளையும் கற்றுக்கெண்டேன். ஒரு வருடத்துக் குப் பின் தாசீல்தார் தன் சினேகர்களோ டிருக்கும் பொழுது, உபாத்தியாயர் முன்னிலையில் தன் பிள்ளை களைப் பரீட்சை செய்து பார்க்கும்படி அவருடைய சிநேக

ரைக் கேட்டுக் கொண்டார். அவர் பெரிய பிள்ளைகள் இருவரையும் அழைத்தார். அவர்களை என்ன கேட்கப் போகிறார் என்று நானும் கைகுழந்தையோடு, போய் நின்றேன். தாசில்தார் விரும்பிய வண்ணம் அவருடைய சிநேகர் இங்க்லிஷ் இலக்கணத்தில் சில எளிதான கேள்விகளைக் கேட்டார். அதற்கு அவர்களிருவரும் பதில் சொன்னார்கள். பின் வரவர கடினமான கேள்விகளைக் கேட்டுக்கொண்டு வந்து, சடைசியில் அதிக கடினமான கேள்வியொன்றைக் கேட்டார். அவ்விருவரும் அவர் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் மௌனமாயிருந்ததைக் கண்டு, மீண்டும் மீண்டும் அக்கேள்வியைக் கேட்டு என் பக்கம் திரும்பினார். நான் என்னை மறந்து, அவர் கேட்டதற்கு இங்க்லிஷில் பதில் சொன்னேன். அங்கிருப்பவர்களும் தாசீல்தாரும் திடுக்கிட்டார்கள். தாசீல்தார் எழுந்து என்னருகில் வந்து என் கையைப் பிடித்துக்கொண்டு "உனக்கு இங்க்லிஷ் வருகிறதே ; எங்கே கற்றுக்கொண்டாய் ?" என்று கேட்டார். நான் பயந்து அழுதேன்.

**சாமியாபிள்ளை.**—ஏன் பயந்தழுதாய் ?

**ஞானம்பிகை.**—அவர் மகனுக்கும் மகளுக்கும் தெரியாமலிருப்பதை நாம் மெய் மறந்து சொல்லி விட்டோமே ! அவர்களுக்கு அது அவமானமாய் முடிந்ததே ! அவர்கள் நம்மைக் கோபித்து அடிப்பார்களே என்று பயந்து அழுதேன் ஆனால் தாசீல்தார் என்னைத் தட்டிக்கொடுத்து, "பயப்படவேண்டாம். நீ எங்கே படித்துக்கொண்டாய் ? யார் உனக்குக கற்றுகொடுத்தார் ?" என்றுகேட்டார். நான் உபாத்தியாயரைக் காட்டி "இவர் அண்ணனுக்கும் அக்காளுக்கும் கற்றுக்கொடுக்கும்பொழுது நானும் அருகிலிருந்து கேட்டுக் கற்றுக்கொண்டேன்" எனறேன். அவர் "புத்தகங்கள் ஏது ?" என்றதற்கு, "அம்மாள் மாதந்தோறும் எனக்குக் கொடுக்கும் அரைரூபாவைச் சேர்த்துவைத்துச் சில புத்தகங்கள் வாங்கிக் கொண்டதோடு அண்ணன் அக்

காள் எறிந்துவிடும் புத்தகங்களையும் எடுத்துவைத்து வாசித்தேன்" என்றேன். பின் அவர் "தையல் பின்னல் வேலையும் தெரியுமோ?" என்றதற்கு, நான் "ஆம்" என்றேன். அவ்விடத்திலிருந்தவர்கள் கொண்ட ஆச்சரியத்துக்கு அளவில்லை. தாசீல்தாரும் அவர் மனைவியும் ஸந்தோஷப்பட்டு என்னையும் அதுமுதல் அவர்களோடு சேர்த்துக் கற்றுக்கொடுக்கும்படி உபாத்தியாயருக்கு திட்டப்படுத்தினார்கள். நாளுக்குநாள் அவர்களைவிட எனக்கு அதிகம் தெரிந்தாலும் நான்வெளிக்குக் காட்டாமல் நான்கு வருடம் அவர்களோடு வாசித்திருந்தேன். பின் என் பொல்லாத காலத்தால் அவரை தூரதேசத்துக்கு மாற்றிவிட்டார்கள். அவர்கள் போனபின் அவ்வூரிலிருக்க மனங்கொள்ளாமல் இவ்வூரில் வந்திருக்கிறோம்.

**சாமியா பிள்ளை.**—நீ மிக்க புத்திசாலியான பெண் என்பதற்கு ஸந்தேகமில்லை. போய்ப் படுத்துக்கொள் (என்று ஞானம்பிகையை அனுப்பிவிட்டு, தன் மனைவியைப் பார்த்து) பழனியாயி! ஞானம்பிகையின் புத்தி கூர்மையைப் பார்த்தாயா? பாதையிலெரியும் விளக்கின் வெளிச்சத்தில் வாசித்துப் பெரும்புகழ் அடைந்தவர் ஒருவர் உண்டெனக் கேள்வியுற்றிருக்கிறேன். ஒருவருக்குச் சொல்லிக்கொடுத்ததை மற்றவர் கேட்டுக் கல்வி கற்றுக்கொண்டதை நான் கேள்விப் பட்டதில்லை. நீ இதுமுதல் அவளுக்கு நல்ல ஆடைகளை வாங்கிக் கொடுத்து அவளை மேன்மையாகவே நடத்தவேண்டும். அவளுக்குச சம்பளமும் அதிகம் கொடுக்க வேண்டும்.

**பழனியாயி யம்மாள்.**—முதல்முதல் ஞானம்பிகை நம்முடைய வீட்டுக்கு வந்தபொழுது அவள் கட்டியிருந்த வஸ்திரங்களைப் பார்த்து, இவ்வளவு ஸௌந்தரமுள்ள பெண்ணுக்குத்

தக்க ஆடையில்லாமலா போய்விடவேண்டும் என்று பரிதாபப் பட்டு, நாம் கோகிலம்பாளுக்கு இரண்டு மூன்று வருடத்திற்குமுன் தைத்திருந்தவைகளில் கோகிலம்பாள் அதிகம் வளர்ந்து விட்டதால் அவளுக்குப் பிரயோஜனப்படாத சிலதைக் கொடுத்துக் கட்டிக்கொள்ளச்சொன்னேன். பின் ஞானம்பிகை நம் சிறுவர்களிடத்தில் காட்டும் அன்பின் நிமித்தம், கோகிலம்பாளுக்கு உதவாதவைகளையெல்லாம் ஒரு பெட்டியில் போட்டு அதன் சாவியோடு அவளிடம் கொடுத்து “ இப்பெட்டியும் இதில் அடங்கியவைகளும் உன்னுடையதே நீ எங்களைவிட்டுப் போகும் பொழுது நீ இப்பெட்டியை எடுத்துக்கொண்டு போகலாம்” என்றேன். அவள் கண்கலங்கி “ என்னை அனுப்பிவிட எண்ணங் கொண்டிருக்கிறீர்களோ ?” என்றாள். “ உன்னை அனுப்பிவிட எண்ணங்கொள்ளவில்லை. எனக்கிருக்கும் பிள்ளைகளைப்போல் நீயும் என் பெண்ணென்றே நினைத்திருக்கிறேன். நீ பருவமடைந்தபின் உனக்கு நானே விவாகம் முடித்து வைக்கிறேன்” என்று நான் சொன்னபின் ஸந்தோஷத்தோடிருந்தாள்.

**சாமியா பிள்ளை.**— ஞானம்பிகை பருவமடையாமற்போனாலும் அவளைப் பார்க்கிறவர்கள் பருவமடைந்த பெண்ணென்றே மதிப்பார்கள்.

**பழனியாயி யம்மாள்.**—ஆம் ! அவள் ஸமீபத்தில் பருவமடைவாளென்றே நினைக்கிறேன் (என்று இருவரும் வார்த்தையாடிக்கொண்டே நித்திரைபோனார்கள்).

சில மாதங்களுக்குப் பின் ஒருநாள் மாலையில் ஓர் வண்டி அவர்கள் வீட்டுக்கெதிரில் வந்து நின்றது. சிறுவர்கள் ஓடிப் பார்த்துவந்து தங்கள் தாய் தந்தையிடம் “ மாமாவும் ஆயாளும் வந்திருக்கிறார்கள்” என்றார்கள். சாமியாபிள்ளையும் அவர் மனைவியும் எழுந்துபோய் அவர்களுக்கு முகமன் கூறி அழைத்துவந்தார்கள் யாவரும் வந்து உட்கார்ந்தபின் சாமியாபிள்ளை, தன் மைத்

துனர் சின்னசாமி பிள்ளையைப் பார்த்து, "மைத்துனரே! ஊரில் யாவரும் க்ஷேமந்தானே? அண்ணன் வேலாயுதம் பிள்ளையின் ஸமாசாரம் ஏதாகிலும் எட்டியதோ ?" என்று கேட்டார்.

**சின்னசாமி பிள்ளை.**—அவருடைய ஸமாசாரம் ஒன்றும் விளங்கத் தெரியவில்லை, பலர் பலவிதம் சொல்லுகிறார்கள்" என்றார்.

**சாமியா பிள்ளை.** நீராகிலும் ஓர் பயணம் போய்ப் பார்த்து வரக்கூடாதா ?

**சின்னசாமி பிள்ளை.**—அத்தான் ! நான் எவ்விதம் போக முடியும ? நான் போயவிட்டால், வீட்டின் வேலையை யார பார்த்துக்கொள்ளுவார்கள் ? அதவா போகலாமென்று துணிந்தாலும், ஸமுத்திரத்தை நினைத்தால் பெரும் பயமாக இருக்கிறது.

**சாமியா பிள்ளை.**—(நகைத்து) எனக்கு ஸௌகர்யப்படுமாயின் நான் போகப் பின்வாங்கமாட்டேன். என்ன செய்வேன் ? எனக்கு உத்தரவு கிடைப்பது மிகவும் கடினமாயிருக்கிறது.

பழனியாயி யம்மாளின் தாய், தன் மகளோடு வார்த்தையாடிக்கொண் டிருந்தவள், ஞானம்பிகையைப் பார்த்து, "இவளார் ?' என்று கேட்டாள்.

**பழனியாயி யம்மாள்.**—"அம்மா ! நம்முடைய வீட்டில் வேலை செய்ய அவளை அழைத்துவந்து வைத்திருக்கிறோம். அவள் எனக்கு அதிக உதவியாக இருககிறாள்" (என்று ஞானம்பிகையைப் புகழ்ந்து பேசினாள்).

**பழனியாயி யம்மாளின் தாய்.**—அம்மா ! பழனியாயி ! செங்கமலம் உன் மகளைப் பார்க்கவேண்டுமென்று உன்னையும் உன் புருஷனையும் கேட்டு அழைத்து வரச் சொன்னாள் அதற்காகவே நான் உன் தமையனை அழைத்துக்கொண்டு வந்தேன். வீட்டில் ஆண்திக்கில்லை. நாங்கள் விரைவில்

ஊருக்குப்போகவேண்டும். நீ உன் புருடனைக் கேட்டுக் கோகிலம்பாளை அனுப்பவேண்டும்.

**பழனியாயி யம்மாள்.**—அம்மா ! என் தமக்கை கோகிலம் பாளைப் பார்க்க வேண்டுமென்றால் ஒரு பயணம் அவர்கள் வந்துபோகக்கூடாதா ? அவர்களைப் பிள்ளையுங் குட்டியும் விடமாட்டேன் என்கிறதா ?

**பழனியாயி யம்மாளின் தாய்.**—நீ ஒன்றும் அறியாதவள் போல் பேசுகிறாய். அவளுக்கிருக்கிற துன்பம் யாருக்கிருக் கிறது ? அவளுடைய புருடன் உயிரோடிருக்கிறானோ செத்தானோ தெரியவில்லை. அவளுடைய சக்களத்தி மோரீசுக்கு ஓடிப்போய்விட்டபின் அவள் வெளியில் தலை காட்ட வெட்கப்பட்டிருக்கிறது யாவருக்கும் தெரிந்ததே ! அவள் படுந் துயரத்தைக் கண்டு பரிதாபப்படாமல் அவள் பேரில் குற்றஞ் சுமத்துவது நியாயமல்ல, நான் அடிக்கடி போய் அவளுக்குத் தைரியம் சொல்லிக்கொண்டிராவிட் டால அவள் எப்பொழுதோ மாண்டிருப்பாள். அவள் தன் நாயகனை நினைத்து நினைத்து அழுகிறதைப் பார்க்க என் னால் முடியவில்லையே (என்று கண்கலங்கினாள்).

**பழனியாயி யம்மாள்.**—தாங்கள் கோகிலம்பாளை அழைத்துப் போகிறதை வேண்டாமென்று சொல்லுவா ரில்லை ; அவள் தங்களோடு வந்தால் அங்கிருக்கும் பரியந்தம் புத்தகத் தைத் தொடப்போகிறதில்லை. வாசித்ததையெல்லாம் மறந்துவிடுவா ளென்றே பயப்படுகிறேன்.

**பழனியாயி யம்மாளின் தாய்.**—அம்மா ! பெண்களுக்குத் தாய் தந்தை கல்வி கற்று கொடுப்பதோடு, பாடவும் வீணை பிட்டில் முதலியவைகளை வாசிக்கவும மாதம ரூபா ஐந்து பத்துக் கொடுத்துக் கற்பித்துவருவது அனேக இடங்களில் உண்டெனக் கேள்விப்பட்டிருக்கிறேன். பெண் பருவமடைந்து ஒருவனுக்கு மனைவியாய்விட்ட பின் அப்பெண் தான் வருத்தப்பட்டுக் கற்றதைச் சாதக

படுத்திக்கொண்டிராமல் மறந்துவிடுகிருள். வாசித்ததை மறந்து விடலாமா, அதைச் சாதகப்படுத்திக்கொண்டிருக்க வேண்டுமென்று தாய் தந்தை கேட்டாலும், வீட்டில் வேலை யதிகமென்றும், தன் நாயகனுக்கும் தன் குழந்தைகளுக்கும் செய்யவேண்டியதற்கே காலம் சரிப்பட்டுப் போகிறதென்றும், அதவா கொஞ்சம் ஸமயம் கிடைத்த காலத்தில் அதை யெடுத்து வாசித்தால் "இதென்ன தேவடியாள் வீடா? எந்நேரமும் ஆடல் பாடலில் காலங் கழிக்கிருள்" என்று மாமிமார் வசைகூறுகிருர்களென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனதால், நீ பின்வருவதைக்கவனித்துப்பாராமல் உன் மகள் படிக்கவேண்டும் படிக்கவேண்டுமென்று கவலைகொண்டு திரிகிருய் (என்று நகைத்தாள்).

**பழனியாயி யம்யாள்.**—பெண்களைப் பெற்று அவர்களுக்குக் கல்வி முதலியவைகளைக் கற்றுக்கொடுத்து அனுபவப்பட்டவள் ஒரு பெண்ணுக்கு மாமியாராக அமைந்தால், அவள் தன மருமகள் ஓய்ந்திருக்கும் நேரத்தில் சும்மா இருக்கவிடாள். ஒருவனை மணம்புரிந்த புத்தியுள்ளபெண்ணும் தன் தாய் வீட்டில் வருத்தப்பட்டுக் கற்றதைக் கைசோரவிடாள். பெண்களைப்பெற்ற தாய் தந்தையரும் தங்கள் குமாரத்தியின் கல்வியைச் சிலாக்கியமாகக் கொண்டாடத் தக்க இடத்தைப் பார்த்துத் தங்களுடைய பெண்களைக் கொடுப்பாராயின் அவர்களுக்குள்ள கல்விக்கும் பாடல் முதலியவைகளுக்கும் அனுகூலமாக விருக்கும். அதைக் கவனிக்காமல் சொந்தம் போகிறதென்றும் பொருள் பூமி அதிகமிருக்கிறதென்றும் கிளியை வளர்த்து பூனை கையில் ஒப்படைப்பதுபோல் பெண்களைக் கல்வியற்ற கசடர்களுக்குக் கொடுத்தால், தாங்கள் சொல்வதுபோலவே முடியும். எவ்விதமிருக்கினும் புத்தியுள்ள பெண்கள் தங்கள் நாயகனை வசப்படுத்தி, ஓய்ந்திருக்கும் நேரத்தில் தாம்

கற்றிருக்கும் வீணை முதலிய கருவிகளைக்கொண்டு பாடி அவனை ஸந்தோஷப்படுத்தினால், அவன் வெறுப்படையாமல் அடிக்கடி வாசிக்கும்படி கட்டாயப்படுத்த மாட்டானா? அதனால் கற்ற வித்தையை மறக்காமலிருக்கக் கூடுமல்லவா?

**பழனியாயி யம்மாளின் தாய்.**—ஆனதால் பெண்ணின் கல்வியை யறிந்து மேன்மையாக வைத்து நடத்தப்போகிறவனைப் பார்த்து உன் மகளைக் கொடுக்கப்போகிறாயோ? எங்களுக்கெல்லாம் உன் மகளைக் கொடுத்தால் நாங்கள் மேன்மையாக வைத்து நடத்தமாட்டோம் என்று பயப்படுகிறாயா? (என்று நகைத்தாள்).

**பழனியாயி யம்மாள்.**—அம்மா! நான் ஒன்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது தாங்கள் வேறு ஸமாசாரத்தை மத்தியில் கொண்டுவந்து நுழைக்கிறீர்கள். கோகிலம்பாளை யாருக்குக் கொடுக்கப்போகிறோ மென்றோ இப்பொழுது வார்த்தையாடுகிறோம்? அவளுக்கு எங்குப் புசிப்பிருக்கிறதோ அங்குப் போவாள். நாம் அதைக் குறித்து இப்பொழுது ஏன் பேசவேண்டும்? கோகிலம்பாள் பருவமடைந்து இரண்டு மூன்று வருடம் ஆனபின் அவளை விவாகஞ் செய்து கொடுக்கவேண்டுமென்று நினைத்திருக்கிறோம். "பெண் பருவமடையுமுன் விவாகத்தை முடித்து அவள் பன்னிரண்டு பதின்மூன்றில் பருவமடைந்தால், உடனே புருஷன் வீட்டார் அழைத்துப்போய்விடுகிறார்கள். பெண் கர்ப்பவதியாகிக் குழந்தையைப் பெற்றால், அவள் தேகம் என்னத்திற்கு உதவும் நான் அவ்விதம் செய்யேன். பொறுத்தே செய்வேன்" என்று அவள் தந்தை சொல்லுகிறார். அக்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம். தாங்கள் கோகிலம்பாளை அழைத்துப் போகிறதாயிருந்தால், அவளை இரண்டு மூன்று வாரத்தில் கொண்டுவந்து விடவேண்டும். இப்பொழுது பள்ளிக்கூடம் மூடியிருக்

கிறது. ஒரு மாதத்துக்குப்பின் திறப்பார்கள். பள்ளிக் கூடம் திறக்கும் பொழுது அவள் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டும்.

**பழனியாயி யம்மாளின் தாய்.**—நான் விரைவில் அழைத்துவருகிறேன்.

என்று சிலநாள்களுக்குப்பின் பழனியாயின் தாயும் தமயனும் யாவரிடத்தும் விடைபெற்றுக் கோகிலம்பாளுடன் பிரயாணமானார்கள். கோகிலம்பாளும் தன் தாய் தந்தை ஸகோதரர் முதலானவர்களிடத்தில் விடைபெற்று, சமையலறைக்குள் வேலையாயிருந்த ஞானம்பிகையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "அக்காள்! நான் போய்வருகிறேன்" என்றாள். ஞானம்பிகையும் அவளைக் கட்டிப்பிடித்து முத்தங்கொடுத்து, "அம்மா! கோகிலம்! உன்னைவிட்டு நான் எப்படி யிருப்பேன்?" என்று கண்கலங்கி, "அம்மா! உன் பாடபுத்தகங்களை எடுத்துக் கொண்டு போய், நீ வாசித்ததை மறந்துவிடாமல் வாசித்துக் கொண் டிருக்கவேண்டும்" என்று மீண்டும் முத்தங்கொடுத்தாள்.

**கோகிலம்பாள்.**—அக்காள்! நான் என் புத்தகங்களை யெல்லாம் எடுத்துப் பதனமாக வைத்துக்கொண்டேன். தாங்கள் சொல்லியவிதம் எப்பொழுதும் வாசித்துக்கொண்டேயிருப்பேன். அல்லாமலும் நான் என் பெரிய தாயாரைப் பார்த்தபின் நெடுநாள் அங்கிராமல் என் பாட்டியாரைத் தொந்தரை செய்து அவர்களோடு விரைவில் வந்துவிடுவேன. (என்று தானுக ஞானம்பிகைக்கு முத்தங்கொடுத்து விடைபெற்று நீங்கினள்). ஞானம்பிகை வெளிவாயிற்படியில் வந்து நின்று கோகிலம்பாள் ஏறிப்போகிற வண்டி மறையுந்தனையும் பார்த்திருந்து கண்களில் நீர் வடிய வீட்டுக்குள் சென்றாள்.

## 4—ம் அத்தியாயம்

கோகிலம்பாள் நீங்கிய சில வாரங்களுக்குப் பின், ஞானம்பிகை தனக்குக் கிடைத்த சம்பளத்தைச் சேர்த்துவைத்திருந்து, அதில் ஐந்து ரூபாவுக்குச் சேலையொன்று வாங்கிப் பழனியாயியம்மாளுக்குக் காட்டி, அதைத் தன் தாய்க்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னதோடு, தன்னை அடிக்கடி பார்க்க வரும் செல்லாயி யம்மாளுக்கும் சொல்லி, தன் தாயின் க்ஷேமாதிசயங்களை யறியப் பலமுறை காஞ்சீபுரத்துக்குக் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தாள். ஒருநாள் செல்லாயி யம்மாள் ஓர் கடிதத்தைக் கொண்டுவந்து ஞானம்பிகைக்குக் கொடுத்து, "இது உனக்கு வந்த கடிதமா? பார்" என்றாள். ஞானம்பிகை அக் கடிதத்தை வாங்கிப் பார்த்து, "ஆம்! எனக்கு வந்த கடிதமே" என்று அதைப் பிரித்து வாசித்துப்பார்த்து, "தான் தற்காலம் வர முடியாதென்றும் சில வாரங்களுக்குப் பின் வந்து பார்த்துப் போகிறதாகவும் எழுதியிருக்கிறார்கள். தனக்குக் கடிதம் எழுதிக்கொடுக்க ஆளில்லாததால் கடிதம் எழுத முடியவில்லை என்கிறார்கள். தங்களை எப்பொழுதும் மறக்கவில்லையென்று சொல்லச்சொல்லி யிருக்கிறார்கள்" என்று சொன்னாள்.

பின் செல்லாயி அம்மாள் ஞானம்பிகையிடம் விடை பெற்றுப் போகும்பொழுது, அவள் கையில் ஓர் தகரடப்பியிருப்பதை ஞானம்பிகை கண்டு, "அம்மா! இது ஏது தகரடப்பி?" என்று கேட்டாள்.

**செல்லாயி யம்மாள்.**—இதை ஒருவர் கொடுத்தார்கள். உனக்கு வேண்டுமானால் எடுத்துக்கொள்.

**ஞானம்பிகை**—தாங்கள் தங்களுக்கு வேண்டுமென்று கொண்டு போவதால் தாங்களே கொண்டுபோங்கள். வேறொன்று கிடைத்தால் எனக்குக் கொண்டுவந்து கொடுங்கள்.

**செல்லாயி யம்மாள்**—இது எனக்கு வேண்டியதில்லை. நீயே

எடுத்துக்கொள் (என்று கட்டாயப்படுத்தி ஞானம்பிகையிடம் கொடுத்துப்போனாள்).

சில தினங்களுக்குப் பின் ஒருதினம் சிறுவர்களெல்லாம் பள்ளிக்கூடம் போனபின், பழனியாயியம்மாள் ஒருவருடைய வீட்டுக் கலியாணத்துக்குப் போய்வரவேண்டுமென்று, காலை எட்டுமணிக்குத் தன் பெட்டியைத் திறந்து ஒரு சேலையையெடுத்து வெளியில் வைத்து, நகைகளை எடுக்கப்போனாள். நகைகள் வைத்திருந்த இடத்தில் மோராமாலையும் கெம்பட்டிகையும் இல்லாமையைக் கண்டு திடுக்குற்றுப் பெட்டியிலிருந்த சேலை முதலானவைகளை யெல்லாம் எடுத்துப் பார்த்தாள்.

அவைகள் இல்லையென வறிந்து தன் நாயகனிடம் சென்று, "கெம்பட்டிகையையும் மோராமாலையையும் தாங்கள் யாருக்காகிலும் எடுத்துக்கொடுத்தீர்களா?" என்று கேட்டாள்.

**சாமியா பிள்ளை.**—(திடுக்குற்று) என்ன சொன்னாய்? மோராமாலையையும் கெம்பட்டிகையையும் நான் எடுத்துக்கொடுத்தேனா! கனவு கண்டாயா என்ன! நான் யாருக்கு எடுத்துக் கொடுத்திருப்பேன என்று கேட்க வந்தாய்?

**பழனியாயி யம்மாள்.**—நான் கலியாணத்துக்குப் போகவேண்டுமென்று மேல்வீட்டில் பெட்டியைத் திறந்து நகைகளை எடுக்கப்போனேன். அதில் எல்லா நகைகளு மிருக்க, கெம்பட்டிகையும மோராமாலையும் இலலை. (என்று சொல்லித் தன நாயகனோடு சென்று மீண்டும் பெட்டியைத் திறந்து, பெட்டியில் உளளதையெல்லாம் எடுதது வெளியில் வைத்து, இதிலிருநதவைகள் எவவிதம போய்விடும் என்று திகைத்து நின்றாள்).

**சாமியா பிள்ளை.**—நீ நகைகளை வெளியிலெடுதது யாருக்காகிலும காட்டிப் பின் பெட்டியில் வைக்காமல் கைமறதியாக வேறெங்காகிலும் வைத்துவிட்டாயோ என்னமோ? மற்றப் பெட்டிகளை யெல்லாம் திறந்துபார.

**பழனியாயி யம்மாள்.**—நான் நகைகளை வெளியில் எடுக்கவு

மில்லே. ஒருவருக்கும் அவைகளேக் காட்டவுமில்லே. வேறி டத்தில் வைக்கவுமில்லே.

என்று சொல்லிக்கொண்டே மற்றப் பெட்டிகளே யெல்லாம் இருவரும் திறந்துபார்த்து, நகைகள் இல்லாமையைக் கண்டு என்ன செய்கிறதென்றறியாமல் மரம்போல் அசைவற்றிருந்தார்கள். நெடுநேரத்துக்குப்பின் சாமியா பிள்ளே தனக்கு அதிக நேசமாயுள்ள போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் சென்று அவரிடத்தில் நடந்ததைச் சொல்லி அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துவந்தார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் "ஐயாவே! வீட்டில் திருடன் நுழைந்து நகைகளேக் கொண்டுபோயிருந்தால், முழுப் பெட்டியையும் கொண்டுபோயிருப்பான். அல்லது பெட்டியிலுள்ள எல்லா நகைகளேயும் கொண்டுபோ யிருக்கவேண்டும். அப்படி எல்லா நகையும் போகாமல் குறிப்பாக உள்ள இரண்டு நகைகளே போயிருப்பதால், இது உள்வீட்டுக் கள்ளனுல் நடந்திருக்கிறதென்று தெளிவாய்க் காண்கிறது" என்று அவருக்குச்சொல்லி, பின் அவர் மனேவியைப் பார்த்து, "அம்மா! நீ உன் சாவிகளே யாரிடத்திலாகிலும் கொடுத்துப் பெட்டியைத் திறக்கச் சொல்லியிருக்கிருயா? அப்படிக் கொடுத்திருந்தால், யார் யாரிடத்தில் கொடுத்துத் திறக்கச சொல்லியிருக்கிருய்?" என்று கேட்டார்.

**பழனியாயி யம்மாள்.**—அண்ணு! என சாவிகளே என் மகளிடத்தும் கொடுத்திருக்கிறேன். என சகோதரனிடத்திலும் கொடுத்திருக்கிறேன். மற்றப் பிள்ளேகளிடத்தும் ஞானம்பிகையிடத்தும் கொடுத்திருக்கிறேன.

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—அம்மா! ஞானம்பிகையை எவ்வளவு நாளாக அறிவீர்கள்?

**பழனியாயி யம்மாள்.**—ஞானம்பிகை எங்களிடம் வந்து ஏறக்குறைய ஏழுமாத மாகிறது. இந்த ஏழு மாதத்தில் ஓர்

பொய்யாகிலும் சொல்லாமல் ஸத்தியத்துக்குப் பாடுபட்டு வருகிருள். அவள் மாற்றுயர்ந்த தங்கம்!

**சாமியா பிள்ளை.**—யார்மேல் ஸந்தேகப்பட்டாலும் படலாம். ஞானம்பிகையின்பேரில் ஸந்தேகம் கொள்ளவேகூடாது. அவள் உண்மையே உருவெடுத்து வந்தவள்.

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—பசுத்தோல் போர்த்திய புலி உண்டென்று நீங்க ளிருவரும் அறியீர்கள். நான் உங்கள் மனதை நோவச் செய்வதில் பயனில்லை. நடேசன்மேல் உங்களுக்கு ஏதாகிலும் ஸந்தேகம் உண்டா?

**பழனியாயி யம்மாள்.**—ஐயோ! பாவம்! அவன்மேல் ஏன் ஸந்தேகப்படப் போகிறோம்?

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—எனக்கு நடேசன் பெட்டியையும் ஞானம்பிகையின் பெட்டியையும் பார்க்கவேண்டுமென்கிற விருப்பம் இருக்கிறது.

**பழனியாயி யம்மாள்.**—நடேசன் தன் சாவியை வைக்குமிடம் எனக்குத் தெரியும். தாங்களே வந்து அவன் பெட்டியைப் பாருங்கள்.

என்று அவரை அழைத்துக்கொண்டுபோய் அவன் வைக்குமிடத்திலிருந்து சாவியை எடுத்துக்கொடுத்துப் பெட்டியையும் காட்டினுன். போலீஸ் இன்ஸ்பெக்டர் சாமியாபிள்ளை முன்னிலையில் அப்பெட்டியைத் திறந்து, அதிலிருக்கும் துணிகள் உடுப்புகள் முதலானவைகளை எடுத்துப்பார்த்து, "இதில் ஒன்றும் இல்லை" என்று சொல்லி, ஞானம்பிகையைக் கூப்பிட்டார். அவள் ஏன் என்று ஓடிவந்தாள்.

**பழனியாயி யம்மாள்.**—(போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து) அண்ணு! தாங்கள் ஞானம்பிகையின் பெட்டியைப்பார்க்க வேண்டிய அவசிய மில்லை. அவள் மனம் வருந்த ஒன்றும் செய்யவேண்டாம் (என்று கெஞ்சினுள்).

ஞானம்பிகை, அவர்கள் பேசுவது தனக்கொன்றும் தெரியாமல், "என்ன என்ன?" என்று கேட்டாள்.

**போலீஸ் இன்ஸ்பேக்டர்.**—*அம்மா ஞானம்பிகை! பழனியாயி அம்மாளுடைய மோராமாலேயும் கெம்பட்டிகையும் அவர்கள் பெட்டியிலிருந்து காணமற்போனதே! அது விஷயத்தில் உனக்கு ஏதாகிலும் தெரியுமா?*

**ஞானம்பிகை.**—(திடுக்கிட்டு) *ஐயாவே! நான் அனேக தடவை அம்மாளுடைய பெட்டியைத் திறந்திருக்கிறேன். ஆயினும் அப்பெட்டியில் என்னென்ன இருக்கிறதென்று நான் பார்த்தவளல்ல பெட்டியைத் திறந்து சேலையை எடுத்து வரச்சொன்னால், நான் பெட்டியைத் திறந்து சேலையைமட்டும் எடுத்துக்கொண்டுபோய்க் கொடுக்கிறதன்றி வேறொன்றும் செய்தவளல்ல.*

**போலீஸ் இன்ஸ்பேக்டர்.**—*அம்மா! உன்னைக் குறித்துச் சாமியா பிள்ளையும் பழனியாயி யம்மாளும் மேன்மையாகப் பேசுகிறார்கள். ஆதலால் உன்மேல ஸந்தேகங்கொள்ளுவார் ஒருவருமில்லை. நான் வீட்டிலிருக்கும் எல்லாப் பெட்டியையும் பரிசோதனை செய்து, முடிவாக நடேசன் பெட்டியையும் பார்த்தாய்விட்டது. உன் பெட்டியைப் பார்ப்பதில் உனக்கேதாகிலும் மனவருத்தம் உண்டாகுமோ? மனவருத்தம் உண்டாகுமெனில், நான் பார்க்காமல் போய்விடுகிறேன.*

**ஞானம்பிகை.**—*ஐயாவே! எனக்கு வருத்தம் உண்டாகிறதற்குப் பதிலாக என் மனம் ஸந்தோஷமடையும். ஆனதால் என பெட்டியையும் பாருங்கள் (என்று தான் வைக்குமிடத்திலிருந்து சாவியை எடுத்து வந்து கொடுத்தாள்).*

*போலீஸ் இனஸ்பெக்டர், பெட்டியைத் திறந்து, அதில் புதிய சேலையொன்று நூல்கயிற்றால் கட்டியிருப்பதைப் பார்த்து "இது என்ன?" என்று கேட்டார்.*

**பழனியாயி யம்மாள்.**—*அந்தச் சேலையைத் தன் தாய்க்கு அனுப்பக் கட்டிவைத்திருக்கிறாள். அதைப் பிரிக்கவேண்டாம்.*

*போலீஸ் இன்ஸ்பெக்டர் அதைக் கீழே வைத்துவிட்*

டுப் பெட்டியிலுள்ள மற்றத் துணிகளையெல்லாம் எடுத்துப் பார்த்து முன்னிருந்த விதமாகவே வைத்துவிட்டு, புதிய சேலையைப் பெட்டியில் வைக்கப்போனவர், இதன் முன்றானை எப்படியிருக்கிறதோ பார்க்கலாமென்று பிரித்தார். பிரித்தவுடன் அதிலிருந்து ஓர் தகரடப்பி விழக்கண்டு, அதை யெடுத்துத் திறந்து பார்த்தார். யாவரும் பிரமைகொண்டார்கள் ஞானம்பிகை திடுக்கிட்டுத் தன் கண்களில் நீர் தாரைதாரையாக வடிய மரம் போல அசைவற்று நின்றாள்.

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—ஐயா! சாமியாபிள்ளை! போலீஸாருடைய அனுபவத்தைப் பார்த்தீரா? நான் முதலிலிருந்து சொன்னதை நீங்களிருவரும் கவனிக்காம லிருந்தீர்கள். பசுத்தோல் போர்த்திய புலியுண் டென்பதை இப்பொழுதாகிலும் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

**சாமியா பிள்ளையும் அவர் மனைவியும்.**—இதென்ன காலக் கேடு?

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—இனி பார்த்துகொண்டிருப்பதில் பலனொன்றுமில்லை (என்று ஞானம்பிகையைப் பார்த்து), ஏ பெண்ணே! இதென்ன வேடிக்கை? உன் பெட்டியில் அந்தம்மாளுடைய நகைகள் எப்படி வந்திருக்கிறது? கெம்பட்டிகை நசுங்காமலிருக்கக் கந்தைத்துணிகளால் சுற்றியும் மோராமாலை நசுங்காதென்று துணியில் சுற்றாமலும் தகரப்டப்பியில் வைத்து உன் தாயாருக்கு அனுப்பபோகும் சேலைக்குள் வைத்துக் கட்டியிருக்கிறாயே! இன்னம் இரண்டொரு நாள் பழனியாயி யம்மாள் தன் நகைகளைத் தேடாமலிருந்தால், நகைகள் சேலையோடு உன் தாயாரிடம் போய்ச் சேர்ந்திருக்கு மல்லவா?

ஞானம்பிகை, பதில் ஒன்றும் சொல்லாமல், அழுதுகொண்டிருந்தாள்.

**சாமியா பிள்ளை.**—ஞானம்பிகை! நீ இவ்விதமான வேலை செய்

வாயென்று நான் நினைத்தவனல்ல. என் மனதைப் புண்ணாக்கிவிட்டாய்.

**பழனியாயி யம்மாள்.**—அடி ஞானாம்பிகை! என் குழந்தைகளில் நீயும் ஒன்றென்று நான் எண்ணி யிருக்கிறேன் என்று உன்னிடம் சொன்னதாலோ இந்த வேலையைச் செய்து எனக்கு எல்லாரிடத்தும் அவநம்பிக்கை உண்டாக்கிவிட்டாய்? தகரடப்பியொன்று ஸம்பாதித்து அதில் நகைகளை வைத்து, சேலையொன்று உன் தயாராக் கனுப்புவது போல அதனுள் நகைகளையும் வைத்தனுப்பிவிட்டால், உன்மேல் ஸந்தேகம் கொள்ளார்களென்கிற அறிவு உனக்குதித்தது உனக்கிருக்கும் கல்வியின் உதவியாலோ? அடி பாதகி! உன்னுடைய உள்ளெண்ணம் அறியாமல் உனக்கென்னென்னமோ செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தேனே! அடிதோஷி! நீ திருடி என்ற பேரெடுத்தபின், யார் உன்னை ஆதரிப்பார்கள்? நீ உன் தாய்க்கு அனுப்ப வைத்திருக்கும் சேலைக்கட்டை அவிழ்க்க வேண்டாமென்று சொன்னேனே! உன்மேல் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தால் அவ்விதம் சொல்லியிருப்பேனா? நீ எங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து, எங்களுக்கு உன்மேல் அதிக நம்பிக்கை உண்டாகும்படி நடித்தது, இதற்குத்தானா? உண்ட வீட்டில் இரண்டகஞ் செய்யும் பாதகர்கள் இருக்கிறார்களென்று சொல்லுகிறார்களே; அது உண்மையென்றே எங்களுக்கு மெய்ப்பித்தாய். அடி! நாயே! உன்னையும் ஓர் பெண் ஜன்மமாக பிரமன் படைத்தானே! அடி புழுக்கை! புழுக்கையைப் புழுக்கையாக நடத்தாமல், வீட்டில் பிறந்த பெண்போல் உன்னைச் சிறுவர்களெல்லாம் அக்காள்! அக்காள்! என்று முறைகொண்டாடியதால், நீ யாரும் செய்யாத வேலையைச் செய்தாய்! அடி கழுதை! நீ வரும்பொழுது உன்னைப் பார்த்துப் பரிதாபப்பட்டு என் மகள் கட்டியிருந்த துணிகளையெல்லாம்

உனக்குக் கொடுத்து, நீ கட்டிவந்ததைக் கொண்டுபோய்க் குப்பையில் போட்டேனே! அந்த நன்றியை மறக்காமலோ இவ்விதம் செய்தாய? உன்னைச் சும்மா விட்டுவிட்டால் உனக்குப் புத்தி வராது (என்று தன் கையிலிருந்த சாவிக்கொத்தால் தலையில் அடித்தாள் உடனே இரத்தம் வெளிப்பட்டது). உன்னைச் சிறைச்சாலையி லடைத்தாலே புததிவரும். நீலிக்கு வீமையிலே கண்ணீர் என்றவிதம் நீ கண்ணீர் உதிர்த்துக்கொண்டிருந்தால், உன்னைச் சற்புத்திரி யென்று ன்னைப்பார்களென்றோ அழுகிறாய்?

போலீஸ் இன்ஸ்பெக்டர்.—ஏ! கழுதை! நான் கேட்டதற்கு ஏன் பதில் சொல்லவில்லை? (என்று காலேந்தடி கன்னத்திலடித்தார்).

ஞானம்பிகை பதிலொன்றும் சொல்லாமல் அழுதுகொண்டிருப்பதைக் கண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர், "நீ என்னோடு போலீஸ் சாவடிக்கு வா" என்று கையைப்பிடித்துக் கீழ்வீட்டுக்கு இழுததுவந்தார்.

ஞானம்பிகை.—(அவர் இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டு), ஐயாவே! இன்னும் என்னை அடியுங்கள். நான் சாண் வயிறறை வளர்க்கப்படுந் துன்பம் பெரிதாக இருக்கிறது. என்னைக் கொன்றுவிட்டால் பெரும் புண்ணியமாகும். ஆனதால் என்னைக் கொன்றுவிடுங்கள். என்னை என்ன செய்யினும் செய்யுங்கள். என்னைப போலீஸ் சாவடிக்குமட்டும் அழைத்துப் போகவேண்டாம். நான் ஏழை, அதிலும் நாதியற்றவள். என் வினை என்னை இத் துன்பத்தில் அழுத்தியது. என் பெட்டியில் நகைகளிருக்க நான் எடுக்கவில்லை யென்றால், யாராகிலும் நம்புவார்களா? நான் அனேக நாள் முழுப்பட்டினியிருந்தும் அரைப்பட்டினியிருந்தும் காலங்கழித்தேன். இப்புண்ணியவதியால் எல்லா ஸுகத்தையும் பெற்றிருந்தேன். 'தன்னிழல் தன்னோடு' என்ற விதம், என் வினை என்னைப் பின் தொடர்


ந்து இக்கதிக்கு ஆளாக்கிவிட்டது. ஐயா ! சாமி ! நான் அறியாதவள் ! ஒன்றுந் தெரியாதவள். நான் அறியாமற் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் (என்று அவர் கால்களை விடாமல் பிடித்துக்கொண்டு கதறினுள்).

போலீஸ் இன்ஸ்பெக்டர் அவள் உருண்டுபோகும்படி வயிற்றிலுதைத்து, "ஓடிப்போ ! துன்மார்க்கி ! நீ இவ்வூர்ப் பக்கம் தலைகாட்டினுல், உன்னைப் பிடித்துப் போலீஸ் சாவடியில் அடைத்துவிடுவேன்" என்று கோபமாகச் சொன்னுர்.

ஞானம்பிகை, வயிற்றைப் பிடித்துக்கொண்டு மூச்சு விட முடியாமல் சிலநேரமிருந்து எழுந்து மெதுவாக மூச்சு விட்டு "ஆ ! தெய்வமே ! ஒரு பிடி சாதத்தால் நிரம்பத் தகுந்த வயிற்றை வளர்க்கவா இந்தக் கஷ்டம் அடையவேண்டும் ! என்னுடைய தீவினையின் பலனை நான் அனுபவிக்காமல் வேறு யார் அனுபவிப்பார்கள் ?" என்று சொல்லி, கண்களில் தாரை தாரையாக நீர்வடிய எல்லோரையும் பார்த்துக் குடிபிட்டு, "நான் உயிரோடுள்ள நாள் பரியந்தம், நீங்கள் என் விஷயத்தில் காட்டிய அன்பை மறக்கமாட்டேன். நான் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னியுங்கள்" என்று தன் கணகளிலிருந்து வடியும் நீரால் வழிதெரியாமல் சென்ருள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்.—தம்பா ! பழனியாயி ! நான் அப்பெண்ணைப் போலீஸ் சாவடிக்குக் கொண்டுபோனுல், நீங்கள் யாவரும் நியாயஸ்தலத்துக்குப் போகவேண்டும். அவளைத் தண்டிக்க வக்கீல் வைப்பதிலும் மற்ற விஷயங்களிலும் பொருள் செலவுசெய்யவேண்டும். நமக்கு நகைகள் கிடைத்தபின் நாம் வீணில் ஏன் பொருளைச் செலவுசெய்யவேண்டும் என்று யோசித்தே அவளைத் துரத்திவிட்டேன்.

சாமியா பிள்ளை.—ஆம் ! அது உண்மையே! நீர் செய்ததே மேன்மை ! நீர் வராமலிருந்தால் எங்கள் நகைகள் கிடைத்திரா.



துன்மார்க்கா! நீ இப்பெண்ணோடு வார்த்தையாடிக்கொண்டிருந்ததை நானும் அதோ வருகிறாரே அவரும் கேட்டிருந்தோம். (53-ம் பக்கம் பார்க்க.)

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—நாங்கள் இவ்விதமான ஆசாரக் கள்ளரை அதிகம் பார்த்திருக்கிறோம். நான் அவசியம் ஓரிடத்திற்குப் போகவேண்டும் (என்று விடைபெற்று நீங்கினார்).

சாமியா பிள்ளையும் உத்தியோகத்துக்குச் சென்றார்.

ஞானம்பிகை, சாமியா பிள்ளையின் வீட்டைவிட்டு நீங்கியபின், மிகு துக்கத்தோடு தன் இரண்டு கண்களிலிருந்து நீர் மாலைமாலையா யோட, செல்லாயி யம்மாள் வீட்டுக்குப் போய்த் தன் நிர்ப்பாக்கிய ஸ்திதியைச் சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டு, குறுக்குவழியாகச் சாலையை அடைந்து, திருக்கடையூர் மார்க்கமாகச் சென்றவள், நெடுந்தூரம் போனபின் ஒருமரத்தின் நிழலில் உட்கார்ந்தாள். உட்கார்ந்து தன் முன்றானையை யெடுத்துத் தன் கண்களைத் துடைத்துத் துடைத்துப் பார்த்தும், கண்களிலிருந்து நீர் ஆறாக ஒடுவதால் தன் துக்கத்தை ஆற்றிக் கொள்ள முடியாமல், வருவார் போவார் தன்னை கவனிக்கிறார்களென்று, ஒருவர் கண்ணுக்கும் அகப்படாமல் மறைந்திருந்து தன் துக்கத்தை ஆற்றிக்கொள்ளவேண்டு மென்று நினைத்து, ஸமீபத்தில் சாலையை யொட்டிய மரமொன்று ஐந்தாரடி உயரமுள்ள நாகதாளிக் கள்ளியால் சாலைப்பக்கம் மூடப்பெற்றிருப்பதைக் கண்டு, அதைச் சுற்றிக்கொண்டுபோய் மறைவான இடத்தில் உட்கார்ந்தாள்.

உட்கார்ந்து தன் துக்கத்தை ஆற்றிக்கொண்டிருக்கும் பொழுது, ஒருவன் எதிரில் வந்து நின்று, ஞானம்பிகை தனித்து உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பதைக் கண்டு தேகங் குலுங்க நகைத்து, "நான் போட்ட புள்ளி தப்பாமல் பலித்தது. ஆ! ஆ! ஞானம்பிகை! நடேசனுடைய கோபம் என்ன செய்தது பார்த்தாயா? நீ என்னுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்யாவிட்டால், உன்னை இவ்வீட்டிலிருந்து துரத்திவிடுவேன் என்ற என் சொல்லை நம்பாம லிருந்தாயல்லவா? நீ உன் தாயாருக்கு அனுப்ப வைத்திருந்த சேலைக்குள் உன்பெட்டியில் கிடைத்த தகா

டப்பியில், என் தமக்கையின் நகைகளை அவர்கள் பெட்டியிலிருந்தெடுத்து அடைத்துவைத்து, நீ உன் தாயாருக்கு அனுப்ப வைத்திருப்பதுபோல் நான் உன் பெட்டியில் வைத்திருந்தேன். அதைக் கண்டுபிடித்து உன்னைத் துரத்திவிட்டார்கள்ல்லவா? இப்பொழுதாகிலும் என்னுடைய இஷ்டத்துக்கு உடன்படுவாயா இல்லையா? என்னிஷ்டத்துக்கு உடன்பட்டால் நான் விளையாட்டுக்குச் செய்தேன் என்று சொல்லி, உன்னை வீட்டில் சேர்த்துக்கொள்ளச் சொல்லுகிறேன்" என்றான்.

ஞானம்பிகை.—ஐயா! உம்மை நோவதில் பிரயோசனம் இல்லை! என்னுடைய தீவினை உம்மை அவ்விதம் செய்யத் தூண்டியது. நீர் அறியாததன்மையால் என்னென்னமோ சொல்லுகிறீர். என் வினையோடு என்னைவிட்டு நீர் போம். நான் ஏழைகளிலெல்லாம் ஏழை! என் வினை என்னை எங்கே தள்ளிக்கொண்டு போகிறதோ போகட்டும் நீர் என் விஷயத்தில் செய்ததையெல்லாம் என் வினைப்பலனாக அனுபவித்தேன்: இன்னும் அனுபவிக்கப் போகிறேன். நீர் போம்! போம்! (என்று அவ்விடத்தை விட்டு நீங்க எத்தனித்தாள்).

நடேசன்.—ஞானம்பிகை! நான் உன்னைப் போகவிடமாட்டேன். நான் சொல்வதை நன்றாய்க் கவனித்துக் கேள். நீ இப்பொழுது பருவ மடையாதிருந்தாலும் தோஷமில்லை. நான் இது முதல் உன்னை என் மனைவியாக நினைத்து உனக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துக்கொண்டிருப்பேன். நீ பருவமடைந்தபின் என் தாய் தமயன் அறிய உன்னை விவாகஞ் செய்துகொள்ளுகிறேன். நான் சொல்வதைக் கேட்காமல் போவாயாயின், நீ யாரைப்போய் அடுத்தாலும், அங்கெல்லாம் நானே வந்து "என் தமக்கையின் வீட்டில் நகை திருடியதால் இவளைத் துரத்திவிட்டோம்" என்று சொல்லி, உன்னை எங்கும் நிலைக்கவிடாமற் செய்வதோடு, இப்பொழுதும் உன்னை அலங்கோலப்படுத்தி

அனுப்புவேன். விரைவில் யோசித்து உன் விருப்பத்தைச் சொல்.

ஞானம்பிகை.—ஐயாவே! நான் உம்முடைய தமக்கை வீட்டுக்கு வருமுன், என்னை நீர் அறியீர்: உம்மை நான் அறியேன். நான் என் வயிற்றை வளர்க்க உங்கள்வீட்டில் வேலை செய்ய வந்தேன். நான் அவ்விடத்தில் வேலை செய்து கொண்டிருந்தபொழுது, நான் உம்முடைய விஷயத்தில் என்ன கெடுதலைச் செய்தேன்? எல்லாருக்கும் செய்த பணிவிடைகளைப்போல் உமக்கும் செய்துவந்தேன். அவ்விதமிருக்க, நீர் என்னை அலங்கோலப்படுத்துவதாகச் சொல்லுகிறீர். எனக்குத் திருடியென்ற பட்டம் சூட்டுவித்ததோடு, இன்னும் எனக்குக் கெடுதலாக நான் போகும் இடங்களுக்கெல்லாம வந்து என்னை அவமானப்படுத்தி என்னை ஒரிடத்திலும் நிலைத்திருக்க விடமாட்டேன் என்கிறீரே! இது உமக்கு தருமமா? என்னைவிட நீர் அதிகம் வாசித்திருப்பதால் நான உமக்குப் புத்தி சொல்வது பொருந்தாது. நீர் இது பரியந்தம் செய்ததை மறந்துவிடுகிறேன். என்னை மறிக்காது விட்டுப்போய்விடும்.

நடேசன்.—ஞானம்பிகை! என்ன சொன்னுய்? நான் உன் விஷயத்தில் செய்த எல்லாவற்றையும் மறந்து விடுகிறுயா! ஸபாஷ்! ஸபாஷ்!! நீ மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருப்பாயாஞல், அது என் தலையைக் கிள்ளிவிடும் என்று நினைத்தாயா? பைத்தியக்காரி! நான், உன் மனம் வருந்த ஒன்றையும் செய்யக்கூடாது, உன் முழு ஸம்மதத்தோடு எதையும் செய்யவேண்டுமென்று எண்ணியதால், நீ கதைகளை யெல்லாம் சொல்லுகிறுய்! நீ வீட்டுவேலை செய்து வயிறுவளர்ப்பதைவிட நீ எனக்கு மனைவியாக இருப்பது உன்னுடைய கௌரவத்துக்குக் குறைவாய்விடுமென்ருே நினைக்கிறுய்? வேண்டாம்! வேண்டாம்! நான் சொல்வதைக் கேள். வீணில் இன்னும் அதிக துன்பம

அடைவாய். காலம் போக்காமல் நான் சொல்வதையெல்லாம் ஒப்புக்கொள்வதாகச் சொல்லிவிடு.

ஞானும்பிகை.—ஐயா ! என்னைக் கலியாணஞ் செய்துகொள்ள விருப்பங் கொண்டவர் எனக்குச் செய்வது இதுதானு ! போம் ! போம் ! புத்தியற்றவரே ! நீர் என்னை அலங்கோலம் செய்வதாகப் பயமுறுத்தினுல், நான் பயந்து விடுவேன் என்று நினைக்கவேண்டாம். நீர் என்னை அலங்கோலஞ்செய்தால், உமக்குப் பின் நேரிடும் கதி இன்னதென்று அறியாமலிருக்கிறீர். நீர் ஏழு வருடம் கடின தண்டனை அடையவேண்டிவரும் என்றறியும். ஆனதால் நான் போவதைத் தடுக்காமல் விலகி நில்லும் (என்று போக எத்தனித்தாள்).

நடேசன்.—அடி ! ஞானும்பிகை ! ஓர் முத்தங்கொடுத்துப் பின் நீ சொல்லியவண்ணம் தண்டனை யடைகிறேன் (என்று நெருங்கினுன்).

ஞானும்பிகை.—அடா ! துன்மார்க்கா ! நான் உன்னேடு மரியாதையாக வார்த்தையாடிவந்ததால், நீ தலைமயக்கங்கொண்டு ஆடுகிருய் ! என்னைவிட்டுப் போகாவிட்டால், நீ அவமானம் அடைவாய்.

நடேசன்.—என்னடி சொன்னுய் ! நான் துன்மார்க்கனு ! நான் துன்மார்க்கன் என்பதை முற்றிலும் காட்டிவிடுகிறேன் பார் !

என்று அவள் கைகளைப் பிடிக்க முயன்றபொழுது, அவள் “ ஆ ! தெய்வமே ! எனக்கு நாதியில்லை யென்று என்னைத் தொந்தரவு செய்கிருனே ! ” என்று திமிறிக்கொண்டோடினுள். நடேசன் அவளை விடாமல் பின்தொடர்ந்தோடிப் பிடித்துக்கொண்டு, “ எங்கு ஓடப்பார்க்கிருய் ! நான் விட்டுவிடுவேன் என்று நினைக்கவேண்டாம் ” என்றுன்.

ஞானும்பிகை அவன் பிடியிலிருந்து திமிறிக்கொள்ளப் பிரயத்தனப்பட்டுக்கொண்டே, “ஐயோ சாமி ! நான் ஏழை !

வயிற்றுக்குச் சோறில்லாமல் திரிபவளைக் கெடுப்பது உமக்கு தருமமல்ல ; என்னை விட்டுவிடும்'' என்று கெஞ்சியும், அவன் விடாமலிருப்பதைக் கண்டு, "அடா படுபாவி ! நான் எவ்வளவு சொல்லியும் விடமாட்டேன் என்கிறாய். நீ வீணில் கெட்டுப் போவாய் வேண்டாம் ! வேண்டாம் ! என்னை விட்டுவிடு '' என்று சொன்னாள். அதைக் கிஞ்சித்தும் கவனிக்காமல், அவன், " அடி நீ என்ன திமிறினாலும் விடமாட்டேன் '' என்றான்.

ஞானம்பிகை அனேக முறை அவன் கையிலிருந்து விடுபட்டு ஓடினாலும், அவன் விடாமல் பின் தொடர்ந்து கட்டிப் பிடிக்கும்பொழுது, சாலையின் பக்கத்திலிருந்து இருவர் ஓடிவந்தனர். அவர்களில் இருபதென்று நிதானிக்கத்தக்க வயதும், ஐந்தரையடி உயரமும், தங்க நிறம்போன்ற மேனியும், முடித்துத் தொங்கவிட்ட கேசமும், விசாலமான நெற்றியும், கறுத்தடர்ந்த புருவமும், பெருத்தகன்ற விழிகளும், நீண்ட நாசியும், முத்துகள் போன்ற சரியொத்த பல்வரிசையும், பரந்த முகமும், அரும்புகட்டிவரும் மீசையும், விசாலமாகிய மார்பும், பருத்த தோள்களும் உடைய ஒருவன், முந்தி வந்து நடேசன் கன்னத்தில் அறைந்தான். அவன் ஞானம்பிகையை விட்டுவிட்டான். வந்தவன் மீண்டு நடேசன் கன்னத்தில் நாலைந்து அறை அறைந்து, முகத்தில் குத்தி, எட்டியுதைத்து, "துன்மார்க்கா ! நீ இப்பெண்ணோடு வார்த்தையாடிக்கொண் டிருந்ததை நானும் அதோ வருகிறாரே அவரும் கேட்டிருந்தோம் '' என்றான்.

பின் ஓடிவந்தவர், " தம்பி மீனாக்ஷிஸுந்தரம் ! நான் இவனை எங்கள் இன்ஸ்பெக்டர் முன் கொண்டுபோய் விட்டு, இவன் செய்த வேலைகளை யெல்லாம் சொல்லி, இவனை நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோகவேண்டும். ஞானம்பிகையும் நம்மோடு வரவேண்டியது கட்டாயம் '' என்றார்.

நடேசன் கையிலிருந்து விடுபட்ட ஞானம்பிகை, " நம்மைத் தெய்வமே காப்பாற்றிவிட்டது '' என்று தனக்கு உதவி செய்தவன் தெய்வமே யென்றெண்ணி, அவன் கால்களை

பிடித்துக்கொண்டு, "ஐயாவே! எனக்கு இத்தநி செய்த உபகாரத்தை எப்பொழுதும் மறக்கேன். (நடேசனைக் காட்டி) இவர் எனக்குக் கெடுதலை செய்தாராயினும், அது என்தீவினையால் உண்டாகிய பலனேயன்றி வேறல்ல. ஆனதால் அதற்காக இவரை ந்யாயஸ்தலத்துக்குக் கொண்டுபோவது கூடாது. அல்லாமலும், இவருடைய தமக்கை என்னைத் தன் பெண்போலப் பார்த்துவந்தார்கள். அவர்களுக்காகவாவது இவரை விட்டுவிட வேண்டும்" என்று மீண்டும் இருவர் காலிலும் விழுந்து நமஸ்காரஞ்செய்து வேண்டினாள்.

**மீனாக்ஷிஸுந்தரம்.**—(தன்னோடு நின்றிருப்பவரைப் பார்த்து) ஐயா! நல்முத்து பிள்ளை, இப்பெண் சொல்வதைக் கேட்டுக்கொண்டீர்களல்லவா! இப்பெண்போலும் நற்குணமுள்ளவர்கள் உலகில் பலர் இருப்பார்களென்று நான் நினைக்கவில்லை.

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா ஞானம்பிகை! நாங்கள் வண்டியொன்றை அனுப்பும்படி சொல்லிவந்தோம். அது வராததால் இவ்விடத்தில் காத்துக்கொண்டிருந்து, இவன் உன்னிடத்தில் சொல்லியதை முதலிலிருந்து கேட்டிருந்தோம். இவன உனக்குத் திருட்டுப்பட்டங்கட்டி வீட்டை விட்டுத் துரத்தும்படி செய்ததை மறந்து, இவ்விதம் சொல்லுகிறாயே!

**ஞானம்பிகை.**—ஐயாவே! நானோ ஏழை! ஒருவர் வீட்டில் வேலை செய்து வயிறுவளர்க்கிறவள். என்னைத் திருடியென்று சொன்னாலும் தோஷமில்லை! இவரோ பணக்காரர் வீட்டுப் பிள்ளை. இவர் இவ்விதமான காரியத்தைச் செய்தாரென்று இவா தமக்கை அறிந்தால், அதிகம் துக்கப்படுவார்கள். ஆதலால், அந்தம்மாளுக்கு மனவருத்தம் வராமலிருக்க இவா என் பெட்டியில் நகைகளை எடுத்து வைத்த ரகசியத்தை அந்த அம்மாளிடம் சொல்லாமலிருக்க

வேண்டுகிறேன் (என்று நல்லமுத்துப் பிள்ளையை கெஞ்சிக்கேட்டுக்கொண்டாள்).

நல்லமுத்துப் பிள்ளை.—(நடேசனைப் பார்த்து) அடா! துன்மார்க்கா! இவ்வித நற்குணம் நற்செய்கை பொருந்திய பெண்ணை இக்கதி காணச் செய்தா யல்லவா? (என்று சொல்லி, பின் ஞானம்பிகையைப் பார்த்து)? அம்மா! நான் போலீஸ் ஹெட்கான்ஸ்டெபில். எனக்குமேலதிகாரி இன்ஸ்பெக்டர். அவரிடத்தில் இதைச் சொல்லாமல் மறைத்து வைப்பது முடியாது. நீ சொல்லியதெல்லாம் அவரிடம் சொல்லுகிறேன். நானாக ஒன்றும் செய்வது முடியாது. நீ இப்பொழுது எங்கே போக யோசித்திருக்கிறாய்?

ஞானம்பிகை.—போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னை இப்பக்கத்தில் தலைகாட்டாமல் போய்விடு என்று கட்டளையிட்டதால், நான் எங்காகிலும் போகலாமென்றே இம்மார்க்கம் போகிறேன்.

நல்லமுத்துப் பிள்ளை.—இன்ஸ்பெக்டர் பரியந்தம் இந்த ஸமாசாரம் எட்டிவிட்டதா? இதை அவரிடத்தில் சொல்லாமலிருக்க முடியாது. போலீஸ் இன்ஸ்பெக்டர், ரகசியம் அறியாததால், அவ்விதம் சொன்னார். அதற்காக நீ கவலை கொள்ளவேண்டாம். நான் அவரிடத்தில் சொல்லி நீ முன்னிருந்த இடத்தில் இருக்கும்படி ஏற்பாடு செய்கிறேன். நீ என்னோடு வா.

ஞானம்பிகை.—அவ்விடத்தில் வந்திருக்கப் பிரியமில்லை. நான் அவ்விடம் வந்தால் (நடேசனைக் காட்டி) இவரை வீட்டிலிருந்து நீக்கிவிடுவார்கள். நீக்காமல் வீட்டில் இருவரும் இருப்போமேயானால், இவரை அடிக்கடி நான் பார்க்க நேரிடும். என்னால் அந்த அம்மாளுக்கு மனவருத்தம் உண்டாகும். ஆனதால், நான் வேறெங்காவது போவதே உத்தமம்.

மீனாக்ஷிஸுந்தரம்.—ஐயாவே! இப்பெண் சொல்வது யாவும் நியாயமாகவே காண்கிறது. நீர் நடேசனை அழைத்துப்

போய் இன்ஸ்பெக்டரிடம் விட்டு ஞானம்பிகையின் கருத்தைச் சொல்லுங்கள். நான் ஞானம்பிகையை அழைத்துக் கொண்டுபோய் வேண்டியதைச் செய்கிறேன். இன்று என்னை மன்னியுங்கள். மற்றொரு ஸமயத்தில் தங்களை நானே வந்து பார்க்கிறேன். நாம் வரும்பொழுது சாமியா பிள்ளை முதலானவர்களைப் பார்க்கவேண்டுமென்று சொன்னதையும் மற்றோர் காலத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை! இதென்ன உன் தலையில் ரத்தம கசிந்துகொண்டிருக்கிறது? நான் இதுபரியந்தம் அதை கவனிக்கவில்லை.

**ஞானம்பிகை.**—அது ஒன்றும் இல்லை! நான் வரும்பொழுது கல் தடுக்கி விழுந்தேன். அப்பொழுது கல் தலையில்பட்டு காயமாயிற்று.

"இனி காலம் போக்குவதில் பிரயோசனம் இல்லை. நாங்கள் போய்வருகிறோம்" என்று மீனாக்ஷிஸுந்தரம் நல்லமுத்துப் பிள்ளையிடம் விடைபெற்று, ஞானம்பிகையைத் திருக்கடையூருக்கு அழைத்துப் போய், அங்கோர் பிராமணன் வீட்டில் சாபபிடச்செய்து, அன்றிரவே அவ்விடத்தை விட்டு நீங்கினான்.

## 5—ம் அத்தியாயம்.

ஞானம்பிகை நீங்கியபின். மத்தியானத்தில் வண்டியொன்று வீட்டுக்கெதிரில் வந்து நிற்பதைக் கண்ட பழனியாயி, எழுந்தோடி வண்டியில் வந்தவள் தன் மகளென அறிந்து, "அம்மா கோகிலம்! இரண்டு மூன்று வாரத்தில் வருகிறேன் என்று சொல்லிப்போனவள் பள்ளிக்கூடம் திறந்தபின்னும் வராமலிருந்தாயே! ஏன் காலதாமதம்?" என்று கேட்டாள்.

**கோகிலம்பாள்.**—அம்மா! நான் ஒரு வாரத்திற்கு முன் வரவேண்டுமென்று பிரயாணப்பட சித்தமாயிருந்தேன்.

நான் பிரயாணப்பட இருந்த அன்று பாட்டியாருக்கு அதிக சுரம் வந்து அதனுல் தடங்கலானது. பின் அவர்களுக்கு ஸௌக்கியமானவுடன் பிரயாணப்படலா மென்றிருந்தேன் ஆனுல் அவர்களுக்கு ஸௌகரியப்படாமலிருந்து மூன்று நாளைக்கு முன் தான் தலைக்குத் தண்ணீர் விட்டார்கள். என்னோடு அவர்கள் வரமுடியாமல் வண்டிக்காரனைத் துணைகூட்டியனுப்பி, அவனைக் காரைக்காலிலிருந்தே திரும்பும்படி செய்துவிட வேண்டுமென்று சொன்னதால், அவனைக் காரைக்காலில் விட்டு, நமக்குத்தெரிந்த வண்டிக் காரனோடு வந்தேன் (என்று சமையலறைக்குள் ஒடினுள். உடனே திரும்பிவந்து), அம்மா! அக்காள் எங்கே?

**பழனியாயி யம்மாள்.**—அந்தப் படுபாவியின் ஸமாசாரத்தை ஏன் கேட்கிருய்? அவள் என் பெட்டியைத் திறந்து மோராமாலையையும் கெம்பட்டிகையையும் எடுத்து ஒரு தகரடப்பியில் வைத்து மூடித் தன் தாயாருக்கு அனுப்ப வாங்கி வைத்திருந்த சேலைக்குள் வைத்துக் கட்டியிருந்ததைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்டுபிடித்து அவளை இரண்டு மூன்று மணிநேரத்துக்கு முன் இவ்வூரைவிட்டுத் துரத்திவிட்டார்.

**கோகிலம்பாள்.**—(தன் கண்களில் நீர்ததும்ப அசைவற்றுச் சிலநேரம் மௌனமாயிருந்து) அம்மா! நீங்கள் என்ன அநியாயம் செய்துவிட்டீர்கள்? அந்த அக்காள் அவ்விதமான காரியத்தைச் செய்யத் தகுந்தவளா என்று கிஞ்சித்தும் நினைக்காமல் போனீர்களே! (என்று கண்ணீரை வடிய விட்டு அழுதாள்).

**பழனியாயி யம்மாள்.**—அம்மா! நாங்களும் உன்னைப்போலவே முதலில் நினைத்திருந்தோம். நகைகளை அவள் பெட்டியிலிருந்து எடுத்தபின், தான் செய்தது குற்றமென்றும் அக் குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்றும் கெஞ்சினுள்.

அதைக் கேட்ட கோகிலம்பாள் "அக்காள்! அக்காள் தாங்கள் இவ்விதமும் சொன்னீர்களோ?" என்று முகத்தில்

அலைறந்துகொண்டழுது, "அப்படிபாவி தங்களை இவ்வீட்டிலி ருந்து துரத்திவிட ஏற்பாடு செய்கிறேனென்று சொன்னதை முடித்துவிட்டானே! ஐயோ! அக்காள்! அவர்கள் உம்மைத் திருடியென் றழைத்தபொழுது என்ன வினைத்தீர்களோ! உமக்கு ஒருவரும் துணையில்லை. நீர் நாதியற்றவளென்று துக்கப்பட்டழு தீர்களோ! நான் பாவி இங்கிருந்தால் உண்மையைச் சொல்லி யிருப்பேனே! நான் இல்லையென்று கவலைப்பட்டு அழுதீர் களோ! உம்மை அவமானத்தி லழுத்தி வீட்டைவிட்டுத் துரத் திடபின் என்னென்ன வினைத்தீர்களோ! யாவும் வினையின் படி முடியுமென்று எனக்கு அனேக முறை சொல்லுவீர்களே! அவ்விதமே சொல்லிக்கொண்டு போனீர்களோ!" என்று கண் களில் தாரை தாரையாக நீரை வடியவிட்டுக்கொண்டிருந்தாள்.

**பழனியாயி யம்மாள்.**—(தன் மகள் படும் துக்கத்தை ஸகியாதவ ளாகி) அம்மா! கோகிலம்! நீ சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லை! ஞானம்பிகையை வீட்டைவிட்டுத்துரத்து வேன் என்று யாராகிலும் சொல்லும் விதமாகவா அவள் நடந்தாள்? அவள் யாவரையும் பசப்பித் தன்பேரில் ஆசையுண்டாகும்படி நடந்தாளே! நீ காரணமில்லாமல் அப்பாதகிக்கா துக்கப்படுகிறாய்? நகைகளை எடுத்துவைத் தது உண்மையென்று அவள் ஒப்புக்கொண்டாளே! அவள் சொல்லியதை கவனிக்காமல் அழுகிறாய்.

**கோகிலப்பாள்.**—அம்மா! என் வயிறெரியும்படி இன்னும் அந்த அக்காளை ஒன்றும் சொல்லவேண்டாம்! சூரியன் இருளைக் கொடுக்குமென்று சொன்னாலும் நம்புவேன்! அந்த அக்காள் நகைகளை எடுத்து வைத்துக்கொண்டா ளென்று சொல்வதை நான் நம்பேன்.

**பழனியாயி யம்மாள்.**—அவள் எடுத்து வைத்துக்கொண்டது உண்மையென்று என் செவிகள் கேட்க அவள் வாயால் சொல்லிய பின்னும், நீ இவ்விதம் அந்த துன்மார்க்கிக் காகப் பரிந்து பேசலாமா?

**கோகிலம்பாள்.**—ஆம் ! அம்மா ! அந்த அக்காள் துன்மார்க்கியே ! தங்களுடைய ஸகோதரனே சற்புத்திரன் !

பழனியாயி யம்மாள் திடுக்கிட்டு, "என்ன சொன்னாய் ?" என்று கேட்கும்பொழுது, சாமியா பிள்ளையும் இன்ஸ்பெக்டரும் வீட்டுக்குள்வந்து கோகிலம்பாள் அழுதுகொண்டிருப்பதைக் கண்டு, "என்ன என்ன ?" என்று கேட்டார்கள்.

**பழனியாயி யம்மாள்.**—கோகிலம்பாள் வீட்டுக்குவந்து வண்டியிலிருந்து இறங்கியவுடன் வீட்டுக்குள் ஓடி, அக்காளென்று அம்ம்ருதேவியை அழைத்தாள். அவள் இல்லாமையைக் கண்டு என்னிடம் வந்து "அக்காள் எங்கே ?" என்று கேட்டாள். நான் நடந்ததைச் சொன்னேன். அவைகளையெல்லாங் கேட்டு அடங்காத துயரங்கொண்டு அழுதுகொண்டிருந்து, "அக்காள் துன்மார்க்கியே : உங்களுடைய ஸகோதரனே சற்புத்திரன்" என்றாள். அவ்விதம் சொன்ன காரணம் என்னவென்று நீங்களே கேளுங்கள்.

**சாமியா பிள்ளை.**—அம்மா ! கோகிலம் ! நீ நடேசனை இகழ்ந்து பேசிய காரணம் என்ன ?

**கோகிலம்பாள்.**—தந்தையே ! நீங்கள் யாவரும் சேர்ந்து அக்காளை துரத்திவிட்டபின் என்னை ஏன் கேட்கிறீர்கள் ? எனக்குக் கிடைக்காத ஸகோதரி கிடைத்தாள் என்று மனம் பூரித்திருந்தேன். தெய்வம் என் மனப்பூரிப்பைக் கெடுத்து அவளைத் துரத்திவிட்டதே (என்று கதறினாள்).

**சாமியா பிள்ளை.**—(இன்ஸ்பெக்டரைப் பார்த்து) ஐயாவே ! என் பிள்ளைகளெல்லாம் ஞானம்பிகையின்மேல் அதிக அன்பை வைத்திருந்தார்களென்று இதனால் காணப்படுகிறதல்லவா ? அதைக் கிஞ்சித்தும் எண்ணிப்பாராமல் நகைகளைத் திருடினாளே ! அவளை என்னவென்று சொல்லலாம் ? அவள் கொடிய துன்மார்க்கியல்லவா ?

**கோகிலம்பாள்.**—தந்தையே ! என்னுயிர்க்குயிரான என் பிரிய

அக்காளை என் செவிகேட்க ஒன்றும் சொல்லவேண்டாம் (என்று கோபமாகச் சொன்னாள்).

போலீஸ் இன்ஸ்பெக்டர்.—அம்மா! கோகிலம்! உன்னைவிட அதிகமாகவே உன் தாய்தந்தை அவளைப் புகழ்ந்தார்கள்! அவள் பெட்டியில் நகைகளைக் கண்டபின் அவள் கை கால்கள் உதற "என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்: நான் தெரியாமற் செய்தேன்" என்று அவள் சொல்லிய பின்னும் அச்சண்டாளியைக் குறித்துத் துக்கப்படலாமா?

கோகிலம்பாள்.—ஐயாவே! நான் ஒன்றும் அறியாதவள்: வயதிலும் சிறியவள். ஆயினும், மனிதர்களுடைய குணத்தை நொடியிலறியும் சக்தி எனக்கிருக்கிறது. என் தமக்கையை யாவரும் சேர்ந்து துன்பப்படுத்தித் துரத்திவிட்டது போதாதென்று, என் பிரியமான தமக்கையை வாய்கூசாமல் கேவலமாகப் பேசுகிறீர்கள். சர்க்கரை கசக்கும் எட்டி இனிக்கும் என்றாலும் நம்புவேன். என் தமக்கையின்பேரில் அணுவளவும் குற்றஞ்சொல்ல நான் மனம் துணியேன் (என்று முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்).

அந்த ஸமயத்தில் போலீஸ் சேகவன் ஒருவன் வந்து, இன்ஸ்பெக்டரை வெளியில் அழைத்து, "நல்லமுத்துப்பிள்ளை சாவடியில் இருக்கிறார். தங்களிடத்தில் அவசரமாக ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசவேண்டும் என்கிறார். அவரை இங்கு அழைத்துவரலாமோ?" என்று கேட்டான். நல்லமுத்துப்பிள்ளையை அழைத்துவரும்படி இன்ஸ்பெக்டர் அவனிடம் சொல்லி யனுப்பிவிட்டு, வீட்டுக்குள்வந்து தானும் சாமியாபிள்ளையும் கோகிலம்பாளுக்குள்ள துக்கம் நீங்கப் பலவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

நல்லமுத்துப்பிள்ளை.—(அப்பொழுது அவ்விடம் வந்து இன்ஸ்பெக்டரைப் பார்த்து), ஐயாவே! நானும் மீனாக்ஷிஸுந்தரம் என்ற ஓர் வாலிபனும் திருக்கடையூரிலிருந்து வரும்பொழுது, ஒரு வண்டி கொண்டுவரும்படி சொல்லி நாங்

கள் அதிக தூரம் பேசிக்கொண்டே நடந்துவந்து, வண்டி வராமையைக்கண்டு சாலையோரத்தில் நாகதாளிக் கள்ளியால் மூடப்பட்ட ஒரு மரத்தின் நிழலில் நின்று வண்டிக்காக எதிர்பார்த்திருந்தோம். அப்பொழுது நாகதாளிக் கள்ளிக்குப் பின்னால் நின்றிருந்த நடேசனால் ஓர் அதிசயமான ஸமாசாரம் என்காதில் விழுந்தது. அதை இவ்விடத்திலிருக்கும் சாமியாபிள்ளையவர்களுக்கும் அவர் மனைவிக்கும் சொல்லக்கூடாதென்று கேட்டுக்கொண்டமையால், அவைகளை அவர்கள் கேட்கும்படி சொல்லப் பிரியமில்லை. தாங்கள் சற்று வெளியில வந்தால் தங்களிடம் சொல்லுகிறேன்.

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—(உடனே நல்லமுத்துப் பிள்ளையோடு வெளியிற் சென்று நெடுநேரத்துக்குப்பின் வீட்டுக்குள் வந்துட்கார்ந்து கண்கலங்க), ஐயா ! சாமியா பிள்ளை ! நான் எனன அநியாயம் செய்துவிட்டேன் ! ஆ ! ஆ ! இதென்ன தயாள குணம் ! இதென்ன பரோபகாரம் ! நான் பாவி ஏனோ இதைச் செய்தேன் ? (என்று தலையைக் கையால் பிடித்துக்கொண்டு கண்ணீருதிர்த்தார்).

**சாமியா பிள்ளை.**—ஐயாவே ! தாங்கள் ஒன்றும் சொல்லாமல் எங்களுக்குத் திகிலை உண்டாக்குகிறீர்களே !

**பழனியாயி யம்மாள்.**—அண்ணா ! தாங்கள் கண்ணீர் விடுவதை என்னால் பார்க்க முடியவில்லை. நடேசன் ஞானம்பிகையைக் கண்டு பரிதாபப்பட்டு வீட்டுக்கு அழைத்தானா? தாங்கள் ஒன்றும் சொல்லாமல் கண்ணீர் விடலாமா !

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—என் கல் நெஞ்சு கலங்கச்செய்துவிட்டாளே ! (என்று கண்களைத் துடைத்துக்கொண்டு) அம்மா ! உன் ஸகோதரன் இரக்கப்பட்டு ஒன்றும் செய்யவில்லை. ஞானம்பிகை ஒரு மரத்துக் கருகிலுள்ள நாகதாளிக்கள்ளி மறைவில் உட்கார்ந்து அழுகிறதை நடேசன் கண்டு சிரித்து, தன் மனம்போல் நடக்காமற் போன

தால் தான் தன் தமக்கையின் பெட்டியிலிருந்த நகைகளை எடுத்து அவள் தன் தாய்க்கு அனுப்ப வைத்திருந்த சேலைக்குள் கட்டிவைத்து அவளைத் துரத்தும்படி செய்த தாக நடேசன் சொன்னதையும் செய்ததையும் சொல்லி, நல்ல முத்துப் பிள்ளை இதை இன்ஸ்பெக்டரிடம் சொல்ல வேண்டுமென்றதில், ஞானம்பிகை, "அம்மாளுக்கு மன வருத்தம் உண்டாகும். அவர்கள் என்னைத் தன் பெண் போல் பார்த்தார்கள். அவர்கள் மனம்வருந்த ஒன்றும் சொல்லவேண்டாம். நான் ஏழையானதால், எனக்குக் கிடைத்த திருடி என்ற பேர் என்னோடிருக்கட்டும். நடே சன் செய்ததை அம்மாளுக்குச் சொல்லவேண்டாம்" என்று நமஸ்கரித்துக் கேட்டுக்கொண்டாளாம். என்ன அநியாயம் நான் செய்தேன் (என்று அதிகம் துக்கப்பட் டார்).

இன்ஸ்பெக்டர் சொல்லியதைக் கேட்டிருந்த கோகிலம் பாள், கடகடவென்று புரண்டு புரண்டு, "அக்காள் ! அக்காள் ! உன் நற்குணத்தை அறியாமல் உன்னைத் துரத்திவிட்டார்களே" என்று கதறியழுதாள்.

**பழனியாயி யம்மாள்.**—ஐயோ ! மகளே ! மகளே ! நாங்கள் என்ன கொடுமையைச் செய்துவிட்டோம். நாங்கள் இந் தப் பாவத்தை எவ்விதம் தொலைப்போம் ? பழிகாரன் இவ்விதம் செய்திருப்பானென்று நான் அறியாமற்போ னேனே ? என் போலும் பழிகாரி யாரிருப்பாள் ? நான் கோபித்துக் கண்ட விதம் பேசினேனே ! நான் சொல்லி யவைகளைக் கேட்டுக் கண்களிலிருந்து தாரை தாரையாக நீரை வடிய விட்டாயே ! ஐயோ ! மகளே ! நீ சிறுவர்க ளுக்கு ஒரு முத்தங் கொடுப்பேன் இரண்டு முத்தங் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆசை காட்டிப் படிக் கச் செய்தாயே ! நாங்கள் உன் விஷயத்தில் செய்த கொடு மையை எவ்விதம் மீட்டுக் கொள்ளுவோம் ? ஐயோ ! மகளே ! நான் ஏழை ஏழை என்று பன்முறை சொல்லிக்

கொண்டிருந்தாயே ! கொடும்பாவியாகிய நான் பேய் பிடித் தவள்போல் வாய்கூசாமல் பேசி, சாவியால் உன் தலை யில் அடித்து ரத்தம் ஒழுகச்செய்தேனே ! என் ஸகோ தரனுக்கும் எனக்கும் மனவருத்தம் உண்டாகுமென்று அவன் செய்ததைச் சொல்லாமல் இருந்தால் அதுவே போதுமானது : உன்னைத் திருடி என்றழைத்தாலும் தோஷமில்லை யென்று சொல்லியனுப்பிய உன் நற்குணத் தை நான் என்னவென்று சொல்லுவேன். “ என்னைப் போலீஸ் சாவடிக்குக் கொண்டுபோக வேண்டாம். அடி யுங்கள், கொல்லுங்கள். என் சாண்வயிற்றை வளர்க் கிறது கடினமாக இருக்கிறது. ஆனதால், கொன்று விடுங்கள். அது உங்களுக்குப் புண்ணியம் ” என்று சொன்னதை நினைக்க என் வயிறு பற்றியெரிகிறதே ! வயிற்றை வளர்க்க முடியாமல் வயிற்றில் உதை வாங்கி மூச்சுவிடத் திணறி வயிற்றைப் பிடித்துக்கொண்டு போனாயே ! குற்றம் உன்மேல் இலாமலிருக்கக் குற் றத்தை ஏற்றுப் போகும்போது, என்னென்ன நினைத் தாயோ ! மகளே ! மகளே ! (என்று முகத்தி லறைந்து கொண்டு அழுதாள்).

**சாமியா பிள்ளை.**—(தன் கண்களில் நீர்வடிய) ஐயோ ! அம்மா ! நீ என் பிள்ளைகளை உன் ஸகோதரராக பாவித்து, அவர்க ளெல்லாம் உன்மேல் அன்புகொள்ள அவர்கள் விரும்பிய தின்பண்டங்களைச் செய்துகொடுத்து, அவர்களுக்கு ஓர் உபாத்தியாயர்போலிருந்து கல்வி கற்றுக் கொடுத்தாயே ! நீ காட்டிய அன்புக்கு உனக்குத் திருட்டுப் பட்டங் கட்டி உன்னை நாங்கள் துரத்திவிட்டதோ கைம்மாறு ? அன்று கைக்குழந்தைக்குச் சாதம் ஊட்டிக்கொண்டும், ஒருவருக் குக் கணக்குப் போட்டுக்கொடுத்தும், மற்றவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொண்டு மிருந்ததை நான் மறைந்து நின்று பார்த்து ஆநந்தம் கொண்டேன். இன்று உன்னைக் கட்டிய வஸ்திரத்தோடு வீட்டைவிட்டுப்

போகும்படி உதைத்து உருட்டியதைக் கண்குளிரப் பார்த்தேன். ஆ ! ஆ ! என்போலும் கொடும்பாவி உலகத்தில் இருப்பானு ? உன் குணத்தைக் கோகிலம்பாள் அறிந்ததுபோல் நாங்கள் அறியாமற் போனோமே! அம்மணி ! நீ எங்களை என்னவென்று நினைத்தாயோ ! உன் கண்களிலிருந்து நீர தாரை தாரையாக வடிந்ததே ! 'ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளாகும்' என்ற வாக்குப்பிரகாரம் எங்களை அறுக்கிறதே ! (என்று கண்களில் மாலை மாலையாக நீர்வடிய துக்கப்பட்டுக் கொண்டிருந்தார்).

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—ஞானம்பிகையின் நற்குணத்தை அறிந்த இவர்களெல்லாம் அவளைப் புகழ்ந்து பேசியதைக் கிஞ்சித்தும் செவியில் ஏற்றுக்கொள்ளாமல், பசுத்தோலைப் போர்த்திருக்கும் புலியும் உண்டென அவள் கன்னத்தில் அறைந்தேன் ! அவள் அழுவதைக்கண்டு மனமிரங்காமல் போலீஸ் சாவடிக்கு அழைத்துப் போகிறேன் என்ற பொழுது, அவள் என் கால்களைப் பிடித்தழ, அவள் உருண்டுபோகும்படி வயிற்றில் உதைத்துத் தள்ளினேனே. ஆ ! ஆ ! கொடிய சண்டாளன் நானே (என்று துக்கப் பட்டார்).

அந்த ஸமயத்தில் சிறுவர்கள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்து வீட்டுக்குள் நுழையும்பொழுதே, "அக்காள் ! அக்காள் !" என்று கூப்பிட்டுக்கொண்டு வீட்டுக்குள் ஓடிவந்து பார்த்து, யாவரும் துக்கத்தோடிருப்பதைக் கண்டு, என்ன என்னவென்று கேட்டும் பதில் கிடைக்காமல், சமையலறைக்குள் ஓடி அங்கு ஞானம்பிகை இல்லாமையைக்கண்டு, "அக்காளெங்கே ! அக்காளெங்கே !" என்று தேடினார்கள். எங்குந் தேடியுங் காணாமல், கோகிலம்பாள் ஓரறையில் படுத்து அழுது கொண்டிருப்பதைக் கண்டு, "ஏன் அழுதுகொண்டிருக்கிறீர்கள் ? யார் இறந்து போனார்கள் ? பாட்டியா ?" என்று சுப்பிரமணியனும் தங்கவேலும் கேட்டார்கள்.

**கோகிலம்பாள்.**—பாட்டி க்ஷேமமாக இருக்கிறார்கள், நமமுடைய அக்காளே வீட்டை விட்டுப் போய்விட்டாள். நாம் என்ன செய்யப் போகிறோம் (என்றழுதாள்).

**சுப்பிரமணியன்.**—என்ன சொன்னீர்கள்! அக்காள் போய் விட்டார்களா! ஏன்? ஏன்? அப்பா அம்மா கோபித்துக் கொண்டார்களோ (என்று ஆத்திரத்தோடு கேட்டான்).

**கோகிலம்பாள்.**—எல்லாம் நம்முடைய மாமனுல் வந்த தீங்கே (என்று ஞானும்பிகை விஷயத்தில் நடந்ததை எல்லாம் சொன்னுள்).

சுப்பிரமணியனும் தங்கவேலும் மரம்போல் அசைவற்றுக் கண்களில் ஜலம் வடிய நின்றார்கள். நெடு நேரத்துக்குப்பின் சுப்பிரமணியன் தடிதடித்து, "என்ன காரியம் செய்தேன்? நான் அப்பொழுதே அம்மாளிடத்தில் சொல்லாமற் போனது என்மேல் பெருங்குற்றமே" என்று சொன்னதைக் கேட்டுக் கொண்டு வந்த அவன் தாய், "அப்பா! சுப்பிரமணியா! நீ என்னிடத்தில் என்ன சொல்லாமலிருந்தாய்?" என்றாள்.

**சுப்பிரமணியன்.**—நேற்று நான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த பொழுது, மேல் வீட்டில் நாங்கள் படிக்கும் அறையை மூடி, உள் தாழ்ப்பாள் போட்டிருந்தது. நான் போய்க் கதவைத் தட்டி "யார் உள்ளிருக்கிறது?" என்று கேட்டுக் கதவின் இடுக்கால் பார்த்தேன். மாமா அறைக்குள் உட்கார்ந்து எதையோ துணியில் சுற்றிக்கொண்டிருந்தார். நான் கூப்பிட்டவுடன் அவர் எழுந்தபொழுது தகரடப்பி ஒன்று கீழ்விழுந்த சப்தம் கேட்டது. அவர் கதவை திறந்து, என்ன வேண்டுமென்று கேட்டார். எனக்கொன்றும் வேண்டாம்; புத்தகங்களை வைக்க வந்தேன் என்று புத்தகங்களை வைத்துவிட்டு அவர் உட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தேன். அங்கு ஓர் சேலையை அவர் அவசரத்தில் மூடி வந்ததால், அது முற்றிலும் மூடப்படாமல் ஓர் மூலை காணப்பட்டது. அது என்னமோவென்று கவனிக்கா

மலிருந்தேன். அப்பொழுதே நான் கண்டதைத் தங்களிடம் சொல்லியிருந்தால், பெரிய அக்காளுக்கு இவ்விதமான கொடுமை நேர்ந்திட நியாயமில்லையே (என்றழுதான்).

**பழனியாயி யம்மாள்.**—(தன் மகளைப் பார்த்து) அம்மா! கோகிலம்! உனக்கும் ஏதோ தெரியும்போ லிருக்கிறதே! அதென்ன ஸமாசாரம்?

**கோகிலப்பாள்.**—நான் ஊருக்குப் போகிறதற்குமுன், ஒருநாள் நாங்கள் காலையில் வாசித்திருந்து காலைக்கடனை முடித்துக்கொள்ள யாவரும் கீழிறங்கி வந்தோம். பிறகு நான் யாவருக்கு முன் மேல்மெத்தைக்குப் போகும்போது, அக்காள் திமிறிக்கொண்டு வருகிறதுபோல் காணப்பட்டது. மாமாவும் "நீ எனக்கு வருத்தம் உண்டாகும்படி நடந்தால், உன்னை வீட்டைவிட்டுத் துரத்திவிடும்படியாய் ஏற்பாடு செய்வேன்" என்று சொன்னது என் காதில் விழுந்தது. நான் அதைக் கேட்டு என்ன என்னவென்று அக்காளைக்கேட்டேன். அவர்கள் ஒன்றுமில்லையென்று படிக்கட்டிறங்கிச் சென்றார்கள்.

**பழனியாயி யம்மாள்.**—இந்தப் படுபாவி! இவ்விதம் செய்வானென்று நான் நினைக்கவில்லையே! 'வேலிக்கு முள்போட அது காலில் தைத்தது' என்ற கட்டுரைபோல் ஆனதே! இனி என்ன செய்வேன் (என்று வெளியில் வந்தாள்).

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—(அங்கிருப்பவர்களைப் பார்த்து நாம் அப்பெண்மணியை அழைத்து வந்துவிட்டால் யாவரும் ஸந்தோஷ மடையலாமே! அதைவிட்டு நாம் ஏன் துக்கத்தோ டிருக்கவேண்டும்?

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஐயாவே! நான் ஞானம்பிகையை வீட்டுக்கு வரும்படி வேண்டினேன். அவள் "இவ்வூரில் தலைகாட்டாமலிருக்க இன்ஸ்பெக்டரவர்களால் கட்டளை பெற்றிருக்கிறேன்" என்றாள். "இன்ஸ்பைக்டரவர்கள் உண்மையறியா முன்னம் அவ்விதம் கட்டளையிட்டார்.

இப்பொழுது உண்மை வெளிப்பட்டுவிட்டதால் வரலாம்'' என்றேன். "நான் வந்தால் நடேசனை அவ்விடத்திலி ருக்காமல் நீக்கிவிடுவார்கள். அதனால் அம்மாளுடைய தாய் தமயனுக்கு மனவருத்தம் உண்டாகும். ஆனதால் அவ் விடம் வருவது உசிதமல்ல'' என்று அவள் சொன்னதால், மீனாக்ஷிஸுந்தரம் அவளை அழைத்துக்கொண்டு போக ஸம்மதித்தார். அவளை மீனாக்ஷிஸுந்தரம் எங்கே கொண்டு போய் வைக்க யோசித்திருக்கிறாரோ தெரியவில்லை. அவர் இன்று மாலையே தன் ஊருக்குப் போகவேண்டுமென்று சொல்லியிருந்தார்.

**சாமியா பிள்ளை.**—மீனாக்ஷிஸுந்தரம் என்பவர் ஆர்?

**நல்லமுத்துப் பிள்ளை.**—அவர் தங்களையும் தங்களுடைய மனை வியையும் பார்த்து வார்த்தையாடியிருக்கிறாராம். இன்று என்னோடு வந்தபொழுது தங்களை வந்து பார்க்கவேண்டு மென்று சொல்லிக்கொண்டு வந்தவர், ஞானம்பிகையை அழைத்துக்கொண்டு போவது அவசியமாகக் காணப்பட்ட தால் மற்றோர் காலத்தில் தங்களை வந்து பார்ப்பதாகச் சொல்லிப்போனார்.

**சாமியா பிள்ளை.**—ஆ! ஆ! சின்னதம்பி பிள்ளை மகனா! ஆம்! ஆம்! அவனை நான அறிவேன். சின்னதம்பிபிள்ளை பெருந்தனவந்தர். அவர் வேலாயுதம் பிள்ளைக்குச சொந்த மைத்துனர். அவர் நெடுநாளைக்குமுன் புதுச்சேரிக்கு வந்து அவ்விடத்திலேயே நிலைத்துவிட்டார்.

**நல்லமுத்துப்பிள்ளை.**—(போலீஸ் இன்ஸ்பெச்டரைப் பார்த்து) ஐடாயே! நடேசனை என்ன செய்கிறது? அவனை அழைத்து வந்து போலீஸ் சாவடியில்விட்டு வந்திருக்கி றேன்.

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—நான் என்ன சொல்லவிருக்கிறது? சாமியாபிள்ளையே சொல்ல வேண்டும்.

**சாமியா பிள்ளை.**—நான் ஏதாகிலும் சொன்னால் அவனுடைய

தமக்கைக்குக் கோபம் வரும். அவளே சொல்ல வேண்டும் (என்று தன் மனைவியைப் பார்த்தார்).

**பழனியாயி யம்மாள்.**—அப்படிபாவியை என்ன செய்தால் என் மனம் குளிரும்? அநியாயமாக ஓர் அநாதியான பெண்ணை வீட்டைவிட்டுத் துரத்தக் காரணமாயிருந்த பாதகன் சிறையில் அடைபட்டாலென்ன? அவன் மாண்டால்தான் என்ன மோசம்? அவனைச் செய்யவேண்டிய முறைப்படி செய்துவிடுங்கள் (என்று கோபமாகச் சொன்னாள்).

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—அம்மா! தாங்கள் ஆத்திரத்தோடு பின் வருவதை அறியாமல் சொல்லுகிறீர்கள். நான் அவனைச் சட்டப்பிரகாரம் நடத்துவதானால், நீங்கள் யாவரும் நியாயஸ்தலத்திற்கு வரவேண்டுமே! அதை யோசித்துப் பார்த்தீர்களா? அவன் சிக்ஷை யடைந்தால் அது உங்களுக்கு அவமானமல்லவா? உங்கள் தாயும் ஸகோதரனும் என்ன சொல்லுவார்கள்? தன் பிள்ளையை அழைத்துப் போய்ச் சிறையி லடைத்தார்களென்று உங்கள்மேல் பழி யேற்றார்களா? இதையெல்லாம் கவனிக்காமற் போனாலும், முக்கியமாய் ஒன்றை கவனிக்கவேண்டும். அதாவது; நடேசன் அறியாதவன், ஏதோ ஒன்றைத் தெரியாமல் செய்துவிட்டான். அதனால் அவன் ஆயுள் காலமெல்லாம் துன்டமடையச செய்து விடுவோமேயானால், பின் அவன் துன்புறும்பொழுது நாம் கண்டு, நம்மால் அல்லவா இந்தத் துன்பமடைகிறான் என்று நினைத்து நாமும் துன்படையவேண்டி வரும். இவைகளையெல்லாம் யோசித்துப் பார்க்காமல், தற்காலம் அவன்மேலிருக்கும் கோபத்தால் ஆத்திரப்பட்டு ஒன்றும் செய்துவிடக்கூடாது. சாமியா பிள்ளை எனக்கு நெருங்கிய சிநேகிதரானபடியால இவைகளையெல்லாம் சொல்ல நேர்ந்தது. வேறொருவராயிருந்தால, இதுபரியந்தம் நடேசன் போலீஸ் சாவடியில் அடைபட்டிருப்பான்.

**சாமியா பிள்ளை.**—ஆம் ! தாங்கள் சொல்வது நியாயமே ! நாம் அவன் விஷயத்தில் கெடுதலைச் செய்வது கூடாது. சில நாள் பொறுத்து அவனை ஊருக்கு அனுப்பிவிடுவதே உத்தமம்.

**பழனியாயி யம்மாள்.**—சில நாள் பொறுத்தென்ன ? இப்பொழுதே அவனை ஏன் அனுப்பிவிடக்கூடாது ? அவனை இந்த வீட்டுக்குள் வந்து நுழையவிட வேண்டாம். அவன் இப்பொழுதிருக்கும் இடத்திலிருந்தே போகட்டும். அந்தப் பாவிமுகத்தைப் பார்க்கவே கூடாது (என்று கோபமாகச் சொன்னாள்).

**சாமியா பிள்ளை.**—(இன்ஸ்பெக்டரைப் பார்த்து) ஐயாவே ! நடேசன் நீங்கியபின் ஞானம்பிகையை ஏன் அழைத்து வரக்கூடாது ? தாங்களும் நல்லமுத்து பிள்ளையும் மனம் வைத்தால், அவளை அழைத்துவரக் கூடும்.

**போலீஸ் இன்ஸ்பெக்டர்.**—ஞானம்பிகையை அழைத்து வந்தால், அவள் சொல்லியதுபோல், உங்கள் பேரில் நடேசன் தாய்க்கும் ஸகோதரனுக்கும் மனவருத்தம் உண்டாகும். அவ்வித எண்ணம் இருந்தாலும் சிலநாள்பொறுத்தே அழைத்து வரவேண்டும். அவசரப்பட்டு ஒன்றும் செய்யக் கூடாது.

**சாமியா பிள்ளை.**—ஞானம்பிகையை அழைத்துவராமற் போனாலும், அவளுக்குக் கொடுத்த துணிகளெல்லாம் அடங்கிய பெட்டியும் அவள் தன் தாய்க்கு வாங்கிவைத்த சேலையும் அவளிடம் சேரும்படி செய்துவிடவேண்டும்.

**பழனியாயி யம்மாள்.**—ஆம் ! அண்ணா ! அதை முதலில் செய்துவிடவேண்டும். மகள் கட்டிகொள்ளுகிறதற்குத் துணியில்லாமல் என்ன சங்கடப்படுகிறாளோ (என்று துக்கப்பட்டாள்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஞானம்பிகைக்காகத் தாங்கள் கவலை கொள்ளவேண்டாம். மீனாக்ஷிஸுந்தரம் பெருந்தனவந்த

ருடைய குமாரன். ஞானம்பிகைக்கு வேண்டியதை வாங்கிக்கொடுக்க அவர் பின்வாங்கமாட்டார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்.—அம்மா! தாங்களும் சாமியா பிள்ளையும் விருமபியவண்ணம் ஞானம்பிகையின் பெட்டியை அவளிடம சேர்ப்பது என் வேலை. நீங்கள் நடேசன் விஷயத்தில் வெறுப்பைக் காட்டாது, உங்கள் வீட்டில் எப்போதும்போல் அவனை வைத்திருந்து அவனை ஊருக்கு அனுப்பிவிடுவது உத்தமம. நான் சொல்வதைத் தடுக்க வேண்டாம். நான் அவனை அழைத்துவருகிறேன் (என்று நல்லமுத்துப் பிள்ளையோடு நீங்கினர்).

---

## 6—ம் அத்தியாயம்

புதிய கூடலூர் என்று பேர்வழங்கும் திருப்பாதிரிப்புலியூரில், கடைத்தெருவு கோடியில், இரண்டு பெரிய திண்ணைகளும் இரண்டு திண்ணைகளை யொட்டிய இரண்டு அறைகளும் அறைகளுக்கு முன்புறத்தில் சாளரங்களுமுள்ள ஓர் கற்கட்டட வீட்டுக்குமுன், காலையில் பத்தரை மணிச்கு வண்டியொன்று போய்நின்றது. வண்டியிலிருந்து ஓர்பெண் இறஙகி, வண்டிக்காரனுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்தனுப்பிவிட்டு, வீட்டின் கதவைத் தட்டினள். கதவைத் திறந்து, இருப்பத்திரண்டு அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத்தகுந்த ஓர் ஸுந்தரமான பெண்பிள்ளை வெளியில் வந்து, அங்கு நின்றிருந்த பெண்ணைப் பார்த்து, "யாரைத் தேடுகிறாய்?" என்றாள். அப்பெண் ஒரு கடிதத்தைக் காட்டி, "இக்கடிததை வைத்தியலிங்கம்பிள்ளை மனைவி இந்திராணியம்மாளிடம் கொடுக்கவேண்டும்" என்றாள். அவள் "என் பெயர்தான் இந்திராணி" என்று கடிதத்தை வாங்கி முற்றிலும் வாசித்துப் பார்த்து, "அம்மா ஞானம்பிகை! வீட்டுக்குள் வா. ஏதாகிலும் ஸாமான் வைத்திருக்கிறாயோ?" என்று வெளியிற் பார்த்து ஒன்றும் இல்லாமை

யைக் கண்டு, அவள் கையைப்பிடித்து வீட்டுக்குள் அழைத்துப் போய், கைகால்களைச் சுத்திசெய்துகொள்ள ஜலங்கொடுத்து, சமையலறைக்குள் அழைத்துச்சென்று சாதம் வட்டித்துச் சாப்பிடச்சொல்லி, வெளியில் அழைத்துவந்து உட்காரச்செய்து, "தாம்பூலம் போட்டுக் கொள்கிறாயா ?" என்று கேட்டாள்.

ஞானம்பிகை.—அம்மா ! நான் தாம்பூலம் தரித்துக்கொள்ளும் வழக்கம் இல்லை.

இந்திராணி.—அம்மா ! ஞானம்பிகை ! உன்னைக் குறித்து என் ஸகோதரன் அதிகம எழுதியிருக்கிறான். தனக்குச் சிதம்பரத்தில் அவசியமான வேலை இருப்பதால் உன்னைத் தனியாக அனுப்பியதாகவும், நீ தரங்கன்பாடியில் சாமியா பிள்ளை வீட்டிலிருந்ததாகவும் எழுதியிருக்கிறான் ! எந்த சாமியா பிள்ளை ? அவர் மனைவி பெயர் என்ன ?

ஞானம்பிகை.—அவர் எந்த ஊரென்று எனக்குத் தெரியாது. அவா மனைவி பெயர் பழனியாயி யம்மாள். அந்தம்மாளுடைய தாயாரூர் திருமயம்.

இந்திராணி.—நான் அவராயிருக்குமென்றே கேட்டேன். பழனியாயி யம்மாளும் அவள் நாயகனும் பிள்ளைகளும் மிகவும் நல்லவர்கள். அவர்கள் எங்கள் பந்துக்கள். அவர்கள் வீட்டை ஏன் விட்டு வந்தாய் ?

ஞானம்பிகை.—

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்."

என்றபடி என் ஊழ்வினை என்னை அவர்களை விட்டு நீங்கும்படி செய்தது.

இந்திராணி.—நீ சொல்வதின் கருத்து விளங்கவில்லை !

ஞானம்பிகை.—நான் அறியாமையால் செய்யத்தகாத காரியத்தைச் செய்துவிட்டேன். அதனால் அவர்கள் என்னைத் தங்கள் வீட்டைவிட்டுப் போகும்படி செய்தார்கள் !

**இந்திராணி.**—அது இன்னதென்று சொன்னாலன்றி நான் எவ்விதம் அறிந்துகொள்ளக்கூடும் ?

**ஞானம்பிகை.**—அம்மணி ! அவர்களெல்லாம் தங்களுக்கு பந்துக்களென்றுசொல்லுவதால், ஒருகாலத்தில் அவர்களைத் தாங்கள் ஸந்திக்கநேரிடின், நான் சொல்வது உண்மையாக அறிவீர்கள். அந்தம்மாளுடைய பெட்டிச்சாவியை என்னிடங் கொடுத்துத் தங்களுக்குவேண்டியதை எடுத்துவரச்சொல்லுகிற வழக்கம் உண்டு. நேற்றுக் காலையில் அந்தம்மாள் தன்பெட்டியைத் திறந்து பார்த்து மோராமாலையையும் கெம்பட்டிகையையும் காணாமல் என் பெட்டியைத் திறந்தபொழுது, அந்த நகைகளிரண்டும் நான் என் தாயாருக்கு வைத்திருந்த சேலைக்குள் தகரடப்பியில் வைத்துக் கட்டியிருந்ததைக் கண்டார்கள். "நான் அறியாமையால் செய்தேன், என்னை மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சியும் மனமிரங்காமல் என்னைத் தங்கள் வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார்கள்.

**இந்திராணி.**—இதென்ன ! இராஜாங்கத் திருட்டாயிருக்கிறது. நீ செய்த தீச்செய்கையை வாய் கூசாமல் சொல்லுகிறாயே!

**ஞானம்பிகை.**—ஒரு தடவை பேதைமதியால் ஒன்றைச்செய்து அதை மறைப்பதால் நன்மையை அடையப்போகிறதில்லை. இப்பொழுதல்லாமற்போனாலும் எப்பொழுதாகிலும் நான செய்ததைக் கேள்விப்படுவீர்கள். ஆனதால், ஒன்றையும் மறைக்காமல் உண்மையைச் சொன்னேன்.

**இந்திராணி.**—ஓரிடத்தில் ஒருவர் ஒன்றைச் செய்து அவமானமடைந்து வேறு இடத்துக்குப் போனால், தான் செய்ததை மறைத்துச் சொல்வது உலகவழக்கமாயிருக்க, நீ செய்ததை வெட்கமில்லாமல் சொல்லுகிறது ஆச்சரியத்தைத் தருகிறது.

**ஞானம்பிகை.**—அம்மா ! நான் இப்பொழுது வெட்கப்பட்டு மறைப்பதால் என்ன பிரயோசனம் ? நான் செய்கிறதற்கு

முன் வெட்கப்பட்டு அதைச் செய்யாமலிருந்தால் அது பிரயோசனப்படும்.

**இந்திராணி.**—(ஞானும்பிகையைப் பிடித்தணைத்துக்கொண்டு) "அம்மா ! ஞானும்பிகை ! நீ இதுமுதல் எனக்குத் தங்கையைப்போ லிருப்பாய். நடேசன் உன்னை வீட்டைவிட்டுத் துரத்தச் செய்ததையும் நீ நல்லமுத்துப் பிள்ளையிடம் சொன்னதையும் என் ஸகோதரன் எழுதியிருக்கிருன். நீ என்ன சொல்லுகிருய் என்று கேட்டால், பழிபாவத்தையெல்லாம் உன் தலையில் போட்டுக்கொண்டு இவ்விதம் சொல்லுகிருயே ; இது என்ன அதிசயம் !

**ஞானும்பிகை.**—அம்மா ! நான் நாதியற்றவள். அதிலும் ஏழை ! என்னை யார் என்ன சொன்னபோதிலும் தோஷமில்லை. பழனியாயி யம்மாளுடைய குடும்பத்துக்கு அவமானம் வரக்கூடாதென்று நான் நல்லமுத்துப் பிள்ளையை அதிகம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ரகசியத்தை அவர் வெளியிடமாட்டார். ஆனதால் தாங்களும் இதை ரகசியத்தில் வைத்திருக்கவேண்டும் (என்று கெஞ்சினுள்).

**இந்திராணி.**—அம்மா ! ஞானும்பிகை ! நீ அறியாதவளாதலால் ஒன்றும் உனக்குத் தெரியவில்லை. நீ நடேசனுடைய தீச்செய்கையை இப்பொழுது மறைத்தாலும் அவனுடைய தீச்செய்கை வெளிவராமல் இல்லாது. அவன் உனக்குச் செய்தது போல் மற்றவர்களுக்கும் செய்யத் துணிவான். அதனுல் துன்பமடையாம லிருக்கான். துன்மார்க்கர் சும்மா இருக்கமாட்டார்கள் (என்று சொல்லிப் பின் பலவேறு ஸமாசாரங்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள்).

இரவு எட்டுமணிக்குச் சாப்பிட வந்த வைத்தியலிங்கம் பிள்ளை, ஞானும்பிகை யாரென்றறிந்து நீங்கினுர். அவர் சென்ற பின் இந்திராணி வெளிக்கதவை மூடி தாழ்ப்பாளிட்டு வந்தாள். பின் சிலநேரம் இருவரும் வார்த்தையாடிக்கொண்டிருந்து சய

னித்துக்கொண்டார்கள். ஞானம்பிகை விடிந்தவுடன் எழுந்து, தனக்கு முன்னாக இந்திராணி எழுந்து வீட்டு வேலைகளைச் செய்திருப்பதைக் கண்டு, "அம்மா நான் நேற்று அதிகதூரம் நடந்ததாலும், நேற்றிராத்திரி மாட்டு வண்டியில் அதிக நேரம் தூக்கமில்லாம லிருந்ததாலும், இராத்திரி அயர்ந்து நித்திரை போய்விட்டேன். ஐயா அவர்கள் இராத்திரி எத்தனை மணிக்கு வந்தார்களென்றும் காலை எத்தனைமணிக்கு எழுந்து போனார்களென்றும் நான் அறியேன்" என்று சொல்லி, "அம்மா! சமையல் எனக்கு நன்றாய்ச் செய்யத் தெரியும். என் கைபாகத்தை நீங்கள் சாப்பிட்டுப் பார்க்கவேண்டும்" என்று வீட்டுவேலையைச் செய்ய ஆரம்பித்தாள்.

**இந்திராணி.**—அம்மா! ஞானம்பிகை! உன்னை என் ஸகோதரியைப்போலவே நினைத்திருக்கிறேன். நீ எனக்குத் துணையாக இருந்து என்னோடு வார்த்தையாடிக்கொண்டிருந்தால் அதுவே போதுமானது. நீ ஒன்றும் செய்யவேண்டாம்.

**ஞானம்பிகை.**—தாங்கள் சொல்வதொன்றும் செய்வதொன்றுமாக இருக்கிறதே (என்று நகைத்தாள்).

**இந்திராணி.**—நான் சொல்வதென்ன! செய்வதென்ன! நீ சொல்வதே எனக்கு விளங்கவில்லை.

**ஞானம்பிகை.**—தாங்கள் சொல்வதுபோல் செய்யவேண்டும். அல்லது செய்வதுபோல் சொல்லவேண்டும். அதைவிட்டுத் தாங்கள் சொல்வது ஒன்றுக் கொன்று விரோதமாக இருக்கிறது. எவ்விதமெனில், ஒருவர் மற்றொருவரிடம் பேசியிருந்து தாம் விடைபெற்று நீங்கும்பொழுது, நான் வருகிறேன் என்று சொல்லிப் போவதுபோல் காணப்படுகிறதே! (என்று நகைத்தாள்).

**இந்திராணி.**—ஒன்றுக்கொன்று விரோதமாகும்படி பேசவுமில்லை; செய்யவுமில்லையே!

**ஞானம்பிகை.**—தாங்கள் சொல்வதற்கு விரோதமாகச் செய்கி

*நீர்களென்று மெய்ப்பித்துவிட்டால், சொல்வதற்கு விரோதமாகச் செய்யாமலிருக்கிறீர்களா?*

**இந்திராணி.**—*தம்முடைய குற்றத்தைத் தாமே கண்டு தம்மைத் தாம் திருத்திக்கொள்ளாதார் பேதையரென்றே சொல்ல வேண்டும்.*

**ஞானம்பிகை.**—*தாங்கள் என்னை ஸகோதரி என்றீர். நான தங்களைவிட வயதில் சிறியவளாதலால், நான் தங்களுக்குத் தங்கை யல்லவா?*

**இந்திராணி.**—*ஆம்! நீ என் தங்கையே!*

**ஞானம்பிகை.**—*அக்காளும் தங்கையும் ஓரிடத்தி லிருந்தால், அக்காளை வேலை செய்யவிட்டுத் தங்கை வேலை செய்யாம லிருக்கமாட்டாள். ஆனதால் தாங்கள் என்னைத் தங்கை யென்று பாவித்தபின், தாங்கள் வேலை செய்கிறேன் என் றும் என்னை வேலை செய்யக் கூடாதென்றும் சொல்லியது பொருத்தமோ (என்று நகைத்தாள்).*

**இந்திராணி.**—*தங்கை அறியாதவளா யிருந்தால், அக்காள் வேலை செய்யமாட்டாளா?*

**ஞானம்பிகை.**—*வேலை செய்யத் திறமை எனக்கிருப்பதால், தாஙகளை சொல்லுவது பொருத்தமல்ல!*

**இந்திராணி.**—*அம்மா! நீ ஸமர்த்தாய்ப பேசுகிறாய்! என்னோடு வார்த்தையாடிக்கொண்டு எனக்குத் துணையாக இருக்க ஒரு பெண்துணை வேண்டுமென்று என் ஸகோதரனிடம் சொலலியிருந்தேனே யன்றி, வீட்டுவேலை செய்யத் துணை வேண்டுமென்று நான் கேட்கவில்லை. ஆயினும், நாம் அக்காளும் தங்கையுமானதால, உன் விருப்பத்தின் பிரகாரம வேலைசெய். உனக்குத் துணையாக நான் உட் கார்ந்து உன்னோடு வார்த்தையாடிககொண்டிருக்கிறேன்.*

*இஙஙனம் இருவரும் வார்த்தையாடிக் கொண்டே சமையல் வேலையைச செய்து முடித்தார்கள். அன்று வைத்திய லிங்கம் பிள்ளை காலையில் வந்து பலகாரமுண்டு போனவர்*

மத்தியானம் வந்து போஜனமுண்டு, பின் இரவு எட்டுமணிக்கு வந்து இராப்போஜன முண்டு வெளியில் சென்றார். அவர் புசிக்கும் பொழுதெல்லாம், அதை ஏன் செய்யவில்லை இதை ஏன் செய்யவில்லை யென்று கடுகடுத்த முகத்துடன் தன்மனைவி யோடு பேசியும், மனைவியை அடித்தும் போவதை ஞானம் பிகை கண்டு, அவர் விரும்பியதைச் செய்து வைக்கவேண்டும் என்று மறுநாள் அவைகளைச் செய்து வைத்து, இன்று ஸந்தோஷமாகச் சாப்பிடுவார் என்றெண்ணியிருந்தாள். வைத்திய லிங்கம் பிள்ளை, தான் வழக்கமாக வரும் நேரத்தில் வீட்டுக்குள் வந்து, "அடி! இந்திராணி!" என்றழைத்தார். இந்திராணி வந்தேன் என்றோடி அவரெதிரில் போய் நின்றாள்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அடி கழுதை! நான் வந்து எவ்வளவு நேரமானது? இன்னம் சாப்பாடு சித்தப்படுத்த வில்லையா?

**இந்திராணி.**—யாவும் சித்தமாக இருக்கிறது (என்று கைக்கு ஜலங் கொண்டுவந்து கொடுத்து, வீட்டின் கூடத்தில் இலைபோட்டுப் பரிமாறினாள்).

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அடி! பருப்பென்ன இவ்விதம் கட்டியாக இருக்கிறது?

**இந்திராணி.**—நேற்று இளகலாயிருந்தது. கட்டியாக ஏன் இல்லை யென்றதால் இன்று இவ்விதங் கடைந்தேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நெய்யை உருக்கியா பாழ் செய்கிறது? (என்று சாப்பிட்டுக்கொண்டிருந்தார்).

**இந்திராணி.**—நெய்யை உருக்கவில்லை யென்று நேற்றுச் சொன்னதால் இன்று உருக்கிவைத்தேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அடா அநியாயமே! இதென்ன பருப்பும் முருங்கைக்காயும் குழம்பு செய்திருக்கிறதே!

**இந்திராணி.**—நேற்று, புளிக்குழம்பு ஏன் செய்தாய்? பருப்பும் முருங்கைக்காயும் குழம்பு ஏன் செய்யவில்லை என்றதால், இன்று அதைச் செய்தேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நேற்றுச் செய்யவில்லை யென்றால், இன்று செய்யவேண்டும் என்பதோ அதன் கருத்து? அந்தப் புடலங்காய்க் கூட்டுக்கறியில் கொஞ்சம் வை, மூதேவி!

**இந்திராணி.**—முன்வைத்த புடலங்காய்க் கூட்டுக்கறி அவ்விதமே யிருக்கிறதே யென்று, எல்லாக்கறிகளும் இருக்கும்பொழுதே மீண்டும் வைத்தாள்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—பதார்த்தங்கள் இருக்கும்பொழுதே தின்று தொலையென்று மீண்டும் ஏன் எடுத்துக் கொட்டுகிறாய்? கூட்டுக்கறியில் கடலைப்பருப்பைப் போட்டுக் கெடுத்துவைத்திருக்கிறாய்? (என்று எச்சிற்கையால் கன்னத்தில் அறைந்தார்).

**இந்திராணி.**—புடலங்காயோடு கடலைப்பருப்புப் போடவில்லை யென்று நேற்றுக் கோபித்துக்கொண்டீர்களே! அதனால் இன்று புடலங்காயோடு கடலைப்பருப்புப் போட்டுக் கூட்டுக்கறி செய்தேன் (என்று அழுதுகொண்டிருந்தாள்).

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—என் கழுதை! நான் சொல்வதைக் கேட்டு என்னோடு வாதாடுகிறாய்! வாயாடாதே! வாயாடாதே! என்று உன்னை நன்றாய் உதைக்கவேண்டும். ஏ! பன்றி! வாழைச்காயை ஏன் பால்கறி செய்தாய்? உருளைக்கிழங்கை ஏன் பிட்டு செய்தாய்? நான் கேட்பது உன் காதில் விழவில்லையா? ஏன் வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்? புழுக்கை. நீ என்ன ஊமையா?

**இந்திராணி.**—தாங்கள் கேட்பதற்கு பதில் சொன்னால் வாயாடுகிறேன் என்று கோபிக்கிறீர்கள். பேசாமலிருந்தாலும் ஊமையாவென்று கோபிக்கிறீர்கள், தாங்கள் நேற்று வாழைக்காயை ஏன் பால்கறி செய்யவில்லை, உருளைக் கிழங்கை ஏன் பிட்டு செய்யவில்லை என்றதால், இன்று செய்தேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—ஏ! நாயே! நேற்றுச் சொன்னேன் நேற்றுச் சொன்னேன் என்கிறாய், கோவேறு

கழுதை. நேற்று சொன்னது நேற்ருேடு போனது. இன்றேன் அதைக்குறித்துப் பேசவேண்டும்? இந்த முளைக் கீரையை ஏன் புளிவார்த்துக்கடையவில்லை?

இந்திராணி.—புளிவார்க்காமல் கடைந்தால் தங்களுக்குப் பிரியமாயிருக்குமென்று செய்தேன்.

வைத்தியலிங்கம் பிள்ளை.—என்னிஷ்டத்தை யறிந்தே யாவும் செய்கிருயென்று எனக்கு நன்ருய்த் தெரிகிறது. இந்த வாழைத்தண்டு பச்சடியைப்பார்; உன்னைப்போல் தடி தடியாக இருக்கிறது.

இந்திராணி.—தாங்கள் ஒவ்வொரு நாளும் காலையில் இன்னது செய்யவேண்டு மென்று சொல்லிப்போனல், அவ்விதமே செய்கிறேனென்ருலும் தாங்கள் சொல்லமாட்டேன் என்கிறீர்கள்.

வைத்தியலிங்கம் பிள்ளை.—அடி! என்னுடைய வேலைகளையெல்லாம் விட்டு உன்னருகில் உட்கார்ந்து இன்னது இன்னது செய்யென்று சொல்லிக்கொண்டோ இருக்கவேண்டும்?

இந்திராணி.—தங்களை என்னருகில் உட்கார்ந்திருக்க நான் சொல்லவில்லை! தங்களுக்கு வேண்டியதைச் சொன்ருலே போதுமானது.

வைத்தியலிங்கம் பிள்ளை.—இனி உன் உத்தரவுக்கடங்கி அவ்விதமே செய்கிறேன். இதை உன்கண்ணுல் பார். இது தயிரா மோரா?

இந்திராணி.—தயிரல்ல, மோரே!

வைத்தியலிங்கம் பிள்ளை.—மோரா! தயிர் ஏன் இல்லை?

இந்திராணி,—நேற்றுத் தாங்கள் நெய்யை உருக்கவேண்டும், மோரைப் பெருக்கவேண்டும் என்றதால், மோர கொண்டு வந்து வைத்தேன். தயிரும் இருக்கிறது; கொண்டுவருகிறேன் (என்று சமயலறைக்குள் சென்ருள்).

அவள் வருமுன் வைத்தியலிங்கம் பிள்ளை அவசரம் அவ

சரமாக மோரோடு சாப்பிட்டுவிட்டு, இந்திராணி தயிரோடு வந்த பொழுது, இலையைக் காட்டி, "நீ வருவாய் வருவாய் என்று ஒரு மணி நேரமாகக் காத்திருந்து, உனக்கு தயவு வரவில்லை யென்றும் நமக்குக் கிடைத்தது இதுவேயென்றும் சாப்பிட்டுவிட்டேன். நீ தயிரோடு சாப்பிடு" என்றெழுந்து அவளை உதைத்துக் கைகால்களைக் கழுவி வெற்றிலைப்பாக்கைக் கையிலெடுத்துக் கொண்டு வெளியில் சென்றார்.

அவர் நீங்கியவுடன் இந்திராணி கண்களில் நீர்வடிய நிற்பதைக் கண்ட ஞானம்பிகை, "அக்காள்! அக்காள்! தாங்கள் கண்ணீர் உதிர்க்கவேண்டாம்" என்று அவள் கண்களைத் தன் முன்றானையால் துடைத்தாள்.

இந்திராணி — அம்மா! ஞானம்பிகை! நீ உன் கண்களால் நடப்பதைப் பார்த்தாயல்லவா? என்னைப்போலும் துரதிஷ்டமுள்ளவளும் உலகத்தில் இருப்பாளா? நான் என்ன செய்தபோதிலும் என்மேல் குறறமே சாட்டி அடிக்கிறார். இனிநான் என்ன செய்து அவரை ஸந்தோஷப் படுத்துகிறது! அவர் ஒருநாள் சொல்லியதை மறுநாள் செய்து வைத்தால், அதுவுங் குற்றமாகிறது. செய்யாமற் போனாலும் குற்றம், பேசினாலும் குற்றம், பேசாமலிருந்தாலுங் குற்றம். நான் என்ன செய்கிறதென்பது எனக்கே விளங்கவில்லை. கூத்தியார் வீட்டைக் காத்தலே பாத்தியம் என்று அவர் எண்ணியிருப்பதைக் குறித்து நான் ஒன்றும் சொல்லவில்லையே! அவர் சாப்பிடும் பொழுது முகச்சுளிப்பில்லாமலும் என்னை அடிக்காமலும் சாப்பிட்டுப்போனால் போதும் என்று எண்ணியிருக்க, என் கண்ணில் விரலைவிட்டாட்டுகிறாரே! நான எத்தனை காலம் இத்துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருப்பேன் (என்று கதறியழுதாள்)

ஞானம்பிகை.— அக்காள்! நாம் முன் போந்த ஜன்மத்தில் செய்த தீவினையின் பலனை இநத ஜன்மத்தில் அனுபவிக்க வேண்டியதாயின், அதை துக்கத்தோடு அனுபவிக்கவேண்

டும். ஆனதால் அதைக் குறித்துத் தாங்கள் கவலை சொள்ள வேண்டாம். அத்தானவர்கள் கையிருப்பு இன்னம் எவ்வள விருக்கிறதோ அதை முற்றிலும் பார்த்துவிடவேண்டும்.

இவ்விதம் இந்திராணிக்குத் தைரியம் சொல்லி, அடுத்த நாள் வைத்தியலிங்கம் பிள்ளை வந்து உட்கார்ந்தவுடன், இந்திராணி இலையில் சாதம் போட்டு, இரண்டு விதமாகக் கடைந்திருக்கும் பருப்பையும் உருக்கியும் உருக்காமலிருக்கும் நெய்யையும் காட்டி, "எதைப் போடட்டும்?" என்று கேட்டாள்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—உனக்கிஷ்டமில்லாததைப்போடு.

அவள் இளகலாகக் சடைந்திருக்கும் பருப்பைப் போட்டு உருக்கிய நெய்யை வார்த்தாள்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—(சாதத்தைப் பிசைந்துகொண்டே) உனக்கு இஷ்டமில்லாததை எனக்குப் போட்டுவிட்டு, நீ இஷ்டப்பட்டதை உனக்காக வைத்துக்கொண்டாயல்லவா?

**இந்திராணி.**—எனக்கு இஷ்டமானதையே தங்களுக்குப் போட்டேன். எனக்கிஷ்டமில்லாததையே வைத்துக்கொண்டேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நீ இஷ்டப்பட்டு போட்டதை நான் சாப்பிடவேண்டுமே யொழிய, நான் இஷ்டப்பட்டது எனக்குக் கிடைக்கப் போகிறதில்லை. குழம்பை ஊற்று.

**இந்திராணி.**—கத்தரிக்காய்ப் புளிக்குழம்பும் முருங்கைக்காய் சேர்ந்த பருப்புக்குழம்பும் இருக்கிறது. எதை ஊற்றட்டும்?

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—இரண்டுவகைக் குழம்பா செய்திருக்கிறாய்? நான் ஓட்டாண்டியாப் போனால் உனக்கென்ன நட்டம்? இரண்டுவகைக் குழம்புகளல்ல, நான்கு வகையும் செய்வாய். உனக்குத் துணையாக ஆளும் அகப்பட்டிருக்கிறது. புளிக்குழம்பில் கொஞ்சம் விடு (என்று சாப்பிட்டு), இதில் புளி அதிகம் கொட்டிவைத்திருக்கிறாய். பருப்புக் குழம்பை விடு (என்று சாதத்தை யெல்லாம் அதில்

சாப்பிட்டு), இதில் காரம் அதிகம்போட்டு வைத்திருக்கிறாய் முருங்கைக்காயை வெந்தயவிதையோடு புளிக்குழம்பாகவும் கத்தரிக்காயும் பருப்பும் வெறுங்குழம்பாகவும் செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? ஒருகுழம்பில் உனக்குச் சாதம் ஏற்றுக்கொள்ளவில்லைபோல் காண்கிறது. என்ன செய்யலாம்! என் தலைவிதி உன்னை எதையும் கவனித்துச் செய்யாமல் தடுக்கிறது. நீ முன்சொன்னதுபோல் நீ இஷ்டப்பட்டுப் போட்டதையே சாப்பிடவேண்டும். இந்த வாழைக்காய் அதிகம் வறுபட்டுத் தீய்ந்துபோய்விட்டது. சிலது வேகவேயில்லை. பால்கறியாகச் செய்த வாழைக்காயில் காரமே யில்லை. பச்சைமிளகாய் ஒன்றிரண்டு அதிகம் போடக் கைகூசியதோ? வாழைத்தண்டு கைவிரல்களுக்கு அகப்படவில்லை. பாலில் பிறைமோர் அதிகம் விட்டதால், தயிரில் நீர் தெளிந்து நிற்கிறது. நீ எதை கவனித்துச் செய்கிறாய்? மூதேவி (என்று திட்டி எட்டியுதைத்து நீங்கினார்).

**இந்திராணி.**—(அழுதுகொண்டே) அம்மா! ஞானம்பிகை! பார்த்துக் கொண்டாயா! நாம் இனி என்ன செய்யலாம்? வேண்டாம் என்ற பெண்டாட்டியின் கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்றிருப்பவரை நான் எவ்விதம் திருப்தி செய்ய முடியும்? நான் இவரிடத்தில் உதையுங் குத்தும் பட்டு இத்துன்பத்தை அனுபவிக்காமல் என் தாய் வீடு போகலாம் என்றெண்ணினாலும், இவர் சாப்பாட்டுக்கு அலைந்துபோவாரே என்று வருந்துகிறேன்.

**ஞானம்பிகை.**—அத்தான் சொல்லியது உண்மையோ வென்று ஒவ்வொன்றையும் சாப்பிட்டுப் பார்த்தேன். பதார்த்தங்களெல்லாம் அவர் சொல்லிய விதம் இராமல் நன்றாயிருக்கின்றன. இனி அவரைத் திருப்ப வேறு வழியே கண்டு பிடிக்க வேண்டும்.

இந்த ப்ரகாரம் வார்த்தையாடிக்கொண் டிருக்கும் பொழுது, இந்திராணியின் வயதுடைய ஓர் ஸுந்தரமான

பெண்பிள்ளை வீட்டுக்குள் வந்து, இந்திராணியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "இந்திராணி! க்ஷேமந்தானே? உன்னைப் பார்த்து நெடுநாளாயிற்றல்லவா?" என்று சொல்லி, இந்திராணி அருகி லிருப்பவளைப் பார்த்து, "இந்தப் பெண்தானே ஞானாம்பிகை?" என்று கேட்டாள்.

**இந்திராணி.**—ஆம்! சிவநேசம்! நாம் ஒருவரை யொருவர் பார்த்து நெடுநாள் ஆயிற்று. நீ எப்படி இங்கு வந்தாய்? இந்தப் பெண் ஞானாம்பிகை யென்று உனக்கு எப்படித் தெரிந்தது?

**சிவநேசம்.**—உன் அத்தானை இவ்வூருக்கு மாற்றியிருப்பதால், நாங்கள் இங்கே வந்தோம். நானும் உன் அத்தானும் ரெயிலில் வரும்பொழுது, மீனாக்ஷிஸுந்தரத்தை நாங்கள் ஏறியிருந்த வண்டியில் கண்டோம். அவனருகில் பெட்டி யொன்றிருக்க அது யாருடையதென்று கேட்டபொழுது, "அது ஞானாம்பிகையென்ற ஓர் பெண்ணுடையது. அப் பெண் தற்காலம் இந்திராணியோ டிருக்கிறாள்" என்று சொல்லி, அவள் தரங்கன்பாடியிலிருந்து வந்த காரணத்தையும் சொன்னான். அவனும் உன்னுடைய அத்தானும் போலீஸ் சேவகர்களும் ஸாமான்களைக் கொண்டு வரவே வண்டிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்களோடு வந்த வேறோ பெண்பிள்ளை இத்தெருவுக்கு வந்ததால், அவள் ஏறிவந்த வண்டியில் வந்து உன்னைக் கண்டேன்.

இங்ஙனம் பேசிக்கொண் டிருக்கும்பொழுது, மீனாக்ஷி ஸுந்தரமும் சிவநேசத்தின் நாயகனும் வீட்டுக்குள் வந்தார்கள். இந்திராணி அவர்களுக்கு முகமன் கூறி உட்காரச் சொன்னாள்.

**சிவநேசத்தின் நாயகன்.**—அம்மா! இந்திராணி! நாங்கள் வண்டியோடு சென்று எனக்காகப் பார்த்திருக்கும் வீட்டில் ஸாமான்களை இறக்கிவைக்கவேண்டும். நான் நீ இருக்கிற ஊருக்கே ஸப்மாஜிஸ்ட்ரேட்டாக வந்திருப்ப

தால், உன்னையும் என் தம்பி வைத்தியலிங்கத்தையும் நாங்கள் வந்து பார்க்காமலிருப்போமா ?

இந்திராணி.—அத்தான் ! தாங்களும் சிவநேசமும் ஸாமான்களை எடுத்து வைத்துவிட்டு இவ்விடத்திலேயே வந்து சாப்பிட வேண்டும்.

ஸப்மாஜிஸ்டிரேட்.—அம்மா ! நீ இன்று எங்களை மன்னிக்க வேண்டும். இவ்வூரில் தற்காலமிருக்கும் ஸப்மாஜிஸ்ட்ரேட் யாவும் சித்தப்படுத்தி வைத்திருக்கிறார் (என்று இருவரும் விடைபெற்று நீங்கினார்கள்).

வண்டிக்காரன் ஓர் பெட்டியைக் கொண்டுவந்து வைத்து நீங்கினன்.

மீனாக்ஷிஸுந்தரம்.—அக்காள் ! தாங்கள் விரும்பிய வண்ணம் ஸரியான துணை கிடைத்ததல்லவா (என்று நகைத்தான்).

இந்திராணி.—ஆம் ! அப்பா ! ஒருவர் வீட்டில் நகைகளைத் திருடி அவர்களால் துரத்தப்பட்டவளையோ எனக்குத் துணையாக அனுப்பினாய் ? நான் கேட்டதற்குத் தான் நகைகளைத் திருடியதால் தன்னைத் துரத்திவிட்டார்களென்று வெட்கமில்லாமல் சொல்லுகிறாளே !

மீனாக்ஷிஸுந்தரம்.—(நகைத்து) தாங்கள் விரைவில் துணை வேண்டும் என்றதால் தெய்வச்செயலாக என் கண்ணிலகப்பட்ட ஞானம்பிகையை அனுப்ப நேர்ந்தது. தாங்கள் தங்கள் நகைகளை ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளுங்கள்.

என்று சொல்லிய பின் ஞானம்பிகையைப் பார்த்து, “ அம்மா ! தரங்கன் பாடி போலீஸ் இன்ஸ்பெக்டர் இப்பெட்டியை ஓர் கடிதத்தோடு கொண்டுவந்து கொடுத்து, உன்னிடம் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டார் ” என்று ஒரு கடிதத்தையும் பெட்டியின் சாவியையும் கொடுத்தான். ஞானம்பிகை அவைகளை இரண்டு கைகளாலும் வாங்கிவைத்துக் கொண்டு, சமையலறைக்குள் சென்று சாப்பாடு சித்தஞ்செய்து

கூடத்தில் இலை போட்டுப் பரிமாறி, கைகழுவ ஜலங் கொண்டு வந்து மீனாக்ஷிஸுந்தரத்துக்குக் கொடுத்தாள்.

**இந்திராணி.**—தம்பி! நான் உன்னைப் பட்டினியாக வைத்து வார்த்தையாடிக்கொண்டிருக்கிறேன். உன் தங்கை என்னைப்போ லிராமல் யாவும் சித்தம் செய்திருக்கிறாள். (என்று மீனாக்ஷிஸுந்தரத்தைச் சாப்பிடவிட்டு அவனோடு வார்த்தையாடிக் கொண்டிருந்து, அவன் சாப்பிட்டு எழுந்தவுடன,) "பாகம் எப்படி யிருக்கிறது?" என்று கேட்டாள்.

**மீனாக்ஷிஸுந்தரம்.**—இவ்விதமான பாகத்தை நான் எப்பொழுதும் சாப்பிடவில்லை (என்று புகழ்ந்தான்).

**இந்திராணி.**—இவ்விதமிருக்கும் பாகத்தை ஒன்றும் நன்றாயில்லை யென்று என்னைத் திட்டி உதைத்துப்போனார். நான் எவ்விதம் அவரைத் திருப்தியடையச் செய்யப் போகிறேன் (என்று கண்ணீர் உதிர்த்தாள்).

**ஞானம்பிகை.**—அண்ணா! அத்தான் கூத்தியார்வீடே கதியாயிருப்பதோடு அக்காள் தன்பப்பட மனம் போனவிதம் பேசி அடிக்கிறார். அதற்கு ஏதாகிலும் ஒரு சூழ்ச்சி செய்யவேண்டும். (என்று சொல்லிக்கொண்டே மீனாக்ஷிஸுந்தரம் கொடுத்த கடிதத்தைப் பிரித்து வாசித்துக் கண் கலங்கினாள்).

**மீனாக்ஷிஸுந்தரம்.**—என்ன சூழ்ச்சி செய்ய இருக்கிறது? நான் அவரிடத்தில் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிப்பார்த்தாய்விட்டது. அவருக்கு எப்பொழுது கூத்தியார மேல் வெறுப்புத் தட்டுமோ அப்பொழுது தான் அவர இப்பக்கம் திரும்புவார். அதுபரியந்தம் நாம் என்ன செய்தாலும் பயன்படாது. அக்காள்! தங்களை ஒன்று கேட்க வேண்டுமென் றிருக்கிறேன். அத்தான் வைத்திருக்கும் கூத்தியாருக்குச் சொந்த நாயகன் இருக்கிறான் என்று சொல்லுகிறார்களே! அது உண்மையா?

**இந்திராணி.**—*தம்பி! அவளுக்கு நாயகன் இருக்கிறான் என்றும் ஆனால் அவன் இவ்வூரிலில்லை யென்றும் கேள்வி. (பின் ஞானம்பிகையைப் பார்த்து) அம்மா! ஞானம்பிகை, ஏன் அழுகிறாய்? கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது.*

**ஞானம்பிகை.**—*(முகத்தைத் துடைத்துக்கொண்டு) ரகசியத்தை அந்த அம்மாளிடம் சொல்லவேண்டாம்; பழி என்மேலிருக்கட்டும் என்று அண்ணன் சிநேகர் நல்லமுத்துப் பிள்ளையைக் கேட்டுக்கொண்டிருந்தும், அவர் யாவற்றையும் சொல்லியதால் நடேசனை வீட்டை விட்டு அனுப்பிவிட்டார்களாம். அந்தம்மாள் எழுதியதைப் பார்க்க எனக்கு அதிக துக்கமாக இருக்கிறது. சோகிலம்பாள் எப்பொழுதும் அக்காள்! அக்காள்! என்று அழுதுகொண்டிருக்கிறாளாம். சிறுவர்களும் அதிசம் துக்கப்படுகிறார்களாம். நான் என்ன செய்கிறதென்று தெரியவில்லை (என்று கண்ணீர் விட்டாள்).*

**இந்திராணி.**—*அம்மா! ஞானம்பிகை! நீ துக்கப்படுவதில் பிரயோசனம் இல்லை. சாவியைக் கொடு. (என்று சாவியை வாங்கிப் பெட்டியைத் திறந்து, அதிலிருந்த துணிகளையெல்லாம் எடுத்து வெளியில் வைத்து, அதில் ஒரு தகரடப்பி யிருக்க அதையெடுத்துத் திறந்து பார்த்து) இதேது கம்மல் ஒன்றிருக்கிறதே?*

**ஞானம்பிகை.**—*ஆம்! அக்காள்! தகரடப்பியில் ஒரு ஜதை கம்மல் அனுப்பியிருக்கிறதென்றே எழுதியிருக்கிறார்கள். என்னை மீண்டும் அவர்கள் வீட்டுக்கு வந்துவிடவேண்டுமென்றும், சில வேளை உடனே வரப் பிரியமில்லாதிருந்தால் இரண்டொரு மாதம் கழித்தாவது வரவேண்டுமென்றும் அதிகம் எழுதியிருப்பதோடு, தான் அனுப்பிய கம்மலை ஒப்புக்கொள்ளாமற்போனால் தனக்கு அது பெருங்கவலையா யிருக்குமென்றும், தான் செய்த கொடுமையை மன்*

னிக்க மனங்கொள்ளாம லிருக்கிறேன் என்று நினைப்போ மென்றும், நான் விரும்பிய துணிகளை வாங்கிக்கொள்ள இருபத்தைந்து ரூபா ஓர் துணியில் முடிந்துவைத்திருக் கிற தென்றும் எழுதியிருக்கிறார்கள். நான் இவைகளை என்ன செய்கிறதென்று எனக்குத் தெரியவில்லை.

மீனாக்ஷிஸுந்தரம்.—அம்மா! ஞானம்பிகை! அவர்கள் அனுப்பியதைத் திருப்பினால் அவர்களுக்கு அதிக துக்கம் உண்டாகும். நீ அவைகளை ஒப்புக்கொள்ள வேண்டியதே! இதல்லாமல், போலீஸ் இன்ஸ்பெக்டர் உன் விஷயத்தில் செய்ததை நினைத்து நினைத்துத் துக்கப்படுகிறார். தான் அறியாமல் செய்த குற்றத்தை நீ மன்னிப்பது உண்மையா னால், இதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று இதைக் கொடுத்தார். (என்று தன்மடியிலிருந்த ஒரு ஜதை பொன் காப்பை எடுத்துக் கொடுத்தான்).

ஞானம்பிகை.—(அதை இருகையாலும் வாங்கிக்கொண்டு) நான் இதை ஒப்புக்கொள்ளவேண்டு மென்கிற விருப்பம் தங்களுக்கிருந்ததால், இதை அவரிடம் திருப்பிக் கொடுக் காமல் வாங்கிவந்ததுபோல் காண்கிறது. ஆனதால் தங் களுடைய கருத்துக்கு விரோதம் வராமல் நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

மீனாக்ஷிஸுந்தரம்.—(நகைத்து) ஆம்! அவர் துக்கப்பட்ட தைப் பார்க்க என்னால் முடியவில்லை. நீ இதைப் பெற்றுக் கொள்ளாமற் போனால் அவர் அதிகம் துன்பப்படுவார். நீ துணிகளை யெல்லாம் பெட்டியில் எடுத்துவை.

(என்று சொல்லி இந்திராணியைப் பார்த்து) தங்களி டத்தில் ஒரு ரகசியம் சொல்ல வேண்டும் (என்று அவளை அழைத்துப்போய்) நான் சொல்வதைக் கேட்டுத் தாங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது.

**இந்திராணி.**—(திடுக்கிட்டு) நீ இதை என்னிடத்தில் சொல்ல உனக்கு மனம் துணிந்ததல்லவா (என்று கேட்டாள்).

**மீனுக்ஷிஸுந்தரம்.**—தங்களுடைய ஸம்மதத்தை அடையவே தங்களிடத்தில் சொன்னேன்.

**இந்திராணி.**—உன்னைப் பெற்றவர்களும் என்னைப் பெற்றவர்களும் என்ன சொல்லுவார்கள்? நான் உன்னுடைய கருத்துக்கு உடன்பட்டு உன்னுடைய எண்ணம் முதிர்ச்சியடைய இடங்கொடுத்தேன் என்று என்னை நிந்திக்கார்களா?

**மீனுக்ஷிஸுந்தரம்.**—என்னுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்யவேண்டியது உங்களுடைய கடமை. நான் இரண்டு மூன்று வாரம் இவ்வூரில் இருக்கவேண்டுமென்கிற எண்ணம் இருக்கிறது. நான் இன்றிரவு ஒன்பது பத்து மணிக்கு வந்து தங்களைப் பார்க்கிறேன் (என்று நீங்கினுன்).

---

## 7—ம் அத்தியாயம்

திருப்பாதிரிப்புலியூரில் கெடிலம் என்ற விசாலமாகிய ஆற்றில் ஜலம் ஓர்பக்கம் ஓட மற்றவிடங்களெல்லாம் மணற்றரையாக இருப்பதால், சிறுவர்கள் அனேக இடங்களில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஆடவரும் அங்கங்கே உட்கார்ந்து வார்த்தையாடி மாலைநேரத்தைக் கழித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒருவன் தனித்த இடந்தேடி உட்கார்ந்து, தன் மடியிலிருந்த ஒரு கடிதத்தை யெடுத்துப் பலமுறை வாசித்துப் பெருமூச்செறிந்து, "இது நமக்கு வந்த கடிதந்தானு, வேறு யாருக்காகிலும் வந்ததா?" என்று பார்த்து "நமது வீட்டின் நம்பரும் வைத்தியலிங்கம் பிள்ளை என்ற பேரும் ஸரியாயிருக்க' நாம் வேறு யோசனை செய்யவேண்டிய காரணம் இல்லையே! அல்லாமலும் நம்முடைய மனைவி இந்திராணியின் பேரைக்

கண்டெழுதியிருக்க, என்ன பேதைமதியால் ஸந்தேகங்கொண்டோம். இக்கடிதம் எவ்வூரிலிருந்து வந்தது என்பதே விளங்கவில்லை. தபால் முத்திரையால் இவ்வூரிலிருந்தே அனுப்பியிருக்கிறதாகக் காண்கிறது. எழுதியவர் பேர் ஊரில்லாமல் போட்டதே அதிக ஸந்தேகத்தைக் கொடுக்கிறது. ஆயினும், 'நீ இரவில் பதினொரு மணிக்குமேல் இந்திராணியைப் போய்ப் பார். அவள் ஒரு சோரநாயகனோடு உறங்குகிறதை உன் கண்ணால் பார்க்கலாம்' என்றிருக்கிறதே! இது பொய்யாயிருக்குமா? நாம் இந்திராணியை மேலாக அல்லவா மதித்திருந்தோம். நாம் அவளைக் கருதாமலிருந்ததால் அவளுடைய குணம் மாறிவிட்டதுபோல் காண்கிறது. சிலவேளை யாராகிலும் விரோதத்தின்மேல் ஏன் எழுதியிருக்கக்கூடாது? ஆம்! விரோதத்தின்மேல் எழுதியிருந்தால், இதில் கண்டவிதம் நாம் போய்ப் பார்த்து, இந்திராணியின் நடத்தை அவ்விதமில்லாததைக் கண்டால், அப்பொழுதே இக்கடிதத்தைக் கிழித்தெறிந்து, இது விரோதத்தால் எழுதியதென்றே துணியலாம். எழுதியதின் பிரயோசனம் ஒன்றுமில்லாமற் போய்விடும். ஆனதால் இதிற் கண்டது உண்மையாகவே இருக்கவேண்டும். சோரநாயகன் யாராக இருக்கக்கூடும்? சிலவேளை மீனாக்ஷி ஸுந்தரமாக இருப்பானோ! அவனே இப்பொழுது அடிக்கடி வந்துபோகிறான். ஆம்! ஆம்! அவனாகவே இருக்கவேண்டும். அடா! முறைகெட்ட பாதகனே! உன்னுடைய தாயும் இந்திராணியின் தாயும் ஸகோதரிகளல்லவா? ஆனதால் அவள் உனக்குத் தமக்கையல்லவா? தமக்கையையே சோரநாயகியாகக் கொண்டாய் அடா! துன்மார்க்கா! உன்னை நான் மிக்க மேன்மையாக மதித்திருந்தேனே! உன்னுடைய நடத்தை இவ்விதமானதா?'' என்று பெருமூச்செறிந்து, "சிலவேளை மீனாக்ஷிசுந்தரமாயிராமல் வேறொருவனா யிருந்தால், நாம் மீனாக்ஷிஸுந்தரத்தைப் பேசுவதெல்லாம் நம்மேல் தாக்குமே. இதை எழுதிய மூதேவி, சோரநாயகன் இன்னானென்று ஏன் சொல்லியிருக்கக்கூடாது? எழுதியவனுக்குப் பேர் தெரியாமலிருக்கவுங்கூடும்.

இக்கடிதத்தில் சொல்லியவிதம் நாம் இன்றிரவு போய்ப் பார்த்து உண்மையாக இருந்தால் அப்பொழுது நாம் செய்யத் தக்கது என்னவென்று யோசிக்கவேண்டும்" என்று பல யோசனை செய்து, ஒரு முடிவுக்கும் வராமல் நெடுநேரம் உட்கார்ந்திருந்தான்.

பின் எழுந்து தன் கூத்தியார் வீட்டிற் போயிருந்து, தான் வழக்கமாகப் போகும் நேரத்தில் வீட்டுக்குப்போய்ப் பதார்த்தங்களின்மேல் ஒரு குறைவுஞ் சொல்லாமலும் இந்திராணியை அடிக்காமலும் சாப்பிட்டு வெளியிற் சென்று, அங்குமிங்குந் திரிந்து காலத்தைக் கழித்து, இரவு பதினொரு மணிக்குத் தெருவில் ஜனசந்தடியில்லாமல் அரவமடங்கி யிருப்பதைக் கண்டு, தன் வீட்டுக்கு வந்து வெளிக்கதவைத் தள்ளிப்பார்த்தான். அக்கதவு உள்தாழ்ப்பா ளிட்டிருப்பதைப் பார்த்து, சந்தடி செய்யாமல் சாளரத்தருகில் வந்து அதைத் திறக்கப் பார்த்தான். அதுவும் திறக்கமுடியாமல் உள்தாழ்ப்பாள் போட்டிருப்பதைக் கண்டு சாளரத்தி னிடுக்கில் பார்த்தான். அவ்வறைக்குள் கட்டிலில் இந்திராணியும் மற்றொரு வாலிபனும் படுத்திருப்பதையும், கட்டிலுக்கருகில் ஒரு மேஜை போட்டு அதில் அலங்காரமாகச் செவ்வாழைப்பழம், கொடிமுந்திரிப் பழம், கிச்சிலிப்பழம், உயர்ந்த தினுசு மாம்பழம் முதலியவைகள் நிறைந்த ஓர் தட்டும், லட்டு, ஜிலேபி, அல்வா, பாற்கோவா முதலியவைகள் நிறைந்த மற்றோர் தட்டும், இரண்டு வெள்ளிப் பாத்திரத்தில் பாலும், பாக்கு வெற்றிலை முதலியவைகளும் வைத்திருப்பதையும் கண்டு, தன தேகம் துடிக்க, "என்ன அநியாயம்? இந்திராணி அவனை அணைத்துக்கொண்டு முகத்தோடு முகம் வைத்துக்கொண்டிருக்கிறாளே ! ஆ ! இந்திராணி ! நீ இவ்விதம் செய்வாயென்று நான் நினைக்கவில்லை. உங்களிருவருக்கும் ஆயுள் முடிந்ததால் இதைச் செய்யத் துணிந்தீர்கள். அந்தப் படுபாவி முகத்தோடு முகம் வைத்திருப்பதால், அவன் யாரென்று கண்டுகொள்ள முடியவில்லை. அவர்களை இப்பொழுதே எமலோகம் குடிபுகுத்தவேண்டும்" என்று வீட்டு

வெளிக்கதவைத் திறக்கச் செய்யவேண்டுமென்று கதவினருகில் போனவன், "நாம் என்ன மூடத்தனமாகக் கதவைத் தட்டப் போகிறோம். கதவைத் தட்டினால் சோரநாயகனைப் பின்புறமாக அனுப்பிவிட்டு அப்புறமே கதவைத் திறப்பாள். நாம் அதை யோசிக்காமல் அவசரப்படுகிறோம். நாம் மற்றொருவரை அழைத்துவந்து பின்வாயிற்படிக்குக் காவலாக வைத்துக் கதவைத் திறக்கச்சொன்னால், அப்பொழுது அவன் வெளியில் போகமுடியாது. நாம் யாரை அழைத்து வருகிறது?" என்று யோசித்து, "சிநேகத்தின் புருடன் சங்கரலிங்கம் பிள்ளையையே அழைத்துவரவேண்டும். அவர் ஸப் மாஜிஸ்ட்ரேட்டாயிருப்பதால், அவர் கண்ணால் பார்த்தால் அவர்களைத் தண்டிக்க ஸாக்ஷிகள் வேண்டுவதில்லை" என்று அவர் இருப்பிடம் சென்று, அவர் வீட்டுக் கதவைத் தட்டினான்.

"கதவைத் திறந்தே வைத்திருக்கிறேன். வந்து படுத்துக்கொள்" என்று சங்கரலிங்கம் பிள்ளை சொல்லக் கேட்டு, வைத்தியலிங்கம் பிள்ளை, "தாங்கள் யாரை வந்து படுத்துக் கொள்ளச் சொல்லுகிறீர்கள்? தாங்கள் சற்று வெளியில் வர வேண்டும்" என்றான். சங்கரலிங்கம் பிள்ளை வெளியில் வந்து, இருட்டில் யாரென்று கண்டுகொள்ளாமல், யார் என்று கேட்டார்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நான் வைத்தியலிங்கம். தங்களிடத்தில் பேசவேண்டுமென்று வந்தேன்.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—தம்பி! நீயா? இந்நேரத்தில் ஏன் வந்தாய்? என்ன ஸமாசாரம்? வீட்டுக்குள் வா (என்று விளக்கெரிந்துகொண்டிருக்கும் ஓர் அறைக்குள் அழைத்துப்போய் உட்காரவைத்து) தம்பி! இதென்ன உன் கைகால்களெல்லாம் உதறுகிறதே.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அண்ணா! நான் பார்த்துவந்ததைச் சொல்ல என மனம் பதறுகிறது (என்று கண் கலங்கினான்).

**சங்கரலிங்கம் பிள்ளை.**—தம்பி! என்ன பார்த்துவந்தாய்? விரைவில் சொல்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அண்ணா! இந்திராணி என்ன மோசஞ் செய்துவிட்டாள்.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—தம்பி! என்ன சொன்னாய்? இந்திராணி இறந்துவிட்டாளா?

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அவள் இறந்தால் தோஷமில்லை. அவள் சோரநாயகனோ டிருக்கிறாள்.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—என்ன சொன்னாய்? இந்திராணி சோரநாயகனோ டிருக்கிறாளா? உனக்கென்ன பைத்தியமா? நீ இந்திராணியை விட்டுக் கூத்தியார் வீடே கதியென்றிருப்பதால், அவள்மேல் குற்றஞ்சொல்லத் துணிந்தாய்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நான் கூத்தியாரோ டிருப்பதால், அவள் சோரநாயகனோ டிருக்க வேண்டுமோ?

**சங்கரலிங்கம் பிள்ளை.**—தம்பி! நீ மற்றோர் முறை இந்திராணியைக் குறித்துக் கேவலமாகச் சொல்லவேண்டாம். அவளைக் குறித்து யார் என்ன சொன்னபோதிலும் நான் நம்பேன். நீ அவளை நடத்திவருவது தெய்வத்துக் கொப்பாது. அவள் என்ன செய்துவைத்தாலும், அதிலெல்லாம் குற்றங் கண்டுபிடித்து, அவளைச் சண்டவிதம் பேசி அடிக்கிறாய் என்று சிவநேசம் சொன்னதோடு, மீனாக்ஷிஸுந்தரமும் அனேக தடவை சொல்லியிருக்கிறான். நீ கூத்தியாரே குலதெய்வமென்று எண்ணியிருப்பவனுக்கு எதுதான் குற்றமாக இராது? நீ இந்திராணியைக் குறித்துப் பேசுமுன், நான் உன்னைக் குறித்தே முதலில் பேசவேண்டும். நீ பருவமடைந்த ஓர் தனவந்தன் பெண்ணை மணமுடித்து, அவளால் கிடைத்த பொருளைக் கூத்தியாருக்கு அழிப்பதைப் பார்ப்போர் உன்னை என்ன நினைப்பார்களென்று நீ நினைத்திருக்கிறாய்? அவள் தன் தாய்வீட்டுக்குப் போய் விட வேண்டுமென்று நினைத்தால், அவள் அவ்விதம்செய்ய முடியாதா? உன்னுடைய நன்மையைக் கருதி, நீ சாப்பாட்டுக்கு அவஸ்தைப்படுவாயென்றும்

உனக்குப் பணிவிடை செய்துகொண்டிருப்பதே போதுமானதென்றும் எண்ணியிருக்கிருள். நீ வந்து சாப்பிட்டுப் போகிறதற்குள் அவளைத் துன்பப்படுத்தி அவள் மனதைப் புண்ணுக்கிப் போகிருயே. இது உனக்கு தருமமா ? அவள்மேல் என்ன குற்றம் கண்டுபிடித்து இவ்விதம் செய்கிருய்?

வைத்தியலிங்கம் பிள்ளை.—அண்ணு ! இந்திராணி சீதனமாகக் கொண்டுவந்த பொருளை நான் அற்பமேனும் தொடவில்லை. என்னுடைய சொத்தே என்னுடைய செலவுக்குப் போதுமானதாயிருக்க, நான் அவளுடைய சொத்தைத் தொடவேண்டிய காரணம் இல்லை. அவள் என்ன குற்றஞ் செய்தாளென்று தாங்கள் கேட்கிறீகள். அவள் செய்திருக்கும் குற்றத்தைத் தங்களுக்குக் காட்டவே தங்களை அழைத்துப்போக வந்தேன்.

சங்கரலிங்கம் பிள்ளை.—தம்பி ! நீ கனவு கண்டே வந்திருக்கிருய் என்பதற்கு ஸந்தேகமில்லை. உன்னுடைய இஷ்டப்பிரகாரம் நான் வருகிறேன். நீ அவள்மேல் சொல்லியதை மெய்ப்பிக்காவிட்டால் உனக்கு என்ன தண்டனை?

வைத்தியலிங்கம் பிள்ளை.—(நகைத்து) தாங்கள் வந்து பார்க்கும்பொழுது, நான் சொல்வதுபோல், இந்திராணி ஒரு சோரநாயகனேடு படுத்திராமற் போனுல், தாங்கள் சொல்வதைக் கேட்கிறேன்.

சங்கரலிங்கம் பிள்ளை.—அதை முன்னதாகவே நாம் பேசிக்கொள்ளவேண்டும்.

வைத்தியலிங்கம் பிள்ளை.—அண்ணு ! சற்று முன் அவள் சோரநாயகனேடு படுத்துறங்குவதை நான் என் கண்ணுல் பார்த்துவந்திருப்பதால், நாம் இப்பொழுது பேசுவதெல்லாம் பிரயோசன மில்லாமற் போய்விடும். நான் சொல்வது அபத்தமாகக் காணப்படின், அப்பொழுது தாங்கள்

என்ன சொன்னாலும் சொல்லலாம். தாங்கள் சொல்வதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—இந்திராணி சோரநாயகனோடு படுத்திருக்கிறாளென்று இன்னும் சொல்லவேண்டாம். அவள் புனிதவதியென்றே நினைத்திருக்கிறேன். சில வேளை நீ சொல்வதுபோல் அவளுடைய நடத்தை கெட்டு துர்ச்செய்கைக்கு ஆளாயிருந்தால், நான் சொல்வதுபோல் நீ நடக்க வேண்டாம். அப்படிக்கு இல்லாமற் போனால் நாளை முதற்கொண்டு நீ உன்னுடைய கூத்தியாா வீட்டுக்குப் போகிறதில்லையென்று கைபோட்டுக் கொடு.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அண்ணா! 'கெட்ட பால் நல்லதாகாது.' தாங்கள் ஏன் அந்த துன்மார்க்கிக்காகப் பரிந்து பேசுகிறீர்கள்? அவள் தன் சோரநாயகனோடு ஸந்தோஷமாக உறங்குவதை நான் கண்டுவந்தேன். தாங்கள் என் சொல்லை நம்புங்கள். தாங்கள் எடுத்துக்கொள்ளும் தொந்தரவு விருதாவாகப் போகிறதே என்று துக்கப்படுகிறேன். தாங்கள் இவ்விடத்தில் காலம் போக்காமல் வந்து பாருங்கள். நானே கதவைத் திறக்கச்சொல்லி அவவிருவரையும் தண்டித்திருப்பேன். நான் கதவைத் திறக்கச் சொன்னால், சோரநாயகனைப் பின்புறமாக அனுப்பிவிடுவாளென்றே தங்களை அழைத்துப் போய்ப் பின்புறத்தில் நிறுத்தி நான் முன்புறமாகவிருந்து கதவைத் திறக்கச் சொல்லவேண்டு மென்கிற எண்ணத்தோடு தங்களிடம் வந்தேன். வேறொருவருக்கும் நம்முடைய ரகசியம் தெரியாம லிருக்கவேண்டு மென்பதே என் கருத்து.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—தம்பி! நான் இது பரியந்தம் நீ சொல்வதை நம்பாமலிருந்தேன். நீ இவ்வளவு சொல்லுகிறதால உண்மையாகவே இருக்கவேண்டும். அடி! பாவி! துஷ்டி! நீ இவ்வித நடத்தையில் கைதேறியா இருக்கிறாய? தம்பி! சோரநாயகன் யாரென் றறிந்தாயா?

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அவன் இன்னானென்று கண்டு சொல்ல முடியவில்லை. தங்களை முதலில் ஒன்று கேட்க வேண்டும். நான் வந்தபொழுது, 'கதவு திறந்திருக்கிறது, வந்து படுத்துக்கொள' என்று சொன்னீர்களே! என்னை யாரென்று மதித்து அவ்விதம சொன்னீர்கள்?

**சங்கரலிங்கம் பிள்ளை.**—நான் மீனாக்ஷிஸுந்தர மென்றே நினைத்துச் சொன்னேன். எங்கேயோ பிரசங்கம நடக்கிறதென்று போயிருக்கிறான். அவன் வருவானென்றே கதவைத் திறந்துவைத்திருந்தேன். நீ ஏன் அதைக் கேட்கிறாய்?

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—எனக்கு ஓர் ஸந்தேகம் இருக்கிறது. அதைச சொல்லும்படி கட்டாயப்படுத்த வேண்டாம். தாங்கள் தங்களுடைய மனைவியையும் அழைத்து வரவேண்டும். (என்றெழுந்தான்).

**சங்கரலிங்கம் பிள்ளை.**—ஆம்! சிவநேசம் அவசியம் அங்கு வரவேண்டும். நான் அழைத்து வருகிறேன். நான் இந்திராணியின் நடத்தை கெட்டதென்று கண்டபின், நான் சொல்லிசகாட்ட ஒன்று என் கையிருப்பில் வேண்டும். இந்திராணி நன்னடக்கையைக் கைப்பற்றியவளாயிருந்தால, நீ "நாளையே என்னுடைய கூத்தியாருக்கு ஏதாகிலும் கொடுத்தனுப்பிவிட்டு என்னுடைய மனைவியோடு இருப்பேன்" என்று கைபோட்டுக் கொடுத்தால், 'அடிபாவி! உன்னுடைய நன்மையைக் கருதி, தம்பியிடம்கைபோட்டு வாங்கிக்கொண்டேனே' என்று சொல்லிக் காட்டுவேன். அதற்காகவே மீண்டும் உன்னைத் தொந்தரவு செய்கிறேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அவள் சற்புத்திரியா யிருந்தால், நாளையே என் கூத்தியாரை அனுப்பிவிட்டு இந்திராணியோடிருப்பதாகப் பிரமாணிக்கஞ் செய்கிறேன்.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—சற்றிரு! நான் சிவநேசத்தை அழைத்துவருகிறேன் (என்று படுக்கை யறைக்குள் சென்று,

சிவநேசம் என்றழைத்து, " நீ விரைவில் இந்திராணி வீட்டுக்கு வரவேண்டும்' (என்று சொல்லி வெளியில் வந்து), தம்பி ! சிவநேசம் பின் வருவதாகச் சொல்லுகிறாள் நாம் முன்பாகப் போகலாம், வருக (என்றார்).

வைத்தியலிங்கம் பிள்ளை.—அண்ணா ! நாமிருந்தே சிவநேசத்தை அழைத்துப்போகவேண்டும். இருட்டில் தனித்து வர முடியாதே !

சங்கரலிங்கம் பிள்ளை.—சிவநேசமா தனித்து வரமாட்டாள் என்று நினைக்கிறாய் ? அவள் ஆண்பிள்ளையாயிற்றே ; எதற்கும் பயப்படமாட்டாள். நாம் போகலாம் வா.

வைத்தியலிங்கம் பிள்ளை.—அண்ணா ! தங்களுக்கு மிட்டாயும், பழங்களும், குடிக்கப் பாலும் கிடைப்பதோடு, தாம்பூலம் முதலியவைகளும் கிடைக்கும்.

சங்கரலிங்கம் பிள்ளை.—எங்கே கிடைக்கும் ?

வைத்தியலிங்கம் பிள்ளை.—இந்திராணி தன் சோரநாயகனுக்கு வாங்கி வைததிருக்கிறாள். வந்துபாருங்கள்.

இவ்விதம் சொல்லி, சங்கரலிங்கம் பிள்ளையை விரைவாக அழைத்துச்சென்று தன் வீட்டருகில் நிறுத்தி, தான் சாளரத்தினருகில் போய்ப் பரர்த்து சங்கரலிங்கம் பிள்ளையிடம் வந்து, " அறைக்குள் விளக்கில்லாமல் இருட்டாயிருப்பதால் ஒன்றும் தெரியவில்லை. தங்களை நான் கேட்டுக்கொணடவிதம் தாங்கள் புழைக்கடைக் கதவுக்குக் காவலாக இருக்கவேண்டும் " என்று மெதுவாகச் சொல்லி, சந்தடிசெய்யாமல் அவரையழைத்துப்போய் அங்கு நிறுத்தி, தான் வீட்டுக்கு முன்புறம் வந்து கதவைத் தட்டி, இந்திராணி ! இந்திராணி ! என்றழைத்தான். நெடுநேரத்துக்குப்பின் இந்திராணி வந்து கதவைத் திறந்தாள். கதவு திறந்தவுடன் வைத்தியலிங்கம் பிள்ளை வீட்டுக்குள் சென்று கதவை மூடித் தாழ்ப்பாளிட்டு, அவளும் சோரநாயகனும் படுத்திருந்த அறையின் கதவு மூடிப் பூட்டியிருக்கக கண்டு, அவன உள்ளிருக்கிறான் என்று தனக்குள் எண்ணி அதிகம் திகில்பட்டிருப்பவள் போல் காணும் ஞானும்

பிகையை அழைத்து, "புழைக்கடைக் கதவைத் திறந்து அங் கிருப்பவரை அழைத்துவா" என்று கோபமாகச் சொன்னார். அவள் கைவிளக்கோடு போய் சங்கரலிங்கம் பிள்ளையை அழைத்துவந்தாள்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—(தன் மனைவியைப் பார்த்து) அந்தக் கதவு ஏன் பூட்டியிருக்கிறது? அதைத் திற.

**இந்திராணி.**—அதில் ஒருவரும் படுக்கிறதில்லை. ஆனதால் அதை மூடிப் பூட்டியிருக்கிறேன். ஏன் அதைத் திறக்கச் சொல்லுகிறீர்கள்?

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—கோபத்தோடு அந்த அறையில் ஒருவரும் படுக்கிறதில்லையென்று எனக்குத் தெரியும். நீ விரைவில் அதைத திற.

**இந்திராணி.**—நான் அவ்வறையைப் பூட்டியிருக்கும் சாவியைக் கைமறதியாக எங்கேயோ வைத்துவிட்டேன். அதைக் காலையில் தேடிப் பார்த்தெடுத்தே திறக்கவேண்டும்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—காலை பரியந்தம் அவனிருக்கும் அறையைப் பூட்டியோ வைத்திருக்கப்போகிறாய்?

**இந்திராணி.**—யாரிருக்கும் அறையை நான் பூட்டிவைத்திருக்கிறேன் என்கிறீர்கள்.

**வைத்திய லிங்கம் பிள்ளை**—அடி! உன் ரகசியம் வெளியாய் விட்டது. நீ கதவைத் திறக்காவிடில் நான் பூட்டை உடைத்து அந்தத் துன்மார்க்கனை வெளியிற் கொண்டு வந்து உன்னையும் அவனையும் கொன்று என் கோபத்தைத் தணித்துக்கொள்ளுவேன்.

**இந்திராணி.**—ஐயோ! தெய்வமே! நான் என்ன செய்யப் போகிறேன்? இவர் என்னென்னமோ சொல்லுகிறாரே! (என்று முகத்தை மூடிக்கொண் டழுதாள்).

**சங்கரலிங்கம் பிள்ளை.**—அம்மா! இந்திராணி! தம்பி கதவைத் திறக்கச் சொன்னால், நீ ஏன் கதவைத் திறக்க மாட்டேன் என்கிறாய்?



உம்மோடிருக்கவே எனக்குப் பிரியம். (103-ம் பக்கம் பார்க்க.)

**இந்திராணி.**—*அத்தான்! நான் திறக்கமாட்டேன் என்று சொல்லவில்லையே. சாவியை வைத்த இடம் தெரியாமல் இராத்திரியெல்லாம் தேடித்திரிந்தேன். அது அகப்படவில்லையே (என்றழுதாள்).*

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—*நீ அதைத் திறக்கவேண்டாம். நானே திறக்கிறேன்.*

*என்று அங்குமிங்கும் ஓடி ஒரு சுத்தியைக்கொண்டு வந்து பூட்டைஉடைத்துக் கதவைத் திறந்து அறைக்குள் சென்று, அவ்வறையில் விளக்கில்லாமையால், இந்திராணியும் அவள் சோரநாயகனும் படுத்திருந்த கட்டிலைத் தடவிப்பார்த்து அங்கொருவரும் இல்லாமையைக் கண்டு, "ஓ! ஓ! மோசம் போனோம்! நாம் சங்கரலிங்கம் பிள்ளை வீட்டுக்குப்போய் வரு முன்னம் அவனை அனுப்பிவிட்டாள் போல் காண்கிறது" என்று வெளியில் வந்து விளக்கொன்றை எடுத்துக்கொண்டு அறைக்குள் போய்ச் சந்துபொந்தெல்லாம் பார்த்து, ஆளில்லாமையைக் கண்டு, "அவன் போய்விட்டான் போய் விட்டான்" என்று சொல்லிக்கொண்டே கட்டிலின் கீழே பார்த்தபொழுது, அங்கொருவன் பதுங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு "அடா படுபாவி! நீ இங்கேயா ஒளித்துக்கொண்டிருக்கிறாய்? வா வா! வெளியில் வா! பாலும் பழமும் மிட்டாயும் வீணாகப் போகிறது" என்று சொல்லும் பொழுது, சங்கரலிங்கம் பிள்ளை அறைக்குள் ஓடி, "இருக்கிறானா! இருக்கிறானா!" என்றபொழுது, வைத்தியலிங்கம் பிள்ளை காட்டிய விளக்கொளியால் ஒருவன் கட்டிலின்கீழ் இருப்பதைக்கண்டு, "தம்பி! நீ வெளியில் போய்விடு. நான் அவனை அழைத்துவருகிறேன். நீ கோபத்தால் ஏதாகிலும் செய்துவிட்டால் அது விபரீதமாய் முடியும்" என்று வைத்தியலிங்கம் பிள்ளையை வெளில் அனுப்பிவிட்டு, கட்டிலின்கீழ் இருப்பவனை வெளியில் வரும்படி கட்டாயப் படுத்தி, ஓர் ஸுந்தரமான புருடனை யழைத்து வெளியில் விட்டு, அவனுக்குக் காவலாக அருகில் நின்று, "நீ யார்?"*

என்று கேட்டார். அப்போது கதவு தட்டுகிற சத்தங்கேட்டு, "அம்மா! ஞானம்பிகை! யாரோ கதவு தட்டுகிறார்கள். போய்ப் பார்" என்றார். ஞானம்பிகை சென்று மீனாக்ஷிஸுந்தரத்தோடு வீட்டுக்குள் வந்தாள்.

வைத்தியலிங்கம் பிள்ளை.—மீனாக்ஷிஸுந்தரம்! இந்த வேடிக்கையைப் பார்க்க நீ இல்லாமற்போனாயென்று கவலையோடிருந்தேன். நீ நல்ல ஸமயத்தில் வந்து சேர்ந்தாய்.

மீனாக்ஷிஸுந்தரம்.—நான் பிரசங்கம் கேட்கப் போயிருந்தவன், இப்பொழுதுதான் வருகிறேன். என்ன ஸமாசாரம்? அத்தானுடன் நிற்கிறவன் யார்?

வைத்தியலிங்கம் பிள்ளை.—நீயே அவனைக் கேள். இவன் நூதனமாக இவ்வீட்டுக்கு வந்திருக்கிறான்.

மீனாக்ஷிஸுந்தரம்.—(சங்கரலிங்கம் பிள்ளையைப் பார்த்து) அத்தான் சொல்லுகிறது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. தாங்களாகிலும் இவன் யாரென்று சொல்லக்கூடாதா?

சங்கரலிங்கம் பிள்ளை.—அப்பா! நான் என்னவென்று சொல்லுவேன். தம்பி வைத்தியலிங்கம் பிள்ளை வீட்டிலில்லாத காலத்தில் இவன் படுக்கையறையிலிருந்து வந்திருக்கிறான். வேறுவிதஞ் சொல்ல எனக்கு மனம் துணியவில்லை (என்று துக்கத்தோடிருந்தார்).

மீனாக்ஷிஸுந்தரம்.—(அவனருகில் சென்று அவனை கவனித்துப் பார்த்து), இவரை எங்கேயோ பார்த்திருக்கிறேன் போல் காண்கிறது. ஆனால் இன்ன இடம் என்பது எனக்கு ஞாபகத்துக்கு வரவில்லை. இவர் குடுமி கொள்ளாத மல்லிகைப்பூவைப் பார்த்தீர்களா? இவர் முறுக்கு மீசையைப் பார்த்தீர்களா? தலையில் போட்டிருப்பது சரிகை வேலை செய்த குல்லா. மேலே பட்டுசொக்கா, காலில் பெனாத் ஜோடு. வீட்டுக்குள்ளும் ஜோடு போட்டுக் கொண்டிருக்கும் வழக்க முடையவர்போல் காண்கிறது

(என்று ஏளனமாகப் பேசி,) ஐயா நீர் யார் ? நீர் எங்கிருப்பது ? இங்கு ஏன் வந்தீர் ? (என்று கேட்டான்).

அவன் பதில் சொல்லாம லிருந்தான்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—(கோபத்தோடு), அடா துன்மார்க்கா ! உன்னைக் கேட்பதற்கு ஏன் பதில் சொல்லாம லிருக்கிறாய் ? பதில் விரைவில் சொல். பதில் சொல்லாம லிருந்தால் உன் தலைமூளை சிதறும்படி அடிப்பேன் பார் (என்று கைத்தடியைக் காட்டினார்).

**அன்னியன்.**—என் மண்டைமூளை சிதறும்பொழுது, உம்முடைய தலைமூளையும் அவ்விதமாகாதோ ? என் கையிலும் தடியிருக்கிறதைப் பாரும் (என்று தன் கைத்தடியைக் காட்டினான்).

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—என்ன சொன்னாய் ? என் மூளை சிதறுகிறதோ உன் மூளை சிதறுகிறதோ பார் (என்று தடியை ஓங்கிக்கொண்டு அவனருகில் சென்றார்).

**மீனாக்ஷிஸுந்தரம்.**—அத்தான் ! தாங்கள் தூரத்திலிருந்தே அவனைக் கேட்கவேண்டும். 'சாகப்போகிறவனுக்கு ஸமுத்திரம் முழங்காலாழம்' என்பது போல் அவன் துணிச்சலாகப் பேசுகிறான். சற்று நேரம் தங்கள் கோபத்தைக் காட்டவேண்டாம் (என்று வைத்தியலிங்கம் பிள்ளையை தூரத்தில் அனுப்பிவிட்டு, அன்னியனைப் பார்த்து) அடா ! நீ யார் ? நான் கேட்பதற்கு ஏன் பதில் சொல்லாம லிருக்கிறாய் ?

**அன்னியன்.**—நான் யார் கேட்பதற்கு பதில் சொல்லவேண்டு மென்பது தெரியவில்லை. நீ இவ்வீட்டுச் சொந்தக்காரனல்லவே ! ஆனதால் கேட்கவேண்டியவர் கேட்டால், அவருக்கு பதில் சொல்ல சித்தமாயிருக்கிறேன்.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—நான் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டாயோ ?

**அன்னியன்.**—நான் தங்களுடைய நியாயஸ்தலத்துக்கு வந்த பொழுது தாங்கள் கேட்பதற்கு பதில் சொல்லுகிறேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—யார் கேட்டாலும் பதில் சொல்லாமல் நானே கேட்கவேண்டு மென்பதால், அப்புண்ணியவானை நானே கேட்கிறேன். ஐயா! தாங்கள் எந்த ஊர்? தாங்கள் ஏன் இவ்விடம் வந்தீர்?

**அன்னியன்.**—தாங்கள் மரியாதையோடு கேட்பதால் நானும் மரியாதையாகவே பதில் சொல்லவேண்டும். ஐயாவே! நான் இந்த ஊரி லிருப்பவனே! இந்திராணி தனக்குத் துணையில்லாமையால், தன்னோடு வந்து படுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டதால், நான் வந்து அவளோடு படுத்திருந்தேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நீர் மிகுந்த தைரியத்தோடு பதில் சொல்லுகிறீர். நீர் ஒருவன் மனைவியோடு போய்ப் படுத்துக்கொள்வது குற்றமென்று உமக்குத் தெரியவில்லையா?

**அன்னியன்.**—உலகவழக்கம் அவ்விதம் இருப்பதால், குற்றமென்று எவ்விதம் சொல்லக்கூடும்?

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—ஒருவன் மனைவியோடு வேறொருவன் போய்ப் படுத்துக்கொள்வது உலகவழக்கமா?

**அன்னியன்.**—ஏன் உலகவழக்கமென்று சொல்லக்கூடாது? ஒருவன் செய்வதை மற்றொருவன் பார்த்து அதுபோல் தான் செய்தலும், அவன் செய்வதை வேறொருவன் பார்த்து அதுபோல் அவன் செய்தலும், பின் யாவரும் அவ்விதமே செய்தலும் உலகவழக்கமல்லவா? நாம் அனுபவத்துக்கு அதிக தூரம் போகவேண்டியதில்லை. தாங்கள் செய்வதைப் பார்த்து அதுபோல் நான் செய்தால், அது உலக வழக்கமல்லவா?

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நான் என்ன செய்கிறேன் என்று சொல்லுகிறாய்?

**அன்னியன்.**—நான் சொல்வது தங்களுக்கு விளங்கவில்லைபோல்

காண்கிறது. நான் வெளிப்படையாகச் சொல்வது அவசியமாக இருக்கிறது. தாங்கள் யாருடன் போய்ப் படுத்துக்கொள்கிறீர் ? நீர் செய்வது உமக்கு நியாயமாக இருந்தால், நான் செய்வது எனக்கு ந்யாயமாக இராதா ?

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நீ அதிக நெஞ்சுரம் கொண்டவன். நான் வைத்திருப்பவளுக்குப் புருடன் இருக்கிறான் என்று உனக்குத் தெரியுமா ?

**அந்நியன்.**—அவளுக்கு நாயகனிருந்தால் என்னை நீர் கேட்பதுபோல் உம்மையும் அவள் நாயகன் கேட்கக்கூடும். நீர் என் தலையிலடித்து மூளை சிதறும்படி செய்கிறேன் என்று சொல்வதுபோல், அவனும் சொல்லி உம்மை உதைப்பான். சிலவேளை அவளுக்கு நாயகன் இல்லாமல் கைம்பெண்ணாக இருந்தால், அதுவும் தோஷம். கைம்பெண்ணிடம் கர்ப்பம உண்டானால், அவள கருவழிக்க முயலுவாள். ஆனதால் அவளைச் சண்டாளியென்றே சொல்லவேண்டும். அவளைச் சொல்லியதுபோல் உம்மையும் சண்டாளனென்றே சொல்லவேண்டும்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அண்ணா ! இவனை ஏளனமாகப் பேசவிட்டு நாம் கேட்டுக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—இந்திராணி ! நீ கொடிய துன்மார்க்கி ! ஐயோ ! உன்னை மேன்மையாக மதித்திருந்த என்னைத் துன்பத்தில் அழுத்திவிட்டாய். தம்பி வைத்தியலிங்கம் என்னிடம் வந்து உன்னுடைய படுக்கையறையில் ஒருவன் படுத்திருக்கிறான் என்று சொன்னதை நம்பாமல், அவன் ஏதோ கனவுகண்டு வந்திருக்கிறானென்று உனக்காகப் பரிந்து பேசி, உன்னுடைய நடத்தை மேன்மையானதாயிருக்கின் நாளையே அவன் தன் கூத்தியாரை அனுப்பி விட்டு உன்னோடு இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டதால், அவன் அவ்விதமே செய்கிறேன்

என்று பிரமாணிக்கம் செய்து கொடுத்தானே, நான் எடுத்துக் கொண்ட பிரயாசை தம்பி சொல்லியவிதம் பிர யோசனமில்லாமற் போனதோடு, நீ எங்களை யெல்லாம் அவமானத்தில் அழுத்திவிட்டாயே (என்று துக்கப்பட் டார்).

**அன்னியன்.**—ஐயா ! ஸம்மாஜிஸ்ட்ரேட் அவர்களே ! தாங்கள் இந்திராணி விஷயத்தில் எடுத்துக்கொண்ட தொந்தரவு பயன்படாமற் போய்விட்டது. ஆனதால் தங்களுடைய தம்பி கூத்தியாரை விட்டுவிடவேண்டு மென்கிற விபந் தனை அவரைக் கட்டுப்படுத்தவில்லை என்பதை யறிய ஸந் தோஷப்படுகிறேன். அவர் தன்னுயிருக்குயிராக மதித் திருக்கும் கூத்தியாரோடு போயிருக்கவேண்டியதே. நானும் என் கூத்தியாரோடிருக்கத் தாங்களே ஏற்பாடு செய்து விடவேண்டும். இந்திராணி என்னோடிருக்க ஸம்மதம் கொள்ளுவாளோ கொள்ளமாட்டாளோ என்ற ஸந்தேசம் சிலவேளை தங்களுக்கு இருக்கக்கூடும். நான் அதை உங்களுக்கு விளக்கிவிடுகிறேன். (என்று இந்தி ராணியைப் பார்த்து) இந்திராணி ! நீ உன் குடும்பத் துக்கே அவமானத்தை விளைவித்தாய என்று ஸப்மாஜிஸ் ரேட் சொன்னது உன் காதில் விழுந்ததல்லவா ? இனி அந்த அவமானம் நீங்கப்போகிறதில்லை. உன்னை இனி ஒருவரும் சேர்க்கமாட்டார்கள். ஆனதால் நீ இவ்வூரி லிருந்து அவமானப் படுகிறதற்கு பதிலாக என்னுடன் வந்துவிடுதல் உத்தமம் என்று நினைக்கிறேன். உன்னு டைய அபிப்பிராயம் என்ன ?

**இந்திராணி.**—ஆம் ! ஆம் ! நான் குலத்துக்கே அவமானத்தை விளைவிக்கப் பிறந்தேன். ஆடவராயிருந்தால், அவர்கள் என்ன செய்தாலும் செய்யலாம். அவர்கள் செய்வதால் குலத்துக்கு அவமானம் வராது. பெண்களாலேயே குலத்துக்கு அவமானம் வருகிறது. நான் என் குலத் துக்கு அவமானத்தை விளைவித்த பின் இவ்விடம் இருப்

பதில் பிரயோசனமில்லை. உம்மோடிருக்கவே எனக்குப் பிரியம் என்று அன்னியனைப் போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டாள். (யாவரும் மலைத்துப் போனார்கள்).

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—பார்த்தீர்களா! பார்த்தீர்களா! இந்த துன்மார்க்கியின் நிலையை இப்பொழுது நன்றாய் அறிந்தீர்களல்லவா! இவளை உயிரோடு வைத்திருக்கக் கூடாது. இவளை இப்பொழுதே கொன்று விடுகிறேன் (என்று கைத்தடியோடு அவளருகில் சென்றான்).

**அன்னியன்.**—ஐயா! நீர் ஆத்திரப்படவேண்டாம். இந்திராணி எனக்குச் சொந்தயானபின் அவளை நீர் அடிக்க நான் பார்த்துக்கொண்டிருப்பேனா? தங்களுடைய கூத்தியாரை அவள் நாயகன் அடிக்கவந்தால், அவள் அடிபடத் தாங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்களா? நாம் இருவரும் போர்புரிந்து நான் தோல்வியடைந்தால், நீர் அப்பொழுது இந்திராணி யருகிற் போகலாமே யன்றி அதற்கு முன் அவளிடத்தில் நெருங்கவிடேன்.

**சங்கரலிங்கம் பிள்ளை.**—அடா துன்மார்க்கா! நான் இதுபரியந்தம் உன்னை எவ்விதம் தண்டிக்கிறது என்று யோசித்துக்கொண்டு உன்னிடம் பேசாமலிருந்தால், நீ மேலும் மேலும் பேசுகிறாய். உன்னை லேசில் விடக்கூடாது. என்ன தைரியத்தைக் கொண்டு இவ்விதம் பேசுகிறாயோ தெரியவில்லை. நீ போலீஸ் சாவடிக்கு என்னோடு வர வேண்டும் (என்று கையைப்பற்றி இழுத்தார்).

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அண்ணா! தாங்கள் சற்று நேரம் பொறுத்திருங்கள். இவ்விதமாகவே இவனைப் போலீஸ் சாவடிக்குக் கொண்டுபோகக் கூடாது. ஒருவன் பெண்டாட்டியோடு வார்த்தையாடி அவளை வசப்படுத்தி அழைத்துக்கொண்டு போனவன் கதியை யாவருமறிய இவனுடைய அழகைக் கெடுத்து அனுப்புகிறேன் (என்று தன் வேட்டியை வலித்துக் கட்டிக்கொண்டிருந்தார்).

**அன்னியன்.**—ஐயா ! ஸப்மாஜிஸ்ட்ரேட் அவர்களே ! நான் பிறர் மனைவியை இச்சித்தேன் என்ற ஒரு குற்றமே என் மேல் உள்ளது. இப்புண்ணியவான், பிறர் மனைவியை இச்சித்ததோடு, தன் சொந்த மனைவியை என்னென்ன துன்பப்படுத்த வேண்டுமோ அவ்வளவும் செய்திருக்கிறார். ஆனதால் இவர்மேல் இரண்டு குற்றங்கள் ஏற்படுகின்றன. அவ்விரண்டு குற்றங்களுக்கும் தக்க தண்டனையைச் செய்தே நான் போலீஸ் சாவடிக்கு வரவேண்டும். (என்று தானும் தான் போட்டிருந்த சொக்காயையும் தலையிலிருந்த குல்லாவையும் எடுத்தெறிந்து) வாரும் வாரும். நம்மிருவரில் யார் பலசாலியென்று பார்க்கலாம் (என்றான். யாவரும் கலீரென்று நகைத்தார்கள்).

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—(திகைத்து) சிவநேசம் ! இதென்ன வேஷம் ! நீயா என்னோடு சண்டைபோட வருகிறாய் ? (சங்கரலிங்கம் பிள்ளையைப் பார்த்து) அண்ணா ! தாங்களும் உட்கையாக இருந்து இக்காரியத்தைச் செய்து என்னிடத்தில் பிரமாணிக்கம் வாங்கிக் கொண்டீர்கள். தங்களிடத்தில் நான் வாக்குக் கொடுத்துவிட்டதைக் குறித்து நான் துக்கப்படவில்லை. சிவநேசம் நான் செய்திருக்கும் குற்றங்களை எடுத்துக்காட்டிய பின், என் மனம் என்னை வருத்திக்கொண்டிருக்கிறது. (என்று தன் மனைவியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு) என் கண்மணி ! நான் செய்த கொடுமைகளை யெல்லாம் ஸகித்திருந்து என் மனம் ஸந்தோஷமடைய எவ்வளவோ செய்துகொண்டிருந்தாய். நான் அதையெல்லாம் கவனிக்காமல் உன்னைத் துன்பப்படுத்துவதையே விரதமாகக் கொண்டிருந்தேன். நான் இனிமேல் உன்னை ஸந்தோஷப்படுத்துவதே என்னுடைய விரதமாகக் கொண்டிருப்பேன் (என்று கன்னத்தில் முத்தங்கொடுத்தார்).

**இந்திராணி.**—(ஆனந்தக்கண்ணீர் பெருக்கெடுத்தோட ஞானம்பிகையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு), தங்காய் ! உன்

னல் நான் ஸுகமடைந்தேன். உன்னுடைய சூழ்ச்சியே என் நாயகனை நல்ல வழியில் திருப்பியது (என்று அவளுக்கு முத்தங்கொடுத்து, அவளை விட்டு சிவநேசத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு) சிவநேசம்! உன்னுடைய உதவியில்லாமற்போனல் என்னுடைய எண்ணம் முடிந்திராதே. எல்லாம் உன்னாலடைந்த ஸுகமென்றெண்ணுவேன். தம்பி மீனாக்ஷிஸுந்தரத்தின் உதவி இல்லாமற் போனாலும் நமக்கு வேண்டிய உடுப்புகள் மீசை முதலானதும் கிடைத்திராதே. அத்தானும் எனக்காக அதிக தொந்தரவு எடுத்துக்கொண்டதற்கு நான் என்ன செய்யப் போகிறேன் (என்று சங்கரலிங்கம் பிள்ளைக்கு நமஸ்காரம் செய்தாள்).

சங்கரலிங்கம் பிள்ளை.—(இந்திராணிக்கு ஆசி கூறி) அம்மா! இந்திராணி, நீ உன் புருடனோடு ஸந்தோஷமாக இருப்பதைப் பார்க்கவேண்டுமென்பதே எங்களுடைய விருப்பம். ஞானம்பிகையின் சூழ்ச்சியை சிவநேசம் என்னிடத்தில் சொன்னபோது, அவள் புத்திகூர்மைக்காக நான் அதிசயப்பட்டேன். தம்பி! வைத்தியலிங்கம், எனக்கு மிட்டாய், பழம், பால் முதலியவைகளைக் கொடுக்கிறேன் என்றாயே! அதை மறந்துவிட்டாய்போல் காண்கிறது (என்று நகைத்தார்).

வைத்தியலிங்கம் பிள்ளை.—நான் மறக்கவில்லை அண்ணா. நான் கொண்டுவருகிறேன் (என்று அறைக்குள் சென்றான்).

சிவநேசம்.—எங்களுக்காக வைத்திருப்பவைகளை வேறொருவரும் சாப்பிடக்கூடாது. நானும் என் மனைவியுமே சாப்பிடவேண்டும் (என்று நகைத்தாள்).

ஞானம்பிகை.—அக்காள்! மிட்டாய் முதலானவைகளைப் புருடனும் பெண்டாட்டியுமாகிய நீங்களே சாப்பிட வேண்டுமென்றதால், அவைகளை யாவரும் சாப்பிடலாம் என்பதாயிற்று (என்று நகைத்தாள்).

சிவநேசம்.—எங்களுக்காக வைத்திருக்கின்றன வென்றால்

அவைகளை மற்றவர்களெல்லாம் சாப்பிடலாம் என்பது எவ்விதமோ எனக்குத் தெரியவில்லை.

ஞானம்பிகை.—அவைகளைப் புருடனும் பெண்டாட்டியும் சாப்பிடவேண்டுமென்றுதானே தாங்கள் சொல்லுகிறீர்கள்.

சிவநேசம்.—ஆம்! நானும் என் மனைவி இந்திராணியும் சாப்பிடலாம்.

ஞானம்பிகை.—மிட்டாய் முதலியவைகளைப் புருடனும் பெண்டாட்டியும் சாப்பிடலாம் என்றதனால், தாங்களும் தங்களுடைய புருடனும் இந்திராணியம்மாளும் அவர்களுடைய புருடனும் சாப்பிடவேண்டுமல்லவா (என்று நகைத்தாள்).

யாவரும் நகைத்து, "ஆம்! ஆம்! எல்லாரும் சாப்பிடலாம்" என்றவுடன், ஞானம்பிகை அறைக்குள் சென்று வைத்தியலிங்கம் பிள்ளைக்கு உதவியாக இருந்து மிட்டாய் முதலியவைகளைக் கொண்டுவந்து யாவருக்கும் முன்வைத்து இதல்லாமல் வேறு அறைகுள்ளிருந்து ஒரு பெரியதட்டில் மிட்டாய் பழம் முதலியவைகளையும் சமையலறையில் காய்ந்துகொண்டிருந்த பாலையும் யாவருக்கும் கொண்டுவந்து கொடுத்தாள்.

சங்கரலிங்கம் பிள்ளை.—படுக்கையறையில் இருந்ததைவிட வேறாகவும் வாங்கிவைத்திருக்கிறதோ?

இந்திராணி.—ஆம்! அத்தான்! யாவரும் வருவார்கள். ஆனதால் அதிகம் வேண்டுமென்று ஞானம்பிகையே வாங்கி வைத்தாள்.

வைத்தியலிங்கம் பிள்ளை.—அவ்விதம் செய்தால் இவ்விதம் முடியுமென்று யாவும் சித்தப்படுத்தி யிருக்கிறது (என்று நகைத்தார்).

சங்கரலிங்கம் பிள்ளை.—அப்பா! மீனாக்ஷிஸுந்தரம். நீ எங்கிருந்தாய்?

மீனாக்ஷிசுந்தரம்.—ஞானம்பிகை என்னை எதிர்வீட்டுத் திண்ணையிலிருந்து, அத்தான் என்ன செய்கிறார் என்று பார்த்து அவர் போகுமிடத்திற்கு அவரறியாமல் பின்

சென்று பார்க்கும்படி ஏற்பாடு செய்தாள். அவர் தங்கள் இருப்பிடத்திற்கு வந்தால், தங்களை முன் கேட்டுக்கொண்டிருந்தது போல் பிரமாணிக்கம் வாங்கிக்கொள்ளுவீர்கள். தங்களிடம் வராமல் வேறெங்காகிலும் சென்று துணையோடு வந்தால், உடனே தங்களை அழைத்துவந்து பிரமாணிக்கம் வாங்கிக்கொண்டபின் பூட்டிய அறையின் கதவைத் திறக்கவேண்டுமென்று சொல்லியிருந்தாள். அது போல் நான் அத்தானோடு சென்று, அவர் தங்களுடைய வீட்டுக்குள் நுழைந்ததும், நான் திரும்பிவந்து ஞானம்பிகைக்கும் மற்றவர்களுக்கும் சொல்லி விளக்கைக் குளிரச் செய்வித்துவிட்டு, எதிர்வீட்டிலிருந்தே பார்த்துக்கொண்டிருந்தேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—ஏன் விளக்கை நிறுத்திவிடச் சொன்னாய்?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—விளக்கில்லாமற்போனால் தாங்கள் அத்தானுக்கு ஒன்றும் காட்டமுடியாது. அதனால் தங்களோடு வேடிக்கையாகப் பேச முடியுமென்று நினைத்து அவ்விதம் செய்தேன்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—பேர் ஊரில்லாமல் எனக்குக் கடிதம் எழுதியவர் யார்?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—ஞானம்பிகையே எழுதி என்னிடம் கொடுத்துத் தபாலில் போடச்சொன்னாள்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—அண்ணா! தாங்கள் என்னோடு வர வீட்டுக்குள் சென்று, சிவநேசம்! சிவநேசம்! என்றழைத்துப்பேசினீர்களே! யாரிடத்தில் பேசினீர்கள்?

**சங்கரலிங்கம் பிள்ளை.**—கட்டிலோடு பேசினேன். உன்னோடு "சிவநேசம் ஆண்பிள்ளை; அவள் இருட்டில் பயப்படமாட்டாள்" என்றும் சொன்னேனே! (என்று நகைத்தார். யாவரும் நகைத்துத் தின்பண்டங்களைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்).

## 8—ம் அத்தியாயம்

புதுச்சேரியில், சிவன் கோவிலுக்கு ஸமீபத்திலுள்ள வாணியத்தெருவில், ஒரு மெத்தைவீட்டில், இரவு ஒன்பது மணிக்கு, நாற்பது அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத் தகுந்த ஓர் ஸுந்தரமான பெண்பிள்ளை, தன்னருகில் உட்கார்ந்திருந்த வாலிபனைப் பார்த்து, "அப்பா! மீனாக்ஷிஸுந்தரம்! நீ நெடுநாள் திருப்பாதிரிப்புலியூரில் இருந்துவிட்டாயே! அங்கென்ன விசேடம்? நீ இவ்விடம் இல்லாமையைக் குறித்து உன் தந்தை அதிக கவலை அடைந்திருந்தார்" என்றாள்.

மீனாக்ஷிஸுந்தரம்.—அம்மா! இந்திராணி யக்காள் நிமித்தம் நான் அங்கிருக்க நேர்ந்தது.

பெண்பிள்ளை.—இந்திராணி தேக அஸௌக்கியமா யிருந்தாளோ?

மீனாக்ஷிஸுந்தரம்.—அவர்கள் தேகத்துக்கு ஒன்றுமில்லை; மன வியாகூலமே அதிகம் இருந்தது.

பெண்பிள்ளை.—நானும் என் தங்கை கோவிந்தம்மாளும் செய்த தவப்பலன், என் தங்கை இந்திராணியைப் பெற்ற பின் வேறு குழந்தை பெறவில்லை நானும் உன்னைப்பெற்ற பின் எனக்கும் வேறு குழந்தை யில்லை. பார்க்கிறவர்கள், "ஜானகியம்மாள் ஒரு ஆண் குழந்தையையும் கோவிந்தம்மாள் ஒருபெண் குழந்தையையும் பெற்றிருக்கிறார்களன்றி வேறு குழந்தைகளில்லையே! பொருளில்லாதவர்களெல்லாம் அனேகம் பிள்ளைகளைப் பெற்று அவர்களை ஆதரிக்க முடியாம லிருக்கிறார்கள். பொருள் உள்ளவர்களுக்கு அதிகம் பிறக்கக்கூடாதா?" என்று சொல்லுவது எங்கள் காதில் விழுவதுண்டு. எங்களுக்கிருக்கும் பிள்ளைகளோடு நாங்கள் ஸந்தோஷமாயிருக்க நாங்கள் கொடுத்துவைக்கவில்லையே! இந்திராணியின் புருடன் அவளை நேசித்திராமல் ஒரு கூத்தியாரை வைத்துக்கொண்டு தன்

மனைவியை எந்நேரமும் அடிப்பதும் கண்டவிதம் வசை கூறுவதுமா யிருக்கிறான். ஆனதால் இந்திராணியை அழைத்துவந்து சில நாள் இங்கு வைத்திருந்தால் உத்தம மென்றெண்ணி, என் தங்கையை அனுப்பி அழைத்துவரச் சொன்னேன். இந்திராணி தன நாயகனை விட்டு வர முடியாதென்று சொல்லி அனுப்பிவிட்டாள். இந்திராணி என்னமோ தன் நாயகனை தெய்வமாகப் பாவித்திருக்கிறாள். அப்படிபாவி அவளை வதைத்துக்கொண்டிருக்கிறான் (என்று கண் கலங்கினள்).

மீனாக்ஷிஸுந்தரம்.—அம்மா! தாங்கள் அத்தானை ஒன்றும் சொல்லவேண்டாம். அவர் தன் கூத்தியாருக்கு ஐந்நூறு ரூபா கொடுத்து அனுப்பிவிட்டுத் தன் மனைவியோடு ஸந்தோஷமாயிருக்கிறார்.

ஜானகியம்மாள்.—அப்பா! என்ன சொன்னய்! உன் அத்தான் கூத்தியாரை அனுப்பிவிட்டாரா? இது அதிசயமாயிருக்கிறது. கூத்தியாருக்கும் அவருக்கும் மனச்சலிப்பு வந்ததோ?

மீனாக்ஷிஸுந்தரம்.—அவ்விதம் ஒன்றுமில்லை. காரணம்வேறு, (என்று இந்திராணியம்மாள் தன்னோடிருக்க ஓர் பெண் துணை கேட்டதும், தான் ஞானம்பிகையைக் கண்டதும், அவளை இந்திராணியம்மாளிடம் அனுப்பியதும், ஞானம்பிகை செய்த உபாயமும், பின் அதுமுடிந்த விதமும் சொல்லி), நான் இந்த ஸந்தோஷமான ஸமாசாரத்தை மெய்யாத்தூரிலிருக்கும் என் சிறிய தாயாருக்குச் சொன்னதில் அவர்கள் அதிக மகிழ்ச்சியடைந்து தன் மகளைப் போய்ப் பார்ப்பதாகச் சொன்னார்கள்.

ஜானகியம்மாள்.—அப்பா! நீ என்வயிற்றில் பாலை வார்த்தாய்! ஐயோ! என்மகள் ஸந்தோஷமாக இருந்தால், அதுவே போதுமானது. நானும் போய் இந்திராணியைப் பார்த்து வரவேண்டும்.

மீனாக்ஷிஸுந்தரம்.—ஆம்! தாங்கள் அவ்விடம் போகவேண்டிய வேலையும் இருக்கிறது (என்று நகைத்தான்).

ஜானகியம்மாள்.—நான் அங்கே போகவேண்டிய வேலை இருக்கிறதா! என்ன வேலை?

மீனாக்ஷிஸுந்தரம்.—தாங்கள் என்னைக் கோபிக்காமல் என் எண்ணத்தைப் பூர்த்தி செய்கிறதாயிருந்தால், நான் சொல்லுகிறேன்.

ஜானகியம்மாள்.—நான் என்ன காரணத்தால் உன்னைக் கோபிக்கப் போகிறேன்? உன் எண்ணம் நன்மையாயிருந்தால், அதைப் பூர்த்திசெய்வதே என் கடமை.

மீனாக்ஷிஸுந்தரம்.—அம்மா! இந்திராணியக்காள் வீட்டிலிருக்கும் பெண் ஞானம்பிகை—, என்று மற்றதைச் சொல்லுமுன்,

ஜானகியம்மாள்.—போதும்! போதும்! மற்றதைச் சொல்ல வேண்டாம். மற்றதைச் சொல்லுமுன் நீ சொல்லப்போகிறது இன்னதென்று அறிந்துகொண்டேன். அவள் உன் தமைக்கை விஷயத்தில் செய்த நன்மைக்காக ஏதாகிலும் அவளுக்குச் செய்யவேண்டுமென்றுதானே சொல்லப் போகிறாய். அவளுக்கு நூறு அல்லது இருநூறில நல்ல நகையாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று நீ நினைக்கிறது போல், நீ அவளைக் குறித்துச் சொல்லும்பொழுதே நானும் எண்ணினேன். அதற்காக நீ கவலைகொள்ளவேண்டாம். உன்னிஷ்டம்போல் அவளுக்கு வாங்கிக்கொடுக்கிறேன்.

மீனாக்ஷிஸுந்தரம்.—அம்மா! நான் ஒன்றைச் சொல்லுமுன் தாங்கள் வேறொன்றைச் சொல்லுகிறீர்கள். நான் அவளுக்கு நகைகள் கொடுக்கவேண்டுமென்று நினைக்கவில்லை.

ஜானகியம்மாள்.—நகைகள் வேண்டாமென்றால் அவளுக்குத் துணிகள் வாங்கிக்கொடுக்கலாம். அதுதானே வேறென்ன சொல்லப்போகிறாய்?

மீனாக்ஷிஸுந்தரம்.—நான் சொல்லுவதை முற்றிலும் கேட்காமல் தாங்கள் அவசரப்படுகிறீர்கள். ஞானம்பிகை நம்முடைய ஜாதியிற் பிறந்தவள்; ஆனால் ஏழை.

ஜானகியம்மாள்.—சரி! சரி! அவள் ஏழையானதால் அவளுக்கு நிலம் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று யோசிக்கிறது போலிருக்கிறது. அதற்குப் பெரிய தொகையே வேண்டும். ஆயினும் பெரிதல்ல! அவள் காலமுற்றும் ஸௌகரியமா யிருக்க அரைவேலி நன்செய் நிலம் வாங்கிக்கொடுத்தால் போதாதா?

மீனாக்ஷிஸுந்தரம்.—அம்மா! அவளுக்கு நிலமுதலானதும் வாங்கிக்கொடுக்கும்படி தங்களுக்குச் சொல்லவில்லை.

ஜானகியம்மாள்.—பின் என்ன செய்யவேண்டு மென்கிறாய்? அவள் ஏழையானதால் அவளுக்கு எங்காகிலும் ஓர் மாப்பிள்ளையைத் தேடிப்பார்த்துக் கலியாணம் செய்துவைக்க வேண்டுமென்று நினைக்கிறாய்போல் இருக்கிறது.

மீனாக்ஷிஸுந்தரம்.—ஆம்! அம்மணி! அவளுக்கு விவாகமே செய்துவைக்கவேண்டும். அவள் கல்வியில் வல்லவள், நுண்ணிய அறிவை யுடையவள், அழகிற் சிறந்தவள், பரோபகாரச் சிந்தையுடையவள். அவளுக்குத் தக்க நாயகனைப் பார்த்து மணம் முடித்துவைக்கவேண்டும்.

ஜானகியம்மாள்.—நீ அவளை மிக்க மேன்மையாகப் பேசுகிறாயே. அவளுக் கேற்ற நாயகனைப் பார்த்துவைத்திருக்கிறாயா?

மீனாக்ஷிஸுந்தரம்.—ஆம்! அம்மணி! ஒருவனைப் பார்த்தே வைத்திருக்கிறேன்.

ஜானகியம்மாள்.—அவள் ஏழை என்பதால், நீ பார்த்திருப்பவனுக்கு அவளைக் கலியாணம்செய்துகொள்ள ஸம்மதந்தானா?

மீனாக்ஷிஸுந்தரம்.—அவள் கிடைத்தால் போதும்; நற்குணம் நன்னடக்கையுள்ளவளே வேண்டும்; பணத்தோடு வரும் பத்திரகாளி வேண்டாம் என்கிறான்.

ஜானகியம்மாள்.—விவாகம் செய்துகொள்ளுகிறவனுக்கு விருப்பம் இருப்பதால், விவாகத்தை முடித்துவிடுகிறது தானே!

மீனுக்ஷிஸுந்தரம்.—அவன் தங்களுடைய உத்தரவையும் அப்பாவுடைய ஸம்மதத்தையும் பெற்றே செய்யவேண்டுமென்கிறுன்.

ஜானகியம்மாள்.—எங்களுடைய ஸம்மதத்தை ஏன் எதிர்பார்க்கிறுன்? எங்களுக்கு அவனைத் தெரியுமா?

மீனுக்ஷிஸுந்தரம்.—என்னை நீங்கள் அறிவதுபோல, அவனையும் நன்றுய் அறிவீர்கள்.

ஜானகியம்மாள்.—நாங்கள் அவனை அறிவோமா? அவன் எங்கிருக்கிறுன்?

மீனுக்ஷிஸுந்தரம்.—அவன் இவ்வூரிலேயே இருக்கிறுன்.

ஜானகியம்மாள்.—அவன் பெயர் என்ன?

மீனுக்ஷிஸுந்தரம்.—அவன் பெயரைச் சொன்னுல், தாங்கள் கோபிப்பீர்களென்று பயப்படுகிறேன்.

ஜானகியம்மாள்.—ஒரு விவாகத்தை முடித்துவைப்பது பெரும் புண்ணியம் என்பதால், கோபம் என்னத்திற்கு வரப்போகிறது. பயப்படாமல் அவன் பெயரைச் சொல் (என்று நகைத்தாள்).

மீனுக்ஷிஸுந்தரம்.—அவன் பெயர் மீனுக்ஷிஸுந்தரம்.

ஜானகியம்மாள்.—எந்த மீனுக்ஷிஸுந்தரம்?

மீனுக்ஷிஸுந்தரம்.—தங்கள் குமாரனுகிய நானே!

ஜானகியம்மாள்.—என்ன சொன்னுய்! நீயா அவளைக் கட்டிக் கொள்ள இஷ்டப்பட்டிருக்கிறுய்? ஏ மட்டி! வெட்கமில்லாமல் என்னிடத்தில் வந்து, ஒருவர் வீட்டில் வேலை செய்துகொண்டிருக்கும் புழுக்கையை விவாகஞ் செய்து கொள்ளுகிறேன் என்று என்ன மதியோடு என்னிடம் துணிந்து சொன்னுய்?

மீனுக்ஷிஸுந்தரம்.—அம்மா! அவள் தற்காலம் இந்திராணியக்காளுக்குச் சொந்த தங்கையைப்போ லிருக்கிறுள்.




ஐயா ! இவள் என்னோடிருப்பவளல்ல ! சற்று நேரத்துக்கு முன் இவ்விடம் வந்தாள். (127-ம் பக்கம் பார்க்க.)

**ஜானகியம்மாள்.**—இந்திராணி அவளைத் தன் தங்கையென்று சொல்லிவிட்டால், அவள் இந்திராணிக்குச் சொந்த தங்கை ஆய்விடுவாளா! வீட்டில் வேலை செய்பவர்களை அண்ணு, தம்பி, அப்பா என்றழைத்தால், அவர்கள் நாம் கூப்பிட்ட விதமே சொந்தமாய் விடுவார்களா? பைத்தியக்காரா! நான் மிக்க மேன்மையாக உன்னை மதித்திருந்தேன். நீ ஒன்றும் யோசியாமல் வீட்டில் வேலை செய்து கொண்டிருப்பவளைத் தேடிப்பார்த்து எனக்கு மருமகளாகக் கொண்டுவரப் பார்த்தாயே! இது ஒரு பெரிய உபகாரம் (என்று கோபத்தோடு நகைத்தாள்).

**மீனாக்ஷிஸுந்தரம்.**—அம்மா! நான் எப்பொழுதும் தங்களுடைய வார்த்தைக்கு விரோதம் சொன்னதாக எனக்கு ஞாபகமில்லை. இந்த ஒரு விஷயத்தில் தங்களுடைய வார்த்தைக்கு எதிர்வார்த்தை யாடுகிறேன். என்னைக் கோபிக்காமல் என்னுடைய இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டும் (என்று காலில் விழுந்து நமஸ்கரித்தான்).

**ஜானகியம்மாள்.**—அப்பெண் பருவமடைந்தவளா?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—அவள் இன்னம் பருவமடையவில்லை.

**ஜானகியம்மாள்.**—அவள் உன்னை விவாகஞ் செய்து கொள்ளுகிறேன் என்று சொன்னுளா?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—நான் அவளோடு இதைக் குறித்து இன்னும் ஒன்றும் பேசவில்லை. ஆயினும் இந்திராணி யக்காளிடம் என் கருத்தைச் சொன்னேன்.

**ஜானகியம்மாள்.**—இந்திராணி என்ன சொன்னுள்?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—அவர்களும் தங்களைப்போல் கோபித்துக் கொண்டார்கள்.

**ஜானகியம்மாள்.**—அப்பா! மீனாக்ஷிஸுந்தரம்! நீ அறியாதவனுகையால் உலகம் இன்னதென்று அறியாமல் பேசுகிருய்! நம்முடைய நிலைமை என்ன! அவளுடைய நிலைமை என்ன! உன் தந்தையை இவ்வூரில் பெருந்தனவந்த

றென்று யாவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாம் எந்த விஷயத்தில் குறைவாக இருக்கிறோம் ? நமக்குப் பந்துக்கள் இல்லையா ? நமக்கு ஸமானமான இடத்தில் பெண் பார்த்து உனக்கு விவாகம் செய்தால் பார்ப்பவர்களுக்கு மதிப்பாயிருக்கும். அவ்விதம் செய்யாமல் ஒரு வீட்டில் வேலை செய்துகொண்டிருப்பவளை உனக்கு மணமுடித்தால் உலகம் என்ன சொல்லும் ? நம்முடைய பந்துக்களும் என்ன சொல்லுவார்கள் ? அப்பா ! நீ கோரிய பெண்ணை உனக்கு மண முடித்தால், உன் மாமனார் மாமியார் உன்னை அழைத்துப்போய் உன் நிலைமைக்குத் தக்கவிதம் மருவு செய்வார்கள் ! உன் மனைவிக்குப் பதினாயிரம் இருபதினாயிரம் சீதனமும் கொடுப்பார்கள் ! மாமனார் வீட்டுக்குப் போகும் பொழுது ஊர்கோலத்தோடு போகக்கூடும் ! பெண்ணுக்கு எல்லா நகைகளையும் வயிரத்தாலே பூட்டிக் கலியாணச் செலவெல்லாம் பெண் வீட்டாரே போட்டு விவாகஞ்செய்து கொடுப்பார்கள் ! போ ! போ ! பைத்தியக்காரா ! ஒன்றும் யோசியாமல் எவளோ வேலை செய்கிறாளாம் அவளைக் கலியாணஞ் செய்துகொள்ளப் போகிறானாம். என்னுடைய உத்தரவும் அப்பாவுடைய ஸம்மதமும் வேண்டுமாம். போ ! போ ! உன்னுடைய இஷ்டப்பிரகாரம் போய் நீ பார்த்திருக்கும் புழுக்கையை விவாகம் செய்துகொள் (என்று கோபமாகச் சொன்னாள்).

அந்த ஸமயத்தில் ஒருவர் வீட்டுக்குள் வந்து "ஜானகி! என்ன கோபமாகப் பேசுகிறாய் ? அப்பா மீனாக்ஷிஸுந்தரம் ! நீ எப்பொழுது வந்தாய் ?" என்று கேட்டார்.

ஜானகியம்மாள்.—தாங்கள் வெளியில் போனவுடன் தங்களுடைய குமாரன் வந்தான். தங்களுக்கு நல்ல மருமகளைத் தேடிவந்திருக்கிறான். தாய் தந்தை பெண்பார்த்துத் தங்களுடைய பிள்ளைக்கு மணமுடிப்பது உலகவழக்கமா யிருக்கத் தங்கள் குமாரன் தானே பெண்டாட்டியைத் தேடிக்

கொண்டு, அவளைத் தனக்கு மணமுடிக்க வேண்டும் என்று தங்களுடைய ஸம்மதம் வேண்டுமென்கிறான். என்னுடைய ஸம்மதத்தைச சொல்லிவிட்டேன். தங்களுடைய ஸம்மதத்தையும் சொல்லிவிடுங்கள் (என்று கோபமாகச் சொன்னாள்).

**மீனாக்ஷிஸுந்தரத்தின் தந்தை.**—ஜானகி! நீ சொல்லுவது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன ஸமாசாரம்? விளங்கச்சொல்.

ஜானகியம்மாள் தன் குமாரன் சொல்லியதை யெல்லாம் விளங்கச் சொன்னாள்.

**மீனாக்ஷிஸுந்தரத்தின் தந்தை.**—அப்பா! மீனாக்ஷிஸுந்தரம்! நீ எனக்கு நல்ல மருமகளைத் தேடிவைத்திருக்கிறாய். பார்க்கிறவர்களெல்லாம் சின்னதம்பி பிள்ளைக்கு யாதொரு குறைவுமில்லை யென்று சொல்லுவார்கள் அல்லவா?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—தந்தையே! தாங்களும் அம்மாளும் என்னைக் கோபிப்பது நியாயமல்ல! நான் ஒருபெண்ணை மணம் புரிந்துவிடவில்லை. நான் அப்பெண்மணியைக் கண்ட பின் உங்களுடைய ஸம்மதங் கிடைத்தால் அவளை மணம் புரியலாமென்று நினைத்து அம்மாளிடத்தில் சொன்னேன். தங்களுக்கும் அம்மாளுக்கும் ஸம்மதமில்லையென்றால் நான் என்ன செயய முடியும்?

**சின்னதம்பி பிள்ளை.**—அப்பா மீனாக்ஷிஸுந்தரம்! உன் தாய் சொல்லியது யாவும் உனக்கு நியாயமாகக் காணவில்லையா? நீ நன்றாய் யோசித்துப் பார்! ஒவ்வொருவரும் தாம் மேன்மை யடையப் பார்ப்பார்களே யன்றி, தாழ்ந்துபோக நினையார்களே! நம்மைக் கடவுள் நல்ல நிலைமையில்வைத்திருக்கிறார். நம்மிடத்திலிருக்கும் செல்வத்துக் கேற்க நாம் நடக்காமற்போனால் உலகம் நம்மைக் கேவலமாகப் பேசும நாம் யாருக்கு பயப்படாமற போனாலும் உலகத்துக்கு அவசியம் பயப்படவேண்டும். அதை நீ முதலில்

கவனிக்க வேண்டும். உனக்கு விரைவில் விவாகமுடிக்க வேண்டுமென்றே யோசித்திருக்கிறேன். பெண் இரண்டு மூன்று இடத்தில் இருக்கிறது. பெண்ணைப் பெற்றோர் நம்மைப்போல் தனவந்தரே! நான் நாளையே உன் தாயாரை அனுப்பிப் பெண்களைப் பார்த்துவரச் செய்கிறேன். நீ கவலைகொள்ள வேண்டாம்.

மீனாக்ஷிஸுந்தரம்.—தந்தையே! தாங்களும் அம்மாளும் என் மனதை யறியாமல் பேசுகிறீர்கள். எனக்கு விவாகம் விரைவில் முடிக்கவேண்டுமென்று நான் கேட்கவில்லை. உலகத்தை நோக்குமளவில் தாங்கள் சொல்லிய யாவும் உண்மையே! தாங்களும் அம்மாளும் சொல்வதுபோல், தனவந்தரிடத்தில் பெண் கொண்டால் பெருஞ்சீதனம் கிடைக்குமென்பதும் உண்மையே! ஆனால் பெருஞ்சீதனத்தோடு வரும் பெண்களுடைய குணம் எவ்விதமிருக்குமோ அதை அறியோம். நன்மனம், நற்குணம், கல்வி முதலியவைகளை விடப் பொருளே மேலானதென்று தாங்களும் அம்மாளும் சொன்னபின், நான் பேசவேண்டிய காரணமே இல்லை நமக்கு நல்ல குணமுள்ளவள் கிடைப்பாளென்று எண்ணியிருந்தேன். நீங்கள் குணமுள்ளவள் வேண்டாம், பணமுள்ளவளே வேண்டுமென்பதால், உங்களுடைய இஷ்டம்போல் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். எனக்கு இப்பொழுது விவாகம் வேண்டியதில்லை. சில வருடங்கள் பொறுத்தே அதைக் குறித்து யோசிக்கவேண்டும் (என்று அவ்விடத்தைவிட்டு நீங்கினான்).

சின்னதம்பி பிள்ளை.—ஜானகி! உன் மகன் சொல்லியதைக் கேட்டாயா?

ஜானகியம்மாள்.—அவன் அறியாதவன். அவனுக்கென்ன தெரியும்! நாம் நல்ல பெண்ணாகப் பார்த்து விவாகஞ் செய்து கொள்ளென்றால், அவன் தடங்கல் சொல்லுவானா? நான்

நாளையே கூடலூருக்குப் போய் நாம் கேள்விப்பட்ட பெண்ணைப் பார்த்துவருகிறேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—நன்றாய் வாசித்த பெண்ணையே பார்க்க வேண்டும். நீ அவசரப்பட்டுப் பெண் வீட்டாருக்கு ஒன்றும் சொல்லிவிட வேண்டாம் (என்று தன் மனைவிக்குப் போதித்தார்).

மறுநாள் ஜானகியம்மாள், தன் மகன் துணையோடு திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்று இந்திராணியைக் கண்டு, அவள் தன் நாயகனோடு ஸந்தோஷமாக இருப்பதை யறிந்து தானும் ஸந்தோஷப்பட்டு வார்த்தையாடியிருந்து, தான் கூடலூருக்குப் பெண் பார்க்கப் போகவேண்டுமென்று சொன்னாள். இந்திராணி ஸந்தோஷப்பட்டு, சிவநேசத்தை வரவழைத்துத் தன் பெரிய தாயாரின் கருத்தைத் தெரிவித்தாள். அதன்மேல் ஜானகியம்மாள் அவளையும் அழைத்துக்கொண்டு கூடலூருக்குப் போய்ப் பெண்ணைப்பார்த்துத் திரும்பிவந்தாள். வீட்டின் பின்கட்டில் வைத்தியலிங்கம் பிள்ளையோடு எல்லாரும் உட்கார்ந்து வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள்.

**இந்திராணி.**—(தன் நாயகனைப் பார்த்து) நாங்கள் பார்த்துவந்த பெண் மிகு ஸுந்தரமாகவே இருக்கிறாள். பெருஞ் சீதனமும் கொடுப்பார்கள். பெண் எடுத்த புத்தகத்தை வாசிப்பாளென்று சொல்லுகிறார்கள்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—உங்களுக்கெல்லாம் ஸம்மதமாயிருந்தால் நிச்சயதாம்பூலத்துக்கு நாள் ஏன் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது?

**இந்திராணி.**—நாம் பெரிய அப்பாவின் ஸம்மதத்தை அறிந்தே நாள் ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜானகியம்மாள், யாவரும் பேசிக்கொண்டிருக்கும் இடத்தைவிட்டுச் சமையலறைக்குள் சென்று, அங்கு வேலை செய்திருந்த ஞானம்பிகையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, "இவ்வளவு ஸுந்தரமான பெண்ணும் உலகத்தில் இருக்கிறாளா!

மீனாக்ஷிஸுந்தரம் இவளைக் கண்டு ஆசைகொண்டு இவளை மணம்புரிய வேண்டுமென்று சொன்னதால் அவன்மேல் குற்றம் சுமத்தக்கூடாது'' என்று தனக்குள் எண்ணி, ஞானம்பிகையோடு வார்த்தையாடி, அவள் ஏழையாக இருப்பதைக் கண்டு பரிதாபப்பட்டு, இந்திராணி முதலிய யாவரும் பின்கட்டில் வார்த்தையாடிக்கொண்டிருக்கும் இடத்தில் வந்து உட்கார்ந்தாள்.

**இந்திராணி.**—தம்பி! நாங்கள் பார்த்துவந்த பெண் உனக்குக் கிடைப்பாளாயின், நீ அதிட்டமுள்ளவனென்றே சொல்ல வேண்டும்.

**மீனாக்ஷிஸுந்தரம்.**—என்ன காரணத்தால் அதிட்டமுள்ளவனென்று சொல்லுகிறீர்கள்?

**இந்திராணி**—பதினாயிரத்துக்குக் குறையாமல் நகைகளும் சீதனமும் கிடைக்கும்.

**மீனாக்ஷிஸுந்தரம்.**—நீங்கள் யாவரும் பணத்தையே பெரிதாக எண்ணுகிறீர்கள். நீங்கள் அவசரப்பட்டு நிச்சயதாம்பூலம் முதலானதும் செய்யவேண்டாம். எனக்கு விவாகம் இப்பொழுது வேண்டியதில்லை.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நமக்கு நல்ல இடம் கிடைத்திருக்கிறது. நாம் பொறுத்து விவாகம் செய்துகொள்ளுகிறோம் என்றால், அவர்கள் பெண்ணை வைத்துக்கொண்டிருப்பார்களா?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—அப்பெண்ணை எனக்காக வைத்திருக்கச் சொல்லவில்லையே!

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—நீ சொல்வதைப் பார்த்தால் உனக்கு அந்தப் பெண் வேண்டாமென்று சொல்லுகிறது போல் காண்கிறது. வேறு பெண் பார்க்கச் சொல்லுகிறாயா?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—அத்தான்! எனக்கு எந்தப் பெண்ணும் வேண்டாம். நான் விவாகம் செய்துகொள்ளுகிறதாயிருந்தால் ஞானம்பிகையையே மணமுடிப்பேன். நான் ஞானம்பிகையை விவாகம் செய்துகொண்டால், அது உங்களுக்கு

அவமானம் விளைவிக்குமெனில், எனக்கு விவாகமே வேண்டாம்.

அப்போது சமையலறையிலிருந்து யாவருக்கும் காப்பி கொண்டுபோன ஞானம்பிகை அவர்களிடம் போகாமல் திரும்பிச் சமயலறைக்குள் சென்று திகைத்துநின்றாள். சிலநேரத்துக்குப் பின் இந்திராணியம்மாள் சமையலறைக்குள் வந்து காப்பி கொண்டுபோய் யாவருக்கும் கொடுத்து வார்த்தையாடியிருந்தாள். பின் இராப்போஜனமுண்டு எல்லாரும் சயனித்துக் கொண்டார்கள்.

காலை ஆறு மணிக்கு இந்திராணி எழுந்து, வீட்டு வேலையொன்றும் தொடங்காம லிருப்பதைக் கண்டு, 'ஞானம்பிகை இன்று அயர்ந்து தூங்குகிறாள். அவளை எழுப்பக்கூடாது' என்று தான் வீட்டுவேலைகளைச் செய்துகொண்டிருந்தாள்.

ஜானகியம்மாள்.—(எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு, இந்திராணியம்மாள் வேலை செய்துகொண்டிருப்பதைக் கண்டு) அம்மா! இந்திராணி! ஞானம்பிகை காலையிலெழுந்து வீட்டு வேலை செய்கிற வழக்கம் இல்லையோ? (என்று கேட்டாள்).

இந்திராணி.—ஞானம்பிகை காலை ஐந்து மணிக்கே எழுந்து வீட்டுவேலை செய்வாள். இன்று ஏதோ அசதியாய்த் தூங்குகிறாள். நான் அவளை எழுப்பவில்லை (என்றாள்).

காலை ஆறரை மணிக்கு வைத்தியலிங்கம் பிள்ளையும் மீனாக்ஷிஸுந்தரமும் வெளியில சென்றார்கள. இந்திராணி எழுமணி பரியந்தம் வேலை செய்துகொண்டிருந்தும் ஞானம்பிகை எழுந்து வராமையைக் கணடு, 'சிலவேளை ஞானம்பிகை தேக அஸௌக்கியத்தோ டிருக்கிறாளோ, அதை நாம் கண்டறியாமலிருக்கிறோம்' என்று அவள் வழக்கமாகப் படுத்துக்கொள்ளும் இடத்தில் போய்ப் பார்த்து அவள் அங்கில்லாமையைக் கண்டு, சிலவேளை எழுந்து பின்கட்டுக்குப் போயிருப்பாளோ வென்று போய்ப் பார்த்தாள். அங்கும் அவளில்லாமையைக்

கண்டு திடுக்குற்று அறைகளெல்லாம் பார்த்தாள் : கூப்பிட்டுப் பார்த்தாள். சிவநேசத்தின் வீட்டுக்குப் போயிருப்பாளோ என்று அங்கு ஆளனுப்பிப் பார்த்தாள். எங்கு மில்லாமையைக் கண்டு இந்திராணி கண்ணீர் உதிர்த்துக்கொண்டிருந்தாள். வெளியில் சென்றிருந்த வைத்தியலிங்கம் பிள்ளையும் மீனாக்ஷி ஸுந்தரமும் வீட்டுக்கு வந்து ஞானம்பிகை எங்கேயோ போய்விட்டாளென்று இந்திராணியம்மாளால் கேள்வியுற்று அதிசயப்பட்டு அயர்ந்து உட்கார்ந்தார்கள். சிலநேரத்துக்குப்பின் மீனாக்ஷிசுந்தரம் எழுந்து இந்திராணியம்மாள் அருகில் போய், "அக்காள் ! ஞானம்பிகையின் பெட்டி இருக்கிறதா ?" என்று கேட்டான்.

இந்திராணி.—ஆம் ! தம்பி ! நான் அதைப் பார்க்கமறந்தேன் (என்று மீனாக்ஷிஸுந்தரத்தோடு ஞானம்பிகை பெட்டி யிருக்கும் இடத்திற்போய், பெட்டி யிருக்கக் கண்டாள்).

மீனாக்ஷிஸுந்தரம்.—ஞானம்பிகையின் பெட்டியில் சாவியிருக்கிறதே, அதைத் திறந்துபாருங்கள்.

இந்திராணி பெட்டியைத் திறந்து அதில் அவளுடைய துணிகளும் நகைகளும் ரூபாவில் பதினைந்தும் இருக்கக் கண்டதோடு, ஓர் கடிதமும் தன்பெயருக்கு மேல்விலாசம் இட்டிருக்கக் கண்டு, அதைப் பிரித்து வாசித்தாள். அதில் அடியிற்கண்டவிதம் எழுதியிருந்தது.

பிரிய தமக்கைக்கு அநேக நமஸ்காரம்.

நான் எழுதிவைத்திருக்கும் சில வரிகளை வாசித்து என்னை மன்னிக்கத் தங்களை நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன். நேற்று மாலை நீங்கள் யாவரும் பின்கட்டில் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, நான யாவருக்கும் காப்பி கொண்டு வந்தேன். அப்பொழுது, அண்ணன் 'விவாகம் செய்துகொள்ளுகிறதாயிருந்தால் ஞானம்பிகையையே மணமுடிப்பேன்' என்று சொல்லிய சொல்லொன்று என்னைத் துன்பத்தில் அழுத்திவிட்டது. அவர் சொல்லியவைகளை முற்றிலுங் கேட்க ஸகியாதவளா

கித் திரும்பிச் சமையலறைக்குச் சென்றேன். பிரிய தமக்கையே! அவருடைய நிலைமை என்ன? என்னுடைய நிலைமை என்ன? என்னை அவர் விவாகஞ்செய்து கொள்ளலாமென்ற எண்ணம் அவருக்கு உதிக்கலாமா? அவர் என்னிடத்தில் தம் கருத்தைச் சொல்லியிருந்தால், அவர் எண்ணத்தை அப்பொழுதே மாற்றியிருப்பேன். அவர் என்னுடன் ஒன்றும் சொல்லாமலும், என் கருத்தையறியாமலும், யாவும் தாமே முடிவுபடுத்திக்கொண்டார். நான் ஏழை! வீட்டில் வேலை செய்துகொண்டிருப்பவள். ஆனதால் என்னிடம் எதைச் சொன்னாலும் நான் ஒப்புக்கொள்ளுவேன் என்று நினைத்தார்போலும்! ஐயோ! ஏழையாயிருப்பவர்களுக்கு மானம் ஈனம் இல்லாமற்போகுமா? என்னை அவர் விவாகம் முடிக்க நான் ஒப்புக்கொளவேனுனல், நான தனத்துக் காசைப்பட்டு அவரை வசப்படுத்தி என வலையில் சிக்கவைத்தேன் என்று என்னை உலகம கேவலமாகப் பேசுமே! குலத்திலோ, குணத்திலோ, மற்றெந்த விஷயத்திலோ, குற்றமிருப்பதால், ஒருவரும் அவருக்குப் பெண்கொடுக்க ஸம்மதிக்கவில்லை; ஆனதால் அவர் வெள்ளாட்டியை மணந்தார் என்று கேவலமாகச் சொல்லுமென்பதை நினையாமற்போனர். ஐயோ! அக்காள்! அவர் என் மானத்தைக் காப்பாற்றியவர்; ஸமயத்தில் ஆதரித்தவர்; நல்ல இடத்தில் சேர்த்தவர். அவர் எனக்குச செயத நன்றியை நான் மறக்கத்தகுமா? அவர் என்னைப்போல் ஏழையாயிருந்தாலும் அல்லது நான் அவரைப்போல் தனவந்தர் வீட்டில் பிறந்திருந்தாலும், அவர் எண்ணத்துக்கு உடன்படலாம். அவ்விதம் எவ்வகையிலும் பொருந்தாமல இருபபதால், அவர் கொண்ட எண்ணத்தை அறவே ஒழித்துவிடத் தாங்கள் அவருக்குச் சொல்லவேண்டும். அவர் கருத்தை அறிநதபின் நான் தங்களோடிருப்பது யாவருக்கும் மனச்சலிப்பை உணடுபண்ணுமென நினைத்து, எனக்கு வேண்டியதைக் கைக்கொண்டு தஙகளிடம் சொல்லிக் கொள்ளாமல் நீஙகினேன். என்வினை என்னைக் கொண்டுபோகிற இடத்துக்குப் போகிறேன். நான் தங்கள் விஷயத்தில் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும். நான்

தரங்கன்பாடியிலாவது என் தாயோடாவது போயிருக்க மனங் கொள்ளவில்லை. தாங்கள் என்னைத் தங்களுடைய ஸகோதரி யைப்போல் பார்த்துவந்ததை நான் எந்நாளும் மறக்கேன்.

இப்படிக்கு,
தங்களுடைய பிரிய தங்கை,
ஞானம்பிகை.

இந்திராணி, கண்களில் தாரை தாரையாக நீரோட அக் கடிதத்தை முற்றிலும் வாசித்து, "ஆ! ஞானம்பிகை ! நீ என்ன வேலை செய்தாய் ! உன் பணத்தையும் நகைகளையும் எடுத்துப் போகவும் மனம் பொருந்தவில்லையா ! நீ எதையும் வெறுத்தவ ளாகக் காண்கிறாயே" என்றழுதாள்.

அருகில் நின்றிருந்த மீனாக்ஷிஸுந்தரம், அக்கடிதத் தைப் பிடுங்கி வாசித்து, "ஆ ! ஞானம்பிகை ! நான் சொல்லிய சில சொற்களோ உன்னை வீட்டைவிட்டுத் துரத்தியன ! நான் உன்னுடைய நற்குணத்தை நினைத்து நினைத்து எந்நாளும் துக் கப்பட்டுக் கொண்டிருக்கவோ என்னை விட்டு நீங்கினாய் ? நீ ஸௌகரியத்தோடு அக்காளிடம் இருப்பதைக் கெடுத்த பாவி நானல்லவா ! உனக்கு இங்கிருக்க இஷ்டமில்லாமல் எங்கே போய் அலைகிறாயோ ? சாப்பாட்டுக்கு என்ன செய்வாயோ ? உனக்குத் தங்க இடமில்லாமல் தவிக்கும்பொழுது, என்னால் இத்துன்பத்தை அனுபவிக்க நேர்ந்ததே என்று என்னை நிந்திப் பாயோ ? என் தாய்தந்தை உன்னைக் கண்டு கோபிப்பார்க ளென்றோ பயந்தாய் ? ஆ ! என் கண்மணி ! நான் உன்னைப் போல் ஏழை வீட்டில் பிறந்திருந்தால் என் ஆயுள் காலமெல் லாம் ஸந்தோஷத்தோடிருப்பேனே ! ஐயோ ! உன்னை நடே சன் கையிலிருந்து மீட்டபொழுதே உன் பேரழகைக் கண்டு ஆசைகொண்டேனே ! நான் உன்னிடத்தில் வைத்த அன்பு துன்பமாகப் போனதே ! ஆ ! என் மாணிக்கமே ! நீ என்னை விட்டு நீங்கினால் நான் உயிரோடிருக்கேன் என்பதை அறியா மலோ போனாய்! நான் உன்னைக் கண்டுபிடிக்காம லிருக்கேன்"

என்று எழுந்தோடியவன், வாயிற்படி தடுக்கி விழுந்து மூர்ச்சையானான். இந்திராணி, மீனாக்ஷி ஸுந்தரத்தோடு ஓடி, அவன் விழுந்ததைக் கண்டு பயந்து, ஆ! தம்பியென்று அவனைத் தூக்க முயன்றாள். மீனாக்ஷி ஸுந்தரம் விழுந்த சத்தத்தைக் கேட்டு, வைத்தியலிங்கம் பிள்ளையும் ஜானகியம்மாளும் ஓடி வந்து பார்த்து, என்னவென்று கேட்டார்கள்.

## 9—ம் அத்தியாயம்

கும்பகோணத்தில் காலை ஆறுமணி ரெயில்வண்டி வந்து நின்றவுடன் ஜனங்கள் வண்டியிலிருந்து இறங்கிப் போகும் பொழுது, ஓர் ஸுந்தரமான பெண்ணும் ஓர் மூட்டையோடு வண்டியிலிருந்து இறங்கிபபோவதைக் கண்ட வண்டிக்காரர், "அம்மா! எங்கு போகவேண்டும்? வண்டி வேண்டுமா?" என்று கேட்டார்கள். அப்பெண் தனக்கு வண்டி வேண்டாம் என்று நடந்து ஊருக்குள் சென்று தெருத்தெருவாய்த் திரிந்து, "இன்னும் எங்கு போகிறது? யாரைக் கண்டு கேட்கிறது? என்று ஒன்றுந் தோன்றாமல் ஒவ்வொரு தெருவை இரண்டு மூன்று தடவை சுற்றிக்கொண்டிருந்து, ஒன்பது மணிக்கு, ஏறக்குறைய முப்பத்தைந்து வயதுள்ள ஓர் ஸுந்தரமான பெண் பிள்ளை தோசைசுட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து, அவள் கடைக்கருகில் போய் நின்றிருந்தாள்.

**தோசைக்காரி.**—(அப்பெண்ணைப் பார்த்து) அம்மா! தோசை வேண்டுமா? எவ்வளவுக்கு (என்று கேட்டாள்).

**பெண்.**—ஆம்! அம்மா! தோசை வேண்டும்! எங்கிருந்து சாப்பிடுகிறதென்றே யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

**தோசைக்காரி.**—அம்மா! நீ என்ன குலம்? நீ இந்த ஊரல்லவோ?

**பெண்.**—அம்மா! நானை வேளாள குலம். நான் இந்த ஊரல்ல. நான் வெளியூரிலிருந்து இன்று காலை ரெயிலில் வந்து,

எங்கு போகிறது என்ன செய்கிறதென்று தெரியாமல் தவிக்கிறேன் (என்று கண்கலங்கினுள்).

தோசைக்கா।.—அம்மா ! நீ அழவேண்டாம். நீ முதலில் பசியை ஆற்றிக்கொள். (என்று மூன்று தோசையும் காப்பியும் அவ ளிடங் கொடுத்து வீட்டுக்குள் போய்ச் சாப்பிடச் சொல்லி அனுப்பினுள்)

பெண் சாப்பிட்டு வெளியில் வந்தபின், தோசைக்காரி அப்பெண்ணை அழைத்து அருகில் உட்காரச சொல்லி, ' அம் மா ! நீ நெற்றியில் பொட்டோ வைத்திருக்கிருய் ?" என்று கேட்டாள்.

பெண்.—நான் நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்ள வில்லை; அது மச்சம.

தோசைக்காரி.—அதிசயித்து இருவருக்கும் ஒரேவிதமான மச்ச மிருக்குமா என்று அம்மச்சத்தைப் பார்ததுக் கண்கலங்கிப் பின கணகளைத துடைத்துக்கொண்டு அம்மா ! நீ எந்த ஊரிலிருந்து வந்தாய் ? (என்று கேட்டாள்).

பெண்.—அம்மா ! நானிருநதுவந்த ஊர் பேரைமட்டும் கேட்க வேண்டாம்.

தோசைக்காரி.—ஊர் பேரைக் கேட்க வேண்டாமா ? ஏன் கேட்க வேண்டாம் என்ருய் ? நீ அங்கு என்ன செய்து கொண்டிருந்தாய் ?

பெண்.—நான் ஒருவர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந் தேன்.

தோசைக்காரி.—நீ அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுத்தானே வந்திருக்கிருய் ?

பெண்.—நான் அவர்களுக்குச் சொல்லாமலே வந்திருக்கிறேன் சிலவேளை அவர்கள என்னைத் தேடி வருவார்களென்ற பயத்தால், நான் விட்டுவந்த ஊர் பேரைச் சொல்லப் பிரியமில்லை.

**தோசைக்காரி.**—*அம்மா ! நீ சொல்வது அதிக ஸந்தேகத்தைத் தருகிறது.*

**பெண்.**—*ஆம் ! அம்மா ! அது யாவருக்கும ஸந்தேகத்தையே கொடுக்கும். நான் என்ன செய்யலாம் ? என் வினையே அதற்குக் காரணம்.*

**தோசைக்காரி.**—*உன் பெயர் என்ன ? அதையும் மறைத்து வைக்க வேண்டுமோ (என்று நகைத்தாள்).*

**பெண்.**—*என் பெயரைச் சொல்வதில் தோஷமில்லை. பெயரும் ஊரும் சேர்ந்தாலொழிய ஆளைக் கண்டுபிடிக்க முடியாது. என் பெயர் ஞானும்பிகை.*

**தோசைக்காரி.**—*அம்மா ! ஞானும்பிகை ! நீ இந்த ஊரில் என்ன செய்யலாம் என்று வந்திருக்கிறுய் ?*

**ஞானும்பிகை.**—*யார் வீட்டிலாகிலும் வேலைசெய்து வயிறு வளர்க்கலாமென்று வந்திருக்கிறேன்.*

*அப்போது ஓர் பெண்பிள்ளை வந்து, " அம்மா ! இருளாயி ! இன்றேன் தோசை அனுப்பாமலிருந்தாய் ? அந்த அம்மாள் கோபித்துக்கொள்ளுகிறுாகளே !" என்றுள்.*

**இருளாயி யம்மாள்.**—*அம்மா ! நான் என்ன செய்வேன் ! தோசை சுடுவதைவிட்டு நான் எவ்விதம் கொண்டு வர முடியும் ? யாரையாகிலும் அனுப்பினுல் கொடுத்தனுப்புகிறேன் என்று சொல்லியிருந்தும், மீனும்டாள் அம்மாள் காரணந் தெரியாமல் கோபிக்கிறுர்கள் (என்று சொல்லிக் கொண்டே ஆறு தோசையை எடுத்துக் கொடுத்தாள்).*

**பெண்பிள்ளை.**—*ஆம் ! ஆம் ! நீ ஒருவருக்காகக் கடையைவிட்டுப் போக முடியுமா ? அந்தப் பெண் யார் ? உன் மகளா?*

**இருளாயி யம்மாள்.**—*எனக்கு மகளும இருப்பாளா ! நான் கொடும்பாவியாயிற்றே ! என்னைப் போல் அந்தப் பெண்ணும் ஓர் பரதேசி.*

**பெண்பிள்ளை.**—*அந்தப் பெண் உன்னைப்போ லிருப்பதால் உன் மகளென்றே நினைத்தேன் (என்று நீங்கினுள்).*

**இருளாயி யம்மாள்.**—அம்மா ! ஞானம்பிகை ! நீ ஒருவர் வீட்டில் வேலைசெய்து வயிறு வளர்க்கவேண்டுமென்ற எண்ணத் தோடு வந்தவள், நீ இருந்து வந்த ஊர்பெயரைச் சொல்ல மாட்டேன் என்றால், நீ ஏதோ தகாத காரியத்தைச் செய்து வந்திருக்கிறாய் என்று நினைக்கமாட்டார்களா ?

**ஞானம்பிகை.**—ஆம் ! நினைக்கக்கூடும் ! நான் என்ன செய்வேன் ! நான் பிச்சையெடுக்க நேரிட்டாலும் அதை ஒப்புக்கொள்ள வேண்டியதே. என இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க ஏதுவாயிருப்பதை நான் மறைப்பது அவசியமாக இருக்கிறது. ஆனால் நான்யாதொரு தீத்தொழிலையும் செய்து வரவில்லையென்று பிரமாணிக்கமாகச் சொல்லுவேன்.

**இருளாயி யம்மாள்.**—அம்மா ! நான் ஓர் பரதேசி ! நான் என் வயிற்றை வளர்க்கத் தோசை சுட்டு விற்கிறேன். நான் முதலில் உன்னைக் கண்டபொழுது உன்மேல் பரிதாபப்பட்டு உன் பசியை ஆற்றினேன். அதற்காக நீ ஒன்றும் கொடுக்க வேண்டாம. நீ உனக்கிஷ்டமான இடத்திற்குப் போகலாம். நீ பேசுவது அதிக ஸந்தேகத்துக் கிடந்தருகிறது.

**ஞானம்பிகை.**—அம்மா ! நான் தங்களைக் கோபிக்க நியாயமில்லை. தாஙகள் கொடுத்த தோசை காப்பியின் விலையைப் பெறறுக்கொள்ளுங்கள். (என்று தன் மடியிலிருந்த முடிப்பை அவிழ்த்து ஒரு அணா எடுத்துக் கொடுத்தாள்).

**இருளாயி யம்மாள்.**—அம்மா ! உன்னிடத்தில் ரூபா அதிகம் இருக்கிறதுபோல் காண்கிறதே ! எத்தனை ரூபா இருக்கிறது ?

**ஞானம்பிகை.**—என்னிடத்தில் ஒன்பதேகால் ரூபா இருந்தது அதில் தங்களுக்கு ஒரு அணா கொடுத்தேன்.

**இருளாயி யம்மாள்.**—நீ இங்கிருக்கவேண்டாம் ! நீ கொடுக்க வேண்டியது முக்காலணா. நான உனக்குக் கொடுக்கவேண்டியது காலணா ! ஆனதால் இந்தக் காலணாவைப் பெற்றுக்

கொண்டு நீ போகவேண்டிய இடத்திற்குப் போகலாம். நீ இங்கிருப்பது எனக்குப் பயமாக இருக்கிறது. போ! போ! (என்று காலணவைக் கொடுத்துத் துரத்தினள்).

ஞானம்பிகை, அதிக துக்கத்தோடு கண்கலங்கிக் கடையை விட்டிறங்கினள். இறங்கும்போது சற்று தூரத்தில் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் வருவதைக் கண்டு, இறங்கிவந்த வீட்டுக்குள் ஓடினள். போலீஸ் உத்தியோகஸ்தர் விரைவில் தோசைக்கடையில் வந்து நின்று, இருளாயி யம்மாளைப் பார்த்து, "அம்மா! என்னைக் கண்டு வீட்டுக்குள் ஓடிய பெண் யார்? அப்பெண்ணை வெளியில் அழைத்துவா" என்றார்.

இருளாயி யம்மாள் திடுக்கிட்டு, "இதென்ன வில்லங்கம்! நாம் நினைத்ததுபோல் இவள் பணத்தைத் திருடியே வந்திருக்கிறாள்" என்று நினைத்து வீட்டுக்குள் சென்று, ஞானம்பிகையின் கையைப்பற்றி இழுத்துவந்து போலீஸ் உத்தியோகஸ்தர் முன் விட்டு, "ஐயா! இவள் என்னோடிருப்பவ ளல்ல! சற்று நேரத்துக்கு முன் இவ்விடம் வந்தாள். இவளைக் குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது" என்று பயந்து சொன்னாள்.

போலீஸ் உத்தியோகஸ்தர்.—(அவள சொல்வதை கவனிக்காமல்) அம்மா! ஞானம்பிகை! நீ எப்படி இந்த ஊருக்கு வந்தாய்? என்னைக் கண்டு ஏன் ஓடினாய்?

ஞானம்பிகை.—அண்ணா! நான் ஒரு காரணத்தால் இவ்வூருக்கு வந்தேன். என்னைத் தாங்கள் கண்டுகொண்டால நான் இருக்கும் இடத்தைத் தாங்கள் தங்கள் சினேகருக்குச் சொல்லிவிடுவீர்களென்று பயந்தே ஓடி ஒளித்துக் கொண்டேன்.

போலீஸ் உத்தியோகஸ்தர்.—நல்லமுத்துப் பிள்ளையும் மீனாக்ஷி ஸுந்தரமும் பிராண சினேகரென்பது நீ அறிந்ததே! நீ வைத்தியலிங்கம் பிள்ளையை நல்வழிக்குக் கொண்டுவந்ததை மீனாக்ஷிஸுந்தரம் எழுதியிருந்தார். தரங்கன்பாடியிலுள்ளவர்களும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கொண்ட ஆச்சரியத்துக்கு அளவில்லை. வைத்தியலிங்கம்

பிள்ளையின் மனைவி உன்னைத் தன் ஸகோதரியைப்போல் பார்த்திருந்தாளாமே! அந்த அம்மாள் உன்னை எப்படி விட்டுவிட்டார்கள் ?

**ஞானும்பிகை.**—அண்ணு! நான் அந்த அம்மாளிடம் சொல்லா மல் சாமியாபிள்ளையவர்கள் அனுப்பிய ரூபாவில் பத்து ரூபா எடுத்துக்கொண்டு இவ்வூருக்கு வந்தேன். முன் ஞெருகால் தங்களைக் கேட்டுக்கொண்டதைச் செய்யாம லிருந்ததுபோல் இப்பொழுதும் செய்யாமல், நான் இவ் வூரிலிருப்பதைத் தங்களுடைய சிநேகிதருக்கு எழுதாம லிருக்க வேண்டுகிறேன்.

**நல்லமுத்துப் பிள்ளை.**— அம்மா! ஞானும்பிகை! நீ நியாயமான தைக் கேட்டால் செய்யலாம். நீ அநியாயமாக ஒருவர் குற்றத்தை உன்மேல் ஏற்றிக்கொண்டு எங்களையும் அதற்குப் பொய் ஸாக்ஷி சொல்லவேண்டு மென்று வேண்டினுல், அதற்கு யாராகிலும் உடன்படுவார்களா ? நீ இவ்வூரிலிருப்பதை அவருக்கு என் தெரிவிக்கவேண் டாம் என்கிருய் ?

**ஞானும்பிகை.**— நான் இவ்வூரிலிருப்பதை அறிந்தால், அவர் கட்டாயப்படுத்தி என்னை அழைத்துக்கொண்டு போய்விடு வார். அவர் அழைத்தால் நான் தடைசொல்ல முடியா தென்பது தங்களுக்குத் தெரிந்ததே! நான மீண்டும் அவ ரோடு சென்ருல், யாவருக்கும் மனவருத்தம் உண்டாகும்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—நீ எனக்கு உன் கருத்தை விளங்கச் சொன்னுலன்றி நீ சொல்வதைச் செய்யமுடியாது (என்று நகைத்தார்).

**ஞானும்பிகை.**—நான் நடந்ததைச் சொல்லுகிறேன். தாங்கள் என்னிருப்பிடத்தைச் சொல்லாமலிருக்கிறீர்களா ?

**நல்லமுத்துப் பிள்ளை.**—நீ கேட்பது நியாயமாக இருந்தால், உன் னிஷ்டப்பிரகாரம் உன்னிருப்பிடத்தைச் சொல்லாம லிருக்கிறேன் என்று வாக்களிக்கிறேன்.

**ஞானம்பிகை.**—அண்ணு ! தங்களுடைய சிநேகர் என்னை மணம்புரிய வேண்டுமென்று எண்ணங்கொண்டு, தன் தாய் தமக்கை முதலானவர்களிடம் சொன்னதில், அவர்கள் ஸம்மதப்படாமல் கூடலூரில் பெண் பார்த்துவந்து வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள். நான் யாவருக்கும் காப்பி கொடுக்கப் போனவள், தங்கள் நண்பர் நான் வருவதை யறியாமல், "ஞானம்பிகையைத் தவிர வேறொரு பெண்ணையும் மணமுடிக்கேன்" என்று சொன்னுர். அந்த ஒரு சொல்மட்டும் என் காதில் விழுந்தது. அவர் என்னிடத்தில் தன் கருத்தை வெளியிட்டிருப்பாராயின், அவருக்கு நியாயத்தை எடுத்துக்காட்டி அவர் எண்ணத்தை மாற்றி யிருப்பேன். என் கருத்தை அவர் தாய் தமக்கை முதலியவர்கள் அறியாததால், என்மேல் குற்றஞ் சொல்லவும் நியாய முண்டு. நானும் அவர் கருத்தை அறிந்தபின் அவர் தமக்கை வீட்டில் இருந்தால் அவர்களுக்கெல்லாம் மனச்சலிப்பு உண்டாகுமென்று ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு, ஒருவரும் அறியாமல் வெளிப்பட்டேன்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா ! ஞானம்பிகை ! பிறருடைய நன்மையைக் கருதி அநியாயமாக நீ துன்பப்படுகிருய் ! நீ சொல்லியதுபோல் உன்னிருப்பிடத்தை அவருக்கு நான் சொல்லவில்லை. என்னையும் இவ்வூருக்கு மாற்றிவிட்டார்கள். ஆனதால் நான் அவரை ஸமீபத்தில் பார்க்கப்போகிறதில்லை. ஆயினும் மீனுக்ஷிஸுந்தரத்தின் குணத்தை நான் நன்ருய அறிவேன். அவர் உன்னை மணம்புரிய வேண்டுமென்று சொல்லுவாரேயாயின், உன்னையே மணம்புரிவார். அது விஷயத்தில் நீ ஸந்தேகங் கொள்ளவேண்டாம். நான் அதைக் குறித்துப் பேசுவதில் பலன் ஒன்று மில்லை. நீ இப்பொழுது எங்கிருக்கிருய் ?

**ஞானம்பிகை.**—அவர் என்னை மணம் புரிந்தால் அவருடைய பந்துமித்திரர்களுக்கு அவமானம் என்பதை நான் அறி-

திருப்பதால், அவர் எண்ணத்துக்கு இடங்கொடுக்கேன் என்பது உண்மையென்று தாங்கள் நம்பவேண்டும். எனக்கு இவ்வூரில் ஒருவரும் தெரியாது. நான் எங்கே போகிற தென்றே யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

நல்லமுத்துப் பிள்ளை.—அம்மா ! நீ எங்கும் போக வேண்டாம். நீ இவ்விடத்திலேயே இருக்கவேண்டும். நான் அவசர மாக ஒரிடத்திற்குப் போகிறேன். திரும்பி வரும்பொழுது உன்னை அழைத்துப் போகிறேன் (என்று நீங்கினார்).

நல்லமுத்து பிள்ளை நீங்கிய உடன், இருளாயி யம்மாள் ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு, "அம்மா ஞானம்பிகை ! நான் உன்னுடைய நற்குணத்தை யறியாமல் உன்மேல் ஸந்தேகப்பட்டேன். நீ என்னை மன்னித்து என்னோ டிருக்கவேண்டும். நான் உனக்குத் தாயைப்போலிருப்பேன். ஆனால் நான் தோசை சுட்டுக் காலங்கழிப்பவள். நீ என்னோ டிருந்தால் என்னைப்போல் நீயும் கஷ்டப்படவேண்டும். போலீஸ் உத்தியோகஸ்தர் உன்னை நல்ல இடத்தில் கொண்டுபோய் வைக்க முடியும். நீ நல்ல இடத்தில் போயிருப்பதே உத்தமம். நீ எங்கே போயிருந்தாலும் அடிக்கடிவந்து உன்முகத்தை எனக் குக் காட்டிக்கொண் டிருக்கவேண்டும்" என்று மீண்டும் முத்த மிட்டாள்.

ஞானம்பிகை —அம்மா ! நான் தங்களோ டிருந்து தங்களுக்கு வேண்டியதைச் செய்துகொண்டிருந்தால், நானும் ஸந்தோ ஷ மடைவேன். நல்லமுத்துப் பிள்ளை வந்தபின் என்ன சொல்லுகிறாரோ பார்க்கலாம். தங்களுக்கு நாயகன் இருக் கிறாரென்ற குறிப்பைக் காட்டத் தங்கள் கழுத்தில் தாலிக் கயிறு இருக்கிறதே.

இருளாயி யம்மாள்.—ஆம் ! மகளே ! எனக்குப் புருடனிருந்தா லும் அவரால் எனக்கு ஓர் பிரயோசனமு மில்லை.

ஞானம்பிகை.—அவர் கூத்தியார் வைததுக்கொண்டு தங்களைக் கவனிக்கிறதில்லைபோல் காண்கிறது. தங்களுக்குக் குழந் தைகள் இல்லையா ?

**இருளாயி யம்மாள்.**—*அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய் (என்று கண்ணீர் உதிர்த்தாள்).*

**ஞானம்பிகை.**—*அம்மா! நான் தங்களுக்குத் துக்கத்தை உண்டாக்கிவிட்டேன். தாங்கள் செய்யும் வியாபாரத்தால் தங்களுக்கு ஒரு நாளைக்கு என்ன கிடைக்கும்?*

**இருளாயி யம்மாள்.**—*வயிற்றைக் கழுவிக்கொள்ளப் போதுமானது கிடைக்கிறது. ஒருவேளை சமைத்து இரண்டு வேளை வைத்துக்கொள்ளுகிறேன். என்னை நீ கேட்டது போல் உன்னை நான் கேட்கவேண்டும்: உனக்குத் தாய் தந்தை இல்லையா?*

**ஞானம்பிகை.**—*எனக்குத் தந்தை இல்லை, தாய் இருக்கிறார்கள். அவர்களும் என்னைப்போல் ஓரிடத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதிக தூரத்தில் இருக்கிறார்கள்.*

**இருளாயி யம்மாள்.**—*ஐயோ! அம்மா! நீ பருவமடைகிற காலம் போல் இருக்கிறதே! உன் தாயார் ஸமீபத்தி லில்லாமல் போய்விட்டாளே?*

**ஞானம்பிகை.**—*வயிற்றை வளர்க்க முதலில் பார்க்கவேண்டியிருக்கிறது. என் தாயாருக்குப் பதில் தாங்கள் இருக்கும் பொழுது எனக்கென்ன குறைவு?*

*அந்த ஸமயத்தில் நல்லமுத்துப்பிள்ளை வந்து, "அம்மா! ஞானம்பிகை! நீ என்னோடு வரவேண்டும்" என்றார். ஞானம்பிகை இருளாயி யம்மாளிடத்தில் விடை கேட்க, அவள் முத்தத்தோடு விடை கொடுத்தாள். நல்லமுத்துப் பிள்ளை அதிக தூரம் ஞானம்பிகையை அழைத்துப் போகாமல், ஒரேவிதமாகக் கட்டியிருந்த இரண்டு மெத்தை வீடுகளில் ஒருவீட்டுக்குள் நுழைந்து, "வரதராஜ பிள்ளை!" என்றழைத்தார். முப்பது வயதென்று விதானிக்கத்தக்க ஓர் ஸுந்தரமான புருடன் ஏன் என்று வெளி*

யில் வந்து, "ஆ ! நல்லமுத்துப் பிள்ளை ! நீரா என்னை அழைத்தது ? யாரோ என்றிருந்தேன்" என்றார்.

நல்லமுத்துப் பிள்ளை.—வீட்டில் வேலைசெய்ய ஒராள் வேண்டுமென்று உம்முடைய மனைவி சொல்லியிருந்ததால், இப்பெண்ணை அழைத்துவந்தேன். உம்முடைய மனைவி எங்கே ?

வரதராஜ பிள்ளை.—அவர்கள் மூன்றும் வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் விரைவில் வந்துவிடுவார்கள். அவர்கள் வரும் பரியந்தம் சற்று உட்காரும். இந்தப் பெண் உமக்குத் தெரியுமா ?

நல்லமுத்துப் பிள்ளை.—ஆம் ! இந்தப் பெண்ணைத் தரங்கன் பாடியில் அறிவேன். இந்தப் பெண் மஹா புத்திசாலி.

வரதராஜ பிள்ளை.—என்ன குலம் ?

நல்லமுத்துப் பிள்ளை.—நம்முடைய குலமே !

அப்பொழுது இருபத்தைந்து இருக்குமென்று தீதாணிக்கத்தக்க வயதுடைய ஒரு ஸுந்தரமான பெண் பிள்ளை வீட்டுக்குள் வந்து, நல்ல முத்துப்பிள்ளைக்கு முகமன் கூறி "நான் தங்களிடம் சொல்லியிருந்ததால் இப்பெணணை அழைத்து வந்தீர்களோ ?" என்றாள்.

நல்லமுத்துப் பிள்ளை.—ஆம் ! அம்மா அகஸ்மாத்தாய் இன்று இப்பெண் கிடைத்தாள். நீங்கள் சொல்லியிருந்தது எனக்கு ஞாபகத்தில் இருந்தமையால், இப்பெண்ணைப் பார்த்தவுடன் உங்களுடைய ஞாபகம் வந்து இங்கு அழைதது வந்தேன்.

மீனும்பாள்.—சம்பளம் என்ன பேசினீர்கள் ?

நல்லமுத்துப் பிள்ளை.—சம்பளம் ஒன்றும் பேசவில்லை. நீங்கள் இஷ்டப்பட்டதைக் கொடுக்கலாம்.

மீனும்பாள்.—இந்தக் கழுதைகள் வருபொழுது பூனையைப் போல் இருக்கிறார்கள். நம்முடைய வீட்டில் சில நாள் சாப்பிட்டால் கொழுத்துப் புலியைப்போல் ஆய்விடுகிறார்கள்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—இந்தப் பெண் நன்றாய் வாசித்தவள். இவளுடைய குணம் வேறுவிதம் என்று பின்னால் அறிவீர்கள். நான் போய்வருகிறேன். அம்மா! ஞானம்பிகை! மீனம்பாள் அம்மாள் சொல்வதுபோல் நடந்துகொண்டால் மேன்மை யடைவாய்.

நல்லமுத்துப் பிள்ளை. ஞானம்பிகையை 'அம்மா' என்று சொல்லியதைக் கேட்ட மீனம்பாள், முகம் சுளித்து, வீட்டில் வேலைசெய்யும் புழுக்கையை 'அம்மா' என்றும் 'ஆத்தா' வென்றும் கூப்பிடவேண்டும்போல் காண்கிறது என்று ஞானம்பிகையைப் பார்த்து, "அடி உன்னை இங்கு 'அம்மா' என்றும் 'தாயே' என்றும் கூப்பிடுவார்கள் இல்லை. அடி உனக்குச் சமையல் செய்யத் தெரியுமா?" என்றுகேட்டாள்.

**ஞானம்பிகை.**—எனக்குச் சமையல் செய்யத் தெரியும்.

**மீனம்பாள்.**—அடி! நீ என்னுடன் பேசும்பொழுதெல்லாம் 'அம்மா' என்று முதலிலாவது பின்னாலாவது சொல்ல வேண்டும். நான் உன்னைச் சமையல் தெரியுமா என்று கேட்டதற்கு, "அம்மா! சமையல் செய்யத் தெரியும்" என்றாவது, "சமையல் செய்யத் தெரியும் அம்மா" என்றாவது பதில் சொல்லியிருக்கவேண்டும். நான் சொன்னதை மறந்துபோகவேண்டாம் ஜாக்கிரதை (என்று வீட்டுக்குள் அழைத்துப்போய்), முதலில் துடைப்பத்தை யெடுத்து வீட்டை யெல்லாம் நன்றாய்ப் பெருக்கிவிடு (என்றாள்).

**ஞானம்பிகை.**—விரைவில் பெருக்கிவிடுகிறேன்.

**மீனம்பாள்.**—அடி இதற்குள் மறந்துவிட்டாயா?

**ஞானம்பிகை.**—நான் என்ன மறந்துவிட்டேன் என்கிறீர்கள்?

**மீனம்பாள்.**—அடி! புழுக்கை! நீ இரண்டு தடவை தப்பிதம் செய்துவிட்டாய்! நான் உன்னை 'அம்மா' என்ற சொல்லை ஒவ்வொரு தடவையிலும் உபயோகித்துக் கொண்டிருக்கச் சொல்லவில்லையா?

ஞானம்பிகை.—ஆம்! அம்மா! இனிமேல் மறக்கமாட்டேன் அம்மா!

என்று தான் கொண்டுபோன மூட்டையை ஓரிடத்தில் வைத்துவிட்டு, வீட்டை யெல்லாம் பெருக்கி, வேறென்ன செய்கிறதென்று கேட்டாள்.

"நீகூட்டிய இடத்தை நான் வந்து பார்க்கிறேன்" என்று மீனும்பாள் சென்று அங்கு மிங்கும் காலால் தடவிப் பார்த்து, "இதென்ன இப்படிப் பெருக்கிறாய்? கால்வைக்க முடியவில்லையே! இங்கெல்லாம் மண் அப்படியே யிருக்கிறது. அங்கே குப்பை அப்படியே கிடக்கிறது. உனக்கு வீடு பெருக்க வே தெரியவில்லை. போதும்! போதும்! நீ அடுப்பில் தீ மூட்டி உலை வார்த்துவை" என்று சொல்லிப் போய்ச் சிலநேரத்தில் திரும்பி வந்து உலையைப் பார்த்து, "அதிகம் நீரை வைத்திருக் கிறாய்! அது எப்பொழுது கொதிக்கும்? கொஞ்சம் குறை; அதிகம் குறைத்துவிட்டாய். அதிகம் வார்த்துவிட்டாய்; போதும் போதும். உலைகொதிக்குமுன் மிளகாயை அரைத்துவிடு" என்று வறுத்த மிளகாயைக் காட்டி அம்மியில் எடுத்துவைக்கச் சொன்னாள். ஞானம்பிகை மிளகாயை எடுத்துவைத்தவுடன், "ஐயையோ! அவ்வளவு ஏன? அரைவாசி எடுத்துவிடு. அதிகம் எடுத்துவிட்டாய். இன்னம் நான்கு மிளகாயை அதனோடு சேர்த்துக்கொள். நான் நான்கு என்றால் ஐந்து வைத்தாய்; ஒன்றை எடுத்துவிடு" என்று கொத்தமல்லிக்கும் அவ்விதமே சொல்லி நீங்க, ஞானம்பிகை சமையல்செய்து வருமுன், "அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை" என்று பல குற்றம் கண்டுபிடித்தாள்.

சமையல் முடிந்த பின், உட்கூடத்தில் இரண்டு இலை போடச் சொல்லி, ஒரு இலையில் பதார்த்தங்கள் அதிகமாகவும் மற்ற இலையில் அற்பமாகவும் பரிமாறச்செய்து, நெய்யை உருக்கிக்கொண்டு வரச்சொல்லி, மீனும்பாள் அதிகமாக வட்டித்திருக்கும் இலையில்தான் உட்கார்ந்தாள். வரதராஜ பிள்ளை மற்ற இலையில் உட்கார்ந்தார். ஞானம்பிகை நெய்யை

கொண்டுவந்தவுடன், "ஒவ்வொரு கரண்டி வார்" என்ருள். ஞானம்பிகை வரதராஜ பிள்ளைக்கு ஒரு கரண்டி வார்த்து மீனம்பாளுக்கு அருகில் நெய்யைக் கொண்டுபோனவுடன், "நீ அதிகம் வார்த்து விடுவாய். வைத்துப்போ" என்று தான் மூன்று கரண்டி நெய் வார்த்துக்கொண்டாள். ஞானம்பிகை அவர்களுக்குப் பரிமாறும்பொழுது, "சாதம் அவனுக்கு அதிகம் வைக்க வேண்டாம். அவனுக்கு ஜீரணமாகாது. அவன் படுத்துக்கொண்டால் அவனுக்கு வைத்தியம் செய்து அவனைப் பார்க்கமுடியாது" என்று சொல்லி மீனம்பாள் வயிறு நிரம்பச் சாப்பிட்டு, வரதராஜ பிள்ளையை அரை வயிறு சாப்பாட்டோடு எழுந்திருக்கச் செய்தாள். இருவரும் சாப்பிட்டெழுந்தபின், சமையலறையில் ஞானம்பிகையை இலை போட்டுக்கொள்ளச் சொல்லித் தானே சென்று இலையில் வட்டிக்கப்போய், சாதம் அதிகம் இல்லாமையைக் கண்டு, "நான் அவனுக்கு அதிகம் போடவேண்டாம் போடவேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே அவனுக்குக் கொட்டிக்கொண்டிருந்தாய்" என்று இருந்த சாதத்தைப்போட்டு, இரசத்தைவிட்டு, நீ சாப்பிட்டெழுந்து பதார்த்தங்களை இராத்திரிக்கு ஆகும்படி பதனமாக வைத்துக்கொள்" என்று நீங்கினுள். ஞானம்பிகை கால் வயிறு சாப்பாட்டோடு எழுந்து, மீனம்பாள் சொல்லியவிதம் பதார்த்தங்களை எடுத்து வைத்துவிட்டு, வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள்.

அடுத்த நாள் காலையில் மீனம்பாள் சொல்லியவிதம் இருளாயி யம்மாளிடத்தில் தோசை வாங்கப்போனுள்.

**இருளாயி யம்மாள்.**—(ஞானம்பிகையைக் கண்டு ஸந்தோஷப் பட்டு), நீ மீனம்பாள் வீட்டிலா இருக்கிருய்! வேலை சுளுவாயிருக்கிறதா?

**ஞானம்பிகை.**—அம்மா! நான் வேலைசெய்ய பயப்படுகிறவளல்ல. ஆயினும் வேலை அதிகம் இல்லை (என்று வேறு விஷயங்களைப் பேசியிருந்து தோசை வாங்கிக்கொண்டு சென்ருள்).

மீனம்பாள் ஞானம்பிகைமேல் குற்றங் கண்டுபிடிக்காத நாள் இல்லை. ஆயினும், ஞானம்பிகை வீட்டுவேலை செய்து முடிந்தபின், இருளாயி யம்மாளிடம் சென்று வார்த்தையாடியும், அந்த அம்மாளுக்கும் ஏதாகிலும் உதவி செய்துகொண்டும் இருந்தாள்.

சில தினங்களுக்குப் பின் மீனம்பாளும் வரதராஜ பிள்ளையும் சாப்பிட்டுக்கொண் டிருக்கும்பொழுது, மீனம்பாள் தன் நாயகனைப் பார்த்து "நான் உன்னை இன்று காலையில் எங்கே போகச சொன்னேன் ? நீ எங்கே போய் எவளைப் பார்த்துக்கொண்டிருந்து வந்தாய் ?" எனறு கேட்டாள்.

வரதராஜ பிள்ளை.—எனக்கு இன்று வேறு வேலையிருந்ததால் நீ சொல்லிய இடத்திற்குப போக முடியாமற் போயிற்று. நாளைக் காலையில் அவசியம் போய் வருகிறேன்.

மீனம்பாள்.—என்ன வேலை இருந்தது ?

வரதராஜ பிள்ளை.—என் சிநேகர் ஒருவர் மோராமாலையொன்று வாங்கவேண்டுமென்று என்னை வரும்படி கேட்டுக்கொண்டார். ஆனதால் அவரோடு போயிருந்தேன்.

மீனம்பாள்.—உன் சிநேகன் மோராமாலை வாங்கவேண்டும் என்றதால் அவனோடு ஒடினாய் ! நான் எத்தனை நாளாக எனக்கு மோராமாலை வேண்டும, எனக்கிருக்கும் பிரெஞ்சு காசுமாலை வேண்டாமென்று சொல்லியிருந்தேன். அதை உன் காதில் போட்டுக்கொள்ளவில்லை யல்லவா ? நான் இங்கே உனக்குப் புழுக்கைபோலிருந்து உனக்கு அவித்துக்கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம் ? நான் உன் கண்ணுக்கு எப்படிக் காணப்படுகிறேனோ தெரியவில்லை.

வரதராஜ பிள்ளை.—பிரெஞ்சு காசுமாலையைவிட மோராமாலையாயிருந்தால் உனக்கு அழகாயிருக்கும் என்றதே யன்றி மோராமாலை வாங்கவேண்டுமென்று நீ எப்பொழுது சொன்னாய் ?

மீனம்பாள்.–உனக்கு ஏதாகிலும் புத்தியிருக்கிறதா இல்லையா?

பிரென்சு காசுமாலையைவிட மோராமாலை அழகாய் இருக்குமென்றால் மோராமாலை வாங்கவேண்டுமென்று சொல்வது போலல்லவா ?

**வரதராஜ பிள்ளை.**—நீ மோராமாலைக்காகக் கவலைகொள்ள வேண்டாம், நான் தேடிப்பார்த்து விரைவில் வாங்கி வருகிறேன்.

**மீனும்பாள்.**—உன் சிநேகனுக்கு வேண்டுமென்றபொழுது அவனுக்கு உடனே மோராமாலை கிடைத்தது. எனக்கு வேண்டுமென்றால் தேடிப்பார்த்து வாங்கவேண்டும் என்கிறாய் !

**வரதராஜ பிள்ளை.**—நீ என்னை 'அவன்' 'இவன்' என்று சொல்வதை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நீ வெளி யாரை அவ்விதம் 'அவன்' 'இவன்' என்றால் சும்மா இருப்பார்களா ? அவர்கள் உன்னை அடி, வாடி, போடி, என்றால் என்ன செய்வாய் ?

**மீனும்பாள்.**—என்னை 'அடி' யென்று சொல்லுகிறவனும் இருக்கிறானு ! அப்படிச் சொல்லுகிறவனையும் உன்னையும் சேர்த்து வைத்துத் துடைபபத்தால அடிப்பேன்.

**வரதராஜ பிள்ளை.**—வேண்டாம் ; நீ வெளியாரால் அவமான மடைவாய். பேசாமலிரு.

**மீனும்பாள்.**—(எழுந்து) என்ன சொன்னுய் ? நான் வெளியாரால் அவமானம் அடைவேனு ! எந்த வாய் அவ்விதம் சொல்லியது ? இந்த வாயா என்று எச்சில்கையால் அவர் வாயில் அடித்தாள்.

வரதராஜ பிள்ளை அடியைப் பட்டுக்கொண்டு எழுந்து கை கால் சுத்திசெய்து, உள் திண்ணையில் உட்கார்ந்தால் இன்னும் அடிப்பாளென்றெண்ணி வெளித்திண்ணையில் போய் உட்கார்ந்தார். அன்றெல்லாம் மீனும்பாள் வரதராஜ பிள்ளையைச் சபித்துக் கொண்டிருந்தாள்.

மற்றொரு நாள் காலை வரதராஜ பிள்ளை ஓர் காய்கறி மூட்டையோடு வீட்டுக்குள் வந்தார். மீனும்பாள் வெளித்

திண்ணையில் உட்கார்ந்து வருவார் போவாரோடு வார்த்தை யாடிக் கொண்டிருந்தவள், வீட்டுக்குள் சென்று அவர் வாங்கி வந்தவைகளைப் பார்த்து "இந்த முற்றிய கத்தரிக்காய்கள் ஏன்? விதை விலைய இருக்குமே." அனேகம் சொத்தையாகவும் இருக்கிறதே!

**வரதராஜ பிள்ளை.**—கத்தரிக்காய்களெல்லாம் பூப்பிஞ்சுகளே! இரண்டொன்று சொத்தையா யிருப்பதை நான் கவனிக்க வில்லை.

**மீனும்பாள்.**—நீ எதை கவனிக்கிறுய்? இந்த வாழைக்காயைப் பார். இது பழமா காயா? உனக்குக் கண் தெரிந்தோ இதை வாங்கி வந்தாய்?

**வரதராஜ பிள்ளை.**—அது பழமல்ல, அது வெளுத்திருப்பதால் உனக்குப் பழுத்ததுபோல் காண்கிறது.

**மீனும்பாள்.**—நீ வாயாடவேண்டாம். இந்த முருங்கைக்காய் என்னத்திற்குப் பிஞ்சாக வாங்கிவந்தாய்? இந்த வாழைத் தண்டைப் பார். இந்த நுனித்தண்டு என்னத்திற்கு? உன்னேடு வைத்துக் கொளுத்தவா?

என்று வாழைத்தண்டையும் முருங்கைக்காயையும் எடுத்து வரதராஜ பிள்ளையின் தலையில் போட்டுக் கண்டவிதம் வசைகூறி நீங்கினுள். ஞானம்பிகை அவைகளை எடுத்துப் பார்த்து, மீனும்பாள் சொல்லிய விதமல்லாமல் வாழைத்தண்டு அடித்தண்டாகவும் முருங்கைக்காய் அதிசம் இளசல்லாமலும் இருப்பதைக் கண்டு, வீணுக வரதராஜ பிள்ளையை நிந்திக்கிறு ளென்றெண்ணி, அவைகளைக் கொண்டுபோய்ச் சமைத்தாள். ஞானம்பிகை தன் வேலை முடிந்த பின் நாள்தோறும் இருளாயி யம்மாளிடம் சென்று, மீனும்பாளைக் குறித்து ஒன்றும் சொல்லா மல், அவளுக்கு வீட்டு வேலையைச் செய்வதோடு, மா இடித் துக் கொடுத்தும் சமையல் செய்து வைத்தும் வந்தாள்.

மீனும்பாள் வீட்டுக்குச் சென்ற சில வாரங்களுக்குப் பின் ஒருநாள் ஞானம்பிகை, நல்லமுத்துப் பிள்ளையைப் பார்த்து

வரவேண்டு மென்று அவருடைய வீட்டடையாளம் கேட்டுக் கொண்டு அவர் வீட்டுக்குச் சென்றான்.

நல்லமுத்துப் பிள்ளை.—(ஞானம்பிகையைப் பார்த்து), அம்மா! ஏது இவ்வளவு தூரம்? (என்று கேட்டார்).

ஞானம்பிகை.—அண்ணா! தங்களைப் பார்த்துப்போக வேண்டு மென்று வந்தேன்.

நல்லமுத்துப் பிள்ளை.—ஏதாகிலும் விசேடம் உண்டோ?

ஞானம்பிகை.—அண்ணா! ஒருவருடைய வீட்டு ஸமாசாரத்தை அவ்வீட்டில் வேலை செய்திருப்பவர்கள் வெளியில் சொல் லுதல் கூடாதாயினும், நான் ஒரு காரணத்தை மனதில் எண்ணி, எங்கள் வீட்டு ஸமாசாரத்தைச் சொல்ல நேர்ந் தது. தங்களுக்கு மீனாம்பாள் ஸமாசாரம் ஏதாகிலும் தெரியுமா?

நல்லமுத்துப் பிள்ளை.—எனக்கு அதிகம் தெரியாது அந்தம் மாள் தன் நாயகனை வசப்படுத்தித் தன் இஷ்டம்போல் யாவும் செய்கிறாளென்று நினைத்திருக்கிறேன்.

ஞானம்பிகை.—ஐயோ! அண்ணா! அவள் தன் நாயகனை வசப்படுத்திக் கொள்ளுகிறதற்குப் பதிலாக அவரை அடித்துத் தன் இஷ்டப்படி நடக்கச் செய்கிறாள். அவ ருக்கு வயிறு நிரம்பச் சாதம் போடுகிறதில்லை யென்றால், அவளிடத்திலிருந்து வேறென்ன எதிர் பார்க்கலாம்? அவள் அடங்காப் பிடாரியாக இருக்கிறாள்.

நல்லமுத்துப் பிள்ளை.—ஐயோ! நான் என்ன கொடுமையைச் செய்து விட்டேன். அவள் தன் நாயகனுக்குச் சாதம் போடாமல் இருப்பாளாயின். உனக்கு வயிறு நிரம்பப் போடுவாளோ? நீயும் அதிகம் இளைத்திருக்கிறாய்!

ஞானம்பிகை.—அண்ணா! தாங்கள் என்னைக் கவனிக்கவேண் டாம். வரதராஜ பிள்ளையைக் கவனியுங்கள். அவர் படுங் கஷ்டத்தைப் பார்க்க என்னால் முடியவில்லை.

நல்லமுத்துப் பிள்ளை.—அம்மா! நீ திருப்பாதிரிப்புலியூரில் பெண்பிள்ளைக்கு ஆண்பிள்ளை வேஷம் போட்டு வைத்

தியலிங்கம் பிள்ளைக்குக் காட்டி அவரை நல்வழிக்குக் கொண்டு வந்தாய். இங்கு ஆண்பிள்ளைக்குப் பெண் பிள்ளை வேஷம் போட்டு மீனும்பாளுக்குக் காட்டி அவளை நல்வழிக்குக் கொண்டுவரப் போகிருயோ (என்று நகைத்தார்).

ஞானும்பிகை.—மீனும்பாளை நல்வழிக்குக் கொண்டு வருமுன் முதலாளினைய இழந்து விடுவோம்போல் காண்கிறது.

நல்லமுத்துப் பிள்ளை.—அம்மா! நீ சொல்லுகிறது ஆச்சரியத்தைத் தருகிறது.

ஞானும்பிகை.—அண்ணு! நான் கைவிரல் பருமனுள்ள நூல் கயிற்றை அவர் கையி லிருக்கக் கண்டேன். ஆனதால் எனக்கு ஸந்தேகம் அதிகம உண்டாகிறது. நாம் ஜாக்கிரதையாக அவரைப் பாாசதுக்கொள்ளாமற் போனுல், ஏதாவது ஆபத்து நேரிடும் (என்று நெடுநேரம் பேசியிருந்து நீங்கினுள்).

## 10—ம் அத்தியாயம்

ஞானும்பிகை கும்பகோணத்தில் வரதராஜ பிள்ளை வீட்டை யடைந்த ஒரு மாதத்துக்குப் பின், மீனும்பாள் ஒரு நாள் மத்தியானம் கட்டிலிற் படுத்துக்கொண்டு ஞானும்பிகையை அழைத்து விசிறச்சொல்லி, அவளிடம் பல விஷயங்களைக் குறிதது வாாத்தையாடிக் கொண்டிருந்து நித்திரை போனுள். பின் எழுநது ஞானும்பிகையைப் பார்த்து, "அடி! உனக்குத் தமிழ் வாசிக்கத் தெரியுமெனறு நல்லமுததுப் பிள்ளை சொன்னுரே! அது உண்மைதானு?" என்று கேட்டாள்.

ஞானும்பிகை.—ஆம்! அம்மா! கொஞ்சம் தெரியும்.

மீனும்பாள்.—அடி! நீ என்ன வாசித்திருக்கிருய்? நானும் சிறு வயதில் முதல்பாட புத்தகம் முற்றிலும் வாசித்திருந்தேன். உனக்கு அதைவிட அதிகம் தெரியுமா?

ஞானம்பிகை.—(நகைத்து) அம்மா! எனக்கு அதிகம் தெரியாது. நானும் முதல் பாடத்தை வாசித்திருக்கிறேன்.

மீனம்பாள்.—அடி! உன்னிடத்தில் ஏதாகிலும் புத்தகம் இருக்கிறதா?

ஞானம்பிகை.—அம்மா! என்னிடத்தில் புத்தகங்கள் அதிகம் இல்லை! இரண்டொன்றே இருக்கிறது.

மீனம்பாள்.—அடி! உன்னிடத்தி லிருக்கிற புத்தகத்தைக் காணபி (என்று எழுந்து ஞானம்பிகையோடு சென்றாள்).

ஞானம்பிகை காலியாகச் சுவரிலிருந்த அலமாரியைத் திறந்தாள். அதில் சில புத்தகங்கள் இருப்பதை மீனம்பாள் கண்டு "அடி உன்னிடத்தில் புத்தகங்கள் அதிகம் இருக்கிறதே" என்று அவைகளை எடுத்துப்பார்த்து, "அடி இதெல்லாம் இங்கிலீஷ் புத்தகமாக இருக்கிறதே; இது யாருடையது? தமிழில் ஒன்றே இருக்கிறது. அதுவும் முதற்பாடம் அல்ல. தி-ரு-க்-கு-ற-ள் என்றிருக்கிறது அடி! இதென்ன புத்தகம்?

ஞானம்பிகை.—அம்மா! இவ்விடத்திலிருக்கும் புத்தகங்களெல்லாம் என்னுடையதே! அம்மா! தாங்கள், கையிலெடுத்த தமிழ்ப்புத்தகம் 'திருக்குறள்.'

மீனம்பாள்.—அடி! இது என்ன கதை? அல்லியரசாணிமாலை பஞ்சபாண்டவர் வனவாஸம், மதுரைவீரன் கதை இவைகளைப்போல் இருக்குமா?

ஞானம்பிகை—அம்மா! இது கதையல்ல! இதில் உலகத்திலுள்ளவர்கள் நடக்கவேண்டிய முறையைச் சொல்லியிருக்கிறது.

மீனம்பாள்.—அடி! உலகத்திலுள்ளவர்கள் எவ்விதம் நடக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறது? ஒன்றிரண்டை வாசி பார்க்கலாம்.

ஞானம்பிகை.—புத்தகத்தைத் திறந்து,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு."

என்ற குறளை வாசித்தாள்.

**மீனம்பாள்.**—அடி ! அப்படி வாசித்தால் எனக்கொன்றும் தெரிய வில்லை ! அப்படியென்றால் என்ன ?

**ஞானம்பிகை.**—அம்மா ! ஒருதொழிலைச் செய்யுமுன்னே, நாம் இவ்விதம் செய்தால் அது எவ்விதம் முடியும் என்று யோசித்தே செய்யவேண்டும். அவ்விதம் யோசித்து முடிவை யறியாமல் செய்வது பெருங்குற்றம் என்று சொல்லியிருக்கிறது.

**மீனம்பாள்.**—அடி ! இன்னும் அது எனக்கு நன்றாக விளங்க வில்லை.

**ஞானம்பிகை.**—அம்மா ! நான் அதை ஓர் உவமானத்தில் ஏற்றிச் சொல்லுகிறேன். ஒருவன் தனக்குப் பெருநிதி இருப்பதால் தனக்குப்பின் அந்நிதியை வைத்தாளப் புத்திரப்பேறு வேண்டுமென எண்ணி ஒரு பெண்ணை மணம் புரிந்தான். பின் அவன் முதல் கொண்ட எண்ணத்தை மறந்து, தன் மனைவியைத் துன்பப்படுத்திக்கொண்டே வந்தான். அவள் தன் நாயகன் கொடுக்குந் துன்பத்தை ஸகிக்காமல் ஒரு குளத்தில் விழுந்திறந்தாள். நாயகன் முதல்கொண்ட எண்ணத்தை நினைத்து, நாம் இவ்விதம் கொடுமை செய்தால் இவ்விதம் முடியும் என்று யோசித்துப் பாராமல் செய்ததாலல்லவா இவ்விதம முடிந்தது என்றெண்ணினன். ஆனதால், ஒன்றைச் செய்யு முன்னே நாம் இவ்விதம் செய்துகொண்டிருந்தால் இது என்ன முடிவைக் கொண்டுவரும் என்று யோசித்துச் செய்யவேண்டும் என்பதே.

**மீனம்பாள்.**—அடி ! இன்னம் ஒன்றிரண்டு வாசித்துப் பொருள் சொல்.

**ஞானம்பிகை.**—புத்தகத்தை யெடுத்து,

"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை."

என்றதை வாசித்து, அம்மா ! ஒரு நாயகன் தன் மனைவியிடத்துச் சென்று, "நான் ஊருக்குப்போய் விரைவில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்ட பொழுது அவள் தன் நாயகனைப் பார்த்து, "தாங்கள் என்னை விட்டுப் போகாமலிருக்கிற ஸமாசாரமாக இருந்தால் அதை என்னிடத்தில சொல்லுங்கள். அப்படிக்கில்லாமல் என்னை விட்டுப் பிரிந்துபோய் விரைந்து வருவதை அக்காலத்தில் உயிரோடிருப்பவளிடம் சொல்லுங்கள்" என்றாள்.

**மீனும்பாள்** — அடி ! அவள் ஏன் அவ்விதம் சொன்னாள் ?

ஞானம்பிகை.—அம்மா ! தனக்கு உயிருக்குயிராயிருக்கும் நாயகன் தன்னைவிட்டுப் பிரிந்தால் அவள் அப்பொழுதே இறந்துபோவாளென்று, அவள் நாயகன் அவள் இறந்தபின் வரப்போகிறதால் அதை அவளிடத்தில் சொல்வது பிரயோஜனமில்லை யென்றும் அவ்விதம் சொன்னாள்.

**மீனும்பாள்**.—நாயகன் பிரிந்தால் உடனே இறந்து விடுகிறார்களா ? நாயகன் இறந்தபின்னும் உயிரோடு எத்தனையோ கைம் பெண்கள் இருக்கிறார்களே (என்று நகைத்தாள்).

ஞானம்பிகை.—ஆம் ! அம்மா! அது அவர்கள்மேல் குற்றமல்ல, முன்காலத்தில் புருடன் இறந்தால் பெண்டாட்டிகள் உடன் கட்டை ஏறினார்களென்று தாங்கள் கேட்டதில்லையா ? உடன் கட்டையேறும் வழக்கம் கூடாதென்று துரைத்தனத்தார் நிறுத்திவிட்டபின் கைம்பெண்களாய் உயிரோடிருக்க நேர்ந்தது. நாயகன் இறந்தபின் நாயகி உயிரோடு இருப்பதில் என்ன பலன் ? அவள் நல்ல நகைகளை அணிந்து கொள்ள முடியுமா ? மணமுள்ள புஷ்பங்களைச் சூட்டிக்கொள்ள முடியுமா ? மற்றும் தன்னை அலங்கரித்துக் கொள்ள முடியாதே வெளியிற் சென்றாலும் அவசகுனமாக எண்ணுகிறார்களே ! ஆனதால் அவர்கள்

உயிரோடிருப்பதைவிட இறந்துபோகிறது உத்தமமென்று உடன்கட்டை ஏறினார்கள்.

**மீனம்பாள்.**—நன்றாகத்தான் எழுதி யிருக்கிறது. இன்னம் ஒன்று வாசி !

மீனம்பாள் 'அடி' என்று சொல்லாமல் விட்டாளே என்று ஞானம்பிகை அதிசயப்பட்டு,

"தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்று வாசித்து, அம்மா ! ஒரு தெய்வத்தையும் வணங்காமல் தன் கணவனையே தெய்வமாகப் பாவித்து நித்திரையிலிருந்து எழுந்த உடன் வணங்குபவள் மழை பெய்யென்று சொன்னால் மழை பெய்யும் என்று சொன்னாள்.

**மீனம்பாள்.**—(தன் தேகங் குலுங்க நகைத்து) நாம் வேறு கோவிலுக்குப் போகவேண்டியதில்லைபோல் காண்கிறது. சாமி பூதமெல்லாம் புருடனே என்று நினைத்து வணங்கினால், அவனே பெண்டாட்டிக்கு வேண்டியதெல்லாம் கொடுப்பான் அல்லவா (என்று மீண்டும் நகைத்தாள்).

ஞானம்பிகை.—ஆம் ! அம்மா ! கிடைக்கும் தாங்கள் நன்றாய் யோசித்துப் பார்த்தால், தங்களுக்கு அது உண்மையென்று விளங்கும். ஒருவன் ஒரு கூலிக்காரனை அழைத்து, "என்னுடைய நிலத்தில் மேடிருக்கிறது. அம்மேட்டை வெட்டி விட்டால் உனக்கு இவ்வளவு கொடுப்பேன்" என்று சொன்னான். கூலிக்காரன் ஸம்மதப்பட்டு, தன்னோடு மற்றொரு பெண்பிள்ளையைச் சேர்த்துக்கொண்டு, அவன் மேட்டை வெட்டவும் அவள் அதைக் கொண்டுபோய்க் கொட்டவும் ஆக இருவரும் சேர்ந்து அவவேலையை முடித்து விட்டபின், கிடைத்த கூலியை இருவரும் ஸரிபங்கு போட்டுக்கொள்வதுபோல், நாம் நற்கதி யடையவேண்டி சன்மார்க்கத்திலிருந்து சாத்திரங்களில் சொல்லியவண்ணம் புருடனும் பெண்டாட்டியுமாகச் செய்துகொண்டிருந்தால், அவர்க

னுடைய தேக ஸௌகரியத்தைக் கவனிக்க வேறொருவர் வேண்டுமே ; அதற்கென்ன செய்கிறது. ஆனதால் மண் வெட்டுதலும் மண்கொட்டுதலும் வெவ்வேறு தொழிலாக இருந்தாலும், மண் வெட்டியவனுக்குக் கிடைத்த கூலியே மண்கொட்டியவனுக்கும் ஸரிபங்கு கிடைத்ததுபோல், நாம் நம்முடைய நாயகனே நமக்கு தெய்வமென் றெண்ணி அவருடைய தேக ஸௌகரியத்துக்கு வேண்டியதைச் செய்துகொண் டிருப்போமாயின், அவர் தேடும் புண்ணியத்தில் பாதி நம்முடையதல்லவா ? ஆனதால் பெண்கள் ஒன்றையும் கருதவேண்டியதில்லை. நாயகனையே தெய்வமென எண்ணி வணங்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறது.

**மீனும்பாள்.**—அம்மா ! ஞானம்பிகை ! நீ நன்றாய் வாசித்திருக்கிறாய். நானும் உன்னிடத்தில் வாசித்துக்கொள்ளுகிறேன். நீ இங்க்லிஷ் புத்தகங்களை உன்னுடைய தென்றாயே ! உனக்கு இங்க்லிஷும் தெரியுமா ?

**ஞானம்பிகை.**—ஆம் ! அம்மா ! கொஞ்சம் தெரியும்.

**மீனும்பாள்.**—இங்க்லிஷும் தெரியுமா ! எவ்விதம் கற்றுக் கொண்டாய் ? உன் தாய்தந்தை பணக்காரராய் இருந்து பின் ஏழையாய்ப் போய்விட்டார்கள்போல் காண்கிறது.

**ஞானம்பிகை.**—இல்லை அம்மணி ! நாங்கள் எப்பொழுதும் ஏழைகளே ! (என்று தன் கல்வி கற்றுக்கொண்ட விதத்தைச சொன்னாள்).

மீனும்பாள் கேட்டு ஆச்சரியபபட்டு, நான் சற்று நேரம் படுத்திருக்க வேண்டுமென்று போய் மீண்டும் படுத்துக்கொண்டாள். ஞானம்பிகை புத்தகங்களை வைத்துவிட்டு, “ இனறு நாம் போட்ட அஸ்திவாரம பலமாகும்படி செய்யவேண்டும். நம்மை ‘ அடி ’ ‘ அடி ’ என்று அழைத்துக்கொண்டிருந்தவள் இன்று நம்மை ‘ அம்மா ’ என்று அழைத்திருக்கிறாள் ” என்று தனக்குள ஸந்தோஷப்பட்டிருந்தாள்.

மறுநாள் மீனும்பாள், வெறுமையான சிறிய புட்டி யொன்று கையில் எடுத்துவந்து, "அம்மா! ஞானம்பிகை! இந்த புட்டி என்னவென்று பார். இதில் என்னமோ இங்க் லிஷில் அச்சடித்த காகிதம ஒட்டியிருக்கிறது" என்ருள்.

ஞானம்பிகை.—(அதை வாங்கிப் பார்த்து ஆச்சரியப்பட்டு) இதேது? எங்கிருந்தது? இதிலிருந்தது பாஷாணம் என் றெழுதியிருக்கிறதே.

மீனும்பாள்.—(திடுக்கிட்டு முகம் வெளுத்து), பாஷாணமா! (என்று பெருமூச்செறிந்து) சிலவேளை இந்த புட்டி அவ ருக்கு எங்காகிலும் கிடைத்திருக்கும்; என்னிடத்தில் முதல்பாட புத்தகம் இருந்தது. அதை அவர் புத்தகங் களோடு வைத்திருந்தேன். அதைத் தேடிப் பார்க்கப் போகுபொழுது இந்த புட்டியும் அங்கிருந்தது. உனக்கு இங்க்லிஷ் தெரியும் என்றதனல் புட்டியின்மே லிருக்கும் காகிதத்தில் எழுதியிருப்பதைப் படிக்கச் சொன்னேன்.

ஞானம்பிகை.—அம்மா! தங்களுடைய முதல்பாட புத்தகம் அகப்பட்டதா?

மீனும்பாள்.—அகப்பட்டது (என்று புட்டியைக் கொண்டு போனுள்).

"மீனும்பாள் நம்மோடு அன்பாகப் பேசுவதோடு வரத ராஜ பிள்ளையையும் 'அவன்' 'இவன்' என்று சொல்லாமல் 'அவர்' 'இவர்' என்று சொல்லிக்கொண்டிருக்கிருள்" என்று ஞானம்பிகை ஸந்தோஷப்பட்டிருந்தாள். அன்றுமுதல் ஞானம் பிகை சொல்லிக்கொடுக்க மீனும்பாள் வாசித்துக்கொண்டிருந் தாள்.

ஒரு வாரத்துக்குப்பின் அடுத்த வீட்டைக் கூட்டுகிற சத்தத்தை ஞானம்பிகை கேட்டு, "யாரோ அடுத்தவீட்டுக்குக் குடித்தனம் வருகிருற்போ லிருக்கிறது" என்று மீனும்பாளிடம் சொன்னுள்.

மீனும்பாள்.—அந்த வீட்டையும் இந்த வீட்டையும் ஒருவரே தன் இரண்டு பிள்ளைகளுக்காகக கட்டி, இரண்டு பிள்ளை

களையும் இரண்டு வீட்டிலிருக்கச் செய்திருந்தார். தங்கள் - தங்கள் வீட்டுப் பெண்பிள்ளைகள் ஒருவர் வீட்டுக்கு மற்ற வர் உட்புறமாகப் போக உள்கதவு வைத்திருந்தார்கள் ஸகோதரர்க ளிருவரும் காலம் சென்றூர்கள். பெண்பிள் ளைகள் இரண்டு வீட்டையும் விற்றுத் தங்கள் தங்கள் தாய் வீடு போய்ச் சேர்ந்தார்கள். நாங்கள் இந்த வீட்டை வாங் கிக்கொண்டோம். மற்றொருவர் அந்த வீட்டை வாங்கித் தாங்களே அதில் நெடுநாள் குடியிருந்து ஸமீபத்தில் காலி செய்து போய்விட்டார்கள். இப்பொழுது யார் வரப் போகிறூர்களோ" என்று எழுந்து போய்க் கதவிடுக்கால் பார்த்தாள். ஒருவரும் காணுமையால் தெருவிற் சென்று அவ்வீட்டைப் பூட்டிக்கொண்டிருக்கும் பெண் பிள்ளையை அழைத்து, "யார் அந்த வீட்டுக்கு வரப்போகிறூர்கள்?" என்று கேட்டாள்.

அவள் "எனக்குத் தெரியாது. வீட்டைக் கூட்டிவரச் சொன்னூர்கள். நான் கூட்டிவிட்டுப் போகிறேன்" என்று நீங்கினுள்.

**ஞானம்பிகை.**—அந்தக் கதவை எடுத்துவிட்டுச் சுவர் வைத்து விட்டால் நன்மையல்லவா?

**மீனும்பாள்.**—ஆம்! நான் அந்த வீட்டிலிருந்தவர்களிடம் அநேக முறை சொன்னேன். அவர்கள் இன்னம் அதை மூடாம லிருக்கிறூர்கள். முன் சொந்தக்காரர்கள் இருந் தார்கள். இப்பொழுது குடித்தனக்காரர் வருவதால் மூடி விடச் சொல்லவேண்டும்.

**மீனும்பாள்.**—நாம் மூடிவிட்டால் என்ன?

**ஞானம்பிகை.**—அந்தச் சுவர் அவ்வீட்டைச் சேர்ந்தது; ஆன தால் அவர்களுடைய செலவில் மூடவேண்டும்.

அன்றிரவு சாப்பாட்டுக்குமேல் இருவரும் உட்கார்ந்து வாசித்துக்கொண் டிருக்கும்பொழுது, ஞானம்பிகை மீனும்பா ளைப் பார்த்து, "அம்மா! ஐயா அவர்கள் நாலைந்து நாளாக

சரியாகச் சாப்பிடுகிறதில்லை. இப்பொழுதும் ஒன்றும் சாப்பி டாமல் எழுந்துபோனார்" என்றாள்.

**மீனம்பாள்.**—அவருக்கு என்ன கோபமோ! அவருக்கு எப் பொழுதாகிலும் பிணக்கு வருகிறது உண்டு. 'குதிரை காய்ந்தால் கொள்ளை எதிர்பார்க்காது வைக்கோல் தின் னும்' என்பதைக் கேட்டதில்லையா (என்று நகைத்தாள்).

**ஞானம்பிகை.**—இன்று மத்தியானம் அவர் முகத்தைப் பார்த் தேன். அவர் அதிக மனவருத்தத்தோடு இருந்தாற்போல் தோன்றியது.

இங்ஙனம் சொல்லிக்கொண் டிருக்கும் பொழுது, ஏதோ திடீரென்று விழுந்ததுபோல் சத்தங்கேட்டு ஞானம்பிகை எழுந்தோடிப் போய்க் கதவிடுக்கில் பார்த்து, "அம்மா! அம்மா! விரைவில் வாருங்கள்" என்றாள். மீனம்பாள் ஓடிப்போய்க் கதவிடுக்கில் பார்த்து, "ஐயோ! அம்மா! நான் என்ன செய்யப் போகிறேன்?" என்று கதவைத் திறந்துபார்த்து, அது உள் தாழ்ப்பாள் இட்டிருக்கக் கண்டு, தெருவழியாக அவ்வறைக்குள் ஓடி, அவ்வறையில் மெழுகுதிரி எரிந்துகொண்டிருக்கும் வெளிச்சத்தால் வரதராஜ பிள்ளை கீழ்விழுந்து பிரக்ஞை தப் பிக் கிடப்பதையும் பாஷாண புட்டிகள் இருப்பதையும் கண்டு, "ஐயோ! என துரையே! என்ன செய்துவிட்டீர்கள்? பாஷாண புட்டிகள் இரண்டு வெறுமையாக இருக்கின்றன; மற்றொன்று அரைவாசி குறைகிறதே. நான் இனி என்ன செய்யப்போகி றேன்!" என்று வரதராஜ பிள்ளையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "தாங்கள் என்ன சாபபிட்டு விட்டீர்கள்? அம்மா! ஞானம்பிகை! நீ ஓடிப்போய வைத்தியரை அழைத்துவா" என்று கெஞ்சினாள். ஞானம்பிகை தன் கைகால்கள் உதற ஓடினாள். அவள் நீங்கியபின், மீனம்பாள் முகத்தில் அறைந்து கொண்டு கண்ணீர் ஆறாக வோட அழுது, "என் அன்பே! என் ஆருயிரே! என்னை நாதியற்றவளாக்கவா இவ்வேலை யைச செய்துவிட்டீர்? நான் என் இவரைக் கொடுமை யாக நடத்தினேன்? ஞானம்பிகை சொன்னதுபோல்

இவர் இறக்கத் துணிந்தாரே ! ஐயா ! என் கொடுமையை ஸகிக்காமலோ இறக்கத் துணிந்தீர் ? நான் கொடும்பாவி யென்று என்னோடிருக்க இஷ்டமில்லாமலோ என்னைவிட்டுப் போகத் துணிந்தீர் ? ஐயோ ! உம்முடைய எண்ணத்தை ஏன் என்னிடம் சொல்லாம லிருந்தீர் ? நீர் சொன்னாலும் நீர் சொல்வதை நம்பாமல் தங்களை முன்போலவே நடத்துவேன் என்றே சொல்லாம லிருந்தீர் ?'' என்று முகத்தி லறைந்துகொண்டும் மார்பிலடித்துக்கொண்டும் கடகடவென்று புரண்டு புரண்டு அழுதுகொண்டிருந்தாள். வெளியில் சென்ற ஞானம்பிகை, நல்லமுத்துப் பிள்ளையையும் வேறொருவரையும் அழைத்து வந்துவிட்டாள்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—(மீனும்பாளைப் பார்த்து) என்ன ? என்ன ? இதென்ன புட்டிகளின்மேல் பாஷாணம் என்றெழுதியிருக்கிறதே ! ஐயா ! வைத்தியரே ! பாருங்கள் ! பாஷாணத்தைச் சாப்பிட்டுவிட்டார்போல் காண்கிறது (என்று வைத்தியருக்குச் சொல்லிவிட்டு), அம்மா மீனும்பா ! என்ன ஸமாசாரம் ! ஏதாகிலும் உங்களுக்குள் மனஸ்தாபம் உண்டா ? இது ஒரு பெரிய வியாஜ்யமாக முடியும்போ லிருக்கிறதே என்று பயப்படுகிறேன்.

**வைத்தியர்.**—(கைநாடியைப் பார்த்து) இவர் பாஷாணத்தைச் சாப்பிட்டிருக்கிறார். எப்பொழுது சாப்பிட்டார் என்று உங்களுக்குத் தெரியுமா ?

**மீனும்பாள்.**—ஐயா ! சாமி ! என் புருடனைக் காப்பாற்றிவிடுங்கள் (என்று கெஞ்சினாள்).

**ஞானம்பிகை.**—ஐயாவே ! அவர் எப்பொழுது சாப்பிட்டார் என்று எங்களுக்குத் தெரியாது. இவ்வீட்டில் திடீர் என்று விழுந்த சத்தங் கேட்டு, நாங்கள் கதவிடுக்கில் பார்த்து இவர் கீழ் விழுந்திருக்கக் கண்டோம்.

**வைத்தியர்.**—ஆபத்துபோல் காண்கிறது. இவர் சாப்பிட்டு நெடுநேர மாய்விட்டதால் பாஷாணம் அதனுடைய வேலையைச் செய்துவிட்டது. நான் என்ன செய்கிறதென்று

தெரியவில்லை. நீ விரைவில் சென்று காப்பி வைத்துக் கொண்டுவா (என்று ஞானம்பிகையை அனுப்பிவிட்டு, ஒரு துண்டு கடுதாசியை எடுத்து அதில் சிலதை எழுதி நல்லமுத்துப் பிள்ளையிடம் கொடுத்து), இதில் கண்டதை விரைவில் வாங்கிவரச் செய்யுங்கள்.

நல்லமுத்துப் பிள்ளை, வைத்தியர் கொடுத்த கடுதாசியைவாங்கி வெளியிற் சென்று, ஒரு போலீஸ் சேவகனிடம் இரண்டு ரூபாவோடு அக்கடுதாசியைக் கொடுத்து, அதில் கண்டதை வாங்கிவரச் சொல்லி வீட்டுக்குள் வந்தார்.

**வைத்தியர்.**—இவர் பாஷாணம் ஏன் சாப்பிட்டார்?

**நல்லமுத்துப் பிள்ளை.**—அதை யறியவே நான் மீனும்பாளைக் கேட்டேன். அந்த அம்மாள் ஒன்றும் சொல்லாம லிருக்கிறார்கள். இதோ ஞானம்பிகை காப்பியோடு வந்திருக்கிறாள். தாங்கள் காப்பி கொடுங்கள்.

வைத்தியர் காப்பியை வாங்கி, வரதராஜ பிள்ளை வாயில் ஊற்ற வாயைத் திறந்து, வாய் கிட்டிவிட்டதே என்று சொல்லி, நல்லமுத்துப் பிள்ளையும் தானுமாகத் தூக்கி உட்கார வைக்கப் பார்த்து, அவர் விறைத்துப்போயிருக்க உட்காரவைக்க முடியாமல், அவர் தலைமாட்டில் ஒரு கடிதம் இருக்கக் கண்டு, அது என்னவென்று நல்லமுத்துப் பிள்ளை வாசித்துப் பார்த்தார். "ஐயா! வைத்தியரே! தாங்கள் அவரை ஒன்றும் செய்யவேண்டாம். அவர் எழுதியிருக்கிறதை வாசித்தபின் நாம் ஏதாகிலும் செய்வது நியாயமல்ல. அவர் விவாகம் செய்துகொண்டபின் தன் மனைவியால் படும் துன்பத்தைத் தன்னால் ஸகிக்கமுடியாமல் தான் இறப்பதே மேலென்றெண்ணிப் பாஷாணம் சாப்பிட்டுவிட்டதாகவும் தன்னை வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் அறுக்காமல் தகனம் செய்துவிட வேண்டுமென்றும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிறார். இதைப் பார்த்தபின் நாம் என்ன செய்கிறது?"

**மீனும்பாள்.**—ஐயோ! சாமி! நான் தெரியாமல் அவரைக்

கொரேமாக நடத்திவிட்டேன். நான் இனிமேல் அவரைத் தெய்வமாகப் பாவித்து அவர் சொன்ன சொல்லைத் தட்டாமல் நடக்கிறேன். அவரைக் காப்பாற்றிவிடுங்கள் (என்று வைத்தியர் காலைப் பிடித்துக்கொண் டழுதாள்).

**வைத்தியர்.**—அம்மா ! நீ நாளெல்லாம் அவரைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்தாய். அவர் முடிவுக்கு வந்திருக்கும் பொழுது நாங்கள் என்ன செய்ய முடியும் ?

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா ! வரதராஜ பிள்ளைக்கு ஒரு சொத்து மில்லாமல் நீயா உன் தாய்வீட்டிலிருந்து எல்லாம் கொண்டுவந்தாய் ?

**மீனும்பாள்.**—ஐயோ ! நான் அதிகம் சொண்டுவரவில்லையே ! எல்லாம் என்னுடைய நாயகனுடையதே (என்றழுதாள்).

**வைத்தியர்.**—உன்னுடைய நாயகனுக்குச சொத்திருந்துமா நீ இவ்விதம் அவரைக் கேவலமாக நடத்தினுய் ? (என்று கோபமாகக் கேட்டார்).

**மீனும்பாள்.**—எனக்கு அவர்மே லிருந்த ஆசையால் அவரை அவ்விதம் நடத்தினேன். ஐயோ அவா அதைக் குற்றமாகக் கொண்டாரே ! இனி என்ன செயவேன் (என்று கதறிஞள்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஐயா ! வைத்தியரே ! நான் போலீஸ் உத்தியோகஸ்தன். நான் இதைப் பார்த்தபின் மறைக்க முடியாது. மறைத்தால் என் உத்தியோகத்துக்கே கெடுதி வரும். நான் இவரை உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகவேண்டும். தாங்களிருந்து, தாஙகள் கொண்டு வரச்சொன்ன மருந்து வந்தால், அதைக் கொடுத்துப் பாருங்கள். நான் போலீஸ் சேவகரை அழைததுவருகிறேன் (என்றெழுந்தார்).

**மீனும்பாள்.**—(ஓடி அவர் காலைப் பிடித்துக்கொண்டு) அண்ணு! அண்ணு ! என் நாயகனை குணப்படுத்திப் போங்கள் (என்று கெஞ்சி யழுதாள்).

நல்லமுத்துப் பிள்ளை.—அம்மா! நீ என் காலை விடு! நீ உன் புருடனுக்குச் செய்யவேண்டிய கடமையை விட்டு நடந்ததுபோல், நான் என் எஜமான் சொல்லை மீறி நடக்கமுடியாது. நீ செய்த கொடுமையே உன் புருடனைக் கொன்று விட்டது. நாங்கள் என்ன செய்ய முடியும்?

மீனம்பாள்.—நான் அவருக்கு இனிமேல் புழுக்கைபோலிருந்து பணிவிடை செய்வேன். என் சொல்லை நம்பி அவரைக் காப்பாற்றிவிடுங்கள் (என்றழுதாள்).

நல்லமுத்துப் பிள்ளை.—'புருடன் இறந்தபின் பெண்டாட்டிக்கு புத்தி வந்தது' என்று சொல்வதுபோ லிருக்கிறது. வரதராஜ பிள்ளைக்கு வாய் கிட்டிவிட்டதே! கைகால்களையெல்லாம் மடக்கமுடியாம லிருக்கிறதே! நாங்கள் எவ்விதம் உன் புருடனைக் குணப்படுத்துகிறது?

மீனம்பாள்.—அண்ணா! அண்ணா! அவ்விதம் சொல்லாதீர்கள். நீங்கள் பாக்குவெட்டியாலாகிலும் வாயைத் திறந்து மருந்து கொடுங்கள். நான் அவருக்கு அடிமையாக இருந்து அவருடைய வார்த்தைக்கு மறுவார்த்தை யாடாமலிருக்கிறேனே. அண்ணா! என் துக்கத்தைக் கண்டு என் சாமியைக் காப்பாற்றாமல் போய்விடுகிறீர்களே! தாங்கள் போய்விட்டால் ஆர் துணை (என்றழுதாள்).

வைத்தியர்.—வரதராஜ பிள்ளைக்கு குணமாகும் பரியந்தம் அவ்விதம் சொல்லுவார்கள். அவர் குணமாகி எழுந்துவிட்டால், பழைய பாட்டைப் பாடுவார்கள். அது எவ்விதமானாலும் ஸரி. நாம ஒன்றைச் செய்யலாமென்றால் காரியம மிஞ்சிப் போயவிட்டதே! மருந்துக்குப் போனவனும் இன்னும் வரவில்லை. எல்லாம் அந்தம்மாளுக்குக் கெடுதியாகவே இருக்கிறது.

என்று பாக்குவெட்டியின் உதவியால் வாயைத்திறந்து சாப்பியை ஊற்றினார். கடக் கடக் என்ற சத்தத்தோடு தண்ணீர் உள்ளுக்கு இறங்கிக்கொண்டிருந்தது.

**நல்லமுத்துப் பிள்ளை** —அம்மா ! வரதராஜ பிள்ளை உன்னிடத்தில் இமிசைபடாமல் பாஷாணம் சாப்பிட்டு இறந்து போவதே உத்தமம் என்றிருக்க, நாங்கள் அவரை குணப் படுத்தி மீண்டும் அவரை உன்னிடத்தில் இமிசைபட விடுவது மஹாபாதக மல்லவா ?

**மீனும்பாள்.**—அண்ணா ! ஞானம்பிகை சொன்ன மூன்று சொல்லும் என்னை ரம்பம்போட் டறுத்துக்கொண்டிருக் கிறது ! தாங்கள் என் வார்த்தையை நம்பி அவரை குணப் படுத்துங்கள். மருந்து வருமுன் இன்னம் கொஞ்சம் ாப்பி கொடுங்கள் (என்று கெஞ்சினள்).

**வைத்தியர்.**—காப்பி குடித்து வாந்தி யெடுத்தால் நல்லதென்று காப்பி கொடுத்தேன். அவருக்கு வாந்தி வரவில்லையே (என்று வாயில் கொஞ்சம் கொஞ்சமாகக் காப்பி ஊற்றிக் கொண்டிருந்தார்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா ! யாவரும் சொன்னவிதம் நடப்பது கடினம் ஆனதால், நீ என்ன சொன்னபோதிலும் உன் வார்த்தையை நம்பி ஒன்றைச் செய்யச் சொல்ல மனம் துணியவில்லை.

**மீனும்பாள்.**—நான் இனி அவருக்கு அடிமை. அவர் வார்த் தைக்கு எதிர்வார்த்தை யாடேன் என்பது ஸத்தியம். இனிமேல் அவருடைய ஸௌகரியத்துக்கு வேண்டியதையே செய்துகொண்டிருப்பேன் (என்று கொடிய பிரமாணிகம் செய்தாள்).

**வைத்தியர்.**—ஐயா ! நல்லமுத்துப்பிள்ளை ! நீர் வீணில் அந்த அம்மாளுக்குத் தொந்தரவு கொடுக்கிறீர். காரியம் மிஞ்சிப்போய்விட்டது. வாயில் ஊற்றும் காப்பி உள்ளுக்குப் போகாமல் வெளிநோக்குகிறது. கைநாடி அடங்கிவிட்டது. இந்த அம்மாள் புருடன்மேல் அன்புடையவளானல், அவர் குடித்து பாக்கியாக வைத்திருக்கும் பாஷாணத்தைக் குடித்து இறப்பதே உத்தமம்.

வைத்தியர் சொல்லி வாய்மூடு முன் வரதராஜ பிள்ளை குடித்து மீதியாக இருந்ததை மீனும்பாள் எடுத்து வாயில் ஊற்றிக்கொள்ளப் போகும்பொழுது, நல்லமுத்துப் பிள்ளை "ஆ! ஆ!" என்று அவள் கையிலிருப்பதைப் பிடுங்கிக்கொள்ள ஓடினர். அதை அவள் அதற்குள் வாயில் ஊற்றி விழுங்கிவிட்டாள். அவர் மீனும்பாள் கையிலிருந்த புட்டியைப் பிடுங்கிக் கொண்டு "என்ன காரியம் செய்துவிட்டாய்!" என்றார்.

**மீனும்பாள்.**—அண்ணு! என் நாயகன் இனிமேல் பிழைக்கப் போகிறதில்லையென்று சொன்னபின் நான் உலகத்திலிருந்து என்ன பலன்? இவ்வுலகத்தில் அவருக்குக் கொடுமையைச் செய்திருந்தேன். ஆனதால் அவர் போகும் இடத்திற்கு நானும போய் ஞானம்பிகை சொல்லியதுபோல் அவரைத் தெய்வமாக எண்ணி அவருக்கு அடிமைத்தொழில் புரிந்து அவரை ஸந்தோஷமடையச் செய்வேன்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஐயா! வைத்தியரே! நீர் இவ்விதமான காரியத்தைச் செய்யலாமோ? வீணுக ஒருயிர்போக அது போதாதென்று மற்றோர் உயிரை அதனோடு சேர்த்துவிட்டீரே!

**வைத்தியர்**—மனிதர் தேனைச் சாப்பிட்டு இறந்துபோவது கடினமென்றே அந்தம்மாளைச் சாப்பிடச் சொன்னேன். (என்று சொல்லிப் பின் வரதராஜ பிள்ளையைப் பார்த்து) ஐயா! நான் கொடுக்கும் காப்பியை யெல்லாம் நீரே குடித்துவிட்டால், எங்களுக்கு வேண்டாமோ! தனித்த அறையில் பாயும் தலையணையும் பக்குவமாகப் போட்டுப் படுத்துக்கொண்டீர். போதும்! போதும்! பாஷாணம் என்றெழுதிய புட்டியைக் காட்டிப் பாசாங்கு செய்கிறது. எழுந்திரும்! எழுந்திரும்!

வரதராஜ பிள்ளை நகைத்துக்கொண்டே எழுந்தார். மீனும்பாள் அவரைக் கட்டிப்பிடித்து முகமெல்லாம் முத்தங் கொடுத்து, "என் துரையே! நான் இனிமேல் உமக்கு அடிமை"

என்ருள். வரதராஜ பிள்ளையும் அவளைக் கட்டிப்பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டு "மீனும்பாள்! நான் உன் மனம் கோணுமல் நடப்பேன்" என்று சொல்லி, ஞானம்பிகையின் கையைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு, "அம்மா! நீ செய்த உபகாரத்திற்கு பதில் என்ன செய்யப்போகிறேன்? நீ அறியாதவளாயிருந்தும் நான் படும் துன்பத்தைக் கண்டு ஸகி யாதவளாகி என் துன்பத்தை நீக்கிவிட்டாய். நான் இனி மேல் உன்னை என் சொந்த ஸகோதரியைப் போல் பார்ப் பேன்" என்ருர்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—(ஞானம்பிகையைப் பார்த்து) அம்மா! வைத்தியலிங்கம் பிள்ளை ஒரு கூத்தியாரை வைத்துக் கொண்டு தன் மனைவி இந்திராணியைக் கொடுமையாக நடத்தியதை மாற்றிவிட்டாய். அது போதாதென்று இங்கு வந்து வரதராஜ பிள்ளையின் துனபத்தை நீக்கத் தேன் கொண்டுவந்து புட்டியிலடைத்துப் பாஷாணம் என்று அச சடித்த கடுதாசியை ஒட்டச்செய்து இந்த வீட்டில் இந்த அறையில் இவ்விதம் செய்யவேண்டும் என்று சொல்லிய உன் புத்திக்கூர்மையை நான் என்னென்று புகழ்வேன்?

ஞானம்பிகையைப் புகழ்வதைக் கேட்டிருந்த மீனும் பாள், ஞானம்பிகையைக் கட்டியணைத்துக்கொண்டு, "அம்மா! யாவும் நீ செய்த ஏற்பாடாகக் காண்கிறது! அம்மா! நான் கொடிய துன்மார்க்கி! நீ எங்கள் வீட்டுக்கு வந்தவுடன் உன்னு டைய குணத்தையும் உன்னுடைய கல்வியையும் அறியாமல் உன்னை மிகு கேவலமாக நடத்தினேன். என்னுடைய கொடு மையைக் கண்டும் என்னைவிட்டுப் போகாமல் என்னை வசப் படுத்தி ஒரு நாயகி தன் நாயகனோடு எவ்வளவு அன்பாய் இருக்கவேண்டும் என்றும் நாயகனை எவ்விதம் பாவிக்கவேண்டு மென்றும் என் மனதில் வேரூன்றி அவை மரமாய்த் தழைக்க வும், என் துர்க்குணத்தை என்னிலிருந்து நீக்கி நான் நல்வழி யில் திரும்பவும் செய்த உன் ஸாமர்த்தியத்தை நான் என் னென்று சொல்லுவேன்? அம்மா நான் உன்னை என் ஸகோ

தரியைப்போல் பார்க்க வேண்டியதே யாயினும், என் நாயகன் உன்னைத் தன் தங்கை யென்று சொல்லி விட்டதால், அவர் எண்ணங் கெடாமல் நான் உன்னை என் சொந்த நாத்தனுராகவே எண்ணுவேன் '' என்று முத்தங் கொடுத்தாள்.

**வைத்தியர்.**—அம்மா ! ஞானும்பிகை ! நான் உன்னைக் குறித்துச் சொல்லவேண்டு மென்று பலவற்றைச் சேர்த்து வைத்திருந்தேன். அவைகளை இவர்கள் என்னிடத்தி லிருந்து திருடி உபயோகித்து விட்டார்கள். என் கையிருப்பில் ஒன்றுமில்லாமல் போயிற்று. நான் என்ன செய்வேன். ஆனதால் வேறொன்றே கேட்கவேண்டும். அதாவது நீ கொண்டுவந்த காப்பியை எல்லாம் வரதராஜ பிள்ளையே குடித்துவிட்டார். எங்களுக்கு ஒன்றுமில்லையா (என்று கேட்டு நகைத்தார். யாவரும் நகைத்தார்கள்).

**ஞானும்பிகை.**—(நகைத்து) இந்நேரத்தில் காப்பி குடிப்பது கூடாதென்று உங்களுக்கெல்லாம் பால்வாங்கிக் காய்ச்சி வைத்திருக்கிறேன்.

**மீனும்பாள்.**—மச்சி ! மோர்க்குழம்பு செய்யவேண்டும் என்று பால் வாங்கிக் காய்ச்சி உறைமோர் வார்த்துவிட்டேன் என்றாயே !

**ஞானும்பிகை.**—நான் உறைமோர் வார்க்காமலே யாவருக்கும் வேண்டுமென்று காய்ச்சிவைத்திருக்கிறேன் (என்று உட்கதவு வழியாக அழைத்துச் சென்று யாவருக்கும் பால் கொண்டுவந்து வைத்தாள்).

**வைத்தியர்.**—ஐயா ! வரதராஜ பிள்ளை ! நீர் குடித்த காப்பி போதாதென்று பால் குடிக்கப் போகிறீர் ? அம்மா ! மீனும்பாள் ! நீ பாஷாணம் சாப்பிட்டிருக்கிறாய் ! பால் குடித்தால் கெடுதல் செய்யும். என்னிடத்தில் கொடுத்துவிடு (என்று நகைத்தார்).

**ஞானும்பிகை.**—ஐயா ! உங்களுக்கு வேறாக இன்னும் கொண்டு வந்து கொடுக்கிறேன். அண்ணனையும் அம்மாளையும் சாப்பிடச் சொல்லுங்கள் (என்று நகைத்தாள்).

**மீனும்பாள்.**—மச்சி! நீ 'அண்ணி' யென்றே, இனிமேல் என்னை அழைக்க வேண்டும் (என்று நகைத்தாள்).

**வைத்தியர்.**—அம்மா! நீயும் உன்புருடனும் உட்கொண்ட பாஷாணம் மிகவும் கெட்டது. நீங்கள் பாலைக் குடிக்க வேண்டாம் நான் கொண்டுவரச சொன்ன மருந்து வந்தவுடன் முதலில் அதைச சாப்பிட்டே பாலைக் குடிக்க வேண்டும்.

அந்த ஸமயத்தில் ஒரு போலீஸ் சேவகன் ஒரு பொட்டணத்தைக் கொடுத்து நீங்கினன்.

**வைத்தியர்.**—நல்ல ஸமயத்தில் மருந்து வந்தமென்று பொட்டணத்தை அவிழ்த்து, இந்த மருந்துகளுக்கு ஈகராக வேறொன்றையும் சொல்ல முடியாது. இதைப் பார்த்தீர்களா? இது 'ஜிலேபி' என்கிற கிலேசத்தைக் கொடுக்காத மருந்து, இது பாஷாணத்தைக் கண்டிக்கக்கூடியது. இதைச சாப்பிட்டும் பிரயோசனப்படாமற் போனல், இதைச் சாப்பிட வேண்டும். இது 'லட்டு' இதைத் தொட்டவுடன் பாஷாணம் பட்டென்று பறந்துபோகும். அதுவும் நாம் விரும்பியவண்ணம் செய்யாமற் போனல், இந்தக் கைகண்ட மருந்தைக் கொடுக்கவேண்டும். இது 'அலுவா'. இந்த அலுவாலைவச் சாப்பிட்டால் பாஷாணத்தின் வலியை நீக்கி நலியைப் போக்கும். 'மருந்தோடாயினும் விருந்தோடுண்' என்ற மூதாட்டியின் வாக்கை அனுசரித்து, நாம் யாவரும் சாப்பிடலாம் என்று ஒவ்வொருவருக்குங் கொடுத்து, ஞானம்பிகையையும் சாப்பிடக் கட்டாயப்படுத்தினர்.

யாவரும் நகைத்துச் சாப்பிட்டார்கள.

**நல்லமுத்துப் பிள்ளை.**—வெறுமையான புட்டியில் பாஷாணம் என்று ஒரு கடுதாசியை ஒட்டிவைக்கச் சொன்னயே! அஃதென்ன பிரயோசனத்தைத் தந்தது?

**ஞானம்பிகை.**—அண்ணு! அந்த புட்டியைக் கொண்டுவந்து அண்ணன் பெட்டி மறைவில் வைத்துவிட்டார். அதை

யெடுத்து அண்ணியவர்கள் பார்வையில் வைத்திருந்தேன். அண்ணியவர்கள் அதை எடுத்துவந்து "இதில் என்ன எழுதியிருக்கிறது?" என்று கேட்டார்கள். நான் அது பாஷாணம் என்று சொல்லி இதேது என்று பயந்தவள்போல் கேட்டேன். அண்ணியவர்களும் திடுக்கிட்டு அண்ணனுக்கு "இது எங்காகிலும் கிடைத்திருக்கும்" என்று சொல்லிப் போனார்கள். அந்த புட்டியிலிருந்த கடுதாசியைப்போலுள்ள மற்ற புட்டியின் மேலிருந்த கடுதாசியைப் பின்பார்த்தால் அது இன்னதென்று அண்ணியவர்களுக்கு விளங்குமென்று முதலில் அதைக் கொண்டுவந்து வைக்கச் சொல்லியிருந்தேன்.

யாவரும் ஞானம்பிகையின் நுண்ணிய அறிவை வியந்தார்கள்.

---

## 11—ம் அத்தியாயம்

ஞானம்பிகை செய்த சூழ்ச்சிக்குப் பின், மீனம்பாள், தன் நாயகனோடு உட்கார்ந்து சாப்பிடாமல், முதலில் தன் நாயகனுக்குத் தன் கையால் சாப்பாடு போட்டு, முன்போல் ஒரு கரண்டி நெய் விடாமல் அவர் திருப்தியடைய நெய்விட்டும், அவர் சாப்பிடும் பரியந்தம் அருகில் நின்று இலையில் இல்லாததைப் பார்த்து வட்டித்து அதிக உபசரணை செய்தும், அவர் சாப்பிட்டெழுந்தபின் அவர் விட்டுப்போன இலையில் தான் உட்கார்ந்து தன்னருகில் ஞானம்பிகையை உட்காரவைத்தும் சாப்பிடலானாள். அவளுக்கு வேலை இல்லாத காலத்தில் ஞானம்பிகையிடத்தில் வாசித்துக்கொண்டிருந்தாள். வரதராஜ பிள்ளை அதிக ஸந்தோஷமடைந்து ஞானம்பிகையைப் பார்க்கும்பொழுதெல்லாம் புகழ்ந்துகொண்டிருப்பார். மீனம்பாளும் ஞானம்பிகையை அடிக்கடி, "மச்சி, நீ எங்கள் குலதெய்வம்" என்று புகழ்ந்து, அவளுக்குப் புதிது புதிதாகத் துணிகளை வாங்கிக் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

சில வாரங்களுக்குப்பின் ஒருநாள், ஞானும்பிகையும் மீனும்பாளும் காலையிலெழுந்து, அத்தெருவிலிருந்து போன பெண்களோடு காவேரியாற்றுக்கு நீராடச் சென்றனர். ஆற்றில் அதிகமாக ஜலம் போய்க்கொண்டிருந்தமையால், துணிகள் துவைக்கப் போட்டிருக்குங் கற்களெல்லாம் ஜலத்தில் முழுகி சிலதே வெளியிலிருந்தன. வெளியிலிருந்த கற்களில் பெண் பிள்ளைகள் துணிகள் துவைத்துக் கொண்டிருந்தமையால் அநேகம் பெண்பிள்ளைகள் கல்லுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

**மீனும்பாள்.**—(ஞானும்பிகையைப் பார்த்து), "மச்சி! சிலர் நம்முடைய தெருவுக்குப் போகிறார்கள். நான் அவர்களோடு வீட்டுக்குப் போய் வீட்டுவேலையைப் பார்க்கிறேன். நீ சேலைகளைத் துவைத்துக்கொண்டு மற்றவர்களோடு வீட்டுக்கு வருகிறாயா? (என்று கேட்டாள்).

**ஞானும்பிகை.**—ஆம்! அண்ணி! தாங்கள் காத்துக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. தாங்கள் வீட்டுக்குப்போகலாம். நான் விரைவில் வருகிறேன் (என்றாள்).

மீனும்பாள் நீங்கிய சில நேரத்துக்குப்பின் ஞானும்பிகைக்குக் கல் அகப்பட்டது. அவள் சேலைகளைத் துவைத்து ஆற்றிலிறங்கி ஒரு சேலையை அலசிப்பிழிந்து கரையில் கொண்டு வந்து வைத்துவிட்டு, மற்றொரு சேலையை எடுத்துக்கொண்டு போய் அலசிப்பிழிந்துகொண் டிருக்கும் பொழுது, "ஐயோ! ஐயோ!" என்று பெண்கள் போட்ட பேரிரைச்சலைக் கேட்டு என்னவென்று ஆற்றைப் பார்த்தாள். அங்கு ஒரு விருத்தரை வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறதைப் பார்த்துத் திடுக்கிட்டு ஒன்றும் யோசியாமல் மார்பளவு ஆழம் வரையில் ஆற்றில் இறங்கிப்போய், தான் பிழிந்துவைத்திருந்த சேலையை ஒரு பக்கமபிடித்துக்கொண்டு மற்றதை வெள்ளத்தி லடித்துக்கொண்டு போகிறவர்முன் விட்டெறிந்தாள். அது கைக்கு அகப்படாமல் அவர் நீர்க்குள் முழுகித் தலை கிளம்பினர். ஞானும்பிகை சேலையை விரைவிலிழுத்து மீண்டும் விட்டெறிந்தாள். அப்

பொழுதும் அத்துணி அவர்களுக்கு எட்டவில்லை. ஞானம்பிகை கைவிட்டுவிடாமல் அவரை யடித்துக்கொண்டு போகிற தோடு தானும் சென்று அடிக்கடி சேலையை விட்டெறிந்தும் அகப்படாமல், அடிக்கடி முழுகுவதும் வெளிக்கிளம்புவதுமாக அதிக தூரம் போகையில் ஞானம்பிகையும் பின் சென்று, ஞானம்பிகை கழுத்தளவு ஆழம் வரையில் சென்று சேலையை விட்டெறிந்தாள். அது விருத்தர்கையில் அகப்பட்டது. அதை அவர் பிடித்துக்கொண்டதைப் பார்த்து, "கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுங்கள், கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று கூவி இடுப்பளவு ஜலத்துக்கு வந்து சேலையைச் சேர்ந்தி விருத்தரைத் தன் ஸமீபத்தில் இழுக்கும் பொழுது, மற்றப் பெண் பிள்ளைகளும் ஓடிப்போய் ஞானம்பிகைக்கு உதவி செய்து ஐம்பது வடதென்று நிதானிக்கத்தக்க அந்தப் பெரியவரைக் கரைசேர்த்தார்கள்.

அவ்விடத்தில் நின்றிருந்த பெண்பிள்ளைகளெல்லாம் ஓடி, ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, "அம்மா! உன்னுடைய தைரியமே தைரியம்! உன்னுடைய உயிரைக் கவனிக்காமல் கழுத்தளவு பரியந்தம் போனாயே! நாங்கள் அதிகம் பயந்திருந்தோமே!" என்று அங்கலாய்த்தார்கள். ஆண்பிள்ளைகளும் அநேகர் ஓடிவந்து ஞானம்பிகையைச சூழ்ந்து நின்று கொண்டு, "அம்மா! ஆண்பிள்ளைகளாகிய நாங்கள் ஒன்றும் செய்ய முடியாமல் மலைத்திருக்க நீ உன் உயிரை கவனிக்காமல் அவரைக் காப்பாற்றினாய். உன்னுடைய ஸதரியத்தைப் புகழ எங்களால் முடியாது" என்றார்கள். ஞானம்பிகை அவர்களை யெல்லாம் பார்த்து "நான் தனித்து ஒன்றையும் செய்துவிட வில்லை. என் ஸகோதரிகள் அநேகர் எனக்கு உதவியாக நின்று பெரியவரைக் கரைசேர்த்தார்கள்" என்று சொல்லிக் கரை சேர்ந்த பெரியவரைப் பார்த்து, "ஐயா! தாங்கள் சற்று நேரம் இங்கிருங்கள். நான் என் சேலையை எடுத்துவருகிறேன்" என்றவுடன், அங்கொரு பெண் பிள்ளை "அம்மா, உன்னுடைய சேலையைக் கொண்டு வந்



என் தங்கை வேண்டியதுபோல், நானும் தங்களை வேண்டுகிறேன்.

(166-ம் பக்கம் பார்க்க.)

தேன்'' என்று சொன்னதைக் கேட்டு ஸந்தோஷப்பட்டு, பெரியவரை இளைப்பாறச் செய்தாள். பெரியவர் இளைப்பாறி எழுந்து ஞானம்பிகையின் கைகளைப் பிடித்துக்கொண்டு “அம்மா! நீ என் உயிரைக் காப்பாற்றினாய்! உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? நான் ஒரு காலத்தில தனவந்தனாக இருந்தேன். இப்போது வறுமை அடைந்திருக்கிறேன். ஆனதால் உன் மனம் களிக்க ஒன்றும் செய்யத் திறமையற்றவனாய் இருக்கிறேன்'' என்றார்.

ஞானம்பிகை.—ஐயாவே! தாங்கள் இவ்விதம் சொல்வது நியாயமன்று. தாங்கள் இவ்வூரில் எங்கிருக்கிறீர்கள்? தங்களுடைய பெண்சாதி பிள்ளைகள் இவ்வூரில் இருக்கிறார்களா?

பெரியவர்.—அம்மா! இவ்வூரில் எனக்கு ஒருவரும் இல்லை. நான் சில தினங்களுக்குமுன் இவ்வூருக்கு வந்தேன்.

ஞானம்பிகை.—தாங்கள் இவ்வூரில் எங்கிருக்கிறீர்கள்?

பெரியவர்.—அம்மா! நான் ஓரிடத்தில் நிலைத்திருக்கவில்லை. ஆனதால் நான் எந்த இடத்திலிருக்கிறேன் என்று சொல்ல முடியும்?

ஞானம்பிகை.—தாங்கள் என்ன குலம்? தாங்கள் ஏன் தாடி மீசையோடு தலைமயிரையும் வளர்த்திருக்கிறீர்கள?

பெரியவர்.—அம்மா! நான் வேளாளர் குலமே! பழனிக்குப் போய் முடி எடுக்கவேண்டுமென்ற பிரார்த்தனை எனக்கு உண்டு. அதனால் முடி வளர்த்திருக்கிறேன்.

ஞானம்பிகை.—தாஙகள் இப்பொழுது எங்கே போக உத்தேசம்?

பெரியவர்.—நான் எங்குப் போகிறதென்று எனக்குத் தெரியவில்லை. என் கைகால்களெல்லாம் அயர்ந்துபோயிருப்பதால், அதிக தூரம் நடக்கமுடியாதென்று நினைக்கிறேன்.

ஞானம்பிகை.—தாங்கள் என்னோடு வந்து எஙகள் வீட்டிலிருக்கலாம். எங்கள் வீடு அதிக தூரமல்ல. ஸமீபமே!

பெரியவர்.—என் உயிரைக் காப்பாற்றியது போதாதென்று என்னை உங்கள் வீட்டுக்கு வரும்படியாகவும் கூப்பிடுகிறாய!

வருகிறேன் அம்மா. (என்றெழுந்து ஞானம்பிகையோடு நடந்து சென்றவர்), அம்மா ! உன் பெயர் என்ன ? உன் தாய் தந்தை இருக்கிறார்களல்லவா ? (என்றுகேட்டார்).

ஞானம்பிகை.—ஐயாவே ! என் பெயர் ஞானம்பிகை, எனக்குத் தாய் உண்டு ; தந்தை இல்லை. ஆனதால் தங்களை என் தந்தைபோல் எண்ணியே அழைத்துப் போகிறேன் (என்று நகைத்தாள்).

பெரியவர்.—அம்மா ! ஞானம்பிகை ! உன் தாய் இவ்வூரில் என்ன செய்கிறார்கள் ?

ஞானம்பிகை.—ஐயாவே ! என் தாயார் இவ்வூரில் இல்லை. அவர்கள் வேறு ஊரில் இருக்கிறார்கள். நான் என் அண்ணன் அண்ணியோடு இருக்கிறேன்.

பெரியவர்.—(ஆச்சரியப்பட்டு) என்ன சொன்னாய் ? நீ உன் தாயோடிராமல் தமயனோடா இருக்கிறாய் ? நீ உன் அண்ணன் வீட்டுக்கா அழைத்துப்போகிறாய் ? அவர்கள் உன்னைக் கோபிப்பார்களே ! அம்மா ! நான் உன்னோடு வருவது நியாயமல்ல. நான் எங்காகிலும் போகிறேன்.

ஞானம்பிகை.—ஐயா ! என் அண்ணனும் அண்ணியும் ஒன்றும் சொல்லமாட்டார்கள் ! தாங்கள் கவலையற்று என்னோடு வரலாம்.

என்று அவரை அழைத்துப்போய் உள் திண்ணையில் உட்காரவைத்து, “அண்ணி ! அண்ணி !” என்று சமையலறைக்குள் ஓடி மீனாம்பாளைப் பார்த்து, “நான் தங்களுக்கு ஓர் மாமனாரை அழைத்துவந்தேன்” என்றாள்.

மீனாம்பாள்.—என்ன சொன்னாய் ? எனக்கு மாமனாரை அழைத்து வந்தாயா ? எனக்கெப்படி மாமனார் ?

ஞானம்பிகை.—அவா எனக்குத் தந்தையானால், தங்களுக்கு மாமனாரல்லவோ (என்று நகைத்தாள்).

மீனாம்பாள்.—(உள் திண்ணையில் உட்கார்ந்திருப்பவரை வந்து பார்த்து), ஐயா ! உள்ளே வாருங்கள் (என்று அவரைக் கட்டாயப்படுத்தி அழைத்துப்போய்), தங்களுடைய

வேஷ்டி எல்லாம் ஈரமாக இருக்கிறது. இதைக் கட்டிக் கொள்ளுங்கள் (என்று தன் நாயகன் வேஷ்டியில் இரண்டு கொண்டுவந்து கொடுத்தாள்).

சில நேரத்துக்குப்பின் அநேக ஆண்பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் "அந்தப் பெண் எங்கே? பெண் எங்கே?" என்று வீட்டுக்குள் வருவதைக் கண்ட மீனும்பாள் பயந்து வெளியில் வந்து, "எந்தப் பெண்ணைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்கும்பொழுது, வரதராஜ பிள்ளையும் நல்லமுத்துப் பிள்ளையும் வீட்டுக்குள் ஜனங்கள் அதிகம் போவதைக் கண்டு ஓடிவந்து என்ன என்னவென்று கேட்டார்கள்.

வந்தவர்களிலொருவன்.—ஐயா! நாங்கள் என்ன சொல்லு வோம்? காவேரியாற்று வெள்ளம் ஒரு மனிதனை வெகு தொலையிலிருந்து அடித்துக்கொண்டு வந்தது. ஒருவரும் உதவிசெய்யாமல் அவனைப் பார்த்துக்கொண்டே இருந் தோம். இவ்வீட்டிலிருக்கும் பெண் அவனைக் கரை சேர்த்துக் காப்பாற்றிவிட்டாள். அவள் முகத்தைப் பார்த் துப்போகவே அவளைத் தேடுகிறோம்" என்றான்.

நல்லமுத்துப் பிள்ளையும் வரதராஜ பிள்ளையும் வீட்டுக் குள் சென்று. ஞானம்பிகையைக் கையைப்பற்றி இழுத்துவந்து யாவருக்கும், முன்னேவிட்டார்கள். வந்தவர்கள் யாவரும் ஞானம்பிகையைப் புகழ்ந்து ஆசீர்வதித்து நீங்கினார்கள்.

நல்லமுத்துப் பிள்ளை.—அம்மா ஞானம்பிகை! நீ தரங்கன்பாடி யில் சாமியாபிள்ளை வீட்டில் பிறருக்கு நன்மையைச் செய்ய வேண்டி, பழிபாவத்தை யேற்று மேன்மையடைந்தாய்! திருப்பாதிரிப்புலியூரில் வைத்தியலிங்கம் பிள்ளையின் மனைவி இந்திராணி யம்மாளின் துன்பத்தை நீக்கினாய்! அவள் உன்னைத் தெய்வமாக பாவித்திருக்கும் பொழுது, மீனாக்ஷிஸுந்தரம பிள்ளையால் அவர்கள் வீட்டை விட்டு ஓடிவந்து. உன் தமையனையும் உன் அண்ணியையும் ஆனந் தத்தில் அழுத்திவைத்திருக்கிறது போதாதென்று, இன்று

ஒருவரைக் காப்பாற்றினாய்! உன்னை என்ன வென்று சொல்லுகிறது?

வரதராஜ பிள்ளை—என் தங்கை எவ்விடத்திலும் ஓர் நன்மையையே செய்துகொண்டிருப்பாள்.

மீனம்பாள்.—(ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்துக் கன்னத்தைக் கடித்து முத்தங்கொடுத்து), மச்சி! மல்லிகைப்பூ எங்கு போனாலும் மணத்தைக் கொடுத்துக்கொண்டிராமற் போகுமா! (என்று சொலலி, நல்லமுத்துப் பிள்ளையையும் தன் நாயகனையும் பார்த்து), என மாமனார் உட்கார்ந்திருக்கிறார். அவரோடு வார்த்தையாடிக்கொண்டிருங்கள். நான் காப்பி கொண்டுவருகிறேன் (என்றாள்).

நல்லமுத்துப் பிள்ளை.—(நகைத்து) உன் மாமனாரா?

மீனம்பாள்.—ஆம்! அண்ணா! என் நாத்தனாருக்குத் தந்தையானால் எனக்கு மாமனாராக வேண்டுமல்லவா! (என்று நகைத்துச் சென்றாள்).

நல்லமுந்துப் பிள்ளையும் வரதராஜ பிள்ளையும்.—(பெரியவர் அருகில் போய உட்கார்ந்து) ஐயா அவர்கள் எந்த ஊர? (என்று கேட்டார்கள்).

பெரியவர்—தம்பிமார்களே! நான் நெடுநாளாகத் திருச்சிராப் பள்ளிக்கு ஸமீபத்தில் வசித்திருந்தேன். பின் ஓரிடத்திலும் நிலைத்திராமல் அங்கும் இங்குமாகத் திரிகிறேன்.

நல்லமுந்துப் பிள்ளை.—தங்களுடைய நாமதேய மென்ன?

பெரியவர்.—என்னைக் கறுப்பண்ணபிள்ளை என்றழைக்கிறார்கள்.

நல்லமுத்துப் பிள்ளை.—தஙகளுக்குப் பெண்சாதி பிள்ளைகள் இல்லையா?

கறுப்பண்ண பிள்ளை.—என் பெண்சாதி பிள்ளைகளெல்லாம் காலம் சென்றார்கள் (என்று துக்கப்பட்டார).

அப்போது மீனம்பாள் காப்பி பலகார முதலியவைகளைக் கொண்டுவந்து யாவருக்குங் கொடுத்துச் சாப்பிட வேண்டினாள். யாவரும் பலகாரம் உண்டார்கள்.

**கறுப்பண்ண பிள்ளை.**—(நல்லமுத்துப் பிள்ளையைப் பார்த்து), ஐயா! தரங்கன்பாடியில் சாமியாபிள்ளை யென்றும் திருப்பாதிரிப்புலியூரில் வைத்தியலிங்கம் பிள்ளை இந்திராணியம்மாளென்றும் பின் மீனாக்ஷிஸுந்தரம் பிள்ளை யென்றும் சொன்னீரே, இவர்களெல்லாம் யார் என்றறிய விரும்புகிறேன். அவர்களிடத்தில் ஞானம்பிகை ஏன் போனாள்? அவளுடைய தமயனாகிய இவர் இவ்வூரிலேயே இருக்கிறார்போல் காண்கிறதே (என்றார்).

**நல்லமுத்துப் பிள்ளை.**–(ஞானம்பிகையின் நிலைமையை ரகசியமாகச சொல்லி) அவளுடைய நற்குணத்தால் இவர் அப்பெண்ணை ஸகோதரியைப் போலப் பார்க்கிறார். தரங்கன்பாடிமுதலிய இடங்களில் இருப்பவர்களெல்லாம் பெரும் பணக்காரரான முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளைக்கு நெருங்கிய பந்துக்கள்.

**கறுப்பண்ண பிள்ளை.**—தாங்கள் சொல்லும் வேலாயுதம் பிள்ளை உயிரோடு இருக்கிறாரா?

**நல்லமுத்துப் பிள்ளை.**—அவருடைய ஸமாசாரம் நன்றாய்த் தெரியவில்லை யென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

**கறுப்பண்ண பிள்ளை.**—அவர் இருப்பது முத்துப்பட்டணமென்றால், அவர் உயிரோடிருப்பதும் இறந்துபோனதும் அவருக்கு நெருங்கிய பந்துக்களுக்குத தெரியாமலிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

**நல்லமுத்துப் பிள்ளை.**—வேலாயுதம்பிள்ளை இருப்பது முத்துப்பட்டணமே யானாலும், அவர் கோலாலம்பூருக்குப் போய் நெடுநாளாயிற்று. அவரிடத்திலிருந்து கடிதப் போக்குவரவு இல்லாததால், அவருடைய ஸமாசாரம் தெரியவில்லை.

**கறுப்பண்ண பிள்ளை.**—அவர் முத்துப்பட்டணத்திலே இருக்கிறாரென்றே அவ்விதம் கேட்டேன். எனக்கு உத்தரவு கொடுத்தால் நான் போய்வருகிறேன் (என்றெழுந்தார்).

**வரதராஜ பிள்ளை.**—ஐயாவே! தங்களை எங்களோடிருக்க என்

தங்கை வேண்டியதுபோல், நானும் தங்களை வேண்டு கிறேன்.

**மீனும்பாள்.**—(கறுப்பண்ண பிள்ளை சொல்லியதைக் கேட்டு வந்து) தாங்கள் எங்கே போகப்போகிறீர்கள்? தாங்கள் எங்கும் போகாமல் எங்களோடு இருக்கவேண்டும். தாங்கள் பழனிக்குப் போகவேண்டுமென்று சொன்னதாக என் நாத்தனுர் சொன்னுள். தாங்கள் பழனிக்குப் போகும்பொழுது போகலாமே யன்றி, அதற்குமுன் போகக் கூடாது. இவ்வீட்டைத் தங்கள் மகன் வீடுபோல் எண்ணி, எப்பொழுதும் எங்களோடிருக்கவேண்டும் (என்று வேண்டினுள்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஐயாவே! தங்களை யாவரும் இவ்விடத்தி லிருக்கும்படி அன்போடு வேண்டுவதால், தாங்கள் இவ்விடத்தி லிருப்பதே உத்தமம்.

**கறுப்பண்ண பிள்ளை.**—(மதிமயங்கி ஞானம்பிகைக்காக எவ்வளவு அன்பைக் காட்டுகிருர்க ளென்றெண்ணி) அம்மணீ! நான் உங்களுடைய உத்தரவை மீறி நடக்க அறியேன் (என்று உட்கார்ந்தார்).

நல்லமுத்துப்பிள்ளை சிலநேரம் வார்த்தையாடி யிருந்து நீங்கினுர். அவர் நீங்கியபின், வரதராஜ பிள்ளை கறுப்பண்ண பிள்ளையோடிருந்து பல விஷயங்களைக் குறித்து வார்த்தையாடி யிருந்தார். பகல் போஜனம் உண்டபின், ஞானம்பிகை கறுப்பண்ண பிள்ளைக்குப் படுக்கை போட்டுக்கொடுத்து, அவரை அழைத்துப்போய், ஐயாவே! தாங்கள் சில நேரம் படுத்துக் கொள்ளுங்கள். தங்களுக்கு அதிக ஆயாசமாய் இருக்கும்" என்ருள்.

**கறுப்பண்ண பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை! எனக்கு ஒருவரும் இவ்வூரில் இல்லாதிருந்தும், நீ என்னுயிரைக் காப்பாற்றி என்னை ஆதரிக்கும்படி செய்துவிட்டாய் (என்று சொல்லி, படுத்து நித்திரை போனுர்).

கறுப்பண்ண பிள்ளை அவ்விடம் சென்ற மூன்றும் நாள் வெளியிற்சென்று பல விடங்களைப் பார்த்து ஓர் வீட்டுக்குள் சென்றார். அவ்விடத்தி லிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டு, "ஐயா தாங்கள் காவேரி ஸ்நானத்துக்குப் போய வெள்ளத்தில் அகப் பட்டு ஓர் பெண்ணால் காப்பாற்றப்பட்டீர் என்று கேள்விப்பட் டோம். அது உண்மைதானோ?" என்று கேட்டார்கள்.

**கறுப்பண்ண பிள்ளை.**—ஆம்! நான் அதிக தொலையில் சென்று தனித்து நீராடிக்கொண்டிருந்தேன். எனக்கு நீச்சுத்தெரியுமென்ற கர்வத்தால் ஆழமுள்ள இடத்தில் போய் நீஞ்சினேன். ஆற்றின் வெள்ளம் தொலைதூரம் என்னை இழுத்துக்கொண்டு போய்விட்டது. என் நீச்சு அவ்வெள்ளத்துக்கு முன் பிரயோசனப்படாமல், என் கைகால்களெல்லாம் அயர்ந்து போய் முழுகிப்போகிற ஸமயத்தில், ஓர் அறியாப் பெண என்னைக் காப்பாற்றி னாள் (என்று அவள் தன்னைக் கரைசேர்த்த விதத்தைச் சொன்னார்).

**அங்கிருந்தவரி லொருவன்.**—தாங்கள் மூன்று நாளாக என் வர வில்லை? நாங்கள் யாவரும் பெருங்கவலையோடு தேடித் திரிந்தோம். தங்களுக்கருகில் நீராடியிருந்த ஒருவர், தங்களை வெள்ளம் இழுத்துப்போகிறதைக் கண்டு, தனக்கு நீச்சுத் தெரியாததால் கரையேறி, அனேக ரிடத்துச் சொல்லி, தங்களை ஆற்றுமத்தியில் இழுத்துக் கொண்டு போகிறதால் ஒருவரும் உதவிசெய்ய முடியாமல் பாாத்துப் பரிதாபப்பட்டுக்கொண்டிருந்தாா. பின் தங்க ளைக் கரைக்கருகில் வெள்ளம் கொண்டு வந்தபொழுது, ஓர் பெண் தங்களுக்கு உதவி புரிந்து கரை சேர்த்தாள் என்று அகஸ்மாத்தாய் அறிந்த பின் நாங்கள் கவலையற் றிருந்தோம் (என்றான்).

**கறுப்பண்ண பிள்ளை.**—எனக்குக் கைகால்கள் அயர்ந்து போனபடியால் எழுந்து நடக்கமுடியாமல் என்னைக் கரை சேர்த்த பெண்ணின் வீட்டிலேயே இருந்தேன். நான்

ஏழை என்பதை அறிந்த அவ்வீட்டார், தங்கள் வீட்டை விட்டுப் போகக்கூடாதென்று தொந்தரவு செய்தார்கள்.

அங்கிருந்தவரி லொருவன்.—ஐயோ! பாவம்! எங்காகிலும் இருந்து வயிறு வளர்க்க வேண்டியதுதானே (என்று நகைத்தான்).

கறுப்பண்ண பிள்ளை.—பெருமாள் எங்கே?

அங்கிருந்தவரி லொருவன்.—அவர் தங்களைத் தேடிக்கொண்டு திரிகிறார்.

கறுப்பண்ண பிள்ளை, நெடுநேரம் அவ்விடத்தில் உட்கார்ந்து வார்த்தையாடிக்கொண்டிருந்து, தம்முடைய துணிகள் அடங்கிய ஒரு பெட்டியைக் கூலியாள் தலையில் வைத்து வரதராஜபிள்ளை வீடு வந்து சேர்ந்தார். மீனம்பாள், பெட்டியைப் பார்த்து, இனி பெரியவர் தங்களை விட்டுப் போகமாட்டார் என்று ஸந்தோஷப்பட்டாள். கறுப்பண்ண பிள்ளை அவ்விடத்திலிருந்தாலும், சாப்பாட்டு நேரம் போக மற்ற நேரமெல்லாம் ஊர் சுற்றிப் பார்ப்பதே வேலையாக இருந்தார். சில வாரங்களுக்குப் பின் ஒருநாள் மத்தியானத்தில், வைத்தியர், நல்லமுத்துப்பிள்ளை, வரதராஜபிள்ளை, மீனம்பாள், ஞானம்பிகை முதலிய யாவரும் உட்கார்ந்து ஸந்தோஷமாக வார்த்தையாடிக் கொண்டிருக்கும்பொழுது, ஒருவன் ஒரு மூட்டையோடு வந்து வீட்டுக்கு வெளியில் நின்று, 'அம்மா! அம்மா!' என்று கூப்பிட்டான். ஞானம்பிகை எழுந்தோடிப் போய், யார் என்று கேட்டாள்.

வந்தவன்.—அம்மா! கறுப்பண்ண பிள்ளை என்ற பெரியவர் இவ்வீட்டில் இருக்கிறாரா?

ஞானம்பிகை.—ஆம்! இருக்கிறார். அவரைப் பார்க்கவேண்டுமானால் உள்ளே வரலாம் (என்றழைத்துப் போய்), ஐயா! தங்களை இவர் தேடுகிறார் (என்று கறுப்பண்ண பிள்ளையைப் பார்த்துச் சொன்னாள்).

கறுப்பண்ண பிள்ளை.—(வந்தவனைப் பார்த்து) அப்பா! நீ

யார் ? என்னையா தேடிவந்தாய் ? நீ தப்பிதமாய்ச் சொல்லு கிறதுபோல் காண்கிறதே !

**வந்தவன்.**—(நகைத்து) நான் தப்பிதமாக ஒன்றும் சொல்ல வில்லை. தங்களையே தேடிவந்தேன்.

**கறுப்பண்ண பிள்ளை.**—நீ என்னை அறிவாயா ? நான் உன் னைப் பார்த்திருப்பதாக எனக்கு ஞாபகம் இல்லையே.

**வந்தவன்.**—ஐயா ! தாங்கள் அரங்கசாமி செட்டியார் வீட்டுக்கு வந்திருந்தபொழுது தங்களைப் பார்த்திருக்கிறேன். நான் அவர் வீட்டில் கணக்கெழுதும் வேலையில் இருப்பவன்.

**கறுப்பண்ண பிள்ளை.**—ஆம ! ஆம் ! இப்பொழுது ஞாபகம் வந் தது. என்ன ஸமாசாரம் ? அவர் என்ன சொல்லி அனுப்பி ஞர் ? அவர் இவ்வூரில் பெருத்த வியாபாரம் செய்கிறவர். ஆனதால் அவர் இவ்விதம் செய்வது ந்யாயமல்ல. அவ ரைப்போன்ற வியாபாரிகள் அவருடைய நாணயம் இவ்வி தம் என்றறிந்தால் நகையாரகளா ? அவருடைய நாணயம் ஊழல் என்றறிந்தபின், அவரை எவ்விதம் நம்பி அவரோடு பற்றுவரவு செய்வார்கள் ? நான் முன்போல் பணக்கார ஞக இருந்தால், அவர் கொடுக்கும்பொழுது பெற்றுக் கொள்ளலாம் ! நான் பழனிக்குப் போகவேண்டும். என் வழிச் செலவுக்குப் பணமில்லை என்று பலதடவை சொல் லியிருந்தும், அவர் கவனிக்காமல் 'பொறும் ! பொறும் !' என்று சொல்லிக்கொண்டிருக்கிருர். இவ்வீட்டிலிருக்கும் புண்ணிய புருஷாள் என் வயிற்றுக்குச் சாதம் போட்டுக் கொண்டிராமற்போனல், அதற்கும் அவஸ்தைப்பட வேண் டியதாக இருக்கும். இப்பொழுது என்ன சொல்லியனுப் பிஞர் ? இன்னம் ஒரு மாதம் பொறுத்துக்கொள்ளச் சொல்லுகிருரோ ?

**வந்தவன்.**—ஐயா ! அநேக வருடங்களுக்கு முன் தாங்கள் அவர் விஷயததில் செய்த நன்மையை அவர் மறங்வரல்ல ! அவருக்குப் பல பாகங்களிலிருந்து வரவேண்டியது அதிக

மாயிருந்தாலும், கைக்கு வர நாள் செல்லும்போல் காண்கிறது. தாங்கள் இவ்வூருக்கு வருவதை அவருக்குத் தெரிவிக்காமல் சடிதியாக வந்தமையால் தங்களைத் திருப்தி செய்ய முடியவில்லை என்று கவலைப்படுகிறார். தங்களுக்குத் தவணை சொல்லப் பிரியமில்லையென்று அவருக்குக் கிடைக்கவேண்டிய இடத்திற்கெல்லாம் என்னை அனுப்பிக் கேட்டுவரச் சொன்னார். எங்கும் கிடைக்கவில்லை.

**கறுப்பண்ண பிள்ளை.**—போதும்! போதும்! அதிகம் சொல்லவேண்டாம்! என்னை இன்னும் பொறுத்துக்கொள்ளச் சொல்லுகிறார். போம்! போம்! நான் இனி அவரை ஒன்றுங் கேட்கமாட்டேன் என்று சொல்லிவிடும்! (என்று கோபமாகச் சொன்னார்).

**வந்தவன்.**—தாங்கள் கோபிக்கவேண்டாம்! அவர் ஒருவருடைய பொருளை இச்சிக்கமாட்டார். அநேக வருடங்களுக்கு முன் அவருக்குத் தாங்கள் கொடுத்த தொகைக்குத் தங்களிடத்தில் ஆதாரம் இல்லாமற்போனாலும், அத்தொகைக்கு எப்பொழுது வேண்டுமென்றாலும், சீட்டு எழுதிக் கொடுக்கச் சித்தமாயிருப்பதாகச் சொல்லச் சொன்னார்.

**கறுப்பண்ண பிள்ளை.**—எனக்குச சீட்டெழுதிக் கொடுக்க வேண்டியதில்லை என்று சொல்லிவிடும்.

**ஞானம்பிகை**—ஆம்! யோக்கியரிடத்தும் அயோக்கியரிடத்தும் சீட்டெழுதி வாங்கிக்கொள்வதில் பிரயோசனம் இல்லை (என்று நகைத்தாள்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை! நீ என்ன அவ்விதம் சொல்லுகிறாய்? யோக்கியரிடத்தும் அயோக்கியரிடத்தும் சீட்டெழுதி வாங்கவேண்டியதில்லை என்று சொல்லலாமோ?

**ஞானம்பிகை.**—ஆம்! அண்ணா! யோக்கியரிடத்தில் சீட்டெழுதி வாங்குவதில் என்ன பிரயோசனம்? யோக்கியன் சீட்டெழுதிக் கொடுத்திருந்தாலும் சீட்டெழுதிக் கொடுக்

காமலிருந்தாலும் அவன் யோக்கியன்: ஆனதால் வாங்கியதைக் கொடுத்துவிடுவான். அயோக்கியன் சீட்டெழுதிக் கொடுத்திருந்தாலும் சீட்டெழுதிக் கொடுக்காமலிருந்தாலும் வாங்கிய கடனைக் கொடுக்கப்போகிறதில்லை. ஆனதால் அவ்விருவரிடத்திலும் சீட்டெழுதி வாங்குவதில் பிரயோஜனமில்லை என்று காண்கிறதல்லவா? (என்று நகைத்தாள் யாவரும் நகைத்தார்கள்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—அயோக்கியனிடத்தில் சீட்டெழுதி வாங்கியிருந்தால், நியாஸ்தலத்து மூலமாக வசூல் செய்ய முடியுமே?

**ஞானம்பிகை.**—அண்ணா! தாங்கள் கவனிக்காமல் சொல்லுகிறீர்கள். அயோக்கியனை நியாயஸ்தலத்துக்குக் கொண்டு போனாலும அவன் தன்னிடத்திலிருபபதை யெல்லாம் மறைத்துச் சிறைச்சாலையிலிருக்க ஸம்மதப்படுவான். அல்லது கடன் கொடுக்க நிர்வாகமில்லை யென்று நியாயஸ்தல ஆதரவைப் பெற்றுக்கொள்வான்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—உலகத்தில் சீட்டெழுதி வாங்காமலும் அவர்கள் கொடுக்காத காலத்தில் நியாயஸ்தல மூலமாக வசூல் செய்யாமலுமா இருக்கிறார்கள்?

**ஞானம்பிகை.**—நான் அதை இல்லையென்று சொல்லவில்லை அவர்களெல்லாம் யோக்கியருமல்ல அயோக்கியருமல்ல.

**நல்லமுத்துப் பிள்ளை.**—அவர்களை என்னவென்று சொல்லுகிறது?

**ஞானம்பிகை.**—அண்ணா! நான் முன் சொன்னதுபோல் யோக்கியனாய் இருந்தாலும் நியாஸ்தலத்துக்குப் போகாமுன்னம் கொடுத்திருக்க வேண்டும். அயோக்கியனாயிருந்தால் கொடுத்திருக்கக்கூடாது. நியாயஸ்தலத்து மூலமாகக் கடன் தீர்த்தவர்களை யோக்கியரென்றும் அயோக்கியரென்றும் எவ்விதம் சொல்லக்கூடும்?

**நல்லமுத்துப் பிள்ளை.**—*பின் அவர்களை என்னவென்றுதான் சொல்லுகிறது ?*

**ஞானம்பிகை.**—*அவர்கள் யோக்கியருக்கும் அயோக்கியருக்கும் இடையில் நிற்பதால், அவர்களை 'யோக்கியா யோக்கியர்' என்று சொல்லலாம் (என்று நகைத்தாள். யாவரும் கலீ ரென்று நகைத்தார்கள்).*

**நல்லமுத்துப் பிள்ளை.**—*அரங்கசாமி செட்டியாரை என்ன வென்று நினைத்து ஐயா அவர்கள் சீட்டு வேண்டாமென்று சொன்னார்கள்.*

**ஞானம்பிகை.**—*அரங்கசாமி செட்டியார் நெடுநாளைக்கு முன் கடன் வாங்கியும், அதற்கொரு ஆதாரமும் இல்லாமலி ருக்க அத்தொகையை வஞ்சிக்க மனங்கொள்ளாமல் ஐயா அவர்கள் நொந்திருக்கும் ஸமயத்தில் பத்திரம் எழு திக்கொடுக்க ஸம்மதிக்கிறதால், அவரை யோக்கிய ரென்றே சொல்லவேண்டும். ஆனதால் ஐயா அவர்கள் பத்திரம் வேண்டாமென்றார்.*

**வந்தவன்.**—(ஞானம்பிகை சொல்வதைக் கேட்டு வியந்து) *ஆம் ! அம்மா ! அவர் யோக்கியரென்பதை யாவருக்கும் விளங்க வைத்துவிடுகிறேன் (என்று தான் கொண்டுவந்த மூட்டையை அவிழ்த்து, ஒரு பெட்டியை யெடுத்து வெளியில் வைத்து, அதைத்திறந்து அதில் விலையுயர்ந்த நகைகள் இருப்பதைப் பார்க்கும் விதம் கறுப்பண்ண பிள் ளையிடம் பெட்டியைத் தள்ளி) ஐயா ! இப்பெட்டியிலுள் ளதை ஓர் விலை வைத்துத் தங்களை எடுத்துக்கொள்ளும் படியாகவும் பாக்கித் தொகையை ஒரு மாதத்தில் கொடுத்து விடுவதாகவும் சொல்லச் சொன்னார். வெளியார் இந்த நகைகளை ஆறாயிரத்துக்கு மதிக்கிறார்கள்.*

**கறுப்பண்ண பிள்ளை.**—*நான் நகைகளை எடுத்து என்ன செய் கிறது ? அவைகளை விலைகூறித் திரியவேண்டும். எனக்கு நகைகள் வேண்டியதில்லை. அவரை ஒரு மாதத்துக்குப்*

பின் முழுத்தொகையையும் தரசசொல். அவர் மிக்க யோக்கியராகக் காண்கிறார். அவர் மனம் நோக இந்த நகைகளை ஒப்புக்கொள்ளக்கூடாது. இதில், மோராமாலை, வைரக் கம்மல், வயிர அட்டிகை, கெட்டிக்காப்பு முதலிய நகைகளெல்லாம் இருக்கின்றன. இவைகளையெல்லாம் தன்னுடைய மனைவிக்கு வாங்கி யிருப்பார்போல் காண்கிறது. ஆயினும் ஒன்றும் உபயோகப்படுத்தினதாகக் காணவில்லை (என்று சொல்லி) அப்பா! எடுத்துபோக வேண்டாம்! வேண்டாம்! அவர் மனமகிழ்வோடு அனுப்பியதை நான் வேண்டாமென்று சொல்லவுங்கூடாது. வெளியார் மதித்த ஆறாயிரத்துக்கே எடுத்துக்கொள்ளுகிறேன் (என்று பெட்டியை எடுத்து ஞானம்பிகையைப் பார்த்து) அம்மா! நான் கிழவன். எனக்கு ஒருவரும் இல்லை. இன்றைக்குச் சாவேனோ! நாளைக்குச் சாவேனோ! என்னிடத்தில் இருப்பதை நான் யாருக்குக் கொடுக்கப் போகிறேன். நீ என்னைத் தந்தையென்று எண்ணியதுபோல, நான் உன்னை என் மகளாக எண்ணியிருப்பதால், நீயே இதை எடுத்துக் கொள்ளவேண்டும் (என்று ஞானம்பிகை கையில் கொடுத்தார்).

ஞானம்பிகை.—(அப்பெட்டியை இருகையாலும் வாங்கிக் கொண்டு) ஐயாவே! தாங்கள் என்னைத் தங்களுடைய புதல்வியாக எண்ணி, பெருந்தொகை பெறுமதியுள்ள நகைகளடங்கிய இப்பெட்டியை எனக்குக் கொடுக்கத் தாங்கள் கொண்ட எண்ணம் நிலைநிற்க நான் பெற்றுக்கொண்டு தங்களை மகிழச் செய்வது என் கடமையாயிற்று. தந்தையின் கருத்துக்கு உடன்பட்டு மகள் நடப்பாளாயின், மகளுடைய கருத்துக்கு விரோதம் வராமல் தந்தையும் நடப்பது அவசியமல்லவா? இதை 'ஆம்' என்று யாவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். ஆனதால் (என் தந்தையாகிய) தங்களுக்கு முதல் உண்டாகிய எண்ணம்போல் (தங்கள் குமா

ரத்தியாகிய) எனக்கும் இருப்பதால், தாங்கள் இப்பெட்டியை அவருக்கே அனுப்பிவிடவேண்டும் ; எனக்கு வேண்டாம் (என்று அவர் அருகில் வைத்துவிட்டுச் சமையலறைக்குச் சென்றாள்).

அங்கிருந்த யாவரும் திடுக்கிட்டு இதென்ன அதிசயம் என்றார்கள்.

மீனம்பாள் சமையலறைக்குள் ஓடி, ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு "மச்சி ! நீ உலகத்தில் பிறக்காத பெண்ணாய்ப் பிறந்திருக்கிறாய்" என்று அடிக்கடி முத்தமிட்டுக் கொண்டிருந்தாள்.

நல்லமுத்துப் பிள்ளை.—ஞானம்பிகையின் நிலைமை இதை வெறுக்கத் தக்கதோ ! இவளுடைய மனது யாருக்கிருக்கும் (என்று வியந்தார்).

வரதராஜ பிள்ளை —ஓர் தனவந்தன் பெண்ணும் இதை வேண்டாமென்று சொல்லுவாளா ? (என்றார்).

வைத்தியர்.—வேறு பெண்களாக இருந்தால் ஆயிரங் கும்பிடு போட்டுப் பெற்றுக்கொள்ளுவார்கள் (என்றார்).

கறுப்பண்ண பிள்ளை.—என்னுயிரைக் காப்பாற்றியதற்கு நான் என்ன செய்கிறது ? இதையாகிலும் கொடுக்கலாம் என்றால், அவள் அதைப் பெற்றுக்கொள்ளாமல் எறிந்து விட்டுப் போய்விட்டாள். இவளுடைய தைரியத்துக் கேற்ற குணமும், குணத்துக்கேற்ற ஒழுக்கமும், ஒழுக்கத்துக்கேற்ற அழகும் இருக்கிறது. ஆனால் அழகுக்கேற்ற பொருளோ இவளிடத்தில் இல்லை (எனப் புகழ்ந்து நகைகளைக் கொண்டுவந்தவனைப் பார்த்து) அப்பா ! நீ இதைக் கொண்டுபோய் அவரிடத்தில் கொடுத்துவிடு. நான் அவகாசத்தில் அவரை வந்து பார்க்கிறேன் என்று சொல்லு (என்று அவனை அனுப்பினார்).

## 12—ம் அத்தியாயம்

ஞானம்பிகை, கறுப்பண்ண பிள்ளையைத் தன் தந்தை போலெண்ணி, அவருக்கு வேண்டிய பணிவிடையைச் செய்து கொண்டு வந்தாள். வரதராஜ பிள்ளையும் மீனும்பாளும் முகங் கோணுமல் அவரை மேன்மையாகவே நடத்திவந்தார்கள். கறுப்பண்ண பிள்ளை, வெளியில்சென்று வரும்பொழுதெல்லாம், நல்ல மிட்டாய்களும் பழங்களும் வாங்கிவந்து இது என் மகளுக்கென்றும் இது மருமகளுக்கென்றும் கொடுப்பதை அவர்கள் வாங்கி வைத்திருந்து, அவருக்கே அதிகம் கொடுத்துச் சாப்பிடச் செய்வார்கள். கறுப்பண்ண பிள்ளை அவ்வீட்டுக்குச் சென்ற ஒரு மாதத்துக்குப் பின் தபால்மார்க்கமாய் வந்த ஒரு கடிதத்தை வரதராஜ பிள்ளை மாலை ஏழுமணிக்கு ஞானம்பிகை கையில் கொடுத்தார்.

**ஞானம்பிகை.**—அதை வாங்கி வாசித்துப் பார்த்து, தன் கண்களில் நீர்வடிய மீனும்பாளிடம் சென்று, இந்தக் கடிதத்தைப் பாருங்கள் (என்று கொடுத்தாள்).

**மீனும்பாள்.**—அதை வாசித்துப்பார்த்து. அத்தைக்கு தேக அசௌக்கியம் என்று உன்னை உடனே வரும்படி எழுதியிருக்கிறார்களே ! என்ன செய்யலாம் என்று யோசிக்கிருய ? நீ எட்டேகால் மணி வண்டியில் உன் அண்ணனை அழைத்துக்கொண்டு போனுல், காலை ஏழெட்டுமணிக்குத் திருக்கழுக்குன்றம் போகலாம் என்று நினைக்கிறேன். எதற்கும் உன் அண்ணனைக் கேட்கலாம். அவர் திருக்கழுக்குன்றத்திற்குப் போய் வந்திருக்கிறார் (என்று இருவரும் வரதராஜ பிள்ளையிடம் சென்று கடிதத்தைக் காட்டி) இதில் தங்களுடைய ஸகோதரியின் தாய அதிக நலியாகத திருக்கழுக்குன்றத்தி விருப்பதாகவும் தங்களுடைய ஸகோதரியை விரைவில் வருமபடியாகவும் எழுதியிருக்கிறார்கள். நான் தங்களை அழைத்துக்கொண்டு போகச் சொன்னேன். இராத்திரி எட்டேகால் மணி

வண்டி யேறினல் காலே எத்தனை மணிக்குத் திருக்கழுக் குன்றம் போய்ச சேரலாம் (என்று கேட்டான்).

வரதராஜ பிள்ளே.—இராத்தி எட்டேகால் மணிக்குப் பிரயாணப்பட்டால், காலே ஐந்துமணிக்குச் செங்கல்பட்டுக்குப் போகலாம். அங்கு உடனே ஜட்காவண்டி ஏறினல், ஏழு மணிக்குத் திருக்கழுக்குன்றம் சேரலாம். ஒன்பதேமுக் கால் மெயிலில் ஏறினல், காலே ஆறுமணிக்குச் செங்கல் பட் சேரலாம். பின் இரண்டுமணி நேரத்தில் திருக்கழுக் குன்றம் போகலாம். ஆனல் மெயில்வண்டியில் போகிறது கஷ்டம். எட்டுமணி எக்ஸ்பிரஸ் வண்டியிலேயே போகவேண்டும். நீங்கள் விரைவில் சாப்பாடு சித்தப்படுத் துங்கள். நானும் சித்தமாகிறேன்.

ஞானம்பிகை.—அண்ணு ! நான் சொல்வதைக் கேட்டுக் கோபிக்கவேண்டாம் ! என் தாய் ஒருவர் வீட்டில் வேலே செய்கிருர்கள். நான் அவர்களேப் பார்க்கப் போகிறேன். தாங்கள் என்னேடு வருவது நியாயமல்ல ! என்னேப் பெண்பிள்ளேகள் ஏறிப்போகும் வண்டியில் ஏற்றிவிட்டால், அதுவே போதும். நான் செங்கல்பட்டிலிறங்கித் திருக்கழுச்குன்றம் போகிறவர்களேத் துணேக்கொண்டு போகிறேன்.

வரதராஜ பிள்ளே.—அம்மா ! என்னே ஏன் வரவேண்டாம் என்கிருய் ? உன்னுடைய தாயார் வேலே செய்தால், அதில் என்ன தோஷம் ?

ஞானம்பிகை.—அண்ணு ! தங்களுக்கு ஸம்ரக்ஷணே குறைவு படும் ! ஆனதால் தங்களே அழைத்துப்போய் நான் துக் கப்பட வேண்டிவரும்.

வரதராஜ பிள்ளே.—அம்மா ! நீ அதைக் குறித்துக் கவலே கொள்ள வேண்டாம் ! அங்கு எத்தனேயோ பிராமணுள் கிளப் இருக்கிறது.

ஞானம்பிகை.—அவ்விதம் தாங்கள் பிராமணுள் கிளட்பில்

சாப்பிட்டால், வேறாக அல்லவோ இருக்கவேண்டும். தாங்கள் வேறிடத்திலிருந்தால், தாங்கள் என்னோடு வருவதில் பலன் ஒன்று மில்லை. நான் விரைவில் வந்து விட வேண்டு மென்று எண்ணினாலும் என்னுடைய தாயாருடைய நிலைமையை அறிந்தல்லவோ நான் வர வேண்டும். நான் என் தாயாரோடு அதிக நாள் இருக்க வேண்டியதாயின, தாங்கள் தனித்தே வரவேண்டும். இதை யெல்லாம் யோசித்தே நான் தனித்துப் போவது உத்தமமென்றேன்.

**மீனம்பாள்.**—என் நாத்தனார் திருக்குறளில் எனக்கு வாசித்துக் காட்டியதுபோல், தானும் வினைத்துப் பின் வருவதை முன் யோசித்தே செய்வாள் (என்று நகைத்தாள்).

**வரதராஜ பிள்ளை.**—ஆம்! என் தங்கை சொல்லுவது நியாயமே! அம்மா! நீ உன் இஷ்டம்போல் செய்யலாம். ஆனால் நீ விரைவில் வந்துவிடவேண்டும்.

**ஞானம்பிகை.**—நான் அவ்விடம் இருப்பது அநாவசியம் என்று எனக்குக் காணும்பொழுது பிரயாணப்பட்டுவிடுவேன்.

உடனே தனக்கு அவசியம் வேண்டிய துணிகளையும் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு சாப்பிட்டுப் பிரயாணப் பட்டவள், "இன்னும் பெரியவர் வரவில்லையே! அவரிடம் சொல்லிப போக முடியவில்லையே!" என்று கவலை கொண்டாள்.

**மீனம்பாள்.**—மச்சி! அவர் எட்டு மணிக்கு மேற்பட்டே வருவார். அவர் வந்தவுடன் உன் ஸமாசாரத்தைச் சொல்லுகிறேன்.

**வரதராஜ பிள்ளை.**—அவர் வரும்பரியந்தம் காத்திருந்தால் வண்டி தடபிவிடும்.

**ஞானம்பிகை**—அவருக்கு நான் நமஸ்காரம் செய்ததாகச் சொல்லிவிடுங்கள (என்று மீனம்பாளுக்கு நமஸ்காரம் செய்தாள).

மீனம்பாள் கண்கலக்கத்தோடு முத்தங்கொடுத்து விடை கொடுத்தாள்.

வரதராஜ பிள்ளை ஞானம்பிகையை அழைத்துப்போய் டிக்கட் வாங்கிக்கொடுத்து இருபது ரூபாவைக் கொடுக்கப் போனார். ஞானம்பிகை தன்னிடத்தில் ரூபா இருப்பதாகச் சொல்லியும், வரதராஜ பிள்ளை கட்டாயப்படுத்திப் பத்து ரூபா கொடுத்தார். அவள் அதை இருகையாலும் வாங்கிக் கொண்டு அவருக்கு நமஸ்காரஞ்செய்து வண்டியில் ஏறினாள். வண்டி போகுந்தனையும் வரதராஜ பிள்ளை நின்றிருந்து, கண்களில் நீர்வடிய வீட்டுக்குத் திரும்பிவந்து கவலையோடு உட்கார்ந்திருந்தார். நெடுநேரத்துக்குப் பின் கறுப்பண்ண பிள்ளை, இரண்டு பொட்டணத்தோடு வீட்டுக்குள் வந்து, "அம்மா! ஞானம்பிகை" என்றழைத்தார். மீனும்-பாள "ஏன் அழைத்தீர்கள்?" என்று அழுதுகொண்டே வந்து கேட்டாள்.

கறுப்பண்ண பிள்ளை —அம்மா! இது உனக்கு இது ஞானம்பிகைக்கு (என்று இரண்டு பொட்டணத்தைக் கொடுத்து, முகத்தைப் பார்த்து), அம்மா! என்ன! என்ன! ஏன் அழுகிறாய்? (என்று ஆத்திரத்தோடு கேட்டார்).

மீனாம்பாள் —(முகத்தைத் துடைத்துக்கொண்டு) ஞானம்பிகை என்னை விட்டுப் போனது எனக்கு அதிக துக்கமாக இருக்கிறது (என்றழுதாள் .

கறுப்பண்ண பிள்ளை.—அம்மா! என்ன சொன்னாய்? ஞானம்பிகை உன்னை விட்டுப் போனாளா! ஏன்? ஏன்?

மீனாம்பாள்.—(ஞானம்பிகை போக நேரிட்ட காரணத்தைச் சொல்லி), தங்களிடத்தில் சொல்லிக்கொண்டு போக முடியாததைக் குறித்து அதிகம் கவலைகொண்டு, தங்களுக்கு நமஸ்காரம் சொல்லச்சொல்லித் தான் விரைவில் வந்துவிடுவதாகப் போயிருக்கிறாள்.

கறுப்பண்ண பிள்ளை.—என்ன அநியாயம்! என்னிடத்தில் ஒரு வார்த்தை சொல்லாமல் போய்விட்டாளே (என்று கண் கலங்கினார்).

அன்றிரவு ஒருவரும் திருப்தியாகச் சாப்பிடாமல்

கவலையோடிருந்தார்கள். மறுநாள் காலை ஞானம்பிகை செங்கல் பட்டி லிறங்கித் திருக்கழுக் குன்றத்திற்குப் போகும் ஜட்கா வண்டிகளைப் பார்த்து, அவைகளிலெல்லாம் ஆண்பிள்ளைகள் போகிறதைக் கண்டு, அவர்களோடு போக மனங்கொள்ளாமல், தனிவண்டிபேசி ஏறிக்கொண்டாள். வண்டி செங்கல்பட்டைக் கடந்து போகும்பொழுது, முன் போகும் வண்டிகள் அதிக தூரம் போய்விட்டதைக் கண்டு, அவ்வண்டிகளோடு சேர்ந்துப் போகும்படி வண்டிக்காரனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

**வண்டிக்காரன்.**—அம்மா! நீ பயப்படவேண்டாம். நமக்குப் பின்னாலும் வண்டி வருகிறது. நமக்குமுன் போகும் வண்டிகள் நமக்கு முன்னால் பிரயாணப்பட்டுப் போகிற தால், அவைகள் அதிக தூரம் போய்விட்டன; என் குதிரை இதைவிட விரைவாய் ஓடாது (என்றான்).

கொஞ்ச நேரத்துக்கப்பால் பின்வந்த வண்டிக்காரன் நெருங்கி, ஞானம்பிகை ஏறிப்போகும் முன் வண்டிக்காரனை "ஓட்டு, ஓட்டு" என்று கூவிக்கொண்டிருந்தான். ஞானம் பிகை, பின் வண்டியில் யார் வருகிறார்களென்று பார்த்து, அதில் முன்னே திரை கட்டியிருப்பதைக் கண்டு, யாரோ முகமதியப் பெண்பிள்ளைகள் போகிறார்களென்று எண்ணி யிருந்தாள்.

**பின் வண்டிக்காரன்.**—(முன் வண்டிக்காரனைக் கூவி) அடே! நீ ஓட்டுகிறாயா? இல்லையா? இவ்விதம் போனால் நாம் எப்பொழுது திரும்புகிறது?

**முன் வண்டிக்காரன்.**—என் குதிரை இதைவிட விரைவாய்ப் போகாது. வேண்டுமானால் நான் என் வண்டியை ஒதுக் கிக்கொள்ளுகிறேன். நீ முன்னால போ.

**பின் வண்டிக்காரன்.**—அடே! என் குதிரை ஒரு வண்டியைத் தொடர்ந்து சென்றால் வேகமாகப் போகும். முதல் வண்டியாகப் போனால் வேகமாகப் போகாது. சற்று நிறுத்து; நானாவது வந்து உன் குதிரையை ஓட்டிப் பார்க்கி

றேன் (என்று தன் வண்டியை அவனை ஓட்டச்செய்து அவன் வண்டியைத் தான் ஓட்டிச் சென்றான்).

**முன் வண்டிக்காரன்.**—(ஞானம்பிகையைப் பார்த்து) அம்மா! பார்த்துக்கொண்டீர்களா? அவன் கைக்கு எந்தக் குதிரையும் ஓடுகிறதில்லை. ஓடாத குதிரை எவ்வளவு தூரம் முந்தி வந்துவிட்டது? அவனுடைய வண்டியைப் பாருங்கள்; எவ்வளவு தூரத்துக்குப் பின்னால் வருகிறது (என்று நகைத்தான்).

**ஞானம்பிகை.**—அப்பா! நீ முந்திப் போகவேண்டாம். அந்த வண்டியோடு சேர்ந்தே போகவேண்டும் (என்று சொல்லிக்கொண்டிருந்தாள்).

வண்டி கீரைப்பாக்கம் ஸமீபிக்கு முன், வண்டிக்காரன் பின் வண்டிக்காகக் காத்திருக்கவேண்டுமென்று வண்டியிலிருந்திறங்கி, பின் வண்டியோடு சேர்ந்துபோக வண்டியிலேறி யோட்டாமல் நடந்தே வண்டியை நடத்திக்கொண்டு போனான். வண்டி அதிக தூரம் போகுமுன், வண்டியின் ஒரு சக்கரம் சுழன்று வண்டி விழுந்தது. வண்டிக்குள் இருந்த ஞானம்பிகை "அம்மா!" என்று வண்டிக்குள் விழுந்தாள்.

**வண்டிக்காரன்.**—(குதிரையை அவிழ்த்துவிட்டு உடனே ஞானம்பிகையை வண்டிக்குள்ளிருந்து வெளியில் இழுத்துவிட்டு), அம்மா! அடிபட்டதோ? அந்தப் படுபாவி ஸரியான கடையாணி போடாமல் மோசஞ்செய்துவிட்டான். என்ன செய்யலாம்? (என்று பரிதாபப்பட்டான்).

**ஞானம்பிகை.**—எனக்குத் தலையில் அடிபட்டது. என்ன செய்யலாம்? படவேண்டியதை பட்டே தீரவேண்டும். நீ என்ன செய்யப் போகிறாய் (என்று கேட்டாள்).

**வண்டிக்காரன்.**—அம்மா! வண்டியிருசு ஒடிந்துபோய்விட்டது. பின் வரும் வண்டியில் நான்கு முகமதியப் பெண்பிள்ளைகள் இரண்டு குழந்தைகளோடு போகிறார்கள். வேறு வண்டி பார்த்தே தங்களை அனுப்பவேண்டும். இவ்

ஹூரில் வண்டிகள் இருக்கும். தாங்கள் என்னோடு வந்தால் ஒரு வண்டி பேசித் தங்களை அனுப்புகிறேன்.

இந்த வார்த்தைகளைச் சொல்லி, அவன் ஞானம்பிகையை ஊருக்குள் அதிக தூரத்திலிருந்த ஒரு வீட்டுக்குள் அழைத்துப்போய் உட்கூடத்தில் விட்டு, "உட்காருங்கள், நான் வண்டி பார்த்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி ஐம்பது வயது முப்பது வயது என்று கிதானிக்கத்தக்க கோரமான முகத்தையுடைய தாயும் மகளுமாய் அவ்வீட்டிலிருந்தவர்களில் மகளைப் பார்த்து, "அம்மா! லக்ஷ்மி! இந்தம்மாள் ஏறிவந்த வண்டியின் இருசு ஒடிந்துவிட்டது. நான் வேறு வண்டி பார்த்துவருமளவும் இந்தம்மாள் இங்கிருக்கட்டும். நீயும் உன் தாயும் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, அவளை வெளியில் அழைத்து அவளிடத்தில் ரகசியமாகச் சில வார்த்தைகளை உரைத்து நீங்கினான்.

இலக்ஷ்மி.— (வீட்டுக்குள் வந்து ஞானம்பிகையைப் பார்த்து) அம்மா! ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? உட்கார் (என்று ஒரு பாயைக் கொண்டுவந்து போட்டுத் தன் தாயிடம் சில வார்த்தைகளை ரகசியமாகச் சொன்னாள்).

ஞானம்பிகை.— அம்மா! நான் உட்கார்ந்திருக்க நேரமில்லை. நான் விரைவில் திருக்கழுக்குன்றம் போகவேண்டும் வண்டிக்காரன் வருகிறதற்கு அதிக நேரம் செல்லுமோ (என்று கேட்டாள.)

இலக்ஷ்மி.—அதை எவ்விதம் சொல்ல முடியும்? செங்கல் பட்டிலிருந்து காலியாக வண்டி வராது. ஆனதால் திருக்கழுக் குன்றத்துக்கு ஆள் போயே வண்டி கொண்டு வரவேண்டும்.

ஞானம்பிகை.—என்ன அம்மா! இவ்விதம் சொல்கிறாய்! இவ்விடத்தில் வண்டி யிருக்கிறது என்று சொல்லி வண்டிக் காரன் என்னை இங்கு அழைத்து வந்தான். வண்டி அகப்படுவது கடினமாயின், நான் நடந்தே திருக்கழுக் குன்றம் போய் விடுவேனே!

இலக்ஷ்மியின் தாய்.—சிலவேளை இவ்விடத்தில் வண்டி வந்து நின்றிருந்தாலும் இருக்கக்கூடும். ஆனதால் வண்டிக்காரன் அவ்விதம் சொல்லியிருப்பான்.

இலக்ஷ்மி.—ஆம்! ஆம்! அதை நான் மறந்தேன்! வண்டிக்காரன் விரைவில் வந்துவிடுவான். நீ ஏனம்மா தனித்துத் திருக்கழுக்குன்றம் போகிறாய்?

ஞானம்பிகை.—நான் அதைச் சொல்லிக்கொண்டிருக்க நேரமில்லை. நீங்கள் வண்டி நிற்கிற இடத்தைச் சொன்னால், நானாகிலும் போய்ப் பார்த்து வண்டி அமர்த்திக்கொண்டு போகிறேன்.

இலக்ஷ்மியின் தாய்.—நீ ஏன் அவசரப்படுகிறாய்? நீ போனால் வண்டிக்காரன் சத்தம் அதிகம் கேட்பான். வண்டிக்காரன் வண்டிக்காரனிடத்தில் அதிகம் கேட்கமாட்டான். அவன் விரைவில் வந்துவிடுவான்.

ஞானம்பிகைக்குத் தலையில் பட்ட அடியால் உபத்திரவமாயிருந்தாலும, அதை கவனிக்காமல் வண்டிக்காரன் வரவில்லையே என்று அதிக கவலையாக இருந்தாள். சில நேரத்துக்குப் பின் "இன்னம் அவனுக்காகக் காத்திருப்பதில் பலனில்லை. நானே போய்ப் பார்க்கிறேன்" என்று மூட்டையை எடுத்துக்கொண்டு வெளியில் போக எத்தனித்தாள்.

இலக்ஷ்மி.—(வழிவிடாமல் மறித்து), அம்மா! நீ அவசரப்படவேண்டாம். வண்டிக்காரன் வந்துவிடுவான் (என்று கையைப்பற்றி இழுத்து வந்தாள்).

ஞானம்பிகை.—அம்மா! எனக்கு நேரமாகிறது. நான் இன்னும் இவ்விடத்தில் இருக்கமுடியாது. எனக்கு வண்டி அகப்படாமற் போனால் தோஷமில்லை. நான் நடந்தே போகிறேன்.

அப்பொழுது, ரூபா எண்ணும் சத்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அப்பொழுது ஒருவன் வீட்டுக்குள் வருவதைக் கண்டு அதிசயித்தாள்.

**வந்தவன்.**—(ஞானம்பிகையைப் பார்த்து) நடேசனுடைய ஸாமர்த்தியத்தைப் பார்த்தாயா ! (என்று தேகங் குலுங்க நகைத்து அவ்வீட்டிலிருந்த பெண்பிள்ளைகளை அவ்விடத்தைவிட்டுப் போகச் சொல்லி ஜாடை காட்டினன்).

**ஞானம்பிகை.**—ஐயா ! இதென்ன ஆச்சரியம் ! நீர் எப்படி இங்கு வந்தீர் ? நான் இவ்விடத்தி லிருப்பதை எவ்விதம் அறிந்தீர் ? தரங்கன்பாடியில் யாவரும் க்ஷேமமாக இருக்கிறார்களா ?

**நடேசன்.**—அவர்களிடத்திலிருந்து கெடுதலான ஸமாசாரம் ஒன்றும் வராததால், யாவரும் க்ஷேமமாக இருக்கிறார்களென்றே நினைக்கவேண்டும். நீ இவ்விடம் இருப்பதை வண்டிக்காரனால் அறிந்தேன்.

**ஞானம்பிகை.**—தாங்கள் எங்கே போக இவ்விடம் வந்தீர்கள் ?

**நடேசன்.**—நான் உன்னைப் பார்க்கவே இவ்விடம் வந்தேன்.

**ஞானம்பிகை.**—என்னைப் பார்க்க இவ்விடம் வந்தேன் என்பது ஆச்சரியத்தைத் தருகிறது ! நான் எங்கிருந்தேன் ! நீர் எங்கிருந்தீர் ? என்னைப் பார்க்க இவ்விடம் வந்தீர் என்றால், யார் நம்புவார்கள் (என்று நகைத்தாள்).

**நடேசன்.**—நான் நடந்ததைச் சொன்னலொழிய நான் சொல்லியதை நம்பமாட்டாய் ! மாயவரத்தில் என் சினேகன் ஒருவன் சென்னைக்குப் போக இருந்ததால், அவனை வழி கூட்டியனுப்ப நான் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தேன். உன்னைப் பெண்பிள்ளைகள் ஏறியிருக்கும் வண்டியில் பார்த்து, டிக்கட் பரிசோதனை செய்பவனை அழைத்து, நீ எந்த ஊருக்குப் போகிறாய் என்று பார்த்துவரச் செய்து, நானும் உன்னோடு வநது செங்கல்பட்டில் இறங்கினேன். நீ திருக்கழுக்குன்றம் போக வண்டி விசாரித்துக் கொண்டிருக்கும் பொழுது, நான் ஒரு வண்டிக்காரனை அழைத்து உன்னைத தனிவண்டியில் கொண்டு போகச் சொல்லி, நானும் வேறோர் வண்டியிலேறி வண்டிக்கு முன் திரைகட்டி நான் உன்னைப் பின் தொடர்ந்து

வந்தேன். வரும்பொழுது நான் ஏறிவந்த வண்டிக்கார னுக்கு என் கருத்தைச் சொல்லி, அவன் ஸம்மதிக்கும்படி அவனுக்கு ஐந்து ரூபா கொடுத்து, என் எண்ணப் பிர காரம் மற்றதையும் முடித்து வைத்தால் அவனுக்குப் பத்து ரூபா கொடுக்கிறேன் என்று சொன்னதால், அவன் ஸம்மதப்பட்டு உன்னைக் கொண்டுபோகும் வண்டிக்கார னுக்குச சொல்லச் சொல்லி, அவனை நான் ஏறிப்போகும் வண்டியை ஒட்டும்படி செய்தான். அவன் நீ ஏறிப்போன வண்டியிலேறி, குதிரையை வேகமாக நடத்திப் போனான். என் வண்டியை ஒட்டவந்தவனை மெதுவாக நடத்திப் போகசசொல்லி என் கருத்துக் கிசைய வைத்ததில், அவன் மற்றவனை யறிந்தவர்கள் ஸமீபத்திலுள்ள கீரைப் பாக்கம் என்ற ஊரில் இருக்கிறார்கள் என்றான். உன் வண்டியை ஒட்டிச் சென்றவன் இந்த ஊர் ஸமீபிக்கும் பொழுது பின்வண்டிக்குக் காத்திருப்பதுபோல் வண்டியி லிருந் திறங்கி, கடையாணியைக் கழற்றி வண்டியை விழச் செய்தான். பின் நடந்த யாவும் தெரிந்ததே? என் ஸாமர்த்தியத்தைப் பார்த்தாயா (என்று தேகங் குலுங்க நகைத்தான்).

ஞானம்பிகை.—ஐயா! என் தாயார் அதிக நலியாக இருக்கி றார்களென்று நான் மிக்க அவசரமாகப் போகிறவளை நீர் இவ்வளவு சிரமமெடுத்து என்னைத் தடுத்துவைத்திருப்ப தின் கருத்துத் தெரியவில்லை.

நடேசன்.—நீ இன்னம் என் கருத்தைத் தெரிந்துகொள்ள வில்லையா? உன்னுடைய அழகே என்னை இவ்விதம் செய் யச் சொல்லிற்று.

ஞானம்பிகை—நீர் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்! உங்களுக் குப் பொருள் பூமி அதிகம் உண்டு. உங்களுக்கிருக்கும் பொருளை நல்ல வழியில் செலவு செய்யாமல் ஏழையாகிய என்னைத் துன்பப்படுத்த உங்களுடைய பொருளைச்செலவு

செய்கிறீர். உம்முடைய தமக்கையின் வீட்டில் மேன்மையாக இருந்த என்னை அவ்விடத்திலிருந்து துரத்திவிடும்படி செய்தீர். அக்காலத்தில் உம்மை ஙியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோய் தண்டிக்கவேண்டு மென்றதை நான் தடுத்ததால், என்னை மீண்டும் தொந்தரவு செய்யத் துணிந்தீர். நீர் முன் அவமானம் அடைந்தது முதல் நல்வழியில் திரும்பி யிருப்பீர் என்று நான் நினைத்திருக்க, உம்முடைய தீச்செய்கை உம்மை விட்டு நீங்காமலிருப்பதைக் குறித்துத் துக்கப்படுகிறேன். உமக்கு நற்புத்தி கற்றுக் கொடுக்க ஒருவரும் இல்லாமலா போய்விட்டார்கள்?

நடேசன்.—ஞானம்பிகை! நான் உன் கருத்தை அறிந்த பின் உன்னை விட்டுவிடுவது ஙியாயமல்ல என்றே இதைச் செய்தேன. நீ இனிமேல் சொல்லும புததியைக் கேட்டு நடக்கிறேன்.

ஞானம்பிகை.—என் கருத்து என்னவென்று அறிந்தீர்?

நடேசன்.—(நகைத்து) நான் உன் கருத்தை அறியவில்லையென்று நினைத்திருக்கிறப்போல் காண்கிறது. நான் உன்னுடைய சூதான மொழியை அப்பொழுதே அறிந்து கொண்டேன். உன்னை மீனாக்ஷிஸுந்தரம் அழைத்துப் போகாமலிருந்தால், அப்பொழுதே உன்னை அழைத்துப் போய் உனக்கு வேணடியதைச செய்திருப்பேன். அவனால் தடைப்பட்டது. நான் உடனே உன்னிடம வராமற் போன குற்றத்தை மன்னிக்க வேண்டும்.

ஞானம்பிகை.—ஐயா! நீர் சொல்வது எனககு விளங்கவில்லை. நீர் ஏதோ தபபபிப்பிராயம் கொணடிருக்கிறீரபோல் காண்கிறது.

நடேசன்.—நான் தப்பபிட்பிராயம் ஒன்றும் கொள்ளவில்லை. நான் உன உண்மையான கருத்தைக் கண்டுகொண்டதால், என்னைக் கட்டிப்பிடித்து ஒரு முத்தங்கொடு (என்று நெருங்குகிறான்).

ஞானம்பிகை.—நீர் தூரம் கின்றே பேசும் ! என் உண்மையான கருத்து என்னவென்று கண்டுகொண்டீர் ?

நடேசன்.—நான் அதைச் சொல்லக் கேட்டு ஸந்தோஷப் படவோ கேட்கிறாய் ? உன் இஷ்டப்பிரகாரம் அதைச் சொல்லி ஸந்தோஷப்படுத்துகிறேன். நான் உன்னை என் தமக்கை வீட்டினின்று துரத்தச் செய்த கொடுமையால் அடைந்த அவமானத்தோடு நீங்கிய உன்னை நான் கண்டு என் கருத்தைச் சொன்னபொழுது, உனக்கு அப்பொழுது இருந்த கோபத்தால் மறுத்தாய். பின் நல்லமுத்துப் பிள்ளையும் மீனுக்ஷிஸுந்தரமும் வந்தவுடன் உன் கோபம் முற்றிலும் நீங்கி 'இவரோ தனவந்தர். நாமோ ஏழை. நமமை ஒரு தனவந்தன் மகன விவாகஞ் செய்துகொள்ள மாட்டான். நாம் பெருமையடைய நம்மை இவர் கலியாணம் செய்துகொள்ளுவதாகப் பிரமாணிக்கம் செய்து கொடுக்கிறேன் என்பதால, இவருடைய மனம் வருந்த நாம் ஒன்றைச் சொன்ஞல், பின் நம்மைத் தேடார் ஆனதால் இப்பொழுது இவரை மீட்டுவிட்டுப் பின் இவரை விவாகஞ செய்து கொள்ளலாம்' என்று குற்றத்தை நீ ஏற்றுக்கொண்டதாகச் சொல்லியனுப்பினுய். உன் நல்லெண்ணத்தை முதலில் அறிந்துகொள்ளாமல், இவ்வளவு கொடிய காரியத்தைச செய்த நம்மை ஏன் தண்டிக்கச் சொல்லாமல் விட்டாள் என்று யோசித்துப்பார்க்க, உன் கருத்துத் தெளிவாய் விளங்கியது. நான் உன் கருத்தை நன்றாய் அறிநதேன், பார்த்தாயா (என்று கெக்கலி கொட்டி நகைத்தான்).

ஞானம்பிகை.—ஐயா ! நீர் என் கருத்தை நன்றாய் அறியாமலே மோசம்போனீர் ! உம்முடைய தமக்கையின் மனம் வருந்தக்கூடாதென்று நான் சொல்லியனுப்பியதைக் கேட்டிருந்தும், உம்மை விவாகஞ் செய்துகொள்ள எண்ணங் கொண்டிருப்பதாகச் சொல்லவந்தீர். போம் ! போம் !

நான் பணத்துக்கு ஆசைப்பட்டவளென்று நினைக்கவேண்டாம்! நான் இன்னும் காலதாமதம் செய்துகொண்டிருக்க முடியாது. என் தாய் எவ்விதம் இருக்கிறார்களோ என்று நான் உடனே போய்ப் பார்க்கவேண்டும். விலகி நில்லும் (என்று வெளியிற் போக எத்தனித்தாள்).

நடேசன்.—(ஞானம்பிகையைப் பிடித்து வீட்டுக்குள் தள்ளி) வெளியிலா போகவேண்டும்! நீ வெளியிற் போக உன்னை விட்டுவிடவோ நான் மாயவரத்திலிருந்து வந்தேன்? முன்போல உனக்குத் துணை வருபவர்கள் இவ்விடத்திலிருக்கிறார்களென்று நினைக்கவேண்டாம்! நான் சொல்வதைக் கேட்டு என் இஷ்டம்போல் நடப்பதாக வாக்குக் கொடு. வீணில் நீ துன்பம் அடைவாய். என் நல்ல மனதை நோகச் செய்யவேண்டாம.

ஞானம்பிகை.—அம்மா! அம்மா! நீங்கள் வந்து பாருங்கள். என்னைப் போகவிடாமல் வழிமறித்துக்கொண்டிருக்கிறார் (என்று அவனைத் தள்ளிவிட்டு தூரத்தில் நின்றாள்).

நடேசன்.—நீ இவ்வீட்டில் இருப்பவர்களைக் கூப்பிட்டவுடன் ஓடிவந்து உனக்குத் துணைசெய்வாாகள் என்றோ நினைத்தாய்? அந்த ஆசையை விட்டுவிடு. உன்னை எனக்குச் சொந்தமாக்கி வைக்க அவர்கள் எனக்குத் துணைநிற்பவர்கள் என்றறிந்துகொள் (என்று ஞானம்பிகையைக் கட்டிப் பிடிக்க முயன்றான்).

ஞானம்பிகை.—ஏ பாவிகளா! நீங்கள் என்னை இந்தத் துஷ்டனிடத்தில் ஒப்படைக்கவா துணிந்தீர்கள்? நீங்கள பெண்ணைப் பிள்ளையைப் பெறவில்லையா? நீங்கள் வீணில் பெண்பழி ஏறறுக்கொள்ளவேண்டாம். (என்று சொல்லிய பின்னும் அப்பெண்பிள்ளைகள் வராமையைக் கண்டு) ஐயோ! ஐயோ! என்னைக் கொல்லுகிறார்கள் (என்று பெருஞ் சத்தம் போட்டாள்).

ஞானம்பிகை போட்ட சத்தங்கேட்ட சில பெண்பிள்ளை

கள் ஓடிவந்து, என்ன என்னவென்று கதவைத் தட்டிக் கொண்டிருந்தார்கள்.

**இலக்ஷ்மி.**—(போய்க் கதவைத் திறந்து, வந்தவர்களில் ஒருத்தியைப் பார்த்து), அம்மா ! அலங்காரம் ! என்ன அநியாயத்தைச் சொல்லுகிறது ? இவள் இந்த ஐயா வீட்டில் வேலை செய்திருந்து ரூபாவும் நகைகளும் திருடிக்கொண்டு ஓடிவிட்டாளாம். இவளை அகஸ்மாத்தாய் இன்று இவர் கண்டுபிடித்து, இவளை ஏமாற்றி இங்கு கொண்டுபோய் வைக்க வண்டிக்காரனுக்குச் சொல்லியதால், வண்டிக்காரன் இவளுக்கு சாக்கு போக்கு சொல்லி, கொண்டு வந்து வைத்துப்போனான். அதன்பின் இவர் வந்து 'என்னென்ன எடுத்தாய்' உண்மையைச் சொல் ? என்று கேட்டால், ஒன்றும் சொல்லாமல் இந்த வாயடி கையடி அடிக்கிறாளே (என்றாள்).

**இலக்ஷ்மியின் தாய்.**—ஐயா ! இவள் உண்மையைச் சொல்ல மாட்டாள். நீர் போலீஸ் சேவகனை அழைத்து வந்தால் அப்பொழுது உண்மையைச் சொல்லுவாள்.

**ஞானம்பிகை.**—(வந்தவர்களைப் பார்த்து) அம்மா ! நான் ஏழை! என் தாய் திருக்கழுக்குன்றத்தில் நோயாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கப் போகிறேன். என்னை அநியாயமாகப் போகவிடாமல் தடுத்து என்மேல் வீண்பொய் சொல்லுகிறார்கள். இவர்கள் வார்த்தையை நம்பாமல் என்னைக் காப்பாற்றுங்கள் (என்று கெஞ்சினாள்).

**அலங்காரம்.**—(ஞானம்பிகையைப் பார்த்து) அம்மா ! உன் தாயாரைப் போய்ப் பார்க்கத் தனித்தா போகிறாய் ?

**ஞானம்பிகை.**—ஆம் ! அம்மா !

**அலங்காரம்.**—நீ எங்கிருந்து வருகிறாய் ?

**ஞானம்பிகை.**—நான் கும்பகோணத்திலிருந்து வருகிறேன்.

**அலங்காரம்.**—உன் கையில் ரூபா இருக்கிறதா ?

**ஞானம்பிகை.**—ஆம் ! இருக்கிறது.

**அலங்காரம்.**—எத்தனை ரூபா இருக்கிறது ?

**ஞானும்பிகை**—பதினைந்து ரூபா இருக்கிறது.

**அலங்காரம்.**—நீ கும்பகோணத்தில் என்ன செய்துகொண்டிருந்தாய் ?

**ஞானும்பிகை.**—ஒருவர் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தேன்.

**அலங்காரம்.**—உனக்குச் சம்பளம் என்ன கொடுத்தார்கள் ?

**ஞானும்பிகை.**—எனக்குச் சம்பளமாக ஒன்றும் கொடுக்கவில்லை.

**அலங்காரம்.**—உன்னிடத்தில் இருக்கும் பணம் உனக்கு எப்படிக் கிடைத்தது ?

**ஞானும்பிகை.**—எனக்கு இலவசமாக இவர் தமக்கையும் மற்ெறாருவரும் கொடுத்தார்கள்.

**அலங்காரம்.**—ஏண்டியம்மா ! முக்கால்வாசி நிஜம் வெளிவந்துவிட்டது. இவளைச் சும்மாவிடவேண்டாம் ! இவளை நன்றாய் உதைத்து ஓர் அறையில் போட்டு மூடிவைத்துப் போலீஸார்வசம் ஒப்படையுங்கள். இவ்வளவு மூளையாளுக்கு எவ்வளவு பொய் பாருங்கள் (என்று வந்தவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு போனுள்).

**நடேசன்.**—நீ கத்தியதால் வந்த பிரயோசனத்தைப் பார்த்துக் கொண்டாயா ? இன்னும் நீ வீணில் அவமான மடைவாய்! என் வார்த்தையைக் கேட்டால் ஸுகப்படுவாய் !

**ஞானும்பிகை.**—அடா ! படுபாவி ! நான் என்னுயிரை விட்டுவிட்டாலும் விட்டுவிடுவேனேயன்றி, உன்னுடைய கருத்துக்கு உடன்படுவேன் என்று நினைக்கவேண்டாம் (என்று அவனைப்பிடித்துத் தூரத்தில் தள்ளினுள்).

**இலக்ஷ்மி.**—(நடேசனை வீட்டுக்கு வெளியில் அழைத்து வந்து) ஐயா ! நீர் அவசரப்படவேண்டாம் ! நானும் என் தாயும் அவளுடைய எண்ணத்தை மாற்றி உம்மைக் கலியாணம் செய்துகொள்ளச் சொல்லுகிறேம். எங்களால் முடியாமற் போகுமாயின், இதற்கிரண்டு மூன்று மைல்

தூரத்தில் காட்டுக்குள் ஒரு தனிவீடு எங்களுக்கிருக்கிறது. அங்கு அவளை அனுப்பி விடுகிறேன். அங்கு நீர் சென்றே அவளை வசப்படுத்திக் கொள்ளவேண்டும். நீர் நாளை இரவு எட்டு மணிக்கு வந்தால், நான் என் தாயிடம் சொல்லி யனுப்புகிறேன். இங்கு அக்கம் பக்கத்தில் ஜனங்கள் இருப்பதால், நாம் ஜாக்கிரதையாக எதையும் செய்யவேண்டும்.

நடேசன்.—ஆம்! நீ சொல்வதுபோல் செய்வது உத்தமம். ஆயினும் காட்டுக்குள்ளிருக்கும் வீட்டுக்கு எவ்விதம் அவளை அனுடப முடியும்?

இலக்ஷ்மி.—நீர் அதைக்குறித்துக் கவலைகொள்ள வேண்டாம் இப்பொழுது அவன் போட்ட கூக்குரலைக் கேட்டு வந்தவர்களை எவ்விதம் அனுப்பிவிட்டேன்? நேரில் என் ஸாமர்த்தியத்தைப் பார்த்தபின் நீர் ஸந்தேகப்படவேண்டிய காரணம் இல்லை (என்று நகைத்தாள்).

நடேசன்.—(நகைத்து) அவள் காட்டுக்குள்ளிருக்கும் வீட்டுக்கு வந்துவிடுவாளாயின், அவள் என்னுடையவளென்றே சொல்லிவிடலாம். அவளை இரண்டொரு நாள் பட்டினியாகப்போட்டால், நாம் சொல்வதை யெல்லாம் கேட்பாள் என்று நினைக்கிறேன்.

என்று சொல்லி, பத்து ரூபா எடுத்து அவள் கையில் கொடுத்து, நீ சொல்லிய விதம் முடித்தால் உனக்கு அதிகம் கொடுப்பேன் (என்று சொல்லி நீங்கினன்).

இலக்ஷ்மி வீட்டுக்குள் வந்து ஞானம்பிகையைப் பிடித்து இழுத்துப்போய் ஓரறைக்குள் விட்டுப் பூட்டிப்போனாள். அறைக்குள்ளிருந்த ஞானம்பிகை அழுது "நம்முடைய வினை நம்மை என்ன பாடு படுத்துகிறது! வரதராஜபிள்ளை யண்ணன் நமக்குத் துணையாக வருகிறேன் என்றதை நான் பாவி தடுத்து வந்தேனே! நான் வரவில்லை யென்று நம்முடைய தாய் என்ன நினைக்கிறார்களோ! நாம் இனி என்ன செய்ய இருக்கிறது. இவர்களிடத்திலிருந்து நாம் எவ்விதம் தப்பப்போகிறோம்"

என்று அழுதுகொண்டே யிருந்தாள். பகல் பன்னிரண்டு மணிக்குக் கதவைத் திறந்து இலக்ஷுமி வந்து, "அடி நீ என்ன காரணத்தால் அவரை விவாகஞ் செய்துகொள்ள மாட்டேன் என்கிறாய்? அவர் பணக்காரன் வீட்டுப் பிள்ளைபோல் காண்கிறதே! நீ அவரை விவாகம் செய்துகொள்ளுகிறேன் என்று சத்தியஞ் செய்துகொடுத்தாலொழிய உன்னை விடப்போகிறதில்லை. நீ அதைச் சொல்லும் பரியந்தம் பட்டினியாகவே வைத்திருப்போம்" என்றாள்.

ஞானம்பிகை.—அம்மா! நான் உங்கள் கையில் அகப்பட்டுக் கொண்டேன். நீங்கள் என்னைக் கொன்றுவிடலாமே யன்றி வேறென்ன செய்ய முடியும்? உங்கள் இஷ்டம். என்னைப் பட்டினியாகப் போட்டுக் கொன்று விட்டால், அது உங்களுக்குப் பெரும் புண்ணியமே! பெண்ணாகப் பிறந்து நான் படுகிற துன்பம் போதுமானது.

இலக்ஷுமி.—அடி! நீ பெரிய கிழவிபோல் பேசுகிறாய். உன்னை ஒருநாள் இரண்டுநாள் பட்டினி போட்டால் எல்லாம் வழிக்கு வந்துவிடும் (என்று பூட்டிக்கொண்டு போனாள்.

ஞானம்பிகை அறைகுள்ளிருந்து "கொடுங்கொலை செய்த பாதகனையும் ஓர் இருட்டறையில் போட்டு அடைக்க மாட்டார்கள். நாம் அதைவிடக் கொடியதையே முன் ஜன்மத்தில் செய்திருக்கிறோம்போல் காண்கிறது. நாம் இறந்தால் நம்முடைய தாயாவது மற்றவர்களாவது அறியப்போகிறதில்லை. ஒருவரும் அறியாமல் ரகசியமாக இறக்கவேண்டுமென்ற விதியோ என் தலையில் எழுதியிருக்கிறது" என்று துக்கத்தில் அழுந்தி யிருந்தாள்.

இலக்ஷுமி அன்றும் அடுத்த நாளும் தனக்கு அவகாசம் கிடைக்கும் பொழுதெல்லாம் அவ்வறையின் கதவைத் திறந்து ஞானம்பிகையின் ஸம்மதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஞானம்பிகை இலக்ஷுமியின் கருத்துக்கு உடன்படா

மையைக் கண்டு, மூன்றும் நாள் மாலை இலக்ஷ்மி அறையின் கதவைத் திறந்து, "நீ இன்னும் ஸம்மதப்படமாட்டாயா?" என்று கேட்டாள்.

ஞானம்பிகை—ஏ! பாவிகளா! என்னுடைய உயிர் இன்றைக்கோ நாளைக்கோ போய்விடும். அதன்பின் என்னை வந்து கேளுங்கள் (என்று கோபமாகச் சொன்னுள்).

இலக்ஷ்மி.—அம்மா! நீ மூன்றுநாள் பட்டினியாகக் கிடந்தும் எங்களுடைய கருத்துக்கு உடன்படமாட்டேன் என்கிருய். உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. நான் உன்னை இவ்வீட்டிலிருந்து அனுப்பிவிட்டால என்ன கொடுப்பாய்?

ஞானம்பிகை.—அம்மா! நீ சொல்வதுபோல் செய்தால் என்னிடத்தில் இருப்பதில் இரண்டொன்றை வைத்துக்கொண்டு மற்றதையெல்லாம் உனக்குக் கொடுத்துவிடுகிறேன்.

இலக்ஷ்மி.—இன்றிரவில் உன்னை ஒரு வண்டியிலேற்றித் திருக்கழுக்குன்றத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்படி ஏற்பாடு செய்கிறேன். நீ கவலையற்றிரு (என்று நீங்கினுள்).

ஞானம்பிகை முற்றிலும் அவளை நம்பாமல் அவள் சொல்லியதைப் பார்க்கலாம் என்று இரவை எதிர் நோக்கியிருந்தாள். அன்றிரவு பதினெரு மணிக்கு ஓர் மாட்டுவண்டி வீட்டுக்குப் பின்புறத்தில் வந்து நிற்க, இலக்ஷ்மி ஞானம்பிகையிடம் சென்று, "அம்மா! உன்னை அழைத்துப்போக வண்டி வந்து நிற்கிறது. எழுந்து வா" என்முள். ஞானம்பிகைவெளியில் வந்து பார்த்து உண்மையாக இருக்கக்கண்டு, தன்னிடத்திலிருந்த பணத்தில் இரண்டு ரூபா வைத்துக்கொண்டு மற்றதையெல்லாம் அவளிடத்தில் கொடுத்துவிட்டு வண்டியில் ஏறினுள்.

இலக்ஷ்மி.—அம்மா! நீ ஸௌகரியமாகப் படுத்துக்கொள்ள வண்டியில் வைக்கோல் அதிகம் இருக்கிறது. நன்றுய்ப்

படுத்துக்கொள். என்று சொல்லி, வண்டிக்காரனைப் பார்த்து ! "சீக்கிரம் இந்த அம்மாளைத் திருக்கழுக்குன்றம் கொண்டுபோய் விடு" என்றாள்.

ஞானம்பிகை வண்டியிலிருந்த வைக்கோலைத் தலைக்கு உயரமாக வைத்துப் படுத்துக்கொண்டாள். வண்டிக்காரன் வண்டியைக் காட்டுக்குள் ஓட்டுவதை ஞானம்பிகை கண்டு, "அப்பா ! வண்டிக்காரா ! நீ ஏன் பாதையை விட்டுக் காட்டுக்குள் போகிறாய் ?" என்று கேட்டாள்.

**வண்டிக்காரன்.**—நான் போவது குறுக்கு வழி. இவ்வழியாகச் சென்றால் ஒரு மணி நேரத்துக்குள் திருக்கழுக்குன்றம் போகலாம். ஆனதால் இவ்வழி போகிறேன் என்று வண்டியை ஓட்டிக்கொண்டு போய்க் காட்டுக்குள்ளிருந்த வீட்டுக்கெதிரில் நிறுத்தினான்.

அங்கு நின்றிருந்த நடேசனும் மற்றொருவனும் ஓடி வந்து, "வண்டியிலிருந்து இறங்கு இறங்கு" என்றார்கள். ஞானம்பிகை இறங்காமையைக் கண்டு, வண்டிக்காரன், "ஐயா ! அந்த அம்மாள் நன்றாய்த் தூங்குகிறார்கள்" என்றான். நடேசன். 'நான் அவளுக்கு முத்தங்கொடுத்து எழுப்புகிறேன்' என்று வண்டியிலேறி, 'ஆ ! ஆ ! மோசஞ்செய்துவிட்டாள். அவள் வண்டியில் இல்லையே' என்று தலையில் கையை வைத்து உட்கார்ந்தான்.

---

## 13—ம் அத்தியாயம்

புதுச்சேரியில் சின்னதம்பி பிள்ளை வீட்டில், வைத்தியலிங்கம் பிள்ளை, இந்திராணியம்மாள், ஜானகியம்மாள், கோவிந்தம்மாள், முதலியவர்கள் உட்கார்ந்து, படுக்கையிலிருக்கும் மீனாக்ஷிஸுந்தரத்தைப் பார்த்து துக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். சின்னதம்பி பிள்ளை ஒருவரை அழைத்து வந்து மீனாக்ஷிஸுந்தரத்தைக் காட்டி, "வைத்தியரே ! இவனைப் பாருங்கள்" என்றார்.

**வைத்தியர்.**—(மீனாக்ஷிஸுந்தரத்தைப் பரிசோதனை செய்து), இவருடைய இருதயம் நல்ல நிலைமையில் இல்லை. என்ன காரணத்தால் அவ்விதம் ஆனதென்று தெரியவில்லை. இவர் சடுதியாகத் தன் மனம் திடுக்கிடும்படி ஏதாகிலும் கேள்விப்பட்டாரா?

**சின்னதம்பி பிள்ளை.**—அவ்விதம் துக்கப்படும்படியான செய்தி ஒன்றும் கேள்விப்படவில்லை

**கோவிந்தம்மாள்.**—அத்தான்! தாங்கள் ஏன் மறைக்கிறீர்கள்! உள்ளதைச் சொன்னாலல்லவோ அதற்கு வேண்டிய மருந்து கொடுப்பார்.

**ஜானகியம்மாள்.**—உண்மையைச் சொல்லாமல் மறைத்து மறைத்து அவனைப் படுக்கவைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்.

**சின்னதம்பி பிள்ளை.**—(வைத்தியரை வெளியில் அழைத்துப் போய், ஞானம்பிகை விஷயத்தில் மீனாக்ஷிஸுந்தரம் கொண்டிருந்த எண்ணத்தையும் ஞானம்பிகை நீங்கியதையும் பின் நடந்ததையும் சொல்லி), நாங்கள் மீனாக்ஷிஸுந்தரத்தை இங்கே கொண்டுவந்து தமிழ்வைத்தியர்களை வைத்துப் பார்த்தோம். நெடுநாள் அவர்களிடத்தில் மருந்து சாப்பிட்டுவந்தும் குணப்படாமலிருப்பதால், வெள்ளைக்காரரைக் கொண்டு பார்த்தால் உத்தமமென்று தங்களை அழைத்துவந்தேன். தாங்கள் பார்த்து அவனை குணப்படுத்தவேண்டும். எனக்கிருப்பது ஒரே பிள்ளை (என்று கண் கலங்கினார்).

**வைத்தியர்.**—தங்களுடைய குமாரனை குணப்படுத்த வழியொன்றும் நீர் காட்டவில்லையே!

**சின்னதம்பி பிள்ளை.**—என்ன வழி காட்டச் சொல்லுகிறீர்? தாங்கள் கேட்டதைக் கொடுக்கிறேன்.

**வைத்தியர்.**—நீர் என் கருத்தை யறியாமல். நான் கேட்டதைக் கொடுப்பேன் என்கிறீர். மீனாக்ஷிஸுந்தரத்தின் மனம் திடுக்கிட்டிருப்பதால், அவர் இருதயம் அளவுக்கு மிஞ்சி

நடக்கிறது. ஆனதால், திடுக்கிட்ட மனதுக்குத் தைரியம் சொல்லி மனதை ஸரிப்படுத்திக்கொண்டு, பின் மருந்து கொடுத்தால் விரைவில் குணப்படுத்தலாம். அதைச் செய்யாமல் நான் மருந்துகொடுப்பதில் பிரயோசனம் இல்லே.

**சின்னதம்பி பிள்ளை.**—என்ன தைரியம் சொல்லச்சொல்லுகிறீர். ஒரு வீட்டில் வேலேசெய்யும் புழுக்கையை விவாகம் முடித்து வைக்கிறேன் என்றே அவனுக்குத் தைரியம் சொல்லுகிறது ?

**வைத்தியர்.**—உமக்கு மகன் வேண்டுமென்றால் அவன் இஷ்டங் கொண்ட பெண்ணை விவாகம் முடித்து வைக்கிறேன் என்றே சொல்லவேண்டும்.

**சின்னதம்பி பிள்ளை.**—தாங்கள் வெள்ளைக்காரரானதால் தங்களுக்கு எங்களுடைய ஜாதி முறைமை தெரியவில்லை. ஐயாவே! நான் இவ்வூரில் நாலு காசோடு இருக்கிறேன். என்னைச் சேர்ந்த பந்துக்களும் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். நான் இந்த நிலைமையில் இருந்துகொண்டு என் மகனுக்குக் கேவலமான இடத்தில் பெண்ணெடுத்துக் கலியாணம் செய்துவைத்தால், இவ்வூரில் என்னை யறிந்தவர்கள் என்ன சொல்லுவார்கள் ? என் பந்துக்கள் என்னை என்ன சொல்லுவார்கள் ? என் மகனும் இப்பொழுது நடந்துபோனதைப் பின் நினைத்து துக்கப்படுவதோடு என்னையும் நிந்திப்பானே ? இவைகளை யெல்லாம் யோசிக்காமல் அவனுடைய இஷ்டப்பிரகாரம் செய்துவிடலாமா ?

**வைத்தியர்.**—ஐயா ! உம்முடைய அந்தஸ்துக்குத் தக்கவிதம் அப்பெண் தக்க நிலைமையில் இல்லாமற் போனதால், நீர் உலகத்துக்கும் உம்முடைய பந்துக்களுக்கும் பயப்படவேண்டுமென்கிறீர். நீர் உலகத்துக்குப் பயந்து உம்முடைய பிள்ளையை இழந்துவிடுவது ஸம்மதமோ ?

**சின்னதம்பி பிள்ளை.**—ஐயாவே ! தாங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஒருவன் ஓர் அரசனுடைய குமாரத்

தியை விவாகஞ்செய்துகொள்ளவேண்டு மெண்றெண்ணி, அவள் கிடைக்காமற் போனதால் மனந்திடுக்கிட்டு இருதயம் நிலைதப்பி நடக்குமாயின், என்ன செய்கிறது ? அவன் கொண்ட எண்ணம் தப்பிதம் என்று மெய்ப்பித்து அவனுக்கு ஔடதங் கொடுத்து குணப்படுத்த வேண்டியது போல், தாங்களும் செய்யவேண்டும். நான் தமிழ் வைத்தியரை அழைத்துவந்து மருந்து கொடுங்கள் என்று சொன்ன பொழுது, அவர்கள் ஒன்றும் சொல்லாமல் மருந்து கொடுத்தார்களே ! தங்களையும் அவர்களைப்போல் மருந்து கொடுகக வேண்டுகிறேன்.

**வைத்தியர்.**—தாங்கள் அரசனுடைய குமாரத்திக்கும் உம்முடைய குமாரன் இச்சித்த பெண்ணுக்கும் ஸமானங் கற்பித்து ஒவ்வாததைச சொல்கிறீர். நான் அதைக் குறித்து வாதிட்டுக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. தாங்கள் தமிழ் வைத்தியரை மருந்துகொடு என்றபொழுது பேசாமல் கொடுத்தார்கள். என்னையும் அதுபோல் செய்யவேண்டு மென்கிறீர். அவர்கள் நோயாளியின் நிலையையறிந்து மருந்து கொடுபபவர்களல்ல ! ஓர் இருட்டறையில் அனேக சாமான்களோடு ஒரு புட்டி இருக்கிறது. புட்டி எவ்விடத்திலிருக்கிறதென்று அறியாமல் புட்டியில் படட்டும் என்று கல்லாலடித்தால், அது அகஸ்மாத்தாய் புட்டியில் பட்டாலும் படும். அல்லது புட்டியில் படாமல் வேறொன்றை ஒடித்துவிட்டாலும் ஒடித்துவிடும். அதுபோல் சிலர் "பிணியாளிக்கு என்ன செய்கிறது ? பிணி என்ன காரணத்தால் வந்தது ? என்ன மருந்தால் குணப்படும் ?" என்பதை யறியாமல் ஏதாகிலும் ஒன்றைக் கொடுப்பார்கள். அது அகஸ்மாத்தாய் இருட்டில் கல புட்டியில் பட்டது போல் குணப்படுத்தினாலும் குணப்படுத்தும் ; அல்லாமல் இருட்டறையில் கல் வேறொன்றை உடைத்ததுபோல் வேறு கெடுதலைச் செய்துவிட்டாலும் செய்துவிடும் என்பதை யறியாமல், பொதுவாகச் சொல்லியிருக்கும் நாலைந்து மருந்து தினுசுகளைக் கற்றுக்கொண்டு, வைத்யன்

நான் என்று வெளியில் வந்துவிடுகிறார்கள். ஏழை ஜனங்கள் அவர்களை வைத்தியத்தில் கைதேறியவர்கள் என்றெண்ணி, அவர்களிடத்தில் மருந்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள். ஐரோப்பா கண்டத்தில் வைத்தியரென்று நாங்கள் வெளி வரவேண்டுமாயின், வைத்தியதநுக் கேற்படுத்திய கலாசாலையில் நெடுநாள் வாசித்து, வைத்தியசாலையில் பலவித நோய்களால் வருந்துகிறவர்களைப் பார்த்தும் நோயாளிகளாயிருந்து இறந்துபோன பிரேதங்களை அறுத்துப்பார்த்தும் பரீக்ஷையில் தேறி, பின் வைத்தியர் என்கிற பட்டப்பேருடன் வெளியில் வருகிறோம். இவ்வூரிலிருக்கும் தமிழ் வைத்தியர் எந்தக் கலாசாலையில் வாசித்து எந்தப் பரீக்ஷையில் தேறி வைத்தியரென்ற பட்டப்பேருடன் வெளிவந்திருக்கிறார்கள்? நான் தங்கள் குமாரனுடைய உண்மையான நிலையை அறிந்ததால், அதைச் சொன்னேன்.

"நோய்நாடி நோயின்முதனாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்றாரே திருவள்ளுவ நாயனார்.

சின்னதம்பி பிள்ளை.—தாங்கள் தமிழர்களுக்கு வைத்தியமே தெரியாது; அவர்களிடத்தில் மருந்தே இல்லை, எல்லாம் ஐரோப்பியரிடத்தில் தான் உண்டு; ஆனதால், ஐரோப்பியரே வைத்தியத்துக்கு உரித்தானவர்கள் என்றோ சொல்லுகிறீர்கள்?

வைத்தியர்.—நான் அவ்விதம் சொல்லவில்லை. வைத்தியத்தில் தலைமை பூண்டிருந்த அகஸ்தியர், தேரையர் இன்னும் அநேக ரிஷிகள் இருந்தார்களென்றும், அவர்களால் எழுதப்பட்ட வைத்திய சாத்திரங்கள் அநேகம் உண்டென்றும் அறிந்திருக்கிறேன். அந்தச் சாத்திரங்களைக் கிரமமாக ஓர் ஆசானை யடுத்து வாசித்துப் பின் வைத்தியம் செய்கிறவர்கள் அபூர்வமென்றே சொல்லுகிறேன் (என்று நகைத்தார்).

**சின்னதம்பி பிள்ளை.**—தாங்கள் சொல்வது முன்காலம் என்றே சொல்லவேண்டும். இக்காலத்தில் இந்தியாவில் அனேக இடங்களில் ஆயுர்வேத வைத்திய சாலைகள் உண்டாய். அனேகருக்கு வைத்தியம் கற்றுக்கொடுத்துப் பரீக்ஷை செய்து தேறினவர்களுக்கு வைத்தியர் எனப் பட்டங் கொடுத்து அனுப்புகிறார்கள். சென்னையிலும் பண்டிதர் கோபாலாசார்லு என்ற ஒரு பிராமணோத்தமர் ஆயுர்வேத வைத்தியசாலை ஏற்படுத்தி, தாமே வைத்தியங் கற்றுக்கொடுத்து, அனேகரை வைத்தியராக்கி யிருக்கிறார். அவர்களெல்லாம் ஆங்கிலேய முறைப்படி வைத்தியம் செய்கிறதைத் தாஙகள் பார்த்ததில்லைபோல் காண்கிறது.

**வைத்தியர்.**—ஆம்! அவரை அனேகமுறை இவ்வூரில் பார்த்திருக்கிறேன். அவர் வைத்திய சாத்திரத்தை நன்றாய் உணர்ந்தவர். தாங்கள் என்னை அழைத்துக் காட்டியதை விட அவரை அழைத்துக்காட்டி யிருந்தால் உம்முடைய குமாரனுக்கு என்ன செய்யவேண்டுமென்று சொல்லுவார் நான் சொல்வது தங்களுக்கு நம்பிக்கை கொள்ளவில்லை.

"என்ன நம்பிக்கைக்கொள்ளவில்லை?" யென்று சொல்லிக்கொண்டே ஒருவர் வீட்டுக்குள் வந்தார்.

**சின்னதம்பி பிள்ளை.**—ஆ! நல்லமுத்துப் பிள்ளை? உன்னைக் கும்பகோணத்துக்கு மாற்றிவிட்டதாகக் கேள்விப்பட்டேனே!

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஆம்! ஐயா! நான் தற்காலம் கும்பகோணத்தில் இருக்கிறேன். நான் விடைபெற்றுத் திருப்பாதிரிப்புலியூருக்கு வந்து தங்களுடைய மருமகனைப் பார்க்கப் போனேன். மீனாக்ஷிஸுந்தரம் நோயாயிருக்கிறானென்றும், வைத்தியலிங்கம் பிள்ளையும் அவர் மனைவியும் போயிருக்கிறார்களென்றும் அங்கே கேள்விப்பட்டு, மீனாக்ஷிஸுந்தரத்தைப் பார்த்துப் போகலாமென்று இவ்விடம்வரும்பொழுது, 'நான் சொல்வது நம்பிக்கை கொள்ளவில்லை'

என்று வைத்தியர் சொன்னுரே அவ்விதம் சொன்னதின் கருத்து விளங்கவில்லை. மீனுக்ஷிஸுந்தரம் எங்கே ? அவருக்கு என்ன செய்கிறது ?

**சின்னதம்பி பிள்ளை.**—மீனுக்ஷிஸுந்தரம் படுக்கையிலிருக்கிறுன். உன்னை நல்ல ஸமயத்தில் தெய்வம் கொணடுவந்து விட்டது. நீ போய் மீனுக்ஷிஸுந்தரத்தைப் பார்த்துப் பின் வைத்தியர் சொல்வதைக் கேட்டு வேண்டியதைச் செய்.

*நல்லமுத்துப் பிள்ளை, வீட்டுக்குள் ஓடி, மீனுக்ஷிஸுந்தரம் படுக்கையருகில் போனபோது, அங்கிருந்தவரெல்லாம் நல்லமுத்துப் பிள்ளைக்கு முகமன் கூறினுர்கள்.*

**ஜானகியம்மாள்.**—(நல்லமுத்துப் பிள்ளையைப் பிடித்துக் கொண்டு) தம்பி நான் என்ன செய்யப்போகிறேன். உன்னுடைய சினேகன் பேசாமலும் ஒன்றும் சாப்பிடாமலும் புலம்பிக்கொண்டே யிருக்கிறுன்.

*நல்லமுத்துப் பிள்ளை, மீனுக்ஷிஸுந்தரத்தின அருகில் உட்கார்ந்து, "தம்பி ! மீனுக்ஷிஸுந்தரம் ! மீனுக்ஷிஸுந்தரம் !" என்றழைத்தார். அவன் கண்களைத் திறந்து பார்த்து, "ஆ ! நல்லமுத்துப் பிள்ளையா ! ஐயா ! நான் என்ன செய்வேன் ? ஞானம்பிகை போய்விட்டாள்" என்று கண்கலங்கினுன்.*

**நல்லமுத்துப் பிள்ளை.**—தம்பி! மீனுக்ஷிஸுந்தரம், நான் அவள் இருக்குமிடத்தை அறிந்திருப்பதால், உன்னை அழைத்துப் போக வந்தேன். நீ ஆத்திரப்படாமல் இருக்கவேண்டும். நீ பயங்கரமான நிலையில் இருப்பதாகக் காண்கிறது. (என்று ரகசியமாக அவன் காதில சொன்னுர்).

*மீனுக்ஷிஸுந்தரம், படுக்கையிலிருந்து எழுந்து உட்கார சக்தியற்றிருந்தவன், எழுந்து உட்கார்நது, தனக்குப் பசியாக இருக்கிறதென்றுன். கோவிந்தம்மாள் கஞ்சி கொண்டுவந்து கொடுத்தாள். அவன் அதைச் சாப்பிட்டு, "ஆம் நான் ஆத்திரப்படக்கூடாது" என்று சொல்லி, தன் அருகிலிருந்த வைத்திய*

லிங்கம் பிள்ளையைப் பார்த்து, "அத்தான் ஒரு நல்ல வைத்தியனைப் பார்த்து அழைத்துவரச் செய்யுங்கள்" என்றான்.

**ஜானகியம்மாள்.**—(தன் நாயகனிடம் சென்று) மீனாக்ஷிஸுந்தரம் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கஞ்சி குடித்தான் (என்று ஸந்தோஷமாகச் சொன்னாள்).

**வைத்தியர்.**—ஐயா! சின்னதம்பி பிள்ளை! நான் உம்முடைய குமாரனுடைய திடுக்கிட்ட மனதைக் குணப்படுத்திவிட்டால், அவனுடைய தேகத்திலுள்ள நோயை விநாடியில் நீக்கிவிடலாம் என்று சொல்லியதை நீர் கவனிக்கவில்லை. நம்மைவிட்டுப்போன நல்லமுத்துப் பிள்ளை உம்முடைய குமாரன் மனதை குணப்படுத்திவிட்டார். ஆனதால், அவன் எழுந்து உட்கார்ந்து ஆகாரம் உட்கொண்டான். இனி நீர் ஒன்றுக்கும் பயபடவேண்டாம். நான் விரைவில் அவனைக் குணப்படுத்திவிடுகிறேன் (என்று உள்ளே போய், மீனாக்ஷிஸுந்தரத்தைப் பரிசோதனை செய்து நகைத்து) தம்பி! உனக்கென்ன செய்கிறது (என்று கேட்டார்).

**மீனாக்ஷிஸுந்தரம்.**—ஐயா! எனக்கு ஒன்றுமில்லை. பலவீனமாகமட்டும் இருக்கிறது. தாங்கள் அதற்கு ஓர் மருந்து கொடுக்கவேண்டும்.

**வைத்தியர்.**—நான் விரைவில் மருந்து அனுப்புகிறேன். அது வந்தவுடன் ஒரு கோடும், பின் மூன்றுமணிக்கொரு தரம் ஒவ்வொரு கோடுமாகச் சாப்பிட்டுக்கொண்டிரும்.

**மீனாக்ஷிஸுந்தரம்.**—பத்தியம் ஏதாகிலும் உண்டா? நான் கொஞ்சம் சாதம் சாப்பிடலாமென்று யோசிக்கிறேன்.

**வைத்தியர்.**—நீர் இன்று சாதம் சாப்பிடவேண்டாம்! நாளைக்குச் சாப்பிடலாம். பால் கஞ்சி முதலியவைகளை எத்தனை தடவை வேண்டுமென்றாலும் சாப்பிடும். நான் போய் மருந்து அனுப்புகிறேன் (என்று சின்னதம்பி பிள்ளையை வெளியில் அழைத்துவந்து) ஐயாவே! உம்முடைய மகன், முன் கண்விழிக்காமலும் எழுந்து உட்காரச் சக்தியில்லாம

லும் இருந்தானே. இப்பொழுது பார்த்தீரா ? இனி நீர் அவன் மனம் திடுக்கிட ஒன்றும் சொல்லவேண்டாம். நான் நாளைக் காலையில் வருகிறேன் (என்று நீங்கினார்).

சில நேரத்துக்குப் பின் வைத்தியர் அனுப்பிய மருந்து வந்து சேர, அதை வைத்தியர் சொல்லிய விதம் மீனாக்ஷிஸுந்தரம் சாப்பிட்டுக்கொண்டு தானும் நல்லமுத்துப் பிள்ளையும் தனித்திருக்கும் பொழுது, அவர் இருகரங்களையும் பிடித்துக் கொண்டு, "ஐயாவே ! நான் ஞானம்பிகையின் ஸமாசாரத்தை எவ்விதம் அறியப்போகிறேன் என்ற கவலையோடிருந்தேன். நீர் என் மனங்குளிர அவள் ஸமாசாரத்தைச் சொல்ல வந்தீர். அவள் எங்கிருக்கிறாள் ? அவளைப் பார்த்து அவளோடு வார்த்தையாடினீரா ? அவள் என்ன சொன்னாள் ? அவள் ஸௌக்கியமாக இருக்கிறாளா ? அவளை எப்பொழுது பார்க்கலாம் ?'' என்று பல கேள்விகளைக் கேட்டான்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—தம்பி ! நீ அதிக நாள் நலியாயிருந்து இப்பொழுது கிஞ்சித்து ஸௌக்கியமாக இருக்கிறாய். இன்று நீ ஒன்றும் கேட்கவேண்டாம். நாளை யாவும் சொல்லுகிறேன் (என்று அவனோடு அதிகம் பேசாமல் மற்றவர்களோடு வார்த்தையாடியிருந்தார்).

**சின்னதம்பி பிள்ளை.**—தம்பி நல்லமுத்து ! நீ சிலநாள் இவ்விடம் இருந்துபோவது உத்தமமென்று நினைக்கிறேன். நீ வந்தபின் உன் சினேகிதனுக்குக் குணமாக இருக்கிறதென்று வைத்தியர் சொல்லிப் போனார்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—அவ்விதம் இருக்கவேண்டு மென்பதே என் கருத்து.

இங்ஙனம் பல விஷயங்களைக் குறித்து வார்த்தையாடிக் கொண்டிருந்து, மீனாக்ஷிஸுந்தரத்துக்கு வைத்தியர் சொன்ன விதம் மருந்து கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஒரு வாரத்துக்குப்பின் மீனாக்ஷிஸுந்தரத்துக்கு முற்றிலும் ஸௌக்கியமாய்

விட்டதென யாவரும் உட்கார்ந்து ஸந்தோஷமாக வார்த்தை யாடிக்கொண்டிருந்தார்கள்.

வைத்தியலிங்கம் பிள்ளை தமக்கு வரும் தமிழ்ப் பத்திரிகைகளைப் பிரிக்காமல் நெடுநாளாக வைத்திருந்தவர், அன்று அப்பத்திரிகைகளைப் பிரித்து வாசித்துக்கொண்டிருக்கையில் "இந்த அதிசயத்தைக் கேட்டீர்களா?" என்றார். யாவரும் "என்ன?" என்றார்கள்.

வைத்தியலிங்கம் பிள்ளை.—கும்பகோணத்தில் காவேரி யாற்றின் வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோன ஒரு விருத்தரைப் பதினைந்து வயதுள்ள ஒருபெண் கரைசேர்த்தாளாம்.

இந்திராணி.—அவள் பெயர் என்னவென்று எழுதியிருக்கிறதா?

வைத்தியலிங்கம் பிள்ளை.—அவளுடைய பெயரைக் குறிப்பிக்கவில்லை.

நல்லமுத்துப் பிள்ளை.—அவளுடைய பெயரை யறிய உங்களுக்கு விருப்பமிருந்தால் நான் சொல்ல முடியும்.

வைத்தியலிங்கம் பிள்ளை.—ஆம்! இவர் அவ்வூரிலிருந்ததால், இவருக்கு அது விஷயம் நன்றாய்த் தெரியுமென நினைக்கிறேன்.

நல்லமுத்துப் பிள்ளை.—ஆம்! நன்றாய்த் தெரியும் (என்று அதை விளக்கச் சொல்லி), அவரைக் காப்பாற்றியவள் ஞானம்பிகையே என்றார். (யாவரும் அதிசயப் பட்டார்கள்).

மீனாக்ஷிஸுந்தரம்.—அவள் எங்கேபோனாலும் அவ்விடத்திலெல்லாம் ஓரதிசயமான காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறாள் (என்று தனக்குள் அடங்கா மகிழ்ச்சிகொண்டிருந்தான்).

நல்லமுத்துப் பிள்ளை.—அவள் கும்பகோணத்தில் செய்தவைகளில் நான் சொல்லியது ஒன்று. இது அதிசயமல்ல; இதைவிட விசேடமானது இரண்டைச் செய்திருக்கிறாள்.

**இந்திராணி.**—வேறென்ன செய்தாள் ? அதை எங்களுக்குச் சொல்லவேண்டும் (என்று கெஞ்சினாள்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா! தங்களுடைய நாயகன் தங்களை நடத்தியதற்கு எதிரிடையாக, மீனாம்பாள் என்ற ஒரு பெண்பிள்ளை தன் நாயகனைப் படுத்திய பாட்டைச் சொல்லமுடியாது. அந்தப் பெண்பிள்ளையின் குணம் தெரியாமல், நான் ஞானம்பிகையை அவள் வீட்டில் வேலை செய்ய வைத்திருந்தேன். அவள் ஞானம்பிகை வயிற்றுக்கு ஸரியாய்ச் சாப்பாடு போடாமல் வதைத்துக்கொண்டிருந்தாள். அவள் செய்ததையெல்லாம் ஞானம்பிகை ஸகித்துக் கொண்டிருந்ததோடு, என்னுடைய துணையைக்கொண்டு அவளுடைய குணத்தை மாற்றி, அவளை அவள் புருடனுக்குப் புழுக்கையாக்கிவிட்டாள். இப்பொழுது அவள் ஞானம்பிகையைத் தம் சொந்த நாத்தனாராக பாவித்து நடத்துகிறாள் (என்று நடந்ததை விளங்கச்சொன்னார். யாவரும் கலீரென்று நகைத்தார்கள்).

**இந்திராணி.**—(அவளுடைய புத்தி எப்போப்பட்டதென்று சொல்லுகிறதென வியந்து) அவள் எங்கே போனாலும் மேன்மையடைகிறாளேயன்றித் தாழ்வடைவதில்லை.

**மீனாக்ஷிஸுந்தரம்.**—(மனம் பூரித்து) அவள் செய்தது இரண்டென்றீரே. ஒன்றைச் சொன்னீர் : மற்றொன்று என்ன ?

**நல்லமுத்துப் பிள்ளை.**—அதைச் சொல்ல என் மனம் தடுமாறுகிறது. அதை நினைக்குந்தோறும் எனக்கு உண்டாகும் ஆச்சரியத்திற்கு அளவில்லை 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்ற பழமொழி அவளிடத்தில் பயன்படாமற் போயிற்று. தம்பி! உலகத்தில் பணத்தைத் தெய்வமென்றெண்ணி எனத் தொழிலையும் செய்து அதைத் தேடுகிறதை நாம் கண்ணால் பார்க்கிறோம். அப் புண்ணியவதி பணத்தை துரும்பாக மதித்திருக்கிறாள். தனைக் காவேரியாற்றிலிருந்து கரைசேர்த்தாள் என்றெண்ணிய அவ்விருத்தர் ஆறுயிரம் ரூபா மதிப்புள்ள நகைக

ளைக் கொடுக்க, ஞானம்பிகை அதைப் பெற்றுக்கொள்ளா மல் மறுத்துவிட்டாள்.

**இந்திராணி.**—அவள் எங்களோ டிருந்தபொழுது அவளுக்குக் கிடைத்த கம்மலையும் காப்பையும் போட்டுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதற்கு, அவள் ஒரே பிடிவாதமாகத் தனக்கு வேண்டியதில்லை யென்று சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் எங்களைவிட்டுப் போனபோதும் தனக்குச் சொந்தமான நகைகளை வைத்து விட்டுப் போனதைப் பார்க்க எனக்கு அதிசயமாகவே இருந்தது.

**மீனாக்ஷிஸுந்தரம்.**—அவள இவ்வுலகத்துப்பெண் அல்ல வென்றே சொல்லவேண்டும். அவளுடைய குணத்தை அறிந்தவர்களில் அவளைப் புகழாதார் யார் இருக்கிறார்கள்? ஆ! ஞானம்பிகை (என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான்).

ஞானம்பிகை செய்த அருமையான காரியங்களைக் கேட் டிருந்த சின்னதம்பிபிள்ளை, அருவருப்போடு நல்லமுத்துப் பிள்ளையைத் தனித்தழைத்துபபோய், "அபபா நல்லமுத்து! ஞானம்பிகையை மீனாக்ஷிஸுந்தரம மறந்துவிட நான் என் னென்ன உபாயமோ செய்துகொணடிருக்கிறேன. நீ அவளை மறககவிடாமல் அவன் முனனிலையில் ஞானம்பிகையைப் புகழ்ந்துகொண்டிருக்கிறாயே" என்றார்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—தாங்கள் ஞானம்பிகை விஷயத்தில் அருவருப்புக் கொண்டிருப்பதின காரணம் தெரியவில்லை. அவளை மீனாக்ஷிஸுந்தரம் விவாகம்செய்துகொள்வதில் குற்றம் என்ன? அவவிதமான பெண் தஙகளுக்கு மருமக ளாகக் கிடைத்தால் நீங்கள் பாக்கியசாலிகளென்றே நினை ப்பேன். அவள் சேற்றில் முளைத்த செழுங்கமலமல்லவா!

**சின்னதம்பி பிள்ளை.**—அப்பா! நீயும் மீனாக்ஷிஸுந்தரத்தைப் போல் இளையவனுதலால் உனக்கு ஒன்றும் தெரிய வில்லை. ஞானம்பிகை உயர்குணமுள்ள பெண்ணென்று சொல்வதை நான் மறுக்கவில்லை. நாம் ஓர் பெண்ணைக்

கொள்ளவேண்டுமோயின், ஓர் ஸுந்தரமான நற்குண முள்ள பெண் எதிர்ப்பட்டால் உடனே அவளைக் கொள்ள வேண்டியதோ? அவள் ஜாதி குலம் கேட்கவேண்டிய தில்லை. அவள் தாய்தந்தை யாரென் றறியவேண்டியதில்லை. பெண்பிள்ளைகளின் ஜாதகப் பொருத்தம் முதலியவைகளைப் பார்க்கவேண்டியதில்லை. இவைகளை யெல்லாம் கவனித்தீர்களா? உங்களுக்கு உலக அனுபவம் அதிகம் இல்லாததால், இவ்விதம சொல்லுகிறீர்கள்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஞானம்பிகை கும்பகோணம் வந்தபின், எனகரு மிகவும் நேசமுள்ள ஒரு சோதிடரை அழைத்து, மீனாக்ஷிஸுந்தரத்துக்கும் ஞானம்பிகைக்கும் பொருததம் உண்டோ என்று கேட்டேன். அவர் எல்லாப் பொருத்த மும் பொருந்தியிருக்கிற தென்று சொன்னா.

**சின்னதம்பி பிள்ளை.**—ஜாதகத்தைப் பார்க்காமல் பேர் பொருததத்தைப் பார்த்துவிட்டாய். அவள் என்ன குலமென்று அறிநதாய்?

**நல்லமுத்துப் பிள்ளை.**—அவள் வேளாளர் குலமென்று தரங்கன் பாடியில் அறிந்திருக்கிறேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—அவள் தாய்தந்தை எந்த ஊரென்றறிந்தாயா?

**நல்லமுத்துப் பிள்ளை.**—அதை இன்னும் விசாரிக்கவில்லை.

**சின்னதம்பி பிள்ளை.**—அவள் தாய்தந்தை எந்த ஊரென்று விசாரித்தறியாமல், அவள் குலத்தை எவ்விதம் அறிந்தாய்? அவளுடைய தாய்தந்தையர் விவாகம் செய்து கொண்டவர்களா என்றதை அறிவது அவசியமல்லவா? எல்லாம் நாம் ஒப்புக்கொள்ளும் விதமாக இருக்கினும், அவளுடைய நிலைமையையும் நம்முடைய நிலைமையையும் பார்க்கவேண்டியதில்லையா? நாம் யாருக்கும் பயப்படாமற் போனாலும் உலகத்துக்கு பயப்படவேண்டாமா?

**நல்லமுத்துப் பிள்ளை.**—நாம் உலகத்துக்கு பயப்படாமல் என்ன

தப்பிதம் செய்ய யோசித்திருக்கிறோம்? நான் சென்று அவள் தாயாரைக் கண்டு தாஙகள் அறியவேண்டியதெல்லாம் அறிந்து வருகிறேன். எல்லாம் நமக்குத் திருப்தியானால், அப்பெண்ணை மீனாக்ஷிஸுந்தரத்துக்குக் கொள்ளத் தங்களுக்கு ஆட்சேபனை இல்லையே.

சின்னதம்பி பிள்ளை.—நீ சொல்வதுபோல் யாவும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததாயினும், அவள் ஒருவர் வீட்டில் புழக்கைவேலை செய்துகொண்டிருக்கிறாளே! அதற்கு என்ன செய்யலாம்? அவளை ஒரு தனவந்தன்மகளாகச் செய்துவிடுவாயானால், மறுவார்த்தை சொல்லாமல் அவளை மீனாக்ஷிஸுந்தரத்துக்கு விவாகம் செய்துவிடலாம் (என்று நகைத்தார்).

நல்லமுத்துப் பிள்ளை.—தாங்கள் இதுபரியந்தம் சொல்லிவந்தது நியாயமேயாயினும், இப்பொழுது சொல்கிறது நியாயமாகக் காணவில்லை. 'ஏழைகளிடத்துப் பெண்ணைக் கொள்ளவேண்டும், தனவந்தர்வீட்டில் பெண்ணைக் கொடுக்கவேண்டும்' என்றதை முற்றிலும் மறந்தீர்கள் போல் காண்கிறது (என்று நகைத்தார்).

சின்னதம்பி பிள்ளை.—தம்பி! அவ்விதம் சொல்வதேயன்றி சொல்வதுபோல் செய்வார் ஒருவருமில்லை. முத்துப்பட்டணத்திலிருந்த என் மைத்துனர் வேலாயுதம்பிள்ளை வீட்டுக்கு அனேக தடவை நான் போயிருக்கிறேன். அங்கு நாட்டுக்கொட்டைச் செட்டிப்பிள்ளைகளெல்லாம் தனவந்தர் வீட்டில் பெருஞ் சீதனத்தோடு பெண்ணைக் கொள்ளுகிறார்களன்றி ஏழைகளிடத்தில் பெண் கொள்ளுகிறார்களில்லை. நம்மவர்கள் முன் காலத்தில் முலைப்பால் பணம் முப்பதென்று முன்றானையில் முடியோடு பரிசம்போட்டுப் பெண்ணைக் கொள்ளுகிற வழக்கம் இருந்தாலும், இப்பொழுது அவ்வழக்கம் அறவே ஒழிந்தது.

நல்லமுத்துப் பிள்ளை.—பெருந் தனவந்தரெல்லாம் ஏழைகள் வீட்டில் பெண் எடுத்திருப்பதாகக் கேள்விப்பட் டிருக்கி

றோம். அதை மறந்து தாங்கள் நாட்டுக்கொட்டைச் செட்டிப் பிள்ளைகள் செய்கிறதுபோல் நாமும் செய்ய வேண்டும் என்கிறீர்கள்.

சின்னதம்பி பிள்ளை.—பெருந்தனவந்தர் ஏழைகள் வீட்டில் பெண் கொள்வதுபோல் நாமும் பெருந்வனவந்தராயிருந் தால் அவ்விதம் செய்யலாம். நான் பெருந்தனவந்தனு மல்ல ! ஏழையுமல்ல ! நடுத்திறத்திலிருப்பவன் ஆனதால், நம்முடைய நிலைமைக்குத் தக்கவாறே பெண் பார்க்க வேண்டும்.

நல்லமுத்துப் பிள்ளை.—முடிவாகத் தங்களுடைய கருத்து தான் என்ன ?

சின்னதம்பி பிள்ளை.—மீனாக்ஷிஸுந்தரத்துக்கு ஞானம்பிகை யைக் கொள்ள எனக்குப் பிரியம் இல்லை.

நல்லமுத்துப் பிள்ளை.—மீனாக்ஷிஸுந்தரம் அப்பெண்ணையே விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்கிறானே. அதறகு என்ன சொல்லப்போகிறீர்கள் ?

சின்னதம்பி பிள்ளை.—அவன் கொண்டிருக்கும் எண்ணம் தப்பிதமென்று நீயே எடுத்துக்காட்டி அவன் எண்ணத் தை மாறறவேண்டும்.

நல்லமுத்துப் பிள்ளை.—அவன் கொண்டிருக்கும் எண்ணத்தை மாற்ற முயலுவோமேயானால், மீண்டும் அவன் மனம் வருந்தி முன்போல் நோயால் பீடிக்கப்படுவானென்று பயப்படுகிறேன் (என்று சொல்லிக்கொண்டிருந்தார்).

## 14—ம் அத்தியாயம்

திருக்கழுக்குன்றத்துக்கு நாலைந்து மைல் தூரத்தில் காட்டுக்குள் இரவு பன்னிரண்டு மணிக்கு, ஒரு பெண் கையில் ஒரு மூட்டையோடு வழி தெரியாமல் அலைந்து, காலில் கல்லடி கள் பட்டும் முள்ளுகள் தைத்தும் நெடுநேரம சுற்றித்திரிந்து கொண்டிருந்து, ஸமீபத்தில் மனிதர் பேசும் குரலோசையைக்

கேட்டு, "நாம் பிழைத்தோம். மனிதர் பேசிக்கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றால், அங்கு இரவைக் கழித்து, காலையில் திருக்கழுகுன்றம் போகலாம்" என்று பேச்சுக்குரல் கேட்கும் இடத்துக் கருகில் நெருங்கினாள். நெருங்கும்பொழுது "அடே! அவள் வண்டியில் ஏறியதை நீ பார்த்தாயா?" என்று சொல்லியது அவள் காதில் விழுந்து, "நான் என்ன வேலை செய்யப் போகிறேன்! நடேசனும் வண்டிக்காரனும் பேசிக்கொண்டிருக்கிறார்களே! மரணத்துக்கு பயந்து புலிக்குகையில் நுழைகிறதுபோல், மீண்டும் நடேசன் கையில் அகப்படப் போகிறேனே! ஐயோ! நான் நடேசன் கையில் அகப்படாமல் ஓடிப்போக எண்ணங் கொண்டவள், அவனிருக்கும் இடத்தையே தேடிப்போகிறேன். நான் அவர்களிருக்கும் இடத்திற்கு ஸமீபத்தில் வந்து ஓடினால், அவர்கள் ஓடும் சப்தத்தைக் கேட்டுப் பின்தொடர்ந்து வந்து என்னைப் பிடித்துக் கொள்ளுவார்களே!" என்று அருகிலிருந்த ஒரு பெரிய மரத்தின் மறைவில் நின்று அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

வண்டிக்காரன்.—அவள் வண்டியில் ஏறியதைப் பார்த்தது மட்டுமல்ல! வண்டி கொஞ்சதூரம் வந்தபின் 'நாம் திருக்கழுக்குன்றம் எப்பொழுது போவோம்?' என்று கேட்டாள். நான் 'இரண்டு மூன்று மணி நேரத்துக்குள் போய் விடலாம்' என்றேன். அவள் 'நீ வண்டிகள் போகும் சாலை வழியே ஏன் போகவில்லை?' என்று கேட்டாள். அதற்கு நான் 'நாம் குறுக்கு வழியாகப் போகிறோம். இம்மார்க்கம் சென்றால் விரைவில் திருக்கழுக்குன்றம் போகலாம்' என்றேன். அவள் ஸந்தோஷப்பட்டுத் தான் படுத்துக்கொள்ளுகிறேன் என்றும் திருக்கழுக்குன்றம் போய்ச் சேருமுன் தன்னை எழுப்பவேண்டாமென்றும் சொல்லிப் படுத்துக்கொண்டவள், வண்டியிலிருந்த வைக்கோலையெல்லாம் முன்பக்கம தள்ளிக்கொண்டிருந்தாள். நான் 'வைக்கோலை ஏன் தள்ளி விடுகிறாய்?' என்று கேட்டதற்கு, தனக்கு அது உறுத்துகிற

தென்று சொல்லிப் படுத்துக்கொண்டாளே ! பின் அவள் எப்படி மாயமாய்ப் போனளோ தெரியவில்லை.

**அன்னியன்.**—அவள் நீ போகும் வழியைப் பார்த்து ஸந்தேகப் பட்டுத் தான் குதித்தோடுவதை நீ பார்க்காமலிருக்கும் பொருட்டு வைக்கோலை உயரமாக உன்பக்கம் தள்ளி வைத்து, வைக்கோல் மறைவில் குதித்தோடிவிட்டாள் போல் காண்கிறது.

**நடேசன்.**—ஆம் ! ஆம் ! அவள் வண்டிக்காரனை மறைத்து விடவே அந்த வேலை செய்தாள். இந்த மடையன் அவள் வைக்கோலைத் தள்ளும்பொழுது வைக்கோலைத் தள்ள வேண்டாமென்று சொல்லியிருந்தால், அவள் இறங்கி யோட முடியாது. அடே ! வண்டிக்காரா ! நீ என் மனதைப் புண்ணுக்கிவிட்டாய். உனக்கு நல்ல வெகுமதி செய்ய இருந்தேன். அதை வீணுகக் கெடுத்துக்கொண்டாய்.

**வண்டிக்காரன்.**—ஐயா ! நான் என்ன செய்வேன் ! எனக்கு அதிட்டமில்லாமல் போயிற்று. என் வண்டி சத்தத்தைக் கொடுங்கள் ; நான் போய்விடுகிறேன்.

**நடேசன்.**—என்னிடத்தில் வண்டி சத்தமென்று கேட்கவேண்டாம். உனக்கு ஒரு காசும் கொடுக்கமாட்டேன். என் மனதைப் புண்ணுக்கிவிட்டாய். நீ எங்கள் ஊரில் இருந்தால் உன்னை நன்ருய் அடித்திருப்பேன. நீ இவ்வூரான் ஆனதால், உன்னை விட்டுவிட்டேன்.

**வண்டிக்காரன்.**—நான் என்ன செய்வேன் ! என்மேல் குற்றமில்லாமல் குறித்த இடத்திற்கு வண்டியைக் கொண்டுவந்தேன். நான் வண்டி கொண்டுவந்ததற்கு வண்டி சத்தம் கொடுக்கவேண்டாமோ ?

**அன்னியன்.**—ஐயா ! எனக்குக் கொடுக்கிறேன் என்றதைக் கொடுத்துவிடும்.

**நடேசன்.**—என் மனம் ஸந்தோஷம் அடைந்திருந்தால் நான் சொன்னவிதம் கொடுத்திருப்பேன் ! நீ இதைப் பெற்றுக்

கொள் (என்று தன் மடியில் நூற்றுக்கதிகம் இருந்ததில் இரண்டு ரூபா எடுத்துக் கொடுத்தான்).

**அன்னியன்.**—(அதை வாங்கி நடேசனிடத்தில் போட்டுவிட்டு) எனக்குப் பத்து ரூபா கொடுக்கிறேன் என்று சொல்லி என்னை அழைத்துவந்து, பிச்சை கொடுப்பதுபோல் என்னிடத்தில் இரண்டு ரூபா கொடுக்கவந்தீரே! அதையும் நீரே வைத்துக்கொள்ளும்.

**நடேசன்.**—அவளை வண்டிக்காரன் கொண்டுவந்திருந்தால் எல்லாம் ஸந்தோஷமாக முடிந்திருக்கும். நான் ஒரு பிரயோசனத்தையும் அடையாமல் வீணில் பணத்தை வாரியிறைப்பது நியாயமல்ல!

**அன்னியன்.**—ஐயா! வண்டிக்காரன் ஏமாறி அப்பெண்ணை விட்டுவிட்டால், நான் என்ன செய்வேன்? என்மேல் குற்றமில்லாதிருக்க, நீர் எனக்குக் கொடுப்பேன் என்றதைக் கொடுக்கத் தடைசெய்கிறது நியாயமல்ல.

**நடேசன்.**—நீ வீட்டில் தூங்குவதை விட்டு என்னோடு வந்ததற்கு இரண்டு ரூபா போதாதோ? போதும்! போதும்! நீ அவளைக் கண்டுபிடித்துக்கொண்டுவந்தால் உனக்குப் பத்தல்ல இருபது ரூபா கொடுக்கிறேன் (என்று நகைத்தான்).

**வண்டிக்காரன்.**— ஐயா! எனக்கு வண்டிசத்தங் கொடுக்கிறீரா? இல்லையா?

**அன்னியன்.**—நீர் எனக்குக் கொடுக்கிறேன் என்ற பத்து ரூபாவைக் கொடுக்கிறீரா? இல்லையா?

**நடேசன்.**—நான் கொடுக்கமாட்டேன் (என்று வண்டிக்காரனைப் பார்த்துச் சொல்லி, பின் அன்னியனைப் பார்த்து), நான் கொடுத்த இரண்டு ரூபாவை வேண்டாமென்றால், நான் என்ன செய்கிறது?

**வண்டிக்காரன்.**—அடே! நீ எனக்கு வண்டிசத்தம் கொடுக்காமற் போனால் வீணில் அவஸ்தைப்படுவாய்!

அன்னியன்.—நீ எனக்குக் கொடுக்கிறேன் என்ற ரூபாவைக் கொடுக்காமற்போனால் நீ என்னிடத்தில் உதைபடுவாய் !

நடேசன்.—அடே ! என்ன சொன்னாய் ? நானா உதைபடுவேன்? உங்களிரண்டுபேரையும் நன்றாய உதைக்கிறேன் பாருங்கள் (என்று வேஷ்டியை வலித்துக் கட்டிக்கொண்டிருந்தான்).

வண்டிக்காரன்.—எங்களையா உதைக்கப்போகிறாய் (என்று சாட்டையால் அடித்தான்).

" எங்களையா உதைக்கப்போகிறாய் ? உன்னைக்கொன்று இவ்விடத்தில் புதைத்துவிடுகிறோம் பார் " என்று அன்னியன் சொல்லி, நடேசன் முகத்தில் நாலைந்து குத்து குத்தினான். வண்டிக்காரனும் அன்னியனுக்கு உதவியாய் நின்று, நடேசன் கீழ்விழும்படி அடித்து, அவன் மடியிலிருப்பதை எடுக்கப்பார்த்தும், நடேசன் அதைக் கொடுக்காமல் தன் இரண்டு கையாலும் கெட்டியாய் பிடித்துக்கொண்டிருந்தான்.

மரத்து மறைவிலிருந்து பார்த்திருந்த பெண், " நடேசனை அநியாயமாய் அடித்துக் கொன்றுவிடுவார்கள்போல் காண்கிறது. நடேசன் கொடியவனாக இருந்தாலும் அவனைக் கொல்லும்படி பார்த்துக்கொண்டிருப்பது நியாயமல்ல " என்றோடி, நடேசன் கீழ்விழுந்திருக்க வண்டிக்காரனும் அன்னியனும் மண்டிபோட்டு உட்கார்ந்து நடேசன் மடியி லிருப்பதை எடுக்க முயலுகிறதைக்கண்டு, வண்டிக்காரன் குரல்வளையை அவன் விழி பிதுங்கும்படி பிடித்துக்கொண்டு, " ஐயா ! நான் வண்டிக்காரனைப் பிடித்துக்கொண்டேன் நீர் மற்றவனைப் பார்த்துக்கொள்ளும் " என்றாள். நடேசன் தனக்கு உதவியாக வந்தவள் ஞானம்பிகை என அறிந்து, அதிக தைரியம் உண்டாகி, அன்னியனை உதைத்து எழுந்து நின்று, தன் பலங்கொண்டு அவன் மார்பில் இரண்டு மூன்று குத்து குத்தினான். அவன் அப்பாடா வென்று நிலத்தில் சாய்ந்தான். உடனே ஞானம்பிகையின் பிடியிலிருந்த வண்டிக்காரன் அப்பிடியிலிருந்து விடுபட்டு

"அடி பெண்ணே! நீயா என் கழுத்தைப் பிடித்தாய்?" என்று ஞானம்பிகையின் கன்னத்தில் அடித்தான். அந்த அடி ஞானம்பிகைக்குப் படுமுன்னம் நடேசன் அவன் முகத்திலும் மார்பிலும் ஐந்தாறு குத்து குத்தி நிலத்தில் சாய்த்தான்.

ஞானம்பிகை.—இவர்களை இவ்விதமே விட்டுவிடக்கூடாது. நீர் விரைவில் சென்று மாடுகளின் தலைக்கயிற்றை அவிழ்த்து வந்து இவர்கள் கையையும் காலையும் கட்டிவிடும்.

நடேசன்.—ஆம்! நல்ல யோசனை சொன்னாய் (என்று கயிற்றை அவிழ்த்துவந்து இருவரையும் கட்டி உருட்டிவிட்டு), ஞானம்பிகை! உன்னால் நான் உயிர்பெற்றேன். நீ வண்டியிலிருந்து இறங்கிபோடியவள் இங்கு எவ்விதம் வந்தாய்?

ஞானம்பிகை.—நான் வண்டியிலிருந்து இறங்கிப்போனவள் வழி தெரியாமல் மனிதர் பேசும் குரல் கேட்டு ஸமீபத்தில் வந்தபொழுது, நீர் வண்டிக்காரனோடு பேசியதால் உம்முடைய குரலென அறிந்து, அப்பெருமரத்தின் மறைவில் நின்றிருந்து, நீங்கள் பேசுவதையெல்லாம் கேட்டிருந்தேன். பின் அவர்கள் உம்மைக் கொன்றுவிடுகிறோம் என்று உம்மை அடித்துக் கீழ்விழுத்தியதைப் பார்த்தேன். உம்மோடு எதிர்த்தவர்கள் இருவரானதால், உம்மால் இருவரையும் வெல்ல முடியவில்லை. நாம் ஒருவனைச் சிலநேரம் நம்பக்கம் திருப்பிக்கொண்டால், நீர் மற்றவனை வென்று எனனோ டிருப்பவனையும் வெல்ல முடியுமென்று நினைத்து வந்து செய்தது பிரயோசனமானதைக் குறித்து ஸந்தோஷப்படுகிறேன்.

நடேசன்.—ஞானம்பிகை! நீ வந்து உதவி செய்யாமலிருந்தால் என்னைக் கொன்றே இருப்பார்கள். நீ உன் உயிருக்குத் துணிந்து வந்து என்னைக் காப்பாற்றினாய். நீ இன்று செய்த உபகாரத்தை மறக்கமாட்டேன். அல்லாமலும் நீ என் விஷயத்தில் செய்வதையெல்லாம் யோசித்துப்பார்த்தால்,

நீயும் என்மேல் அளவற்ற ஆசைகொண்டு வெளிக்குக் காட்டாமலிருக்கிறாய் என்று உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது. என்னை யார் என்ன சொன்ன போதிலும் செவி கொள்ளாது, உன்னையே மணம் புரிவேன் நான் கொண்டிருக்கும் எண்ணம் நிலைசிறக்க எனக்கு ஒரு முத்தம் கொடு, என் கண்ணே !

ஞானம்பிகை.—உமக்கு என்ன செய்தபோதிலும், உம்முடைய துர்ச்குணம் உம்மைவிட்டு நீங்காது. போம் ! போம் ! புத்தியற்றவரே ! (என்று அவனைத் தள்ளி நடந்தாள்).

நடேசன்.—ஞானம்பிகை ! நான் உன்னை விட்டு உயிரோடிருக்க முடியாது.

அங்ஙனம் அவளைப் பின்தொடர்ந்து அவளைப் பிடிக்கப் போகும்பொழுது, ஞானம்பிகை அவன் கைக்கு அகப்படாமல் "நாம் என்ன வேலை செய்தோம் ? கட்டியிருந்த சுணங்களை அவிழ்த்துவிட்டு அதற்குப் பயந்து ஓடுவதுபோல் ஆனதே" என்று உயிருக்கு பயந்து ஓடுவதுபோல் காட்டுக்குள் அங்குமிங்கும் ஓடினாள். நடேசன் நெடுந்தூரம் வந்தவன் பின்தொடர்ந்து வாராமையைக் கண்டு, ஞானம்பிகை விடியும் பரியந்தம் நடந்து காலை ஐந்துமணிக்குச் சாலை சேர்ந்து மைல் கல்லில் பன்னிரண்டு என்ற எண்ணிக்கையைக் கண்டு, அம்மார்க்கம் செல்லுகிறவர்களால் திருக்கழுக்குன்றம் மூன்று மைல் தூரம் இருக்கிறதென அறிந்து, தான் மூன்று நாள் பட்டினியோடு இரவெல்லாம் காட்டுக்குள் அலைந்து ஓடியதால் நடக்கமுடியாமல் பலவிடங்களில் உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்து வழிநடந்து, அதிக இளைப்புடன் காலை எட்டுமணிக்குத் திருக்கழுக்குன்றம் அடைந்தாள். கற்பூரம்மாள் சத்திரம் எதுவென்று விசாரித்து அச்சத்திரத்தின் வெளியில் நின்று, " இச்சத்திரத்தில் உண்ணாமுலையம்மாள் இருக்கிறார்களா ? " என்று அங்கு நின்றிருந்தவர்களைக் கேட்டாள்.

அங்கு நின்றிருந்தவர்கள்.—எங்களுக்குத் தெரியாது. ஆறுமுக முதலியாரே இச்சத்திரத்தில் இருப்பவர். அவரைக் கண்டு

கேட்டால் அவர் சொல்லக்கூடும். நாங்கள் நேற்றே இவ்விடம் வந்தோம்.

**ஞானும்பிகை.**—(அங்குமிங்கும் தேடி, ஆறுமுக முதலியாரைக் கண்டு), ஐயா! என் தாயார் கோபாலகிருஷ்ண பிள்ளை என்பவர் வீட்டில் வேலைசெய்திருந்தார்கள். அவர்கள் குடும்பத்தோடு கிரிப்பிரதட்சணத்துக்காக இவ்விடம் வந்திருந்தபொழுது, என் தாயாருக்கு தேக அசௌக்கியமென எனக்கு எழுதியிருந்தார்கள். அவர்கள் எங்கிருக்கிறார்களென்று சொல்லவேண்டும்.

**ஆறுமுக முதலியார்.**—ஆம்! அம்மா! அவர்கள் நெடுநாள் இங்கிருந்து நேற்றுக் காஞ்சீபுரம் போனார்கள். உன் தாயாருக்கு தேகம் சௌக்கியமாய்விட்டது. நீ தனித்து வந்திருப்பது போல் காண்கிறது. வேண்டுமானால் இவ்விடத்திலிருந்து பக்ஷிதரிசனம் செய்து போகலாம்.

ஞானும்பிகை ஸம்மதப்பட்டு, சத்திரத்தி லிருப்பது அவசியமென்று எண்ணிப் பலகாரம் வாங்கிச் சாப்பிட்டுப் பசியைத் தணித்துக்கொண்டு, சத்திரத்தின பின்புறத்திலுள்ள திண்ணையில் படுத்து நித்திரைபோனாள்.

அந்தச சத்திரத்தில் தங்கியிருப்பவர்கள், காலையில் எழுந்து சங்குதீர்த்த மாடி, கிரிப்பிரதட்சணம் பண்ணி பக்ஷிதரிசனை செய்துவந்தார்கள். அவர்களில் ஒருவர் சத்திரத்தின் பின்புறம் சென்றவர், ஞானும்பிகை திண்ணையில் நித்திரைபோவதைக் கண்டு, இப்பெண் யாரென்று அருகிற்போய் நின்று பார்த்து, "ஆம்! ஆம்! அவளே இவள்!" என்று "அம்மா! அம்மா!" என்றெழுப்பினார். ஞானும்பிகை விழித்துப்பார்த்துத் தன்னருகில் ஒரு அன்னியன் நின்றிருப்பதைக் கண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

**அன்னியன்.**—அம்மா! நீ ஒன்றும் சாப்பிடாமல் நித்திரைபோகிறாயே! உன்னோடு வந்தவர்கள் ஒருவரும் இல்லைபோல் காண்கிறது. நீ தனித்தோ வந்திருக்கிறாய்?

**ஞானம்பிகை.**—(எழுந்து நின்று) ஆம்! ஐயா! நான் தனித்தே வந்திருக்கிறேன். என் தாயார் இவ்விடத்தில் இருக்கிறார்களென்று அவர்களைப் பார்க்க வந்தேன். அவர்கள் காஞ்சீபுரம் போய் விட்டாதாகக் கேள்விப்பட்டதால், நாளைக்குப் போகலாமென் றிருக்கிறேன்.

**அன்னியன்.**—அம்மா! நீ எந்த ஊரிலிருந்து வந்தாய்?

**ஞானம்பிகை.**—ஐயா! நான் கும்பகோணத்திலிருந்து வந்தேன்.

ஞானம்பிகை 'கும்பகோணத்திலிருந்து வந்தேன்' என்று சொன்னதைக் கேட்ட அன்னியன், சத்திரத்திற்குள் சென்று தன் மனைவியை அழைத்துவந்து, "இந்தப் பெண் யாரென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

**அன்னியன் மனைவி.**—எனக்குத் தெரியாது! நான் எப்பொழுதும் இப்பெண்ணைப் பார்த்ததில்லையே!

**அன்னியன்.**—நீ பார்த்ததில்லை யென்று சொல்வது உண்மையே. ஆயினும் இப்பெண்ணைக் குறித்து ஒன்றும் கேள்விப்படவில்லையா?

**அன்னியன் மனைவி.**—நான் பார்த்திராத பெண்ணைக் குறித்து என்ன கேள்விப்படப் போகிறேன்? தாங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லை.

**அன்னியன்.**—அடி பைத்தியக்காரி! "கும்பகோணத்தில் காவேரியாற்றில்" என்று சொன்னால் போதுமா?

**அன்னியன் மனைவி.**—அந்தப் பெண்ணா இவள்? (என்று ஞானம்பிகையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு) அம்மா! நீ அறியாதவளாயிருந்தும் ஒருவரை வெள்ளத்தில் அடித்துப் போக அவரைக் காப்பாற்றினாய் என்று உன்னைப் பார்க்கா முன்னம் கேட்டு ஆச்சரியப்பட்டிருந்து, இன்று உன்னைப்பார்க்க நேரிட்டதைக் குறித்து ஸந்தோஷமடைந்தேன். நீ சாப்பிடாமல் இருக்கிறாய்; சாப்பிடலாம் வா (என்றழைத்தாள்).

**ஞானம்பிகை.**—அம்மணி! நான் காலையில் வாங்கிச் சாப்பிட்ட

பலகாரம் என் நெஞ்சில் அப்படியே இருக்கிறதுபோல் காண்கிறது. எனக்குப் பசியில்லை. என்னை மன்னிக்க வேண்டும்.

**அன்னியன் மனைவி.**—நாங்கள் என்ன குலமென்று தெரியாததால் அவ்விதம் சொல்லுகிறாய்! நாங்கள் வேளாளர் குலமே (என்று ஞானம்பிகையைக் கையைப்பற்றி அழைத்துப்போய் அம்மா! உன் பெயர் என்ன (என்று கேட்டாள்).

**ஞானம்பிகை.**—அம்மா! என் பெயர் ஞானம்பிகை.

**அன்னியன் மனைவி.**—உன்னைக் கும்பகோணத்தில் காவேரியாற்றில் (தன் நாயகனைக் காட்டி) இவர் பார்த்து வந்தாராயினும், உன் பெயரை அறிந்துகொள்ளாமலே வந்தார் (என்று நகைத்தாள்).

**அன்னியன்.**—நான் அங்கு ஞானம்பிகையைப் பார்த்ததற்கும் இப்பொழுது பார்க்கிறதற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. முகமெல்லாம் வாடியும் தேகம் இளைத்தும் இருக்கிறது. சில வேளை பசியால் அவ்விதம் இருக்கக்கூடும். முதலில் ஞானம்பிகைக்குச் சாதம் வட்டி (என்று தன் மனைவியைப் பார்த்துச் சொன்னார்).

**ஞானம்பிகை.**—அம்மா! எனக்குப் பசியில்லை! முதலில் ஐயாவுக்குச் சாப்பாடு போடுங்கள். பின் தங்களோடு நானும் சாப்பிடுகிறேன்.

அன்னியன் மனைவி தன் நாயகனைச் சாப்பிடச்செய்து, பின் தானும் ஞானம்பிகையும் சாப்பிட்டுப் பல விஷயங்களைப் பேசியிருந்து, அன்று மாலை அடிவாரக்கோவிலுக்கு அழைத்துப் போய் சுவாமி தரிசனை செய்வித்து, மறுநாள் காலை சங்குதீர்த்த மாடி கிரிப்பிரதட்சணம் வந்து மலையேறி சுவாமிதரிசனை பக்ஷி தரிசனை செய்வித்தாள். சத்திரத்துக்கு வந்து போஜனம் உண்ட பின், ஞானம்பிகை காஞ்சிபுரம் போகவேண்டும் என்றதால் அவர்கள் இருவரும் நல்லதுணை கூட்டி அவளை வண்டியில் ஏற்றினார்கள். ஞானம்பிகை அவர்களிடத்தும் ஆறுமுக முதலியா

ரிடத்தும் விடைபெற்று, மாலை மூன்று மணிக்கு செங்கல்பட் ஸ்டேஷனில் வந்திறங்கி, காஞ்சீபுரத்துக்கு டிக்கட் வாங்க டிக்கட் கொடுக்கும் இடத்தில் நிற்கும்பொழுது, ஒருவன் பலரிடத்தும் சென்று "ஐயா! என்னிடத்தில் நூறு ரூபாவுக்கு அதிகம் இருந்தது. அதைத் திருடர்கள் கையில் கொடுத்துவிட்டு இரண்டு நாள் பட்டினியோடு இருக்கிறேன். நான் கூடலூருக்குப் போகலாம் என்றாலும் டிக்கட் வாங்கப் பணம் இல்லை. நீங்கள் ஏதாகிலும் தருமம் செய்யவேண்டும்" என்று கெஞ்சி கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கு அநேகர் ஒன்றும் கொடுக்காமல் துரத்திக்கொண்டிருந்தார்கள். சிலர் காலணா அரையணா கொடுத்துக்கொண்டிருந்தார்கள் ஞானம்பிகை அவனைப் பார்த்து? "ஆ! நடேசனா இவ்விதம் பிச்சை கேட்கிறான்? முகமும் உதடும் வீங்கி யிருப்பதோடு தலையிலும் காயம் இருக்கிறது. ஆனதால் அவனைக் கண்டுகொள்ள முடியவில்லை" என்று தான் டிக்கட் வாங்கிக்கொண்டு, அவனருகில் சென்றாள்.

நடேசன்.—(அவளைப் பார்த்து) ஆ! ஞானம்பிகை! நீயா? (என்றான்).

ஞானம்பிகை.—நீர் இவ்விதம் இருப்பதைப் பார்க்க என் மனம் பதறுகிறது. நாம் அவர்களைவிட்டு நீங்கியபின் உம்மை அவர்கள் மீண்டும் பிடித்து உம்மிடத்தி லிருந்ததைக் கைக்கொண்டார்களோ?

நடேசன்.—ஆ! ஞானம்பிகை! நீ எனக்கு உதவிசெய்து என்னை மீட்டுவிட்ட நன்றியை மறந்து உன்னைப்பின் தொடர்ந்து ஓடிவந்தவன், சல்லிடறி விழுந்தேன். நான் விழுந்த விடத்தில் பெருங்கல் ஒன்றிருந்தது. அது தலையில் அடிபட்டு என்னை மூர்ச்சையாக்கிவிட்டது. நான் விழித்துப் பார்த்தபொழுது சூரியன் உதயமாகும் தருணமாயிருந்தது. என் மடியிலிருந்ததும் மாயமாய்ப் போயவிட்டது. என் கையில் ஒன்றும் இல்லாமற் போனதால் செங்கற்பட்டுக்கு நடந்துவந்தேன் (என்று கண் கலங்கினான்).

**ஞானம்பிகை.**—நான் இன்னும் உம்மிடத்தில் நின்று பேசிக் கொண்டிருக்க நேரம் இல்லை. நீர் இதைப் பெற்றுக் கொண்டு திருப்பாதிரிப்புலியூருக்குப் போகலாம். என்னிடத்திலிருந்தது இவ்வளவே! அதிகம் இல்லாமற்போனதைக் குறித்துத் துக்கப்படுகிறேன். (என்று தன்னிடத்திலிருந்த ஒரு ரூபாவும் சில்லரையும் கொடுத்துவிட்டு ஓடிக் காஞ்சீபுரத்துக்குப் போகும் வண்டியில் ஏறிக்கொண்டாள்). உடனே வண்டி பிரயாணப்பட்டது. ஐந்தரை மணிக்குக் காஞ்சீபுரம் சேர்ந்தவுடன், ஞானம்பிகை, தன் தாயாரின் மேல்விலாசம் அறிந்தவளாதலால், அவள் இருப்பிடத்தை விசாரித்துக்கொண்டு சப்பாணிப்பிள்ளையார் கோவில் தெருவிலுள்ள ஓர் வீட்டுக்குள் போய் நுழைந்தாள்.

**உண்ணுமுலையம்மாள்.**—(ஓடிவந்து ஞானம்பிகையைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு) அம்மா! ஞானம்பிகை! நீ திருக் கழுக்குன்றம் வருவாயென்று எதிர்பார்த்திருந்தேன். அங்கு ஏன் வரவில்லை? (எனறு கேட்டாள்).

**ஞானம்பிகை.**—அம்மா! நான திருக்கழுக்குன்றத்திலிருந்தே வருகிறேன். தாங்கள் இறங்கியிருந்த சத்திரத்திலே நானும் இறங்கியிருநதேன்.

வீட்டுக்குள்ளிருந்த கோபாலகிருஷ்ணபிள்ளை மனைவி ஞானம்பிகையைப் பிடித்தணைத்துக்கொண்டு அழைத்துப்போய் உட்காரவைத்து, அம்.ா! உன் தாயார் நலியாயிருந்ததால் நாங்கள் அதிகம் பயந்திருந்தோம். அந்த வேதகிரீஸ்வரரே காப்பாற்றிவிட்டார்" என்று பல விஷயங்களைக் குறித்து வார்த்தையாடிக்கொண்டிருநதார்கள். யாவரும் சாப்பிட்டபின் ஞானம்பிகை தன் மூட்டையை அவிழ்த்துத் தன் தாய்க்சாக வைத்திருந்த சேலையைத் தன் தாயிடம் கொடுத்து, "அம்மா! தாங்கள் இதைக் கட்டிக்கொள்ளவேண்டும். நான் நெடுநாளுக்கு முன் தங்களுக்கு இதை அனுப்பவேண்டுமென்று வாங்கி வைத்திருந்தேன். அப்பொழுதெல்லாம் அனுப்ப முடியாமல்

நானே கொண்டுவந்து கொடுக்க நேரிட்டதைக் குறித்து ஸந்தோஷப்படுகிறேன் " என்றாள்.

**உண்ணாமுலை யம்மாள்.**—*அம்மா! நான் உனக்கு வாங்கிக் கொடுக்க வேண்டியதாயிருக்க நீயே எனக்கு வாங்கிக் கொண்டு வந்தாய் (என்று மகளுக்கு முத்தங்கொடுத்தாள்).*

*அன்றிரவு உண்ணாமுலை யம்மாளும் ஞானம்பிகையும் நெடுநேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்து நித்திரை போனார்கள், மறுநாள் காலை ஞானம்பிகை தன் தாயைச் சும்மா இருக்கச் சொல்லித் தானே சமையல் வேலையைச் செய்து முடித்தாள். கோபாலகிருஷ்ண பிள்ளையும் அவர் மனைவியும் சிறுவர்களும் பாகம் நன்றா யிருக்கிறதென்று கொண்டாடி ஞானம்பிகையைப் புகழ்ந்தார்கள். அதுமுதல் ஞானம்பிகை கடினமான வேலைகளை யெல்லாம் தானே செய்துகொண்டிருந்தாள். ஞானம்பிகை காஞ்சீபுரம் வந்து சேர்ந்தவுடன், மீனம்பாளுக்குத் தன் தாய் ஸௌக்கியமா யிருக்கிறார்களென்றும் அதைப் பெரியவருக்கும் தெரியப்படுத்துவதென்றும் எழுதியனுப்பினாள். சில நாள்களுக்குப் பின் இருபத்தைந்து அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத்தகுந்த வயதுடைய ஓர் ஸுந்தரமான பெண் பிள்ளை வந்து கோபாலகிருஷ்ண பிள்ளை மனைவியோடு நெடுநேரம் வார்த்தையாடியிருந்து, போகும்பொழுது ஞானம்பிகையைப் பார்த்துக்கொண்டே நீங்கினாள். ஞானம்பிகை அந்த அம்மாள் யாரென்று தன் தாயைக் கேட்டாள்.*

**உண்ணாமுலை யம்மாள்.**—*அம்மா! அந்தம்மாள் கோபாலகிருஷ்ண பிள்ளையின் கொழுந்தியாள். அந்தம்மாளுடைய புருடன் இவ்வூரிலேயே உத்தியோகமாக இருக்கிறார். அவருக்கு இந்த அம்மாள் இரண்டாந்தாரம். முதல்தாரம் ஒரு பெண்குழந்தையையும இரண்டு ஆண்குழந்தையையும் விட்டிறந்தாள்.*

**ஞானம்பிகை.**—*அந்த அம்மாளுடைய முகமும் நம்முடைய அம்மாளுடைய முகமும் ஒரே வார்ப்படம்போ லிருந்ததால்*

தங்கையாக இருக்கவேண்டுமென்றே நினைத்தேன். அந்த அம்மாளுடைய பேர் என்ன ?

**உண்ணாமுலை யம்மாள்.**—கிருஷ்ணவேணி யம்மாள்.

**ஞானம்பிகை.**—அந்தம்மாள் நாயகன் பேர் ?

**உண்ணாமுலை யம்மாள்.**—செந்தில்வேல் பிள்ளை.

**ஞானம்பிகை.**—கிருஷ்ணவேணி யம்மாளுக்குக் குழந்தைகள் உண்டா ?

**உண்ணாமுலை யம்மாள்.**—ஒரு பெண்குழந்தையும் இரண்டு ஆண் குழந்தையும் இருக்கிறது இப்பொழுதும் அக்காளும் தங்கையும் சர்ப்பமாயிருக்கிறார்கள.

**ஞானம்பிகை.**—கிருஷ்ணவேணியம்மாள் அடிக்கடி இங்கு வருவார்களோ ?

**உண்ணாமுலை யம்மாள்.**—ஆம் ! இரண்டில் மூன்றில் வந்து தன் புருடன்மேல் குறைகூறிப் போவார்கள்.

**ஞானம்பிகை.**—அவரும் கூத்தியார் வைத்துக்கொண்டிருக்கிறாரோ ? (என்று நகைத்தாள்).

**உண்ணாமுலை யம்மாள்.**—அவருக்குக் கூத்தியார் இல்லை என்று தாயும் பெண்ணும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது, தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து "ஞானம்பிகை என்பவர் யார் ?" என்று கேட்டான்.

**ஞானம்பிகை.**—நான்தான் ஞானம்பிகை (என்று சொல்லிக்கடிதத்தை வாங்கி வாசித்துப் பார்த்து), அம்மா ! நான் இன்னும் நெடுநாள் இங்கிருக்க முடியாது. தங்களை அழைத்துக் கொண்டு என்னை வரும்படி மீனும்பா ளண்ணி எழுதியிருக்கிறார்கள் (என்றாள்).

**உண்ணாமுலை யம்மாள்.**—அண்ணியா ! உன் ஸகோதரன் மனைவியா (என்று நகைத்தாள்)

**ஞானம்பிகை.**—ஆம் ! அம்மா ! எனக்கு அந்த அம்மாள் அண்ணியே ! அந்த அம்மாளுடைய புருடன் எனக்கு

அண்ணனே! என்னை அந்த அம்மாள் மச்சியென்றே அழைக்கிறார்கள்.

**உண்ணமுலையம்மாள்.**—(திடுக்கிட்டு) என்ன சொன்னாய்? அந்த அம்மாளுடைய புருடன் உனக்கு அண்ணன் என்று எவ்விதம் முறை கண்டுபிடித்தாய்?

**ஞானம்பிகை.**—என்னை அவர்கள் முதலில் வேலைக்காரியாகவே நடத்தினார்கள். பின் அவர்கள் என்மேல் பிரியங்கொண்டு அவ்விதம் அழைக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். ஆனதால் அவர்களை அவ்விதமே அழைக்கிறேன்.

**உண்ணமுலையம்மாள்.**—(பெருமூச் செறிந்து) நான் என்னமோ என்று நினைத்தேன். உன்னை வரச்சொல்லுகிறார்களே! உனக்குப் போக இஷ்டந்தானே?

**ஞானம்பிகை.**—தங்களோடு போக இஷ்டமே! (என்று நகைத்தாள்).

**உண்ணமுலையம்மாள்.**—அம்மா! ஞானம்பிகை! நான் நெடுநாளாக வேதவல்லியம்மாள் வீட்டில் இருக்கிறேன். இப்பொழுது வேதவல்லியம்மாள் கர்ப்பமாயிருக்கிறாள்; ஏழாம் மாதம் நடக்கிறது. இந்த ஸமயத்தில் அந்த அம்மாளை விட்டு வந்தால் அவர்கள் என்ன சொல்லுவார்கள்?

**ஞானம்பிகை.**—என்னைத் தனித்தோ போகச் சொல்லுகிறீர்கள்?

**உண்ணமுலையம்மாள்.**—உன்னையும் அனுப்ப இஷ்டமில்லை.

**ஞானம்பிகை.**—நாம் இரண்டுபேரும் இவர்கள் வீட்டிலிருந்தால், அவர்களுக்கு வருத்தமா யிருக்காதா? அவர்கள் உன்மகளை அனுப்பிவிடு என்று தங்களிடம் சொன்ன பின் போவது நன்றல்லவே!

**உண்ணமுலையம்மாள்.**—நீ சொல்வது நியாயமே! அந்த அம்மாளைக் கேட்டுச சொல்லுகிறேன்.

அடுத்த நாள் வேதவல்லியம்மாள் ஸந்தோஷமாக இருக்கும் ஸமயம் பார்த்து, அவள் அருகில் உண்ணமுலையம்மாள்

போய் உட்கார்ந்து, "அம்மா! என் மகள் ஊருக்குப் போக வேண்டுமென்று என்னைத் தன்னோடு வரும்படி வேண்டினாள். நான் தங்களை விட்டுவர முடியாதென்று சொன்னதால், அவள் தனித்துப் போகிறேன் என்கிறாள். நான் தங்களுடைய யோசனையைக் கேட்க வந்தேன்" என்றாள்.

வேதவல்லி யம்மாள்.—அம்மா! உன் மகள் பருவமடைகிற காலமாக இருக்கிறதே! நீ அவளைத் தனித்து அனுப்பலாமா?

உண்ணாமுலை யம்மாள்.—நான் என்ன செய்கிறது? வயிற்றை வளர்க்கவேண்டுமே!

வேதவல்லி யம்மாள்.—நான் ஞானம்பிகையைப் பார்த்தபின் அவளை விட்டுவிட எனக்குப் பிரியமில்லை. என்ன செய்யலாம்? என் நாயகனுக்குச் சம்பளம் அதிகமாயிருந்தால், நான் எதையும் கவனிக்கமாட்டேன். அவளையும் விடமாட்டேன். அவருடைய சம்பளம் அதிகமல்லவென்பது உனக்குத் தெரிந்திருக்கிறது. ஆனதால் வரவைப் பார்த்தே செலவு செய்யவேண்டும். இங்கு யார்வீட்டிலாகிலும் உன் மகளை நீ ஏன் வைக்கக்கூடாது?

உண்ணாமுலை யம்மாள்.—ஐயோ! அவளுக்கு இந்த ஊரில் வேலை செய்ய இடங்கிடைத்தால் ஸந்தோஷமாக வைத்துவிடுவேனே!

வேதவல்லி யம்மாள்.—இவ்வூரில் இடங்கிடைத்தால் வைத்துவிட ஸம்மதமானாலும், நீ உன் மகளைக் கேட்கவேண்டாமா?

உண்ணாமுலை யம்மாள்.—எனக்கு ஸம்மதமானால் போதுமானது என் மகளைக் கேட்கவேண்டியதில்லை.

வேதவல்லி யம்மாள்.—நான் நாளைக்குச் சொல்லுகிறேன்.

உண்ணாமுலை தனக்கும் வேதவல்லி யம்மாளுக்கும் நடந்த ஸம்பாஷணையைத் தன்மகளிடம் சொன்னாள். ஞானம்பிகை தன் தாய் இருக்கும் ஊரில் தனக்கும் வேலைசெய்ய இடங்கிடைத்தால் போதுமென்றிருந்தாள். அடுத்த நாள் கிருஷ்ணவேணி

யம்மாள் வந்து தன் தமக்கையிடம் பேசியிருக்கும்பொழுது, வேதவல்லியம்மாள் உண்ணாமுலையை அழைத்து, "என் தங்கை ஞானம்பிகையை அழைத்துப் போகிறேன் என்கிறாள். சம்பளம் என்ன கேட்கிறாய்?" என்று கேட்டாள். உண்ணாமுலை ஞானம்பிகையை அழைத்து, வேதவல்லியம்மாள் கருத்தைச் சொல்லி, "சம்பளம் என்ன வேண்டுமென்று கேட்கிறார்கள்?" என்றாள்.

ஞானம்பிகை.—எனக்குச் சம்பளம் இவ்வளவு கொடுங்க ளென்று கேட்கமாட்டேன். தாங்கள் கொடுத்ததை ஸந்தோஷத்தோடு பெற்றுக்கொள்ளுகிறேன்.

கிருஷ்ணவேணி யம்மாள்.—அவ்விதம் சொல்வது பின் மனச் சங்கடத்தை உண்டுபண்ணும். நான் இவ்வளவு கொடுக்கலாம் என்று நினைத்திருப்பேன். நீ இவ்வளவு கிடைக்குமென்று எண்ணியிருப்பாய். அது கூடாது. நான் சாப்பாடு போட்டு மாதம் இரண்டு ரூபாவும் வருடத்துக்கு இரண்டு பாவாடை தாவணி இரவிக்கையும் கொடுக்கிறேன். உனக்கு ஸம்மதமா?

ஞானம்பிகை.—எனக்கு ஸம்மதமே.

கிருஷ்ணவேணி யம்மாள்.—நான் நல்லநாள் பார்த்துச் சொல்லியனுப்புகிறேன். அப்பொழுது நீ வரலாம் (என்று நீங்கினாள்).

---

## 15—ம் அத்தியாயம்

காஞ்சீபுரத்தில் உலகளந்த பெருமாள் கோவிலுக்கு எதிர் வாடையில் ஓர் மெத்தை வீட்டில், காலை எட்டரை மணிக்கு, பன்னிரண்டு வயதுள்ள பெண்ணின் தலைமயிரை மற்றோர் பெண் சீவிக்கொண்டிருப்பதை அவ்வீட்டிலிருந்த எஜமாட்டி பார்த்து, "அடி ஞானம்பிகை! நீ என்ன புஷ்பத்தைச் சிங்காரித்து மனையில் ஏற்றப்போகிறாயா? அவள் தன் தலையைச் சீவிக்கொள்ள முடியாதா? நான் உன்னை ருக்கு

மணிக்குத் தலை சீவிவிடச் சொன்னால், நான் சொல்வதைச் சட்டை பண்ணாமல் உன்னிஷ்டம்போல் செய்கிறாய்! கிருஷ்ண வேணியின் பிள்ளைகளென்றால் அவருக்குக் கசந்திருக்கிற தென்று நினைத்தேன். உனக்குமா கசந்துவிட்டது?'' என்றாள்.

ஞானம்பிகை.—தனக்குச் சடை போட்டுக்கொள்ளத் தெரியவில்லையென்று புஷ்பம்மாள் என்னைப் போட்டுவிடச் சொன்னதால் நான் போட்டுவிட்டேன். இதோ ஒரு நொடியில் ருக்குமணியம்மாள் தலையைச் சீவிவிடுகிறேன் (என்று ஏழு வயதுள்ள ருக்குமணியை அழைத்துச் சடை போட்டு, சிறுவர்களுக்கெல்லாம் பலகாரமும் காப்பியும் கொடுத்தாள்).

கிருஷ்ணவேணி யம்மாள்.—(சிறுவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து) அடி ஞானம்பிகை! புஷபத்துக்கும், ஏகாம்பரத்துக்கும், வீரபத்திரனுக்கும் காலையில் பழையது போடு. அவர்கள் பழையது சாப்பிட்டு வழக்கமுடையவர்களென்றும், ருக்குமணிக்கும், அநந்தசயனனுக்கும், பதமநாபனுக்கும் பலகாரமும் காப்பியுங் கொடு என்றும் சொல்லியிருக்க, நீ யாவருககும் பலகாரமும் காப்பியும் கொடுத்திருக்கிறாயே!

ஞானம்பிகை.—அம்மணி! பழையது சாப்பிட வெஞ்சனம் ஒன்றுமில்லை. ஆனதால் யாவருக்கும் பலகாரமும் காப்பியும் கொடுததேன்.

கிருஷ்ணவேணி யம்மாள்.—வெஞ்சனமில்லாமல் அவர்களுக்குப் பழையது இறங்கமாட்டேனெனகிறதோ! மிளகாயைக் கடித்துக்கொண்டு சாப்பிடக்கூடாதோ! இவர்கள் காப்பியும் அப்பமும் சாப்பிட்டோ வளாந்தார்கள் (என்று கோபித்துச சொன்னாள்).

சிறுவர்கள் சாப்பிட்டபின் அவர்களுக்கு ஞானம்பிகை உடுப்புகள் போட்டு வெளியில் அனுப்பினாள். அவர்கள் பள்ளிக்கூடத்துக்குப் போவதைப் பார்த்திருந்த கிருஷ்ணவேணி

ஞானம்பிகையை அழைத்து, "புஷ்பத்துக்கு ஏன் [பாவாடை கட்டித் தாவணி போட்டனுப்பினுய்? சிற்றுடை கட்டி அனுப் பக்கூடாதா? ஏகாம்பரத்துக்கும் வீரபத்திரனுக்கும் உடுப்பு ஏன் போட்டாய்? தோவத்தி கட்டிப்போனுல் போதாதா? என் பிள்ளைகளுக்கு உடுப்புப் போட்டனுப்பினுல் அவர்கள் அவைகளை அழுக்காக்காமல் ஒரு வாரத்திற்கென்றாலும் போட் டிருப்பார்கள். அந்தச் சக்காளத்திக் குட்டிகள் ஒரு நாளைக் குள் ஒன்றுமில்லாமல் செய்துவிடுவார்களே! இனிமேல் அவர்க ளுக்கு உடுப்புப்போட்டு அனுப்பவேண்டாம். நீ இங்கு வந்து ஒரு வாரத்துக்கு அதிகமாயும், நீ இன்னம் என் கருத்தை யறிந்து அவ்விதம் நடக்காமலிருக்கிறாய்" என்று கடுகடுத்துச் சொன்னாள்.

**ஞானம்பிகை.**—நான் இனிமேல் தங்கள் இஷ்டம்போலவே செய்வேன் (என்றாள்).

செந்தில்வேல் பிள்ளை வழக்கப்பிரகாரம் தாம் உத்தி யோகத்துக்குப் போகவேண்டிய நேரத்தில் சாப்பிட்டு நீங்கினார். மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து சிறுவர்கள் வந்தவுடன் அவர்களை உட்காரவைத்து ஞானம்பிகை சாதம் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—(அவ்விடத்தில் வந்து நின்று) அடி! ஞானம்பிகை! வாழையிலை எல்லாருக்கும் போட வேண்டுமோ? அவர்களுக்குத் தையல் இலை போட்டு இவர்களுக்கு வாழையிலை போடக்கூடாதோ? இனிமேல் வயதில் முதிர்ந்த அம்மூவருக்கும் தையல் இலைகள் போடு. என் பிள்ளைகள் சிறியவர்கள; தையல் இலையில் சாப்பிட அறியார்கள். ஆனதால் இவர்களுக்கு வாழை யிலைகள் போடு. நெய் ஏன் அவர்களுக்கு விடப்போகி றாய்? வேண்டாம்! வேண்டாம்! அவர்கள் நெய்யில்லா மல் சாப்பிடுவார்கள். என் பிள்ளைகள் ஒருவாய் சாத மும் நெய்யில்லாமல் சாப்பிடமாட்டார்கள். குழம்பு அவர் களுக்கு விடவேண்டாம். இரசமே அவர்களுக்குப் பிரி

யம். குழம்பு என் பிள்ளைகளுக்கு விடு. அந்தப் பிள்ளைகளைப் பார்! செக்குலக்கைபோல் இருக்கிறார்கள். என் பிள்ளைகளை எவ்விதம் ஊட்டி வளர்த்தாலும், அவர்கள் ஈர்கொல்லிபோல் இருக்கிறார்கள்.

**ருக்குமணி.**—அம்மா! நான் அக்காளைவிட உப்பியிருக்கிறேன். நேற்று அக்காளுடைய ரவிக்கையை என்னுடையதென்று நினைத்துப் போட்டேன். அது எனக்குப் பிடிக்கவில்லை. அக்காள் என்னுடைய இரவிக்கையைப் போட்டாள். அது அவளுக்கு தொளதொளவென் றிருந்தது (என்று நகைத்தாள்).

**அநந்தசயனன்.**—அம்மா! ஏகாம்பரத்தண்ணன் சொக்காய் எனக்குப் பிடிக்கவே யில்லை. நாங்கள் அவர்களைவிட உப்பியிருக்கிறது உங்களுக்குத் தெரியவில்லையே (என்று நகைத்தான்).

**கிருஷ்ணவேணி யம்மாள்**—(தன் பிள்ளைகள் சொன்னதைக் கேட்காததுபோல இருந்து, பத்மநாபன் நீங்கலாக மற்றவர்கள் யாவரும் சாப்பிட்டெழுந்ததைப் பார்த்து), அடி புஷ்பா! சாப்பிட்ட இலைகளை எடுத்தெறியாமல் போகிறாய் கழுதை (என்று கன்னத்தில் அறைந்தாள்).

**புஷ்பம்.**—தம்பி சாப்பிட்டுக்கொண்டிருந்ததால் நான் இலைகள் எடுக்காமற் போனேன் (என்று சொல்லிக்கொண்டே இலைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டுபோய் எறிந்தாள்).

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—தன் பிரிய மகளைப் படிக்கவைத்துப் பெரிய உத்தியோகம் செய்யவிடப் போகிறார் (என்று முறுமுறுத்துக் கொண்டிருந்தாள்).

அன்றிரவு செந்தில்வேல் பிள்ளையோடு சிறுவர்கள் யாவரும் உட்கார்ந்து சாப்பிடப் போகும்பொழுது, செந்தில்வேல் பிள்ளை ஞானம்பிகையைப் பார்த்து, "இவர்களுக்குத் தையல் இலைகளும் அவர்களுக்கு வாழை யிலைகளும் போட்டாயே! யாவருக்கும் தையல் இலைகளை ஏன் போடக் கூடாது?" என்று கேட்டார்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—என் பிள்ளைகள் வாழையிலையில் சாப்பிடுகிறதைப் பார்க்கத் தங்கள் மனம் பொறுக்குமா (என்றாள்).

செந்தில்வேல்பிள்ளை ஒன்றும் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

**ருக்குமணி.**—அப்பா! அம்மாவுக்குக் கண் தெரியவில்லை. அக்காளும் பெரிய அண்ணனும் சின்ன அண்ணனும் உப்பியிருக்கிறார்களென்றும், நானும் தம்பிகளும் இளைத்துப் போயிருக்கிறோமென்றும் சொன்னார்களே! யார் உப்பியிருக்கிறார்கள்? யார் இளைத்திருக்கிறார்கள்?

**செந்தில்வேல் பிள்ளை.**—நீங்கள் இளைத்திருக்கிறீர்கள். அக்காளும் அண்ணனும் உப்பியிருக்கிறார்கள்.

**அநந்தசயனன்.**—ஐயையோ! அப்பாவுக்கும் கண் தெரியவில்லையே (என்று நகைத்தான்).

ருக்குமணியும் பத்மநாபனும் கெக்கலி கொட்டி நகைத்தார்கள். செந்தில்வேல் பிள்ளையும் அவர்களோடு தானும் நகைத்தார்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—நீங்கள் உப்பியிருப்பதைப் பார்க்க அவருக்கு மனம் பொருந்தாது. அப்பிள்ளைகள் உப்பியிருந்தால் அவர் கண் குளிரப் பார்த்து ஸந்தோஷமடைவார்.

செந்தில்வேல் பிள்ளை கிருஷ்ணவேணி யம்மாள்சொல்வதைக் கவனிக்காமல் அவ்விடத்தைவிட்டு நீங்கினார். கிருஷ்ணவேணி யம்மாள் பிள்ளைகள் மூவரும் தங்கள் தாய் தந்தை படுத்துக்கொள்ளும் அறையில் தனித்தனியாக இருந்த மூன்று சிறிய கட்டிலில் படுத்துக்கொண்டார்கள். முதல் தாரத்தின் பிள்ளைகள் ஓர் கோரைப்பாய் போட்டுப் படுத்துக்கொண்டார்கள். அவர்களுக்குத் துணையாகத் தன் வேலைகளை முடித்துவிட்டு ஞானம்பிகையும் போய்ப் படுத்துக்கொண்டவுடன், புஷ்

பம் ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருந்தாள். அவள் அழுகிறதைப் பார்த்த மற்றிருவரும் அழுது கொண்டிருந்தார்கள்.

ஞானம்பிகை.—(அவர்கள் கண்களைத் துடைத்து) அழவேண்டாம் என் கண்மணிகளே (என்று தன் கண்களில் நீர் வடிய விட்டாள்).

புஷ்பம்.—அக்காள்! எங்களை ஏன் உயிரோடு வைத்திருக்க வேண்டும். எங்கள் தாயார் தில்லைநாயகம் எங்களை ஏன் அழைத்துக்கொள்ளக்கூடாது? எங்கள் சின்னம்மாள் எங்கள் விஷயத்தில் செய்யும் கொடுமையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! நாங்கள் எத்தனை நாளைக்கு இந்த துன்பத்தை அனுபவிப்போம்? எங்களுக்கு ஓர் தலையணை கொடுக்காமல் இந்தப் பாயில் உருளச் சொல்லுகிறார்களே (என்று அதிக துக்கத்தோடு அழுதாள்).

ஞானம்பிகை.—அம்மா! நீ அழவேண்டாம்! நீ அழுகிறதைப் பார்த்தால் தம்பிமார்களும் அழுகிறார்கள். நான் விரைவில் உங்களுக்குக் கட்டிலும் மெத்தையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லுகிறேன்.

புஷ்பம்.—அக்காள்! தாங்கள் ஒரு கரண்டி நெய் ஊற்றியதற்கும் வாழையிலை போட்டதற்கும் எங்கள் சிறிய தாயார் தங்களைக் கோபித்துக்கொண்டார்களே! தாங்கள் எங்களுக்கும் கட்டிலும் மெத்தையும் வாங்கிப் போடச்சொன்னால், தங்கள் வார்த்தையைக் கேட்பார்களா! ஐயோ! எங்களுக்குக் கட்டிலும் வேண்டாம்; மெத்தையும் வேண்டாம். எங்களைக் கண்டு கோபிக்காமலும் அடிக்காமலும் இருந்தால் போதுமே (என்றழுதாள்).

ஞானம்பிகை அவர்கள் துக்கத்தை யாற்றித் தூங்க வைத்து, "இதென்ன அநியாயம்! இந்தக் கொடுமையைப் பார்க்கவா இங்கு வந்தேன்? இவர்களை விட்டுப் போய்விடலாம் என்றால், இவர்கள் இறந்துவிடுவார்கள் போல் காண்கிறதே" என்று எண்ணுதெல்லாம் எண்ணி நித்திரைபோனாள்.

சில நாட்களுக்குப் பின் கிருஷ்ணவேணி யம்மாள் தன் தமக்கை வீட்டுக்குப் போயிருந்தாள். செந்தில்வேல் பிள்ளை அவருடைய சினேகரோடு ஒரறையில் சீட்டாடிக்கொண்டிருந்தார். ஞானம்பிகை அடுத்த அறையில் உட்கார்ந்து பத்மநாபனுக்குச் சொக்காயொன்று தைத்துக்கொண்டிருந்தாள்.

செந்தில்வேல் பிள்ளை.—நண்பர்களே! ஒருவனுக்கு முதல் மனைவியால் குழந்தைகள் உண்டாகி அவள் இறந்து விடுவாளானால், மறுவிவாகம் செய்துகொள்ளாமலிருப்பதே மேன்மை.

முதல் நண்பர்.—(தம்மோடிருப்பவரைப் பார்த்து) ஐயா! கூத்தப்பெருமாள் பிள்ளை! செந்தில்வேல் பிள்ளை சொல்வதைக் கேட்டீரோ?

கூத்தப்பெருமாள் பிள்ளை.—ஏன் அவ்விதம் சொல்கிறீர்? முதல் மனைவி இறந்தால் மறுவிவாகம் செய்துகொள்ளாமலோ இருக்கிறார்கள்?

செந்தில்வேல் பிள்ளை.—நான் சொல்வதை நீங்கள் கவனிக்கவில்லை. முதல் மனைவி பிள்ளைகளை விட்டு இறப்பாளாயின், அப்பிள்ளைகளிருக்க வேறு விவாகம் செய்துகொள்வது கூடாதென்றே சொல்லுகிறேன். மறுவிவாகம் செய்துகொள்ள விருப்பமிருக்கின், முதல் மனைவியின் பிள்ளைகளைக் கொன்றுவிட வேண்டும்.

கூத்தப்பெருமாள் பிள்ளை.—பெரியண்ண பிள்ளை! செந்தில்வேல் பிள்ளை சொல்வதின் கருத்து விளங்குகிறதா?

பெரியண்ண பிள்ளை.—எனக்குத் தெரியவில்லை.

கூத்தப்பெருமாள் பிள்ளை.—(செந்தில்வேல் பிள்ளையைப் பார்த்து) ஏன் அவ்விதம் சொல்லுகிறீர்?

செந்தில்வேல் பிள்ளை.—எனக்கு முதல் மனைவியின் பிள்ளைகளிருக்க நான் மறுவிவாகம் செய்துகொண்டது பெருந்துக்கமாக இருக்கிறது. என் மனைவி அப்பிள்ளைகளுக்குச் செய்யும் கொடுமையை என்னால் பார்க்க முடியவில்லை.

அத்துன்பத்தை அப்பிள்ளைகள் அனுபவிக்கிறதைவிட அப்பிள்ளைகள் இறந்தால் மேலென்று எண்ணுகிறேன்.

**கூத்தப்பெருமாள் பிள்ளை.**—நீர் உம்முடைய மனைவியைக் கண்டிக்கிறதில்லைபோல் காண்கிறது.

**செந்தில்வேல் பிள்ளை.**—நான் கண்டித்தால் அப்பிள்ளைகளை அதிகம் துன்பப்படுத்துகிறாள். அவள் செய்வதையெல் லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருந்தால் மேலாக இருக் கிறது.

**பெரியண்ண பிள்ளை.**—உம்முடைய இரண்டாவது மனைவி அப்பிள்ளைகளை என்ன செய்கிறாள்?

**செந்தில்வேல் பிள்ளை.**—நான் அக்கொடுமையை என்ன வென்று சொல்லுவேன்? என் முதல் மனைவியின் குழந் தைகளுக்கு நல்ல சாப்பாடு கிடையாது. அவர்கள் நன் றாய் உடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போகிறதில்லை. அவர்கள் படுத்துக்கொள்ள நல்ல படுக்கையும் இல்லை (என்று கலங்குகிறார்).

**கூத்தப்பெருமாள் பிள்ளை.**—நீர் ஏன் ஓர் வேலைக்காரியை வைத்துத் அவர்களுக்கு வேண்டிய சௌகரியத்தைச் செய்யச் சொல்லக்கூடாது?

**செந்தில்வேல் பிள்ளை.**—வேலைக்காரி இல்லாமற் போக வில்லை! ஒரு பெண் இருந்தே வேலை செய்கிறாள். அவள் மிக்க புத்திசாலியாகவே இருக்கிறாள்! அவள் அக்குழந் தைகளுக்கு ஏதாகிலும் செய்தால், அவளை வதைத்துக் கொண்டிருக்கிறாள்.

**பெரியண்ண பிள்ளை.**—ஐயா! எனக்கு ஓர் யோசனை உதிக் கிறது. அதாவது திருப்பாதிரிப் புலியூரில் ஒருவன் தன் மனைவியைவிட்டுக் கூத்தியாரே கதியென் றெண்ணித்தன் மனைவியைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்தா னென்றும், கும்பகோணத்தில் ஒரு பத்திரகாளி தன் நாயகனை அதிகம் துன்பப்படுத்திக்கொண்டிருந்தாளென்றும், இவ்விருவரை

யும் ஒரு பெண் அடக்கி நல்வழியில் கொண்டுவந்தா ளென்றும், என் நண்பர் ஒருவர் எழுதியிருந்தார். அப் பெண்ணைத் தேடிப் பார்த்துக் கொண்டுவந்தால், உம்மு டைய மனைவியையும் அடக்கிவிடுவாளென்று நினைக் கிறேன் (என்று நகைத்தார்).

**கூத்தப்பெருமாள் பிள்ளை.**—அப்பெண் பேர் என்ன ?

**பெரியண்ண பிள்ளை.**—அப்பெண்பேரை எழுதாமல் விட்டார்.

**கூத்தப்பெருமாள் பிள்ளை.**—அப்பெண் பேரை அறிவது அவ சியம் ! நீர் உம்முடைய நண்பருக்கு எழுதிக் கேளும்.

**பெரியண்ண பிள்ளை.**—நான் எழுதியிருக்கிறேன். பதில் கிடைக்கவில்லை. அவர் எங்கெங்கோ திரிந்துகொண்டிருக் கிறாராம்.

என்று சொல்லிப் பின் வெவ்வேறு விஷயங்களைக் குறித் துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சில தினங்களுக்குப்பின் ஞானம்பிகை கடைக்குப் போய் வந்தவுடன், கிருஷ்ணவேணியம்மாள் அவளைப் பார்த்து, "அடி! ஞானம்பிகை ! நீ எப்பொழுது கடைக்குப் போனாய் ? இப் பொழுது வந்தாய் ! கடையில் இத்தனை நேரம் யாரைப் பார்த் துக் கொண்டிருந்தாய் ? நான் சில நாளாகக் கவனித்துவந்தேன். நீ வெளியில் போனால் நெடுநேரம் சென்று வருகிறாய். அடிக்கடி வெளியில் போய் வரவேண்டுமென்று கேட்கிறாய் ! நீ இவ்வித மிருந்தால் இவ்வீட்டில் இருக்க முடியாது" என்று கோபமாகச் சொன்னாள். அப்போது வேதவல்லியம்மாள் வீட்டுக்குள் வந்து "என்ன என்ன, ஞானம்பிகையை ஏன் கோபிக்கிறாய?" என்று கேட்டாள்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—அக்காள் ! ஞானம்பிகை முன் போல் இல்லை. அவள் அடிக்கடி வெளியில் போய்விடு கிறாள். கடைக்குப் போனாலும் நெடுநேரம் பொறுத்தே வருகிறாள் (என்று குறை கூறிக்கொண்டாள்).

**வேதவல்லி யம்மாள்.**—(ஞானம்பிகையை அழைத்துக் கண்

டித்து அவளை அனுப்பிவிட்டுத் தன் தங்கையைப் பார்த்து) அம்மா! கிருஷ்ணவேணி! நீயும் நானும் தற்காலம் இருக்கும் நிலையை அறிந்து, நாம் வேறு நம்முடைய வயிற்றிலிருக்கும் பிள்ளை வேறு ஆகும் பரியந்தம் வீட்டிலிருக்கும் ஆளைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கவேண்டும். நாம் அவர்களைக் கோபித்துக்கொண்டால், நம்மை விட்டுப்போய் விடுவார்கள். பின் நாம் அதிகம் சங்கடப்படவேண்டும். என்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது, அடுத்த வீட்டுப் பெண்பிள்ளை வந்து, வேதவல்லியம்மாளைப் பார்த்து, "நீ வருவதைப் பார்த்து வந்தேன்" என்று சிலநேரம் வார்த்தையாடி, "நான் அவசரமாக ஓரிடத்திற்கு போகவேண்டும். நான் போய்வருகிறேன்" என்றாள்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—என்ன அவசரம்? நீ இவ்விடம் வந்தால் நெடுநேரம வார்த்தையாடியிருந்து போவாயே! இன்றென்ன வந்தவுடன் ஓடுகிறாய்?

**அடுத்தவீட்டுப் பெண்பிள்ளை.**—யாரோ ஒரு பூசாரி புதிதாக இவ்வூருக்கு வந்திருக்கிறானாம். நாம் ஒன்றை அவனிடம் கேட்டால் அவன் அதைக் கண்டதுபோல் சொல்லுகிறானாம்! அவனிடத்தில் குறி கேட்க அனேகர் போகிறார்கள். நானும் அவர்களோடு போகவேண்டும்.

**வேதவல்லி யம்மாள்.**—நானும் குறி கேட்கவேண்டும். அவன் எங்கிருக்கிறானென்றும் உனக்கென்ன குறி சொன்னானென்றும் எனக்கு வந்து சொல்லவேண்டும் (என்று கேட்டுக் கொண்டாள்).

அவள் நீங்கியபின் கிருஷ்ணவேணி யம்மாள் தன் தமக்கையைப் பார்த்து, "அக்காள்! தாங்களும் இப்பூசாரிகளை நம்புகிறீர்களா?" என்றாள்.

**வேதவல்லி யம்மாள்.**—நம்பாமலென்ன! உடுக்கை யடித்துக் குறி சொல்லும் பூசாரிகள் நூற்றுக்குத் தொண்ணூற்

ளுன்பது பேர் பொய்யே பேசுவார்கள். மற்ற ஒருவனே மெய் பேசுவான். மெய் பேசுவோனைக் கண்டால் அவனிடத்தில் குறி கேட்கலாம் (என்று நகைத்தாள்).

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—என்ன குறி கேட்கப்போகிறீர்கள்?

**வேதவல்லி யம்மாள்.**—அவசியமாகக் கேட்கவேண்டியது ஒன்றுமில்லை. பூசாரிகள் உடுக்கையடித்துக் குறி சொல்வதைக் கேட்க எனக்கு ஆசையாக இருக்கிறது.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—பூசாரி உண்மையைப் பேசுகிறவனு யிருந்தால் நானும குறிகேட்க வேண்டுமென்றிருக்கிறேன்.

**வேதவல்லி யம்மாள்.**—நீ என்ன குறி கேட்கப்போகிறாய்?

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—அக்காள்! நான் சில வாரங்களாகக் கெட்ட கெட்ட கனவு காண்கிறேன். அது ஏதாகிலும் தெய்வத்தின் கோளாறாக இருக்குமோ என்று கேட்க வேண்டும்.

**வேதவல்லி யம்மாள்.**—என்ன கனவு கண்டாய்?

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—நான் என்னென்னவோ கனவு காண்கிறது; விடிந்தெழுந்தால் அதையெல்லாம் மறந்து விடுகிறது. ஆனால் சில நாட்களுக்குமுன் கண்டதே எனக்கு அதிக பயமாக இருந்தது. அதாவது நான் கட்டிலில் படுத்திருந்ததுபோலவும் என்னை ஒருவன் இழுத்து வந்து வாசலிற்போட்டுக் கத்தியால் கழுத்தை அறுக்கப் போனபொழுது, ஒரு பெண்பிள்ளைவந்து அவனை எட்டி யுதைத்துத் துரத்திவிட்டதுபோலவும் கனவு கண்டேன். அது என்னவென்று பூசாரியைக் கேட்கவேண்டும்.

இவ்விதம் பேசியிருந்த போது, ஞானம்பிகை காப்பி கொண்டுவந்து வேதவல்லி யம்மாளுக்கும் கிருஷ்ணவேணியம்மாளுக்கும் கொடுத்தாள். வேதவல்லியம்மாள் காப்பியைச் சாப்பிட்டுச் செம்பை ஞானம்பிகையிடம் கொடுத்து, "அம்மா! ஞானம்பிகை! நீ இருந்த ஊரில் பூசாரிகள் உடுக்கை யடித்துக்

குறி சொல்வதைக் கேட்டிருக்கிறாயா ? அவர்கள் உண்மையைப் பேசுகிறார்களா ?" என்று கேட்டாள்.

**ஞானம்பிகை.**—அம்மணி ! நான் அனேக இடத்தில் பார்த்திருக்கிறேன். ஒருவனைத் தவிர மற்றவர்களெல்லாம் உண்மை சொல்லவில்லை. பூசாரியைப் பரீக்ஷித்தால் அவன் சொல்வது உண்மையென்றும் பொய்யென்றும் விளங்கும்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—அவர்களை எவ்விதம் பரீக்ஷை செய்கிறது ?

**ஞானம்பிகை.**—பூசாரிக்குத் தெரியாமல் நாம் கையில் ஏதாகிலும் மறைதது வைத்துக்கொண்டு கையிலிருப்பதை என்னவென்று கேட்டால், பூசாரி கையிலிருப்பதைச் சொல்லுவானாயின், அவன் பின் சொல்வதை உண்மையென்று நம்பலாம்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—ஆம் ! அக்காள் ! ஞானம்பிகை நல்ல உபாயம் சொல்லுகிறாள்.

**ஞானம்பிகை.**—பெண்பிள்ளைகளாக உட்கார்ந்து குறி கேட்டால், பூசாரிகள் எவ்விதமும் ஏமாற்றிவிடுவார்கள். ஆனதால், ஆண்பிள்ளைகளை வைத்துக்கொண்டே குறிகேட்க வேண்டும். (எனறு சொல்லிச சமையலறைக்குள் சென்றாள்).

சில நேரத்துக்குப் பின் அடுத்தவீட்டுப் பெண்பிள்ளை வீட்டுக்குள் வந்து, " அம்மா ! நாங்கள் பார்க்கப்போன பூசாரியை எங்கேயோ அழைத்துக்கொண்டு போயிருக்கிறார்களாம். யாவரும் அவனைக் குறித்து அதிகம் புகழ்கிறார்கள் " என்றாள்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—நான் அவனை வரவழைக்கிறேன்.

**வேதவல்லி யம்மாள்.**—அவன இங்கு வந்தால் பொய்யும் மெய்யும் அறியலாம். அம்மா ! நீ அவனை வரவழைத்தால் எனக்குச் சொல்லியனுப்பு (என்று விடைபெற்று அடுத்த வீட்டுப் பெண்பிள்ளையோடு நீங்கினாள்).

ஓர் விடுதிநாளில் கிருஷ்ணவேணி யம்மாள் தன் நாயக

னைக்கொண்டு அப்பூசாரியை வரவழைத்து உட்கூடத்தில் உட்காரவைத்து, தானும் தன் தமக்கையும் சிறுவர்களும் ஒருபுறமாகவும், செந்தில்வேல் பிள்ளை, கோபாலகிருஷ்ண பிள்ளை, கூத்தப்பெருமாள் பிள்ளை, பெரியண்ண பிள்ளை ஆகிய இவர்கள் ஒருபுறமாகவும் உட்கார்ந்து, பூசாரியைச் சாமியை வரவழைக்கச் சொன்னார்கள் அவன் உடுக்கையடித்து சாமியை வருந்தியிருந்தான்.

**ஞானம்பிகை.**—(வேதவல்லி யம்மாளுக்கும், கிருஷ்ணவேணி யம்மாளுக்கும் ஜாடைகாட்டி ஒரறைக்குள் அழைத்துச் சென்று), அம்மா! நான் சொன்னதை நீங்கள் மறந்துவிட்டீர்கள்போல் காண்கிறதே (என்றாள்).

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—நீ என்ன சொன்னாய்? நாங்கள் எதை மறந்தோம்?

**ஞானம்பிகை.**—பூசாரியைப் பரீக்ஷிக்க என்ன செய்திருக்கிறீர்கள்?

**வேதவல்லி யம்மாள்.**—ஆம்! கிருஷ்ணவேணி! நாம் முற்றிலும் அதை மறந்துவிட்டோம். நான் கையில் ஓர் காசை வைத்து மூடிக்கொண்டு கேட்கட்டுமா?

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—நானும் கையில் ஓர் பைசாவை வைத்துக்கொண்டு கேட்கிறேன்.

**ஞானம்பிகை.**—அம்மா! அதையெல்லாம் சொல்லிவிடுவான். நான் வைத்திருப்பதைப் பாருங்கள் (என்று மூன்று மாடத்தில் மூன்று வஸ்துக்கள் இருப்பதைக் காட்டி, அவ்வறையின் கதவை மூடிப் பூட்டிச சாவியைக் கிருஷ்ணவேணியம்மாளிடத்தில் கொடுத்தாள்).

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—(அவள் தன் நாயகனை அழைத்து) பூசாரிமேல் சாமி வந்தவுடன் இந்த அறையில் அவனைப் பரீக்ஷிக்க வைத்திருக்கும் அடையாளத்தைச் சொல்லச் சொல்லித் தாங்கள் போய்ப் பார்த்து, ஸரியாக இருந்தால் பின் அவன் சொல்வதைக் கேளுங்கள். அவன் இவ்வறை

யிலிருப்பதைச் சொல்ல முடியாமற்போனால், அவனை ஒன்றும் கேட்கவேண்டாம். போய்விடச் சொல்லுங்கள் (என்றாள்).

**செந்தில்வேல் பிள்ளை.**—என்ன அடையாளம் வைத்திருக்கிறாய்?

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—இப்பொழுது ஒன்றும் கேட்க வேண்டாம். தாங்கள் வாய் பதட்டமாக யாரிடத்திலாகிலும் சொல்லிவிடுவீர்கள். அது பூசாரி காதுக்கு எட்டிவிடும். பூசாரி சொல்லியபின் போய்ப் பாருங்கள் (என்று அறையின் சாவியைக் கொடுத்துப்போய் உட்கார்ந்தாள்).

**பூசாரி.**—(உடுக்கையை யடித்து சாமியை வருந்தி நெடுநேரத்துக்குப்பின்) அவள் அழுகிறாள்! அழுகிறாள்! வீட்டுக்குள் வரமாட்டேன் என்கிறாள் (என்றான்).

**கோபாலகிருஷ்ண பிள்ளை.**—யார் அழுகிறது? அவள் ஏன் வரமாட்டேன் என்கிறாள்?

**பூசாரி.**—ஓர் கட்டுச்சழுத்தியடா! தன்னை நினைக்காத இடத்தில் வரமாட்டேன் என்கிறாளடா!

**செந்தில்வேல் பிள்ளை.**—அவள் யாரென்று சொல்லாமற் போனால் எங்களுக்கு எபபடித் தெரியும்.

**பூசாரி.**—அவள் உன்னோடு வாழ்ந்து மாண்டவளடா!

**செந்தில்வேல் பிள்ளை.**—அவளை நாங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொண்டே யிருக்கிறோம். அவளை வரச்சொல்.

**பூசாரி.**—அவளை நினைத்து ஒருநாளாகிலும் ஒரு காசு சாம்பிராணியாகிலும் போடவில்லை என்கிறாளடா!

**கோபாலகிருஷ்ண பிள்ளை.**—(செந்தில்வேல் பிள்ளையைப் பார்த்து), நீரும் உம்முடைய மனைவியும் போய் உம்முடைய மூத்த மனைவியை நினைத்து சாம்பிராணி போடுங்கள்.

செந்தில்வேல் பிள்ளை தன் மனைவியோடு நின்று இருவரும் சாம்பிராணி போட்டனர். கிருஷ்ணவேணி யம்மாள் விழுந்து கும்பிட்டுப்போய் உட்கார்ந்தாள்.

**பூசாரி.**—ஐயோ ! ஐயோ ! என் வயிறு எரிகிறதே வயிறு எரிகிறதே ! (என்று வயிற்றிலும் மார்பிலும் அறைந்து கொண்டு தேம்பி தேம்பி அழுதான்).

**கோபாலகிருஷ்ண பிள்ளை.**—ஏன் உனக்கு வயிறு எரிகிறது ? நீ யார் ? உன் பேர் என்ன ?

**செந்தில்வேல் பிள்ளை.**—அண்ணு ! சற்று விதானியுங்கள். நான் முதலில் ஒன்று கேட்கவேண்டும். (என்று பூசாரியைப் பார்த்து) சாமி வந்தது உண்மையானுல் எங்களுக்கு ஓர் அடையாளம் சொல்லவேண்டும். அடையாளம். சொல்லாமல் நீ சொல்வதை நாங்கள் நம்போம்.

**பூசாரி.**—என் மக்களைப் பார்க்க என் வயிறு எரிகிறதே! வயிறு எரிகிறதே (என்று சுவரில் தலையை மோதிக்கொண்டும் வயிற்றிலும் மார்பிலும் மீண்டும் மீண்டும் அறைந்து கொண்டும் அழுதான்).

**கோபாலகிருஷ்ண பிள்ளை.**—அம்மா ! நீ அடித்துக்கொண்டு ஏன் அழுகிருய் ? செந்தில்வேல் பிள்ளை கேட்பதைச் சொன்னுல், உன் மனம் ஸந்தோஷமடைய நடக்கிரும்.

**பூசாரி.**—அப்பா ! அவன் கொடிய பாதகனடா. என் மக்கள் என்னை நினைத்து அழுகிற கண்ணீர் ஆருக ஓடுதடா !

**அங்கிருந்தவர்கள்.**—அவர் கேட்பதைச் சொல்லாமல் ஏன் காலம் போக்குகிருய ?

**பூசாரி.**—அடே ! அவர்கள் என்னைச சோதிக்க வைத்திருப்பதைச சொன்னுலொழிய நான் சொல்வதை நம்பமாட்டீர்களா ?

**கோபாலகிருஷ்ண பிள்ளை.**—நாஙகள் நம்பமாட்டோம்.

**பூசாரி.**—என்னை நம்பமாட்டீர்களா ! நம்பமாட்டீர்களா ! ஐயோ ! என் வயிறு எரிகிறதே ! எரிகிறதே ! அடே ! அந்த அறைக்குள் மூன்று மாடத்தில் மூன்று வஸ்துக்கள் இருக்கிறதடா !

**செந்தில்வேல் பிள்ளை.**—அறைக்குள் இருக்கும் மாடத்தில்

ஏதாகிலும் இல்லாமற்போய்விடுமோ ! அதில் இருக்கிறது இன்னதென்று சொல்லாமற்போனல் என்ன பிரயோசனம் ? நீ சொல்வதை எவ்விதம் நம்புகிறது ?

**பூசாரி.**—அடே ! சொல்லத்தான் வேண்டுமோ ? நான் சொல்லத்தான் வேண்டுமோ ?

**அங்கிருந்தவர்கள்.**—ஆம் ! அம்மா ! நீ சொல்வது அவசியம்.

**பூசாரி.**—அடே கிழக்குப் பார்த்த மாடத்தில் குங்குமச் சிமிழில் குங்குமத்தோடு ஒரு அரைக்கால் ரூபா இருக்கிறது. தெற்குப் பார்த்த மாடத்தில் இருக்கும் வெள்ளிச் சிமிழில் சிவந்திப்பூ ஒன்றிருக்கிறது. வடக்குப் பார்த்த மாடத்தில் ஒரு தகர டப்பியில் இந்தப் பூசாரி சொல்லுகிறது நிஜந்தாஞ என்று துண்டு காகிதத்தில் எழுதிப் போட்டிருக்கிறது (என்று சொல்லி) என் வயிறு எரிகிறதே எரிகிறதே (என்றழுதான்).

செந்தில்வேல் பிள்ளையோடு யாவரும் எழுந்துபோய் அறையைத் திறந்து பார்த்து, பூசாரி சொல்லியவிதம் இருக்கக் கண்டு, உண்மையாகத் தெய்வம் வராமல் இதைச் சொல்லமுடியாதென்று ஆச்சரியத்தோடு வந்து உட்கார்ந்தார்கள். கிருஷ்ணவேணியம்மாளும் எழுந்து தன் சக்களத்தியை நினைத்து நடு வீட்டில் விழுந்து கும்பிட்டு வந்து உட்கார்ந்தாள்.

**பூசாரி.**—அடா ! பாவிகளா ! பெற்ற வயிறு பற்றியெரிகிறதடா. அடே ! என் வயிறெரிய என் மக்களைப் படுத்தும் பாடு வீண போகும் என்று நினைக்கவேண்டாம். நான் உங்களைச் சும்மா விடமாட்டேன். அந்தப் பழிகாரியை எனமுன் வரச்சொல் வரச்சொல் (என்று கத்தினன்).

**வேதவல்லி யம்மாள்.**—(கிருஷ்ணவேணியைப் பார்த்து), அம்மா ! நீ போய் உன் சக்களத்தியை மன்னிப்புக கேட்டுக் கொள் (என்றாள். கிருஷ்ணவேணி யம்மாள பூசாரிக்கு முன்வந்து கீழ்விழுந்து கும்பிட்டு நின்றாள்).

**பூசாரி.**—அடி ! காதகி ! நீ என் மக்களைத் துன்பப்படுத்துவதை

நான் அறியாமலிருக்கிறேன் என்றோ நினைத்தாய் ? அடி ! உன் மக்களைக் கட்டிலிற் படுக்கவைத்து என் மக்களைப் பாயில் ஒரு தலையணையும் இல்லாமல் உருளச் செய்கிறாயே ! உன் மனம எப்பேர்ப்பட்டதென்று சொல்லுவேன் ? அடி ! உன் மனம் பதறும்படி உன்மக்களை ஒன்று ஒன்றாய்க் கொண்டுபோய் மண்ணில் படுக்கவைத்துவிடுவேன். ஆனால் உன் புருடன் தன் சினேகர் கூத்தப்பெருமாள்பிள்ளை பெரியண்ணபிள்ளை இவர்களிடத்து என் மக்கள் படுந் துன்பத்தைச் சொல்லித் துக்கப்பட்டார். ஆதலால் அவர் மனம்வருந்துமே என்று பொறுத்தேனாயினும், உன் வயிற்றிலிருக்கும் பிண்டத்தைப் பிடுங்கித் தின்று உன்னைச் சுடுகாடுசேர்த்து உனக்குப் பின்வருபவள் உன் பிள்ளைகளைப் படுத்தும் துன்பத்தைக் கண்டு நான் ஸந்தோஷப்படப் போகிறேன். அடி ! பழிகாரி ! நீ என் மக்களை இவ்விதமான கொடுமை செய்தும் கட்டிலிற் படுத்திருநத உன்னை நடுவாசலில் கொண்டுவந்து போட்டுக் கழுத்தை யறுக்கப் போனவனை எட்டியுதைதது அவனைத் துரத்தியவள் தில்லைநாயகம் என்று அறியாமற் போனையல்லவா !

கிருஷ்ணவேணி யம்மாள் கண்ட கனவைப் பூசாரி சொல்லியதைக் கேட்ட வேதவல்லியம்மாள் எழுந்து வந்து, கிருஷ்ணவேணி யம்மாளோடு பூசாரிக்கு முன் கீழ் விழுந்து நமஸ்காரஞ்செய்து, " அம்மணி ! இனிமேல் உன்னையே எங்கள் குலதெய்வமென்றெண்ணி மாதமொருதடவை பால் சோறு பழததுடன் வைத்துப் படைப்போம். உன் பிள்ளைகளை எங்கள் சொந்தப் பிள்ளைகள்போலெண்ணி நடத்துவோம். எங்கள குற்றசதை மன்னித்து எங்கள் குடும்பத்தைப் பாதுகாக்கவேண்டும் " என்றாள்.

செந்தில்வேல் பிள்ளையும் அவருடைய சினேகரும் தாங்கள் பேசியிருந்ததைப் பூசாரி சொல்லியதைக் கேட்டு யாவரும் எழுந்து கைகட்டிக்கொண்டு பூசாரிக்கு முன்வந்து நின்றார்கள்.

**பூசாரி.**—(கோபாலகிருஷ்ண பிள்ளையை முன்னுக அழைத்து) அப்பா ! உன்னுடைய மனைவி மிகவும் நல்லவள். அவள் உத்தமி ! அவள் கேட்டுக்கொண்ட விதம் உங்கள் குடும் பத்துககே குலதெய்வமாக நிற்பேன். கிருஷ்ணவேணி என்மக்களைச் சீறுமாறு செய்யாமல் நீங்கள் பார்த்துக் கொள்ளவேண்டும். அவள் சொன்னசொல் தவறுவளா யின் நான் முன் சொன்னவிதம் முடிப்பேன் (என்று யாவ ருக்கும் விபூதி அள்ளிக்கொடுத்து, புஷ்பம் ஏகாம்பரம் வீரபத்திரன் முதலான பிள்ளைகளை அழைத்து), மக்களே ! நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம. உங்களுடைய சிறியதாயார் இனிமேல உங்களைத தன் பிள்ளைகளைப் போல் பார்ப்பாள். நீஙகளும் என்னைப்போல் அவளை எண்ணியிருங்கள் (என்று விபூதி கொடுத்து மற்றப் பிள்ளைகளுக்கும் விபூதி கொடுத்து, உடுக்கையை கீழே வைத்து முகத்தைத் துடைத்துக்கொண்டான். பின் ஜலங்கொண்டு வரச்சொல்லி தாகசாந்திசெய்து) நான் எத்தனையோ இடத்தில் குறிசொல்லியிருக்கிறேன். இவ் வளவு கொரோமாகச் சுவாமி வந்ததில்லை. தில்லைநாயகம் என்பது யார் (என்று கேட்டான்).

**கோபாலகிருஷ்ண பிள்ளை.**— அந்தம்மாள் இவருடையமுதல் மனைவி ! மூன்று பிள்ளைகளை விட்டுக் காலம் சென்றார் கள். அந்தம்மாளுடைய குழந்தைகளை இவர்கள் கொடு மையாக நடத்தினர்களென்றே அந்தம்மாள் ஆங்காரத்து டன் வந்துபோனுாகள்.

**பூசாரி.**—யாரோ இந்தம்மாள் கழுத்தை அறுக்கப்போனதைத் தான் தடுத்து அவனைத் துரத்தினேன் என்றீர்களே ! அது என்ன ஸமாசாரம் ?

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—அதை நான் கண்ட கனவென்றே எண்ணியிருந்தேன். அது கறுப்பின் சேட்டையாக முடிந்தது.

**பூசாரி.**—நீங்கள் இனிமேல் அந்தம்மாளைக் குலதெய்வமாக எண்ணி நடக்கவேண்டும்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—குலதெய்வமாகவே எண்ணி நடப்போம். (என்று தன் நாயகனை அழைத்து, பூசாரிக்கு என்ன கொடுக்கிறதென்று கேட்டு, ஐந்து ரூபா பாக்கு வெற்றிலையோடு அவனுக்கு கொண்டுவந்து கொடுத்தாள்).

பூசாரி மகிழ்வோடு யாவரிடத்தும் விடைபெற்று நீங்கினன். மற்றவர்களும் செந்தில்வேல் பிள்ளையிடத்து விடைபெற்றுச் சென்றார்கள்.

அன்று முதல் கிருஷ்ணவேணியம்மாள் தன் சக்களத்திப் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள்போல் எண்ணி அப்பிள்ளைகளுக்கும் தன் பிள்ளைகளுக்கும் பேதங்காட்டாது நடத்திவந்தாள்.

சில வாரங்களுக்குப்பின் கிருஷ்ணவேணி யம்மாள் தன் தமக்கையின் வீட்டுக்குப் போயிருந்தபொழுது, பெரியண்ண பிள்ளையும் கூத்தப்பெருமாள் பிள்ளையும் செந்தில்வேல் பிள்ளையிடம் வந்து, அவர் மனைவி வீட்டில் இல்லையென அறிந்து அவரோடு ஓரறைக்குள் போய் உட்கார்ந்து, "ஐயா! ஒரு ரகசியம் தங்களிடம் சொல்ல வந்தோம்" என்று நகைத்தார்கள்.

**செந்தில்வேல் பிள்ளை.**—என்ன ரகசியம்?

**பெரியண்ண பிள்ளை.**—ஐயா! முன்னொரு தடவை திருப்பாதிரிப்புலியூரில் கூததியார் வீடே கதியாயிருந்தவனையும், கும்பகோணத்தில் தன் நாயகனைக் கேவலமாக நடத்திவந்தவளையும், ஓர் பெண் நல்வழிக்குக் கொண்டுவந்தாளென்று சொன்னது தங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

**செந்தில்வேல் பிள்ளை.**—ஏன் ஞாபகமில்லை! அந்தப் பெண்ணின் பேர் தெரியாதென்றீர்.

**பெரியண்ண பிள்ளை.**—ஆம்! அவள் பெயர் அப்பொழுது தெரியாமலிருந்தது. அவள் வேறொன்றை இப்பொழுது செய்திருக்கிறாள்.

**சேந்தில்வேல் பிள்ளை.**—அவள் வேறென்ன செய்திருக்கிறாள் ?

**பெரியண்ண பிள்ளை.**—ஒருவருக்கு முதல் மனைவி மூன்று பிள்ளைகளைப் பெற்று வைத்துக் காலம் சென்று போகவும், அவர் வேறு விவாகம் செய்துகொண்டு அவளாலும் மூன்று பிள்ளைகளுண்டாகவும், இளைய மனைவி தன் சக்களத்திப் பிள்ளைகளைக் கொடுமையாக நடத்தியதை அப்பெண் கண்டு ஸகியாதவளாகி, அவளை பயமுறுத்தித் தன் சக்களத்திப் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளைப்போ லெண்ணி நடக்கச் செய்துவிட்டாள்.

**சேந்தில்வேல் பிள்ளை.**—எவ்விடத்தில் ? அவள் பேர் என்ன ?

**கூந்தப்பெருமாள் பிள்ளை.**—இந்த வீட்டில் ! அவள் பேர் ஞானம்பிகை !

**சேந்தில்வேல் பிள்ளை.**—கனவு கண்டு வந்தீர்களா ? அன்று பூசாரி சொல்லியிருந்ததை நீங்கள் கேட்கவில்லையா ?

**பெரியண்ண பிள்ளை.**—நாங்கள் கனவுகண்டு வரவில்லை ! பூசாரி சொல்லியதைக் கேட்டு ஆச்சரியப்பட்டிருந்தோம்! இன்று காலை அப்பூசாரியைக் கண்டு, "எங்கள் வீட்டுக்கு வரவேண்டும்" என்று கூப்பிட்டோம். அவன் "என்ன ஸமாசாரம் ! ரகசியம் வெளிவந்துவிட்டதா ?" என்று கேட்டான். நாங்கள் ஏதோ ரகசியம் இருக்கிறதென எண்ணி, "முற்றிலும் வெளிவந்துவிட்டது. ஆயினும் உம்முடையவாயால் கேட்கவேண்டும் என்றே உம்மை அழைக்கிறோம்" என்று சொன்னோம். அவன் "ரகசியம் வெளிவந்தபின் நான் மறைப்பதில் பலனில்லை" என்று ஞானம்பிகை தன்னிடம் வந்து கிருஷ்ணவேணி யம்மாள் நடந்ததைச் சொல்லி, அதைப் பார்க்க ஸகிக்கவில்லை யென்று கிருஷ்ணவேணியம்மாள் இரகசியத்தையெல்லாம் சொன்னதோடு, இன்ன அறையில் இன்னின்ன இடத்தில் இன்னது வைத்திருக்கிறேன் என்று சொல்லிக்கொடுத்து,

தன்னை வரவழைக்கச் செய்து நன்மையைச் செய்துவிட்டாள் என்று சொல்லி, "இந்த ரகசியம் வெளி வராமலிருக்க வேண்டியதாயிற்றே. எவ்விதம் வெளிவந்தது" என்று கேட்டான். "ரகசியம் ஒன்றும் வெளிவரவில்லை. நீயே வெளியிட்டாய். ஆயினும் தோஷமில்லை. இதை ஒருவருக்கும் சொல்லவேண்டாம்" என்று அவனுக்குச் சொல்லி வந்தோம்.

**செந்தில்வேல் பிள்ளை.**—(திடு திடென ஓடி ஞானம்பிகையைக் கையைப்பற்றி இழுத்துவந்து, தன் நண்பர்கள் முன் விட்டு) அம்மா! ஞானம்பிகை! நீ என் பிள்ளைகள் விஷயத்தில் செய்த நன்மையை மறக்கமாட்டேன். நீ செய்தது யாவும் வெளிவந்தது (என்று அவள் இரண்டு கரங்களையும் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார்).

**ஞானம்பிகை.**—ஐயையோ! இதென்ன அநியாயம்! இவ்விஷயம் ரகசியமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டது பிரயோசனமில்லாமல் போயிற்றே! அம்மாள் முன் போலப் பிள்ளைகளை நடத்துவார்களே! என்ன செய்கிறது (என்று கண்ணீர் ஒழுகவிட்டாள்).

**செந்தில்வேல் பிள்ளை.**—இந்த ரகசியம் எங்கள் மூவருக்கும் தெரியுமேயன்றி வேறொருவருக்கும் தெரியாது. நீ அதுவிஷயத்தில் கவலை கொள்ளவேண்டாம் (என்று ஞானம்பிகையை மூவரும் புகழ்ந்தார்கள்).

# இரண்டாம் பாகம்

## 16—ம் அத்தியாயம்

ஞானம்பிகை கும்பகோணத்தை விட்டு நீங்கிய மறு நாளே கறுப்பண்ண பிள்ளை வரதராஜ பிள்ளை வீட்டிலிருக்காமல் தானும் வேறிடத்தில் போயிருந்தார். ஆயினும் அடிக்கடி சென்று ஞானம்பிகையின் ஸமாசாரத்தை விசாரித்து வருவார். ஓர் நாள் காலை அவர் வெளியில் போகும்பொழுது, அன்னியன் ஒருவன் அவரை அதிக தூரத்திலிருந்து பார்த்து, அவரோடு நெடுந்தூரம் பின் சென்று ஜனசந்தடி யில்லாமல் அவர் தனித்துப் போகுமிடத்தில் அவர் அருகில் சென்று, "ஐயா! என்னை அறிவீர்களா" என்றான்.

**கறுப்பண்ண பிள்ளை.**—(அவனைப் பார்த்து) நீ யார்? எனக்குத் தெரியவில்லை (என்றார்).

**அன்னியன்.**—என்னை அனேக முறை பார்த்திருக்கிறீர்கள். என்னைக் கவனித்துப் பார்த்தால் நான் யாரென்று விளங்கும். நானும் தாடி மீசையோடு இருப்பதால் என்னைக் கண்டுகொள்ள முடியவில்லை. என்னைத் தாங்கள் கண்டுகொள்ளாமற் போனாலும், தங்களை நான் கண்டுகொண்டேன்.

**கறுப்பண்ண பிள்ளை.**—உன் பெயர் என்ன?

**அன்னியன்.**—என் பேர் அழகப்பன்.

**கறுப்பண்ண பிள்ளை.**—நீ யாரென்று எனக்கு இன்னம் தெரியவில்லை.

**அழகப்பன்.**—ஐயா! தாங்கள் என்னைக் கண்டுகொள்ளாமற் போனால் தோஷமில்லை. எனக்குப் பசி அதிகமாயிருக்கிறது. எனக்கு ஏதாகிலும் பலகாரம் வாங்கிக்கொடுங்கள். (என்று கடைத்தெருவுக்கு அவரை அழைத்துவந்து இருளாயி யம்மாள் தோசைக்கடைக்கருகில் நின்று, தோசையைக் காட்டினான்).

கறுப்பண்ண பிள்ளை அதிசயப்பட்டு அவனிடத்தில் காசு கொடுத்து வாங்கிக்கொள்ளச் சொல்லி, தன் இருப்பிடத்

திற்கு அழைத்துப்போனார். அவன் தோசையைச் சாப்பிட்ட பின் அவனோடு நெடுநேரம் வார்த்தையாடியிருந்தார்.

அடுத்த நாள் காலை, முப்பத்தைந்து வயதுடைய ஸுந்தரமான ஒரு புருடன், காதில் கடுக்கனும் கையில் மோதிரங்களும் காலில் திருச்சிராப்பள்ளி ஜோடும் போட்டுக்கொண்டு, இருளாயி யம்மாள் தோசைக்கடைக்கு எதிரில் நின்று, "எனக்கு தோசையும் காப்பியும் வேண்டும்" என்றான்.

**இருளாயி யம்மாள்.**—(அவன் தன்னிடம் தோசையும் காப்பியும் கேட்பதைக் கண்டு ஆச்சரியபபட்டு) ஐயாவே! நான் ஏழைகளுக்கு விற்கத் தகுந்தவளாயிற்றே! தாங்கள் என்னிடத்தில் தோசை காப்பி சாப்பிடப் பிரியங் கொண்டீர்கள். தங்களுக்கு இந்தத் தோசையும் காப்பியும் எப்படி இருக்கிறதோ (என்று சொல்லிக்கொண்டே கடைக்குள் காப்பியும் தோசையும் கொண்டுபோய் வைத்தாள்).

**அன்னியன்.**-(அதைச் சாப்பிட்டு) நான் இவ்விதமான தோசையும் காப்பியும் சாப்பிட்டதே இல்லை (என்று அதற்குள்ள காசைக் கொடுத்துச் சென்றான்).

அடுத்த நாளும் காலையில் அன்னியன் இருளாயி யம்மாள் கடையில் தோசையும் காப்பியும் சாப்பிட்டுப் பின் வழக்கமாக நாள்தோறும் அவள் கடையில் காலையில் தோசையும் காப்பியும் சாப்பிட்டுவந்தான். ஒரு வாரத்துக்குப்பின் பத்து மணிக்குமேல் சென்று தோசையும் காப்பியும் வேண்டும் என்றான்.

**இருளாயி யம்மாள்.**—ஐயாவே! தாங்கள் வருவீர்களென்றே தங்களுக்காக வைத்திருந்தேன். நெடுநேரமாயும் தாங்கள் வராமையைக் கண்டு இப்பொழுதே விற்றுவிட்டேன். ஒன்றும் இல்லையே!

**அன்னியன்.**—நான் அவசரமாகக் காலையில் ஓரிடத்திற்குப் போயிருந்தேன். நேரமாய்விட்டது. எனக்குப் பசி அதிகமாக இருக்கிறது.

**இருளாயி யம்மாள்.**—ஐயா! ஸமீபத்தில் பிராமணாள் காப்பி கிளப் இருக்கிறது. அங்கே போனால் தங்களுடைய பசியை ஆற்றிகொள்ளலாமே!

**அன்னியன்.**—ஐயோ! பிராமணாள் கிளப்பிலா! அவர்கள் காப்பியில் எதையோ போட்டிருந்ததை அறியாமல் ஒரு நாள் அவர்களிடத்தில் சாப்பிட்டு வாந்தியெடுத்து நான் அதிகம் கஷ்டப்பட்டேன. அதுமுதல் அவர்களிடத்தில் காப்பி சாப்பிடுகிறதில்லே. எனக்குக் கொஞ்சம் சாதம் கிடைத்தால் உத்தமமாயிருக்கும்.

**இருளாயி யம்மாள்.**—ஐயா! நான் இரண்டு வேளை சமையல் செய்கிற வழக்கம் இல்லே. இரவில் சமையல் செய்து சாப்பிட்டு மற்ற சாதத்தில் ஜலம் விட்டுவைத்து மத்தியானத்தில் அதை சாப்பிடுகிறேன். தாங்கள் பிராமணாள் கிளப்பில் காப்பி சாப்பிடாமற்போனாலும் சாதமாகிலும் சாப்பிடலாமே!

**அன்னியன்.**—அவர்களிடத்தில் எதையும் சாப்பிடப் பிரியமில்லே. அந்தப் பழையதையாகிலும் எனக்குப் போடக்கூடாதா?

**இருளாயி யம்மாள்.**—தாங்கள் பசிக்கிறது சாதம் வேண்டும் என்று கேட்கும்பொழுது, நான் சாதத்தை வைத்துக்கொண்டு இல்லேயென்று சொல்லுவது அடுக்காது. சாப்பிடுங்கள் (என்று ஒரு இலேயும் தயிரும் வாங்கிவந்து சாதம் வட்டித்துச் சுண்டற்குழம்பை ஓர்பக்கம் வைத்தாள்).

**அன்னியன்.**—(சாப்பிட்டு ஏப்பமிட்டு) இன்று திருப்தியாய்ச் சாப்பிட்டேன். அம்மா! நான் இவ்வூரில் சில நாள் இருக்க நேரிடும்போல் இருக்கிறது. எனக்கு எங்கும் சாப்பாடு பிடிக்கவில்லே. எங்கே போனாலும் அசுசியாகவேயிருக்கிறது. நான் இவ்வூரிலிருக்கும் பரியந்தம் எனக்குக் கொஞ்சம் சாதம் போடவேண்டும் (என்று கெஞ்சினான்).

**இருளாயி யம்மாள்.**—ஐயா! நான் ஙிர்ப்பாக்கிய ஸ்திதியிலிரும்

பவன். மாவிடிப்பதிலும் மற்ற வேலைகள் செய்வதிலும் என் காலமெல்லாம் போகிறதால் என் வயிற்றுக்குச் சமைத்துக்கொள்ளவே நேரமில்லை. நான் தங்களுக்குச் சமையல் செய்து போட முடியுமா ?

**அன்னியன்.**—எனக்காக வேறு சமையலா செய்யப்போகிறீர்கள் ? வேகிற அரிசியோடு கொஞ்சம் அரிசி அதிகம் போடுவதால் தங்களுக்கு அதிக சிரமம் உண்டாகுமென்று சொல்ல நியாயமில்லையே (என்று நகைத்தான்).

**இருளாயி யம்மாள்.**—சாதத்தைக் குறித்து அதிக கஷ்டமில்லையென்பது உண்மையே ! நான் ஏதாகிலும் ஓர் காயைப் போட்டு ஓர் குழம்பு வைத்தால், அதை இரண்டு மூன்று நாளுக்கு வைத்துக்கொள்வேன். தங்களுக்குச் சாதம் போடுகிறதா யிருந்தால், அவ்விதம் செய்ய முடியுமா ? நான் நாள்தோறும் மிளகாய் அரைக்க வேண்டும். பதார்த்தங்கள் தேடிச் செய்யவேண்டும். என்னுல் முடியாத காரியத்தைச் செய்யச் சொல்லவேண்டாம். தாங்கள் வேறெங்காகிலும் பார்த்துக்கொள்ளுதல் உத்தமம்.

**அன்னியன்.**—எனக்குப் பதார்த்தம் ஒன்றும் வேண்டியதில்லை. சாதம் ஒன்றே வேண்டும். நான் இரவில் பால் வாங்கிக் கொள்கிறேன். பகலில் பழையது போட்டால் போதும்.

**இருளாயி யம்மாள்.**—தங்களுககுப் பால் போதும் என்கிறீர்கள். எனக்காக நான் கறிதேடிச் செய்துகொள்ள வேண்டிய தில்லையா ?

**அன்னியன்.**—தங்களுக்கு வேண்டியதைத் தாங்கள் செய்து கொள்ளுங்கள்.

**இருளாயி யம்மாள்.**—நான் எனக்காக ஒரு கறி செய்து கொண்டு தாங்கள் சாப்பிடும்பொழுது தங்களுக்கும் அதில் கொஞ்சம் வைக்காமல் தங்களை வெறுஞ் சாதத்தைச் சாப்பிடவிட்டுப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா ? ஆனதால் நான் மிளகாய் அதிகம் அரைத்தே கறி செய்யவேண்டுமல்லவா (என்று நகைத்தாள்).

**அன்னியன்.**—*தாங்கள் தோசை சுடுவதில் தங்களுக்கு நாள் தோறும் என்ன கிடைக்கும் ?*

**இருளாயி யம்மாள்.**—*தோசையில் மூன்றணுவும் காப்பியில் ஒரணுவும் கிடைக்கும்.*

**அன்னியன்.**—*அடா ! அநியாயமே ! நாலணுவுக்காகவா இவ்வளவு கஷ்டம் ?*

**இருளாயி யம்மாள்.**—*நான் சும்மா இருந்தால் என் வயிற்றுக்கு என்ன செய்வேன் ?*

**அன்னியன்.**—*நான் இவ்விடத்தில் இருக்கும் பரியந்தம் தாங்கள் தோசை சுடுகிறதை நிறுத்திவைக்க முடியாதா ?*

**இருளாயி யம்மாள்.**—*அது முடியாத காரியம் ! நான் தோசை சுடுவதை நிறுத்திவிட்டால் என் வாடிக்கைக்காரரெல்லாம் வேறிடத்திற்குப் போய்விடுவார்கள். பின் நான் தோசை சுட ஆரம்பித்தால் தோசை விற்காது. அதனுல் நான் சாப்பாட்டுக்கே அலைந்துபோவேன். நான் தோசை சுடுவதை விட்டுச் சமையல் செய்து போட்டுக்கொண்டிருக்க முடியாது (என்றெழுந்தாள்).*

**அன்னியன்.**—*அம்மா ! இராத்திரிக்கு மட்டும் சாதம் போடுங்கள் நான் நாளை எங்காகிலும் பார்த்து ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன்.*

**இருளாயி யம்மாள்.**—*தாங்கள் இத்தனை நாள் சாப்பிட்டிருந்த இடத்தில் ஏன் போய்ச் சாப்பிடக்கூடாது ?*

**அன்னியன்.**—*அதை முன்னுகவே சொல்லாமலிருந்தது என் மேல் குற்றம். நான் இதுபரியந்தம் என் சிநேகர் வீட்டில் சாப்பிட்டுக்கொணடிருந்தேன். அவர் தன் மனைவியோடு நேற்று மாலை இவ்வூரைவிட்டுப் போய்விட்டார். இன்றிரவு தாங்கள் சாடபாடு போடாமற்போனுல் நான் பட்டினியாக இருக்கவேண்டியதே ! என்னைப் பிடித்துத் தள்ளினுலும் தள்ளுங்கள் : நான் இராத்திரி சாப்பாட்டுக்கு இவ்விடம் வருவேன் (என்று சொல்லிப் போனுன்).*

இது தரும சங்கடமாயிருக்கிறதென்று இருளாயி யம்மாள் தான் வழக்கமாகச் செய்யவேண்டிய வேலைகளை முடித்த பிறகு சோறுசமைத்து ஒரு குழம்பும் பொரியலும் செய்து வைத்திருந்தாள். இரவு எட்டு மணிக்கு அன்னியன் வந்து, "எனக்குச்சாதம் போடுகிறீர்களா, பட்டினியாகப் போகிறதா?" என்று கேட்டான்.

**இருளாயி யம்மாள்.**—(நகைத்து) ஐயாவே! தாங்கள் பிடிவாதமாக இன்றிராத்திரி இங்கே சாப்பிடவேண்டும் என்றதால் சமையல் செய்துவைத்தேன் (என்று இலைபோட்டுச் சாதம் வட்டித்தாள்).

**அன்னியன்.**—நான் பால் வாங்கிவர மறந்தேன். இங்கு ஸமீபத்தில் பால் கிடைக்குமா (என்று கேட்டான்).

**இருளாயி யம்மாள்.**—பால்வேண்டியதில்லை. நான் பதார்த்தமும் செய்து வைத்திருக்கிறேன் (என்று கொண்டுவந்து வட்டித்தாள்).

அன்னியன் தான் மேல்போட்டிருந்த அங்கவஸ்திரத்தைச் சுருட்டி ஒரு பக்கம் வைத்துவிட்டுச் சாப்பிட்டுக் கை கழுவி "அம்மா! தாங்கள் இன்னும் சாப்பிடவில்லைபோல் காண்கிறது. இன்று மத்தியானமும் தங்களைப் பட்டினியாகப் போட்டேன். தாங்கள் முதலில் போய்ச்சாப்பிடுங்கள்" என்று இருளாயியம்மாளிடம் விடைபெற்று, அவள் உள்ளே போனவுடன் நீங்கினன். இருளாயி யம்மாள் சாப்பிட்டு அடுப்பங்கரையில் செய்யவேண்டியதை யெல்லாம் செய்து வைத்துவிட்டு முன்பக்கம் வந்து தன் படுக்கையை எடுக்கப் போனபொழுது, அங்கு ஒரு பட்டணத்து குட்டை சுருட்டிவைத்திருப்பதைப் பார்த்து அதை யெடுத்து, அது அதிக கனமாக இருப்பதைக் கண்டு கையால் தட்டிப்பார்த்து அது ரூபா என்றறிந்து, "அன்னியன் இதை மறந்து வைத்துப் போய்விட்டான்; இதை எங்கு கொண்டுபோய் வைக்கிறது" என்று பயந்து, ஒரு பானையில் வைத்து மூடிப் படுத்துக்கொண்டாள். மறுநாள் காலை

அன்னியன் வந்து காப்பிதோசை சாப்பிட்டு, "நான் நேற்று மாலை என் கைத்துண்டில் முந்நூறு ரூபா முடிந்து வைத்திருந்தவன் கைமறதியாக எங்கேயோ வைத்துவிட்டேன். நான் இராத்திரி இங்கு வரும்பொழுது கொண்டுவரவில்லை என்றது மட்டும் ஞாபகமிருக்கிறது. யார் கைக்கொண்டார்களோ தெரியவில்லை" என்றான்.

**இருளாயி யம்மாள்.**—தாங்கள் இங்கு வரும்பொழுது கொண்டு வரவில்லையே !

**அன்னியன்.**—இல்லை ! இல்லை ! நான் ஒருவரோடு ஜவளிக் கடைக்குச் சென்று சிலர் உட்கார்ந்திருக்கக் கண்டு அவர்களோடு நானும் போய் உட்கார்ந்து கடைக்காரன் கொண்டு வந்ததைப் பார்த்தும் நானும் எழுந்துபோய்ப் பார்த்துக்கொண்டும் இருந்தேன். பின் எனக்கு ஒன்றும் வாங்கப் பிரியப்படாமல் எழுந்து வந்தேன். ஆனதால் என்னருகில் உட்கார்ந்திருந்தவனே கொண்டுபோயிருக்க வேண்டும்

**இருளாயி யம்மாள்.**—அவனைத் தங்களுக்குத் தெரியுமா ?

**அன்னியன்.**—தெரியாது.

**இருளாயி யம்மாள்.**—ஜவளிக்கடைக்காரனைக் கேட்டீர்களா ?

**அன்னியன்.**—அவனைக் காலையில் போய்க் கேட்டதில், "எனக்கு ஒன்றும் தெரியாது. கடைக்கு எத்தனையோ பேர் வருகிறார்கள். நாங்கள் யார் என்ன கொண்டு வந்தார்கள், யார் யாருடையதைக் கொண்டுபோனார்கள் என்றோ பார்த்துக்கொண்டிருக்கிறோம்" என்று கோபித்துக்கொண்டான்.

**இருளாயி யம்மாள்.**—(நகைத்து வீட்டுக்குள் சென்று பட்டணத்து குட்டையை முடிப்போடு கொண்டுவந்து கொடுத்து) ஐயா நீர் சாப்பிட்டுப் போகும்பொழுது இவ்விடத்திலேயே வைத்துவிட்டுப் போனீர்கள். நான் முடிப்பை அவிழ்க்கவில்லை. ஆயினும் எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

**அன்னியன்.**—(இருளாயி யம்மாள் முகத்தை ஏற இறங்கப் பார்த்து) அம்மா ! நீங்கள் இதை என்னிடம் கொடுக்காம லிருந்தாலும் தங்கள்மேல் ஸந்தேகப்பட நியாயமில்லை. நான் ஜவளிக்கடையில் விட்டுவிட்டேன் என்று நினைத் திருந்தேன். தாங்கள் முடிப்பை அவிழ்க்காமலிருக்க, என்னை ஏன் எண்ணிப் பார்க்கச் சொல்லுகிறீர்கள் ?

**இருளாயி யம்மாள்.**—ஐயா ! தங்களுக்கு மறதி அதிகமாக இருக்கிறது ! தாங்கள் முடிப்பிலிருக்கிறதை எடுத்துச் செலவு செய்யும்பொழுது, செய்த செலவை மறந்து கணக்குப்பார்க்கும்பொழுது குறைந்ததென்று என்மேல் ஸந்தேகம் கொள்ளக்கூடும். ஆனதால் தாங்கள் எண்ணி யே கொண்டு போகவேண்டும்.

**அன்னியன்.**—(எண்ணிப்பார்த்து) ஸரியாக இருக்கிறது. அம்மா ! உங்கள் உண்மையான மனதைப பார்க்க ஆச்சரியப்படுகிறேன். தாங்கள் நல்ல குடும்பத்தில் பிறந்த வர்களென்று காண்கிறது. ஆனதால் என்னை மன்னித்து நான் கேட்பதற்குப் பதில் சொல்லவேண்டும். தாங்கள் எந்த ஊரில் பிறந்தவர்கள் ? தங்களுடைய நாயகன் எங்கே ? தங்களுக்குப் பிள்ளைகள் இல்லையா ?

**இருளாயி யம்மாள்.**—ஐயா ! என் வயிற்றெரிச்சலைக் கிளற வேண்டாம் ! நான் நாதியற்றவள் !

**அன்னியன்.**— அம்மா ! தங்கள் கழுத்தில் தாலி இருக்கிறதே ! தங்கள் நாயகன் எங்கே ?

**இருளாயி யம்மாள்.**—என் நாயகன என்னைவிட்டு நீங்கினார்.

**அன்னியன்.**—அவர் கூத்தியாரோ டிருக்கிறாரோ ?

**இருளாயி யம்மாள்.**—அவர் எவ்விதம் இருக்கிறாரென்று எனக்குத் தெரியாது !

**அன்னியன்.**—தங்களுக்குக் குழந்தைகள் இல்லையோ ?

**இருளாயி யம்மாள்.**—இல்லை.

**அன்னியன்.**—தங்களுக்குத் தாய், தந்தை, அண்ணன், தம்பி,

அக்காள், தங்கை, மாமன், மாமி, மைத்துனன் முதலிய வர்களில் ஒருவரும் இல்லையா ?

**இருளாயி யம்மாள்.**—எனக்கு ஒருவரும் இல்லை ! நான் நாதி யற்றவளென்று முன் சொன்னேனே.

**அன்னியன்.**—தங்கள் பேர் என்ன ?

**இருளாயியம்மாள்.**—என் பேர் இருளாயி.

**அன்னியன்.**—(நகைத்து) நல்ல பேரே உங்களுக்கு வைத்திருக் கிறார்கள். தங்களுக்கு ஒருவரும் இல்லையென்பதால் தாங் கள் ஒருவருக்கும் பயப்படவேண்டியதில்லை. ஆனதால் உலகத்துக்கும் பயப்படவேண்டியதில்லை யல்லவா (என்று மீண்டும் நகைத்தான்).

**இருளாயி யம்மாள்.**—நான் யாருக்கும் பயப்படவேண்டிய தில்லை.

அன்னியன் தன் மடியிலிருந்து இருநூறு ரூபா எடுத்து முந்நூறோடு சேர்த்துக் கட்டிவைத்துவிட்டு வெளியில் ஓடினான்.

**இருளாயி யம்மாள்.**—இதை எடுத்துக்கொண்டு போகாமல் மீண்டும் வைத்துவிட்டுப் போகிறீர்களே !

**அன்னியன்.**—இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன். அந் தக்கடைக்குப் போய்வருகிறேன் (என்று நீங்கினான்).

வெளியில் சென்ற அன்னியன் நெடுநேரமாயும் வரா மையைக் கண்ட இருளாயி யம்மாள் "நம்மிடத்தில் பெட்டியா பேழையா ! என்ன இருக்கிறது !" என்றெண்ணி, அந்த மூட் டையை எடுத்துக்கொண்டுபோய் மீண்டும் பானையில் வைத்து மூடினாள். அன்னியன் மறுநாள் வராமல் சிலநாள்களுக்குப்பின் மாலை நேரத்தில் அம்மார்க்கம் போவதைக் கண்டு அழைத்து "ஐயாவே ! என்ன வேலை செய்துவிட்டீர்கள் ? நான் தங்களு டைய பணத்துக்கு காவல் காத்துக்கொண்டிருக்கச் சொல்லியா வைத்துப்போயிருக்கிறீர்கள் ?" என்றாள்.

**அன்னியன்.**—காவல்காக்க வேண்டியதென்ன ! அதை ஒரு பெட்டியில் போட்டுவைத்தால் இருக்கிறது. தாங்கள்

அதைச் சுமந்துகொண்டிருக்க வேண்டியதில்லையே (என்று நகைத்தான்).

**இருளாயி யம்மாள்.**—ஐயா! எனக்குப் பெட்டியேது! மண்ணேது! (என்று கோபமாகச் சொன்னாள்).

**அன்னியன்.**—பெட்டி இல்லாமற்போனால் பெட்டி ஒன்றை ஏன் வாங்கிக்கொள்ளக் கூடாது?

**இருளாயி யம்மாள்.**—பெட்டி வாங்கப் பணத்துக்கு எங்கு போவேன்?

**அன்னியன்.**—கையில் ஐந்நூறு ரூபாவை வைத்துக்கொண்டு பெட்டி வாங்கப் பணமில்லை என்று சொல்லுகிறீர்களே!

**இருளாயி யம்மாள்.**—என்னிடத்தில் ஐந்நூறு ரூபா இருக்கிறதா! என்னிடத்தில் ஐந்நூறு ரூபா இருந்தால், நான் ஏன் நெருப்பில் வெந்து சாகிறேன்.

**அன்னியன்.**—நான் தங்களிடத்தில் பழையது சாப்பிட்டதற்கு இருநூறும் சுடுசாதம் சாப்பிட்டதற்கு மூந்நூறும் ஆக ஐந்நூறு ரூபா கொடுத்திருக்கிறேன். அதைத் தாங்கள் எடுத்துக்கொண்டு ஸௌகரியமாக இருங்கள்.

**இருளாயி யம்மாள்.**—(நகைத்து) என்னிடத்தில் இரண்டு வேளை சாப்பிட்டதற்காகவா ஐந்நூறு ரூபா கொடுத்திருக்கிறீர்கள்? நீர் வேடிக்கையாகப் பேசுவதைவிட்டுத் தங்களுடைய பணத்தை எடுத்துக்கொண்டு போங்கள்.

**அன்னியன்.**—நான் சொல்வதைக் கவனித்துக் கேட்கவேண்டும். என்னிடத்தில் பொருள் அதிகம் இருக்கிறது. எனக்கு இன்னம் விவாகம் இல்லை. இந்த வயதில் ஒரு அறியாப் பெண்ணை விவாகம் செய்துகொள்ள எனக்குப் பிரியமில்லை. நான் முதல் முதல் உம்மைப் பார்த்தவுடன் என் மனம் உம்மைப்பற்றியது. உமக்கு ஒருவருமில்லை ஆனதால் யாருக்கும் பயப்படவேண்டியதில்லை என்றது போல், எனக்கும் ஒருவருமில்லை ஆனதால் நானும் யாருக்

கும் பயப்படவேண்டியதில்லை. நாம் இருவரும் ஒரேவிதமாயிருப்பதால் நாம் இருவரும் ஒன்றாயிருக்கக்கூடும். நான் இவ்வூரில் ஒரு பெரிய வீட்டை விலை பேசி யிருக்கிறேன். அவ்வீட்டை வாங்கி அதிற்போய் நாம் புருடனும் பெண்டாட்டியுமாக இருக்கலாம். உமக்கு வேண்டிய நகைகளை வாங்கிப் போட சித்தமாயிருக்கிறேன். நாமிருவரும் ஸந்தோஷமாக இருக்கலாம். நீர் தோசைசுட்டு விற்பதைப் பார்க்க எனக்கு அதிக துக்கமாக இருக்கிறது. உமக்கு வய்தும் அதிகமில்லை. ஸௌந்தரியத்திலும் குறைவில்லை. ஆனதால் நம்மிருவருக்கும் மனம் ஒத்துப்போனால், நமக்கு ஒரு குறைவும் இல்லை. உமக்குப் பிள்ளைகள் இருந்தால் ஜாதியில் சேர்க்கமாட்டார்களென்று நீர் பயப்படவேண்டும். அந்த வில்லங்கம் இல்லாமற்போனது நம்முடைய நற்காலம் (என்று நகைத்தான்).

**இருளாயி யம்மாள்.**—(பெருமூச் செறிந்து) ஐயா ! நீர் முதல் முதல் என்னிடம் வந்து தோசை காப்பி சாப்பிட்ட பொழுதே நான் ஸந்தேகப்பட்டேன்.

**அன்னியன்.**—நான் இவ்விதம் சொல்வேனென்றோ ஸந்தேகப் பட்டீர் ?

**இருளாயி யம்மாள்.**—நீர் அவசரப்படவேண்டாம். நீர் சொல்லியதை யெல்லாம் நான் கேட்டிருந்ததுபோல் நான் சொல்வதையும் நீர் பொறுமையாக இருந்து கேட்கவேண்டும். நான் முதல்முதல் உம்மை என் கடையில் பார்த்தபொழுது நீர் ஏதோ காரணத்தைக் கொண்டு என்னிடம் வந்தீர் என்று எண்ணினேன். பின் உமக்குச் சமைத்துப் போடச் சொன்னது, நான் முன்கொண்ட ஸந்தேகத்தை உறுதிப் படுத்தியது. நீர் முதலில் முந்நூறு ரூபா கொண்டுவந்து வைத்துப்போய் அதை மறந்து வைத்துவிட்டேன் என்றதை முற்றிலும் நான் நம்பவில்லை. எனக்கு ஒருவரு மில்லை நான் தனித்திருக்கிறேன் என்றதால், என் கருத்தை அறியாது நீர் வாய்கூசாமல் உம்

முடைய மனத்திலுள்ளதை யெல்லாம் கொட்டிவிட்டீர். நான் தோசை விற்று வயிறு வளர்ப்பதால் என்னுடைய நிலைமை இன்னதென்று புத்திகூர்மையுள்ளவர்கள் கண்டுகொள்ளக்கூடும். உம்முடைய மனதிலிருந்த கெட்ட எண்ணம் என்னுடைய நிலையைக் கண்டறியவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தது. நீர் சொல்வதுபோல் எனக்கு ஒருவரும் இல்லையாயினும், என் மனம் எனக்குப் பெருங் குடும்பமாயுள்ள பந்துக்களைப்போல் இருக்கிறது. நான் யாருக்கு பயப்படாமற்போனாலும் என் மனதுக்கே நான் பயப்படவேண்டும். என் நாயகன் என்னைவிட்டு நீங்கியபின் நான் கைம்பெண்போல் இருக்கிறேன். ஆனதால் எனக்கு என்ன வேண்டும் ? வயிற்றுக்குச் சோறும் இடுப்புக்குத் துணியுமேயன்றி வேறென்ன வேண்டும் ? நான் செய்யும் தொழில் எனக்கு அவசியமாகவேண்டியதைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனதால் நான் வேறொன்றையும் செய்யவேண்டிய தில்லை. நான் என் புருடனுடன் வாழ வேண்டிய நாள் முடிந்துவிட்டதால், நான் எல்லா ஆசையும் விட்டேன். நான் எக்குணமுடையவளென்று அறியாமல், உம்முடன் வந்து புருடன் பெண்டாட்டியாக இருக்கலாமென்று தைரியத்தோடு சொன்னீர். என்னுடைய விதி உம்மிடத்தில் அதைக் கேட்கச் சொல்லியது. போம்! போம் ! பைத்தியக்காரரே ! நீர் என்னிடத்தில் சொல்லிய விதம் வேறொரு பெண்பிள்ளையிடம் சொல்லியிருந்தால், உம்மை ஆக்கினை செய்து அனுப்புவாள் (என்றெழுந்து போய் ரூபா மூட்டையைக்கொண்டுவந்து அவனிடம் எறிந்து) இனி ஒருவிநாடி இவ்வீட்டி லிருந்தால் அவமானம் அடைவீர் போம் ! போம் ! (என்று துரத்தினாள்).

**அன்னியன்.**—நான் போய்விடுகிறேன். நான் போகுமுன் நான் சாப்பிட்ட இரண்டுவேளைக்கும் காசு கொடுத்து விட வேண்டும் (என்று ஒரு ரூபா எடுத்து நீட்டினான்).



அண்ணா! நாம் இங்கு நின்று பேசுதல் நன்றல்ல, (259-ம் பக்கம் பார்க்க.)

இருளாயி யம்மாள்.—நான் பணத்துக்காகச் சாப்பாடு போட வில்லை. நீர் பசிக்கிறது என்றதால் உம்முடைய பசியைத் தணித்தேன். உம்மிடத்தில் அதிகமாக இருக்கும் பணத்தை நீரே பதனமாக வைத்துக்கொள்ளும். போம்! போம்! (என்று மீண்டும் துரத்தினுள்).

அன்னியன் அதிக வெட்கத்தோடு அவ்விடத்தை விட்டு நீங்கினுன்.

---

## 17—ம் அத்தியாயம்

காஞ்சீபுரத்தில் செந்தில்வேல் பிள்ளை மனைவி கிருஷ்ணவேணி யம்மாள் மூன்று சிறிய கட்டில் வாங்கி அதற்குவேண்டிய மெத்தைகள் தலையணைகள் தைத்துப் போட்டுத் தன் சக்களத்திப்பிள்ளைகளைப் படுத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்தாள். ஞானம்பிகை மகிழ்வோடு அவர்களை அழைத்துப் போய்ப்படுக்கையறையில் விட்டுக் கட்டிலிற் படுத்துக் கொள்ளச்சொன்னுள்.

புஷ்பம்.—(ஞானம்பிகையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு) அக்காள்! தாங்கள் சொல்லியவிதம் எங்களைக் கட்டிலிற் படுக்கச செய்துவிட்டீர்கள் (என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள்).

ஞானம்பிகை.—அம்மா! புஷ்பம்! உங்களைப் பெற்றவளே உங்களுக்குத் துணையாக இருக்கும்பொழுது உங்களுக்கு யாதொரு குறைவும் வராது. நீங்கள் உங்களுடைய சிறிய தாயாரை உஙகள் சொந்த தாய போலவும் அந்த அம்மாளுடைய குழந்தைகளை உங்கள் கூடப்பிறந்த ஸகோதரர் போலவும எண்ணி நடக்கவேண்டும்.

புஷ்பம்.—அக்காள்! நாங்கள் எடபொழுதும் அவ்விதமே எண்ணியிருந்தோம். இனிமேலும் அவ்விதமே எண்ணியிருப்போம். தாங்கள் கீழே படுத்துக்கொள்ளாமல் என்

ளோடு கட்டிலில் படுத்துக்கொள்ளவேண்டும் (என்று கெஞ்சினாள்).

ஞானம்பிகை.—அம்மா! வீட்டில் வேலை செய்கிறவளுக்குக் கட்டிலும் வேண்டுமோ (என்று அவளுக்கு ஸமாதானஞ் சொல்லி அவர்களுக்குத் துணையாக அவர்களுக்கருகில் படுத்துக்கொண்டாள்).

பூசாரி வந்து குறிசொல்லிப் போனது முதல், கிருஷ்ண வேணியம்மாளின் குணம் அதிகம் மாறி ஞானம்பிகைக்கு உதவியாகவிருந்து அவளை மேன்மையாக நடத்திவந்தாள். ஞானம் பிகைக்கு வீட்டு வேலைகள் சுளுவாய்விட்டமையால், வேலைகளை விரைவில் செய்துவிட்டு, விளக்கேற்றியவுடன் சிறுவர்களை ஓரறையில் உட்கார வைத்துக் கதவை மூடிக்கொண்டு அவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துவந்தாள். ஒரு நாள் ருக்குமணி தன் தாயிடம் சென்று "அம்மா! ஞானம்பிகைக்கு இங்க்லிஷும் தமிழும் நன்றாய்ப் படிக்கத் தெரிகிறது. எங்களுக்கெல்லாம் பாடம் அவளே சொல்லிக்கொடுக்கிறாள்" என்று சொன்னாள். கிருஷ்ணவேணி யம்மாள் ஆச்சரியப்பட்டு, தன்னுடைய மகள் சொல்வது உண்மையோ வென்று ஞானம்பிகை யறியாமல் பார்த்திருந்து, தன்நாயகனையும் தன் நாயகனோடிருந்த அவர் சினேகிதர்களையும் ஒரு அதிசயத்தைப் பாருங்களென்று அழைத்துவந்து காட்டினாள். அவர்கள் ஞானம்பிகை பாடம் சொல்லிக்கொடுப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அவ்விடத்தை விட்டு நீங்கினார்கள்.

செந்தில்வேல் பிள்ளை.—(தன் நண்பரைப் பார்த்து) அவள் உச்சரிப்பைக் கேட்டீர்களா?

கூத்தப்பெருமாள் பிள்ளை.—ஒரு இங்க்லிஷ் பெண்பிள்ளையே பாடம் சொல்லிக்கொடுக்கிறாள் என்று நினைத்தேன்.

பெரியண்ண பிள்ளை.—நம்முடைய ஜாதியில் பெண்களில் அனேகர் இங்க்லிஷ் வாசிக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல ஞானம்பிகையின் வாக்கு சுத்தத்துக்கே ஆச்சரியப்பட

வேண்டியதாயிருக்கிறது. இவள் வாசிக்க எவ்விதம் கற்றுக்கொண்டாளோ தெரியவில்லை.

செந்தில்வேல் பிள்ளை.—நான் அதை விசாரித்து உங்களுக்குச் சொல்லுகிறேன் (என்று அவர்களோடு சீட்டாடிக் கொண்டிருந்தார்).

கிருஷ்ணவேணியம்மாள் ஞானம்பிகை எவ்விதம் கற்றுக்கொண்டாளென்று அவளால் அறிந்து முன்னிலும் பதின்மடங்கு மேன்மையாக நடத்திவந்தாள்.

சில வாரங்களுக்குப் பின், காமாக்ஷியம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள கடைகளில் ஞானம்பிகை காய்கள் வாங்கிக்கொண்டிருக்கும்பொழுது, ஒரு ஸுந்தரமான புருடன் ஞானம்பிகைக்குப் பின் புறமாக வந்து அசதியில் அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டு, "ஞானம்பிகை!" என்றான்.

ஞானம்பிகை.—(திடுக்கிட்டு) மீனாக்ஷிஸுந்தரத்தண்ணா!

மீனாக்ஷிஸுந்தரம்.—ஆம்! மீனாக்ஷிஸுந்தரமே உன்னைத் தேடித் திரிகிறான்.

ஞானம்பிகை.—அண்ணா! நாம் இங்கு நின்று பேசுதல் நன்றல்ல (என்று தான் வாங்கவேண்டியதை வாங்கிக் கொண்டு), என்னோடு வாருங்கள் (என்று மீனாக்ஷிஸுந்தரத்தை அழைத்துவந்து வீட்டின் உள் திண்ணையில் உட்காரவைத்து வீட்டுக்குள் சென்றாள்).

கிருஷ்ணவேணியம்மாள் உள்திண்ணையில் உட்கார்ந்திருக்கும் ஸுந்தரமான வாலிபனைப் பார்த்து "அவர் யார்?" என்று ஞானம்பிகையைக் கேட்டாள்.

ஞானம்பிகை.—அவர் என் உயிரைக் காப்பாற்றிய என் தமயன்: என்னோடு பேசிப்போக வந்திருக்கிறார்.

கிருஷ்ணவேணியம்மாள்.—உன் உயிரைக் காப்பாற்றியவரா! உன் தமையனா! (என்றோடி) தம்பி! உள்ளே வரலாம்! அங்கிருக்க வேண்டாம் (என்று மீனாக்ஷிஸுந்தரத்தை மேஜை நாற்காலிகள் போட்டிருக்கும் ஓரறைக்குள் உட்

காரவைத்து) அதிக தூரத்திலிருந்து வந்ததுபோல் காண்கிறதே (என்றாள்).

மீனாக்ஷிஸுந்தரம்.—ஆம்! அம்மா! நான் புதுச்சேரியிலிருந்தே வந்திருக்கிறேன். நான் ஞானம்பிகையோடு தனித்து வார்த்தையாட வேண்டும். தாங்கள் அதற்கு இசைந்து உத்தரவு கொடுக்கவேண்டும் (என்று கெஞ்சினான்).

கிருஷ்ணவேணி யம்மாள்.—தம்பி! உன்னுடைய இஷ்டம் போலவே பேசிப்போகலாம்.

என்று சமையலறைக்குள் சென்று ஞானம்பிகையை அனுப்பினாள். ஞானம்பிகை அவ்வறைக்குள் சென்றவுடன் மீனாக்ஷிஸுந்தரம் அவ்வறையின் கதவை மூடிக்கொண்டான்.

ஞானம்பிகை.—அண்ணா! கதவை ஏன் மூடுகிறீர்கள்? கதவைத் திறந்துவிடுங்கள்.

மீனாக்ஷிஸுந்தரம்.—நான் ரகசியமாகச் சிலதை உன்னிடத்தில் சொல்ல வேண்டியதால் அதை ஒருவரும் கேட்கக் கூடாதென்றே கதவை மூடினேன்.

கதவை மூடிய சத்தத்தைக் கேட்ட கிருஷ்ணவேணி யம்மாள், கதவை ஏன் மூடிக்கொண்டார்களென்று கதவுக்கருகில் வந்து நின்று, அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஞானம்பிகை.—தாங்கள் என்ன ரகசியம் சொல்லப்போகிறீர்கள் (என்று நகைத்தாள்).

மீனாக்ஷிஸுந்தரம்.—ஞானம்பிகை! நீ இவ்விதம் செய்வாயென்று நான் நினைக்கவில்லை.

ஞானம்பிகை.—நான் என்ன செய்தேன்?

மீனாக்ஷிஸுந்தரம்.—நான் ஒரு மாதத்துக்கதிகம் படுக்கையிலிருந்தேன் என்று கேள்விப்படவில்லையா?

ஞானம்பிகை.—நான் கேள்விப்படவில்லை. தங்களுக்கென்ன செய்தது! அவ்வளவு நலியாக இருந்ததற்குக் காரணம் என்ன?

மீனாக்ஷிஸுந்தரம்.—நீ எழுதி வைத்து வந்த கடிதமே என்னை நோயில் தள்ளியது.

ஞானம்பிகை.—நான் எழுதிவைத்து வந்த கடிதமா ?

மீனாக்ஷிஸுந்தரம்.—நான் அது விஷயத்தைப் பேசிக்கொண்டிருந்து காலங் கழிப்பதில் பிரயோசனமில்லை. உன் முடிவான அபிப்பிராயந்தானென்ன ?

ஞானம்பிகை.—எந்த விஷயத்தில் என் அபிப்பிராயத்தைக் கேட்கிறீர்கள் ?

மீனாக்ஷிஸுந்தரம்.—நான் இன்னதென்று அதைச் சொல்ல வேண்டுமோ ? என் மனதிலிருப்பதை அறியாமலா இருக்கிறாய் ?

ஞானம்பிகை.—அண்ணா ! தங்களுடைய கருத்தைச் சொன்னாலன்றி நான் எவ்விதம் அறிந்துகொள்ளக்கூடும் ?

மீனாக்ஷிஸுந்தரம்.—என் கருத்தை அறிந்தபின்னும் என்னை 'அண்ணன்' என்றழைக்க உனக்கு மனம் துணிந்ததல்லவா ? நான் சொல்வதைக் கவனமாகக் கேள்! நான் உன்னை விவாகஞ் செய்துகொண்டாலொழிய வேறொரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளுகிறதில்லை யென்று சொன்னதை என் தாய்தந்தை கேட்டு என் மனம்போல் என்னை நடக்கவிடாமல் தடைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இன்னமும் அவர்களுடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருக்க முடியாதென்றே உன்னைத் தேடிவந்தேன்.

ஞானம்பிகை.—தாங்கள் சொல்வதின் கருத்து விளங்கவில்லை. என்னைத் தாங்கள் விவாகம் முடிக்கவேண்டும் என்றதற்குத் தங்களுடைய தாய்தந்தைகள் ஒப்பாமலிருக்க, என்னைத் தேடி வந்ததின் கருத்தென்ன ?

மீனாக்ஷிஸுந்தரம்.—நீ ஒருவர் வீட்டில் வேலை செய்வதாலும், நீ ஏழையாக இருப்பதாலும், நான் உன்னை விவாகம் செய்துகொள்வது அவர்களுக்கு அவமானம் என்றும், தங்

களுடைய பந்துக்கள் தங்களைக் கேவலமாகப் பேசுவார்கள் என்றும் அவர்கள் ஸம்மதிக்கிறார்களில்லை. நான் விவாகஞ் செய்துகொண்டு அவர்களுடன் போயிருந்தால், அவர்களுக்கு அவமானமாகும். நான் விவாகம் செய்துகொண்டு அவர்களுடன் போயிருக்காமல் வேறெங்காகிலும் இருந்தால், அவர்களுக்கு அவமானம் வர நியாயமில்லை. என்னை விவாகஞ்செய்துகொள்ள நீ ஸம்மதப்படுவாயானால், அதுவேபோதும் என்றெண்ணி உன்னிடம் வந்தேன்.

**ஞானம்பிகை.**—உலகத்தில் பிள்ளையாக ஒருவன் பிறந்தால், அவன் பெற்றோர்கள் சொல்லைக் கேட்கவேண்டுமா ? அல்லது அவர்கள் சொல்வதை மீறி நடக்கவேண்டுமா ?

**மீனகேதனஸுந்தரம்.**—பிள்ளையானவன் பெற்றோர் சொல்வதைக் கேட்கவேண்டு மென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆயினும் அவர்கள் சொல்லுவதற்கும் ஓரளவு இருக்கவேண்டுமே! தாய் தந்தைகள் பிள்ளையின நன்மையைக் கருதவேண்டாமோ ? அவன் தன் ஆயுள் காலமெல்லாம் துக்கப்பட்டிருக்க அவர்கள் ஒன்றைச் சொன்னால், அதைச் செய்ய வேண்டியதோ பிள்ளையின் கடமை ?

**ஞானம்பிகை.**—பெற்றோர்கள் பிள்ளையின் நன்மையைக் கருதிச் செய்வார்களே யல்லாது அவர்கள் தின்மையைக் கருதுவார்களா ? சில வேளை பெற்றோர்கள் செய்வது தின்மையாகத் தற்காலம் தோன்றினும் பின்னால் அது நன்மையாகவே இருக்கும்.

“தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடிலு றுக்கி வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிவெ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்.”

என்றிருக்கிறதே ! நாம் பெற்றோர்களுக்கு பயப்படாமற் போனாலும் உலகத்துக்குப் பயப்பட வேண்டாமோ ?

**மீனகேதனஸுந்தரம்.**—தாய்தந்தை செய்வதெல்லாம் பிள்ளையின் மேலிருக்கும் அன்பென்று சொல்லுவதை ஒப்புக்கொள்ளுகிறேன். நான் உன்னை விவாகஞ் செய்து கொண்டால்

என் காலமெல்லாம் ஸந்தோஷமாக இருக்கலாமென்று நினைத்திருக்கிறேன். நீ ஏழையாக இருக்கும் காரணத்தால் அது கூடாதென்று தடுப்பது என்மேல் அவர்களுக்கிருக்கும் அன்பென்று நினைக்க இடங்கொடுக்கவில்லை. ஆயினும் உலகத்தச்கு பயப்படவேண்டியது அவசியமே! உலகம் குறைகூற நான் என்ன செய்தேன்? என்ன செய்யப் போகிறேன்?

ஞானம்பிகை.—ஓர் தனவந்தனுடைய குமாரன் ஒருவர் வீட்டில் வேலை செய்து வயிறு வளர்க்கும் ஒரு புழுக்கையை விவாகம் செய்துகொண்டால் உலகம் ஒன்றும் சொல்லாதா?

மீனாக்ஷிஸுந்தரம்.—அரசர்களும் பிரபுக்களும் ஏழைகளை விவாகஞ் செய்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களை யெல்லாம் உலகம் ஒன்றும் சொல்லவில்லையே!

ஞானம்பிகை.—தாங்கள் அவ்விதம் அரசனுமல்ல! பெரிய பிரபுவும் அல்ல! 'பெருநெருப்புக் கீரமில்லை' யென்பது போல் முடிந்திருப்பதை நாம் ஆதாரமாக வைத்துப் பேசலாகாது. நாம் நம்முடைய நிலைமைக் கேற்கவே எதையும் செய்யவேண்டும்.

மீனாக்ஷிஸுந்தரம்.—நீ ஒரு தனவந்தன் மகளாயிருந்து உன்னை நான் விவாகஞ் செய்துகொண்டால், உலகம் ஒன்றும் சொல்லாதல்லவா?

ஞானம்பிகை.—ஒன்றும் சொல்லாது.

மீனாக்ஷிஸுந்தரம்.—நானும் உன்னைப்போல் ஏழையாக இருந்து உன்னை விவாகஞ் செய்துகொண்டால், அப்பொழுதும் உலகம் ஒன்றும் சொல்லாதல்லவா?

ஞானம்பிகை.—ஒன்றும் சொல்லாது.

மீனாக்ஷிஸுந்தரம்.—அவ்விதமானால் என்னை உலகம் ஒன்றும் சொல்லாமலிருக்கும்படி செய்துகொள்ள, உபாயம் ஒன்றிருக்கிறது!

**ஞானம்பிகை.**—என்ன உபாயம் ?

**மீனாக்ஷிஸுந்தரம்.**—உன்னை தனவந்தன் மகளாகச் செய்து என்னுடைய நிலைமைக்குக் கொண்டுவர முடியாதாயினும், நான் ஏழையாகி உன்னுடைய நிலைமைக்கு வரக்கூடும். நான் என்னுடைய தாய் தந்தை சொத்தைப் பரித்தியாகஞ் செய்துவிட்டால், என்னை ஏழையென்றே சொல்ல வேண்டும். அப்பொழுது உலகம் என்னை நிந்திக்க நியாயமில்லை (என்று நகைத்தான்).

**ஞானம்பிகை.**—தாங்கள் அவ்விதம் செய்தால் தங்களை உலகம் அதிகம் நிந்திக்கும் !

**மீனாக்ஷிஸுந்தரம்.**—ஏன் நிந்திக்கும் ? ஏழைக்கு ஏழை பொருத்தமல்லவோ ?

**ஞானம்பிகை.**—தாங்கள் ஒன்றையுங் கவனிக்காமல் பேசுகிறீர்கள். ஓர் ஏழையை விவாகம் செய்துகொள்ளும் நிமித்தம் தன் பொருள் பூமி சுற்றத்தார் முதலியவைகளை ஒழித்தானென்று உலகம் சொல்லாதோ ? அண்ணா !

> "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
> யெல்லாரும் செய்வர் சிறப்பு."

ஏழையை யாவரும் இகழ்வார்கள் தனவந்தரை யாவரும் புகழ்வார்கள் என்ற திருவாக்கைக் கவனிக்கவேண்டும். நான் இனி வெளிப்படையாகச் சொல்வது அவசியமாக இருக்கிறது. தாங்கள் என் விஷயத்தில் செய்ததை நேரில் சொல்வது முகஸ்துதியாகும். அது என் மனதில் எப்பொழுதும இருப்பதால் தங்களுடைய கருத்துக்கு உடன்படக்கூடாது. அக்காரணத்தைச் சொல்லும்படி கட்டாயப்படுத்த வேண்டாம். ஆனதால் தாங்கள் என்னை விவாகஞ் செய்துகொள்ள வேண்டு மென்கிற எண்ணத்தை அறவே ஒழித்துத் தங்களைப் பெற்றோருடைய மனம் மகிழுமாறு அவர்கள் விரும்பிய பெண்ணை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுகிறேன் (என்று கீழ்விழுந்து

நமஸ்கரித்து, அவ்வறையின் கதவைத் திறந்து வெளியில் வந்து அவ்விடத்தில் கிருஷ்ணவேணி யம்மாள் நின்றிருப்பதைக் கண்டு புன்னகையோடு சமையலறைக்குள் சென்றாள்).

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—(அவளைப் பின்தொடர்ந்து சமையலறைக்குள் சென்று ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டு) அம்மா! ஞானம்பிகை! நீங்கள் பேசியிருந்ததை முற்றிலும் கேட்டிருந்தேன். அம்மா! உலகத்திலிருக்கும் பெண்களுக்கும் உனக்கும் எவ்வளவு பேதம் இருக்கிறது! ஒரு தனவந்தன் மகன் ஏழையாக இருக்கும் பெண்ணை விவாகம் செய்துகொள்ளுகிறேன் என்று சொல்லுவானேயானல், அப்பெண் எவ்வளவு ஸந்தோஷப்படுவாள். எத்தனை தடவை அவன் காலில் விழுவாள்? அவன் அரைச் சம்மதப்படுமுன் அவள் முழுச் சம்மதப்படுவாளே! அவனை விட்டுவிட மனங்கொள்ளுவாளா! தானகவந்த ஸ்ரீதேவியை வேண்டாமென்று தள்ளிவிட்டு வந்தாயே! உன்னுடைய மேன்மையான குணத்தை எவ்விதம் புகழ்வேன் (என்றாள்).

அத்தருணத்தில் செந்தில்வேல் பிள்ளை சிலரோடு வீட்டுக்குள் வந்து, அவர்களை முற்றத்தில் விட்டு, மேஜை நாற்காலிகளிருக்கும் அறையை ஒழுங்கு படுத்தி வந்தவர்களையழைத்துப்போய் உட்காரவைக்கவேண்டு மென்கிற எண்ணத்தோடு அவ்வறைக்குள் சென்று, அங்கொரு வாலிபன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, சமையலறைக்குள் ஒடி, அவ்வறையில் இருப்பவன் யாரென்று கோபமாகத் தன் மனைவியைக் கேட்டார்.

**கிருஷ்ணவேணி யம்மாள்.**—அவர் ஞானம்பிகையிடம் பேசிப்போக வந்தவர். தாங்கள் வந்திருப்பவர்களை உட்காரவைத்து வாருங்கள். நான் ஓர் அதிசயமான ஸமாசாரத்தைச் சொல்லுகிறேன்.

செந்தில்வேல் பிள்ளையின் கோபம் மாறி, வந்தவர்களை

அவ்வறைக்குள் அழைத்துப்போய் உட்காரவைத்துத் தன் மனைவியிடம் சென்றார். அவ்வறையில் வந்தவர்களைக் கவனியாமல் கண்ணீ ரொழுகவிட்டுக்கொண் டிருப்பவனை வந்தவர்களில் ஒருவர் கண்டு, அவனைப் பிடித்துக்கொண்டு, "தம்பி! மீனாக்ஷிஸுந்தரம் நீரா இங்கிருப்பது! இதென்ன கண்களில் நீர் வடிகிறதே" என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

மீனாக்ஷிஸுந்தரம்.—(கண்களைத் துடைத்துக்கொண்டு) ஆ! நல்லமுத்துப் பிள்ளையா! ஐயா! அவள் என் எண்ணத்திற்கு உடன்படவில்லை (என்று மீண்டும் கண்ணீரொழுக விட்டான்).

செந்தில்வேல் பிள்ளை சமையலறைக்குள் சென்று தன் மனைவியோடு வார்த்தையாடியிருந்து ஞானம்பிகையின் கையைப்பற்றி அறைக்குள் அழைத்துவந்தார். அங்கிருந்தவர்களில் ஒருவர் ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, "அம்மா! அம்மா! உன் தந்தையைத் தனித்திருக்கவிட்டு நீ இவ்விடத்தில் இருப்பது நியாயமோ?" என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்.

ஞானம்பிகை.—தந்தையே! நான் உடனே வந்துவிட வேண்டுமென்றே யிருந்தேன். என் தாய் என்னை அனுப்ப மனங்கொள்ளாமல் தன்னருகில் இருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தியதால் இவ்விடத்திலிருக்க நேரிட்டது.

செந்தில்வேல் பிள்ளை.—(யாவரையும் பார்த்து) ஞானம்பிகை மஹா கெட்ட பெண்! மன்மதன் போலிருக்கும் பெரிய தனவந்தன் மகன் மனம்வருந்தச் செய்துவிட்டாள் (என்று நகைத்தார்).

ஞானம்பிகை அவ்விடத்தை விட்டு நகைத்துக்கொண்டே சமையலறைக்குள் ஓடினாள்.

செந்தில்வேல் பிள்ளை.—யாவரையும் பார்த்து மீனாக்ஷிஸுந்தரம்பிள்ளை தம் வீட்டுக்கு வந்ததும் ஞானம்பிகையும் அவரும் பேசிக்கொண்டிருந்ததும் தன் மனைவி கேட்டிருந்

தனும் விவரமாகச் சொல்லி முடித்து), இப்பெண்ணை என்னென்று சொல்லிகிறதென்று தெரியவில்லை (என்றார்).

நல்லமுத்துப்பிள்ளை.—ஞானம்பிகை ஏழையாக இருப்பதொன்றே அவளிடம் குறைவாகக் காண்கிறது. மற்ற விஷயங்களைக கவனித்தால் ஓர் அரசகுமாரிக்கும் அவளுடைய குணமும் நடத்தையும் இருக்காது. நாம இத்தனை பேர் இருப்பதால் அவள் மனதைத் திருப்பிவிடக்கூடும் என்று நினைக்கிறேன். நான் முதலில் மீனாக்ஷிஸுந்தரத்துக்கு இங்கிருப்பவர்கள் யாரென்று சொல்லிவிடுகிறேன். (என்று மீனாக்ஷிஸுந்தரத்தைப் பார்த்து) தம்பி! இங்கிருக்கும் ஐயா அவர்கள் கறுப்பண்ண பிள்ளை. இவரையே ஞானம்பிகைக் காவேரி யாற்றிலிருந்து காப்பாற்றினான். காஞ்சீபுரத்தில் எனக்கு சினேகர் இருக்கிறார்கள் என்றவர்களே இவர்கள். இவர் பேர் கூத்தப்பெருமாள் பிள்ளை, அவர் பேர் பெரியண்ண பிள்ளை, இவர் இவ்வீட்டுக்காரர் செந்தில்வேல் பிள்ளை (என்று சொல்லி, மறறவர்களைப் பார்த்து) இவர் புதுச்சேரி சின்னதம்பி பிள்ளை குமாரன் மீனாக்ஷிஸுந்தரம் (என்றார்.)

கறுப்பண்ண பிள்ளை.—முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளை மைத்துனர் சின்னதம்பி பிள்ளை என்றீரே! அவருடைய குமாரனா இவர்?

நல்லமுத்துப் பிள்ளை.—ஆம்! ஐயா (என்று சொல்லி, செந்தில்வேல் பிள்ளையைப் பார்த்து) தாங்கள் ஞானம்பிகையை அழைத்துவர வேண்டும் (என்றார்).

செந்திவேல் பிள்ளை ஞானம்பிகையை அழைத்து வந்து அவர்கள்முன் நிறுத்தினார்.

நல்லமுத்துப் பிள்ளை.—அம்மா! ஞானம்பிகை! நீ ஒருவருடைய மனம் நோக ஒன்றையும் சொல்லாதவளாயிற்றே! இன்று ஒருவர் துக்கப்பட ஒன்றைச் சொல்லலாமோ?

ஞானம்பிகை.—ஐயாவே! நான் ஏழையானதால் என்னிடத்

தில் கேட்கக் கூடாததைக் கேட்கத் துணிந்தீர்கள். தாங்கள் கேட்டதற்குப் பதில் சொல்வது அவசியமென என் தந்தை சொல்லுவாராயின், தாங்கள் கேட்டதற்கு பதில் சொல்லத் தடையில்லை.

**நல்லமுத்துப் பிள்ளை.**—(கறுப்பண்ண பிள்ளையைப் பார்த்து) தாங்கள் உத்தரவு கொடுங்கள்.

**கறுப்பண்ண பிள்ளை.**—(ஞானம்பிகை என்னுடைய உத்தரவை எதிர்பார்க்கிறதால், நான் உத்தரவுகொடுப்பது நியாயமல்ல! ஞானம்பிகையைக் கேட்கிறதற்குப் பதிலாக என்னைக் கேட்டால், நான் பதில் சொல்லச் சித்தமாயிருக்கிறேன்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—தாங்கள் ஞானம்பிகைக்கு பதிலாகச் சொல்லுகிறேன் என்பது இந்த ஸமயத்துக்குப் பொருந்தாது. எவ்விதமெனில், நாம் வருமுன் மீனுக்ஷிஸுந்தரத்துக்கும் ஞானம்பிகைக்கும் ஸம்வாதம் நடந்திருப்பதால், இப்பொழுது தாங்கள் ஞானம்பிகைக்காகப் பேசுவது நியாயமல்ல.

**செந்தில்வேல் பிள்ளை.**—மீனுக்ஷிஸுந்தரம் ஞானம்பிகையோடு வார்த்தையாடியபொழுது "என் தந்தையை அல்லது என் தாயைக் கேட்கவேண்டும்" என்று சொல்லியிருந்தால், தாங்கள் ஞானம்பிகைக்காகப் பேசலாம். அவ்விதம் சொல்லாமல் தானே மீனுக்ஷிஸுந்தரம் கேட்டதற்குப் பதில் சொல்லியபின் தாங்கள் மத்தியில் தோன்றி ஞானம்பிகைக்காகப் பேசுவது நியாயமாகக் காணவில்லை.

அங்கிருந்தவர்கள் யாவரும் "ஆம்! ஆம்!" என்றார்கள்.

**கறுப்பண்ண பிள்ளை.**—ஆம்! அம்மா! அவர்கள் சொல்லுவது நியாயமாக இருக்கிறது. நீ முன் மீனுக்ஷிஸுந்தரம் கேட்பதற்குப் பதில் சொல்லியிருப்பதால், இப்பொழுதும் நீயே பதில் சொல்லவேண்டும்.

ஞானம்பிகை.—தாங்களாவது என் தாயாவது ஸமீபத்திலிருந் தால், நான் பதில் சொல்லியிருக்கேன். ஒருவரும் இல்லா மையால் அண்ணனுடைய எண்ணம் முதிரும் முன்னம் அதை கெடுத்துவிட வேண்டுமென்றே என் கருத்தைச் சொன்னேன் (என்று சொல்லி நல்லமுத்துப் பிள்ளையைப் பார்த்து) தாங்கள் என்ன கேட்கிறீர்கள் ?

நல்லமுத்துப் பிள்ளை.—நான் கேட்டதை மற்றோர் முறை சொல்லவேண்டுமென்றா கேட்கிறாய் ? உன்னிஷ்டம் போல் சொல்லுகிறேன். 'நீ ஒருவருடைய மனம் நோக ஒன்றையும் சொல்லாதவளாயிற்றே ! இன்று ஒருவர் துக் கப்பட ஒன்றைச் சொல்லலாமோ' என்று கேட்டேன்.

ஞானம்பிகை.—ஐயாவே ! ஒரு வைத்தியன் வாய்க்கு மதுர மாகச் செய்த பலவித லேகியங்களைப் பலருக்குக் கொடுத்து அவர்களுடைய நோயை குணப்படுத்தி வந் தான். ஆனால் ஒருவனுக்குப் பித்தம் அதிகரித்து வயிற் றிலும் அனேக கோளாறுகள் இருக்கக் கண்டு, அவனுக்கு லேகியத்தைக் கொடுத்தால் பயன்செய்யாதென் றெண்ணி, நோயாளிக்கு வாந்தியெடுக்கவும் பேதியாகவும் கொடிய பேதி மருந்தைக் கொடுத்து குணப்படுத்தினான். அது போல் நானும் இன்சொல் பயன் தராதென்றெண்ணி வன் சொல்வழங்கி, கொண்ட எண்ணம் நீங்கும் பரியந்தம் துன் புறும்படி செய்யவேண்டியதாயிற்று. (என்றாள். யாவரும் கலீரென்று நகைத்தார்கள்).

செந்தில்வேல் பிள்ளை.—தன்னுடைய நிலையைக் கவனிக்கா மல் உன்னை விவாகஞ் செய்துகொள்ள மனங்கொண்ட தாலோ நீ அவருக்குப் பேதிக்குக் கொடுக்கத் துணிந்தாய் (என்று நகைத்தார். யாவரும் நகைத்தார்கள்).

ஞானம்பிகை.—ஆம் ! ஐயா ! என்னை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்கிற பித்தம் தலைக்கேறியும், தாய் தந்தை சுற்றத்தார் முதலியவர்கள் துக்கமாகிய கோளாறுகள் அதிகரித்தும் இருப்பதால், அவருக்குக் கடுஞ்சொல்லாகிய பேதிக்குக் கொடுத்து, அவர் எண்ணத்தை மாற்றுவது

போல் குணப்படுத்த முயன்றேன் (என்றாள். யாவரும் நகைத்தார்கள்).

**கூத்தப்பெருமாள் பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை, நீ என்ன காரணத்தால் அவரை விவாகஞ் செய்துகொள்ள ஸம்மதிக்கிறாயில்லை?

**ஞானம்பிகை.**—அவர் எனக்குப் பேருபகாரத்தைச் செய்து என்னை மேன்மையாக்கி என் மனதைக் கொள்ளைகொண்டதால்! (என்றாள். யாவரும் கலீரென்று நகைத்தார்கள்).

**ரிபயண்ண பிள்ளை.**—அவர் உனக்குப் பேருபகாரத்தைச் செய்து மேன்மையாக்கி உன் மனதைக் கொள்ளைகொண்டதால், நீ தடங்கல் சொல்லாமல் அவரை விவாகஞ் செய்துகொள்ளவேண்டுமே!

அங்கிருந்தவர்களெல்லாம் "ஆம்! ஆம்! இனி ஞானம்பிகை தடங்கல் சொல்லக்கூடாது. தன் வார்த்தையால் அகப்பட்டுக்கொண்டாள்" என்றார்கள்.

**ஞானம்பிகை.**—நான் என் வாய்ச்சொல்லால் தப்பித்துக்கொண்டேன் என்று மெய்ப்பித்துவிடுகிறேன். தாங்கள் எல்லாம் நன்றாய் வாசித்த மஹான்கள். நான் ஒன்றும் அறியாதவள். ஆயினும் நான் சொல்வதைச் சற்றுக் கவனித்து நான் கேட்பதற்குத் தக்க விடை அளிக்கவேண்டும். நல்ல ஸமயத்தில் பெரிய உபகாரத்தை ஒருவர் செய்வாராயின் அந்நன்றியை மறக்கலாமோ?

**நல்லமுத்துப் பிள்ளை.**—மறக்கக்கூடாது.

**ஞானம்பிகை.**—ஸுந்தரமாகவும், நற்குணம் நிறையப்பெற்றும் கல்வியில் வல்லவனாயும், பெரிய தனவந்தன் மகனாயும் இருப்பவனொருவன், ஒரு பெண்ணை யடுத்து, 'நான் உன்னை விவாகஞ் செய்துகொள்ளுகிறேன்' என்றால், அவள் என்ன சொல்லுவாள்?

**செந்தில்வேல் பிள்ளை.**-அவள் பிரியத்தோடு ஸம்மதப்படுவாள்.

**ஞானம்பிகை.**—*அவளுக்கு அவர் பெரிய உபகாரத்தைச் செய் திருந்தவராய் அவளை அடுத்து நான் முன் சொன்னது போல் கேட்டாலோ ?*

**கூத்தப்பெருமாள் பிள்ளை.**—*அவர் செய்த உபகாரத்திற்குக் கைம்மாறு இதுவேயென்று ஸம்மதப்படுவாள்.*

**ஞானம்பிகை.**—*அவர் அவளை அடுத்து உன்னை 'இச்சிக் கிறேன்' என்று சொன்னால் ?*

**பெரியண்ண பிள்ளை.**—*அவளும் 'உம்மை இச்சிக்கிறேன்' என்பாள்.*

**ஞானம்பிகை.**—*அந்த ஸௌந்தரபுருடன் அப்பெண்ணை இச்சித் திருந்தது உண்மையாயின், அவளை விவாகம் செய்து கொண்டபின் அவளை எவ்விதம் வைத்து நடத்துவார் ?*

**நல்லமுத்துப் பிள்ளை.**—*அவள் ஸந்தோஷமடைய மேன்மை யாக வைத்து நடத்துவார்.*

**ஞானம்பிகை.**—*உலகம் நிந்திக்க அவளைக் கேவலமான நிலை யில் வைக்கமாட்டா ரல்லவா ?*

**செந்தில்வேல் பிள்ளை.**—*ஒரு காலத்திலும் வைக்கமாட்டார்.*

**ஞானம்பிகை.**—*உலகம் நிந்திக்க அவளைக் கேவலமான நிலை யில் வைத்தால், அவரை உலகம் என்ன சொல்லும் ?*

**கூத்தப்பெருமாள் பிள்ளை.**—*கொடிய சண்டாளன் என்றே சொல்லும்.*

**ஞானம்பிகை.**—*அவளை மேன்மையாக வைத்து நடத்தத் திறமையற்றவர் அப்பெண்ணை விவாகம் செய்து கொள்ள லாமோ ?*

**பெரியண்ண பிள்ளை.**—*அவளை மேன்மையாக வைத்து நடத் தத் திறமையற்றவர் அப்பெண்ணை விவாகம் செய்து கொள்ளக் கூடாது.*

**ஞானம்பிகை.**—*அப்பெண் அந்த ஸௌந்தர புருடனை இச்சித் திருந்தது உண்மையாயிருந்தால், அவள் எவ்விதம் தன் நாயகனை வைத்து நடத்தவேண்டும் ?*

**நல்லமுத்துப் பிள்ளை.**—அவளும் அவ்விதமே தன் நாயகனை மேன்மையாக வைத்து நடத்தவேண்டும்.

**ஞானம்பிகை.**—உலகம் நிந்திக்கத் தன் நாயகனைக் கேவலமான நிலையில் வைத்து நடத்தினால், அவளை உலகம் என்ன சொல்லும் ?

**செந்தில்வேல் பிள்ளை.**—அவளையும் கொடிய சண்டாளி யென்றே சொல்லும்.

**ஞானம்பிகை.**—தாங்கள் யாவரும் சொல்லிய காரணத்தால் அவரை விவாகஞ் செய்துகொள்ள நான் ஸம்மதப்பட வில்லை.


**கூத்தப்பெருமாள் பிள்ளை.**-அம்மா ! என்னென்னமோ கேட்டு வந்து முடிவில் ஒரு காரணத்தையும் சொல்லாமல் விவா கஞ் செய்துகொள்ள ஸம்மத மில்லை என்று சொல்லு கிறாயே !

**பெரியண்ணபிள்ளை.**—அம்மா ! ஞானம்பிகை ! நீ முற்றிலும் ஸம்மதப்பட்டவள்போல் பேசிவந்து, முடிவில் ஸம்மத மில்லை யென்று சொல்லிய உன் கருத்து யாருக்கும் விளங் கவில்லை.

**ஞானம்பிகை.**—ஐயாவே ! நான் வெளிப்படையாகச் சொல்லி யது விளங்கவில்லை யென்பதால், இன்னும் வெளிப்படை யாகச் சொல்லுகிறேன். இவர் எனக்குப் பேருபகாரம் செய்து என்னை மேன்மையடையச் செய்தவர் என்று முன் னும் சொல்லியிருக்கிறேன். இவர் செய்த உபகாரத்தை மறக்கத் தகுமா ?

> " எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்றிருக்கிறதே ! இவர் செய்த உபகாரத்தை நான மறக் காமலிருப்பது உண்மையாயின், நான் இவரை விவாகம் செய்து கொள்ளுதல் கூடாது. நான் என்ன காரணத்தால்



அடே! சின்னசாமி! இது என்ன கதை? (282-ம் பக்கம் பார்க்க.)

இவரை விவாகம் செய்துகொள்ளவேண்டும்? இவருடைய தாய் தந்தை சுற்றத்தார் முதலியவர்கள் அவமானம் அடைந்து ஸதா நிந்திக்கவோ இவரை நான் விவாகம் செய்துகொள்ளவேண்டும்? இவர் தம்முடைய தாய் தந்தை சொத்தைப் பரித்தியாகம் செய்துவிட்டு என்னைப்போல் ஏழையாய்ப் போகவோ இவரை நான் விவாகம் செய்துகொள்ளவேண்டும்? ஒரு வீட்டில் வேலை செய்திருந்த புழுக்கையை விவாகம் செய்துகொள்ளும் நிமித்தம் தம்முடைய பொருள் பூமி தாய் தந்தை சுற்றத்தார் முதலியவர்களை இழந்தாரென்று உலகம் வசை கூறவோ இவரை நான் விவாகம் செய்துகொள்ளவேண்டும்? யாவரும் இவரைக் கேவலமாகப் பேச இவர் தலையிறங்கி அவமானத்தோடு உயிர்வாழவோ இவரை நான் விவாகம் செய்துகொள்ளவேண்டும்? என்னைப் பார்ப்பவர்கள் இவள் பொருள் பூமிக்கு ஆசைப்பட்டு இவரை வசப்படுத்தி விவாகம் செய்துகொண்டாளென்று பலர் பேசவோ நான் இவரை விவாகம் செய்துகொள்ளவேண்டும்? பலர் என்னை நிந்தித்து என்னோடு வார்த்தையாடாமல் நான் நடைப்பிணமாகத் திரியவோ இவரை நான் விவாகம் செய்துகொள்ளவேண்டும்? இவர் அடையும் அவமானத்தை நான் கண்டு நம்மால் இந்த அவமானம் அடைகிறார் என்று நினைத்துத் துக்கத்தோடிருக்கவோ இவரை நான் விவாகம் செய்துகொள்ள வேண்டும்? இவர் எனக்கு உபகாரம் செய்து மேன்மையாக்கினார். நான் இவரை மணந்து இவருக்குத் தாழ்வை உண்டாக்குதல் நியாயமா! 'தன் மனைவியை மேன்மையாக வைத்து நடத்தத் திறமையற்றவர் ஒரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளக்கூடாது என்று நீங்கள் யாவரும் ஒப்புக்கொண்டீர்கள்.' தன் நாயகனை மேன்மையாக வைத்து நடத்தத் திறமையற்றவள் ஒரு புருடனை விவாகம் செய்துகொள்ளலாமோ என்று நான் கேட்டிருந்தால், அவளும் ஒரு புருடனை விவாகம் செய்துகொள்ளு

தல் கூடாதென்றே சொல்லியிருப்பீர்கள். ஆகவே நான் இவரை விவாகம் செய்துகொண்டால் இவரை மேன்மை யாக வைத்திருக்க முடியாததலால், நான் இவரை விவா கம் செய்துகொள்ளுதல் கூடாது.

**கறுப்பண்ண பிள்ளை.**—என் மகள் சொல்லியது யாவும் நியா யத்தை அனுசரித்திருக்கிறது (என்று நகைத்தார்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை! உன்னோடு நியாயம் பேசி உன்னை வெல்வது எங்களால் முடியாது. நாங்கள் உன்னுடைய தாயிடம் பேசி அவர்களுடைய ஸம்மதத்தைப் பெற்றுக்கொண்டால் அப்பொழுது என்ன சொல்லுவாய்?

**ஞானம்பிகை.**—அண்ணா! உலகத்தில் பணத்துக்கு ஆசைப் பட்டுப் பெண்ணைக் கொடுப்பதுபோல், என் தாயும் சுய நன்மையைக் கருதிச் சொல்லுவார்களாயின், நானும் அண் ணன் போல் செய்யவேண்டியதே!

**சேந்தில்வேல் பிள்ளை.**—உன் அண்ணன்போல் என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?

**ஞானம்பிகை.**—அண்ணனுடைய நன்மையைக் கருதி அவர் தாய் தந்தை சொல்லியதற்கு விரோதமாகத் தாங்கள் யாவ ரும் இதுபரியந்தம் வார்த்தை யாடினீர்கள். என்னுடைய தின்மையைக் கருதி என் தாய் சொல்லுவார்களாயின், அவர்கள் வார்த்தையைத் தட்டி நடந்தால் என்மேல் குற் றஞ் சொல்லுவீர்களோ (என்று நகைத்துச் சமையலறைக் குள் ஓடினாள்).

**கறுப்பண்ண பிள்ளை.**—நீங்கள் இத்தனை பேர் ஓர் அறியாப் பெண்ணோடு வாதிட்டு வெல்ல முடியாமற் போனீர்கள் அல்லவா (என்று நகைத்தார்).

**கூத்தப்பெருமாள் பிள்ளை.**—இவ்வளவு சிறிய தலையில் எவ் வளவு யோசனை அடங்கியிருக்கிறது?

**பெரியண்ண பிள்ளை.**—ஞானம்பிகைக்கிருக்கும் கல்வியும் அவ

ளுக்கிருக்கும் கூர்மையான புத்தியும் அவளுக்கிருக்கும் பரோபகாரச் சிந்தையுமே பெரிய நிதியென்று சொல்ல வேண்டும். இதைவிடப் பொருள் பெரிதோ?

**நல்லமுத்துப் பிள்ளை.**—(செந்தில்வேல் பிள்ளையைப் பார்த்து) ஐயாவே! நாங்கள் ஞானம்பிகையையும் அவளுடைய தாயாரையும் அழைத்துப்போக வந்திருக்கிறோம். உங்களுடைய உத்தரவை எதிர்பார்க்கிறோம்.

**செந்தில்வேல் பிள்ளை**—அவர்களை அழைத்துக்கொண்டுபோக வேண்டிய காரணம் என்ன?

**கறுப்பண்ண பிள்ளை.**—அவர்களை இந்த நிலையில் வைத்துப் பார்க்க இஷ்டமில்லை. அவர்களை வேறு நிலையில் வைத்துப் பார்க்கவேண்டுமென்கிற அபிப்பிராயமே!

**செந்தில்வேல் பிள்ளை.**—அவ்விதமாயின் எங்களுக்கெல்லாம் அதிக ஸந்தோஷமே! உங்களுடைய இஷ்டம்போலவே செய்யலாம்.

## 18—வது அத்தியாயம்

காரைக்குடிக்கு அடுத்த முத்துப்பட்டணத்தில் வேலாயுதம் பிள்ளை வீட்டில் செங்கமலத்தம்மாள் உட்கார்ந்து தாம்பூலம் தரித்துக்கொண்டிருக்கும்பொழுது, அவளுக்கெதிரில் உட்கார்ந்த அவள் ஸகோதரன் நெடுநேரம் மௌனமாயிருந்து பின் தன் தமக்கையைப் பார்த்து, "அக்காள்! நான் கேட்பதற்குப் பதில் தாங்கள் ஒன்றும் சொல்லாமல் இருக்கிறீர்களே" என்றான்.

**செங்கமலத்தம்மாள்.**—தம்பி! சின்னசாமி! என்னை என்ன சொல்லச் சொல்லுகிறாய்? நான் என் கையிலிருந்ததையும் மடியிலிருந்ததையும் கொடுத்துவிட்டேன். இன்னும் எதைக் கொடுக்கச சொல்லுகிறாய?

**சின்னசாமி பிள்ளை.**—எதைக் கொடுத்துவிட்டேன்! கொடுத்துவிட்டேன்! என்கிறீர்கள்?

**செங்கமலத்தம்மாள்.**—என் மனம் நோக மீண்டும் என்னிடம் பேசவேண்டாம். நான் உனக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. நீ பேசாமல் எழுந்துபோ! நான் எதைக் கொடுத்து, கொடுத்தேன் என்று பேரெடுத்தேன். நான் உங்களுக்கு ஒன்றும் கொடுக்காமலே நீங்கள் நிலம் முதலியவைகளை வாங்கினீர்கள்.

**சின்னசாமி பிள்ளை.**—தாங்கள் கொடுத்த அற்பத் தொகையிலா ஐயாயிரத்துக்கு நிலம் வாங்கினேன் ?

**செங்கமலத்தம்மாள்.**—அப்பா ! நான் முத்தம்மாளின் நகைகளையெல்லாம் எடுத்துக் கொடுத்தது அற்பமாயவிட்டது ! ரொக்கமாகக் கொடுத்ததும் அற்பமே ! என் வயிற்றெரிச்சலை ஏன் அதிகப்படுத்துகிறாய் ?

**சின்னசாமி பிள்ளை.**—அக்காள் ! தாங்கள் கோபமாகப் பேசவேண்டாம் ! நான் மூன்று நாளைக்குள் இரண்டாயிரம் கொடுக்காமற்போனால், ஐயாயிரம் பெறுமதியுள்ள நிலத்தை ஏலம் போட்டுவிடுவார்கள். அதை வாங்குவோர் அதிகமில்லாதிருப்பதால், குறைந்த விலைக்கே போகும். தாங்கள் எவ்விதமும் இந்த ஒருதடவை எனக்குக் கைகொடுத்துத் தூக்கிவிடவேண்டும்.

**செங்கமலத்தம்மாள்.**—இதுதானா முதல்தடவை உனக்குக் கைகொடுத்துத் தூக்கிவிடச் சொன்னது ? உனக்குக் கைகொடுத்துக் கைகொடுத்துத் தூக்கிவிட்டது போதுமானது. இப்பொழுது என்னிடத்தில் என்ன இருக்கிறதென்று என்னைத் தொந்தரவு செய்கிறாய் ? நடேசன் இவ்விடம் வந்து சிலநாளிருந்து என்னைக் கேட்காமல் பெட்டியிலிருந்து இருநூறு ரூபா எடுத்துக்கொண்டு போய்விட்டான். அம்மாள் வந்து தனக்கு மின்னால் வேண்டுமென்று அறுநூறு ரூபா கொண்டுபோனார்கள். என்னிடத்தில் ரொக்கமாக இருந்ததையெல்லாம் கொடுத்துவிட்டேன்.

என் கையில் ஒன்றும் இல்லாமலிருக்கும்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய் ?

**சின்னசாமி பிள்ளை.**—அக்காள் ! தாங்கள் என்னைக் கோபிக்காமல் ஒருமாதத்துத் தவணையில் எனக்கு இரண்டாயிரம் ரூபா வாங்கிக்கொடுத்தால், நான் அந்த ஒரு மாதத்துக்குள் எங்காகிலும் கடன் வாஙகித் தீர்த்துவிடுகிறேன்.

**செங்கமலத்தம்மாள்.**—என்னை யாரிடத்தில் போய்க் கடன் கேட்கச் சொல்லுகிறாய் ? என்னை நம்பி யார் இரண்டாயிரம் கடன் கொடுப்பார்கள் ?

**சின்னசாமி பிள்ளை.**—நீங்கள் ஒருவரைக் கேட்டால் உங்களுக்கு இல்லையென்று சொல்லுவார்களா (என்று நகைத்தான்).

**செங்கமலத்தம்மாள்.**—அப்பா ! செட்டிகள் எவ்வளவு நேசமாயிருந்தாலும் வெண்ணிலையில் கடன்கொடுக்கமாட்டார்கள். நான் போய்க் கேட்டு அவர்கள் இல்லையென்றபின் வெட்கப்பட்டு வரமாட்டேன்.

**சின்னசாமி பிள்ளை**—தாங்கள் வெண்ணிலையில் கேட்காமல் தங்களுடைய நகைகளை வைத்தாவது வாங்கிக் கொடுக்க வேண்டும். நான் ஒரு மாதத்தில் நகைகளை மீட்டுவிட ஏற்பாடு செய்கிறேன்.

**செங்கமலத்தம்மாள்.**—என்ன சொன்னாய் ? என் நகைகளையுமா குதுவை வைக்கச் சொல்லுகிறாய் ! போ ! போ ! பைத்தியக்காரா ! முத்தம்மாளை நாம் வீட்டைவிட்டுத் துரத்தியபின், அவள் நகைகளோடு ஓடிப்போய்விட்டாள் என்று சொல்லி அவளுடைய நகைகளை உனக்குக் கொடுத்துவிட்டேன். அது போதாதென்று என்னுடைய நகைகளையும் கொடுத்துவிடச் சொல்லுகிறாய் ! நாளை உன் அத்தான் வந்து நகைகள் எங்கே என்று கேட்டால், நான் என்ன சொல்லுகிறது ? என்னையும் அவர் வீட்டைவிட்டுத் துரத்திவிடவோ இந்த யோசனை கொண்டாய் ?

**சின்னசாமி பிள்ளை.**—அத்தான் இத்தனை வருடம் வராமலிருப்

பவர், எனக்கு நகைகளைக் குதுவைவைத்துக் கடன் வாங்கிக் கொடுத்தால், அப்பொழுதே வந்துவிடுவார் என்றே பயப்படுகிறீர்கள் ? அவ்விதம் அத்தான் வருவாராயின் தங்களுக்கு மனவருத்தம் உண்டாகும்படி அவர் தங்களைக் கோபிக்க நான் பார்த்திருப்பேனே ? அவர் வருமுன்னம் நான் நகைகளைத் திருப்பிவிட ஏற்பாடு செய்துவிடுகிறேன். என் வார்த்தையை நம்புங்கள்.

**செங்கமலத்தம்மாள்.**—நீ புண்ணில் கோலிடுவதுபோல் ஒன்றும் சொல்ல வேண்டாம். என் மனம் வருந்தும்படி நீ எதைச் செய்திருக்கிறாய் ? நான் ஸந்தோஷமாக இருந்தவளை இந்தக் கதியடையச் செய்தாய் ! உன்னுடைய துர்ப்புத்தியைக் கேட்காமலிருந்தால் என் குடும்பம் எவ்வளவு மேன்மையாக இருக்கும ! ஐயோ ! மகள் என்ன பாடு படுகிறாளோ ! (என்று கண்ணீர் ஒழுகவிட்டாள்).

**சின்னசாமி பிள்ளை.**—என்னுடைய துர்ப்புத்தியைக் கேட்டா துன்பமடைகிறீர்கள் ? என்னுடைய யோசனையைக் கேட்காமலிருந்தால் நீங்கள் இந்த வீட்டில் இருப்பீர்களா ? நானல்லவா இந்த வீட்டில் தங்களை நிலைத்திருக்கச் செய்தேன்.

**செங்கமலத்தம்மாள்.**—அப்பா ! போதும் ! அதிகம் சொல்ல வேண்டாம் ! பிறந்த சிசுவை நாம் கொன்ற கொலை நம்மை விடாமல் என்னை இத்துன்பத்துக்கு ஆளாக்கியது. நான் முதலில் ஒப்புக்கொள்ளாமலிருந்தவள், பின் உன் கருத்துக்கு உடன்பட்டு அக்கீத்தொழிலை ஏன் செய்தேனோ தெரியவில்லை. முத்தம்மாளை நானே போய்த் தேடிக் கொண்டு வந்து அவளை என் கணவனுக்கு இரண்டாந் தாரமாகக் கட்டினேன். முத்தம்மாளின் தாய் தந்தை என் கையில் அவளைப் பிடித்துக் கொடுத்து, 'உனக்கு அவள் சக்களத்தியாக இருந்தாலும், அவளை நீ பெற்ற பெண்ணைப் போல் பார்த்துக்கொள்ளவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்களே ! நானும் ஸம்மதித்து அவர்கள்

எண்ணம் போல் செய்வேன் என்று வாக்குக் கொடுத்து வந்தேன். பின் உன் யோசனையைக் கேட்டு நான் கொடுத்த வாக்கை மறந்து அவள் பெற்ற பெண்ணைக் கொல்லப் பெருந் தொகையைக் கொடுத்தேன். பிள்ளையில்லையென்று வேறொரு பெண்ணைக் கட்டி அவள் பிள்ளை பெற்றால் அதைக் கொல்ல ஸம்மதித்திருந்த கொடும்பாவி நானல்லவா ? ஐயோ ! அம்மா ! முத்து ! நீ பெற்ற பெண்ணைக் கொன்ற கொடும்பாவி நானென்றறியாமல், என் ஸகோதரனுக்கு வயிறு கிழிந்து குடல் வெளிப்பட்டுவிட்டதென்று சொன்னவுடன் தோட்டக்காரன் மனைவிக்குச் சொல்லிக்கொள்ள அவகாசமில்லாமலோ ஓடினாய் ! உன்னை வீட்டைவிட்டுத் துரத்த இந்த உபாயம் செய்தார்களென்று அறிந்தபொழுது என்னென்ன நினைத்தாயோ ! என்னை என்ன சொல்லி நிந்தித்தாயோ ? என்னென்ன சொல்லி அழுதாயோ ! உன்னை மோரிசுக்குக் கொண்டு போனபொழுது என்னென்ன அவர்களிடத்தில் சொன்னாயோ ! உன்னை விட்டுவிடும்படி கெஞ்சி அழுதாயோ ! கப்பலில் என்னென்ன சங்கடங்கள் பட்டாயோ ! உன் தாய் தந்தை இறந்துபோனதால், உனக்கு ஒருவருமில்லை. ஆனதால் உனக்கு இக்கதி வந்ததென்று நினைத்தாயோ ! ஐயோ ! அம்மா ! நான் கொடிய பாதகி ! (என்று கண்ணீரை வடியவிட்டு) ஐயோ நான் என்ன ஸங்கத்தை அனுபவிக்க இவ்விதம் நடைபெற இடங்கொடுத்தேன் ! (என்றழுதாள்).

**சின்னசாமி பிள்ளை.**—அக்காள் ! இது என்ன பைத்தியம் ! யாராகிலும் தாங்கள் சொல்வதைக் கேட்டால் என்ன நினைப்பார்கள் ? நெடுநாளைக்குமுன் நடந்ததை இப்பொழுது நடந்ததுபோல் எண்ணித் தாங்கள் துக்கப்படுகிறீர்கள். அவள் மோரிசில் ஒரு நாயகனோடிருந்து அனேக பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள் என்று கேள்விப்பட்ட பின்னும் அந்தத் துன்மார்க்கியை நினைத்து துக்கப்படுவது அழகா ?

**செங்கமலத்தம்மாள்.**—அவள் வேறொரு புருடனை அடையச் செய்த துன்மார்க்கர் நாமே யன்றி அவள் அல்லவே ! நாம் அவளுக்கு ஓர் கெடுதலும் செய்யாதிருந்தால், அவள் ஏன் வீட்டை விட்டுப் போகப் போகிருள். என் நாயகனும் என்னோடிருப்பாரல்லவா ! நாம் எழுதிபதை என் நாயகன் நம்பாமல் நேரில் வந்து பார்த்தது அழுது துன்பப்பட்டாரே ! அவர் அழுததைப் பார்க்க எனக்கு ஸகிக்க முடியாமலிருந்ததே ! அவர் மனதில் என்ன எண்ணிஞரோ ? நான் கொடுமை செய்து முத்தம்மாளைத் துரத்திவிட்டேன் என்றெண்ணியே அவர் வராமலிருக்கிறூர் (என்று சொல்லி அடங்காத் துயரத்தோடு அழுதாள்).

**சின்னசாமி பிள்ளை.**—அக்காள் ! அத்தானை அழைத்துவர வேண்டுமென்று தாங்கள் சொல்லுவீர்களாயின் நான் போய் அழைத்து வருகிறேன். தாங்கள் அதற்காகக் கவலை கொள்ளவேண்டாம்.

நெடுநேரத்துக்குப் பின் செங்கமலத்தம்மாள் தன் முகத்தைத் துடைத்துக்கொண்டு ஒன்றும் பேசாமலிருந்தாள்.

**சின்னசாமி பிள்ளை.**—அக்காள் ! நான் ஊருக்குப் போகவேண்டும். நான் போய்வருகிறதா (என்று கேட்டான்).

**செங்கமலத்தம்மாள்.**—போய் வா.

**சின்னசாமி பிள்ளை.**—அக்காள் ! எனக்கிருக்கும் சங்கடத்தைச் சொல்லியும் தாங்கள் ஓர் உதவியும் செய்ய மனங்கொள்ளாமல் போகச் சொல்லுகிறீர்களே ! தங்கள் முடிவான கருத்துதான் என்ன ?

**செங்கமலத்தம்மாள்.**—நான் முன் சொன்னது போதாதென்று மற்றோர் முறையா என் கருத்தைச் சொல்லச் சொல்லுகிறாய் ?

**சின்னசாமி பிள்ளை.**—ஆம் ! மற்றோர் முறையே சொல்லச் சொல்லுகிறேன்.

**செங்கமலத்தம்மாள்.**—என்னிடத்திலிருக்கும் நகைகளை நான் கொடுக்கமாட்டேன்.

**சின்னசாமி பிள்ளை.**—நான் பன்முறை கெஞ்சிப் பார்த்தும் பயன்படாமல் போயிற்று. இனி வேறு போக்கில்லாமல் பயங்காட்டியே என் காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டும்.

**செங்கமலத்தம்மாள்.**—எனக்கு பயங்காட்டப் போகிறாயா ! என்ன பயம் காட்டப் போகிறாய் ?

**சின்னசாமி பிள்ளை.**—தாங்கள் தங்கள் சக்களத்திக் குழந்தையைக் கொன்றதாகவும் அவளைத் தாங்கள் தங்கள் வீட்டை விட்டுத் துரத்தியதாகவும் சொல்லவே வந்திருக்கிறேன்.

**செங்கமலத்தம்மாள்.**—அடே ! சின்னசாமி ! என்ன சொன்னாய் ?

**சின்னசாமி பிள்ளை.**—நான் சொல்லுவது தங்களுக்கு நம்பிக்கைப் படாது. (என்று வெளியிற் சென்று ஒருவனை அழைத்து வந்து) அடே முனியாண்டி ! இந்த அம்மாள் விஷயத்தில் என்ன தெரியும் ? அதை விபரமாகச் சொல்.

**முனியாண்டி.**—இந்த அமமாளுடைய சக்களத்திப் பிரசவ வேதனை படுவதாகத் தங்களுக்கு ஆள் வந்தபோது உடனே என்னை வண்டி கட்டச் சொல்லி என்னோடு வந்தீர்கள். நான் மாடுகளை அவிழ்த்துப்போய்க் கட்டி வைக்கோல் போட்டுத் தங்களுடைய வேஷ்டி மூட்டையை எடுத்துக்கொண்டு மேல் வீட்டுக்கு வந்து, தாங்களும் இந்த அம்மாளும் பேசிக்கொண்டிருப்பதை மறைந்து நின்று கேட்டிருந்தேன். இந்த அம்மாள் தங்களிடம் "முத்தம்மாள் பிரசவ வேதனை படுகிறாள். அவளுக்குக் குழந்தை பிறந்தால் என் நாயகன் அவளை மேன்மையாகவும் என்னைக் கேவலமாகவும் நடத்துவாரானதால், அவள் பெறப்போகிற குழந்தையை மருத்துவிச்சியிடம் சொல்லிக் கொன்றுவிடவேண்டும்" என்று தங்களைச் சொல்லும்படி கெஞ்சினார்கள். தாங்கள் கோபித்து "இப்படியும்

சொல்லலாமா ? இந்த சிசுவத்தி ஏழேழ் தலைமுறையும் நம்மை விடாதே ! இந்தப் பாவத்தை எங்கே போய்த் தொலைப்பீர்கள் ? காசிக்குப் போனாலும் தொலையாதே ! இக் கொடிய தொழிலைச் செய்ய எவ்விதம் மனம் துணிந்தது ? இக்கொடுமையான சொல்லை இன்னொருதடவை என் காதில் போடவேண்டாம்'' என்றீர்கள். இந்தம்மாள் பயந்து "நான் உன்னிடத்தில் சொல்லியதை ரகசியமாக வைத்திருக்கவேண்டும். நான் ஒன்றும் செய்யவில்லை'' என்று தங்களைவிட்டு நீங்கினார்கள். தாங்களும் இவ்வூரி லிருக்கப் பிரியப்படாமல் என்னை மறுநாள் வரும்படி சொல்லி வேறு வண்டிபேசி ஊருக்குச் சென்றீர்கள். தாங் கள் போனபின் நான் மாட்டுக்கொட்டகைக்குப் போய் மாடுகளைத் தேய்த்துக்கொண்டிருந்தேன். நான் அங்கிருப் பதை யறியாமல் இந்த அம்மாளும் மருத்துவிச்சியும் நானிருப்பதற்கு ஸமீபமாக நின்றிருந்தார்கள். "முத்தம் மாள் பெறப்போகிற குழந்தையைக் கொன்றுவிட வேண் டும். கொன்றுவிட்டால் அதிகம் ரூபா கொடுக்கிறேன்'' என்று மருத்துவிச்சியிடம் இந்த அம்மாள் சொன்னார்கள். அவள் நெடுநேரம் யோசித்திருந்து ஒப்புக்கொண்டு நீங்கி னாள். நான் மாட்டுக்கொட்டகையில் இருந்து இவர்கள் பேசியிருந்ததைக் கேட்டிருந்தேன் என்பதை இந்தம்மாள் அறியும் பொருட்டுச் செருமினேன். இந்தம்மாள் என் னிடம் வந்து "நாங்கள் பேசியிருந்ததை ஒருவருடனும் சொல்லவேண்டாம்'' என்று எனக்கு நூறுரூபா கொண்டு வந்து கொடுத்தார்கள்.

**செங்கமலத்தம்மாள்.**—அடே ! சின்னசாமி ! இது என்ன கதை ?

**சின்னசாமி பிள்ளை.**—இந்தக் கதையை முற்றிலுங் கேட்டால் பின் யாவும் நன்றாய் விளங்கும். அடே ! முனியாண்டி ! இன்னும் ஏதாகிலும் தெரியுமா ?

**முனியாண்டி.**—வேறொரு விஷயமும் தெரியும். முத்தம்மாள்

பிள்ளை பெற்ற மூன்றும் மாதம் இந்தம்மாள் செட்டிப் பெண்களோடு ஸ்தலதரிசனைக்குப் போகும்பொழுது, தங்கள் வீட்டுக்கு வந்து என்னை யழைத்து "தம்பி சின்ன சாமி மாடு வேடிக்கைப் பார்க்கப்போன இடத்தில் மாடு முட்டிக் குடல் சரிந்துவிட்டது" எனத் தனக்குச் சொல் வதுபோல் முத்தம்மாளிடத்தில் சொல்லி, அவளைத் தஞ்சாவூருக்கு அழைத்துப்போய், மோரிசுக்கு ஆள் ஏற்று கிறவர்களிடம் ஒப்படைத்துவிட்டு வரவேண்டுமென்று என்னிடம் ஐம்பது ரூபா கொடுத்துத் தான் திரும்பி வரும்பொழுது முத்தம்மாள் இல்லாதிருந்தால் மறுபடியும் ஐம்பது ரூபா கொடுப்பதாகச் சொல்லிப் போனார்கள். நான் அவ்விதமே மற்றிருவர் துணைகொண்டு செய்து முடித்து, இந்த அம்மாள் வந்தவுடன் போய்ப் பார்த்தேன். உடனே எனக்கு வாக்குக் கொடுத்திருந்ததற்கு விரோதமில்லாமல் ஐம்பது ரூபா கொடுத்தார்கள். எனக்கு வேறொன்றும் தெரியாது (என்று அவ்விடத்தை விட்டு நீங்கினான்).

செங்கமலத்தம்மாள்.—(சின்னசாமியைப் பார்த்து) அடா! பாவி! நீயா? இதைச் சொல்லச் சொன்னாய்? நான் உன்னு டைய நன்மையைக் கோரிச் செய்தவைகளுக்கு இதுவோ கைம்மாறு. அடா! துன்மார்க்கா! நீ சொல்லியதை நான் ஒப்புக்கொள்ளாமலிருந்தவள் என் மதி கெட்டு உன் துர்ப் போதனையைக் கேட்டு அவ்விதம் நடந்ததற்கேற்ற தண் டனையே இது. அடா! நாயே! நீ செய்தவைகளையெல் லாம் என்மேல் ஏற்றி, அவைகளை மெய்ப்பிக்க ஸாக்ஷியுமா சேகரித்து வைத்திருக்கிறாய்? போ! போ! உன் னிஷ்டம்போல் நீ யோசித்திருப்பதைச் செய். நான் இதற்கெல்லாம் பயப்படுவேன் என்று நினைக்கவேண்டாம். என் கூடப்பிறந்தவனே எனக்கு சதிகாரனானல் அன்னி யர் என்ன செய்யத் துணியார்கள்? ஏறவிட்டு ஏணியை வாங்கும் பழிகாரன் நீயென்று அறியாமற் போனேன்.

போ ! போ ! உன்கூடப் பிறந்தவளே கொலைசெய்யத் தூண்டிய கொலைகாரி என்றபொழுது, எனக்குத் துர்ப் போதனையைப் போதித்த படுபாவியாகிய உன்னைக் கொலைகாரன் என்று சொல்லார்களா ? அடா ! தோஷி ! நான் அளவற்ற பொருளை அள்ளி அள்ளிக் கொடுத்ததை எண்ணிப் பாராமல் என்னையே தூஷிக்க நேர்ந்தாயல்ல வா ! உன்னை ஸகோதரனென்றும் சொல்லலாமா ! நீ என் பொருளைக் கொள்ளையடிக்கவோ எனக்குத் துர்ப்போ தனை போதித்து உன் போதனைக்கு உட்பட்டதால் அதை நீ ஆதாரமாக வைத்துக்கொண்டு என்னை வெளியிலிழுக் கச் சித்தப்பட்டாய். ஐயோ ! தெய்வமே ! நான் புருடனுக் கடங்கிய பெண்டாட்டியாக இருந்து அவர் சொல்லியவிதம் நடந்திருந்த என்னை வஞ்சிக்க ஏதேதோ துர்ப்போதனை யைச செய்து இவன் இஷ்டப்பிரகாரம் நடக்கச் செய்து என்னிடத்திலிருந்த நகைகளையும் ரொக்கத்தையும் கொ ண்டுபோனது போதாதென்று, பொய் ஸாக்ஷி சேகரித்து வைத்திருக்கிறனே. இவன் எதைச் செய்யத் துணியான் (என்றழுதாள்).

**சின்னசாமி பிள்ளை.**—என்னை ஸகோதரனென்று சொல்லக் கூடாதென்று சொல்லியதால், நான் தங்களைத் தமக்கை யென்று உறவாட வில்லை. நான் முடிவாகச் சொல்வதைக் கவனித்துக் கேட்கவேண்டும். என்னுடைய நிலைமை தற்காலம் பயப்படத்தக்கதாக இருக்கிறது. நான் முன் சொன்னதுபோல் மூன்று தினத்துக்குள் இரண்டாயிரம் கொடுக்காமற் போனல் என்னுடைய நிலத்தையெல்லாம் இழக்க வேண்டியதோடு நான் சிறைச்சாலையில் அடைபட வேண்டும். இந்த ஸமயத்தில் எனக்கு உதவி செய்து என்னை மீட்காமலிருக்கும் தமக்கை இருந்தென்ன இல்லா மற்போனுலென்ன ? என் மானம் போனபின் நான் மற்ற வர்களை கவனிக்கவேண்டிய அவசியம் இல்லை. ‘ தனக்கு மிஞ்சியல்லவா தானமும் தருமமும்.’ தாங்கள் என்னு

டைய நிலைமையைக் கிஞ்சித்தும் கவனித்துப் பாராமல் தாங்கள் ஒரே பிடிவாதமாக எனக்கு உதவி செய்ய மறுத்த தால் நான் என்ன செய்கிறது ? எனக்கு வேறு போக்கிட மில்லை. தாங்கள் பணம் கொடுத்தால் நான் மீளலாம். பணம் கிடைக்காமற்போனால் நான் மீளப்போகிறதில்லை. இந்த நிலைமையிலிருப்பவன் எதைச் செய்யத் துணியான்?

**செங்கமலத்தம்மாள்.**—உன்னுடைய நிலைமை கெடுதலாக இருந்தால், மற்றவர்களைக் கெடுத்தோ உன்னை நீ மீட்டுக் கொள்ள வேண்டும் ?

**சின்னசாமி பிள்ளை.**—திருடர் ஒருவர் வீட்டில் கொள்ளையடிக் கும்பொழுது வீட்டுக்காரரை இமிசைப்படுத்தி அகப்பட்ட தைக் கொண்டுபோகிறார்கள். அவர்கள் வீட்டுக்கார ருடைய ஸௌகரியத்தைக் கருதுகிறார்களா ? அவசியமா கக் காணப்பட்டால் வீட்டுக்காரரைக் கொன்றும் விடுகிறார் கள். ஏன் அவ்விதம் செய்கிறார்களென்று கவனித்துப் பார்த்தால், அவர்களுக்குப் பணம் அவசியமெனக் காணப் படும். என்னுடைய நிலைமையும் அதுபோல இருப்பதால், நான் பிறருடைய மானத்தையும் ஈனத்தையும் கவனிக்க வேண்டியதில்லை.

**செங்கமலத்தம்மாள்.**—நானில்லாமல் உனக்கு இவ்வித இக் கட்டு வந்தால் அப்பொழுது என்ன செய்வாய் ?

**சின்னசாமி பிள்ளை.**—நான் செய்யத்தகாததைச் செய்தே பொருள் தேடவேண்டும். பொருள் எப்பக்கத்திலும் எனக் குக் கிடைக்காதாயின் என் உயிரை விட்டுவிட வேண் டியதே !

**செங்கமலத்தம்மாள்.**—நான் இப்பொழுது ஒன்றும் கொடுக்கா மற் போனால் என்ன செய்யப் போகிறாய் ?

**சின்னசாமி பிள்ளை.**—நான் செய்யப்போகிறதைச் சொல்லு கிறேன். என் கையிலிருக்கும் இக்கடிதத்தை அத்தானுக்கு

*அனுப்பப்போகிறேன் (என்று மடித்து வைத்திருந்த ஒரு கடிதத்தைக் காட்டினன்.*

**செங்கமலத்தம்மாள்.**—*அக்கடிதத்தில் என்ன எழுதி யிருக்கிறது ?*

**சின்னசாமி பிள்ளை.**—*இப்பொழுது முனியாண்டி சொன்னதை யெல்லாம் எழுதியிருக்கிறேன். இதை இப்படியே அனுப்பாமல் இரண்டு மூன்று நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிள்ளைகளைச் சேர்த்து முனியாண்டி இவ்விடத்தில் சொல்லியதை அவர்களுக்கு முன் சொல்லச் சொல்லி, அவர்கள் முனியாண்டி சொல்வதைக் கேட்டிருந்தோம் என்றதற்கு அத்தாக்ஷியாக அவர்களிடத்தில் கையொப்பம் வாங்கி அனுப்பப்போகிறேன்.*

**செங்கமலத்தம்மாள்.**—*நீ இவ்விதம் செய்தால் உன்னை அவர்கள் நிந்திக்கார்களா ?*

**சின்னசாமி பிள்ளை.**—*என்னை நிந்திப்பதற்குப் பதிலாக என்னைப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.*

**செங்கமலத்தம்மாள்.**—*உன்னைப் புகழ்ந்து கொண்டாடுவார்களா ?*

**சின்னசாமி பிள்ளை.**—*ஆம் ! எவ்விதமெனில், சின்னசாமி பிள்ளை தன் தமக்கையின் துர்நடத்தையைப் பார்த்து ஸகியாமலும் தமக்கையென்று அதை மறைக்காமலும் உண்மையைத் தன் மைத்துனருக்கு எழுதினனே ! இவனைப்போலும் யோக்கியன் உண்டோவென்று என்னைப் புகழமாட்டார்களா (என்று நகைத்தான்).*

**செங்கமலத்தம்மாள்.**—*நீ கேட்டதைக் கொடுத்தால் அப்பொழுது என்ன செய்யப்போகிருய் ?*

**சின்னசாமி பிள்ளை.**—*தங்கள் முன் இதை எரித்துச் சாம்பராக்கிவிடுவேன்.*

**செங்கமலத்தம்மாள்.**—*அடா ! துன்மார்க்கா ! நீ அதைச் சாம்பராக்க வேண்டாம். உன்னுடைய இஷ்டம்போல்*

அதைக் கொண்டுபோய் நீ யோசித்திருக்கும் விதம் செய். நான் உன் துர்ப்போதனையைக் கேட்டுச் செய்த கொடுந் தொழிலுக்கு ஏற்க வரும் தண்டனையை அடையச் சித்த மாயிருக்கிறேன். நீ இனி ஒரு விநாடியும் இவ்வீட்டி லிருக்க வேண்டாம். நீ இருந்தால் அவமானப்படுவாய். போய்விடு! போய்விடு! (என்று கோபமாகச் சொன்னான்).

சின்னசாமி பிள்ளை.—என்ன சொன்னாய்? நானா அவமான மடைவேன்? நீயே அவமானம் அடையப்போகிறாய்!

செங்கமலத்தம்மாள், "என் வீட்டில் நின்றே என்னை அவமானப்படுத்தப்போகிறாய்! என் வீட்டை விட்டுப் போய் விடு" என்று பிடித்துத் தள்ளினாள். சின்னசாமி பிள்ளை அதிக கோபத்தோடு செங்கமலத்தம்மாள் கன்னத்தில் அறைந்து அவளைப் பிடித்துத் தள்ளினான். அவள் கல்தரையில் விழுந்து தலையிலடிபட்டு மூர்ச்சையானாள். சின்னசாமி பிள்ளை காலம் போக்காது அவள் மடியிலிருந்த சாவியை யெடுத்து இருப்புப் பெட்டியைத் திறந்து அங்கிருந்த நகைகளையும் ரொக் கத்தையும எடுத்து மடியில் வைத்துக்கொண்டு, சாவியை அவள் மடியிலிருந்தவிதம் வைத்துவிட்டு, வெளியில் வந்து முனி யாண்டியை வண்டி கட்டச்சொல்லி இரவையும் கவனிக்காது வண்டியிலேறிச் சென்றான்.

---

## 19—ம் அத்தியாயம்

கும்பகோணத்தில் வரதராஜபிள்ளை வீட்டுக்கடுத்த வீட் டைப் புதுப்பித்துக் கறுப்பண்ண பிள்ளை காஞ்சீபுரத்திலிருந்து உண்ணாமுலை யம்மாளையும் அவள் குமாரத்தி ஞானம்பிகையை யும் அழைத்து வந்து குடியேற்றினார். அன்று மாலை நல்லமுத்து பிள்ளை கறுப்பண்ண பிள்ளையிடம் வந்து "ஐயா! நானறிந்த பிரசங்கியார் ஒருவர் இவ்வூருக்கு வந்திருக்கிறார். இன்று நடந் தேறிய கிரகப்பிரவேச நிமித்தம் அப் பிரசங்கியாரை அழைத்து

வந்து ஓர் பிரசங்கம் செய்யும்படி கேட்டுக்கொள்ள ஆசை தூண்டுகிறது. தங்களுடைய உத்தரவுக்கு எதிர்பார்க்கிறேன்'' என்றார்.

**கருப்பண்ண பிள்ளை.**—ஆம்! நல்லமுத்துப் பிள்ளை! இன்று சத்காலக்ஷேபம் நடப்பது அவசியமே ஆயினும், ஞானம்பிகை பிரியப்படுகிறாளோ என்பதை அறிந்து, பின் பிரசங்கியாரை வரவழைக்கலாம். (என்று ஞானம்பிகையை அழைத்தார்). அவள் ஓடிவந்து ஏன் என்று கேட்டாள்.

**கருப்பண்ண பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை! இன்று நம்முடைய வீட்டில் ஓர் பிரசங்கம் வைக்கவேண்டுமென்று நினைக்கிறேன். உன்னுடைய அபிப்பிராயம் என்ன?

**ஞானம்பிகை.**—எதைக் குறித்துப் பிரசங்கம் செய்யச் சொல்லப்போகிறீர்கள்?

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை! பிரசங்கியார் சித்தாந்த சாஸ்திரத்தை நன்கு உணர்ந்தவர். அவரைக் கொண்டு ஏதாகிலும் ஓர் விஷயத்தைக் குறித்துப் பிரசங்கம் செய்யச் சொல்லலாம்.

**ஞானம்பிகை.**—அண்ணா! பிரசங்கம் என்றால் அனேகர் வருவார்கள். பிரசங்கியார் சொல்லுவதில் ஏதாகிலும் ஸந்தேகம் தோன்றினால் நாம் பலர்முன் பிரசங்கியாரை ஒன்றும் கேட்கமுடியாது. ஆனதால், நாம் வெளியாரை வரவழைக்காமல், பிரசங்கியாரை வரவழைத்துச சித்தாந்த சாஸ்திரத்தைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டால், நமக்குண்டாகும் ஸந்தேகங்களை நிவர்த்திசெய்துகொள்ளலாம். ஆயினும், என் தந்தையின் அபிப்பிராயம் எவ்விதமோ அதை அறிந்து செய்யுங்கள்.

**கருப்பண்ண பிள்ளை.**—ஆம்! ஞானம்பிகை சொல்வது நியாயமே! நீர் பிரசங்கியாரை அழைத்துவாரும். வெளியாரில்லாமல் இருந்தால், நமக்குண்டாகிய ஸந்தேகத்தைக் கேட்டுத் தெளியலாம்.

நல்லமுத்துப் பிள்ளை ஸம்மதித்து நீங்கி மாலை ஆறுமணிக்குப் பிரசங்கியாரை அழைத்துவந்து மேல்மெத்தையில் உட்கார வைத்தார். அவருக்குமுன் கறுப்பண்ண பிள்ளை, வரதராஜ பிள்ளை, நல்லமுத்துப் பிள்ளை, மீனும்பாள், ஞானம்பிகை உட்கார்ந்தார்கள்.

நல்லமுத்துப் பிள்ளை.—(பிரசங்கியாரைப் பார்த்து) ஐயாவே! தாங்கள் ஏதாகிலும் ஒன்றைச் சொல்லவேண்டும்.

ஞானம்பிகை.—(பிரசங்கியாரைப் பார்த்து) ஐயாவே! நாங்கள் "ஞானசம்பந்தம்" என்ற புத்தகத்தில் பதியிலக்கணத்தை வாசித்திருக்கிறோம். ஆனதால் தாங்கள் தயவுசெய்து அத்துவைத இலக்கணத்தைச் சொல்லும்படி வேண்டுகிறோம்.

கறுப்பண்ண பிள்ளை.—ஆம்! ஐயா! நீர் என் குமாரத்தி விரும்பியதைச் சொல்ல வேண்டுகிறேன்.

பிரசங்கியார்.—உங்களுடைய இஷ்டப்பிரகாரம் நீங்கள் விரும்பியதையே சொல்லுகிறேன். முதல்வன், சித்தசித்தாயுள்ள அவன், அவள், அது என்று சுட்டி யறியப்பட்ட பிரபஞ்சம் எல்லாவற்றையும் கலப்பினால் உடலும் உயிரும்போல் தானேயாய்நின்றும், உயிருக்கு உயிராந் தன்மையால் கண்ணொளியும் ஆன்மபோதமும் போல உடனுமாய் நின்றும் காரியப்படுத்துவன். அங்ஙனம் காரியப்படுத்துகையில், அம்முதல்வன் சுயம்பிரகாசமாயும், அளவிறந்த ஆன்மாக்கள் தங்கள் தங்கள் கன்மத்துக்கீடாகத் தனது ஆஞ்ஞா சத்தியால் ஐந்தொழிற்பட்டுச் செல்ல அவ்வைந்தொழிலை நடத்தும் பதிரூபமாயும், அவ்வான்மாக்கள் அடையும் சுக துக்கங்கள் தன்னிடத்தில் பொருந்துதலின்றித் தானே எவ்விடத்தும் விட்டு நீங்காத நின்மல சொரூபமாயும் விளங்கி நிற்பன்.

ஞானம்பிகை.—'பிரமம் ஒன்றே உள்ளது' என்று வேதாகமங்கள் சொல்ல, கர்த்தா வேறு ஆன்மா வேறு என்றும், கர்த்

தா ஆன்மாக்களுடன் பொருந்தி நிற்பனென்றும் பன்மை யாகக் கூறுவது யாது காரணம் ?

**பிரசங்கியார்** —அம்மா ! 'பதி' ஒன்றென்று சொல்லியது உண் மையே ! ஒன்றென்று சொல்லுகிற நீ, பதியன்றி வேறு யிருக்கிற 'பசு' என்று அறிவாயாக.

**ஞானம்பிகை.**—ஐயா ! பதியும் சேதனம் ! பசுவாகிய நானும் சேதனம் ! அப்படிக்கிருக்க 'என்னைப் பசு' என்று என் சொல்லவேண்டும் ?

**பிரசங்கியார்.**—நீ ஸ்தூலசித்தாதலின் பாசம் உன்னைப் பந்தித் தது. ஆதலால் நீ 'பசு' என்று சொல்லப்பட்டாய். கர்த்தா ஸூக்ஷ்ம சித்தாதலால் அவரைப் பாசம் பந்திக்கவில்லை. அன்றியும் அநாதியே கர்த்தா ஒருவனென்றே வேதம் சொன்னதின் கருத்து யாதெனில், அகரமாகிய அக்ஷரம் எல்லா அக்ஷரங்களையும் பொருந்தி அவைகளுக்கு உயிராய் நிற்கும் தன்மைபோல், பசுபதியின் திருவருள் ஸர்வ ஆன் மாக்களுக்கும் பிராணனாய் நிற்கிற முறைமையைக் கருதி வேதாகமங்கள் அப்படிச் சொல்லின.

**ஞானம்பிகை.**—ஆன்மாக்களனைத்தும் தானேயாய் நின்ற பிர மம் மீண்டும் அந்த ஆன்மாக்களுக்கு வேறாய் நிற்பான் என்றதே விளங்கவில்லை.

**பிரசங்கியார்.**—நரம்பு முதலியவைகளால் கட்டப்பட்டு ஐம் பொறி முதலிய கருவிகளையும் கொண்டிருக்கும் தேகத் துக்கு இராமன் சோமன் என்று இட்ட பெயரைப் பிறர் சொல்லி அழைக்க அவர்கள் வந்து ஏன் என்று கேட்கிறார் கள். இராமன் உயரமாகவும் கறுப்பாகவும் இருக்கிறான், சோமன் குள்ளமாகவும் சிவப்பாகவும் இருக்கிறான் என்று தேகத்தின் தன்மையைக்கூறி, அவனவன்கொண்ட நாமம் தேகத்துக்கு உரியதென்று காட்டுகிறோமல்லமா ? ஒரு வன் மற்றொருவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கும் பொழுது, ஒருவன் பெயரைச் சொல்லி அழைத்தால்

இருவரும் வராமல் அப்பெயரைக் கொண்டவனே தன்னை அழைக்கிறார்களென்று வருகிறான். பெயரிட்டது தேகத்துக்கே ஆயினும் பெயரைச் சொல்லி அழைத்த பொழுது, தேகத்துக்குள்ளிருக்கும் உயிரே ஏன் என்று கேட்கிறது. இதனால் தேகமும் உயிரும் அபேதமாயிருப்பதைக் கண்டோம். அவ்விதம் அபேதமாயிருந்தாலும், உயிர் உயிரே, உடம்பு உடம்பே; உயிர் உடம்பாகாது, உடம்பு உயிராகாது. இவ்விதமிருக்கும் உயிர் உடம்பாயும அதனின் வேறாயும் நிற்கும். உடல் அவ்விதமாகாதது போல், கர்த்தா ஆன்மாக்களை அபேதமாய ஒட்டிநிற்பான். கர்த்தா ஆன்மாக்களோடு அபேதமாயிருந்தாலும், கர்த்தா கர்த்தாவே; ஆன்மா ஆன்மாவே. கர்த்தா ஆன்மா ஆகமாட்டான்; ஆன்மா கர்த்தா ஆகமாட்டான். உயிர் உடம்பாயும் அதற்கு வேறாயும் நிற்குமென்று முன் சொன்னதுபோல், கர்த்தா ஆன்மாவாயும் அதற்கு வேறாயும் நிற்பான்.

**ஞானம்பிகை.**—உயிர் உடலுக்கு வேறாய் நிற்குமென்று எவ்விதம் சொல்ல முடியும்?

**பிரசங்கியார்.**—நாம் எந்தக் காலத்தில் உடலைப் பிணமென்று சொல்லுகிறோம்?

**ஞானம்பிகை.**—உயிர் உடலைவிட்டு நீங்கியபொழுது, அதாவது, உடலில் உயிரில்லாதபொழுது, உடலைப் பிணமென்று சொல்லுகிறோம்.

**பிரசங்கியார்.**—பஞ்சபூத பரிணாமமாகிய தேகத்தில் உயிர் வேறாயிருந்தமையால் உடலைவிட்டு நீங்கியது. இதனால் நாம் என்ன அறிந்தோம் என்றால, உடலுக்கு அன்னியமாக ஒரு பொருள் உடலுக்குள் இருந்ததென்றும், அந்தப் பொருளே உடலைக் காரியப்படுத்திக்கொண்டிருந்தது என்றும் அறிந்தோம். உயிர் உடலோடு அபேதமாயும் உயிர் உடலுக்கு வேறாயும் இருக்கும் தன்மைபோல், கர்த்தா உயிரோடு அபேதமாயும் வேறாயும் நிற்பன்.

ஞானம்பிகை.—அபேதம் என்பதே விளங்கவில்லை.

பிரசங்கியார்.—அதை விளக்குகிறேன். வேதாகமங்களில் கர்த்தா 'ஏகம்' என்றும் 'துவைதம்' என்றும் 'அத்துவைதம்' என்றும் சொல்லியிருக்கிறது. இவ்விதம் சொன்ன மூன்று வாக்கியத்தில், 'ஏகம்' என்பது கர்த்தா ஒருவனே; இப்பிரபஞ்சமெல்லாம் அவன் சொரூபமே; அவனுக்கன்னியமாய் வேறொரு பொருள் இல்லை என்றும், 'துவைதம்' பதி என்றும் பசுக்கள் என்றும் (அதாவது ஆண்டான் என்றும் அடிமை யென்றும்) இரண்டு விதமாக இருக்கிறது என்றும், 'அத்துவைதம்' இரண்டில்லை (அதாவது பசுவென்பதொன்றில்லை) என்றும், சொல்லும் பொருளும் ஒன்றையே பற்றுகிறதுபோல, ஒன்றே என்றும் பொருள் கொண்டது. எதுவும் உண்மையான பொருள் கொள்ளாமையால், பலவித வாது வம்புகளும் உண்டாயின.

ஞானம்பிகை.—தாங்கள் அவைகளுக்கு என்ன பொருள் கொண்டிருக்கிறீர்கள்.

பிரசங்கியார்.—நாம் அங்ஙனம் பொருள்கொள்ளவில்லை. அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன், பிரபஞ்சம் முதலியவைகளில் தோய்ந்து நிற்கும் கலப்பினால், 'ஏகம்' என்றும்; அவ்விதம் தோய்ந்து நிற்பினும் பொருள் தன்மையைப் பார்த்தால் தனிப்பொருள் இரண்டாயிருப்பதால் 'துவைத' மென்றும், உடலில் உயிரிருப்பதை முன் சொல்லியதுபோல் உயிர்க்குயிராய் நிற்குந தன்மையால் 'அத்துவைதம்' என்றும பொருள் கொண்டிருக்கிறோம். அவைகளில் 'அத்துவைதம்' என்ற ஒன்றை விளக்கினால், மற்றிரண்டும் தாமே விளங்கும். அதாவது ந-துவைதம் என்ற ஸமஸ்கிருதபதம அ-துவைதம் என மாறியது. இந்த அகரம் என்ற எழுத்துக்கு அன்மை, இன்மை, மறுதலை என்ற முப்பொருளையுங் கொடுப்பதால், 'துவைதம்' என்ற வார்த்தைக்கு முன் 'இன்மை' 'மறுதலை' ஆகிய

பொருளைக் கூட்டிப் பார்க்கில் 'துவைதமில்லை' அதாவது இரண்டில்லை; ஆனதால் கர்த்தா ஒருவனன்றி அவனுக்கு வேறாக வேறொரு பொருளில்லை என்று சொல்ல வேண்டியதே! கர்த்தாவைத் தவிர வேறொரு பொருள் இல்லை என்பது வேதஸம்டதமாயின், 'ஏகம்' என்று சொன்னதோடு நின்றிருக்க வேண்டும். அவ்விதம் நின்றால் 'துவைதம்' என்றும் 'அத்துவைதம்' என்றும் பதப் பிரயோகங்கள் இருத்தலான அவசியம் இல்லை. 'ஏகம்' என்றது கர்த்தா ஒருவனே என்றும், 'துவைதம்' என்றது பதி ஒன்று பசுக்கள் வேறு ஆக இரண்டென வெளிப்படையாகக் காட்டத் தோன்றிய பதங்களென்றும காண்கிறது. ஆனால் 'பதி' 'பசு' என்ற தனிப்பொருள் இரண்டாயினும், அவை தனித்தனியாகக் காணப்படுமோ என்றால், அவைகளிரண்டும் தனித்தனியாக இருக்கா, அத்துவைதமா யிருக்கும் என்று சொல்லியிருக்கிறது. முழு முதற் கடவுள் தன்னுடைய தனமையைத் தான் சொல்லியபொழுது தனை ஒன்றெனக கருதாமலிருக்கச சொன்னதால், கருத வேண்டுவது வேறொன் றுண்டெனக் காண்கிறதல்லவா? நாம் முக்கியமாக யோசிக்கவேண்டியது யாதெனில், எண்ணுப்பெயர் மேல் வந்த அகரத்துக்கு 'இன்மை' 'மறுதலை' ஆகிய பொருளைக்கொண்டு ஒன்றில்லை, இரண்டில்லை, மூன்றில்லை யென்று சொல்லும் வழக்கமில்லாததால், நாம் அன்மைப் பொருளையே கொள்ளவேண்டும். அவ்விதம் அன்மைப் பொருளைக் கொண்டால், 'அத்துவைதம்' என்றதற்கு இரண்டல்லவென்று பொருள் படும். இரண்டல்லவென்றால், ஒன்றே என்ற கேள்வி பிறக்கும். ஒன்றாயிருந்தால், வேதம் 'ஏகம்' என்று சொன்னதோடு நின்றுவிடும். ஆனதால், ஒன்றல்லவென்ற விடையே கொடுக்க வேண்டும். 'ஒன்றல்ல' 'இரண்டல்ல' என்றால், பின் என்ன பொருளைக் கொள்ள வேண்டுமெனில், 'தாடலை' போலுள்ள உவமானத்தாலறியவேண்டும். (அதாவது 'தாள் தலை' என்ற வார்த்தை

இலக்கண விதியால் 'தாடலை' என்றுனது. தாடலை என்ற மொழியில் மத்தியில் உள்ள 'டகரத்தை' ஒரெழுத்து என்று சொல்லுகிறதா? இரண்டெழுத்துகள் என்று சொல்லுகிறதா? ஒரெழுத்து என்றால் அது இரண்டெழுத்துக்களுக்குப் பதிலாக இருக்கிறது. இரண்டெழுத்துக்களென்று சொல்லலாம் என்றால் ஒரெழுத்தாகக் காண்கிறது. ஆனதால் உடலுக்குள் உயிர் இருக்கிறதுபோல், முழுமுதற் கடவுள் நம்முடைய உயிருக்குயிரா யிருக்கிறன்.

**ஞானும்பிகை.**—தாங்கள் இவ்விதம் பொருள் கொள்ளுமாறு போதிக்கும் ஸமயம் யாதோ தெரியவில்லை.

**பிரசங்கியார்.**—அந்த ஸமயம் 'அபேதத்தையும்' 'பேதத்தையும்' 'பேதாபேதத்தையும்' இன்னின்ன காரணத்தால் இவ்விதம் சொல்லியதென்று பொருள் கொண்டு அம்மூன்றையும் ஒப்புக்கொண்டதாலும், உலகிலுள்ள எல்லா ஸமயங்களும் இம்மூன்றில் அடங்குமாதலாலும், எல்லா ஸமயங்களுக்கும் தாயகமாய் நிற்கிறது. அது ஸமயாதீத சுத்தாத்வைதம். அருள்நெறி, நன்னெறி, ஸமரஸநிலை, ஸன்மார்க்கம், வைதீக சைவம், ஸித்தாந்த சைவம், உத்தரசைவம், வேதாந்த ஸித்தாந்தம், என்று பலவகையாகச் சொல்லப்படுகின்ற 'ஸித்தாந்தம்' என்றறிவாயாக.

**ஞானும்பிகை.**—ஆன்மாக்கள் அனேக ஜன்மங்கள் எடுப்பதின் காரணம் என்ன?

**பிரசங்கியார்.**—ஆன்மாக்கள் முன்ஜனனத்தில் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க ஸுகதுக்கங்களை அனுபவிக்க ஜனன மரணப்பட்டு, சொர்க்க நரகங்களிலே போவதும் பூலோகத்தில் வருவதுமாக இருக்கும். அரசன் தன் குடிகள் செய்யும் நன்மை தின்மைகளையறிந்து அநுக்கிரகித்தும் நிக்ரகித்தும் செய்யும் முறைபோல், ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாகக் கர்த்தா சரீரங்களும் பலன்களும் மறுமையில் கொடுத்துக் காரியப்படுத்துவான்

**ஞானம்பிகை.**—ஆன்மாக்களுக்கு இன்ப துன்பம் என்ற இரு வினைப்பலனும் சுபாவத்திலேதானே பொருந்தும். ஒருவன் கூட்டிவைக்கவேண்டும் என்பதென்ன ?

**பிரசங்கியார்.**—சுபாவம் (இயல்பு) என்பது ஒரு தன்மையாயிருப்பது என்பதாம். ஆன்மாக்களுக்கு ஸுகதுக்கம் இரண்டாய் வருகிறதைக் கவனிக்கவில்லையா ?

**ஞானம்பிகை.**—ஜலம் மலரோடு சேர்ந்தபொழுது வாசனையடைகிறது. அக்கினியைப் பொருந்தினபொழுது வெப்பமடைகிறது. ஜலம் என்ன வினையைச் செய்தது ? ஆகையால் ஆன்மாக்கள் ஸுகியாயிருக்கிறதும் துக்கியாயிருக்கிறதும் ஒருவன் கொடுக்க வேண்டியதில்லை. இது சுபாவமே !

**பிரசங்கியார்.**—நீ எடுத்தாண்ட உவமானம் எம்முடைய கருத்தைத் தெளிவாய்க் காட்டியது. எவ்விதமெனில், குளிர்ச்சியே சுபாவமாயிருக்கிற (ஜடமாகிய) ஜலம் ஒருவரால் மலரோடு சேர்க்கப்பட்டபொழுது வாசனையை அடைந்தது. அக்கினியோடு சேர்த்தபொழுது சூடானது. ஆனதால் ஸுகதுக்கங்கள் இயற்கையல்ல செயற்கை என்று உனது உவமானம் விளக்கிவிட்டது. இதுபோல் ஆன்மாக்கள் செய்யப்பட்ட இருவினையினாலும வரப்பட்ட ஸுகதுக்கங்களைப் பூதங்கள் காரியமான இவ்வுடலைப் பொருந்தாமல் ஆன்மாவையே அனுபவிக்கச் செய்யும் ஜலம் அடைந்த வாசனையையும் வெம்மையையும் அது அறியாமல் வேறொருவன் அறிகிறதுபோல என்றறிவாயாக.

**ஞானம்பிகை.**—ஆன்மாக்கள் இந்த ஜன்மத்தில் சிறு வயதுமுதறகொண்டு பெரும் பிரயாசையோடு வாசித்து வயதேறியபின் அதிகம் வரும்படி வரக்கூடிய பெரிய உத்தியோகத்தை செய்தும் பலவிடஙகளுக்குச் சென்று வியாபாரம் செய்தும் பெரும் பணக்காரராயிருந்து இந்த ஜன்மத்திலேயே ஸுகத்தை அனுபவிக்கிறார்கள். அவ்விதம்

செய்யாமல் சோம்பேறிகளாயிருந்து காலத்தைக் கழித்தவர்கள் பொருளின்மையால் துக்கத்தை அனுபவிக்கிறார்கள். ஆனதால் இவை துன்பத்துக்குக் காரணம் முயற்சியும் சோம்பலுமேயன்றி வேறல்ல. முன் ஜனனங்களில் செய்த இருவினையின் பலன்கள் உண்டாயின் முயற்சியும் சோம்பலும் இல்லாமலே பொருள் உண்டாகவேண்டும்.

**பிரசங்கியார்.**—ஸுகதுக்கங்கள் வருவதெல்லாம் நாம் முன்போந்த ஜனனத்தில் செய்த புண்ணிய பாவங்களின் பலனேயல்லாது இந்த ஜன்மத்தில் செய்த முயற்சியால் வந்ததென்று நினைக்கவேண்டாம். இந்த ஜன்மத்தில் அதிகம் பொருள் தேடவேண்டி முயற்சி செய்தாலும் முன் ஜனனத்தில் செய்த தீவினையின் பலனால் வியாபாரத்தால் நஷ்டமுண்டாகியும் கல்வியில் வல்லவர்களுக்கு நல்ல உத்தியோகம் கிடைக்காமலும் போகின்றன. கள்வராலும் தீயாலும பொருள் நஷ்டமடைந்து அதிக துன்பமடைகிறார்கள். ஒரு முயற்சியும் செய்யாதிருந்தவர்களுக்குப் பிதுரார்ஜிதம் கிடைத்தும் புதையல் கிடைத்தும் ஸுகத்தோடு இருப்பவர்களைப் பார்த்திருக்கக்கூடுமே. ஆன்மா ஸூக்ஷ்மதேகத்துடன் கருப்பாசயத்தில் தங்கும்பொழுதே நாம் இப்பிறவியில் அனுபவிக்கத்தகுந்த பொருளை அடைகிறதும், பொருளை இழக்கிறதும், ஸுகத்தை அனுபவிக்கிறதும், வியாதி முதலாகிய துக்கங்களை அனுபவிக்கிறதும், விருத்தாப்பியத்தால் வருகிற துக்கங்களும், எந்த வயதில் இறக்கவேண்டுமென்றதும், ஆகிய இவ்வாறும் கர்த்தாவால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை அனுபவித்தே தொலைக்கவேண்டும் நாம் முன்போந்த ஜனனத்தில் செய்த இருவினைகளே இதற்குக் காரணம். இந்த ஜனனத்தில் செய்துவரும் புண்ணிய பாவங்கள் இனிமேல் எடுக்கப்போகும் பிறவியைச் சேரும்.

ஆனதால் முன் ஜனனத்தில் விடப்பட்ட சரீரத்தால் செய்த கன்மமே இவ்வுடலைக் கொடுத்தது. இதுபோலவே ஒரு உடலில் கன்மம் செய்ய அவ்வுடல் அழிந்தபோது வேறோர் உடல் கிடைத்துக்கொண்டிருக்கும். இவ்விதம் ஆற்றில் ஜலம் ஒன்றின்பின் ஒன்றாக ஓய்வில்லாமல் வருகிற முறைபோலவும், வித்தினிடத்திலிருந்து மரம் தோன்றி மரத்தினிடத்திலிருந்து வித்துத் தோன்றுவது போலவும், நமக்கும் ஒரு உடலழிய மற்றோருடல் வந்து கொண்டிருப்பதால், இதைப் பிரவாகாநதியென்றும் சொல்லுவார்கள்.

ஞானம்பிகை.—முன் ஜனனத்தில் செய்த புண்ணிய பாவங்களின் பலனை இப்பிறவியில் அனுபவித்து விட்டால் மறு பிறப்புக்கும் எந்த வினை காரணமாய் நிற்கும்?

பிரசங்கியார்.—முன் ஜனனத்தில் செய்த இருவினைக்கீடாக ஏற்பட்ட ஸுகதுக்கங்களை அனுபவிக்கும்பொழுது, ஸுகத்தை அனுபவிக்கத் துணை செய்தவனுக்கும், துக்கத்தை யனுபவிக்கத் துணையாய் நின்றவனுக்கும், நாம் பதிலுக்குச்செய்த இதாகிதங்களும், நாம் ஸுகதுக்கங்களை யனுபவிக்கும்பொழுது உண்டாகும் விருப்பும் வெறுப்பும் முதலியவைகளே மறு ஜனனத்தில் பொருந்தும். முன் ஜனனத்தில் செய்த இதாகிதங்களாலுண்டாய் இருவினையின் பலன் இந்த ஜன்மத்திற்கு அனுபவமாகும். இவ்விதம் பிராரத்துவத்தைப் புசிக்கிற காலத்தில் உண்டாகிற இதாகிதம் மறுஜனனத்திற் கேதுவாகநிற்கும். ஆகாமியம் ஏறாமல் பிராரத்துவத்தை அனுபவிக்க முடியாது. ஆனதால் ஜனனங்கள் தொடர்ந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். அதை உனக்கு விளங்கச் சொல்ல வேண்டுமாயின், நாம் இவ்வருடத்தில் வேளாண்மை செய்து விளைந்து வந்ததை இவ்வருடத்துக்கே சாப்பாட்

டுக்கு வைத்துக்கொண்டு மறு வருடத்துக்கு விதைக்காக வும் வைத்துக்கொள்ளும் உலகவழக்கம்போல், நாம் முன் ஜனனங்கள்தோறும் செய்த வினைகளெல்லாம் இந்த ஜன் மத்தில் புசிப்பதற்குப் பக்குவப்பட்டுச் சிறிது சஞ்சித மாய்க் கட்டுப்பட்டு மேல்வரும் ஜனனங்களில் புசிப்பதற்

---

குறிப்பு.—சஞ்சிதம என்பது.—சனனங்கள்தோறும் செய்த வினைகள் பக்குவப்படாமல் ஆறத்துவாக்களில் கட்டுப்பட் டிருக்கும் வினையின் பொக்கிஷம்.

பிராரத்துவம் என்பது.—சஞ்சிதத்திலிருக்கும் வினைகள் பக்கு வப்பட்டு எடுத்த ஜனனத்தில் புசிக்கக் கொடுப்பது.

ஆகாமியம் என்பது.—பிராரத்துவத்துக்குத் தக்கவிதம் எடுத்த தேகத்தில் அதன் பலனைப் புசிக்கும்பொழுது உண்டாகும் விருப்பு வெறுப்பைக் கூட்டுகிறவர்களைப் புகழ்தலும் இகழ்தலும் ஆகிய காரணத்தால் ஏறும் புண்ணிய பாவங் கள்.

பிராரத்துவமானது, ஆதி தெய்விகம், ஆதி பௌதிகம், ஆதி ஆத்மிகம், என மூவகைப்படும். ஆதிதெய்விகம் என்பது, தெய்வம் காரணமாக வரும் ஸுகதுக்கங்கள். அதாவது, கர்ப் பம், ஜன்மம், நரை, திரை முதலியன. ஆதிபௌதிகம், ஜடம் வாயிலாக வருபவை. அதாவது இடி, நெருப்பு, மழை முதலி யவைகளால் உண்டாகும் ஸுகதுக்கஙகள். ஆதி ஆத்மிகம், ஜடத்துடன் சேர்ந்து சேதன வாயிலால் வருவது. அதாவது, அரசன், கள்ளன், விலங்கு முதலிய வற்றால் வரும் ஸுகதுக் கங்கள்.

ஆகாமியம்—திருட்டமெனவும், அதிருட்டமெனவும், திரு ட்டா திருட்டமெனவும் மூவிதம் உண்டு. திருட்டமாவது, இம்மையில் செய்தது இம்மையிலே பலன் கொடுத்தல். அதி ருட்டமாவது, இம்மையில் செய்த கன்மத்தின் பலனை மறுமை யில் அனுபவித்தல். திருட்டா திருட்டமாவது, இம்மையில் செய்த புண்ணிய பாவங்களின் பலனை இம்மையில் அனுபவித் தும் மீண்டும் சுவர்க்க நரகத்திலும் பலனைப் புசித்தல்.

குப்பாகமாயிருக்கும். நாம்எடுத்ததேகத்தில் செய்யும் இதாகிதம் தானே ஆகாமியமாயேறி ஜனனங்கள்தோறும் சரீரமெடுப்பதற்குக் காரணமாகிவரும். இம்முறைமையோடு எப்பொழுதும் ஜனனமரணங்களுக்கு ஏதுவுமாய் வரும்.

**ஞானம்பிகை.**—'இதம்' என்றும் 'அகிதம்' என்றும் சொல்வதென்ன ?

**பிரசங்கியார்.**—இதமகிதங்களென்பது, மனோவாக்குக் காயங்களால் செய்யுங் கன்மமே ! 'இதம்' என்பது, ஆன்மாக்களுக்கு மனதினாலே நன்மையை நினைத்தும், வாக்கினாலே நல்வசனத்தை உரைத்தும், காயத்தினாலே நன்மைகளைச் செய்தும் அன்னாதிகளைக் கொடுத்து உறுதிசெய்தல். 'அகிதம்' என்பது, ஆன்மாக்களுக்கு மனதினாலே பொல்லாங்கை நினைத்தும், வாயினால் நிஷ்டூரமாகப் பேசியும், காயத்தினால் அடித்தல் முதலிய துன்பங்களைச் செய்தல். இவ்விதம் சொல்லப்பட்ட புண்ணிய பாவங்கள் அசேதனமாகையால் அவைகள் தாமே பலனைக் கொடுக்க முடியாமையால், கர்த்தா இவைகளை அறிந்துகொண்டு அந்தப் புண்ணிய பாவங்களுக்கீடான சுகதுக்கங்களைக் கொடுப்பான்.

**ஞானம்பிகை.**—ஆன்மாக்கள் செய்த இதாகிதமாகிய இருவினைப்பலன்களையும் கர்த்தா கைக்கொண்டு ஏது காரணமாக ஆன்மாக்களைப் புசிப்பிக்கச செய்கிறான் ?

**பிரசங்கியார்.**—சித்தசித்துக்களிரண்டினும் குறைவற நிறைந்து நிற்கிற முதல்வன் ஆன்மாக்கள்மேல் வைதத காருண்ணியத்தால் புண்ணியஞ் செய்தவர்களுக்குச் சுவர்க்கத்தைக் கொடுத்து அநுக்கிரகஞ் செய்வான். பாபம் செய்தவர்களை நரகில் தள்ளித் தண்டிப்பான்.

**ஞானம்பிகை.**—கர்த்தா பாவம் செய்கிறவர்களிடத்தில் பிரியமில்லாமல் புண்ணியம் செய்கிறவர்களிடத்தில் மாத்திரம்

பிரியங்கொண்டிருப்பதால் அவனை அநுக்கிரக மூர்த்தி யென்று சொல்லலாமா ?

**பிரசங்கியார்.**—கர்த்தா ஆன்மாக்கள்மேல் வைத்த காருண்ணியத்தால் தண்டிக்கிறுன். எவ்விதமெனில், அக்கிரமத்தால் செய்த குற்றங்கள் நீங்க அவர்களைத் தண்டித்துப் பயப்படுத்தி இவ்விதமான கன்மங்களைச் செய்யவேண்டுமென்று வேதாகமங்களை அருளிச்செய்து இவைசொன்ன முறையில் நில்லுங்களென்று போதிப்பான். ஆனதால் எல்லாக்கிரமங்களினுலும் கர்த்தாசெய்வது அநுக்கிரகமென்றே அறிவாயாக. தாய் தந்தையாகிய நாம் பெற்ற பிள்ளைகள் நம்முடைய வார்த்தையைக் கேட்டு நன்மையான காரியத்தைச் செய்யாமல் தீயவழியில் நடந்தால் அவர்களை வளாரினுல் அடித்தும், காலில் விலங்குகள் போட்டும் தண்டிக்கிறேம். இஷ்டப்பிரகாரம் சிறு வயதில் விட்டுவிட்டால், பெரியவர்களாகும்போது அவர்கள் கெட்ட காரியத்தைச் செய்துகொண்டிருப்பார்கள். அவர்கள் நல்ல வழியில் நடக்குமாறு கற்பிக்கவேண்டுமென்ற அன்பினுல் தானே அவர்களை அவ்விதம் நடத்துகிறேம். இதுபோல் கர்த்தாவினுடைய கோபமெல்லாம் நம்முடைய நன்மையைக் கருதியதே.

**ஞானும்பிகை.**—ஆன்மாக்கள் செய்த கன்மங்களுக்குத் தக்கவாறே அக்கன்மங்கள் பலனைக் கொடுக்கும். எவ்விதமெனில் ஒருவன் புத்திரகாமேட்டியாகம் இந்த ஜன்மத்தில் செய்தால் அவனுக்கு இந்த ஜன்மத்திலேயே புத்திரன் பிறக்கிறுன். அவன் செய்த கன்மத்துக்கு ஏற்றவாறே பலன் கிடைத்ததைப் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறேம். ஆனதால் கன்ம பலன்களைக் கொடுக்கக் கர்த்தா வேண்டியதில்லை.

**பிரசங்கியார்.**—கன்மங்களெல்லாம் மனோவாக்குக் காயத்தால் நிகழ்கின்றமையால் அவைகளெல்லாம் செய்த இடத்தி

லேயே அழிந்து போகின்றனவே. அவைகள் எவ்விதம் பலனைக் கொடுக்கும்?

ஞானம்பிகை—வயலுக்குப் போடும் தழையும் வைத்தியன் கொடுக்கும் ஔடதமும் உட்கொண்டபின் அழிந்து பலனைக் கொடுக்கவில்லையா?

பிரசங்கியார்.—வயலுக்கிடும் தழையும் தின்னும் பதார்த்தங்களும் போல், செய்யுங் கன்மங்களும் கெட்டுப் பலனைக் கொடுக்கும் என்கிறாய். நீ ஒரு அடியார்க்கு உணவளித்து வெற்றிலைப்பாக்குங் கொடுத்தால், அவர் சாப்பிட்டு ஜீரணமானபின் உனக்குக் கிடைக்கும் பலன் மலம் அன்றி வேறென்ன உண்டு. நீ எடுத்துக்காட்டிய தழை முதலிய பொருள்கள் கிடந்த இடத்திலேயே கெட்டு அவ்விடத்திலேயே பலனைக் கொடுக்கும. அன்றியும் பலன் கொடாமலும் இருக்கும். வினை அவ்விதமில்லாமல், இவ்வுடம்பில் செய்வது இவ்விடத்தே கெட்டு மற்றோருடம்பிலும் பயன் தரும். அல்லது இவ்வுடம்பிலேயும் பயன் தரும். ஆனால் நீ எடுத்தாண்ட உவமானம் பொருந்தாது.

ஞானம்பிகை.—ஒருவன் இந்த ஜன்மத்தில் செய்த தானதர்மங்கள் கெட்டு இந்த ஜன்மத்திலேயே பலன் கொடுக்கும் என்றதே என் கருத்து.

பிரசங்கியார்.—நீ புண்ணிய தீர்த்தக்கரையில் திலதர்ப்பண முதலானவும், அக்கினியில் ஓமாதி காரியங்களும், அன்னதான முதலிய தருமங்களுமாகிய இவைகளைச் செய்யுமிடத்தில் இவை அழிந்துபோகின்றனவே, நீ இவைகளின் பலனை எவ்விடத்தில் கொள்ளக் கருதினாய்?

ஞானம்பிகை.—தானம் தர்மம் முதலிய எல்லாக் கர்மங்களும் அவைகளைச் செய்த அவரவர்களுடைய மனதில் ஸூக்ஷ்மமாகக் கிடந்து பின் அவைகளுக்கேற்ற பலனைக் கொடுக்கும்.

பிரசங்கியார்.—ஜடகமாகிய கன்மத்தின் பலன் அவரவர்கள் புந்தியிலிருந்து அவரவர்கள் அடையப்போகும் சுவர்க்க

லோகமும் நரகமும், பிறவிக்கிடமான பூலோகமும் அவ ரவர்கள் புத்தியிலிருந்தே வெளிப்படுகின்றன என்றால் இது இந்திரஜாலவித்தைபோல் காண்கிறது. நான் சொல் வதைக் கவனித்துக் கேட்பாயாக. தானமாகக் கொடுத்த பொருளும் தானத்தை யேற்றவர்களும் தானம் செய்தவர் களும் ஆகிய மூன்றும் இவ்விடத்திலேயே அழிந்துபோகக் கண்டோம். இவ்விதம் அழிந்துபோகிறதால், இந்த தான தர்மங்களுக்குத் தக்க பிரயோசனங்களை அறிந்து கொடுக்க ஒரு கர்த்தா வேண்டும். ஒரு குற்றமுமில்லாதவனும் எப் பொழுதும் ஒரு தன்மையாயிருக்கும் முதல்வன் வேதாக மங்களால் விதித்த கன்மங்களை நாம் செய்யும்பொழுது உண்டாகும் ஏற்றக்குறைவைப் பார்த்து நம்மைப் பிடித்திருக் கிற கன்மநோய் தீரும்படி நம்முடைய கன்மத்துக் கீடான பலனைக் கொடுத்துப் புசிப்பிக்கச் செய்வான்.

**ஞானம்பிகை.**—கன்மம் ஜடமாயினும் ஆன்மா சேதனமாகை யால் தான் செய்த கன்மத்தைத் தானறிந்து புசிப்பான் ஆகையால் கர்த்தா வேண்டுவதில்லை.

**பிரசங்கியார்.**—ஆன்மாக்கள் செய்த கன்மங்களுக்குத் தக்க புவ னங்களும், அதற்கேற்ற சரீரங்களும், அந்தக்கரணங்களும், காலதத்துவமும், பொருந்தத்தக்க கால விஷயங்களும் கன்மத்துககீடாக ஏறாமல் குறையாமல் புசிப்பிக்கச் செய் கிற நியதிதத்துவமும், மனோவாக்குக் காயங்களின் தொழி லாகிய தூலகன்மமும் என்ற ஏழு காரணங்களோடு கூடி நின்று, ஆன்மா கன்மங்களைச் செய்து புசித்தலைக் கன்மம் ஜடமானதால் தானாகச் சென்று ஆன்மாவைப் பொருந்த மாட்டாது. ஆன்மாவும், சுதந்தரஹீனனாதல்பற்றித் தனக் கெனச் செயலிலாதபடியால் நாம் செய்த வினையிது, இதற் கேற்றது இது, என்றறிந்து தானாக எடுத்துக்கொள்ளமாட் டான். ஆனதால் எண்ணிறந்த ஞானத்தையுடைய முதல்

வன் ஈனது திருவருளால் இவைகளைக் கூட்டிக் காரியப் படுத்துவான்.

**ஞானம்பிகை.**—நாம் செய்யும் இருவினைக்கீடாகப் பலன் கிடைக்கிறதென்று சொல்லுகிறதால் புண்ணியத்தைச் செய்வதே மேலானதென்று காண்கிறது. ஆனதால் அதை விளக்கவேண்டும்.

**பிரசங்கியார்.**—புண்ணியம் செய்வது சிறப்பேயாயினும், அதிலும் பசு புண்ணியம் பதிபுண்ணியம் என இருவகை உண்டு.

**ஞானம்பிகை.**—பசுபுண்ணியமாவதென்ன ?

**பிரசங்கியார்.**—ஒழுக்கம், (தத்தத் ஜாதிக்கேற்ற ஆசாரத்தோடு நடத்தல்), அன்பு (மாதா, பிதா, குரு தேவதாபத்தி), அருள் (ஸர்வ பூததயை), ஆசாரம் (வேதாகமங்களில் சொல்லியவைகளை அனுஷ்டித்தல்), உபசாரம் (அதிதிகளைப் பூசித்தல், மேலோரை உபசரித்தல்), உறவு (சுற்றத்தார் முதலியவர்களைச் சினேகித்தல்), வழுக்கிலாத்தவம் (வழுவுதலில்லாத ஐம்பொறி யடக்கல், விரத மனுஷ்டித்தல்), தானங்கள் * (சற்பாத்திரத்தில் பொருள் கொடுத்தல்), வந்தித்தல் (பெரியோர் முதலாயினோரைத் தோத்திரம் செய்தல்), வணக்கம் (தன்னைவிட மூத்தோரை வணங்கல்), வாய்மை (விளையாட்டிலும் பொய் சொல்

---

* தானங்கள் உத்தமாதி பேதத்தால மூவிதப்படும். அவையாவன:—

பெரியோர் இருக்குமிடந் தேடிப்போய்த் தன்னால் இயன்றதைக் கொடுத்தல் : உத்தமம்.

சற்பாத்திரத்தைத் தன் வீட்டுக்கழைத்துக் கொடுத்தல் மத்திமம்.

பாத்திரவான் தன்னை வந்தடுத்துக் கேட்டும் இன்று நாளையென்று அலைக்கழித்துக் கொடுப்பது : அதமம்.

லாமை), அழுக்கிலாத்துறவு (பிறர்மனையாளை இச்சியாதிருத்தல், வேசிகளை விரும்பாமலிருத்தல்), அடக்கம் (குலம், கல்வி, தனம் உயர்வாயிருந்தாலும் கர்வமில்லாதிருத்தல்), அறிவோடர்ச்சித்தல் (அவரவர்களுக் குரித்தான சாத்திரங்களில் சொல்லியவிதம் அவரவர்கள் கொண்ட தெய்வத்தைப் பூசித்தல்), ஆதி (அக்கினி காரியம், கபிலைபூசை, கர்த்தாவின் சேவை) ஆகிய பதினாறும் இவை போன்ற மற்றவைகளும் குற்றமில்லாத அறங்களென்று எந்த ஸமயமும் சாத்திரத்தைக் கொண்டு நிச்சயப்படுத்துவதானல் அவைகளெல்லாம் முதல்வன் கற்பித்த பசு புண்ணிய கன்மங்கள். மேற்சொன்னவைகளுக்கு மாறாக நடப்பது பாபகன்மங்கள்.

**ஞானம்பிகை.**—பதிபுண்ணியம் யாது ?

**பிரசங்கியார்.**—மனமானது தான் இச்சித்த தெய்வத்தின் வடிவைத் தியானிக்க, வாக்கானது தோத்திரஞ்செய்து அந்தத் தெய்வத்தைக்குரிய மந்திரங்களை உச்சரிக்க, கையிலே ஒரேவித மலரைக்கொண்டு அருச்சனை செய்து வணங்கி, காமக்குரோதாதிகளை விட்டு வாழும் செயலெல்லாம் பதிபுண்ணிய மாதலால், எந்தத் தேவர்கட்கும் காரணனை முதல்வனே எவ்விடத்தும் அவரவரது தியானுதி செய்கைகட்கு முன்னின்று அருள் செய்வான்.

**ஞானம்பிகை.**—அவரவர்கள் வழிபடுந் தெய்வத்தை வணங்கினல், அந்தத் தெய்வங்கள் தாமே முக்தியைக் கொடுக்கும். முதல்வன் ஏன வந்து முக்தி கொடுக்கவேண்டும் ?

**பிரசங்கியார்.**—ஆன்மாக்கள் தங்கள் தங்கள் ஸமயத்துக்கேற்க எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும், அந்தத் தெய்வமாக முதல்வனே வந்து அவர்கள் விரும்பியதைக் கொடுப்பான். மற்றத் தெய்வங்களெல்லாம் கன்மத்துக்கீடாக ஸுகதுக்கங்களை அனுபவித்தும், ஜனனமரணப்பட்டும், புண்ணிய பாவங்களைச் செய்யாநிற்கும். அநாதியே இக்குற்றங்களை

யுடைய தெய்வங்கள் தங்களை வழிபட்டவர்களுடைய பக்குவாபக்குவங்களை யறிந்து ஜனனமரணங்களைப் போக்க மாட்டா. அவ்விதமிருப்பதால், இவ்விதம் சொல்லப்பட்ட குற்றங்களெல்லாம் தனக்கில்லாத முதல்வன் ஆன்மாக்களுடைய பக்குவாபக்குவங்களை யறிந்து தானே அநுக்கிரகஞ் செய்வான். இங்குப் பிராமணருக்கும் அடியாருக்கும் நாம் அன்னபான தாம்பூலாதிகள் தானம் பண்ணினால், இந்தப் பிராமணரும் அடியாருமோ வந்து நமக்குச் சுவர்க்கமும் முக்தியுந் தருவார்கள் ? அல்ல. அந்தத் தெய்வங்களும் அவ்விதமென்றே எண்ணுவாயாக.

ஞானம்பிகை.—இவ்வுலகத்தில் ஐயனார், துர்க்கை, முதலிய தெய்வங்கள் ஆன்மாக்களுடைய பூசையை ஏற்றுப் பலன் கொடுப்பதைக் கண்டோம். அவ்வுலகத்துப் பிரமேந்திராதிகள் பலன் கொடுப்பதையுங் கேட்டோமே !

பிரசங்கியார்.—ஆம் ! அது ஸத்தியமே ! இவ்வுலகத்திலுள்ள தெய்வங்களெல்லாம் முதல்வனது சத்தியால் ஏவப்பட்டிருக்கும் ஆனதால் அந்தத் தெய்வங்களிடத்தில் பண்ணும் பூசைத் தொழிலுக்குத் தக்க பலனை முதல்வனுடைய அதிகார சத்தியே கொடுக்கும். நாம் ஒரு தெய்வத்தைக் குறித்துச் செய்யும் பூசை முதலிய வழிபாடுகள் எல்லாவற்றையும் முதல்வனே ஏற்றுக்கொண்டு பலன் கொடுப்பதால், அவனது திருவடியில் பூசை செய்வதே சிரேஷ்டமான கன்மம். முதல்வனது திருவடியை மறந்து செய்யும் அறங்களெல்லாம் பிரயோசனமற்றவை. ஆதலால் முதல்வன் அருளிச்செய்த வேதாகம விதியில் நின்று நடத்தலே மேலான தன்மம் என்று சொல்லப்படும். அம்முதல்வன் தனக்கொரு விருப்பும் வெறுப்பும் இல்லாதவனாயினும், தான் சொன்ன வேதாகமத்தின்படி பூசை செய்வோர்களுடைய பக்தியை மேற்கொண்டு பக்தர்கள் வேண்டிய போக

மோக்ஷங்களைக் கொடுப்பவனுதலால் நீயும் முதல்வனையே வழிபடுவாயாக.

**ஞானம்பிகை.**—கர்த்தா எவ்விடத்தும் நிறைந்து நிற்கின்றுராத லால் அவரை எவ்விதம் பூசிக்கவேண்டும்?

**பிரசங்கியார்.**—முதல்வன், திருக்கோவிலிலிருக்கும் திருவுருவத்தையும், அடியார்கள் தாங்கிய திருவேடத்தையும் ஆதாரமாகக் கொண்டு நின்று, ஆன்மாக்கள் செய்யும் பூசையை ஏற்று அவர்களுக்கு அருள் செய்வான். அவனை இருதய கமலத்தில் சிந்திப்பார்களாயின், அதுவே யோக பூசை சமாதி ஞானபூசையுமாகும். ஆகையால் இப்படி ஆராய்ந்து அறியப்பட்ட கர்த்தாவை நாள்தோறும் பக்தியுடனே பூசிப்பாயாக. கர்த்தாவைத் தியானித்து வழிபடும் அடியார்கள் செய்யும் பாவங்களெல்லாம் புண்ணியமாகும். கர்த்தாவிடத்தில் அன்பில்லாதவர்கள் செய்யும் புண்ணியங்களெல்லாம் பாவமாய் முடியும். முன்னெருகால் பிரம்மாவினுடைய புத்திரனும், வரப்பிரஸாதத்தையுடையவனுன தக்கன் செய்த பெரிய வேள்வியானது குற்றமாய்விட்டது. மனிதரில் கொஞ்ச வயதுடைய சிறு பிள்ளை சண்டேஸ்வர நாயனூர் செய்த மஹா பாதகமும் புண்ணியமாய்விட்டது. ஆனதால் முதல்வன் வாக்காகிய வேதாகமங்களில் விதித்தபடி நடவாதவர்களை நரகத்தில் துன்பமடையச் செய்து வேதாகமங்களில் சொல்லியதில் எதை எதைச் செய்தார்களோ எதை எதை விட்டு விட்டார்களோ அதற்குத் தக்கவிதம் செல்வமும், சுவர்க்கமும், பரமுத்தியையுங் கொடுப்பான். எழுவகையில் தோன்றும் ஆன்மாக்களுக்குப் புண்ணிய பாவத்துக் கீடாக ஸுகதுக்கங்கள் இறைவன் ஆணையால் வந்து பொருந்தா நிற்கும். அதை விளங்கச் சொல்ல வேண்டுமாயின், உலகத்துள்ள அரசன் தனதாக்கினையால் வேதத்தின் வழியாகிய மனு முதலிய ஸ்மிருதிகளில் கூறியவிதம் நடக்கவேண்டுமென்று

தன் குடிகளுக்கு ஆக்கியாபித்து அவ்விதம் நடக்கிறவர்களைப் பாதுகாப்பான். நடக்காமல் தீத்தொழில்களைச் செய்வோரைத் தண்டித்துச் சிறையில் வைப்பான். அவனுடைய ஆக்கிஞசக்தியைப் பலரிடத்தும் கொடுத்துத் தனது ஆக்கிஞசக்தி கெடாமல் அரசாளுவான். இவ்விதம் சொல்லப்பட்ட அரசனுடைய ஆக்கினையைப் போன்றதே இறைவனுடைய ஆக்கினையும் என்றறிவாயாக.

**ஞானம்பிகை.**—அதை நன்றாய் விளக்கவேண்டும்.

**பிரசங்கியார்.**—இவ்வுலகத்திலுள்ளவர்கள் அரும் பாவங்களைச் செய்தால், அரசன், அவர்களைப் பொறுக்கமுடியாத கொடிய தண்டனை செய்து, "நீ இவ்விதமான குற்றத்தைச் செய்தாய், ஆனதால் உனக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. மீண்டும் இவ்வித குற்றங்களைச் செய்வாயானால் இன்னம் இதைவிடக் கொடிய தண்டனையை அடைவாய்" என்று பயமுறுத்தி, அவன் குற்றத்திற்காகத் துன்பத்தை அனுபவிக்கச் செய்து அதைத் தீர்ப்பான். அரசனுக்கினைக்குப் பயந்து அரசன் சொல்லியவிதம் நடப்பவர்கள் உலகத்தில் பிரத்தியக்ஷமாகச் சிறைச்சாலையில் அனுபவிக்கும் தண்டனையைத் தாங்கள் அடையக் காரணமில்லாமல் போகுமல்லவா? இறைவன் அருளிச்செய்த வேதாகமத்தின் வழியில் நில்லாதவர்களை இட்டுவைக்கிற நரகமும் இதைப் போன்றதே! இறைவன் ஆன்மாக்களை அருளுமுறைமையே அரசனும் செய்து காண்பிக்கிறான். இறைவனும் ஆன்மாக்கள்மேல் வைத்த காருண்ணியத்தால் அருளிச்செய்த வேதாகமங்களில் விதித்ததைச் செய்யாமல் தன்மமல்லாதவைகளைச் செய்கிறவர்களை இருள் நிறைந்திருக்கும் இடத்திலுள்ள நரகவேதனையைக் கொடுத்துப் பெரிய பாவங்களைப் போக்குவன். அந்த வேதாகமங்களில் கூறியவண்ணம் புண்ணியத்துக் கேதுவானதைச்

செய்து அதிக புண்ணியத்தைத் தேடிக்கொண்டவர்களைப் போகத்துக் கேதுவாகிய எல்லாப் பொருள்களையுங் கொண்ட சுவர்க்க முதலிய போகங்களைப் புசிக்கச் செய்வான். ஆன்மாக்களைப் பற்றியிருக்கும் மலநோய்களைத் தீர்க்கும் இறைவனை வைத்தியநாதன் என்றும் சொல்லுவார்கள். ஏனெனில் உலகத்தில், தேகத்திலுள்ள பிணிகளைத் தீர்க்கிறவர்களை வைத்தியரென அழைக்கிறோம். தேகத்தையும் அதனுள்ளிருக்கும் ஆன்மாவையும் பற்றியிருக்கும் நோயையும் கண்டிக்கும் சக்தியிருப்பவனை வைத்தியநாதனென்று சொல்லுகிறோம். வாகட சாஸ்திரத்தின் பிரகாரம் இன்னின்ன பதார்த்தங்களை இன்னின்ன காலத்தில் சாப்பிடவேண்டும். இன்னின்னது சாப்பிட்டால் இன்னினன நோய் உண்டாகும் என்று வைத்தியன் சொல்லியதைக் கேட்டு நடப்பவர்களுக்குப் பிணிகள் வரமாட்டா. அவன் சொல்லியதைக் கேட்காமல், நோய்களை உண்டாக்குமென்றதைச் சாப்பிட்டு நோய்களை உண்டாக்கி வருத்தப்பட்டாலும், ஔடதங் கொடுத்து அப்பிணிகளைத் தீர்ப்பான். அதுபோல வேதாகமங்களை அருளிச்செய்த இறைவன் ஆன்மாக்கள் தேடிக்கொண்ட இருவினைகளுக்குத் தக்கவாறு ஸுகதுக்கங்களைக் கொடுத்துப் புசிப்பிக்கச் செய்து இருவினைகளைத் தொலைப்பான். இன்பதுன்பம் எவ்விதம் கொடுப்பானெனில், ஒருவனுக்குக் கையில் கட்டியொன்று உண்டாக வைத்தியன் அன்போடு வார்த்தையாடி நோயாளி அதிகம் துன்பப்பட கத்தியால் அக்கட்டியைக் கீறி குணமாக்குவான். மற்றொருவனுக்குத் தேகமெலிந்து நடக்கச சக்தியற்றபொழுது அப்பிணியாளனுக்கு மதுரமாகிய ஔடதமும் நல்ல உணவும் கொடுத்து குணப்படுத்துகிறான். இதுபோலவே இறைவனும் ஆன்மாக்களுக்கு ஸுகதுக்கங்களைக் கொடுத்து அவர்களுடைய இருவினைகளையும் நீக்குவன்.

**ஞானம்பிகை.**—இவ்விதம் கன்மத்தின் பலனைப் புசித்துச் சரீரம் போனால், அதன்பின் அனுபவிப்பது எந்தத்தேகம் ?

**பிரசங்கியார்.**—ஆன்மாக்கள் செய்த இருவினைக் கீடாக எடுத்த பஞ்சபூத பரிணாமமான தூலதேகம் விட்டு நீங்கினால், தூலதேகத்தோடு அழியாமல் நிலைபெற்றுள்ள சூக்ஷ்ம சரீரந்தானே அனுபவிக்கிறதற்கு ஒரு தேகமாகி சுகதுக்கங்களெல்லாம் இறைவனுடைய ஆக்கினைசத்தியால் சுவர்க்கத்திலும் நரகத்திலும் அனுபவித்து முடிந்தபின் மீண்டும் மீந்திருக்கும் கன்மத்தைப் புசிக்கத்தக்கதாக சூக்ஷ்ம தேகத்தோடு மேகமண்டலத்தை யடைந்து, அவ்விடத்தில் நின்று மழைத்தாரையோடு நிலத்தை யடைந்து நெல் முதலிய பயிரோடு கலந்து நின்று, அவைகள் உணவான பொழுது அவைகளோடு கூடித் தந்தை வயிற்றிலும் தாய்வயிற்றிலும் கருவாய் நின்று தூலதேகம் அடையும். ஆன்மாக்கள் கன்மத்துக்குத் தக்கவிதம் தாம் கொண்டிருக்கும் உடல் விடுமுன் வேறோருடலைப் பற்றிக் கொண்டு சாணளப்பான் புழுவைப்போல இந்த உடலை விட்டாலும் விடும். கன்மம் பக்குவப்படாமலிருந்தால் ஒரு பிறவியிலும சென்று பொருந்தாமல் பாவமிகுதியால் கல்போல் கிடந்து, இவ்விதம் கிடக்கவேண்டிய காலம் நீங்கவும் பாவத்தின் பலன் பரிபக்குவமானால் அந்நிமிஷமே கொடிய நரகில் வீழ்ந்து அதிலுள்ள துன்பத்தை அனுபவித்து, மீண்டும் கன்மங்களுக்குத் தக்க விதம் உடலெடுக்கும்.

**ஞானம்பிகை.**—பஞ்சபூத பரிணாம சரீரத்தைவிட்டு சூக்ஷ்ம தேகத்தோடு போகிறதெவ்விதம் ?

**பிரசங்கியார்.**—பாம்பு தோலுரித்துப் போவது போலும், முட்டையில் சனித்த பறவை பறந்து போவதுபோலவும், பரகாயப்பிரவேசம் பண்ணுகிறவர்கள் தங்கள் தேகத்தை விட்டுப் போகிறது போலவும் என்றறிவாயாக.

**ஞானம்பிகை.**—ஆன்மா ஒருடலைவிட்டு வேறொருடலைப்

பெறும்பொழுது முன்னிருந்த அறிவோடு போகுமா? அந்த அறிவில்லாமல் போகுமா ?

பிரசங்கியார்.—கனவு காண்கிறவன் நனவை மறந்தால் போல ஸூக்ஷ்மதேகத்தோடு போமென்பதே சாத்திரக்கருத்து.

ஞானம்பிகை.—கன்மம் என்பதென்ன ?

பிரசங்கியார்.—கன்மம் என்றால் வினை. அது பாவ புண்ணிய மென்று இருவிதமாயும், அவையே சஞ்சிதம், பிராரத்து வம், ஆகாமியம் என்று மூவிதமாயும், இன்னும் அனந்த விதமாயுமிருக்கும். கன்மமானது இருபயனும் தந்து முன் ஜனனங்களிற் செய்த இதாகிதங்கள் இந்த ஜனனத்துக்கு ஸுகதுக்கங்களையும் உண்டாக்குவதாய், மீண்டும் இந்த ஸுகக்கங்களைப் புசிக்கிற இடத்திலே பிரியாப் பிரியங் களாலும் அதனாலுண்டாகிய ஸுகதுக்கங்களாலும், இந்த முறைமையினால் கன்மம் என்பது ஒன்றுண்டென்று ஆராராய்ந்தறியத் தக்கவர்களுக்கு அறியப்படுவதுமாயும், அநாதியே ஆன்மாவுக்குண்டாகிய மூன்று மலங்களிலே ஒன்றாயும், ஆணவமலம்போல் அந்தக் கன்மமலமும் அநாதி யென்னும்படித் தோற்றுவித்துக் காமியமலமெனப் பெயரையும் கொண்டிருக்கும்.

ஞானம்பிகை.—இம்மையிலே செய்த கன்மம் இம்மையிலே அனுபவித்து அழிந்துபோக அதை அநாதியென்று எவ் விதம் சொல்லக்கூடும் ?

பிரசங்கியார்.—புண்ணிய பாவங்களிரண்டும் ஆன்மா உள்ள அன்றே ஸூக்ஷ்மமாய் உள்ளதால் அநாதியென்றும் இந்தப்புண்ணிய பாவங்கள் ஆன்மாக்கள் செய்கையினா லே தோற்றப்படுகிறதால் ஆதியென்றும் சொல்லலாம்.

ஞானம்பிகை.—தோன்றியது அழியாதோ ?

பிரசங்கியார்.—புசித்துத் தொலைந்து விடுகிறதால் அதற்கு அந்தம் உண்டென்று சொல்லப்படும். மலங்களுக்குக் காரணமாயிருக்கிற ஆணவ மலத்தைப் பொருந்தி மாயையி

விருந்து உண்டான தனுகரண, புவன, போகங்களையும் ஆன்மாக்களையுங் கூட்டிக் கட்டிடுவதாய்த் தனது காரிய வேறுபாட்டுக் கேற்கப் பலவேறு வகைப்பட்ட பிறவி களைத் தோற்றுவித்து ஸூக்ஷ்மரூபமாய்த் தத்துவங்களைப் பொருந்தி நின்று இறைவனுடைய ஆக்கிஞசத்தியால் காரியப் படும்.

ஞானம்பிகை.—தாங்கள் சொல்லிவந்ததை யோசித்துப்பார்த் தால், நிற்பன நடப்பன முதலிய எண்பத்து நான்கு நூறாயிரம்பிறவி பேதங்களெல்லாம் தத்தம் வினைக்கீடாக இறந்து மீண்டு பிறந்தாலும், மரம் மரமாகவும், மாடு மா டாகவும், மனிதர் மனிதராகவுந்தானே பிறப்பார்கள். மரம் மாடாகவும், மாடுமனிதனாகவும் அச்சுமாறிப் பிறக்க மாட்டார்களல்லவா ?

பிரசங்கியார்.—இவ்வுலகத்தில் ஒருவன் புண்ணியம் செய்து அதன் பலனைச் சுவர்க்கத்தில் புசிக்கவேண்டுமாயின், சுவர் க்கலோகத்தில் தேவனாய்ப் பிறந்து புசிப்பானா ? அல்லது நரனாயிருந்து புசிப்பானா ? தேவலோகத்திலுள்ள போகங் களை நரர்களாகவே யிருந்து புசிப்பர்களென்றால், தேவ லோகம் பூலோகமாக வேண்டும். மானிட ரூபத்தை விட்டு தேவர்களாய்த் தேவலோகத்தில் போகங்களை அனுப விப்பாரென்றால் அச்சு மாறவேண்டியதுதானே ! ஆன தால் தேவர்களாய்ப் பிறந்து தேவலோகத்தின் போகங் களை அனுபவித்து இவ்வுலகத்தில் வந்து பிறந்தால், அவர் கள் தேவர்களாய் வந்து பிறவாமல் மானிடராகவே வந்து பிறப்பார்கள். எனவே ஆன்மாக்கள் கன்மத்துக் கீடாக எல்லாவித பிறவியிலும் அச்சு மாறிப் பிறப்பார்கள். மயிர்க் குட்டி (கம்பளிப்பூசி) அதன் பழைய வடிவு நீங்கி வண்டு களாவதையும், பசசைப் புழுக்கள் குளவியாவதையும் பிர த்தியக்ஷமாகக் கண்டிருக்கிறோம். ஆனதால் கன்மங்களுக் கீடாகப் பலவித பிறவிகளில் உதிக்குமென்று எல்லா ஸம

யமும் ஒப்புக்கொண்டிருப்பதால், நீ இவ்விதம் சொல்வ தற்குக் காரணம் என்ன ? அல்லாமலும் கௌதமர் மனைவி அகலியாதேவி கௌதமர் கொடுத்த சாபத்தால் கல்லா னாள். சிலந்திப்பூச்சி சூரிய வமிசத்தில் சோழராஜனாகப் பிறந்து அரசாண்டது. திருமறைக்காட்டில் (வேதாரணி யத்தில்) திருவிளக்குத் தீண்டிய புண்ணியபலத்தால் எலி எல்லாரும் புகழத்தக்க மாவலியாகப் பிறந்ததே !

**ஞானம்பிகை.**—சிலர் சாபத்தினாலும் வரத்தினாலும் அச்சுமாறி யதைச் சொன்னீரல்லது அவரவர்கள் செய்த கன்மத்தால் அச்சுமாறியதைச் சொல்லாததால், கன்மத்தால் அச்சுமாறு மென்று காணவில்லை !

**பிரசங்கியார்.**—சாபத்தினாலே மாறுதலுக்கும், கன்மத்தினாலே மாறுதலுக்கும், இறைவன் ஸாட்சி பூதவானென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். இறைவனாஞ்ஞையால் கன்மம் ஏதுவாகச் சபிக்கும் பேர் சபித்தாலும், வரங்கொடுக்கும் பேர் வரங்கொடுத்தாலும், அச்சு மாறுதல் முதலிய அனைத்தும் கன்மானுசார முதல்வன் சங்கற்பகாரிய மென்றறிவாயாக. எண்ணிறந்திருக்கிற அந்தந்த பிறவிகள்தோறும் அதற்குத்தகுந்த உலகங்கள்தோறும் இன்னின்னான் இன்ன கன்மம் செய்தான் என்றும், இவன் இன்ன பிறவியில் ஜன்மம் எடுக்கவேண்டு மென்றும், இந்த உலகத்தில் இருக்கவேண்டுமென்றும், இன்ன காலத்தில் இன்னது கூடவேண்டு மென்றும், முறை பிறழாமல் கனமம் ஜடமாகையால் கூடமாட்டாது. ஆன்மா சேதனமாயினும் சுதந்தரஹீனனாதலால் தானே கூட்டிக்கொள்ள மாட்டான். கன்மத்தை ஆன்மாவோடு கூட்டிக் காரியப் படுத்துவது கர்த்தாவின் செயல். கர்த்தா இவையெல்லாம் தானாகவே அறிந்து செய்யத்தக்க வல்லமை யுடையவனாகையால் கன்மங்களுக்குத் தக்கவாறே ஆன்மாக்களை மாறிப் பிறக்கும்படி செய்வான்.

ஞானம்பிகை.—ஆன்மாக்களுக்கு ஸ்தூல உருவைக் கர்த்தா எந்த உபாதானத்திலிருந்து தோறறுவிப்பான் ?

பிரசங்கியார்.—ஸூக்ஷ்ம தேகமே ஸ்தூல தேகத்தைக் கொடுக்கும்.

ஞானம்பிகை.—ஸூக்ஷ்ம தேகமெல்லாம் ஒரே படிவமாய் இருக்குமாதலால், அது கொடுக்கும் தேகமெல்லாம் ஒரே விதமாக வல்லவா இருக்கவேண்டும் ?

பிரசங்கியார்.—ஸூக்ஷ்ம தேகமெல்லாம் ஒரேவிதமாக இருந்தாலும், ஆன்மாக்களுடைய கன்மத்துக்கீடாகப் பலவிதமான தேகங்களைக் கொடுக்கும். எவ்விதமெனில், பொன் ஒன்ருக இருந்தாலும் அதிலிருந்து தட்டான், சங்கிலி, காப்பு, காதணி முதலியவைகளைச் செய்வதுபோல, ஸூக்ஷ்ம தேகத்திலிருந்து வெவ்வேறு உருவங்களையுடைய ஸ்தூலதேகம் உண்டாகிறது கர்த்தாவால் என்று தெரிவாயாக.

ஞானம்பிகை.—ஸூக்ஷ்மதேகத்திலிருந்து ஸ்தூலதேகம் தோன்று மென்ருல், ஸூக்ஷ்மங் கெட்டுத்தானே ஸ்தூலதேகம் தோன்றவேண்டும். மீண்டும் அந்த ஸூக்ஷ்ம தேகத்திலிருந்து பல வடிவுகளும் தோன்றுமென்பதும் எவ்விதம்?

பிரசங்கியார்.—மாயையின் காரியமாகிய ஸூக்ஷ்மதேகம் கெட்டு ஸ்தூல தேகம் தோன்றிடாது.

ஞானம்பிகை.—அவ்விதமாஞல் ஸூக்ஷ்மதேகம் பல உடல்களைச் செய்து வைததுக்கொண்டிருக்குமோ ?

பிரசங்கியார்.—ஸூக்ஷ்மதேகம் ஸ்தூலதேகங்களைப் பண்ணி வைத்திருப்பது மில்லை. அந்தத் தேகாதிகளை உண்டாக்குதறகு யோக்கியமாயிருக்கிற கர்த்தாவின் கிரியா சத்தி காரணமாயிருக்கிற மாயையை அதிட்டித்துக்கொண்டு ஸ்தூல உடலை உண்டாக்கா நிற்கும். ஒரு மரத்

துசரு ஷ்றதியான காலத்தில் அதை வெட்டி யெறிந்த விடத்து அந்த ஸ்தூலமாகிய மரம கெட்டாலும் அம்மரத் திற்குக் காரணமாகிய வேரிருப்பதால் அவ்வேரிலிருந்து பெரிய மரம் உண்டாவது போல், கர்த்தாவினது ஆக் கினையால் ஸூக்ஷ்மதேகததிலிருந்து கன்மத்துக்குத் தக்க விதம் ஸ்தூல தேகம் தோன்றும். ஸூக்ஷ்மதேகமில்லா மல் ஸ்தூலதேகம் உண்டாகாது. ஸூக்ஷ்மமாயிருக்கிற மரகதின் வித்தில் ஸ்தூலமாகிய மரம் தோன்றுவதுபோல் ஸூக்ஷ்மதேகத்திலிருந்தே ஸ்தூல தேகம் உண்டாகும்.

**ஞானம்பிகை.**—ஸூக்ஷ்மமான வித்திலிருந்து ஸ்தூலமாகிய மரம் தோன்றி மரமும் வித்தும் அழிந்து போகிறதால், அப்பொழுது ஸூக்ஷ்மங் கெட்டு ஸ்தூலமாகியும் ஸ்தூலம் அழியுங் காலத்தில் ஸூக்ஷ்மம் ஸ்தூலம் ஆகிய இரண்டும் அழிந்து போகிறதே !

**பிரசங்கியார்.**—ஸூக்ஷ்மத்திலே ஸ்தூலம் தோன்றுகிறதை விளக்க எடுத்துக்காட்டிய உவமை முற்றுவமையல்ல, அதற்கு உவமையாதெனில், சந்திரனுக்குக் காரணமாகிய பிரதான கலையொன்று அழியாமலிருக்கக் காரியக் கலைகள் தோன்றுதலும் ஒடுங்குதலும்போல் காரணமாகிய மாயை அழியாமல் நிற்கக் காரியமான ஸூக்ஷ்மதேகம் ஸ்தூல தேகத்தைக் கொடுக்கும். முடித்துச் சொல்லவேண்டு மானால் பஞ்சபூத பரிணாமமாகிய ஸ்தூலதேகத்துக்கு எட் டுத் தத்துவங்களைக் கொண்ட ஸூக்ஷ்மதேகம் காரணம். (எட்டுத் தத்துவமாவது:—தன்மாத்திரை ஐந்து, மனம், புத்தி, அகங்காரம். சித்தத்தை புத்தியிலொடுக்கி அந்தக் கரணத்தை மூன்றாகக் கொண்டது) ஸூக்ஷ்ம தேகத்துக் குக் காரணம்—மூலப் பிரகிருதி; அதற்குக் காரணம்— அசுத்தமாயை ; சுத்தமாயை அதற்கு மேலாக இருப்பது ; இவைகளுக்கெல்லாம் பரமகாரணமாய் அழியாமல் நிற்பது கர்த்தா ; ஆன்மாவுக்கு இருவினையொப்பும், சத்திநிபாத

மும் (உண்டான காலத்தில் ஆசாரியனாலே உண்மையை அறிந்து, திருவருள் ஞானம் விளங்கியபொழுது மேற் சொன்னவைகளெல்லாம் அந்த ஆன்மாவைப் பற்றாமல் நின்றுவிடும்.

**ஞானம்பிகை.**—ஆன்மாக்களுக்குக் கர்த்தா சரீரங்களைக் கொடுத்து போகங்களைப் புசிக்கச் செய்கிறதால் அவ்வான் மாக்களுக்கு என்ன பிரயோசனம்?

**பிரசங்கியார்.**—இறைவன் செய்யப்பட்ட தொழிலெல்லாம் ஆன்மாக்கள்மேல் வைத்த காருண்யத்தால் செய்கிறா னென்று முன் சொல்லியிருக்கிறேன. ஆன்மாக்களை அநாதியே பற்றியுள்ள மலமாயா கன்மங்களைப் போக்கு தல்பொருட்டுப் பூமி, நரகம், சுவர்க்கம் முதலிய இடங் களைக் கற்பித்து நோய்க்கு ஔடதங் கொடுத்துத்தீர்ப்பது போல், ஆன்மாக்கள் செய்த இருவினைப்பயனை அவ்வவ் விடங்களில் போய் அனுபவிப்பதற்கு ஏதுவான சரீர முத லியவைகளைக் கொடுத்து அனுபவிக்கச் செய்து, கன்ம ஒப்பு வநதபொழுது மேலான மோக்ஷத்தையுங் கொடுத் துப் பேரானந்தப் பெருவாழ்வையும் கொடுப்பான்.

**ஞானம்பிகை.**— ஆன்மாக்களுக்குக் கிடைக்கும் சரீரம், புவனம், போகம், என்று சொல்லப்பட்ட இவைகளெல்லாம் மாயை யின் காரியம். இந்த மாயா மலத்தைக்கொண்டு ஆணவம லத்தைக் கர்த்தா போக்குவான் என்று சொல்லுவ தெவ் விதம்?

**பிரசங்கியார்.**— இதை உனக்கு உவமானத்தால் விளக்கவேண் டும். அழுக்கான கோடி வஸ்திரத்தைச சாணத்தையும் உவர்மண்ணையுங் கூட்டி முன்னிருந்த அழுக்கோடு அழுக்கைச சேர்த்து வஸ்திரத்தின் அழுக்குகள் எல்லா வற்றையும் வண்ணான் போக்குவதுபோல், இறைவனும் மாயாமலத்தை மருந்தாகக்கொண்டு ஆணவமலத்தின் விருத்திகளான நோயைப் போக்குவான்.

**ஞானம்பிகை.**—இவவிதம் சொல்லப்பட்ட அசுத்தமாயையின இலக்கணம என்ன?

**பிரசங்கியார்.**—அது எக்காலத்தும் அழியாததாய், அரூபமாய், எப்பொழுதும் ஒரே தன்மையாய் இருக்கிறதாய், பிரபஞ்சம் தோன்றுதற்கு ஆதாரமாய், அசேதனமாய், எவ்விடத்தும் வியாபகமுடையதாய், மலரகிதனுயிருக்கிற இறைவனுக்குப் பரிக்கிரக சக்தியாய், ஆன்மாக்களுக்கு தனுகரண புவன போகங்களைக் கொடுப்பதாய், ஆன்மாக்களுக்குள்ள மலங்களோடு சேர்ந்து தானொரு மலமாகச் சேர்த்து எண்ணப்படுவதாய், ஆன்மாக்கள் பொய்யை மெய்யாக எண்ணும்படி அவர்களுக்கு மயக்கத்தைச் செய்யத்தகுந்ததாயிருக்கும்.

**ஞானம்பிகை.**—சுத்த மாயையிலிருந்து வாக்குகள் தோன்றுமென்றீர். அசுத்தமாயையிலிருந்து என்னென்ன தோன்றும்?

**பிரசங்கியார்.**—அசுத்தமாயையில் நின்று காலமும், நியதியும், கலையும் ஆகிய மூன்று தத்துவங்களும் தோன்றும். காலதத்துவம் இறந்தகாலமெனவும், நிகழ்காலமெனவும், வருங்காலமெனவும் மூன்றாய், தேகாதி பிரபஞ்சங்களுக்குக் கால எல்லைகளையுண்டாக்கி, கர்த்தாவின் ஆக்கினையால் காலதத்துவம் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தும், நிற்பித்தும், ஒடுக்குவித்தும், இங்ஙனம் மூன்று விதமாகப் பிரபஞ்சத்தை நடத்தும். நியதிதத்துவமானது ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாக வரும் பலன்களைக் காலதத்துவம் வரையறுத்த காலத்தில் ஏறாமலும் குறையாமலும் இன்னின்ன பலனை இன்னின்ன காலத்தில் புசிக்க வேண்டுமென்ற அளவை ஏற்படுத்திவிடும். கலைதத்துவமானது ஆன்மாவை அநாதியே மறைத்திருக்கும் ஆணவமலத்தின் மறைப்பை அவரவர்கள் செய்த கன்மத்துக்கீடாகக் கிஞ்சித்து நீக்கி ஆன்மகிரியா சத்தியை விளங்கப்பண்ணி வினைக்கீடாக வரும் போகத்தைப் புசிக்கத் தூண்டும். அக்கலைதத்துவத்திலிருந்து வித்தியாதத்துவம் தோன்றி, ஆன்மாவுக்கறிவை உண்டாக்கா நிற்

கும். வித்தியாதத்துவத்திலிருந்து அராகதத்துவம் தோன்றிக் கன்மங்களுக்கீடாக போகத்தில் இசசையை உண்டாக்கும். காலதத்துவம், வித்தியாதத்துவம், அராகதத்துவம், இவை மூன்றும் இச்சா ஞானக்கிரியைகள் மூன்றையும் ஆன்மாக்களிடத்திலே இறைவன சத்திகள் கூட்டிவைத்த பொழுது, ஆன்மா தனக்குள்ள இச்சா சத்தியையும், ஞான சத்தியையும், கிரியா சத்தியையும் தனக்குடம்பாகப் பொருந்தி, கன்மத்துக்கீடாக விடயங்களை அறுதியிட்டுப் புசிக்கத்தக்கதாக வருகிற ஸமயம் புருடனென்றும் புருடதத்துவமென்ற பேருமாய்ப் பொதுமையில் நிற்பன்.

**ஞானம்பிகை.**—ஆன்மா ஐந்து தத்துவங்களைப் பொருந்திய ஸமயம் புருடதத்துவமென்றதும் ஆன்மா அப்பொழுது புருடனென்ற பேரை அடைகிறான் என்றதும் விளங்கவில்லை. தத்துவங்கள் பொருந்துமுன் அவன் புருடனல்லவா ?

**பிரசங்கியார்.**—அநாதியே ஆன்மாவை ஆணவமலம் பந்தித்து நிற்கையில் ஆன்மா ஒரு கல்லைப்போல் கிடக்கும். அதாவது பரிச உணர்ச்சியும் இல்லாமலிருக்கும் அவ்விதம் இருக்கும் ஆன்மா செய்திருக்கும் கன்மபலனை அனுபவிக்கவே தத்துவங்கள் பொருந்தி ஆன்மாவுக்கு உணர்ச்சி உண்டாகச செய்கிறது. அதை ஓர் உவமானத்தால், காட்டுகிறேன். ஒரு கடைக்காரன, "எனக்கோர் ஆள் வேண்டும். அவன் காலை ஏழுமணிக்கு வந்து பதினொரு மணிக்குப் போயப் பன்னிரண்டு மணிக்குவந்து இரவு ஒன்பதுமணி பரியந்தம் இருக்கவேண்டும்" என்றும் (இங்குக் காலத்தை வரையறுத்தது போல் காலதத்துவம் காலத்தை வரையறுக்கும்) "அவ்விதம் காலை ஏழுமணிக்கு வந்து கடையைத் திறந்து கடையிலிருந்து வியாபாரம் செய்துகொண்டிருந்து அரையணுவுக்குப் பலகாரம் வாங்கிச் சாப்பிடவேண்டும். பதினொரு மணிக்குப் போய்ச்

சாப்பிட்டு ஒரு மணி நேரத்துக்குள் வந்து தண்டலுக்குப் போய் மூன்று மணிக்குள் வந்து அரையணவுக்குத் தின் பண்டங்கள் வாங்கிச் சாப்பிட்டுக் கடையிலிருந்து விற்க வேண்டும். இரவு எட்டு மணிக்குக் கடையை மூடிக் கணக் கெழுதிவிட்டுப் போகவேண்டும்'' என்றும, (இங்கு இன் னின்ன காலத்தில் இன்னதைச் செய்யக் குறிப்பிப்பது போல் நியதிதத்துவம காலதத்துவம் வரையறுதத காலத் தில் அனுபவிக்கவேண்டிய ஸுகதுக்கங்களை வரையறுத்து வைக்கும், விளம்பரம் செய்தான். கடைக்கு ஆள்வேண் டும் என்றதை அறிந்த ஒருவன், வேலையில்லாமலிருக்கும் ஒருவனை அவ்வேலையை ஒப்புக்கொள்ளச் சொலலி அவ னைத் தூண்டினன். (இங்கு கலைதத்துவம் ஆணவமலத் தால் மறைப்புண்டிருக்கும் ஆன்மாவின் கிரியா சத்தியைத் தோற்றுவிக்கும்). தொழிலிலலாமலிருந்தவன் நாம் வேலை யில் அமராமலிருப்பது நன்றல்லவென்று நினைத்து (இங்கு வித்தை தத்துவம் ஆன்மாவுக்கு அறிவை உண்டாக்கும்) நாம் வேலையை ஒப்புக்கொண்டால் இத்தனை ரூபா சம்ப ளம் கிடைக்கும் என்று பணததின்மேல் அவனுக் கிச்சை யுண்டாகி வேலையை ஒப்புக்கொண்டு கடையில் உட்கார்ந் தான். (இங்கு அராக தத்துவம் ஆன்மாவுக் கிச்சையை உண்டாக்கும்). அவன் கடையில் உட்கார்ந்தவுடன் கடைக்கு வருகிறவர்கள் அவனைக் கடைக்காரன் என், றழைக்கிறார்கள். (இங்குக் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், என்ற தத்துவங்கள் பொருந்தியபொழுது) அவன் கடையிலிருந்து விற்க நேரிட்ட ஸமயம் கடை விற்கவந்தவ னென்பதுபோல் (முன் குறிப்பித்த தத்து வங்கள் பொருந்தி வினைப்பயனை நுகரவருகிறபொழுது புருடதத்துவமென்றும்) அவன் கடையிலிருந்து வியா பாரம் செய்யும்பொழுது கடைககாரன் என்றது போல் (ஆன்மா புருடன் என்ற பெயரை அடைகிறுன்).

**ஞானம்பிகை.**—அசுத்த மாயையிலிருந்து தோன்றியதைச்

சொன்னீர்கள். பிரகிருதியிலிருந்து தோன்றுவதை விளக்க வேண்டும்.

**பிரசங்கியார்.**—முன்சொன்ன கலைதத்துவத்திலிருந்து குணம் சொரூபமாக உடைய மூலப்பிரகிருதி, அதாவது காரிய மாயை, அரும்பினிடத்தில் மணம் எவ்விதம் அடங்கியிருக்கிறதோ அவ்விதம் குணங்களைத் தன்னுள் அடக்கித் தோன்றும். அந்த மூலப்பிரகிருதி (காரியமாயை) யிலிருந்து சித்ததத்துவம் (குணம்) தோன்றும். அந்த குணம் மூன்று. அவையாவன:—சாத்துவிகம், இராசதம், தாமதம் எனவும், மீண்டும், சாத்துவிகத்தில சாத்துவிகம், சாத்துவிகத்தில் இராசதம், சாத்துவிகத்தில் தாமதம்; இராசதத்தில் சாத்துவிகம், இராசதத்தில் இராசதம், இராசதத்தில் தாமதம் ;; தாமதத்தில் சாத்துவிகம், தாமதத்தில் இராசதம், தாமதத்தில் தாமதம்; எனவும், இவ்விதம ஒவ்வொன்றும் மும்மூன்றாய் ஒன்பதுகுணம் உண்டாகாநிற்கும். (சாத்துவிகத்தில் சாத்துவிகம் என்றால் மற்ற இரண்டு குணமும் அடங்கின்றதென அறிக). இந்த முக்குணமே பிரகிருதி முதல பூமியீறான தத்துவங்கள்தோறும் சாத்வாதி குணங்களால் ஒன்றேறியும் இரண்டு குறைந்தும் வியாபித்திருக்கும். ஆதலால் இந்தக் குணங்களை வடிவாக உடைய ஆன்மா ஏற்றக்குறைச்சலால் ஒன்பதோடு நில்லாமல் எண்ணிறந்த குணங்களுண்டாகும். அவ்விதமான குணங்களால் உண்டாகும் பிரயோசனங்களாகிய (சாத்துவிகத்தால் மோக்ஷமும். இராசதத்தால் சுவர்க்கமும், தாமதத்தால் நரகமுமாகிய இமமூவிடத்திலுண்டாகிய) போகங்களைப் புசிப்பதற்குப் பந்தமாய நிற்கும்.

**ஞானம்பிகை.**—குணங்கள் ஒன்பதென்றபின் எண்ணிறந்த குணங்களாகு மென்பது எவ்விதம் ?

**பிரசங்கியார்.**—இதை ஓர் உபமானத்தால் காட்டுகிறேன். புளிப்பு, உப்பு, காரம் என்ற மூன்றையுங் கூட்டும்பொழுது, காரத்தை யதிகமாகவும் உப்பை யதிகமாகவுங்

குறைத்தும் புளிப்பைச் சேர்த்தும் உருசிபார்த்து மீண்டும் குறைந்திருப்பதைச் சேர்க்கும்பொழுது, அளவு தெரியாமல் சேர்த்துச் சேர்த்துப் பார்ப்பதால் எத்தனை வகையான உருசி உண்டாகும். இதுபோல் முந்திரி அரைக்காணி என்ற எண்ணோடு குணங்கள் சேருமானால் எண்ணிறந்த குணங்களாக வேண்டியதே ! இவ்வித குணசொரூபகான மூலப்பிரகிருதியிலிருந்து சித்ததத்துவம் (குண தத்துவம்) தோன்றும். அவ்விதம் தோன்றிய குணம் (முக்குணமும் சமநிலையாக இருப்பது) சித்தமென்றறிக அச்சித்தம் பல விடயங்களைச் சிந்திக்கும். அந்தச் சித்த தத்துவத்திலிருந்து புத்தி தத்துவம் தோன்றி (புத்தி தத்துவமென்பது சாத்துவிகம் மேலிட்டிருக்கும் அவதரம்) புண்ணிய பாவங்களை அடைந்து சித்தம் சிந்தித்த பொருள்களை அறுதியிட்டறிந்து புசிப்பதும் செய்து ஆன்மாவுக் குண்டாக்கப்பட்ட ஸுகதுக்கம் மோகப் பிரமிடபிலே மடக்கத்தை யுடையதாய் ஞானக்கிரியைகளைப் பொருந்தி ஜீவியாநிற்கும்.

ஞானம்பிகை.—முக்குணத்தில் தொழில் யாது ?

**பிரசங்கியார்.**— நாம் முன் சொன்னதுபோல் முக்குணம்தனித்திருக்காமல் இரண்டை யடக்கி ஒன்று மேலிட்டிருக்கும் ஆனதால் சாத்துவிகம் என்றால் இராசதமும் தாமதமும் அடங்கி சாத்துவிகம் மேலிட்ட அவதரம். ஒவ்வொன்றையும் அவ்விதமே எண்ணவேண்டும்.

சாத்துவிகம்.—சாதிநெறி நிற்றல், பெரியோரைப் பேணல், கற்றறிவுடைமை, இனியவை, கூறல், தற்புகழாமை, உள்ளதே வருமென மகிழ்ந்திருத்தல், நடுநிலைமை, சுத்தநியமம், பொறை, கடைப்பிடி, பிறருக்கு நன்மையைச் செயதல், இந்திரலோகாதிகளில் வாஞ்சை, பிறா தன்னைப் புகழுங்கால் தான் தனை இகழ்தல். அடக்கமுடைமை, தன்பாலிரந்தார்க்கிரங்கல் எனப் பதினைந்து விதமாம்.

இராசதம்.—சூரனுகை, குரூரமுடைமை, ஊக்கமுடைமை, மானமுடைமை, வயிராக்கியம், பலம், வன்கண்மை, போகியாதல், இடம்பத்தனமான கூடாஒழுக்கம் என ஒன்பதாம்.

தாமதம்—.அழத்தகாதனவற்றிற்சமுகை, கல்வியில் ஆதரவறுகை, இகழ்ந்தாரைச் சேர்ந்து வாழ்தல், கோளுரை, மமதை, பேருறக்கம், நன்மை செய்தற் கிளைக்கை, குலம் குணம் ஈகை இரக்கங்களால் தனக்கு யாரும் இணையில்லை என்கை, திருடுதல் என ஒன்பதாம்.

முன் சொன்ன புத்தி தத்துவத்திலிருந்து அகங்கார தத்துவம் தோன்றி யானென தென்னு மமதைக்கு மூலமாய், இவ்விடத்து என்னோடொப்பார் யாவரென்றும் யான் என்றும் என்னதென்றும் அகங்கரித்து, ஆன்மாக்களை விட்டு நீங்காமலிருக்கும். அவ்வகங்காரம் தாமதகுண மிகுதியால் பூதாதி அகங்காரமெனவும், இராசத மிகுதியால் வைகாரி அகங்கார மெனவும், சாத்விக மிகுதியால் தைசத அகங்கார மெனவும் மூன்று விதமாய விற்குமென்று பெரியோர் சொல்லுவா. முடிவாகச் சொல்லிய தைசத அகங்காரத்திலிருந்து மன தத்துவம் தோன்றி இந்திரியங்கள் விடயங்களைப் புசிக்க வருமவதரத்து அவைகளுக்கு முற்பட்டுச் சென்று பொருந்தி விளைப்பதும் செய்து பின் அதன்கண் ஐயப்படாவிற்கும். இந்த மனம் அசலமெனவும் இருவிதமாம்.

சலமாவது.—உள்ளே வின்று சங்கற்ப விகற்பங்களைப் பண்ணும்.

அசலமாவது.—புறம்பே இந்திரியத்துவாரங்களினுலே புறப்பட்டுவின்று பிரயோசனத்தோடே இந்திரியங்களுடன் சம்பந்தம் பண்ணிவிற்கும்.

ஆன்மா இந்திரியங்களோடு கூடி விற்பினும் மனது ஒரு விடயத்திலே பொருந்தாத காலத்து இந்திரியங்கள் காரியப்படா. ஆதலால் மனதே பிரதானமாயிற்றென்றறிக.

தைசத அகங்காரத்தில் மனம் தோன்றியதல்லாமல், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஞானேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும் ; முன்சொன்ன வைகரி அகங்காரத்தில் வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் முதலிய கருமேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும என்று பெரியோர் சொல்லுவர்.

**ஞானம்பிகை.**—மெய், வாய், கண், மூக்கு, செவி என்றவைகளை ஞானேந்திரியங்களென்று சொல்லுவானேன் ?

**பிரசங்கியார்.**—சுரோத்திரம் (செவி) துவக்கு (மெய்) சக்ஷு (கண்) சிங்குவை (வாய் அதாவது நாக்கு) ஆக்கிராணம் (மூக்கு) முதலாகிய ஐந்து இந்திரியங்களுக்கும் ஒவ்வொன்றை அறியுங்குணம் இருப்பதால் இவைகளை ஞானேந்திரியங்களென்று சொல்லுவர். இவ்விந்திரியங்களுக்கு முறையே சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் என்ற பூதகுணம் ஐந்தையும் விஷயமாகச் சொல்வர். சுரோத்திரம் தேகத்தில் ஆகாசமிடமாக நின்று சத்தத்தை அறியும் ; துவக்கானது தேகத்தில் வாயுமிடமாக நின்று பரிசத்தையறியும்; கண்ணானது சரீரத்திலே அக்கினியிடமாக நின்று ரூபத்தைக்காணும்; நாக்கானது சரீரத்திலே அப்புவிடமாக நின்று ரஸத்தை அறியும் ; நாசியானது சரீரத்திலே பிருதிவியிடமாக நின்று கந்தத்தை அறியும. வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் எனக்கூறிய ஐந்தினையும் பெரியோர் முன்னமே தானே கருமேந்திரியங்களென்று நிச்சயித்துப் பிரித்தனர். இவைகளில் வாக்கானது வசனத்தையும், பாதமானது கமனத்தையும், பாணியானது தானத்தையும், பாயுருவானது விசர்க்கத்தையும், உபத்தமானது ஆனந்தத்தையும் செயயுமென்று சொன்னார்கள். இவைகள் ஞானேந்திரியங்களைப் போல் அறிவில்லாமல் தொழில் செய்யுங் கருவிகளாதலால் இவைகள் கருமேந்திரியங்களெனச சொல்லப்பட்டன. வாக்கு, பாதம், பாணி,

பாயுரு, உபத்தம் என்று சொல்லப்பட்ட கருமேந்திரியங்கள் ஐந்தும்; சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, ஆக்கிராணம் என்று சொல்லப்பட்ட ஞானேந்திரியங்கள் ஐந்தும், ஆக இப்பத்தும் புறக்கருவிகளாகும். முன் சொன்ன இந்திரியங்களைப்போல் விட்டுப் பற்றுமல் ஆன்மாவைப் பிரிவற நிற்கிற மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் நான்கும் தேகத்துள்ளே நின்று அறிகிற உட்கரணமாகும். தற்போதமற்று ஆராய்பவர் அராகம், வித்தை, கலை, நியதி, காலம், உட்கருவிகளாகிய அந்தக்கரணங்களுக்கு உட்கருவி யாகுமென்று சொல்லுவர். ஆசையால் ஆன்மா மாயையின் வயிற்றில் இக்கருவிகளால் பந்திக்கப்பட்டு வாழும்.

ஞானம்பிகை.—பூதாதி அகங்காரத்திலிருந்து என்ன தோன்றும் ?

பிரசங்கியார்.—பூதாதி அகங்காரத்தினின்று சத்தம், பரிசம் ரூபம், இரசம், கந்தம் என்ற தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றும். இந்த சத்தாதிகள் ஐந்தும் காரணமாய் ஆன்மாக்களுக்குப் புசிப்பிலே சிநேகத்தை உண்டாக்குகிற ஞானவிந்திரியங்கள் ஐந்துக்கும் விளங்கத்தக்க அறிவு உண்டாம். ஆசையே வடிவாயுள்ள மனம், புத்தி, அகங்காரம் இம்மூன்றுடன் தன் மாத்திரை ஐந்தும், ஆக எட்டும் ஆன்மாக்களுக்குப் புரியஷ்ட சரீரமாகும்.

ஞானம்பிகை.—பஞ்சபூதங்கள் எதிலிருந்து தோன்றும் ?

பிரசங்கியார்.—இவ்விதம் சொல்லிய தன் மாத்திரைகள் ஐந்தினும் முதற்கண் சத்தத்தில் ஆகாசமும், பரிசத்தில் வாயுவும், ரூபத்தில் அக்கினியும், இரசத்தில் அப்புவும், கந்தத்தில் பூமியும், ஆக ஐந்து பூதங்களும் தோன்றும். இவற்றுள் ஆகாசம் தொடங்கி சத்தமுதலாகிய, குணம் ஒன்றுக் கொன்று ஒரே ஒரு குணம் ஏற்றமாகப் பதினைந்து பொருந்தாநிற்கும். அவை வருமாறு:—

ஆகாசத்துக்குச் சத்தம் ஒன்றமே இயற்கையான குணம். இந்தச் சத்தம் பிரதித்தொனி ; தூலமன்று. வாயுவுக்கு சத்தம் சேர்க்கையான குணம் : பரிசம் இயற்கையான குணம். அக்கினிக்கு சத்தமும் பரிசமும் சேர்க்கையான குணம் : ரூபம் இயற்கையான குணம். அப்புவுக்கு, சத்தம் பரிசம் ரூபம் சேர்க்கையான குணம் : இரசம் இயற்கையான குணம். பூமிக்கு சத்தம், பரிசம், ரூபம், இரசம் சேர்க்கையான குணம் : கந்தம் இயற்கையான குணம்.

**ஞானும்பிகை.**—ஆகாசம் ஒன்றக்குமே சத்தம். மற்ற நான்கு பூதங்களுக்குச சத்தமில்லை யென்று சொல்லுகிறீர்களே ?

**பிரசங்கியார்.**—ஆகாசத்துக்கு எதிரொலியும், வாயுவுக்கு சசசச வான ஒலியும் அப்புவுக்கு சல சலாதியான ஒலியும், தேயுவுக்கு தம தம வான ஒலியும், பிருதிவிக்குக் கட கடாதியான ஒலியும், இப்படி ஐந்துக்கும சத்தம் கேட்கப்படுகையால், பஞ்ச பூதங்களுககும் சத்தமுண்டென அறிக. ஆனதால் வலிமையுடைய விஷயங்களும பூதங்களும் தேகமும் தேகியுமாயிருக்கிற முறைபோல, விஷயங்கள் தேகியும், பூதங்கள் தேகமுமாம.

**ஞானும்பிகை.**—இப்பூதங்களின் குணம் தொழில் என்ன ?

**பிரசங்கியார்.**—ஆகாசமானது வெளியாய் எல்லாப பூதங்களும் ஜீவிக்கும்படி இடங்கொடுத்து வெளியாயிருக்கும். வெளியாயிருப்பது குணம், இடங்கொடுப்பது தொழில். வாயுவானது சலித்தலுடைத்தாய்ப் பரவிக் கிடக்குமவற்றைத் திரட்டி நிற்கும். சலித்தல் குணம், திரட்டுதல் தொழில். அக்கினியானது கடினத்தை வெப்பமாக்கித் தகித்து ஒன்றுபடச செய்யும். தகித்தல் குணம், ஒன்றுபடச செய்தல் தொழில். அப்புவானது எப்பொழுதும் குளிர்ந்து நின்று திரவியங்களைப் பதஞ்செய்யும். குளிர்ந்திருத்தல் குணம், பதஞ்செய்தல் தொழில். பூமியானது மிகக்கடின முடையதாய் எவற்றையும் தரிக்கும். கடினமாயிருத்தல் குணம்,

தரித்திருக்கல் தொழில். இவ்விதமாகிய பூதங்களின் குணங்களையும் தொழில்களையும் அறிவாயாக.

ஞானம்பிகை.—இந்தப் பூதங்களுக்கு வடிவு, நிறம், அக்கரங்கள் உண்டோ ?

பிரசங்கியார்.— பிருதிவியானது, பொன் நிறமாய் நாற்கோண வடிவாய் லகார பீஜாக்ஷரத்தையும் உடைத்தாயிருக்கும்; அப்புவானது வெண்மையாய் அர்த்த சந்திரபிறை போன்று வகார பீஜாக்ஷரத்தையும் உடைத்தாயிருக்கும் ; அக்கினியானது செம்மையாய் மூன்று கோணமாய் ரகார பீஜாக்ஷரத்தையும் உடைத்தாயிருக்கும் ; ஆகாசமானது, புகைபோன்று வட்டமாய் அகார பீஜாக்ஷரத்தையும் உடைத்தாயிருக்கும். பிருதிவியின் குறி வச்சிராயுதம், பிரமா அதிதேவதை. அப்புவின் குறி தாமரை மலர், விஷ்ணு அதி தேவதை. தேயுவின் குறி சுவஸ்திலாஞ்சனம் (இருதலைக் கலப்பை போன்றது), ருத்திரன் அதி தேவதை. வாயுவின் குறி அறுபுள்ளி, மகேஸ்வரன் அதி தேவதை. ஆகாசத்தின் குறி அமுத பிந்து (வட்டவடிவு) ; சதாசிவன் அதிதேவதை. இந்தப் பூதங்களுக்கு ஆதாரமாய் நிற்கு முறைமையுடைய முத்திநெறியைத் தாராநின்ற நிவர்த்தி முதலிய பஞ்சகலைகளுக்கும் முன் சொன்னவர்களே அதிதேவதைகளென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். முடிவாகக் கூறுமிடத்துச சுத்த மாயையில் தோனறுமென்று முனனே சொல்லப்பட்ட சிவதத்துவங்கள் ஐந்தும், அசுத்த மாயையில் தோன்றுமென்று சொல்லப்பட்ட தத்துவஙகள் முப்பத்தொன்றும். ஆக இரண்டு வகையிலும் தத்துவம் முப்பத்தாறும். சுத்த மாயையில் தோன்றிய தத்துவஙகள் ஐந்து ஜடமாயினும், சிற்சத்திக்கு சுதந்தர வடிவாகலின் சேதனம் என்னப்படும். மற்ற முப்பத்தொரு தத்துவத்தில் புருடதத்துவம் சித்துடன் சார்ந்தபொழுது சித்தாயும், அசித்துடன் சார்ந்தபொழுது அசித்

தாயும், அதாவது சார்ந்த வண்ணமாய் இருத்தலால், அது சித்தசித்து அதாவது சதசத்து என்று சொல்லப்படுகிறது. மற்ற முப்பது தத்துவமும் அசித்தென்றே சொல்லப்படும். அல்லாமலும் சிவதத்துவங்களென்று சொல்லப்பட்ட சுத்த வித்தை, ஈச்வரம், சதாக்கியம், சத்தி, சிவம் என்ற தத்துவங்கள் ஐந்தும் (அவ்விடயங்களில் புவனங்களைச் சேர்ந்த ஆன்மாக்கட்குச் சர்வஞ்ஞத்துவம், சர்வ கிருத்தியங்களை விளக்குதற்குத் துணையாயிருப்பதால்) சுத்தமென்றும்; இதற்குக் கீழாகச் சொல்லப்பட்ட காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்ற தத்துவங்கள் ஏழும் (ஆன்மாவுக்குச் சிறிதறிவை விளக்குதற்குத் துணையாயிருப்பதால் சுத்தமென்றும், ஸூக்ஷ்ம ரூபத் துவாரத்தாலே ஆன்மாக்கட்குக் குணரூபமாகிய ஸுகதுக்க போகங்களை உண்டாக்குதற்குத் துணையாயிருப்பதால் அசுத்தமென்றும் ஆன காரணங்களால்) சுத்தாசுத்தம் என்னும் இந்தத் தத்துவங்கள் ஏழுக்கும் கீழாக மூலப்பிரகிருதியிலிருந்து தோன்றும், சித்தம அல்லது குணம், புத்தி, அகங்காரம், மனம் (ஞானேந்திரியம்) சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, ஆக்கிராணம, (கருமேந்திரியம்) வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், (தன்மாத்திரை) சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம ஆகத் தத்துவங்கள் இருபத்து நான்கும் ஆன்மாக்களுக்குச் சிறிதறிவை விளக்கிச் சிறிது கர்த்திருவத்தையும் ஸுகாதிகளையும் உண்டாக்குகையால் அசுத்தம் என்று சொல்லப்படும். ஆன்மாக்கள் ஸுகதுக்கங்களை அனுபவிப்பதற்கு ஏவுகிற சுத்த தத்துவங்களைப் பிரேரகாண்டம் எனவும் (பிரேரம்-ஏவுதல்) ஆன்மாக்கள் ஸுகதுக்கங்களைப் புசிக்கச் செய்யும் சுத்தாசுத்த தத்துவங்களை போக சயித்திரு காண்டம் எனவும் (போகம் புசிப்பது) எண்ணில்லாத ஆன்மாக்களுக்குப் புசிக்கப்படும் வத்து

வாய் நிற்பது. அசுத்த தத்துவங்கள் போக்கிய காண்டமெனப் பெயர் பெற்றன. (போக்கியம்-புசிக்கப்படும் வத்துக்கள்) இவ்விதம் சொல்லிக்கொண்டு வந்ததில் என்ன விளங்கிற்றென்றால் அருவம், உருவம், அருவுருவமாயுள்ள காரியப் பிரபஞ்சமனைத்தும் தத்துவரூபமாயிருக்கும். இத்தத்துவங்கட்குக் காரணமாகிய பிரகிருதி, அசுத்தமாயை, சுத்தமாயை என்ற மூன்றும் முறையே ஸ்தூலம், ஸூக்ஷ்மம், பரம் என்று சொல்லப்படும் மூவகை ஆன்மாக்கள் தத்துவங்களில் தங்கள் தங்கள் கன்மத்துக்கீடாகப் பொருந்தி ஜீவிப்பார்கள். அணுபக்ஷம் சம்புபக்ஷத் ததி தெய்வங்களும் அவ்வவ் தத்துவப்பெயர் பெறுமாதலால் எல்லாப் பொருளும் தத்துவங்களென்றே சொல்லப்படும்.

ஞானம்பிகை.—தத்துவமென்றால் நித்தியமென்ற பொருளாயிற்றே! தோன்றி நின்றழிகிறதைத் தத்துவமென்று எவ்விதம் சொல்லலாம்?

பிரசங்கியார்.—பஞ்சபூத லயத்துடனே தேவர்களுக்கு நாசமும் உண்டாயிருக்கவும், நரரை நோக்கித் தேவர்களை அமரர் என்று சொல்வதுபோலத் தாத்விதமாகிய சரீராதிகளைப் போல நாசமின்றிப் பிரளயபரியந்தப் நிற்பதாகையால் தாத்வீகத்தை அபேக்ஷித்து இந்த முப்பத்தாறுக்கும் தத்துவமென்று பெயராயிற்று.

ஞானம்பிகை.—தத்துவங்கள் ஒடுங்குமுறை எப்படி?

பிரசங்கியார்—இம்முப்பத்தாறு தத்துவங்களும் சங்கார காலத்தில் தத்தம் காரணங்களில் ஒடுங்குமுறை எவ்விதமெனில், நிலமுதல் மூலப்பிரகிருதியீறாகிய இருபத்து நான்கு தத்துவங்களும் ஸ்ரீகண்டருத்திரனால் அதனதன் காரணங்களில் ஒடுங்கும். (அதாவது கந்தத்திலே பிருதிவியும்; இரதத்திலே அப்புவும; ரூபத்திலே அக்கினியும்; பரிசத்திலே வாயுவும்; சத்தத்திலே ஆகாயமும்; தன்மாத்

திரைகள் ஐந்தும் தாமஸ அகங்காரத்திலும்; கருமேந்திரியங்கள் ஐந்தும் இராசத அகங்காரத்திலும்; ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனமும் சாத்துவிக அகங்காரத்திலும்; இம்மூவகை அகங்காரமும் புத்தியிலும், புத்தியும் சித்தமும் குணவடிவான மூலப்பிரகிருதியிலும் ஒடுங்கும்).மூலப்பிரகிருதிக்கு மேலுள்ள ஆறு தத்துவங்களும் அனந்தரீஸ்வரரால் ஒடுக்கும் (அதாவது அராகம் வித்தையிலும்; வித்தை கலையிலும்; கலையும் காலமும் நியதியும் அசுத்தமாயையிலும் ஒடுங்கும். புருட தத்துவம் இவ்வைந்தின் சமுதாயமாதலால் அது சொல்லாமல் விடுபட்டது) அவற்றின் மேலுள்ள சுத்ததத்துவ முதலிய மூன்று தத்துவங்களும் இலயசிவனால் ஒடுங்கும். (அதாவது சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியமாகிய மூன்று தத்துவங்களும் சிவதத்துவமென்னும் பெயரையுடைய விந்துவிலே ஒடுங்கும். மற்றச் சத்திதத்துவம், சிவதத்துவமிரண்டும் சுத்த சிவனில் ஒடுங்கும் (அதாவது விந்து நாதங்களிரண்டும சுத்தமுமாய் நித்தமுமாய் அழியாமலிருக்கிற மாயையில் ஒடுங்கும்). மீண்டும் சிருட்டிகாலத்தில் ஒடுங்கிய முறையே தோன்றும. சிவனுக்குக் காரியப்பட்டால் அதிட்டிக்கப்படுகிற விக்கிரகங்களாகையால், சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம் என்ற தத்துவங்களை நித்திய மெனபார்களாயினும், அஃது உபசாரமே!

**ஞானாம்பிகை.**—தத்துவங்கள் முப்பத்தாறென்பது எல்லா ஸமயத்துக்கும் உடன்பாடோ?

**பிரசங்கியார்.**—உலகாயுதம் (பௌத்தம்), மாத்தியமிகம், யோகசாரம, சௌத்திராந்திகம், வைரபாடிகம், ஆருகதம் என்று சொல்லப்பட்ட புறப்புறச் சமயம் ஆறும்; தருக்கம் மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், என்று சொல்லப்பட்ட புறச்சமயம் ஆறும்; பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத

சைவம் என்று சொல்லப்பட்ட புறச்சமயம் ஆறும்; பூத முதல் அசுத்தமாயாதத்துவ மீறாக ஒவ்வொரு தத்துவங்களில் நிலைபெறும். சிவனே தெய்வமென்னும் ஸத்யத்தை உடைத்தான பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர வவிசாரவாதசைவம், சிவாத்துவித சைவம், (அல்லது நிமித்தகாரண பரிணாமவாத சைவம்) என்று சொல்லப் பட்ட அகச்சமயம் ஆறும் சுத்தவித்தை முதலான சுத்த தத்துவங்கள் ஐந்தையும் பொருந்தும்; சித்தாந்த சைவ மென்றும், வைதீகசைவமென்றும் பலவிதயாகச் சொல்லப் பட்ட ஸமயாதீத தெய்வமாகிய இறைவன் (சுத்தசிவம்) இம்முப்பத்தாறு தத்துவத்தையும் கடந்துநிற்கும்.

**ஞானம்பிகை.**—*சித்தாந்த சைவத்தில் பிரதிபாலிக்கும் இறைவன் தத்துவாதீதன் என்றால் அவன் உருக்கொள்ளானோ?*

**பிரசங்கியார்.**—*தத்துவாதீதனாகிய கர்த்தா தனது காருண்ணியத்தால்தானே சிவம் என்றும், சத்தியென்றும், நாதமென்றும், விந்துவென்றம், சதாசிவமென்றம், மஹேஸ்வரனென்றம், உருத்திரனென்றம், விஷ்ணுவென்றும், பிரம்மாவென்றும் சொல்லப்பட்ட ஒன்பது வடிவங்களைக் கொள்ளுவன். எவ்வித உருவமெனில் அருவத்தில் சிவம், சக்தி, நாதம், விந்து ஆகிய நான்கு திருமேனியுங்கொள்ளுவன். உருவத்தில் மஹேஸ்வரன், உருத்திரன, விஷ்ணு; பிரம்மா ஆகிய நான்கு திருமேனியுங் கொள்ளுவன். அருஉருவத்தில் சதாசிவமாகிய ஒரு திருமேனியைக் கொள்ளுவன். இவ்விதம் முத்திறத்தாலும் ஒன்பது திருமேனியைக் கர்த்தா ஒருவனே கொண்டு வேற்றுமையின்றிப் பிரபஞ்சத்தை ஆட்டுவிப்பான்.*

**ஞானம்பிகை.**—*தாங்கள் சொல்லிய ஒன்பது வடிவங்களுக்கும் தாரதம்மியம் உண்டோ?*

**பிரசங்கியார்.**—*தாரதம்மியம் உண்டு. எவ்வாறெனில், சுத்த*

சிவத்தின் ஆயிரத்திலொரு அம்சம் பராசத்தியென்றும், அந்தச் சத்தியில் ஆயிரத்திலொரு அம்சம் நாதம் என்றும், அந்த நாதத்தில் ஆயிரத்திலொரு அம்சம் விந்துவென்றும், அந்த விந்துவில் பத்திலோர் அம்சம் சதாசிவமென்றும், அந்தச் சதாசிவமூர்த்தியில் பத்திலோர் அம்சம் மஹேச்வரன் என்றும், அந்த மஹேஸ்வரனில் ஆயிரத்தில் ஓர் அம்சம் உருத்திரன என்றும் அந்த மஹேஸ்வரனில் கோடியில் ஓர் அம்சம் விஷ்ணுவென்றும், அந்த மஹேஸ்வரனில் கோடியில் ஓர் அம்சம் பிரம்மாவென்றும், இவ்விதம் முத்திறத்தாலும் ஒன்பதுவகையான வடிவை வேற்றுமையின்றிக் கர்த்தா கொண்டு அந்தந்த தொழில்களைச் செய்வான். இந்த ஒன்பது வடிவமே சம்புபக்ஷத்துக்குரிய வடிவங்கள். இந்த சம்புபக்ஷத்திலுள்ள சகளவடிவங்களின் சத்திகள் அணுபக்ஷத் தேவர்களை அனுஷ்டிக்கிறதால் அவர்கள் தொழில் செய்ய வல்லவர்களாகிறார்கள்.

ஞானம்பிகை.—மேற்சொன்ன ஒன்பது திருமேனிக்கும் சத்தியொன்றோ? பலவோ?

பிரசங்கியார்.—மேற்சொன்ன சிவபேதம் ஒன்பதுக்கும் உரிய சத்தி ஒன்றேயாயினும், சிவத்துக்கு சத்தியென்றும், நாதத்துக்கு விந்து வென்றும், சதாசிவத்துக்கு மனோன்மணியென்றும், மஹேஸ்வரனுக்கு மஹேஸ்வரியென்றும், உருத்திரனுக்கு, உமையென்றும், விஷ்ணுவுக்கு இலக்குமியென்றும், பிரம்மாவுக்கு சரஸ்வதியென்றும் ஆகிய இவ்வித நாமங்களைப் பெற்றன. எம்மிறைவனாகிய பரமேஸ்வரன் சிவபேதம் எழினும் நின்று நடாத்துமாறெல்லாம் அவளோடு தாதானியமாய் நிற்கும். பராசக்தியும் இச் சக்திபேத மேழினும் அவனுக்குத் துணையாய் நின்று நடத்தும். சக்தியென்றால் வல்லமையென் றறிவாயாக. ஆனதால் கர்த்தாவின் வல்லமையையே சக்தியென்று பெண்

பாலாகச் சொல்லப்பட்டது. நாதமுதல் பிருதிவியீறான தத்துவங்களெல்லாம் அந்தப் பராசத்தியே பொருந்திநிற்கும் சிவமும் அந்தச்சத்தி முதலியவற்றை அதிட்டித்து மரமும் வயிரமும்போல் பிரிக்கக்கூடாதவிதம் கலந்து நிற்கிறதால், சத்தியால் தரப்படும் எல்லாத் திருமேனியும் சத்தி சிவம் இரண்டிற்கும் பொது வடிவாயிருக்கும்.

ஞானம்பிகை.—நாதமுதலான தத்துவங்களெலலாம் சத்தியாகியே நிற்கும் என்று கூறி மீண்டும் சிவமும் சக்தியுமாயிருக்குமென்று சொல்லுவது யாது காரணம் ?

பிரசங்கியார்.—அந்தச் சத்தி சிவனுடைய கிருத்தியங்களுக்கெல்லாம் தானேயாய் நிற்கும். ஆகையால சிவன் யாதொன்றைத் திருவுள்ளங்கொண்டான், அதுவே சத்திக்குச் செயல். நாம் முன் கூறியதுபோல் சிவத்தின் வடிவு விசேடம், குண விசேடத்தால் சிவபேதம், சத்திபேதம் என்றாயின. சுருக்கிச் சொலலுமிடத்து, சிவத்தினின்று சததி வெளிபபட்டும அந்தச சத்தியைச் சிவன் அதிஷ்டித்து சத்தியும் சிவனுங்கூடிச சேதனசேதனப் பிரபஞ்சமெலலாவற்றையும் தோன்றச் செய்தாலும், இறைவன் எப்போதும பிரம்மசாரியாதலும் பான்மொழி கன்னியாதலுமாகிய உண்மையை முன் தவவிசேடத்தில் முதல்வன் அருள்பெற்ற ஞானிகட்குச் சக்தியுஞ் சிவமும் செய்யும் இச்செயல்கள் எல்லாம் ஆன்மாக்கள் பொருட்டாக நடிததுக்காட்டும் நாடகமாத் திரையே யன்றி வேறல்லவென்று விளங்கும். ஆன்மாக்களுக்குக் கிடைக்கும் சரீரமும், கரணங்களும, புவனமும், புசிக்கத்தக்க பொருள்களும், அவை மூலமாயுள்ள பெத்த முக்திகளும், அப்பெத்த முக்திகளிற் படும் பேதங்களனைத்தும், மேற்கூறிப் போந்த தத்துவங்களாயினவென்றும், அத்தத்துவங்கள் ஆன்மாக்களோடு சேர்வதன்றிக் கர்த்தாவோடு சேர்வதல்லவென்றும், இது அசுத்த

மாயாபந்தமென்றும், இது சுத்தமாயா பந்தமென்றும் தெளிய உணர்ந்து இந்தத் தத்துவங்கள் முப்பத்தாறை யும் நிவர்த்தி முதலான பஞ்ச கலைகளுடனே நீக்கி அவற்றிற்கு மேலாய் நிற்பதொன்றினை ஐயந் திரி பின்றி உணரப்பெற்றவன் எவனோ அவனை தத்துவ ஞானி ; அவனே, சிவன் பிரம்மசாரி, பராசத்தி கன்னி யென்ற உண்மையை அறியுஞ்சக்தி உள்ளவனாவன்.

ஞானம்பிகை.—தத்துவங்களானவை தனுகரண புவன போ கங்களாக ஆன்மாக்களுக்குப் பொருந்தவேண்டிய காரண மென்ன ?

பிரசங்கியார்.—ஆன்மாக்களுக்குப் பிரவாகாநதியாக வருகிற பிராரத்துவகன்மபலன்களைப் புசிப்பித்துத் தொலைத்து விடவும் பிராரத்துவம் புசிக்கும்பொழுது தியான பூசை முதல் அனுஷ்டானங்களால் ஆகாமியம் சேஷித்து நில் லாமல் கெடுத்துப்போகவும், ஆன்மாவுக்குச் சகஜமாய் விட்டு நீங்காமலிருக்கிற அஞ்ஞானமான ஆணவமலத்தை நீக்குவது நிமித்தமாகவும், இறைவன ஆக்கினையால் தத்து வங்கள் ஆன்மாக்களை வந்து பொருந்துகின்றன.

ஞானம்பிகை.—மாயையும் கன்மமும் ஆன்மாவைப்பற்றி இருக் கிறதென்று சொல்லியபின் ஆணவம் என்ற வேறோர் மலமும் இருக்கிறதென்றால் அது எத்தன்மை யுடையது?

பிரசங்கியார்.—ஆணவமலமானது ஏகமாய், எண்ணிறந்த சத்தி களை யுடையதாய், எண்ணிறந்த உயிர்களோடு சேர்ந்து செம்பில் களிம்புபோல அநாதியே உள்ளதாம். அதாவது, என்று செம்புண்டோ அன்றே களிம்புண்டு. அதுபோல, என்று ஆன்மா உண்டோ அன்றே ஆணவமென்ற மல முண்டு. அவ்வாணவம் கட்டையிலிருக்கும் அக்கினியைக் கட்டை மறைத்திருப்பதுபோல், ஆன்மாவினுடைய இச்சா ஞானக்கிரியைகளைக் கிஞ்சித்தும் தோன்றாமல் புசிப் பிலே திருத்தியைக் கொடுத்துக்கொண்டு ஸர்வ ஆன்மாக்

களையும் பொருந்தி நின்று எப்பொழுதும் அஞ்ஞானத்தை விளைவித்துக்கொண்டிருக்கும்.

**ஞானும்பிகை.**—ஆணவமலம் என்று வேறொன்றில்லை. தாங்கள் சொல்லியவைகளெல்லாம் மாயையின் காரியமாகக் காண்கிறதே!

**பிரசங்கியார்.**—ஆன்மாக்களுக்கு விளங்கலான இச்சா ஞானக் கிரியைகள் மாயாகாரிய ஸகாயத்தால் விளங்கும். ஆணவமலமானது ஆன்மாக்களுடைய இச்சாஞானக் கிரியைகளைப் பிரகாசிக்கவொட்டாமல் தடுக்கும்.

**ஞானும்பிகை.**—தாங்கள் சொல்லும் ஆணவமலம் ஆன்மாக்களுக்கு வேருக இருக்கிறதல்லவா?

**பிரசங்கியார்.**—ஆணவமலம் ஆன்மாக்களுக்கு சகஜ மலம், அதாவது கூட உள்ளது. அந்த மாயையானது சகலத்திற் கூடியும் கேவலத்தில் பிரிந்தும் நிற்பதால், வேருய் அல்லாமலும் பிரபஞ்சமுமாய் ஆன்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களுமாய்த் தோன்றும். ஆணவ மலத்தின் மறைப்பை நீக்குகிறது மாயை என்றறிவாயாக.

**ஞானும்பிகை.**—அந்த மாயையே ஆன்மாவினது இச்சா ஞானக் கிரியைகளை மறைத்து நிற்கும். எவ்விதமெனில், களங்காதி குற்றமில்லாத சூரியனுடைய கிரணங்களைக் காள மேகம் மறைத்துப் பிரகாசத்தைக் காணவிடாதது போலவும், பின் காற்றடித்து அம்மேகத்தைப் போக்கியவுடன் பிரகாசம் தோன்றுகிறதுபோலவும், மாயாகாரியமாகிய சரீரம் நீங்கினபொழுது இச்சாஞானக் கிரியைகள் பிரகாசிக்கும்.

**பிரசங்கியார்.**—சூரியனை மேகம் மறைக்க அதனுல் கிரணங்களின் ஒளி மழுங்கினற்போல, ஸூக்ஷ்மஸ்தூல சரீரங்களானவை ஆன்மாவினுடைய ஞானத்தை மறைக்குமேயாகில், ஆன்ம ஞானக்கிரியைகள் பிரகாசியாமல் போய்விட

வேண்டுமே! ஆன்மாவுக்கு ஸூக்ஷ்மஸ்தூல சரீரம் உண்டானால் சிற்சத்தி காரியமாகப்படுகிற இச்சா ஞானக்கிரியைகள் பிரகாசித்து விஷயங்களில் பொருந்துகிறதே! ஆன்மாவிற்கு மாயாகாரியமாகிய தனு உண்டாகாமற் போனாலன்றோ விஷயதரிசனம் கூடாது. நீ எடுத்துக்காட்டிய உவமானம் நேர்விரோதமாகக் காண்கிறதால் அவ்வுவமானம் பொருந்தாது. ஆனதால் ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியைகளை மறைத்துக்கொண்டு நின்றது, நீ இல்லையென்று சொன்ன ஆணவ மலம் என்றறிவாயாக. அநாதியே செம்பிற் களிம்புபோல் ஸகஜமாய் ஆன்மாவோடு வியாபகமாய்க் கலந்து நிற்றலால் ஒருவனுக்குச் சத்துவகுண மேலிட்டு மற்ற இரண்டு குணங்கள் கிஞ்சித்து அடங்கி யிருக்கும்பொழுது அவன் சத்துவ குணத்தான் என்று சொல்வதுபோல், அந்த ஆணவ மலத்தையும் ஆன்மாவுக்கு குணமென்று உபசாரமாகவும் சொல்லலாம். ஆணவமலம ஆன்மபோதத்தை மறைக்கிற சுவபாவமே யுடையது. மாயை மறைப்பை நீக்குகிற சுபாவமே யுடையது. ஆனதால் ஆன்மாக்கள் கர்மத்தைப் புசிக்கைக்குண்டான ஆதரவுக்கீடாக ஆணவமலத்தால் உண்டாகிய அறியாமையை நீக்கும்படி கலைமுதல் பிருதிவி ஈறான தத்துவங்களை மாயை தன்னிடத்தில் நின்று தோற்றுவிக்கும். ஆனதால் ஆணவமலமும் மாயையும், இருளும் ஒளியும் போல, ஒன்றுக்கொன்று மாறாக இருக்கும்.

**ஞானம்பிகை.**—ஆணவமலமே அதாவது அறியாமையே ஆன்மாவின் குணமென்று உபசாரமாக ஏன் சொல்லவேண்டுமே? ஆன்மாவின் குணம் அறியாமையே!

**பிரசங்கியார்.**—ஆன்மாவுக்குக் குணம் அறியாமை யென்று சொல்லில், அக்கினிக்கு வெம்மையும் ஜலத்துக்குத் தட்பமும் போலவும், அது பிரிவின்றி இருக்கவேண்டும். அல்லாமல் குணம் அழிந்தால் குணியும் அழியும். ஆனதால் ஆன்மாவும் ஜடமேயாய்ப் புசிக்கைக்குக் கர்த்தனாகான்.

ஒருவனுடைய கண்ணில் காசகாமலாதி தோஷத்தால் பார்வையில்லாமற்போனால், அது கண்ணின் குற்றமோ சொல்லாய்? அறியாமைக்குக் குணிப்பொருள் ஜடமாகு மல்லாது சித்திக்சாமையாலும், ஆன்மா அறிதல் தொழிலே யுடைய சித்தேயானதாலும், ஆன்மாவிடத்தில் குற்றமாகக் காணப்படும் அறியாமைச்குக் குணிப்பொருளாகிய ஆணவ மலம் வேறுண்டென்று நிதானித்தறிவாயாக. இக்காரணத் தால் குணம் என்று சொல்லுதல் பொருந்தாது.

ஞானம்பிகை.—இவ்விதம் சொல்லப்பட்ட மலங்கள் என்னென்ன காரியத்தைச் செய்கின்றன?

பிரசங்கியார்.—கன்மமலமும், மாயாமலமும், ஆணவமலமும், ஆகிய மூன்று மலங்களும், எவ்விதம் ஆன்மாவைப் பற்றியிருக்கின்றனவென்று ஒருவமானத்தால் காட்டுகிறேன். அதாவது நெல்லுக்குண்டான முளையும், தவிடும், உமியும் போல என்று சொல்லலாம். முளையைப்போல் கன்ம மலமும், தவிட்டைப்போல் மாயாமலமும், உமியைப்போல ஆணவமலமும் ஆன்மாவின் உண்மையான சொரூபத்தை மயக்கத்திற்கேதுவாகப் பந்தித்துநின்று பொய்யை மெய் யென்று மயக்குகிற போதத்தையும் அதனுடன் சட்டுப் பட்டுநிற்கிற புசிப்பையும் அந்தப் புசிப்பிலே திருப்தியை யும் உண்டாக்காநிற்கும். இம்மலங்கள் மூன்றோடு கூடி நின்று பந்திக்கப்படும் வேறு மலங்களும் உண்டு.

ஞானம்பிகை.—இம்மூன்று மலங்களல்லாமல் வேறுமலங்களும் இருக்கின்றன என்றால் அவை யாவை?

பிரசங்கியார்.—வேறு மலங்கள் யாவையெனில், ஆன்மாக்களுடைய ஸுகதுக்க விளைவுக்கெல்லாம் இடமாயநின்று வியாபகமாகிய ஆன்மாவின் அறிவிச்சை செயல்களை ஏக தேசப்படுத்துவதென முன் சொல்லிவந்த மாயாகாரியத்தை மாயேயமலம் என்றும் ஆன்மாக்களை அநாதியே பொருந்தி யிருக்கிற ஆணவத்தின் காரியமான அஞ்ஞானத்தை

யும் மாயையின் காரியமான பொய்யை மெய்யென எண்ணச் செய்யும் கன்மத்தின் காரியமான புண்ணிய பாவத்தையும் செய்யும்படி செலுத்துகிற சுத்தஞன கர்த்தாவினுடைய சத்திகளில் ஒரு சததியைத் திரேதாயிமலம் என்றும் ஞாதாக்கள் சொல்லுவார்கள். முன்சொன்ன மூன்று மலங்களோடு இப்பொழுது சொன்ன இரண்டு, ஆக ஐந்து மலங்களும் ஆன்மாக்களை அநாதியே பொருந்தி நிற்கும்.

**ஞானம்பிகை.**—ஆன்மாவைப் பற்றியிருக்கும் மும்மலங்களில் மாயையும் சேர்ந்திருக்க இப்பொழுது மாயையை இரண்டு மலங்களாகச் சொல்லவேண்டிய தென்ன ?

**பிரசங்கியார்.**—மாயா காரியம் மாயையி லடங்குமாயினும் தனுவாதிகட்குக் காரணமானதை மாயைமலமெனறும் தனுவும் கரணமும் புவனமும் போகமுமாய் நடக்குந் தொழில் நிறைந்த பெரிய மாயா காரியமானதை மாயேயமலமென்றும் இரண்டாக வைத்தெண்ணப்பட்டது.

**ஞானம்பிகை.**—சிவசத்தியைப் பதிபதார்த்தமாகக் கூறியிருக்க, அதை மலமென்று சொல்லுவது எது காரணத்தால் ?

**பிரசங்கியார்.**—அதனுண்மை விசாரிக்கில், அந்தச் சத்தி சிவனுடனே ஸமமாயிருக்கிறது பதி பதார்த்தமேயாயினும், அச்சத்தி, பாசத்தைப் பின்சென்று பரிபக்குவம் பண்ணிச் செல்லுதலால் அந்தச் சத்தியை மலமென்று உபசாரமாகக் காரணப்பெயராக்கிச்சொல்லப்பட்டது.

**ஞானம்பிகை.**—தாங்கள் சொல்லிய ஐந்து மலங்களும் எவ்விதம் காரியப்படுகின்றனவென்று தொகுத்துச சொல்ல வேண்டுகிறேன்.

**பிரசங்கியார்.**—தொகுத்துச் சொல்ல வேண்டுமாயின், ஆணவமலம், ஆன்மாவின் வியாபகத்தை மறைதது அணுஸம்பந்தமாக்கும் ; மாயைமலம் ஆன்மாவுக்கு தனு கரணபுவன போகங்களாய் நிற்கும ; கன்மமலம், ஆன்மாக்கள் ஆர்ச்சித்த புண்ணிய பாவங்களின் பலன் தொலையுந்தனி

லும் வினைக்கீடாகப், பிறவியைக் கொடுத்துக்கொண்டிருக்கும்; மாயேயமலம், மாயையால் கிடைத்த தனுகரண புவனபோகத்தில் நடக்குந் தொழிலாய் நிறைந்து நிற்கும்; திரோதாயிமலம், ஆன்மாக்களைப் பொருந்தியிருக்கும் மலங்களை அதனதன் தொழில்களைச் செய்யும்படி செலுத்திக் கொண்டிருக்கும். எனவே ஆன்மாக்கள் பஞ்சமலத்தைப் பொருந்தி நின்று போக்குவரவை உடையனவாய் இருக்கப்பட்ட ஜனனமரணங்களை யடைந்து இந்தப் பூமிமுதல் மூன்று லோகங்களில் சென்றுழன்று. தனக்கொரு நிலைமையன்றி இருக்கும் கொள்ளிவட்டம் அல்லது காற்றாடியைப் போல, இறைவனுணையால் கன்மானுகுணமாக மேல், கீழ், நடுவில் பொருந்திநிற்கும். (கொள்ளிவட்டம் அதாவது கொள்ளிக்கட்டையைக் கையில் பிடித்துத் துரிதமாகச் சுற்றினுல், அது இடை யிடை காலியாகக் காணப்படாமல் ஓர் அக்கினிவளையமாய்க் காணப்படுவது போலும், காற்றாடி சுழலும்பொழுது ஒரு காற்றாடி வளையம்போல் இருக்கிறதாகவே காணப்படுவது போலும், ஆன்மா சுழன்று கொண்டிருக்கும்).

**ஞானம்பிகை.**—ஆன்மாக்கள் செய்த கன்மத்துக் கீடாகக் கிடைக்கும் பிறவிகளில் மானிடப் பிறவி மேலானதல்லவா ?

**பிரசங்கியார்.**—மானிடப் பிறவி மேலானதென்று சொல்லுதல் ஒன்றுமே போதாது! முட்டையில் தோன்றும் பறவை, பாம்பு, ஆமை, முதலை, மச்சம் முதலனதும்; வேர்வையில் தோன்றும கிருமி, வண்டு, விட்டில் முதலானதும்; நீரும் நிலமும் வித்துடன் கூடி பூமியைபபிளந்து தோன்றும் புல், தாவரமுதலானதும்; கருபபையில் தோன்றும நரர், பசு, மிருகம் முதலானதும்; ஆக நால் வகைத் தோற்றத்திலும், தேவர் மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்று சொல்லப்பட்ட எழுவகைப் பிறப்பில், முதற்கண் தாவரப் பிறவியில்

பிறந்து வந்த வினையின் பலனைப் புசித்தொழித்து, கிருமி யாகப் பிறந்து அப்பொழுது புசிக்கவேண்டிய பலனைப் புசித்தொழித்து, பறவைப்பிறவியிற் பிறந்து அப்பொழுது புசிக்கவேண்டிய பலனைப் புசித்தொழித்து, மிருகப் பிறவி யிற் பிறந்து அப்பொழுது புசிக்கவேண்டிய பலனைப் புசித் தொழித்து, இவ்விதம் சொல்லப்பட்ட பிறவி பேதம் (அண்டசம், இருபத்தைந்து நூறாயிரம்; சுவேதஜம் பத்து நூறாயிரம்; உற்பீசம் பத்தொன்பது நூறாயிரம்; சராயு ஜம் முப்பது நூறாயிரம் ஆக) எண்பத்து நான்கு நூறாயி ரத்திலும் ஆன்மாக்கள் கன்மத்துக்கீடாகப் பிறந்திளைத்து மானிடப் பிறவியில் தோன்றுவதை யோசித்துப் பார்த் தால், ஸமுத்திரத்தைக் கையாலே நீந்திக் கரையேறினவன் காரியத்துக்கு ஒப்பாகும். இவ்விதம் மானிடப் பிறவியி னும், மானிடர் வாழ்கின்ற இவ்வுலகத்துள் வேதாகமங் களைக் கைக்கொண்டொழுகுகின்ற உத்தம நாட்டில் பிறத்தல் மிகுந்த புண்ணியத்தின்பலனே; அவ்வுத்தம நாட்டில் பிறந்தாலும், கீழாயகுலத்தில் பிறக்காமல் உத் தம குலத்தில் பிறப்பதற்கும், அவ்விதம் உத்தமகுலத்திற் பிறந்தாலும் புறச்சமயங்களில் செல்லாமல் இறைவனைப் பரதத்துவ மென்றடையும் சித்தாந்தசைவஸமயம் லபிப் பதற்கும் புண்ணியம் இவ்வளவென்று சொல்லமுடியாது. ஆனதால், நாம் குலம், இளமை, கல்வி, செல்வம், அதிகா ரம் இவைகளினால் உண்டாகிய செருக்கொழிந்து, இவை களுக் கெதிரிடையான சிறுமைகளில் வின்று நீங்கி உண் மையான பக்தியுடனே சைவஸமயஞ்சேரும் புண்ணியப் பேறு மிகவும் அரிது. அதிலும் உயர்ந்த சித்தாந்தநெறி யுணர்ந்து இறைவனை வழிபடப்பெறுவார் உண்டானால், அவர்கள் மலத்தாலுண்டாகும் சஞ்சலம் நீங்கி வீடடை வர். இறைவனை மனதினாலே நினைத்தும், வாக்கினால் தோத்திரம் பண்ணியும், காயத்தால் பணிந்து பசுவினிடத்

தில் உண்டாய பால், தயிர், நெய், கோசலம், கோமயம், என்ற ஐந்தையுங்கொண்டு கோமயத்தாலும், கோசலத்தாலும் இறைவன் திருக்கோலங் கொண்டெழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை மெழுகி சுத்திசெய்தும், பசுவின் நெய்யில் விளக்கேற்றி வைத்தும், பால் தயிரால் அபிஷேகஞ் செய்தும் வழிப்பட்டால், நம்மை அநாதியே பற்றியிருக்கும் ஐந்து மலங்களும் நீங்கும். இவ்விதம் இறைவன் பணியை வேறு சரீரத்தில் செய்யக் கூடாதாதலால் மானிடப்பிறவி வேண்டப்பட்டது. மேலுலகத்திலுள்ள தேவர்களும், அவ்விறைவன் பணிவேறு உலகத்தில் கைகூடாமையால், தேசவிசேடமாகிய இம்மண்ணுலகத்தில் வந்து இறைவனை அர்ச்சிப்பர். இவ்வுலகத்தில் இச்சரீரம் பெற்றும் இவ்வுண்மையை ஏனையோர் அறியாமையால், சாதிவிசேடம் பிறப்பு விசேடங்களைச் சிலாகித்துத் திரிகிறார்கள்.

**ஞானம்பிகை.**—நாம் தளர்ந்த வயதில் இறைவனை வழிபட்டால் நம்முடைய கரணங்கள் வசப்படுமே யல்லாது இளமையில் இறைவன் பணியில் நிற்கமுடியாதென்றே நினைக்கிறேன்.

**பிரசங்கியார்.**—நீ கொண்ட எண்ணம்போல் செய்வதாயின், நாம் எக்காலத்தில் இறப்போம் என்பது தெரியுமா? ஐயோ! நம்முடைய காயம் நித்தியமென்றோ நினைத்திருக்கிறாய்? கர்ப்பத்தில் அழிவதாயும், பிறந்த உடனே அழிவதாயும், பிறந்து சிலகாலமிருந்து அழிவதாயும், பாலனாக அழிவதாயும், அதற்குமேல் தருணவத்தையில் அதாவது நாற்பது வயதுக்குள் அழிவதாயும், நரையுண்டாகி விருத்தனாய் அழிவதாயும், இவ்விதம் முற்றிலும் அழிவேயாயிருப்பதால், இந்த சரீரம் விட்டுபோகாம லிருக்கும் போதே இறைவன் பணியைச் செய்வாயாக. அல்லாமலும ஆன்மா ஓரிந்திரியத்திலே நின்று அதற்கேற்ற விஷயங்களைப் புசிக்கும்பொழுது, மற்ற இந்திரியங்களினால் பிர

யோஜனமில்லை. வருகிற பிரயோஜனங்களும் ஒன்றுக்கொன்று மாறிவரும். அவ்விதம் வரும் பிரயோஜனங்கள், உறக்கம் மூர்ச்சை முதலியவற்றால் சிறிதும் இல்லையாய் விடும். கனவை விட்டு நனவில் வந்தபொழுது இந்தப் பிரயோஜனங்களெல்லாம் மீளவும் உண்டாகாநிற்கும். இப்படி உண்டான துக்கங்களை விளைக்கிற இந்த தேகவாதனையாயுள்ள பிரயோஜனங்கள் தானும் நிலைநிற்பதில்லை. எவ்விதமெனில், மயக்கத்தால் கண்டபொருளும், கனவிற் கண்ட பொருளும், மயக்கம் நீங்கிய பொழுதும், விழித்துக் கொண்ட பொழுதும், பொய்யானது போல, இவைகளின் உண்மை யழிந்தபொழுது இப்படிச் சொல்லப்பட்டவை யெல்லாம் ஒருங்கே அழிந்துபோகும். ஆனதால், இவ்வுண்மையை யறிந்து எவன் இறைவனை வழிபடுகிறானோ அவனே பிரயோஜனமடைவான். இவ்வுண்மையை அறியாது, சந்தன முதலிய வாஸனாத திரவியங்களைப் பூசியும், வாஸனையோடு கூடிய பூமாலை யணிந்தும் பொன் சரிகையைப் கொண்ட பீதாம்பரம் போர்த்தும், பரிவாரங்கள் பின்வரவும், சிவிகை சுமக்கவும், வாத்தியங்கள் முழக்கவும், வமசபரமாக வருகிற விருதுகளைச் சொல்லி, சின்னம் முதலானவைகளை ஊதவும, சத்ர சாமரஙகள் சூழவரவும், அறிவற்று, அதிகார செருக்கடைநது, இவைகளினால் தாம் பெரியோரெனத் தம்மைத்தாமே மதித்துத் தாம் நினைத்ததைச் சொல்ல வாயெழாமல் இருப்பவர் பிணத்துக்கு ஸமானமானவர்களே! இவ்விதம் பிரயோஜனமற்ற பிணம்போல வாழ்ந்து பின நடைப் பிணமாகத் திரிகினறார்களாதலால், அவர்கள் வருந்தித் தேடிய செல்வமும், உடலும், உயிரும உணர்வும், ஆகிய இவைகளெல்லாம் ஒரு க்ஷணததிலே தோனறி நின றழிந்துபோமென்று ஆராயநதறிநது, ஒரு முறையாவது இறைவனை வணஙகி வழிபடுவார்களாயின, அவாகளை தேவர்களும் வணங்கும் வண்ணம் இறவாச் செல்வததை அளித்து ஆதரிப்பான்.

**ஞானம்பிகை.**—ஐயாவே! தங்களால் அரிய விஷயங்களை அறிந்தோம் தங்களுக்கு நாங்கள் என்ன பதில் செய்யப் போகிறோம்.

**கறுப்பண்ண பிள்ளை.**—ஆம்! ஐயா! தங்களால் அறிந்தவை களுக்கு பிரதி செய்யமுடியாது. உலக வழக்கம்போல் தங்களுக்கு அதிக வந்தனம் என்றே சொல்லவேண்டும்.

**பிரசங்கியார்.**—ஐயா! எனக்கு இவ்வரிய விஷயங்களை போதித்த சோ. சிவ. அருணகிரி வள்ளலுக்கே தங்களுடைய வந்தனமும் என்னுடைய வந்தனமும் சேர வேண்டும். அவரால் அறிந்ததையே நான் சொன்னதன்றி வேறல்ல.

---

## 20—ம் அத்தியாயம்

சின்னசாமி பிள்ளை, தன் தமக்கை செங்கமலத்தம்மாள் இருப்புப் பெட்டியிலிருந்து எடுத்துவந்த நகைகளைக் கட்டி மடியில் பத்ரமாக வைத்துக்கொண்டு, சந்தோஷமாக வண்டியிலேறி வண்டியை நடத்த உத்தரவளித்தான். முனியாண்டி மாடுகளைத் துரத்திக்கொண்டு போனான்.

**சின்னசாமி பிள்ளை.**—அடே! முனியாண்டி! நாம் இந்த ஏற்பாடு செய்யாமற் போனால், என் தமக்கையின் நகைகள் என் கைக்கு எட்டுமா?

**முனியாண்டி.**—ஐயா! நான் சொல்லிய ஸாக்ஷியைக் கேட்டு பயந்து, நகைகளைக் கொடுத்து விடுவார்களென்றே நினைத்திருந்தேன். அவர்கள் பயப்படாமற்போனது ஆச்சரியம்.

**சின்னசாமி பிள்ளை.**—என் தமக்கை கொடுத்தாலும், இருக்கும் நகைகளை யெல்லாம் கொடுத்திருக்கமாட்டாள். சிலதே கொடுப்பாள்.

**முனியாண்டி.**—ஆம்! ஆம்! அந்தம்மாள் விழுந்து மூர்ச்சையாய் விட்டது அனுகூலமாக முடிந்தது. தாங்கள் சொல்

லிக் கொடுத்திருந்த விதம் சொன்னல் பெருந்தொகை கொடுப்பதாகச் சொன்னீர்கள். அதை மறந்துபோகக் கூடாது.

**சின்னசாமி பிள்ளை.**—உன்னுடைய ஸாக்ஷி பிரயோஜனப்பட்டிருந்தால் நான் சொன்னவிதம் கொடுத்திருப்பேன். ஆயினும் உனக்கு ஏதாகிலும் கொடுக்கிறேன்.

**முனியாண்டி.**—நான் சொன்ன ஸாக்ஷி பிரயோஜனப்படாமலோ தங்களுக்கு நகைகள் கிடைத்தன? அந்தம்மாள் எடுத்துக் கொடுக்கிறதற்குப் பதிலாகத் தாங்கள் எடுத்துக் கொண்டீர்கள்.

**சின்னசாமி பிள்ளை.**—ஸரி! ஸரி! நான் வீட்டுக்குப் போனவுடன் உனக்கு ஐந்துரூபா கொடுக்கிறேன். ஸந்தோஷந்தானே!

**முனியாண்டி.**—ஐயா! என்ன சொன்னீர்கள்! ஐந்து ரூபாவுக்காகவா அந்தம்மாள் பயந்து நடுங்கும்படி பெரும் பொய்யைச் சொல்லச் சொன்னீர்கள்?

**சின்னசாமி பிள்ளை.**—அடே! உங்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியடைய மாட்டீர்கள்.

**முனியாண்டி.**—தாங்கள் எதைக் கொடுத்துத் திருப்தியடையாமற் போனேன்? தாங்கள் எனக்கு ஐந்து ரூபா கொடுப்பதாயிருந்தால், அதைத் தாங்களே பதனமாக வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் ஐந்து ரூபா கொடுப்பீர்களென்று தெரிந்திருந்தால், என்னை அந்த அம்மாள் நிந்திக்கும்படி பொய் சொல்லியிருக்கேன்.

**சின்னசாமி பிள்ளை.**—நான் ஐந்து ரூபா கொடுக்காமல் வேறென்ன கொடுப்பேன் என்று நினைத்திருந்தாய்?

**முனியாண்டி.**—தங்களுக்கு என்னல் மூவாயிரத்துக் கதிகம் கிடைக்கும்படி நான் செய்திருக்கத் தாங்கள் கிடைத்ததையெல்லாம் எடுத்துக்கொண்டு எனக்கு ஒன்றும் கொடுக்காமல் துரத்திவிடப் பார்க்கிறீர்!

**சின்னசாமி பிள்ளை.**—அடே! நீ சொல்வதைப் பார்த்தால் ந

னெங்கேயோ போய்க் கொள்ளையடித்து வந்ததுபோல் இருக்கிறது ! என் தமக்கையின் பெட்டியிலிருந்து என் கைக்கு வந்தது உன்னால் வந்ததென்று நினைக்கிறாய் ?

**முனியாண்டி.**—ஐயா ! என்னால் வராமல் பின் யாரால் வந்ததென்று நினைக்கிறீர்கள் ? நான் சொல்லிய பொய்யால் உங்களுக்குள் பேச்சு வளரவும், பின் நீர் கைநீட்டவும், அந்தம்மாள் கீழ்விழுந்து மூர்ச்சையாகவும், அதன் பின் இருப்புப் பெட்டியிலிருந்தது உமது மடியிலேறவும் நேரிட்டது.

**சின்னசாமி பிள்ளை.**—அடே ! நீ அதிகம் பேசவேண்டாம். உனக்கென்ன வேண்டும் என்றாய் ? பத்தா இருபதா ?

**முனியாண்டி.**—ஐயா ! எனக்குப் பத்தும் வேண்டாம் ! இருபதும் வேண்டாம் ! நான் அந்தம்மாள் மனம் வருந்தப் பொய் சொன்னதைக் குறித்தே துக்கப்படுகிறேன்.

என்று முறுமுறுத்துக்கொண்டு மாடுகளை அதட்டி ஓட்டிக்கொண்டு போனான். வண்டி கழனிவாசலுக்குப் போகும் பொழுது அம்மார்ககம் சென்ற மூவர் "வண்டியில் யார்" என்று கேட்டார்கள்.

**சின்னசாமி பிள்ளை.**—யாரடா அவன் கேட்கிறவன் ?

**வழிப்போக்கரில் ஒருவன்.**—ஐயா ! நான்கேட்டேன் ! வண்டியில் ஆளில்லாமற் போனால் ஏறிப்போகலாம் என்று கேட்டேன். (என்றுவண்டிக்குள் பார்த்து) வண்டிக்குள் ஐயா ஒருவரே போகிறார் ! நாமும் ஏறிப்போகலாம் ! ஐயா கோபித்துக் கொள்ளமாட்டார். ஏறுங்களடா (என்று வண்டியிலேறி உட்கார்ந்தான்).

**சின்னசாமி பிள்ளை.**—அடே ! வண்டியிலே ஏறவேண்டாம் ! இறங்கு ! இறங்கு ! மாடுகள் நடக்கமாட்டா. (என்று வண்டியிலிருந்தவனை இறங்கக் கட்டாயப்படுத்தினான்).

**வண்டியிலிருந்தவன்.**—என்ன ஐயா ! கோபிக்கிறீர்கள் ? 'வண்டி பாரம் விலத்தோடு' என்று சொல்லுவார்கள்.

நான் கொஞ்சதூரம் போய் இறங்கிவிடுகிறேன் (என்று வண்டியிலிருந்து இறங்காமலிருந்தான்).

சின்னசாமி பிள்ளை.—நீ வண்டியிலிருந்து இறங்குகிறாயா? இல்லையா?

வண்டியிலிருந்தவன்.—இறங்காமற்போனால் என்ன செய்வீர்?

சின்னசாமி பிள்ளை.—நீ இறங்காமற்போனால் உன்னை உதைத்துக் கீழே தள்ளுவேன். அடே முனியாண்டி! நீ வண்டியை நிறுத்து.

வண்டியிலிருந்தவன்.—இறங்காமற் போனால் என்னை உதைத்துத் தள்ள உமக்குக் கால் அவ்வளவு நீளமாக இருக்கிறதா?

சின்னசாமி பிள்ளை.—கால் நீளமா அல்லவோ பார் என்று எட்டியுதைத்துத் தள்ளினான். வண்டியிலிருந்தவன் கீழ் குதித்து, சின்னசாமி பிள்ளையின் கால்களைப்பற்றி இழுத்துக் கீழேபோட்டு மார்பில் உதைத்தான். சின்னசாமி எழுந்து அவன் முகத்தில் குத்திப் பிடித்துத் தள்ளினான். மற்றிருவர் தங்கள் தங்கள் கையிலிருந்த தடியால் சின்னசாமி பிள்ளையை அதிகம் அடித்து அவனைக் கீழ்விழுத்தி மூர்ச்சையடைய மீண்டும் அடித்தார்கள். முனியாண்டி சாட்டைக்கம்போடு தன் எஜமானனுக்கு உதவி செய்ய ஓடிவந்தான். அவர்கள் வண்டிக்காரனைப்பார்த்து "நீ அருகில் வந்தால் உன்னைக் கொன்று விடுவோம்" என்று பயமுறுத்தினார்கள். வண்டிக்காரன் அவர்கள் மூவராயிருப்பதால் நாம் என்ன செய்கிறதென்று அஞ்சியிருந்தான். மூவரும் சின்னசாமிபிள்ளை மடியைப் பரிசோதித்து நகைகளையும் ரொக்கத்தையும் எடுத்துக்கொண்டு வண்டியில் வேறேதாகிலும் இருக்கிறதோ என்று தடவிப் பார்த்து அங்கொன்றும் இல்லாமையைக் கண்டு, மூவரும் காட்டுக்குள் ஓடிப்போனார்கள். வண்டிக்காரன் சின்னசாமி பிள்ளையைத் தூக்கி வண்டியிற் போட்டுக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து சின்னசாமி பிள்ளைக்குநேரிட்டதை

அவருடையதாய்க்கும் மனைவிக்கும் சொன்னான். அவர்கள் ஓடிவந்து பார்த்து ஓ வென்றலறி அவனைத் வீட்டுக்குள் கொண்டுவந்து போடச் செய்து, இரணவைத்தியனை அழைத்து வந்து காட்டினார்கள்.

**இரண வைத்தியன்.**—(சின்னசாமிபிள்ளையைப் பரிசோதித்துப் பார்த்துப் பெருமூச்சுவிட்டு) இவரை இங்கு வைத்திருப்பதில் பிரயோஜனம் இல்லை. காலம் போக்காமல் தஞ்சாவூருக்கு அல்லது திருச்சிராப்பள்ளிக்குக் கொண்டு போய் யூரொப்பிய வைத்தியரைக் கொண்டு பார்க்கவேண்டும். சின்னசாமி பிள்ளைக்குத் தலையில் தடிபடிகள் அதிகம் விழுந்திருக்கின்றன. வலதுகை முறிந்து தொங்குகிறது (என்றார்).

சின்னசாமி பிள்ளையின் தாயும் மனைவியும் கேட்டு பயந்து அங்கும் இங்கும் ஆள்களைத் துரத்திக்கொண்டிருந்தார்கள்.

செங்கமலத்தம்மாள் தன் ஸகோதரனால் கன்னத்திலறையுண்டு சல் தரையில் விழுந்தவள், நெடு நேரத்துக்குப் பின் மூர்ச்சை தெளிந்தெழுந்து, "அடா! படுபாவி என்னை அடித்தோ போனாய்! நான் உன் படுமோசக் கருத்தைக்கேட்டு நடந்ததால் என்மேல் பழியேற்றி அதற்கோர் ஸாக்ஷியும் கொண்டு வந்தாய். நான் உன்னை சிந்திப்பதில் பிரயோசனமில்லை" என்றெழுந்து கதவை மூடிக்கொண்டு போய் சயனித்துக் கொண்டாள். காலை வழக்கப்பிரகாரம் எழுந்து தன் வீட்டுவேலைகளைச் செய்து முடித்து, முன் வீட்டில் வந்து உட்கார்ந்திருக்கும்பொழுது, ஒரு அன்னியன் ஓடிவந்து, "அம்மா அம்மா! ஸமாசாரம் கேட்டீர்களா?" என்றான்.

**செங்கமலத்தம்மாள்**—என்ன? என்ன?

**அன்னியன்.**—அம்மா! ராத்திரி சின்னசாமி பிள்ளையை அடித்துக் கையை ஒடித்துவிட்டார்கள். அவரைத் தஞ்சாவூர் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகிறார்கள். தங்களுடைய தாயார் தங்களுக்குச் சொல்லிவரச் சொன்னார்கள்.

**செங்கமலத்தம்மாள்.**—அன்னியன் சொல்லியதைக் கேட்டு மரம்போல் அசைவற்றிருந்து, பின் பெருமூச்செறிந்து, "ஏன் அடித்தார்கள்?" என்று கேட்டாள்.

**அன்னியன்.**—அவர் கையிலிருந்ததைக் கொண்டுபோகவே அடித்தார்கள்.

**செங்கமலத்தம்மாள்.**—அவன் கையில் என்ன இருந்தது? ஒன்றுமில்லையே!

**அன்னியன்.**—தங்களிடமிருந்து கொண்டுபோன நகைகளையே திருடர்கள் கொண்டுபோனார்கள்.

அன்னியன் ஏதோ உளறுகிறான் என்று அவனை ஒரு வண்டி கொண்டுவரச் சொல்லி யனுப்பிவிட்டு, "சின்னசாமிக்கு நகைகள் ஏது! வேறு யாரிடத்திலாகிலும் வாங்கிப் போனானோ" என்றெழுந்து, தான் போகவேண்டியதற்கு வேண்டிய சேலை முதலானவைகளை எடுத்துக் கட்டி வைத்து வழிச்செலவுக்குப் பணம்வேண்டுமென்று இருப்புப் பெட்டியைத் திறந்து, அதிலிருந்த நகைகளும் ரொக்கமும் இல்லாமையைக் கண்டு 'ஆ! பாதகா! மூர்ச்சையாக என்னை அடித்துத் தள்ளிப் பெட்டியிலிருந்ததை யெல்லாம் எடுத்துக்கொண்டு போய்த் திருடனுக்குக் கொடுத்தோ அடிபட்டாய். இனி என்ன செய்கிறது? நான் இதை வெளியிட்டால் நடந்ததை யெல்லாம் சொல்லவேண்டும். நான் போகாமலிருந்தாலும் ஸந்தேகம் தோன்றும்" என்று நெடுநேரம் யோசித்திருந்தாள். அன்னியன் வண்டி கொண்டுவந்து "அம்மா! பிரயாணப்படுங்கள்" என்றான். செங்கமலத்தம்மாள் கண்களில் நீர்வடிய, வீட்டுக் கதவை மூடிக்கொண்டு, அடுத்த வீட்டாருக்கு வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லி வண்டியிலேறினாள்.

செங்கல்பட்டில் ஞானம்பிகையின் உதவியைப் பெற்ற நடேசன் மலைத்து "இதென்ன விந்தை! நாம் ஞானம்பிகை விஷயத்தில் செய்ததென்ன! அவள் பிரதியாக நமக்குச் செய்ததென்ன! ஐயோ! அநியாயமே! நாம் வண்டிக்காரனிடத்தும்

அன்னியனிடத்தும் நம்வசமிருப்பதைக் கொடுக்கும் தருணத்தில் நமக்கு உதவிசெய்து மீட்டுவிட்டாள். அதையும் கவனியாமல் அவளைப் பின்தொடர்ந்தோடினேம். அதைக் கண்டு தெய்வம் சகியாமல் நம்மை இந்தக் கதியாக்கி விட்டது. இப்பொழுதும் நம்மைக் கண்டு கோபித்துப் போலீஸாரிடம் நம்மை ஒப்படைக்காமல் நமக்குப் பணத்தையுங் கொடுத்துப் போனளே!'' என்று அதிகம் கவலைகொண்டு ஓர் தனித்த இடத்தில் உட்கார்ந்து நெடுநேரம் கண்களில் நீரை வடியவிட்டுக்கொண்டிருந்து, அன்றிரவு எட்டேமுக்கால் மணி வண்டியில் ஏறி, விடியற்காலம் இரண்டு மணிக்குத் திருப்பாதிரிப்புலியூரில் வந்திறங்கி, வைத்தியலிங்கம் பிள்ளை வீட்டுக்கு வந்து வெளித்திண்ணையில் படுத்து நித்திரை போனன். காலை ஆறு மணிக்கு இந்திராணியம்மாள் எழுந்து வெளியில் வந்து ஒருவன் திண்ணையில் படுத்திருப்பதைக் கண்டு அவனை எழுப்பினள். நடேசன் எழுந்து முகத்தைத் துடைத்துக்கொண்டு இந்திராணியம்மாளைப் பார்த்தான்.

**இந்திராணி யம்மாள்.**—(திடுக்கிட்டு) தம்பி! நடேசா! நீயா?

**நடேசன்.**—ஆம்! அக்காள்! ராத்திரி இரண்டு மணி ரெயிலில் வந்தேன். தங்களையும் அத்தானையும் எழுப்ப இஷ்டப் படாமல் இங்குப் படுத்துக்கொண்டேன்.

**இந்திராணியம்மாள்.**— (அவனை வீட்டுக்குள் அழைத்துப் போய் தன் நாயகனிடம் விட்டு) நடேசன் இராத்திரி வந்து நம்மை எழுப்பாமல் வெளித்திண்ணையில் படுத்திருந்தான்.

**வைத்தியலிங்கம் பிள்ளை.**—(எழுந்து நடேசனைப் பார்த்து) அப்பா! நீ என்ன வேலை செய்தாய்! நீ ஏன எங்களை எழுப்பக்கூடாது? இதென்ன முகமெல்லாம் வீங்கியிருக்கிறதே?

**நடேசன்.**—அத்தான்! நான் ஒரு பெண்ணுக்குத் தீங்கிழைத்தேன. அப்பெண் அதைப் பொறுத்துக்கொண்டாளாயி

னும், தெய்வம் பொறுக்காமல் தண்டனை விதித்தது (என்று அழுதான்).

வைத்தியலிங்கம் பிள்ளை.—நீ சொல்வது ஒன்றும் விளங்க வில்லை. நீ யாருக்குத் தீங்கிழைத்தாய்? உன்னை யார் தண்டித்தார்கள்?

நடேசன்.—(கண்களைத் துடைத்துக்கொண்டு) அத்தான்! நான் கொடிய பாதகன்! என்னை மன்னிக்கத் தகாது. நான் முன் ஞானாம்பிகைக்குச் செய்தது போதாதென்று மீண்டும் அவளுக்குத் துன்பத்தை விளைவித்தேன். (என்று ஞானாம்பிகையை மாபவரத்தில் கண்டது முதல் அவளிடத்தில் உதவி பெற்றது பரியந்தம் சொல்லி) அத்தான்! எனக்குக் கொடுக்கத் தன்னிடத்தில் அதிகம் இல்லாமற் போயிறதே என்று துக்கப்பட்டாளே! அவளுடைய குணத்தை என்னென்று புகழ்வேன்? அவள் தன் தாயைப் பார்க்க வேண்டுமென்று ஆவலோடு போனவளைத் தடுத்து வைத்திருந்ததற்கு என்னை வேறு விதம் தண்டிக்காமல் எனக்குப் பணத்தைக் கொடுத்துத் தண்டித்தாளே! அவள் செய்தது என்னை வாள்கொண் டறுக்கிறதே (என்று கதறினான்).

வைத்தியலிங்கம் பிள்ளையும் இந்திராணி யம்மாளும் ஞானாம்பிகைக்கு நேரிட்டதைக் குறித்துத் துக்கப்பட்டு, அவளுடைய பரோபகாரச் சிந்தையைப் புகழ்ந்து, நடேசனுடைய துக்கத்தை ஆற்றி அவனைச் சிலநாள் அவ்விடத்தில் இருக்கும்படி வேண்டி, நடேசன் திருப்பாதிரிப்புலியூரில் இருப்பதாகத் தரங்கன்பாடிக்கும் திருமயத்துக்கும் கடிதமெழுதினார்கள்.

நடேசன் திருமயத்துக்கும் தரங்கன்பாடிக்கும் போக மனங்கொள்ளாமல் அவ்விடத்திலேயே இருந்தான். சிலநாள் களுக்குப் பின் வைத்தியலிங்கம்பிள்ளை ஒரு கடிதத்தை நடேசனுக்குக் காட்டி "அப்பா! உன் தமயனைத் தஞ்சாவூரில் வைத்தியசாலையில் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். தரங்கன்

பாடியிலிருந்து யாவரும் போகிறார்கள்" என்று சின்னசாமி பிள்ளைக்கு நேரிட்டதைச சொல்லித் துக்கப்பட்டார். நடேசன் திடுக்குற்றுக் கண்கலங்கி, அன்றிரவே வண்டியேறி, காலை ஆறு மணிக்குத் தஞ்சாவூரை அடைந்து, தன் தாயார் முதலானவர்களிருக்கும் இடம்போய்ச் சேர்ந்து, தன் தாயார், செங்கமலத்தம்மாள், பழனியாயி அம்மாள், சாமியா பிள்ளை, கோகிலம்பாள், தங்கவேலு, பாலு முதலியவர் இருப்பதைக் கண்டு, "அண்ணனுக்கு எவ்விதம் இருக்கிறது?" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

செங்கமலத்தம்மாள்.—அப்பா! என்னமா யிருக்கிறதென்று சொல்லுகிறது. நாங்கள் யாவரும் வைத்தியசாலைக்குப் போகிறோம். நீயும் எங்களோடு வந்துபார்த்தால் உன் தமயனுக்கு எவ்விதமிருக்கிறதென்று கண்டுகொள்வாய். (என்று நடேசனோடு யாவரும் வைத்தியசாலைக்குச் சென்று சின்னசாமி பிள்ளைக்கு அருகில் அமர்கிறார்கள்).

நடேசன்.—(சின்னசாமி பிள்ளையைப் பார்த்து) ஐயோ! அண்ணா! இதென்ன அநியாயம்? ஒரு கையை வெட்டிவிட்டார்களே (என்று முகத்தில் அறைந்துகொண்டு அழுகிறான்).

சின்னசாமிபிள்ளை.—தம்பி! நடேசா! நீ அழவேண்டாம்! எனக்கெல்லாம் ஸௌக்யமாய்விட்டது. இன்னும் சில நாளில் வீட்டுக்கு வந்துவிடுவேன். நம்முடைய நிலத்தை ஏலத்துக்குக் கொண்டுவந்தானே! அது எவ்விதம் முடிந்ததோ தெரியவில்லை. அத்தானும் தங்கை பழனியாயி அம்மாளும் அக்காளும் இவ்வூரிலேயே இருக்கட்டும். நீ ஊருக்குப்போயச் செட்டியாரைக் கண்டு நான் வெளியில் வந்தவுடன் அவர் கணக்கைத் தீர்த்துவிடுகிறேன் என்று சொல்.

சாமியாபிள்ளை.—நீர் அது விஷயத்தில் கவலை கொள்ளவேண்டாம். நான் நடேசனை அனுப்பி விசாரித்து வேண்டியதைச் செய்யச் சொல்லுகிறேன்.

**பழனியாயி யம்மாள்.**—(*தன் நாயகனைத் தனித்தழைத்து*) நாம் ஏன் மறைக்கவேண்டும்? உண்மையை ஏன் சொல்லி விடக்கூடாது?

**சாமியாபிள்ளை.**—'நிலத்தை ஏலத்தில்போட்டு அவனே எடுத்துக் கொண்டான்; மாடு கன்றுகளையும் கொண்டுபோய் விட்டான்' என்று சொன்னால் அவன் ஏங்கி திகிற்படுவான். திகிற்பட்டால் இன்னும் கெடுதலாக முடியும்.

**பழனியாயி யம்மாள்.**—என்ன கெடுதலாகும்? இறந்து போவானென்றோ பயப்படுகிறீர்கள்? இப்படிபாவி இறந்தாலென்ன? எக்கேடு கெட்டா லென்ன? அக்காளை இவன் படுத்திய பாட்டைக் கேட்டபின் இவனை ஏன் பார்க்க வந்தோமென் றிருக்கிறது. அக்காளை அடித்த கையொன்றே போனது; உதைத்தகா லொன்றும் போகவில்லையே! அந்தக்கொடுமை இவனை விடுமா (என்று கடுங்கோபத்தோடு சொன்னாள்).

**சாமியா பிள்ளை.**—இங்கு ஒன்றும் பேசவேண்டாம். நாம் வீட்டிற்குப் போய்ப் பேசலாம்.

**சின்னசாமி பிள்ளை.**—(கோகிலாம்பாளையும் மற்றச் சிறுவர்களையும் தன்னருகில் அழைத்து, அவர்கள் அழுவதைக் கண்டு) நீங்கள் அழவேண்டாம் என் கண்மணிகளே! எனக்கு முற்றிலும் ஸௌக்யமாய்விட்டது. நான் விரைவில் வீட்டுக்கு வந்துவிடுவேன். (என்று அவர்கள் கண்களைத் துடைத்தான்).

வைத்தியசாலையிலிருக்கும் சேவகனொருவன் வந்து "நீங்கள் நெடுநேரமாக இருக்கிறீர்கள். துரை வந்தால் கோபித்துக்கொள்ளுவார். போங்கள் என்றான். (யாவரும் சின்னசாமி பிள்ளையிடம் விடைபெற்றுத் தங்களிருப்பிடம் உற்றார்கள்).

**நடேசன்.**—(தன் தாயைப் பார்த்து) அம்மா! என்னை அண்

ணன் ஊருக்குப் போகச் சொன்னரே.! நான் எப்பொழுது போகவேண்டும் ?

**நடேசன் தாய்.**—ஊருக்குப் போய் என்னசெய்யப்போகிறாய் ?

**நடேசன்.**—அண்ணன் வெளி வருந்தனையும் செட்டியாரைப் பொறுத்துக்கொள்ளச் சொல்லப் போகிறேன்.

**நடேசன் தாய்.**—இன்னும் பாக்கியாக இருப்பதற்கு அவனைப் பொருத்துக்கொள்ளச் செல்லப்போகிறாயா ?

**சாமியா பிள்ளை.**—அப்பா ! நடேசா ! நீ ஊருக்குப் போக வேண்டிய வேலை இல்லை. செட்டி நிலத்தையும் மாடு கன்றுகளையும் ஏலம்போட்டு எடுத்துக்கொண்டான். வீட்டையும் ஏலம் போடுவான்போல் காண்கிறது. நீங்கள் அவனிடத்தில் கடன்வாங்கியதோடு, அதைக் கொடுக்காமல் அவனை உன் தமயன் கண்டவிதம் பேசி அவனை ஆள் வைத்து அடிக்கமுயன்றதையும் பார்த்து ஸகிக்காமல் தான் கொடுத்த கடனை வசூல் செய்யவேண்டிய மார்க்கத்தைத் தேடி யாவற்றையுங் கைப்பற்றிக்கொண்டான். கடன்காரனைப் படுத்தியது போதாதென்று சின்னசாமி உன் பெரிய தமக்கையின் நகைகளையும் கொள்ளைகொண்டு போய் அவைகளைத் திருடனுக்கு ஒப்படைத்தான். துஷ்டப் பிள்ளைகளுக்கு ஊரார் புத்தி கற்றுக் கொடுப்பார்களென்றவிதம் உங்களுக்கு முடிந்தது.

**பழனியாயி யம்மாள்.**—தாங்கள் ஏன் அதைச் சொல்லுகிறீர்கள் ? (தன் தாயாரைக் காட்டி) அந்த அம்மாளுக்குக் கோபம் வரப்போகிறது. பெண்கள்மேல் தாயுக்கு ஆசையிருக்குமென்று உலகில் சொல்லுவார்கள். நாங்கள் அதைக் கொடுத்து வைக்கவில்லை. பெண்களிடத்தி லிருப்பதைப் பிடுங்கிக்கொண்டுபோய், பிள்ளையோ ! பிள்ளையோ ! என்று கொட்டிக்கொண்டிருந்தார்கள்.

**பழனியாயின் தாய்.**—நான் எதையடியம்மா உங்களிடத்திலிருந்து பிடுங்கிக்கொண்டுபோய் பிள்ளைகளுக்குக் கொடுத்து

விட்டேன்? நீங்கள் என்னத்தை எங்களுக்குக் கொடுத்து நொந்துபோனீர்கள்?

**பழனியாயி யம்மாள்.**—அம்மா! என்ன சொன்னீர்கள்? உங்களுக்கு அக்காள் ஒன்றும் கொடுக்கவில்லையா?

**பழனியாயின் தாய்.**—எங்களுக்கு என்ன கொடுத்தாள்?

**செங்கமலத்தம்மாள்.**—அம்மா! பழனியாயி! நீ சும்மா இரு நான் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை.

**பழனியாயி யம்மாள்.**—முத்தம்மாள் போனபின் அவள் நகைகளை யார் வாங்கிக் கொண்டு போனது?

**பழனியாயின் தாய்.**—என்னிடத்திலா அந்த நகைகளைக் கொடுத்தாள்?

**பழனியாயி யம்மாள்.**—தங்களிடத்தில் கொடுக்காமற் போனாலும் தங்கள் முன்னிலையில் தங்கள் மகனிடத்தில் கொடுக்கவில்லையா?

**பழனியாயின்தாய்.**—நீங்கள் யாரிடத்தில் கொடுத்ீர்களோ அவனிடத்தில் அதைக் குறித்துப் பேசுங்கள்.

**பழனியாயி யம்மாள்.**—தாங்கள் எத்தனை தடவை ஆயிரம் இரண்டாயிரம், ஆயிரம் இரண்டாயிரமாக அக்காளிடத்தில் வாங்கிப் போனீர்கள்?

**பழனியாயின் தாய்.**—என்னை அழைத்துப்போய் என்னிடம் ரூபா கொடுத்து, 'இதைக் கொண்டுபோய்த் தம்பியிடத்தில் கொடு' என்று சொன்னால், அவள் சொல்லிவிதம் வாங்கிக்கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறேன்.

**பழனியாயி யம்மாள்.**—தாங்கள் அக்காளிடத்தில் பணம் கேட்டதில்லையா?

**பழனியாயின் தாய்.**—அக்காளிடத்தில் தான் கேட்டதாகப் போய்க் கேள் என்று சின்னசாமி சொன்னால், அவ்விதமே கேட்டு நான் வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்திருக்கிறேன்.

**பழனியாயி யம்மாள்.**—இவ்வளவு பணத்தையும் நகைகளேயும் வாங்கிக்கொண்டு போய் என்ன செய்தீர்கள் ?

**பழனியாயின் தாய்.**—வாங்கிச் செலவு செய்தவனைக் கேட்டால் தெரியும்.

**பழனியாயி யம்மாள்.**—தாங்கள் மின்னூல் செய்துகொள்ள வேண்டுமென்று அக்காளிடம் வாங்கிப்போன ரூபா எங்கே ? மின்னூல் செய்துவிட்டீர்களா ? தட்டான் இன்னும் கொடுக்கவில்லையா ?

**பழனியாயின் தாய்.**—நான் மின்னூல் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டபொழுது அவள் என்ன எண்ணத்தோடு கொடுத்தாளோ அறியேன். அதை நான் வாங்கிக்கொண்டு போனபொழுது வீட்டில் கடன்காரன் வழிமறித்து உட்கார்ந்து சின்னசாமியைத் தொந்தரவுசெய்துகொண்டிருப்பதைக் கண்டு அவனிடத்தில் கொட்டிக் கொடுத்து விட்டேன்.

**செங்கமலத்தம்மாள்.**—அம்மா ! பழனியாயி ! அந்தம்மாளை ஒன்றும் கேட்கவேண்டாம் என்று நான் சொல்லும்பொழுது, நீ ஏன் கேட்கிறாய் ? நான் கொடுக்கும் பொழுதெல்லாம் கெட்ட வினேயோடு கொடுத்ததால் அவர்களுக்கு அது விர்த்தியாகவில்லை.

**பழனியாயின் தாய்.**—ஆம் ! அதற்கென்ன தடையா ?

**சாமியா பிள்ளை.**—இவ்வளவு பணத்தை என்ன செய்தான் என்று தெரியவில்லை !

**பழனியாயி யம்மாள்.**—பணத்தைச் செலவழிக்கவா அவருக்கு வழி தெரியாது ! அவருக்கு உள்ளூரில் ஒரு கூத்தியார் ! குன்றக்குடியில் ஒரு கூத்தியார் ! சூரக்குடியில் ஒரு கூத்தியார் ! காரைக்குடியில் ஒரு கூத்தியார் ! கோவிலூரில் ஒரு கூத்தியார் ! புதுக்கோட்டையில ஒரு கூத்தியார் ! தஞ்சாவூரில் ஒரு கூத்தியார் ! எங்கும் கூத்தியாரை வைத்துக் கொண்டு தன் தமக்கையிடம் ரூபாவை வாங்கி

வாங்கிச் செலவு செய்துகொண்டிருந்தார் என் தமக்கையும் சலிக்காமல் தன் தம்பிக்குக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். முடிவாக அவர்களை அடித்துத்தள்ளி மூர்ச்சையாக்கி மடியிலிருந்த சாவியை யெடுத்துப் பெட்டியைத் திறந்து இருந்த நகைகளையும் ரூபாயையும் எடுத்துக்கொண்டு போய்த் திருடனுக்கு ஒப்படைத்துவிட்டார், நாளை அத்தான் வந்து நகைகள் எங்கே என்று கேட்டால் என்ன சொல்லுவார்களோ தெரியாது (என்று கடுகடுத்துச் சொன்னாள்).

**பழனியாயின் தாய்.**—அம்மா! பழனியாயி! சின்னசாமி இல்லாமலிருக்குபொழுது, நீங்கள் உங்கள் மனம்போல் பேசுவதில் பலன் ஒன்றுமில்லை. அவன் வந்தவுடன் உன் தமக்கைக்கு நகைகளைச் செய்துபோடச் சொல்லுகிறேன். நீங்கள் அதுவிஷயத்தில் கவலைகொள்ள வேண்டாம்.

**பழனியாயி யம்மாள்.**—என் அக்காள் தாங்கள் கவலை கொள்ளவேணடும்! அந்தம்மாளுடைய பிள்ளை வைத்தியசாலையிலிருந்து வந்த வுடனே, தான் புதைத்து வைத்திருப்பதைத் தோண்டிக்கொண்டு வந்தாவது, நிலத்தை ஈடு வைத்துக் கடன் வாங்கியாவது, தங்களுக்கு நகைகளைச் செய்து கொடுத்துவிட அம்மா சொல்லுவார்கள். தாங்கள் பயப்படவேண்டாம் (என்று கோபச்சிரிப்புச் சிரித்தாள்).

**பழனியாயின் தாய்**—நாங்கள் புதையல் எடுக்கிறோமோ அல்லது ஒருவருக்கு அடிமையாகிறோமோ! அதைக்குறித்து நீங்கள் பேசவேண்டியதில்லை உங்களுக்கு நகைகளே வேண்டும். வேறு பேச்சு என்?

**சாமியா பிள்ளை.**—பழனியாயி! நீ பேசாமலிரு! வீணாக வார்த்தையை வளர்த்தவேண்டாம்.

**பழனியாயி யம்மாள்.**—அக்காள்! இனி ஒரு விநாடியும் எனக்கு இங்கிருக்கப் பிரியமில்லை. தாங்கள் என்னோடு சிலநாளிருந்து போகவேண்டும்.

உடனே தன் நாயகனை வண்டி கொண்டு வரச்சொல்லி

யனுப்பித் தங்கள் ஸாமான்களை யெடுத்துக்கொண்டு தன் தமக்கையோடும் தன் பிள்ளைகளோடும் வெளியில் வந்தாள். சாமியா பிள்ளை இரண்டு வண்டியைக் கொண்டு வந்தார். யாவரும் வண்டியிலேறி ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போனார்கள். சாமியா பிள்ளை இறங்கிப் போய், பத்தரை மணி வண்டி இன்னும் போகவில்லையென அறிந்து, தன்மனைவியிடம் வந்து, "எந்த ஊருக்கு டிக்கட்டு வாங்குகிறது ?" என்று கேட்டார்.

**பழனியாயி யம்மாள்.**—கும்பகோணத்துக்கு வாங்குங்கள்.

**செங்கமலத்தம்மாள்.**—அம்மா பழனியாயி ! கும்பகோணத்துக்கு ஏன் டிக்கட்டு வாங்கச் சொன்னாய் ?

**பழனியாயி யம்மாள்.**—அக்காள் ! அங்கு ஞானும்பிகையென்ற பெண் ஒருத்தி இருக்கிறாள். அவளைப் பார்த்துப் போக வேண்டும்.

**செங்கமலத்தம்மாள்.**—கோகிலம்பாள் சொல்லிக் கொண்டிருந்த ஞானும்பிகையா ?

**பழனியாயி யம்மாள்.**—ஆம் ! ஆம் !

**கோகிலம்பாள்.**—காஞ்சீபுரத்திலிருந்து அந்த அக்காள் வந்து விட்டார்களா ?

**பழனியாயி யம்மாள்.**—வந்துவிட்டாளென்று நல்லமுத்துப் பிள்ளை எழுதியிருக்கிறார்.

**கோகிலம்பாள்.**—இப்பொழுது யார் வீட்டில் அந்த அக்காள் வேலைசெய்துகொண்டிருக்கிறார்கள் ?

**பழனியாயி யம்மாள்.**—யாரோ கறுப்பண்ணபிள்ளை யொருவர் இருக்கிறாராம். அவரே காஞ்சீபுரம் சென்று ஞானும்பிகையையும் அவள் தாயாரையும் அழைத்து வந்திருக்கிறாராம்.

அவ்வளவிலே சாமியாபிள்ளை டிக்கட்டோடு வந்து யாவரையும் அழைத்துப்போய் வண்டியிலேற்றித் தானும் வண்டியிலேறினார்.

## 21—ம் அத்தியாயம்

கும்பகோணத்தில் வரதராஜ பிள்ளை வீட்டுக்கடுத்த வீட்டில் புதிதாக வாங்கிய ஸாமான்கள் நிறைந்திருக்க, அவைகளை ஒரு பெண்பிள்ளை வெண்கலம் பித்தளை செப்புப் பாத்திரங்களை வேறு பிரித்து ஒவ்வோர் அறையிலும் வைத்துக்கொண்டிருந்தாள். சமையலறையில் ஒரு பெண் வேலை செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில் சிலர் அவ்வீட்டுக்குள் சென்றார்கள். அங்கிருந்த பெண்பிள்ளை அவர்களைப பார்த்து, "அம்மா! நீங்களா வந்தீர்கள்!" என்று அவர்களுக்கு முகமன்கூறி உட்காரச் சொல்லி, சமையலறைக் கருகிலோடி, "அம்மா ஞானம்பிகை தரங்கன்பாடியிலிருந்து யாவரும் வந்திருக்கிறார்கள். விரைவில் வா" என்றாள். சமையலறையிலிருந்த பெண் வெளியில் வந்து பார்த்து ஓடிவந்து, பழனியாயி யம்மாளுக்கும் சாமியா பிள்ளைக்கும் செங்கமலத்தம்மாளுக்கும் கீழ்விழுந்து நமஸ்காரஞ் செய்து, கோகிலம்பாளையும் மற்றச் சிறுவர்களையும் கட்டிப்பிடித்தணைத்துக் கொண்டு அவர்கள் முகமெல்லாம் முத்தங் கொடுத்தாள்.

**செங்கமலத்தம்மாள்.**—(ஞானம்பிகையின் ஸௌந்தரத்தைப் பார்த்துத் திடுக்குற்று) இவள்தானா ஞானம்பிகை (என்று தன் தங்கையைக் கேட்டாள்).

**பழனியாயி யம்மாள்.**—ஆம்! அக்காள்! (என்று தன் தமக்கைககுச சொல்லி, பின் ஞானம்பிகையைப் பிடித்தணைத்துக்கொண்டு) அம்மா! ஞானம்பிகை! நாங்கள் என்ன கொடுமையைச் செய்தோம்! எங்களை மன்னிக்கத தகுமா (என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள்).

**ஞானம்பிகை.**—என்னைத் தங்கள் சொந்த பெண்போல் வைத்திருந்தும் தாங்கள் இவ்விதம் சொல்லலாமோ?

என்று சொல்லி இரத்தின சமுக்காளம் கொண்டுவந்து போட்டு, சிறுவர்களைச் சமையலறைக்குள் அழைத்துச் சென்றாள்.

**சாமியா பிள்ளை.**—ஐயா! நல்லமுத்துப் பிள்ளை! தங்களை

ரெயில்வே ஸ்டேஷனில் பார்க்காமற்போனுல் வீட்டைக் கண்டு பிடிப்பது கடினமாகவே யிருக்கும்.

நல்லமுத்துப் பிள்ளை.—நான் என்னுடைய சிநேகர் ஒருவரை ரெயில்வண்டியில் ஏற்றிவிட்டுத் திரும்பும்பொழுது தங்களை மட்டும் பார்த்துத் தங்களிடம் வரும்பொழுது அம்மாளும் மற்றவர்களும் சற்றுத் தூரத்தில் வருவதைப் பார்த்தேன்.

செங்கமலத்தம்மாள்.—அம்மா! பழனியாயி! ஞானம்பிகை இவ்வூரில் பிறந்தவளா? இவளுடைய தாய் எங்கே? (என்று ரகஸ்யமாகக் கேட்டாள்).

பழனியாயி யம்மாள்.—அவள் இவ்வூரில் பிறந்தவளல்ல. அவள் எந்த ஊரில் பிறந்தாளென்பதும் தெரியாது. அவள் தன் தாயோடு நெடுநாள் தஞ்சாவூரிலிருந்து பின் தரங்கன் பாடியில் வந்திருந்தே நம்முடைய வீட்டுக்கு வந்தாள். நம்மைக் கண்டு முகமன் கூறி அழைத்தவளே அவளுடையதாய்.

செங்கமலத்தம்மாள்.—பெண் அதிக ஸௌந்தரமாக இருக்கிறுள்.

பழனியாயி யம்மாள்.—ஆம்! தரங்கன் பாடியிலிருந்ததைவிட இப்பொழுது ஸௌந்தரமாக இருக்கிறுள்.

நல்லமுத்துப் பிள்ளை.—அவள் ஸௌந்தரமாக இருப்பது ஒன்று மட்டுமல்ல. அவளுடைய குணம் அவள் அழகைவிட அழகுள்ளது. நடேசனைக் குறித்துத் திருப்பாதிரிப்புலியூரிலிருந்து ஏதாகிலும் எழுதினுர்களா?

சாமியா பிள்ளை.—நடேசன் அவ்விடம் வந்திருப்பதாக எழுதினுர்கள்.

நல்லமுத்துப் பிள்ளை.—ஞானம்பிகை விஷயத்தில் அவன் செய்ததை எழுதவில்லையா?

பழனியாயி யம்மாள்.—ஒன்றும் எழுதவில்லையே! என்ன செய்தான்?

நல்லமுத்துப் பிள்ளை, அவன் செய்ததையும் அவனுக்கு

ஞானம்பிகை செய்ததையும், பின் பணங் கொடுத்ததையும் சொன்னர்.

**பழனியாயி யம்மாள்.**—அக்காள் ! பார்த்தீர்களா ! இந்தப் படுபாவிகள் எவ்விதம் தலையெடுப்பார்கள் (என்று தன் வீட்டில் அவன் செய்ததையும் சொன்னுள்).

**செங்கமலத்தம்மாள்.**—திருப்பாதிரிப்புலியூரி லிருக்கும் இந்திராணியையும் அவள் புருடனையும் ஞானம்பிகை அறிவாளா ?

**பழனியாயி யம்மாள்.**—அறிவாள் (என்று ஞானம்பிகை அவ்விடத்தில் வைத்தியலிங்கம் பிள்ளையை வழிக்குக்கொண்டு வந்ததைச் சொன்னுள்).

அப்போது ஞானம்பிகை காப்பி கொண்டுவந்து வைத்து, "இதை முதலில் சாப்பிடுங்கள். சமையல் விரைவில் செய்து விடுகிறேன். பசியோடிருக்க வேண்டாம்" என்று யாவரையும் சாப்பிட வேண்டினுள்.

**சாமியா பிள்ளை.**—அம்மா ! ஞானம்பிகை ! பிள்ளைகள் எங்கே ?

**ஞானம்பிகை.**—அவர்கள் பசி பொறுக்க மாட்டார்களென்று அவர்களுக்கு முன் சாப்பாடு போட்டேன். அவர்கள் சாப்பிடுகிறார்கள்.

**பழனியாயி யம்மாள்.**—நீங்கள் இன்னும் சாப்பிடாமலா இருக்கிறீர்கள் ?

**ஞானம்பிகை.**—ஸாமான்கள் வந்ததை எடுத்து வைத்துக் கொண்டிருந்து இப்பொழுதுதான் சமையல் செய்யப் போய்ச் சாதம் வடித்தேன். என் அண்ணியிடத்திலிருந்து பதார்த்தம் வாங்கி என் தங்கைக்கும் தம்பிமார்களுக்கும் சாதம் வட்டித்தேன்.

**பழனியாயி யம்மாள்.**—உன் அண்ணியா ! உனக்குத் தமயனிருப்பதாக எனக்கு இதுபரியந்தம் தெரியாதே ! உன் அண்ணி எங்கே ?

ஞானம்பிகை அங்கிருந்தே "அண்ணீ !" என்றழைத்

தான். 'வந்தேன் மச்சி' என்று சொல்லிக்கொண்டே ஒரு பெண்பிள்ளை சமையலறையிலிருந்து ஓடிவந்தாள்.

**ஞானம்பிகை.**—அண்ணி ! தங்களைப் பார்க்க வேண்டுமென்று என் தாயாரும் பெரியதாயாரும் சொன்னதால் தங்களை அழைத்தேன். (என்று சமையலறைக்குள் சென்றாள்).

**பழனியாயி யம்மாள்.**—(அவளைப் பிடித்திழுத்து உட்கார வைத்து) அம்மா ! நீங்களெல்லாம் இருக்கும்பொழுது உன் நாத்தனாரை ஒருவர் வீட்டில் வேலைசெய்ய விட்டு விட்டீர்கள் ?

**பெண்பிள்ளை.**—நாங்கள் என்ன செய்யலாம் ! நாங்கள் எவ்வளவு சொல்லியும் கேளாமல் தன் தமயன துணையாக வருகிறேன் என்பதையுந் தடுத்துத் தனித்துப்போய் அதிகம் சங்கடப்பட்டுக் காஞ்சீபுரம் சேர்ந்திருந்ததை என் நாத்தனாரின் தந்தை (என் மாமனார்) அறிந்துபோய் அழைத்து வந்தார்.

**சாமியா பிள்ளை.**—ஞானம்பிகைக்குத் தாய் தந்தை தமயன் பெண்சாதி யாவருமிருக்க நம்மிடத்தில் தனக்குத் தாயைத் தவிர வேறொருவரும் இல்லை யென்று ஏன் சொன்னாள் ?

**பழனியாயி யம்மாள்.**—என்ன காரணத்தால் சொல்லாமல் இருந்தாளோ தெரியவில்லை. சிலவேளை அவர்கள்மேல் அப்பொழுது மனத்தாங்கலாயிருக்கக்கூடும். அம்மா ! உன் பேர் என்ன ?

**பெண்பிள்ளை.**—அம்மா ! என் பேர் மீனாம்பாள். நான் உங்களையெல்லாம் பட்டினியோடு வைத்து வார்த்தையாடிக் கொண்டிருந்தால், என் நாத்தனார் கோபிப்பார்கள். நானும் போய் அவர்களுக்கு உதவியாக நிற்கவேண்டும். சாப்பிட்டபின் அவகாசமாய உட்கார்ந்து வார்த்தையாடலாம் (என்று சமையலறைக்குள் ஓடினாள்).

**பழனியாயி யம்மாள்.**—மீனாம்பாள் தன் நாத்தனாருக்கு அதிகம் பயப்படுகிறாள் பார்த்தீர்களா (என்றாள்).

நல்லமுத்துப் பிள்ளை, தேகங் குலுங்க நகைத்து, மீனும்பாள் யாரென்றும் கறுப்பண்ண பிள்ளை யாரென்றும், அவர்களுக்குள் முறை ஏற்பட்ட விதமும் சொன்னார். யாவரும் அதிசயப்பட்டார்கள்.

**பழனியாயி யம்மாள்.**—(தன் நாயகனைப் பார்த்து) தங்களுக்குப் பங்காளி யண்ணன் மகன் கும்பகோணத்திலிருக்கிறான் என்று சொல்லிக்கொண்டிருந்தீர்களே! அவன் பேர் என்ன ?

**சாமியா பிள்ளை.**—அவன் எங்கிருக்கிறானென்று இப்பெரும் பட்டணத்தில் தேடப் போகிறோம்? அவன் பெயர் வரதராஜன். அவன் மனைவியின் பெயர் தெரியாது. அவன் தந்தையின பெயர் முத்துராமலிங்கம் பிள்ளை. எனக்கும் அவருக்கும் நிலத்து விஷயமாக மனச்சலிப்பு உண்டானதால், அவர்களோடு பேச்சுவார்த்தையில்லை (என்று சொல்லிக் கொண்டிருந்தார்).

இருக்கும்போது, மீனும்பாள் "மாமா, மாமி, எழுந்திருங்கள்" என்று யாவருக்கும் ஜலம் கொண்டுவந்து கொடுத்தாள். நல்லமுத்துப்பிள்ளையும் அவர்களோடு எழுந்து போகும்பொழுது, "மீனும்பாளுடைய புருடன் பேரும் வரதராஜ பிள்ளையே" என்றார்.

யாவரும் கைகழுவிக்கொண்டுபோய் இரண்டு பக்கத்தில் இலைகள் போட்டிருக்க ஒரு பக்கத்தில் சாமியா பிள்ளையும் நல்லமுத்துப்பிள்ளையும் உட்கார்ந்தார்கள். மற்ற இடத்தில் செங்கமலத்தம்மாளும் பழனியாயி யம்மாளும் உட்கார்ந்தார்கள். ஞானம்பிகை ஆண் பிள்ளைகளுக்கு வட்டித்துக் கொண்டிருந்தாள். மீனும்பாள் பெண்பிள்ளைகளுக்கு வட்டித்துக்கொண்டிருந்தாள்.

**பழனியாயி யம்மாள்.**—(மீனும்பாளைப் பார்த்து) அம்மா! உன் மாமனார் பேர் என்ன ?

**மீனும்பாள்.**—இறந்துபோனவர் பெயரைக் கேட்கிறீர்களா ?

உயிரோடிருக்கிறவர் பெயரைக் கேட்கிறீர்களா? (என்று நகைத்தாள்).

**பழனியாயி யம்மாள்.**—இறந்து போனவர் பெயரையே கேட்கிறேன்.

**மீனும்பாள்.**—மூக்குத்தியில் தொங்குகிறதே அதனோடு ஸேது விலிருக்கும் ஸ்வாமி பெயரையும் சேர்த்துச் சொல்லுங்கள்.

**பழனியாயி யம்மாள்.**—முத்து ராமலிங்கமா?

**மீனும்பாள்.**—ஆம்! ஆம்! அதுதான் என் மாமனார் பெயர் ஆனால் 'பிள்ளை' என்று அப்பெயரோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பழனியாயி யம்மாள், அதிசயப்பட்டு மீனும்பாளிடம் ஒன்றும் சொல்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள்.

ஆண்பிள்ளைகளிருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த இடத்தில், சாமியாபிள்ளை ஞானம்பிகையைப் பார்த்து "அம்மா! கறுப்பண்ண பிள்ளை எங்கு போயிருக்கிறார்? அவர் சாப்பாட்டுக்கு வரமாட்டாரா?" என்று கேட்டார். ஞானம்பிகை, "அவரும் அண்ணனும் சாமி மலைக்குப் போயிருக்கிறார்கள். மாலை வருவார்கள்" என்றாள்.

யாவரும் சாப்பிட்டுவந்து உட்கார்ந்து தாம்பூலந் தரித்துக்கொண்டிருக்கும்பொழுது, பழனியாயி யம்மாள் மீனும்பாளைப்பார்த்து, "அம்மா! நீ எங்களை ஸரியான முறையோடு கூப்பிட்டாய்! உன் மாமனாருடைய பங்காளி தம்பியே இவர்" என்று தன்நாயகனைக் காட்டினாள். "இந்த அம்மாள் என்னுடைய தமக்கை முத்துப்பட்டணம் வேலாயுதம்பிள்ளையின் மனைவி செங்கமலத்தம்மாள்" என்றாள். மீனும்பாள் எழுந்து மூவருக்கும் நமஸ்காரம் செய்தாள். அவர்கள் ஆசிர்வதித்து உட்காரச சொன்னார்கள். அவள் உட்கார்ந்து "என் நாயகனும் தனக்குச் சிறிய தந்தை யொருவர் தரங்கன்பாடியில் இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார். இந்த அண்ணன் தங்களையெல்லாம் அறிந்தவராயிருந்தும் எங்களுக்குச் சொல்லவில்லையே" என்றாள்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—நீங்கள் எல்லாரும் ஒரு குளத்து நண்டென்று எனக்கு எப்படித் தெரியும் (என்று நகைத்தார்).

**பழனியாயி யம்மாள்.**—அம்மா! ஞானம்பிகை! அண்ணன் வீட்டுக்குப் போகவேண்டும். எங்களுக்கு உத்தரவு கொடு.

**ஞானம்பிகை.**—அம்மா! தாங்கள் அவ்விதம் சொல்லலாமோ! தாங்கள் இவ்விடத்திலேயே இருக்கவேண்டும்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை! என் மனைவி மாயவரத்துக்குப் போயிருக்கிறாள். ஐந்தரைமணி வண்டியில் வந்து விடுவாள். அவள் வீட்டில் இல்லாமற்போனதால் இங்கு அழைத்துவந்தது தப்பிதமபோல் காண்கிறது. எங்கள் வீட்டில் ஒருவேளை சாப்பிட வேண்டாமோ! ஐயா அவர்களும் வீட்டில் இல்லை. இவர்கள் சில நாள் இங்கிருப்பார்களாதலால், இங்கு வராமலும் போகாமலும் இருப்பார்களா? இபபொழுது தடங்கல் சொல்ல வேண்டாம்.

**மீனும்பாள்.**—அண்ணு! தாங்கள் எங்களை மறந்துவிட்டீர்கள். என் நாயகன் வீட்டில் இல்லாததால் அழைத்துப்போகிறேன் என்கிறீர்கள். என் நாயகன் வந்தவுடன் அவரை அனுப்புவேன். இராச்சாப்பாடு இங்கேயே வைத்துக் கொள்ளவேண்டும்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா! அவ்விதம் சொல்லவேண்டாம். நாளை காலையில் வேண்டுமானல் உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளலாம்.

**ஞானம்பிகை**—அம்மா! தங்கையும் தம்பிமார்களும் என்னேடிருக்கட்டும் (என்ருள்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—அம்மா! ஞானம்பிகை! ஐயா அவர்கள் வந்தவுடன் யாவரையும் அழைத்துவந்து இவ்விடத்தில் விட்டு உன்னேடிருக்கும்படி செய்கிறேன. இப்பொழுது தடங்கல் சொல்லாமல அனுப்பிவிடு.

**ஞானம்பிகை.**—(நகைத்து) தங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். நான் வேண்டாம் என்ருல் தங்களுக்குக் கோபம் வரும்.

**பழனியாயி யம்மாள்.**—(நல்லமுத்துப் பிள்ளையைப் பார்த்து நகைத்து) சிறுவர்கள் பின்கட்டில் விளையாடுகிறார்கள். தாங்கள் அவர்களை அழைத்துவாருங்கள்.

நல்லமுத்துப் பிள்ளை பின்கட்டுக்குச் சென்று அவர்களை அழைத்துவந்து "எங்கள் வீட்டுக்குப் போகவேண்டும்; புறப் படுங்கள்" என்றார்.

**கோகிலம்பாள்.**—அக்காள் நம்மோடு வருகிறார்களா (என்று கேட்டாள்).

**பழனியாயி யம்மாள்.**—அக்காள் எப்படி வரமுடியும். நாம் இன்று அண்ணன் வீட்டுக்குப் போய் நாளை வரலாம்! புறப்படுங்கள்.

"நாங்கள் அக்காளை விட்டு வரமாட்டோம். நீங்கள் யாவரும் போய் நாளை வாருங்கள்" என்று சிறுவர்களெல்லாம் சொல்லிப் பின்பக்கம் ஓடிப்போனார்கள்.

**பழனியாயி யம்மாள்.**—அண்ணா! பார்த்துக்கொண்டீர்களா! அவர்கள் போகமாட்டார்களென்ற தைர்யத்தால் ஞானம் பிகை நகைத்தாள்.

**சாமியா பிள்ளை.**—சிறுவர்கள் ஞானம்பிகையை விட்டு வர மாட்டார்கள். அவர்கள் இங்கேயே இருக்கட்டும்.

பழனியாயி போகும்பொழுது நல்லமுத்துப் பிள்ளையைப் பார்த்து "அண்ணா! என்ன காரணத்தால் கறுப்பண்ணபிள்ளை ஞானம்பிகையையும் அவள் தாயையும் அழைத்து வந்திருக் கிறார்?" என்று கேட்டாள்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—இரண்டு காரணம் உண்டு. முதலாவது:—புதுச்சேரியிலிருக்கும் சின்னதம்பி பிள்ளை மகன் மீனாக்ஷிஸுந்தரம் ஞானம்பிகையை விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கிறார். ஞானம்பிகை ஏழையென்றும் ஒருவர் வீட்டில் வேலை செய்து கொண்டிருக்கிறாளென்றும் அவர் தாய்தந்தை ஞானம்பிகையைத் தன் மகனுக்குக் கொள்ள ஸம்மதிக்கி

ருர்களில்லே. ஆனதால் கறுப்பண்ணபிள்ளே இப்பொழுது ஞானம்பிகை யிருக்கும் வீட்டை அவள்பேருக்கு விலேக்கு வாங்கினுர். அவளுக்கு வேண்டிய நகைகளேயும் போட்டு மீனுக்ஷிஸுந்தரத்துக்குக் கொடுக்கவேண்டு மென்று எண்ணம் கொண்டிருக்கிருர். இரண்டாவது:—ஞானம்பிகை பருவமடைகிற காலம் ஸமீபமாயிருக்குமென்று நினேத்து அவள் தாயை அவளோடிருக்கும்படி செய்திருக்கிருர்.

**பழனியாயி யம்மாள்.**—வீடு ஞானம்பிகை பேருக்கு வாங்கி யிருப்பது அவளுக்குத் தெரியுமா ?

**நல்லமுத்துப் பிள்ளே.**—தெரியாது ! தெரிவிக்கப் பயப்படுகிருர்?

**பழனியாயி யம்மாள்.**— ஏன் பயப்படுகிருர் ! தெரிவித்தால் ஸந்தோஷப்படுவாளே !

**நல்லமுத்துப் பிள்ளே.**—ஒருதடவை அவர் ஆருயிரம் பெறுமதி யான நகைகளேக் கொடுத்தார். அவள் அதை ஒப்புக் கொள்ளாமல் திருப்பிக் கொடுத்துவிட்டாள்.

**பழனியாயி யம்மாள்.**—கறுப்பண்ண பிள்ளே பெரும் பணக் காரரா ?

**நல்லமுத்துப் பிள்ளே.**—அது தெரியவில்லே. இவ்வூரிலொருவருக்கு நெடுநாளேக்குமுன் பெருந்தொகையைக் கடன் கொடுத்திருந்தாராம். அது கிடைக்கவே தனக்கு ஒருவருமில்லாததால் அதை ஞானம்பிகைக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று நினேத்திருக்கிருர்.

**செங்கமலத்தம்மாள்.**—சின்னதம்பி பிள்ளே என்பவர் யார் ?

**நல்லமுத்துப் பிள்ளே.**—அவர் தங்களுடைய நாயகரின் மைத்துனர்.

**செங்கமலத்தம்மாள்.**—அவராயிருக்குமென்றே கேட்டேன். கறுப்பண்ண பிள்ளே ஞானம்பிகைக்கு இவ்வளவு செய்ய வேண்டிய காரணம் என்ன ?

காவேரியாற்றில் அவரை ஞானம்பிகை காப்பாற்றியதை நல்லமுத்துப் பிள்ளே சொல்லிக்கொண்டு போனுர்.

சாமியா பிள்ளை முதலானவர்கள் நீங்கியபின், ஞானம்பிகை சிறுவர்களை அழைத்துக்கொண்டு பின்கட்டுக்குச் சென்று, அவர்களை உட்காரவைத்து வார்த்தையாடிக்கொண்டிருந்தாள். மீனும்பாள் தன் வீட்டுக்குச் சென்றாள்.

அந்த ஸமயத்தில் இருளாயி அம்மாள் வீட்டுக்குள் வந்து உண்ணுமுலை அங்கிருப்பதைக் கண்டு "அம்மா! ஞானம்பிகை இவ்வீட்டிலிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவளைப் பார்க்கவேண்டும்'' என்றாள்.

**உண்ணுமுலை யம்மாள்.**—(அவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டு) நீ யாரம்மா (என்று கேட்டாள்).

**இருளாயி யம்மாள்.**—அம்மா! நான் இந்த ஊரில் தோசை விற்கிறவள். எனக்கு ஞானம்பிகை தெரியும். ஆனதால் அவளைப் பார்க்க வந்தேன்.

உண்ணுமுலை தன் மகளை அழைத்தாள். அவள் சிறுவர்களோடு வந்து, அங்கு நிற்கும் இருளாயி யம்மாளைக் கண்டு ஓடிப்போய் அவளைக் கூட்டிப் பிடித்துக்கொண்டாள்.

**இருளாயி யம்மாள்.**—(ஞானம்பிகையின் முகமெல்லாம் முத்தங்கொடுத்து) அம்மா! ஞானம்பிகை! நீ ஒரு வார்த்தையாகிலும் சொல்லாமல் போய்விடலாமா?

**ஞானம்பிகை.**—அம்மா! நான் என்ன செய்வேன்! (உண்ணுமுலையைக் காட்டி) என் தாயார் அதிக நலியாக இருப்பதாகக் கடிதம் எழுதியிருந்தார்கள். கடிதம் என கைக்கு விளக்கேற்றிய பின் கிடைத்தது. நான் உடனே எட்டு மணி வண்டிக்குப் பிரயாணப்பட்டதால், தங்களிடத்தும் மற்றவர்களிடத்தும் சொல்லிக் கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை. தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். நான் நாளைத் தங்களை வந்து பார்க்கவேண்டுமென்றிருக்கிறேன். தாங்களே இன்று என்னைத் தேடிவந்தீர்கள்.

**உண்ணுமுலை யம்மாள்.**—(இருளாயி யம்மாளைப் பார்த்து) தாங்கள் இவ்வூரில் நெடுநாளாக இருக்கிறீர்களோ?

**இருளாயி யம்மாள்.**—*ஆம் ! அம்மா ! நெடுநாளாக இவ்வூரி லிருக்கிறேன்.*

**உண்ணுமுலை யம்மாள்.**—*தங்களுக்குக் குழந்தைகள் இல்லையா?*

**இருளாயி யம்மாள்.**—*ஒரு பெண் குழந்தை பிறந்து இறந்து விட்டது. அது இருந்தால் ஞானாம்பிகை வயதாயிருக்கக் கூடும். அக்குழந்தை உயிரோடிருக்க நான் கொடுத்து வைக்கவில்லை. (என்று சொல்லிப் பின் ஞானாம்பிகை யைப் பார்த்து) அம்மா ! நான் மாவிடிக்கவில்லை. வேலை அதிகம் இருக்கிறது. நான் போய் வருகிறேன் (என்று வெளியில் சென்றாள்).*

*உண்ணுமுலை யம்மாளும் அவளோடு வெளியில் சென்று அவளுக்கு விடை கொடுத்தனுப்பி, மறு பக்கம் திரும்பினாள். அங்கு ஓர் பெண்பிள்ளை வருகிறதைப் பார்த்து நின்றிருந்தாள். அப்பெண்பிள்ளை உண்ணுமுலையைப் பார்த்து " ஆ ! உண்ணு முலை ! நீயா இங்கு நிற்பது ! உன்னைக் கண்டுகொள்ள முடிய வில்லையே ! உன் மகள் எப்படி யிருக்கிறாள் " என்று நகைத் தாள். அப்போது கறுப்பண்ண பிள்ளை, ஒரு துணி மூட்டை யோடு வீட்டுக்குள் வந்து, " ஸாமான்களெல்லாம் வந்ததா ? " என்று உண்ணுமுலையைக் கேட்டார்.*

*உண்ணுமுலை யம்மாள், " எல்லாம் வந்தது. யாவையும் எடுத்து வைக்கிறோம் " என்றாள். கறுப்பண்ண பிள்ளை, துணி மூட்டையைத் தன்னறைக்குள் வைத்துவிட்டுப் பின்கட்டுக்குச் சென்று ஞானாம்பிகையோ டிருக்கும் சிறுவர்கள் யார் என்று ஞானாம்பிகையைக் கேட்டார்.*

**ஞானாம்பிகை.**—*தந்தையே ! இவர்கள் தரங்கன்பாடியிலிருக் கும் சாமியா பிள்ளையின் குழந்தைகள்.*

**கறுப்பண்ண பிள்ளை.**—*(அவர்களைத் தழுவி முத்தங்கொடு த்து) உங்களுடைய தாயார் பேர் பழனியாயி யாம்மாள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் இங்கிருப்பது எனக்குத் தெரிந்திருந்தால் நான் வரும்பொழுது மிட்டாய்*

வாங்கி வந்திருப்பேன். நான் இப்பொழுதே சென்று வாங்கி வருகிறேன்.

என்று சொல்லி வெளியிற் சென்று நெடுந்தூரம் போய் மடியைப் பார்த்து, "நான் என்ன காசில்லாமல் போகிறேன்" என்று திரும்பி வீட்டுக்கு வந்து தன்னறைக்குள் சென்றவர் அடுத்த அறையில் பேசுங் குரல் கேட்டு, பேசுவதை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்.

**அன்னிய ஸ்திரி.**—ஏன் வெளியிலிருக்க வேண்டாமென்று அறைக்குள் அழைத்துவந்தாய்? உன் மகள் எப்படியிருக்கிருள் என்று கேட்டதற்கு பதில் ஏன் சொல்லவில்லை (என்று கெக்கலி கொட்டிச் சிரித்தாள்).

**உண்ணுமுலை யம்மாள்.**—என் மகள் க்ஷேமமாக இருக்கிருள். நீ மெதுவாகப் பேசு! நாம் பேசுவதை ஒருவரும் அறியக் கூடாதென்றே அறைக்குள் அழைத்துவந்து கதவை மூடினேன்.

**அன்னிய ஸ்திரி.**—இங்கு யார் இருக்கிருர்கள்? அந்த ஐயா போய்விட்டார். அந்த ஐயா யார்?

**உண்ணுமுலை யம்மாள்.**—அவர்தான் கறுப்பண்ண பிள்ளை. என்னையும் என் மகளையும் அழைத்துக்கொண்டு வந்து இங்கே குடியேற்றினுர்.

**அன்னிய ஸ்திரி.**—அவரை நான் வேருெருவராக எண்ணினேன். நீ கறுப்பண்ண பிள்ளை என்பதால் நான் எண்ணியவர் அவர் அல்ல; அவர் பேர் வேறு. உன் மகளுக்கு ஏதாகிலும் தெரியுமா?

**உண்ணுமுலை யம்மாள்.**—அவளுக்கு ஒன்றும் தெரியாது.

**அன்னிய ஸ்திரி.**—இரவில் பன்னிரண்டு மணி நேரத்தில் பேயடித்தாலுமில்லை நாய் கடித்தாலுமில்லையென்று நான் வராமற்போனுல், நீ உன் மகளைப் பார்க்க முடியுமா?

**உண்ணுமுலை யம்மாள்.**—என் மகள் இறந்தவள் இறந்தவளே!

**அன்னிய ஸ்திரி.**—நான் கொடுத்த ஐந்நூறு ரூபாவை என்ன செய்தாய்?

**உண்ணாமுலை யம்மாள்.**—'குந்தியிருந்து தின்றால் குன்றுங் குறைந்துபோகும்' என்றவிதம் முடிந்தது.

**அன்னிய ஸ்திரி.**—அந்தப் பணத்தைக் கொடுக்கும் பொழுது இவ்வூரைவிட்டு வேறெங்காகிலும் சென்று ஒரு வியாபாரஞ் செய்து உன் காலத்தைக்கழி என்றல்லவா சொல்லிக் கொடுத்தேன்.

**உண்ணாமுலை யம்மாள்.**—நீ சொல்லிய விதமே அவ்வூரை விட்டுப் பல விடங்களுக்குச் சென்று பல வியாபாரம் செய்து கைமுதலைத் தொலைத்துவிட்டு, வீட்டில் வேலை செய்து காலங் கழித்து வருகிறோம்.

**அன்னிய ஸ்திரி.**—உண்ணாமுலை! நீ சொல்வது அதிசயமாக இருக்கிறது. ஒருவருக்கு இருபது முப்பது ரூபா இருந்தால் அதை வைத்துக்கொண்டு ஒரு அரிசிக்கடை அல்லது பழக்கடை இன்னும் ஏதாகிலும் அற்ப வியாபாரஞ் செய்து காலங் கழிக்கிறார்களே! நீ ஐந்நூறு ரூபாவைக் கொண்டு போய் ஒன்றையும் செய்ய முடியாமல் எல்லாம் தொலைத்து விட்டேன் என்றால் அது அதிசயமல்லவா?

**உண்ணாமுலை யம்மாள்.**—ஐயோ! அம்மா! நீ சொல்லியது போல் நான் திருச்சிராப்பள்ளியில் ஒரு அரிசிக்கடை வைத்து அனேகருக்குக் கடன் கொடுத்து இருநூறு ரூபா நஷ்டமடைந்தேன். பின் அவ்வியாபாரத்தையே கடன் கொடுக்காமல் செய்து வரும்பொழுது எனக்கு முதலில் நோய் கண்டு எனக்கு குணமானவுடன் என் மகளுக்கு நோய் கண்டு அதனால் நூறு ரூபா தொலைந்தது. இனி அவ்வூரிலிருப்பது பிரயோசனமில்லையென்று தஞ்சாவூருக்குச சென்று அங்கும் அரிசிக் கடையே வைத்து வியாபாரம் செய்து வரும்பொழுது என் வியாபாரம் நாளுக்கு நாள் விருத்தி யடைந்து முன்னடைந்த நஷ்டத்தை

யெல்லாம் திருப்பிக்கொண்டு நானும் என் மகளும் ஸௌக்யமாயிருந்தோம். அக்காலத்தில் நான் குடியிருந்த வீட்டுக்கருகில் சின்னசாமிபிள்ளை யென்ற ஓர் தனவந்தன் ஒரு கூத்தியாரை வைத்துக்கொண்டு அவளுக்கு ஏராளமான நகைகளை வாங்கிப் போட்டுக்கொண்டிருந்தவன், ஒரு நாள் ஒரு ஜதை கெட்டிக்காப்பையும் ஒரு ஜதை கெட்டிக்கொலுசையும் என்னிடம் கொண்டுவந்து கொடுத்து, "அம்மா! இவைகளை எண்ணூறு ரூபாவுக்குச் செய்தேன். எனக்கு அவஸரமாக ஐந்நூறு ரூபாய் வேண்டும். மூன்று நாளையில் கொடுத்துவிடுகிறேன்" என்று கெஞ்சினான். நான் "என்னிடத்தில் பணமிருக்கிறது உண்மையேயாயினும் என்னுடைய பணமெல்லாம் கொடுக்கல் வாங்கலில் இருக்கிறது. நான் அரிசி வியாபாரம் செய்பவளேயன்றி நகைகள்மேல் வட்டிக்குக் கொடுத்து வாங்குபவளல்ல. நான் அனேகருக்குத தவணைப் பிரகாரம் பணம் கொடுக்க வேண்டும்" என்றேன். அவன் என்னென்னமோ சொல்லி "மூன்று நாளையில் பணங் கொடுக்காமற் போனால் இந்த நகைகளை எடுத்துக்கொள்" என்று ஒரு கடுதாசியில் எழுதிக்கொடுத்து ஐந்நூறு ரூபாயையும் பெற்றுக்கொண்டு போனான். மூன்றாம்நாள் அவன் வராமையைக் கண்டு விசாரித்ததில் அவனும் அவன கூத்தியாரும் தாங்களிருந்த வீட்டைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டார்களென்று சொன்னார்கள். நகைகளிருக்க நாம் ஏன் பயப்படவேண்டுமென்று நகைகளைத் தட்டானிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்து நிறுத்துப் பார்க்கச சொன்னேன். தட்டான் அதை வாங்கிப பார்த்து நகைத்து, "என்னத்திற்காக நிறுக்கச் சொல்லுகிறாய? இவைகள் பித்தளையாயிற்றே" என்று என்னிடத்தல் கொடுத்துவிட்டான். நான் மெய்மறந்து வீட்டில் வந்து விழுந்தவள் மூன்று நாள் எழுந்திருக்கவில்லை. அரிசி கடனுகப் போட்டுப் போனவர்களெல்லாம் பணத்துக்கு நெருக்கி

ஞர்கள். நான் என்னிடத்திலிருந்ததை யெல்லாம் விற்று அவர்கள் கடனைக் கொடுத்துத் தீர்த்து விட்டேன். பின்பு வேறோர் வழியுமில்லாமல் நானும் மகளும் வீட்டில் வேலை செய்து வயிறு வளர்க்க ஆரம்பித்தோம்.

**அன்னிய ஸ்திரி.**—அவன் யாரென்றும் எந்த ஊரென்றும் தெரிந்து கொள்ளாமலா ஐந்நூறு ரூபாயைக் கொடுத்தாய்?

**உண்ணாமுலையம்மாள்.**—நான் விசாரித்தறியாமலா கொடுத்தேன்? அவன் பெரிய பணக்காரர் வேலாயுதம்பிள்ளை மைத்துனனென்றும் திருமயத்திலிருப்பவனென்றும் முன்னாகவே கேள்விப்பட்டிருந்தமையால், நான் ஸந்தேகப்படாமல் கொடுத்துவிட்டேன்.

**அன்னிய ஸ்திரி.**—என்ன சொன்னாய்! வேலாயுதம் பிள்ளை மைத்துனனுக்கா கொடுத்துவிட்டாய்? அவன் கொடுத்ததை அவனே வாங்கிக்கொண்டு போய்விட்டானா?

என்று அவன் முத்தம்மாள் பெற்ற குழந்தையைக் கொலை செய்யத் தன்னைத் தூண்டியதும் பின் அது நடந்தவிதமும் முத்தம்மாளை வீட்டை விட்டுப் போகும்படி அவன் செய்த உபாயமும் விளங்கச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

அடுத்த அறையிலிருந்து கேட்டிருந்த கறுப்பண்ண பிள்ளை திகைத்து மரமபோல் அசைவற்றிருந்து, பின் தனக்கு வேண்டிய பணத்தை யெடுத்துக்கொண்டு போகும்பொழுது, தன்னெதிரில் வந்த ஒருவனிடம் ரகஸ்யமாகச் சிலநேரம் பேசியிருந்து, அவனை விட்டு நீங்கி மிட்டாய் கடைக்குச் சென்றார். அன்னிய ஸ்திரி உண்ணாமுலையிடம் விடைபெற்று நீங்கிப் போகும்பொழுது, ஓரன்னியன் அவளைப் பார்த்து, "அம்மா! நீயா?" என்றான். அவளும் "அப்பா! தாண்டவராயா! நீயா?" என்றாள்.

**தாண்டவராயன்.**—அம்மா! நீங்கள் ஏது இந்த ஊருக்கு வந்தது?

**அன்னிய ஸ்திரி.**—நீ ஏன் இங்கு வந்திருக்கிறாய்? நான் இருக்கும்

வீடு ஸமீபத்திலிருக்கிறது. அங்குப்போய்ப் பேசலாம். வா (என்று அழைத்துச் சென்றாள்).

மற்றொருவன் அவர்களறியாமல் அவர்களோடு சென்று அவர்கள் வீட்டுக்குள் நுழையும் பொழுது, "நான் உங்களிடத்தில் ஒரு ஸமாசாரம் சொல்ல வந்திருக்கிறேன். தெருவில் நின்று பேச இஷ்டமில்லை" என்றான்.

**அன்னிய ஸ்திரீ.**—தெருவில் நின்று பேச இஷ்டமில்லாதிருந்தால் வீட்டுக்குள் வரலாம் (என்று அழைத்துச் சென்றாள்).

மிட்டாய் கடைக்குச் சென்ற கறுப்பண்ண பிள்ளை ஓர் பொட்டணத்தோடு வீட்டுக்குள் வந்து சிறுவர்களுக்குக் கொடுத்து, யார் யார் வந்திருக்கிறார்களென்று கேட்டுக் கொண்டிருந்தார்.

---

## 22—ம் அத்தியாயம்.

வரதராஜ பிள்ளை சுவாமி மலையிலிருந்து வந்தவுடன் தரங்கன்பாடியிலிருந்து தன் சிறிய தந்தை சாமியா பிள்ளையும் அவர் மனைவி மக்களும் வந்திருக்கிறார்களென்று தன் மனைவியால் அறிந்து, நல்லமுத்துப் பிள்ளை வீட்டுக்குச் சென்று திரும்பி வந்து, "அவர்களைக் காலையில் அனுப்புகிறேன. இப்பொழுது அழைத்துப் போகவேண்டாம்" என்று நல்லமுத்துப் பிள்ளை கெஞ்சிக் கேட்டுக்கொண்டாரென்று தன் மனைவிக்குச சொன்னார்.

மறுநாள் காலை ஏழு மணிக்குக் கறுப்பண்ண பிள்ளை வரதராஜ பிள்ளை வீட்டுக்குச் சென்றார்.

**வரதராஜ பிள்ளை.**—(அவரைப் பார்த்து) யார் ஐயா தாங்கள்? தாங்கள் யாரைத் தேடுகிறீர்கள்? (என்று கேட்டார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—(நகைத்து) என்னைத் தெரியவில்லையா (என்றார்).

வரதராஜ பிள்ளையும் அவர் மனைவியும் கறுப்பண்ண பிள்ளையைப் பார்த்து நகைத்து, " தங்களைக் கண்டுகொள்ள முடியவில்லை. தாங்கள் பச்சைத் துணியால் ஒரு கண்ணை மூடிக்கொண்டும், மோவாய்க்கட்டை முதல் தலைபரியந்தம் துணியால் சுற்றியும், தலையில் தொங்குகுல்லா ஒன்று போட்டுக் கொண்டும் இருப்பதால், தாங்கள் யாரோவென்று நினைத் தோம்."

**கறுப்பண்ண பிள்ளை.**—நான் என்ன செய்வேன்? வலது கண்ணால் ஒன்றைப் பார்க்க முடியவில்லை. வெளிச்சத்தைக் கண்டால் கண் கூசுகிறதென்றதால், வைத்தியர் பச்சைத் துணி சிறியதாக நறுக்கி நாடாவில் வைத்துத் தைத்திருப் பதைக் கொடுத்து வெளிச்சத்தைப் பார்க்கவிடாமல் கண்ணைக் கட்டிக்கொள்ளச் சொன்னார். பல் வலிக்கிற தென்றதற்கு என்னமோ மருந்தைக் கன்னத்தில் தடவிக் காற்றுப் படக்கூடாதென்று இவ்விதம் கட்டிவிட்டார். " எனக்குப் பேசமுடியாதே ! சாப்பிட முடியாதே !" என் றதற்குக் கொஞ்சம் தளர்த்திவிட்டார். ஆனதால் பேசவும் வாய்திறக்கவும் முடிகிறது. இன்று ஞானம்பிகையைப் பார்க்கச் சிலர் வருவார்களென்று நினைக்கிறேன். ஆன தால் நாம் ஞானம்பிகையை அலங்கரித்து வைக்கவேண் டும். அதைச் சொல்லவே இவ்விடம் வந்தேன்.

**மீனும்பாள்.**—நான் சிங்காரித்துவிடுகிறேன். என்னுடைய நகைகளைப் போட்டுக்கொள்ளச் சொன்னால் போட்டுக் கொள்ளுகிறாளோ மறுக்கிறாளோ தெரியவில்லை.

**கறுப்பண்ண பிள்ளை.**—அம்மா ! உன்னுடைய நகைகளை நீ போட்டுக்கொள்ள வேண்டும். நான் ஞானம்பிகைக்காக வேறு நகைகளை கொண்டுவந்திருக்கிறேன். (என்று தான் மறைவாக வைத்திருந்த ஓர் சிறிய இருப்புப் பெட்டியை யும் ஒரு சிறிய மூட்டையும கொடுத்தார்.)

**மீனும்பாள்.**—(அப்பெட்டியைத் திறந்து பார்த்து) இதில் எல் லா நகைகளு மிருக்கிறது (என்று சொல்லி, மூட்டையை அவிழ்த்துப் பார்த்து), இதில் விலையுயர்ந்த சேலைகளும்

இரவிக்கைகளும் இருக்கிறது. அவள் இஷ்டப்பட்டதைக் கட்டிக்கொள்ளச் சொல்லுகிறேன் (என்றாள்).

**வரதராஜ பிள்ளை.**—அவர்களெல்லாம் சற்று நேரத்தில் வந்து விடுவார்களே! அவர்களுக்கு யாரைக் கொண்டு சமையல் செய்யப்போகிறாய்?

**மீனும்பாள்.**—உண்ணாமுலை யம்மாளைப் பார்த்துக்கொள்ளச் சொல்லுகிறேன்.

**கறுப்பண்ண பிள்ளை.**—யார் வரப்போகிறார்கள்?

**வரதராஜ பிள்ளை.**—ஐயாவே! நான் தங்களிடம் சொல்ல மறந்தேன்! என் சிறிய தந்தையும் என் சிறிய தாயாரும் அவர்களுடைய தமக்கையும் சிறுவர்களோடு வந்தவர்கள் சிறுவர்களை நம்முடைய வீட்டில் விட்டு அவர்களெல்லாம் நல்லமுத்துப்பிள்ளை வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். அவர்களெல்லாம் சற்று நேரத்திற்குள் இவ்விடம் வருவார்கள்.

**கறுப்பண்ண பிள்ளை.**—சாமியா பிள்ளை முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளைக்குச் சகலையென்று கேள்வி! ஆனதால் நீயும் வேலாயுதம் பிள்ளைக்கு மகனாகவேண்டும் அவர் பெருந் தனவந்தரானதால் நீயும் தனவந்தன் மகனே (என்று நகைத்தார்).

**வரதராஜ பிள்ளை.**—ஆம்! வேலாயுதம் பிள்ளை எனக்குச் சிறிய தந்தையென்றேசொன்னாலும், அவருக்கிருக்கும் பொருளை எனக்குக் கொடுக்கப் போகிறாரா (என்று நகைத்தார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—நான் உனக்குக் கொடுக்கும்படி சொல்லுகிறேன் (என்று மீண்டும் நகைத்து) தம்பி! இன்று நம்முடைய வீட்டிற்கு வருகிறவர்களுக்கு விருந்து செய்ய வேண்டுமென்று என் சினேகர் அரங்கசாமி செட்டியாரிடம் சொன்னேன். அவர் "என்னுடைய ஆள்களை அனுப்பி வேண்டியதைச் செய்யச் சொல்லுகிறேன்" என்று ஆள்களை அனுப்பிவிட்டார். ஆனதால் நீ வேறாக இன்று சமையல் செய்யவேண்டாம். உம்முடைய சிறிய

தந்தை முதலானவர்கள் வந்தால் அவர்களை இவ்விடத்திலேயே நிறுத்திக்கொள்ளுகிறேன். பின் நீ எங்களுக்கெல்லாம் சேர்த்து விருந்து செய்யலாம். இன்று நீ உன்னுடைய சிநேகிதர்களைத் தங்கள் தங்கள் மனைவி மக்களோடு வரும்படி செய்யவேண்டும்.

**வரதராஜ பிள்ளை.**—(தன் மனைவியைப் பார்த்து) ஐயா அவர்கள் சொல்வதைக் கேட்டாயா ?

**மீனும்பாள்.**—ஆம் ! நான் சற்று முன் காய்கறி ஸாமான்கள் அடுத்த வீட்டில் வந்திறங்குவதோடு அனேக ஆண் பிள்ளைகள் நிற்பதையும் கண்டு என்னமோ என்றிருந்தேன். மாமா அவர்கள் சொல்லியபின் நாம் வேறு சமையல் செய்ய அவசியமில்லை. (என்று நகைகளையும் மூட்டையையும் எடுத்துக்கொண்டு போனுள்).

வரதராஜ பிள்ளையும் தம்முடைய சிநேகிதர்களுக்குத் தெரிவித்து வருகிறதாக நீங்கினுர். கறுப்பண்ண பிள்ளையும் தம்முடைய வீட்டுக்கு வந்து அவ்விடத்தில் நின்றிருப்பவர்களில் ஒருவனைப் பார்த்து, "அப்பா ! பெருமாள் ! விரைவில் சமையலாகவேண்டும. மேல் மெத்தையில் சமுக்காளங்கள் விரித்து, தாம்பூலம், புஷ்பம், சந்தனம் முதலியவைகளைக் கொண்டுபோய் வைக்கவேண்டும்'' என்று சொன்னுர்.

**பெருமாள்.**—எஜமான் சொல்லியவிதம் யாவும் ஸித்தப்படுத்தப் பன்னிரண்டு பேரை அழைத்து வந்திருக்கிறேன்.

காலை பதினெரு மணிக்கு அனேக ஆடவர்களும் பெண்களும் வருவதைக் கண்ட வரதராஜ பிள்ளை, ஆடவர்களை அழைத்துப்போய் மேன்மெத்தையில் ஒருபக்கம் உட்காரவைத்துக்கொண்டிருந்தார். மீனும்பாள் பெண்பிள்ளைகளை அழைத்துப்போய் ஒருபுறம் உட்காரவைத்துக் கொண்டிருந்தாள். சில நேரத்துக்குப்பின் ஐந்து பெண்பிள்ளைகளும் நான்கு ஆண் பிள்ளைகளும் கறுப்பண்ண பிள்ளையிருக்கும் வீட்டின் மேன்மெத்

தைக்கு நல்லமுத்துப் பிள்ளேயோடு வந்தார்கள். கறுப்பண்ண பிள்ளை எழுந்து போய் அவர்களுக்கு முகமன்கூறி உட்கார வைத்தார்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—(கறுப்பண்ண பிள்ளையைப் பார்த்து) ஐயா! இவர் முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளை மைத்துனர், சின்னதம்பி பிள்ளை. இவர் சின்னதம்பி பிள்ளையின் மருகர் வைத்தியலிங்கம் பிள்ளை. இவர் வேலாயுதம் பிள்ளையின் சகலை சாமியா பிள்ளை. இவர் மீனாக்ஷிஸுந்தரம் பிள்ளை (என்று சொல்லி, அவர்களோடு வந்த ஜானகியம்மாள், செங்கமலத்தம்மாள், பழனியாயியம்மாள், இந்திராணியம்மாள், தன் மனைவி முதலானவர்களை யெல்லாங் காட்டி அவர்கள் இன்னார் இன்னார் என்று சொல்லி உட்கார்ந்தார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—நான் முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளையைப் பார்த்திராமற் போனாலும், அவர் பெரிய தனவந்தர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனதால் இவர்களெல்லாம் பெருந் தனவந்தரென்றே சொல்லவேண்டும் (என்று நகைத்தார்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—இவ்வூரில் நம்மினத்தாருள் ஒரு ஸுந்தரமான பெண் இருக்கிறதெனத் தாங்கள் தெரிவிக்கச் சொன்னதால, இவர்கள் யாவரும் அப்பெண்ணைப் பார்க்க வந்திருக்கிறார்கள். தாங்கள் எங்களோடு வந்து அப்பெண்ணைக் காட்டவேண்டும்.

**சின்னதம்பி பிள்ளை.**—ஆம்! ஐயா! தாங்கள் தயவுசெய்து விரைவில் எங்களை அழைத்துப்போகவேண்டும்.

**கறுப்பண்ண பிள்ளை.**—நீங்கள் யாவரும் வருவீர்களென்றே அப்பெண்ணுடைய வீட்டில் யாவரையும் வரவழைத்து நானும் காத்துக்கொண்டிருக்கிறேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—இவ்வீடு அப்பெண்ணுக்குச் சொந்தமானதா?

**கறுப்பண்ண பிள்ளை.**—ஆம்! இதைப் பாருங்கள் (என்று ஒரு பத்திரத்தைக் கொடுத்தார்).

சின்னதம்பி பிள்ளை "ஸமீபத்தில் இவ்வீட்டை ஐயாயிரத்துக்கு வாங்கி யிருக்கிறது. பெண்பேர் ஞானம்பிகை என்றிருக்கிறது. இவள் வேறு ஞானம்பிகையாக இருக்கவேண்டும். அந்த ஞானம்பிகை வீட்டில் வேலை செய்துகொண்டிருப்பவள். அவள் ஐயாயிரம் ரூபாவுக்கு எங்கு போவாள்?" என்று நினைத்து, "ஐயா! பெண்ணுக்குத் தாய் தந்தை இல்லையா?" என்று கேட்டார்.

**கறுப்பண்ண பிள்ளை.**—அவள் நேற்றுப் பரியந்தம் தந்தையில்லாமல் இருந்தாள். இன்று அவளுக்குத் தந்தை தாய் யாவரும் உண்டானார்கள் (என்று நகைத்தார்).

**சின்னதம்பி பிள்ளை**—(நல்லமுத்துப் பிள்ளையைப் பார்த்து) இவரென்ன இவ்விதம் பேசுகிறார். இவருக்குப் பைத்தியம் உண்டோ? (என்று ரகஸ்யமாகக் கேட்டார்).

**நல்லமுத்துப் பிள்ளை.**—அவர் வேடிக்கையாகப் பேசும் திறமையுள்ளவர். அப்பெண்ணுக்குச் சுற்றத்தார் ஸமீபத்தில் வந்திருக்கக்கூடும். அதனால் அவ்விதம் சொல்லுகிறார்போல காண்கிறது.

**சின்னதம்பி பிள்ளை.**—நல்லமுத்துப் பிள்ளையிடம் ரகஸ்யமாகச் சிலதைச் சொல்லிக் கேட்கச் சொன்னார்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஐயா! அப்பெண்ணுக்கு வீடு சொந்தமென்றதனால், அவளுக்கு இவ்வீடு சீதனமாகுமோ?

**கறுப்பண்ண பிள்ளை.**—சீதனமாகக் கொடுக்கவே அப்பெண் பேருக்கு இதை வாங்கியிருக்கிறது.

**நல்லமுத்துப் பிள்ளை**—இதைத் தவிர வேறு சீதனமும் உண்டோ?

**கறுப்பண்ண பிள்ளை.**—அப்பெண்ணுடைய வெற்றிலைப் பாக்குச் செலவுக்காக ஒரு லக்ஷ ரூபாயிக்கு ஒரு கிராமம் வாங்

கிக் கொடுக்க வேண்டுமென்று அவள் தந்தை எண்ணங் கொண்டிருக்கிறார்.

**சின்னநம்பி பிள்ளை.**—(இவர் வாயலங்காரமாகப் பேசுகிறார் என நகைத்து) வெற்றிலைப் பாக்குச் செலவுக்காகவா ஒரு லக்ஷத்துக்கு கிராமம் வாங்கிக்கொடுக்கப் போகிறார் ?

**கறுப்பண்ணபிள்ளை.**—தனவந்தரிடம் பெண்ணைக் கொடுத்தால் அவர்கள் மகிழும்படி நம்மால் கொடுக்க முடியாதென்றே அற்பமாக ஒரு லக்ஷத்தைக் கொடுத்து அதைப் பாக்கு வெற்றிலைச் செலவுக்காக வைத்துக்கொள்ளும்படி அவள் தந்தை கேட்டுக்கொள்ள யோசித்திருக்கிறார்.

ஒரு லக்ஷம் அற்பமான தொகையாவென்று யாவரும் நகைத்தார்கள்.

**சின்னதம்பி பிள்ளை.**—அப்பெண்ணுடைய தந்தை எங்கிருக்கிறார் ? அவர் வாயால் சொன்னாலல்லவா எங்களுக்கு நம்பிக்கை உண்டாகும்.

**கறுப்பண்ண பிள்ளை.**—அப்பெண்ணுடைய தந்தையை நீங்கள் தேடவேண்டிய அவசியம் இல்லை. என்னையே அப்பெண்ணுடைய தந்தையாக பாவித்துக்கொள்ளுங்கள். நான் சொன்னதை வாங்கிக் கொடுக்கச் செய்கிறேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—(கறுப்பண்ண பிள்ளை இன்னம் எவ்வளவு புளுகிறாரோ பார்க்கலாம் என்று) ஐயா ! நகைகள் என்னென்ன போடுவார்கள் ?

**கறுப்பண்ண பிள்ளை.**—வீடும் கிராமமும் வாங்கிக்கொடுக்க எண்ணங்கொண்டவர்கள், நகைகள் போடாமலிருப்பார்களா ? குறைந்தது இருபதினாயிரத்துக்காகிலும் நகைகள் போடுவார்கள். தாங்கள் பெண்வீட்டார் கொடுப்பதை கவனமாகக் கேட்டீர். பிள்ளைவீட்டார் பெண்ணுக்கு என்ன நகை போட உத்தேசம் ?

**சின்னதம்பி பிள்ளை.**—தாங்கள் கேட்பதுபோல் நம்மவர்களில் அனேகர் கேட்கிறார்கள். அவ்விதம் கேட்பது அறியாமை

யென்றே எனக்குக் காண்கிறது. எவ்வித மெனில், பெண்வீட்டார் பிள்ளை வீட்டாரை "என்ன நகை போடு வீர்கள்! காசுமாலை போடுகிறீர்களா! கெட்டிக்காப்பு கெட்டிக்கொலுசு போடுகிறீர்களா! இவைகளைப் போட்டாலொழியப் பெண் கொடுக்கோம்" என்கிறார்கள். பிள்ளை வீட்டார் பெண்வீட்டார் கேட்ட நகைகளை எங்காகிலும் இரவல் வாங்கிப் போட்டு விவாகமானபின் நகைகளைக் கொண்டுபோய் சொந்தக்காரர்களிடம் கொடுத்து விடுகிறார்கள். பெண்வீட்டார் அப்பொழுது என்ன செய்ய முடியும்? பெணவீட்டார் போடுவது அப்பெண்ணுக்குச் சொந்தமாயிருப்பதால் அதையே கேட்கவேண்டும் (என்று நகைத்தார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—தாஙகள் சொல்வது நியாயமென்றே ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனதால் பிள்ளைவீட்டார் என்ன போடுவார்களஎ என்பதைக் கேட்கவில்லை. சில வேளை பெண்வீட்டார் பிள்ளைவீட்டாரைவிட தனவந்தராயிருந்து பெண்ணுக்குக் கொடுப்பதோடு பிள்ளைக்கும் ஒரு லட்சத்துக்கு கிராமம் வாங்கிக் கொடுக்கிறேன் என்றால், பிள்ளையைப பெண்வீட்டோடு அனுப்பிவிடுவார்களா? (என்று நகைத்தார்).

**சின்னதம்பி பிள்ளை.**—என் அனுப்பமாட்டார்கள்? ஸந்தோஷமாக அனுப்புவார்கள்.

**கறுப்பண்ண பிளளை.**—ஒருவருக்கு இரண்டு மூன்று பிள்ளைகள் இருந்தால் சிலவேளை அனுப்பக்கூடும். ஒரே பிள்ளையாக இருந்தாலோ?

**சின்னதம்பி பிள்ளை.**—ஒரு பிள்ளையானுலென்ன! இரண்டு மூன்றானுலென்ன! என் பிள்ளைக்கு அவ்விதம் கிடைத்தால் நான் என் மகனை அனுப்பிவிடுவேன். என்னையும் பாதுகாக்கிறேன் என்றால நானும் என் மனைவியோடு போய்விடுவேன் (என்று நகைத்தார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—தாங்கள் போனால் தங்களுடைய மனை

வியும் தங்களுடைய கருத்துக்கு உடன்பட்டுத் தங்களோடு வருவார்களா ?

**சின்னதம்பி பிள்ளை.**—புருடனுடைய நன்மையைக் கருதி அவன் இஷ்டம்போல் நடப்பவளே உண்மையான மனைவியென்று சொல்லவேண்டும். அவ்விதமில்லாதவளை மனைவியென்று பாராட்டுதல் உபசாந்தியே !

**நல்லமுத்துப் பிள்ளை.**—அவ்வித குணம் அமைந்திருப்பது அபூர்வமே !

**கறுப்பண்ண பிள்ளை.**—அபூர்வம் என்று சொல்லவேண்டாம். அனேகரிடத்தில் அந்தக் குணம் அமைந்திருக்கிறது. நான் முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளையைப் பார்க்காதவனு யிருந்தாலும், அவர் ரகஸ்யமெல்லாம் நன்றாயறிவேன். வேலாயுதம் பிள்ளைக்கு முதல் தாரத்தால் குழந்தை இல்லாமற் போகவும், அவர் மனைவியாகிய (செங்கமலத்தம்மாளைக் காட்டி) இவ்வுத்தமி அவரை வேறு விவாகம் செய்துகொள்ளத் தூண்டினார்கள். அவர் உடன்படாமலிருந்ததைக் கண்டு, அவருடைய எண்ணத்தை மாற்றி, அவருக்கு வேறு விவாகம் செய்துவைத்தார்களாம். ஆனால் அவள் மோரிசுக்கு ஓடிப்போய்விட்டாள்.

கறுப்பண்ண பிள்ளை சொல்லியதைக் கேட்ட செங்கமலத்தம்மாள் திடுக்குற்றாள்.

**சின்னதம்பி பிள்ளை.**—நாங்கள் பெண்ணைப பார்க்கவேண்டும், அப்பெண் எங்கிருக்கிறாள் ?

**கறுப்பண்ண பிள்ளை.**—நான் அழைத்துவரச செய்கிறேன் (என்று வரதராஜ பிள்ளைக்குக் கண்ஜாடை காட்டி, பின் சின்னதம்பி பிள்ளையைப் பார்த்து), தாங்கள் தங்களுடைய மைத்துனர் வேலாயுதம் பிள்ளையைப் பார்த்து நெடுநாளாயிற்றோ (என்று கேட்டார்).

**சின்னதம்பி பிள்ளை.**—பதினைந்து வருடத்துக்கு அதிகமாகிறது.

அப்போது மீனம்பாள் ஞானம்பிகையை மேல்வீட்டுக்கு அழைத்துவந்தாள். கோகிலம்பாளும் மற்ற சிறுவர்களும் ஞானம்பிகையோடு வந்தார்கள். யாவரும் அவள் அழகைப் பார்த்து அதிசயப் பட்டார்கள். மீனுக்ஷிஸுந்தரம் ஞானம்பிகையைப் பார்த்து அடங்கா மகிழ்ச்சி அடைந்தான். இந்திராணியம்மாள் எழுந்தோடி "அம்மா! ஞானம்பிகை! நீ எங்களைவிட்டுப் போகலாமா" என்று கட்டிப்பிடித்து முத்தமிட்டாள்.

**சின்னதம்பி பிள்ளை.**—இந்தப் பெண்ணையா கொண்டுவந்தீர்கள். எங்களுக்கு இந்தப் பெண் வேண்டாம்! வேண்டாம்! (என்றெழுந்தார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—வேண்டாம் என்றவர்களுக்குக் கொடுப்பேன் என்று நினைக்கவேண்டாம். ஒருகால் நீரும் உம்முடைய மனைவியும் என் காலில் விழுந்தழுது பெண் வேண்டுமென்று கெஞ்சினாலும் கொடுக்கேன். உங்கள் வீட்டில் என் பெண்போய் வாழத் தகுந்தவளல்ல. உங்களைவிட மேலானவர்களிடத்திலேயே போய் வாழ்வாள்.

**சின்னதம்பி பிள்ளை.**—என்ன சொன்னாய்! நானும் என் மனைவியும் உன் காலில் விழவேண்டுமோ?

**கறுப்பண்ண பிள்ளை.**—உங்களை என் காலில் விழச்சொல்லவில்லை. ஒருகால் நீங்கள் இப்பெண்ணையே வேண்டுமென்று ஒரு தடவைக்கு ஆயிரந்தடவை என் காலில் விழுந்தாலும், உங்களுடைய வீட்டில் வந்து வாழ என் மகளைக் கொடுக்கமாட்டேன் என்றே சொன்னேன். நீர் இப்பெண்ணை வேண்டாம் என்பதால், அதைக் குறித்து ஏன் பேசவேண்டும்?

நல்லமுத்துப் பிள்ளை சின்னதம்பி பிள்ளையை ஸமாதானப்படுத்தி "ஐயா! ஒருவர் ஒரு பெண்ணைப் பார்த்துப் பலர் முன்னிலையில் அப்பெண் வேண்டா மென்றால், பெண்ணுக்குச் சொந்தக்காரர் கோபித்து ஏதாகிலும் சொல்லாமலிருப்பார்களா? ஆனதால் தாங்கள் கோபிப்பது நியாயமல்ல!"

**சின்னதம்பி பிள்ளை.**—பெண்ணுக்குச் சொந்தக்காரராயிருந்து

சொன்னாலும் தோஷமில்லை ! இவன் யார் ! நான் இவன் காலில் விழவேண்டும் என்றானே. இவனைச் சும்மா விட்டு விடலாமா ? இவனென்ன, இவனுடைய பவிஷென்ன ? இவன் கெட்டகேடு பெண்ணுக்கு ஒரு லக்ஷத்துக்கு கிராமமும் இருபதினாயிரத்துக்கு நகைகளும் போடுகிறேன் என்று வாயலங்காரம் பேசியதுபோல் இப்பொழுதும் வாய்ப் பதட்டமாகப் பேசினான் (என்று கடுகடுத்துச சொன்னார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—நீர் என் மகளைக் கொள்ளவேண்டுமென்கிற எண்ணத்தோடு நீர் வந்ததால் உம்மை என் மைத்துனராக வெண்ணி நீர் சொல்வதைப் பொறுத்துக் கொண்டேன். அவ்விதம் இல்லாமற்போனால் உம்மை சிக்ஷை செய்தே அனுப்பியிருபபேன். பெண்ணுக்கு நான் தந்தையாய் இருப்பதால் நான் சொல்லாமல் வேறு யார் சொல்லுவார்களென்று நினைத்தீர் ? போம் ! போம் ! புத்திகெட்டவரே !

சின்னதம்பி பிள்ளை அதிக கோபங்கொண்டு "அவனை அடிக்காமல் விடக்கூடாது" என்று எழுந்தபொழுது, நல்லமுத்துப் பிள்ளை அவரைப் பிடித்து உட்காரவைத்து ஸமாதானஞ் சொல்லிக்கொண்டிருநதார். அந்த ஸமயததில ஒருவன் மேல் வீட்டுககு வந்து சினனதம்பி பிள்ளையைப பார்த்து "தங்களை அவஸரமாகப் பார்க்கவேண்டும் என்று ஒருவன வந்திருக்கிறான். என்ன சொல்லுகிறது?" எனறு கேட்டான்.

**சின்னதம்பி பிள்ளை.**—யாரவன் ! எனனை இங்கு தேடி வந்தவன் ! அவனை வரச்சொல். அவன் யாரென்று பார்க்கலாம்.

அவன் ஒரு அன்னியனை அழைத்துவந்தான்.

**சின்னதம்பி பிள்ளை.**—(அவனைப் பார்த்து) நீ யார் (என்று கேட்டார்).

**அன்னியன்.**—ஐயா ! என்னை யார் என்று கேட்குமுன்னம் தங்களை யார் என்று பார்த்துக்கொள்கிறேன். தாங்கள்

அல்ல ! தாங்கள் அல்ல ! நான் அவராயிருப்பாரென்று எண்ணிவந்தேன். அவரல்ல ! அவரல்ல ! (என்று திரும்பிப்போகப்போனான்).

அங்கிருந்தவர்கள் "யாரைத் தேடி வந்தாய் ?" என்றார்கள்.

**அன்னியன்.**—நான் முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளை மைத்துனரைத் தேடித் திரிகிறேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—(அவனை யழைத்து) நான்தான் முத்துப் பட்டணம் வேலாயுதம்பிள்ளை மைத்துனர். என்னை ஏன் தேடித் திரிகிறாய் ?

**அன்னியன்.**—ஐயா ! தாங்கள்தானா ! தாங்கள் நரி முகத்தில் விழித்துவந்தீர்கள். அல்ல ! அல்ல ! நான் நரி முகத்தில் விழித்துவந்தேன். என் பேரையா கேட்டீர்கள் ! என் பெயர் அழகப்பன்.

**சின்னதம்பி பிள்ளை.**—அடே ! நான் உன் பெயரைக் கேட்கவில்லை. என்னை ஏன் தேடி வந்தாய் ?

**அழகப்பன்.**—நான் இவ்வூருக்கு வந்து நெடுநாளாயிற்று.

**சின்னதம்பி பிள்ளை.**—அடே ! நீ இவ்வூருக்கு வந்து நெடுநாளாயிற்றோ ! சில நாளாயிற்றோ ! அதை நான் அறிய அவசியம் இல்லை. நீ என்னைத் தேடிவந்த காரணத்தைச் சொல்.

**அழகப்பன்.**—ஐயா ! நான் இவ்வூரை அனேக முறை சுற்றிப் பார்த்திருக்கிறேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—அப்பா ! நீ இவ்வூரைச் சுற்றிப் பார்த்ததை யார் கேட்டார்கள் ? அதைவிட்டு ஸமாசாரத்தைச் சொல்.

**அழகப்பன்.**—இவ்வூர் என்ன அலங்காரமான பட்டணம் ? எங்கு பார்த்தாலும் கோவில்களா !

**சின்னதம்பி பிள்ளை.**—அடே ! இவனை வெளியில் பிடித்துத் தள்ளு. இவன் நாட்டு வளப்பத்தையும் நகரச் சிறப்பையும் சொல்லிக்கொண்டிருக்கிறான்.

**அழகப்பன்.**—ஐயா ! கோபித்துக்கொள்ளவேண்டாம் ! தாங்கள் திடீரென்று குதித்துவிடச் சொல்லுகிறீர்கள். நிதானமாகவே சொல்லவேண்டும். நான் என்ன சொன்னேன். இந்த ஐயா மத்தியில் பேசி நான் சொல்லியதை மறந்து போகும்படி செய்துவிட்டார். ஆ! ஊம்! ஆ! எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. நான் பார்த்த கோவில்களுக்கெல்லாம் போய் வந்தேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—அடே ! நீ வெளியில் போகிருயா ? போகமாட்டாயா ?

**அழகப்பன்.**—தாங்கள் என்னை வெளியில் போகச்சொல்லிப் பின் கூப்பிட்டால் நான் வரமாட்டேன் ! வரமாட்டேன் ! ஒரு நாள் ஒரு அம்மாளிடத்தில் தோசை வாங்கிச் சாப்பிட்டேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—அடே ! நீ வெளியில் போ ! உன்னை ஒருவரும் அழைக்கமாட்டார்கள் போ ! போ ! (என்று துரத்தினுர்).

**அழகப்பன்.**—இந்த ஒரு சொல் சொல்லி ஓடிப்போகிறேன் அந்தத் தோசைக்காரி பேர் முத்தம்மாள். எந்த முத்தம்மாள் தெரியுமா ? முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளையின் இரண்டாவது மனைவி ! நான் போகிறேன் ! போ ! போ ! என்று துரத்திக்கொண்டிருக்கும் வீட்டில் எனக்கென்ன வேலை (என்று நடந்தான்).

**சின்னதம்பி பிள்ளை.**—போகவேண்டாய ! நில் ! நில் ! வேலாயுதம்பிள்ளை மனைவி தோசை விற்றுக்கொண்டிருக்கிருளா ! அவள் எங்கிருக்கிருள் ? நீ எப்பொழுது பார்த்தாய் ?

**அழகப்பன்.**—நான் சொன்ன சொல்லில் நிற்பவன். நீங்கள் அப்படியல்ல ! முதலில் வேண்டாம் ! வேண்டாம் ! என்பீர்கள் ! பின் வேண்டும் ! வேண்டும் ! என்று பல்லைக் காட்டிக் கெஞ்சுவீர்கள். என்னைப் போ ! போ ! என்று துரத்திக்கொண்டிருந்து இப்பொழுது போகவேண்டா

மென்றால், நான் உங்கள் சொல்லைக் கேட்கமாட்டேன். ஐயோ ! பாவம் ! இவர் அவர் மைத்துனராயிற்றே ! அவரும் இவ்வூருக்கு வந்திருக்கிறாரே ! என்று சொல்ல வந்தால் இங்கிருப்பவர்களெல்லாம் துரத்துகிறார்கள்.

**சின்னதம்பி பிள்ளை.**—(எழுந்துபோய் அழகப்பனைப் பிடித்துக் கொண்டு) தம்பி ! யார் இவ்வூருக்கு வந்திருக்கிறார் என்று சொன்னாய் ?


**அழகப்பன்.**—உம்முடைய மைத்துனர் வேலாயுதம் பிள்ளை சில தினத்துக்குமுன் ரெயிலில் வந்திறங்கியதைப் பார்த்தேன். நான் வேறொன்றும் சொல்லேன். நீங்கள் யாவரும் போ ! போ ! என்று என்னைத் துரத்தி, நான் போனால் அழைக்கமாட்டேன் என்று சொல்லியவர்கள் என்னை ஏன் கூட்பிடுகிறீர்கள் ?

சாமியா பிள்ளை, வைத்யலிங்கம் பிள்ளை, வரதராஜ பிள்ளை, கறுப்பண்ண பிள்ளை, நல்லமுத்துப் பிள்ளை, மீனாக்ஷி ஸுந்தரம் முதலிய யாவரும் எழுந்துபோய் அழகப்பனைப் பிடித்துக்கொண்டு, "நாங்கள் உன்னைப் போகச்சொல்லவில்லை. நீ வந்து உட்கார்ந்து அவர் எங்கிருக்கிறார் ? முத்தம்மாள் எங்கிருக்கிறாள் ? எனறு சொல்லவேண்டும்" என்று கெஞ்சினார்கள்.

**அழகப்பன்.**—அந்த ஐயா ! என்னைப் போ ! போ ! என்று சொன்னபொழுது நீங்கள் பேசாமல் இருக்கவில்லையா ? நீங்கள் பேசாமலிருந்ததின் கருத்து என்ன ? நீங்களும் அவர் சொல்லியதற்கு ஸம்மதித்திருந்ததற்கு ஸமானமல்லவா ? நான் ஒன்றும சொல்லமாட்டேன். நான் போகிறேன் (என்று அவர்கள் கைப்பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டான்).

யாவரும் அவனுக்கு ஸமாதானஞ் சொல்லி அவனை உட்காரவைத்துச் சொல்லும்படி வேண்டினார்கள்.

**அழகப்பன்.**—நீங்கள் யாவரும் என்னை கெஞ்சுவீர்களென்று



என் கண்மணி! நீ என் வயிற்றில் பிறந்து என்னென்ன துன்பங்களை அனுபவித்தாய்! (396-ம் பக்கம் பார்க்க.)

எனக்குத் தெரியும். முத்தம்மாள் இவ்வூரில் நெடுநாளாக இருக்கிறார்களாம்.

**சின்னதம்பி பிள்ளை.**—என் மைத்துனர் வேலாயுதம் பிள்ளை ஸமாசாரத்தை முதலில் சொல். அவர் எங்கிருக்கிறார்? அவர் இருக்கிற இடம் தெரிந்தால் நான் போய் அவரை அழைத்து வருகிறேன்.

**அழகப்பன்.**—ஐயா! நான் ஒன்றொன்றாகச் சொல்லவேண்டுமேயொழிய, எல்லாம் ஏககாலத்தில் சொல்ல எனக்கு இரண்டு மூன்று வாய் இல்லை.

**சாமியா பிள்ளை.**—அவன் இஷ்டம்போல் சொல்லவிடுங்கள்!

**அழகப்பன்.**—ஐயா சொன்னதே ஸரி! முத்தம்மாள் இவ்வூரில் நெடுநாளாக தோசைவிற்றுக் காலங்கழித்து வருகிறார்களாம்.

**சாமியா பிள்ளை.**—முத்தம்மாள் மோரிசுக்குப் போய்விட்டாளென்று கேள்விப்பட்டிருந்தோமே!

**அழகப்பன்.**—அந்த அம்மாள் மோரிசுக்கும் போகவில்லை! கண்டிக்கும் போகவில்லை! அந்த அம்மாள் பெற்ற பெண் குழந்தையை வேலாயுதம் பிள்ளையின் மூத்த மனைவியாகிய இந்த செங்கமலத்தம்மாள், தன் ஸகோதரன் சின்னசாமி பிள்ளையின் சதியோசனையைக் கேட்டு, தன் ஸகோதரனைக் கொண்டு மருத்துவிச்சிக்குச் சொல்லி அக்குழந்தையைக் கொன்று விடச் செய்து, சில மாதங்களுக்குப் பின் முத்தம்மாளையும் துரத்திவிட்டார்கள். அது முதல் அந்தம்மாள் இந்த ஊரில் வந்திருக்கிறார்கள்.

**சாமியா பிள்ளை.**—(சினந்து) அடே! அழகப்பா! நீ சொல்லியதை மெய்ப்பிக்க முடியுமா? வீண்அபவாதத்துக்கு உள்ளாவாய்.

**அழகப்பன்.**—ஐயா! என்னைக் கோபிக்கவேண்டாம்! அப்பிள்ளையைக் கொன்ற மருத்துவிச்சியும், அக்காலத்தில் வேலாயுதம் பிள்ளை வீட்டில் வேலைசெய்திருந்த தோட்

டக்காரனுகிய என் மைத்துனனும் இவ்வூரில் இருக்கிறார்கள். அவர்களை வரவழைத்துக் கேட்டால் நான் சொல்வது உண்மையோ பொய்யோ என்று தெரியும்.

**சின்னதம்பி பிள்ளை**.—இவன் என்னமோ உளறுகிறான். மருத்துவிச்சி குழந்தையைக் கொன்றிருந்தாலும் தான் கொன்றேன் என்று சொல்லுவாளா ?

**சாமியா பிள்ளை**.—பலர் முன் ஒருவர்மேல் ஓர் அபாண்டத்தைச் சொன்னுல், அதைக்கேட்டுச் சும்மா இருப்பது ஙியாயமல்ல. இவன் அதை மெய்ப்பிக்காவிடில் இவனைச் சும்மா விடக்கூடாது. அடே ! செங்கமலத்தம்மாள் குழந்தையைக் கொல்லத் தூண்டினுர்களென்பதையும், முத்தம்மாளை வீட்டைவிட்டுத் துரத்தினுர்களென்பதையும் நீ மெய்ப்பிக்கவேண்டும். ஆதலால் நீ குறிப்பித்த மருத்துவிச்சியையும், தோட்டக்காரனையும் இவ்விடத்திற்கே அழைத்துவா.

**அழகப்பன்**.—நான் விநாடியில் அழைத்துவருகிறேன் (என்றெழுந்தான்).

**நல்லமுத்துப் பிள்ளை**.—நான் இவனோடு போய் வருகிறேன் (என்றெழுந்தார்).

**சின்னதம்பி பிள்ளை**.—அடே ! என் மைத்துனர் வேலாயுதம் பிள்ளை எங்கிருக்கிறார் என்று அவர் இருப்பிடத்தைச் சொன்னுல் நாங்கள்போய் அழைத்துவருகிறோம்.

**அழகப்பன்**.—அவர் இங்கிருக்கிறார் ! எங்கிருக்கிறார் என்று சொல்ல எனக்குத் தெரியாது. அவர் இருப்பிடம் தெரிந்தால் வந்து சொல்லுகிறேன் (என்று நல்லமுத்துப்பிள்ளையோடு நீங்கினுன்).

**கறுப்பண்ண பிள்ளை**.—அவன் சொல்லியதை நம்பக் கிஞ்சித்தும் இடந்தரவில்லை. தனக்குக் குழந்தை பிறக்கவில்லையென்று தன் நாயகனை மறுவிவாகம் செய்துகொள்ளத்

தூண்டியவள் தன் நாயகனுக்குக் குழந்தை பிறந்தால் அதைக் கொல்ல மனந் துணிவாளா!

**சாமியா பிள்ளை.**—அவனுச்குப் பைத்தியம் இருக்குமோ?

அழகப்பன் சொல்லியதைக் கேட்டிருந்த செங்கமலத் தம்மாள் அழுதுகொண்டிருந்தாள்.

சில நேரத்துக்கெல்லாம் மூன்று பெண்பிள்ளைகளையும், இரண்டு ஆண்பிள்ளைகளையும் நல்லமுத்துப்பிள்ளை அழைத்து வந்து மேன்மெத்தையில் விட்டு உட்கார்ந்தார். வந்த பெண் பிள்ளைகளில் ஒருத்தி அங்கு அழுதுகொண்டிருந்த செங்கமலத் தம்மாளைப் பிடித்துக்கொண்டு "அக்காள்! அக்காள்! என் தவப்பலனு தங்களைப்பார்க்க எனக்குக் கொடுத்துவைத்தது" என்று கதறினாள். செங்கமலத்தம்மாளும் அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

**சின்னதம்பி பிள்ளை.**—(அழகப்பனைப் பார்த்து), மருத்துவிச்சி யார் (என்று கேட்டார்).

அங்கு நின்றிருந்த பெண்பிள்ளை, "நான்தான் மருத்து விச்சி! என்னை ஏன் அழைத்துவரச் சொன்னீர்கள்?" என்றாள்.

**சாமியா பிள்ளை.**—அம்மா! நான் கேட்பதற்கு பதில் சொல்ல வேண்டும். உனக்கு முத்துப்பட்டணம் வேலாயுதம் பிள்ளை தெரியுமா?

**மருத்துவிச்சி.**—ஏன் தெரியாது? அங்கு சென்ற அவருடைய இரண்டாவது மனைவி முத்தம்மாளுக்கு நானே மருத்துவம் பார்த்தேன்.

**சாமியா பிள்ளை.**—முத்தம்மாளுக்கு பிறந்த குழந்தை எவ்விதம் இறந்தது?

**மருத்துவிச்சி.**—அதை ஏன் இப்பொழுது கேட்கிறீர்கள்?

**சாமியா பிள்ளை.**—ஓர் காரணத்தைக் கொண்டே கேட்கிறோம்.

**மருத்துவிச்சி.**—அக்குழந்தை இசிவு கண்டு இறந்தது (என்று நகைத்தாள்).

**கறுப்பண்ண பிள்ளை.**—நீ உண்மையைச் சொன்னால் உன்னை ஒன்றும் செய்யாமல் உனக்குப் பெரிய வெகுமதியைக் கொடுக்கச் செய்கிறோம்.

**மருத்துவிச்சி.**—என்னை ஒன்றும் செய்யவில்லை யென்பதால், நான் உண்மையைச் சொல்லுகிறேன். வேலாயுதம் பிள்ளை இளையமனைவி பிரசவவேதனை படும்பொழுது, அவர் மூத் தமனைவியின் ஸகோதரன் என்னை அழைத்து, பிறக்குங் குழந்தையைக் கொன்றுவிடவேண்டும் என்றும் நான் அக்குழந்தையைக் கொன்று விடுவதாயிருந்தால் ஆயிரம் ரூபா கொடுக்கிறேன் என்றும் சொல்லி, ஆயிரம் ரூபா வைக் கொண்டுவந்து கொடுத்தார். பின் என்ன நடந் திருக்குமென்று நீங்களே அறிந்துகொள்ளுங்கள் (என்று நகைத்தாள்).

மருத்துவிச்சி சொல்லியதைக் கேட்டிருந்த முத்தம் மாள் முகத்தி லறைந்துகொண்டு, மகளே! மகளே! என்று அழுதாள்.

**சாமியா பிள்ளை.**—நீ செய்த உயர்வான செய்கைக்கோ சிரிக் கிறாய்.

**மருத்துவிச்சி.**—ஏன் சிரிக்கக்கூடாது (என்று மீண்டும் நகைத் தாள்).

மருத்துவிச்சியோடு வந்தவன் முன் வந்து நின்று, "ஐயா! இந்த அம்மாள் உங்களை யெல்லாம் கேலி செய்கிறார்கள். நான் வேலாயுதம் பிள்ளை வீட்டில் தோட்டவேலை செய்திருந்த வன். என் பேர் தாண்டவராயன். மருத்துவிச்சியம்மாள் சொல் லியதை நீங்கள் வேறுவிதம் நினைக்கிறீர்கள். முத்தம்மாள் பெற்ற குழந்தை சாகவில்லை.

**சாமியா பிள்ளை.**—முத்தம்மாள் பெற்ற பெண் குழந்தையைப் புதைத்துவிட்டதை யாவரும் அறிவார்களே!

**தாண்டவராயன்.**—நான் சொல்வதைச் சற்றுக் கவனித்துக் கேட்கவேண்டும். முத்தம்மாள் பிரசவவேதனை பட்டுக்

கொண்டிருக்கும்பொழுது, சின்னசாமி பிள்ளை திருமயத்திலிருந்து வந்து மேன்மெத்தைக்குச் சென்றார். அவர் வந்த சில நேரத்துக்குப் பின் அவருடைய வஸ்திரங்களடங்கிய பையொன்றை யெடுத்து நான் மேன்மெத்தைக்குக் கொண்டுபோகும்பொழுது, அறைக்குள் வார்த்தையாடிக் கொண்டிருப்பதை நான் கேட்க நேரிட்டது. அப்பொழுது சின்னசாமி பிள்ளை தன் தமக்கையைக் கோபித்துக்கொண்டு, வேலாயுதம் பிள்ளையை மறவிவாகஞ் செய்துகொள்ளத் தூண்டியதாலும், முத்தம்மாள் குழந்தையைப் பெறுவதாலும், யாவருக்கும் கெடுதி அதிகமென்று பல நியாயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். செங்கமலத்தம்மாள் முதலில் தன் ஸகோதரனுடைய கருத்தை மறுத்துப் பேசிக்கொண்டிருந்தவளாயினும், பின் அவருடைய துர்ப்புத்திக் கிடங்கொடுத்தவிதமாகப் பேசினார்கள். நான் அவ்விடத்தில் நின்றிருந்து கேட்கப் பிரியப்படாமல் நீங்கினேன். சில நேரத்துக்கெல்லாம் சின்னசாமிபிள்ளை மருத்துவிச்சியைப் பின்பக்கம் அழைத்து வந்து "பிறக்கப்போகும் குழந்தையைக் கொன்றுவிடு. உனக்கு ஐந்நூறுரூபா கொடுக்கிறேன்" என்றார். மருத்துவிச்சி ஸம்மதப்படாமலிருப்பதைக் கண்டு "ஆயிரம் ரூபா கொடுக்கிறேன்" எனறார். மருத்துவிச்சி பின் ஸம்மதப்பட்டாள். அவர் உடனே ஓடிப்போய் ஆயிரம் ரூபாயை நோட்டாகக் கொண்டுவந்து கொடுத்து திருமயத்துக்குப் போகிறேன் என்று நீங்கினார். நான் ஒரு சுவர் மறைவில் நின்று அவர்கள் பேசியதைக் கேட்டிருந்தவன், மருத்துவிச்சியிடம் சென்று, "சின்னசாமிபிள்ளை சொல்லிப் போனதுபோல் செய்யப்போகிறாயா?" என்று கேட்டேன். நான் யாவுங் கேட்டிருந்தேன் என்று பயந்து "அப்பா! எனக்கு அவ்விதம் செய்யப் பிரியமில்லை. நான்

அவர் சொல்லியவிதம் செய்யாமற்போனால் அவர் வேறெந்த விதத்திலாவது கொன்றுவிடுவாரென்று பயப்படுகிறேன். ஆனதால் நான் ஓர் உபாயஞ் செய்யலாமென்று யோசித்துகொண்டிருக்கிறேன்,'' என்றாள். நான் "என்னஉபாயம் ?'' என்று கேட்டேன். அவள் "நான் காரைக்குடியில் ஓர் ஏழை வீட்டில் மருத்துவம் பார்த்து வருகிறேன். அங்கு பிறந்ததும் பெண்குழந்தை. அக்குழந்தைக்கு இசிவு கண்டிருக்கிறது. அது பிழைக்காது. அக்குழந்தை இறந்தால் இக்குழந்தையைக் கொண்டுபோய் அவளிடம் ஐந்நூறு ரூபாயோடு கொடுத்துவிடலாம். அவள் ஏழையானதால் ஸந்தோஷத்தோடு ரூபாயைப் பெற்றுக்கொண்டு குழந்தையை வளர்ப்பாள். அவளுடைய இறந்த குழந்தையை இங்குக் கொண்டுவந்து போட்டுவிடலாம் என்று யோசிக்கிறேன். அதை முடிக்க உன்னுடைய உதவியும் வேண்டும். சின்னசாமி பிள்ளை கொடுத்த ரூபாயில் ஐந்நூறு போக, மற்ற ஐந்நூற்றை நாம் பாதி பாதியாகப் பங்கிட்டுக்கொள்ளலாம்'' என்றாள். நான் அவளுடைய நல்லெண்ணத்திற்கு சந்தோஷப்பட்டு அவளுடைய கருத்துக்கு உடன்பட்டேன். முத்தம்மாள் பிரசவித்த மறுநாள் மருத்துவிச்சியோடு நான் காரைக்குடிக்குச் சென்று அவள் சொல்லிய குழந்தை அதிகம் பாதைபட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு அக்குழந்தையின் தாய்க்கு எங்கள் கருத்தைச் சொன்னவுடன் அவள் ஸந்தோஷப்பட்டாள். நாங்கள் அவளுடைய குழந்தை இறந்தால் அழவேண்டாமென்றும், ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்றும் சொல்லி வந்தோம். நான் மருத்துவிச்சியிடம் "நாம் யோசித்திருப்பது முடியத்தகுந்ததாகக் காணப்படவில்லையே ! குழந்தையை மாற்றுகிற தாயிருந்தால் முததம்மாளுக்குத் தெரியாமல் செய்ய முடியுமா ! அல்லாமலும் குழந்தை முகச்சாயலால் இது தங்களுடைய குழந்தையல்லவென்று கண்டுகொள்ள மாட்

டார்களா ?" என்று கேட்டபொழுது, அவள் "அதற் கெல்லாம் உபாயம் இருக்கிறது. நாளை மூன்றும் நாள் ஆகையால் பத்தியங் கொடுப்பார்கள். அப்பொழுது செங்க மலத்தம்மாளிடம் சொல்லி முத்தம்மாளுக்குச் சாராயம் கொடுக்கும்படியாகவும் அதைக் கொடுக்கும்பொழுது அதி கம் கொடுக்கும்படியும் செய்கிறேன். அதனால் முத்தம் மாள் மயக்கத்தோடிருந்தால், குழந்தையை மாற்ற முடியு மல்லவா ?" என்று நகைத்தாள். "குழந்தையைக் கண்டு பிடிப்பார்களே ! அதற் கென்ன செய்யப்போகிறாய் ?" என்று கேட்டேன். அவள் "அதற்காக நீ கவலைப்படவே ண்டாம். நான் அண்டத்தைலத்தைப் பூசி ஒருவரையும் தொடவிடாமல் அருவருப்பை உண்டாக்கிவிடுகிறேன்" என்றாள். நாங்கள் எதிர்பார்த்த வண்ணம் மூன்றும் நாள் காரைக்குடியில் குழந்தை இறந்தது. அதை நான் போய்க் கொண்டுவந்து மருத்துவிச்சியிடம் கொடுத்து மாற்றி விடச்செய்து முத்தம்மாள் குழந்தையைக் கொண்டுபோய்க் காரைக்குடியில் கொடுத்துவிட்டேன். மருத்துவிச்சியும் சொன்னதுபோல் செய்து முடித்தாள்.

**சின்னதம்பி பிள்ளை.**—அக்குழந்தை எங்கிருக்கிறது ?

**தாண்டவராயன்.**—அக்குழந்தையின் ஸமாசாரம் எனக்கு ஒன் றும் தெரியாது. மருத்துவிச்சிக்குத் தெரியும்.

தாண்டவராயன் சொல்லியதை யெல்லாம் கேட்டிருந்த செங்கமலத்தம்மாள் பயந்து அழுதுகொண்டிருந்தாள். பழனி யாயி அம்மாளும் பெருங்கவலை அடைந்திருந்தாள்.

முத்தம்மாள் தன் மகன் உயிரோடிருக்கிறாளோ ! இல் லையோ ! எங்கிருக்கிறாளோ ! மருத்துவிச்சி என்ன சொல்லப் போகிறாளோ என்று மருத்துவிச்சியைப் பார்த்துக்கொண்டி ருந்தாள்.

**சின்னதம்பி பிள்ளை.**—அம்மா ! உன் நற்குணத்துக்கும் நற்

செய்கைக்கும் அதிகம் ஸந்தோஷப்படுகிறோம். என் மைத்துனருடைய மகள் எங்கிருக்கிறாளென்று சொல்லவேண்டும் (என்று கெஞ்சினார்).

மருத்துவிச்சி.—தங்கள் மைத்துனருடையமகளைத் தாங்கள் இன்னம் பார்க்காமலோ இருக்கிறீர்கள்? தங்களுடைய மைத்துனருடைய மகளைத் தான் பெற்ற பெண்போல் இந்த உண்ணாமுலையம்மாள் வளர்த்துவந்தாள். இறந்து போன குழந்தை இந்த அம்மாளுடையது. அங்கிருக்கும் ஞானம்பிகையே முத்தம்மாளுடைய பெண்.

என்று சொல்லியதைக் கேட்ட முத்தம்மாள், எழுந்தோடி ஆனந்தக்கண்ணீரோடு எழுந்துநின்ற ஞானம்பிகையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "ஆ! என் கண்மணி! ஆ! என் மாணிக்கமே! ஆ! என் ரத்தினமே! ஆ! மகளே! மகளே!" என்று முகமெல்லாம் அடிக்கடி முத்தங்கொடுத்து, "அம்மா! ஞானம்பிகை! நீ என் கடையில் வந்திருந்தபொழுது உன்னைப் பார்த்தவர்கள் 'என்மகளா! என்மகளா!' என்று கேட்க என் தேகம் துடித்ததே! உன்னுடைய நெற்றியில் பொட்டிட்டது போலிருக்கும் மச்சத்தைப் பார்த்து நாம் பெற்ற பெண்ணுக்கும் மச்சம் இதுபோல இருந்ததே. அவளா இவளா என்று எண்ணினேனே! ஆ! என் செல்வமே! உன்னை மகளாகப் பெற்ற பாக்கியமே என் பாக்கியம்! அம்மா ஞானம்பிகை! நான் படுங் கஷ்டத்தை கண்டு ஸகியாமல் அடிக்கடி வந்து எனக்கு வேலைசெய்து கொடுத்தாயே! அம்மா! உன்னை அந்த அண்ணன் கண்டபொழுது ஓடி வந்து ஒளித்தாயே. ஐயோ! நான் பாவி! உன்மேல் ஸந்தேகங்கொண்டு போய்விடு என்று துரத்தினேனே. அப்பொழுது உன் மனம் எவ்விதம் வருந்தியதோ! மகளே! மகளே! நான் படுங் கஷ்டத்தைத் தெய்வங்கண்டு ஸகியாகல் இறந்துபோனாய் என்றெண்ணியிருந்த உன்னை என் மனம் ஸந்தோஷமடைய உயிரோடு கொண்டு வந்து கொடுத்தது" என்று அடிக்கடி முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

ஞானம்பிகை முத்தம்மாளைத் தழுவிக்கொண்டு, "அம்மணி! என்னைத் தாங்கள் மகளென்றறியாமுன்னம் சொந்த மகள்போல் நினைத்து என்மேல் பேரன்பு காட்டியதை நினைக்க நினைக்க எனக்கு ஆனந்தம் பொங்குகிறதே" என்று சொல்லி, உண்ணாமுலையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "அம்மணி! தாங்கள் என்னைப் பெற்ற பெண்போ லெண்ணி வளர்த்து வந்ததற்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்து உண்ணாமுலை யம்மாளைவிட்டு, பழனியாயி யம்மாளின் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

**பழனியாயி யம்மாள்.**—அம்மா! ஞானம்பிகை! நீ எனக்கு ஒப்பாரிக்கு மகளாயிருந்து இப்பொழுது எனக்கு உரிய மகளானாய்! நீ மஹாராஜியாகப் பதினாறு பிள்ளைகளைப் பெற்று ஸுமங்கலியாய்ப் பெருவாழ்வு வாழவேண்டும் (என்று ஆசீர் வதித்தாள்).

ஞானம்பிகை கோகிலம்பாளையும் சிறுவர்களையும் பிடித்து யாவருக்கும் முத்தங்கொடுத்து "தங்கையே! தம்பிமார்களே! நீங்கள் என்னை அக்காளென் றழைத்த முறை நிலைத்ததைக் குறித்து ஆனந்தமடைந்தேன்" என்று சொல்லி, இந்திராணி யம்மாளுக்கும் மீனம்பாளுக்கும் ஜானகியம்மாளுக்கும் நமஸ்காரஞ்செய்து அவர்கள் ஆசீர்வாதம் பெற்றாள்.

**சின்னதம்பி பிள்ளை.**—(ஓடிப்போய் ஞானம்பிகையின் கையைப் பிடித்துக்கொண்டு), அம்மணி! உன்னை எவ்வளவு கேவலமாய்ப் பேசினேன். என்னை மன்னிக்கவேண்டும். நீயே என் மகனுக்கு உரியவள் (என்றார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—நிறுத்தும்! நிறுத்தும்! நீர் அப்பெண்ணைத் தொடவேண்டாம். அப்பெண் அனேகர் வீட்டில் வேலைசெய்திருந்த புழுக்கை! நீர் அப்பெண்ணை உம்முடைய மகனுக்கு விவாகஞ் செய்துகொண்டால் உம்மை யாவரும் இகழ்வார்கள். உம்முடைய கௌரவமும் குறை

யும். ஆனதால் அப்பெண்ணைக் கொள்ளும் ஆசையை விட்டுவிடும்.

**சின்னதம்பி பிள்ளை.**—நான் என் மைத்துனருடைய மகளை என் மகனுக்குக் கொள்ளப்போகிறதால் நான் என் மருமகளை இகழவும் புகழவும் கூடும். ஊரார் அப்பெண்ணை இகழ்வார்களாயின் அவர்களுடைய நாக்கைத் துண்டித்து விடுவேன் (என்று நகைத்தார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—அப்பெண் உம்முடைய மைத்துனர் மகளென் றறியாமுன்னம் அவளைக் கேவலமாக வாய் கூசாமல் பேசி, இப்பொழுது உறவுகொண்டாட வந்தீர் போதும்! போதும்! (என்றெழுந்துபோய் அவரைப் பிடித்துத் தூரத்தில் தள்ளினார்).

**சின்னதம்பி பிள்ளை.**—நீர் நேற்று வந்தவர்! உமக்கவ்வளவு சொந்தமிருந்தால் எனக்கு எவ்வளவு சொந்தம் இருக்கும்? நீர் தூரத்தில் போம் (என்று கறுப்பண்ண பிள்ளையைத் தள்ளினார்).

**கறுப்பண்ண பிள்ளை.**—நான் அப்பெண்ணை என் மகள்போலெண்ணி அவளுக்கு இந்த வீட்டை வாங்கினேன். இன்னும் வேண்டிய பொருளும் கொடுக்க யோசித்திருக்கிறேன். உம்முடைய மகனுக்கு அப்பெண்ணைக் கொடுப்பேன் என்பதைக் கனவிலும் நீர் நினைக்கவேண்டாம்.

**சின்னதம்பி பிள்ளை.**—அப்பெண்ணை யாரென்றறியாமல் என்னென்னவோ செய்யவேண்டுமென்று நினைத்திருந்தீர். அவள யாரென்று என் மைத்துனா அறிவாராயின், நீர் அப்பெண்ணுக்குச் செய்வதை அவர் ஒப்புக்கொள்ளார்.

**கறுப்பண்ண பிள்ளை.**—அவர் ஒப்பினாலும் ஒப்பாமற்போனாலும் அவர் இப்பெண்ணை உங்களுக்குக் கொடுக்கமாட்டார்.

**சின்னதம்பி பிள்ளை.**—அவரை விரைவில் அழைத்துவருகிறேன். அவர் தன் மகளை என் மகனுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்வதைக் கேட்டு நீர் தலையிறங்கப் போகிறீர்.

**கறுப்பண்ண பிள்ளை.**—அவர் ஞானம்பிகையை உங்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னதைக் கேட்டு நீங்கள் என் காலில் வந்து விழப்போகிறீர்கள்.

**சின்னதம்பி பிள்ளை.**—இவன் என்ன மடையனாக இருக்கிறான். முன்னும் இவ்விதமாகவே சொன்னான். இவன் பெரிய மூடன் !

**கறுப்பண்ண பிள்ளை.**—நான் மூடனல்ல! நீயே முழுமூடன் ! நான் அந்தப் பெண்ணை உங்களுக்குக் கொடுக்கமாட்டேன் என்றபின் ஏன் வாதாடவேண்டும் ?

**சின்னதம்பி பிள்ளை.**—அப்பெண்ணைக் கொடுக்கிறதில்லை யென்று சொல்ல நீ யார் ?

**கறுப்பண்ண பிள்ளை.**—நானே வேலாயுதம் பிள்ளை யென்று நினைத்துக்கொள்ளும் ! நான் வேலாயுதம் பிள்ளை என்பதால் செங்கமலமும், முத்தும் என்னுடைய மனைவிகளாக வேண்டுமல்லவா (என்று நகைத்தார்).

அவ்விதம் சொன்னதைக் கேட்ட யாவருக்கும் கறுப்பண்ண பிள்ளைமேல் அருவருப்புத் தட்டியது ! வேடிக்கையாக எதைச் சொன்னாலும் சொல்லலாம். ஒருவருடைய மனைவியைத் தன் மனைவி யென்று சொல்லுதலே குற்றம். ஒரு பெரிய தனவந்தனுடைய மனைவிகளைத் தன் மனைவிக ளென்று சொல்வது நியாயமல்லவென்று துக்கப்பட்டார்கள்.

**சின்னதம்பி பிள்ளை.**—என்ன சொன்னாய் ?

**கறுப்பண்ண பிள்ளை.**—நான் சொன்னது உனக்குக் கேட்கவில்லையா? உனக்கென்ன காது செவிடா ? நானே வேலாயுதம் பிள்ளை ! அப்பெண்பிள்ளைகளிருவரும் என் மனைவிகள் என்றேன். இப்பொழுது உனக்கு நன்றாய்க் கேட்டதா ?

**சின்னதம்பி பிள்ளை.**—வேலாயுதம் பிள்ளை மனைவிகள் உன் மனைவிகளா ? (என்று கோபமாகக் கறுப்பண்ண பிள்ளையைத் தலையிலடித்துத் தள்ளினார்).

கறுப்பண்ண பிள்ளை முகத்தில் கட்டியிருந்த துணிகள் யாவும் சின்னதம்பி பிள்ளை அடியால் கீழ் விழுந்து யாவரும் திடுக்குற்றார்கள். சின்னதம்பி பிள்ளை ஓடி அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "அத்தான்! அத்தான்! தாங்களா கறுப் பண்ண பிள்ளை என்ற பேரோ டிருந்தீர்கள்! தங்களைக் கண்டு கொள்ள முடியாமற் போனதே!" என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்.

வேலாயுதம் பிள்ளை ஓடி ஞானம்பிகையை மார்போ டணைத்துக்கொண்டு, "என் கண்மணி! நீ என் வயிற்றில் பிறந்து என்னென்ன துன்பங்களை அனுபவித்தாய்! நான் உயிரோடிருக்கும்பொழுது நீ ஒருவர் வீட்டில் புழுக்கைவேலை செய்ய நேர்ந்ததே! அம்மா! உன்னுடைய புத்தி சாதுரியத்தை யும் பரோபகாரச் சிந்தையும் என்னென்று புகழ்வேன். நீ என் உயிரைக் காப்பாற்றிய நிமித்தம் உனக்கு ஆறாயிரம் ரூபா பெறு மதியான நகைகளை நான் கொடுத்ததை வெறுத்த உன் நற் குணத்தை எவ்விதம் புகழ்வேன்!" என்று ஞானம்பிகையை விட்டு, முத்தம்மாளைப் பிடித்தணைத்துக்கொண்டு "ஆ! முத்து! நான் உயிரோடிருக்கும்பொழுது, இருளாயி என்ற பேர் தாங்கி தோசை விற்று வயிறுவளர்க்கவோ உன தலையில் எழுதியிருந் தது" என்று கண்ணீருதிர்த்தார். பின் சின்னதம்பி பிள்ளை யைத் தழுவிக்கொண்டு "மைத்துனரே! நீர் என் தலையிலடித் தது இன்னம் நோகிறது" என்று அவருக்குச் சொல்லி, வரதராஜ பிள்ளையைப் பார்த்து, "அப்பா! நீ எனக்குச் சொந்த மகனாய்! அம்மா மீனும்பாள் நீ எனக்குச் சொந்த மருமகளானாய்" என்று சொல்லியும், சாமியாபிள்ளையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "தம்பி! நீயும் உன் மனைவியும் ஞானம்பிகை விஷயத்தில் வைத்த அன்பை மறக்கமாட்டேன்" என்று, வைத்தியலிங்கம் பிள்ளையையும் அணைத்துக்கொண்டு "அப்பா! நீயும் உன் மனைவி யும் ஞானம்பிகையை நடத்தியதைக் கேட்டு ஆனந்தித்தேன்"

என்று சொல்லி நல்லமுத்துப் பிள்ளையைத் தழுவிக்கொண்டு "ஐயாவே! நீர் என்னிடத்தும் என் மகளிடத்தும் காட்டிய அன்பு மறக்கத்தக்கதோ" என்று சொல்லி, உண்ணுமுலையைப் பார்த்து "அம்மா! நீ எப்பொழுதும் உன் மகளோடிருக்க வேண்டும். நீ என் மகளை உன் சொந்த மகள்போல் வளர்த்ததை மறக்கேன்" என்று சொல்லி, தாண்டவராயனையும். அழகப்பனையும், மருத்துவிச்சியையும் ஓரிடத்தில் இருக்கச் செய்து தானும் வந்து உட்கார்ந்தார்.

நல்லமுத்துப் பிள்ளை.—ஐயாவே! தாங்கள் தாடியையெடுத்துக் குடுமியை ஏன் வைத்துக்கொண்டீர்கள்?

வேலாயுதம் பிள்ளை.—நான் தாடியோடிருந்தால் என்னை எளிதில் கண்டுகொள்ளமாட்டார்களென்றே இன்று காலை வெளியில் சென்று க்ஷௌரம் செய்துகொண்டு வந்தேன்.

வரதராஜ பிள்ளை.—ஐயா அவர்கள் வீட்டில் க்ஷௌரம் செய்துகொண்டால் ரகஸ்யமாக இராதென்றே காவேரி யாற்றுக்குச் சென்று வரும்பொழுது முன் கட்டியிருந்தது போல் கட்டிய வேஷத்தோடு எங்கள் வீட்டுக்கு வந்தார் (என்று பின் நடந்ததையும் சொன்னார். யாவரும் அதைக் கேட்டு நகைத்தார்கள்).

சின்னதம்பி பிள்ளை.— அத்தான்! வேஷம் போட்டுக்கொள்ளுகிறதும் பொய் சொல்லுகிறதுமோ தங்களுக்கு வழக்கம்?

வேலாயுதம் பிள்ளை.—மைத்துனரே! இக்காலத்தில் பொய்யே மேன்மை அடைகிறது. மெய் அவமானம் அடைகிறது. நீர் வேண்டுமானால் என் குமாரத்தியைக் கேட்டுப் பாரும் (என்று நகைத்தார்).

சின்னதம்பி பிள்ளை.—அம்மா! ஞானும்பிகை! அத்தான் சொல்லுகிறது உண்மைதானா?

ஞானும்பிகை.—ஆம்! மாமா! முற்றிலும் உண்மையே! (என்று நகைத்தாள். (யாவரும் கலிரென்று நகைத்தார்கள்).

சின்னதம்பி பிள்ளை.— அம்மா! உன் தந்தை சொல்லுவதற்குக்

காரணம் இல்லாமல் நீ ஒப்பம் வைக்கிறாயே! என்று நகைத்தார்).

ஞானம்பிகை.—நான் காரணத்தோடு ஒப்பம் வைத்தேன்.

சின்னதம்பி பிள்ளை.—என்ன காரணத்தோடு ஒப்பம் வைத்தாய்?

ஞானம்பிகை.—மாமா! நான் அக்காரணத்தை திருட்டாந்தப் படுத்திக் காட்டாமற்போனால் தாங்களும் மற்றவர்களும் நம்பமாட்டீர்கள். நானும் திருட்டாந்தத்துக்கு அதிகதூரம் போகவேண்டியதில்லை. இவ்விடத்திலேயே மெய்ப்பிக்க முடியும். அதாவது என்தந்தை தன்பெயர் கறுப்பண்ண பிள்ளை யென்று பொய் சொல்லியபொழுது அவரை மேன்மையாக நடத்தினீர்கள்! அவர் தன் பெயர் வேலாயுதம்பிள்ளை யென்றும் என்மாதாக்களைத் தன் மனைவிகளென்றும் உண்மையைச் சொன்ன பொழுது தாங்கள் அவரைப்போய் அடித்தீர்கள்! ஆனதால் பொய் மேன்மையடைந்ததா? மெய் மேன்மையடைந்ததா? தாங்களே சொல்லவேண்டும். (என்று நகைத்தாள்).

யாவரும் ஸபாஷ்! ஸபாஷ்! என்று கெக்கலி கொட்டி நகைத்தார்கள். மீனாக்ஷிஸுந்தரம் அடங்கா மகிழ்ச்சி அடைந்தான்.

சின்னதம்பி பிள்ளை.—ஞானம்பிகையம்மாள் ஸமர்த்தாய்ப் பேசுந் திரமையுள்ளவளென்று நான் கேள்விப்பட்டிருந்தேன். அது உண்மையென்பதை நேரில் கேட்டேன். அத்தான்! தாங்கள் பொய் சொன்னால் தஙகளுடைய குமாரத்தி அதைப் பொருந்தச் சொல்லிவிடுவாள் (என்றார்.யாவரும் கலிரென்று நகைத்தார்கள்).

ஞானகியம்மாள் எழுந்து தன் நாயகனைத் தனித்தழைத்து ரகஸ்யமாக சிலவார்த்தைகளை சொல்லியனுப்பினாள். சின்னதம்பி பிள்ளை வந்து உட்கார்ந்து "அத்தான்! இன்று

ஞானும்பிகை யாரென்று வெளியானதும் மூத்தம்மாளோடு தாங்களும் வெளிப்பட்டதும் யாவருக்கும் அதிக ஸந்தோஷத்தைக் கொடுத்தது. இந்த ஸந்தோஷம் யாவரும் அடைய வேண்டியதாயிருக்க, ஒருவர்மட்டும் துக்கத்திலிருப்பதைப் பார்ப்பது எங்களுக்கெல்லாம் அதிக கவலையாக இருக்கிறது. அதைப் பூர்த்திசெய்ய வேண்டும் " என்ருர்.

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஆம்! ஐயா! தங்களுடைய மூத்த மனைவி அறியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கத் தங்களைவேண்டுகிறோம்.

**வேலாயுதம் பிள்ளை.**—என்ன சொன்னீர்கள்? என் குழந்தையைக் கொலைசெய்யத் தூண்டிய கொலைகாரியை நான் மன்னிக்கவேண்டுமா! ஸபாஷ்! நன்ருயிருக்கிறது! அப்பாதகியைப் பார்க்க என் மனம் ஸகியாது! ஸகியாது!

ஞானும்பிகை எழுந்து வேலாயுதம் பிள்ளை யருகில் வந்து நின்று, "தந்தையே! இவர்கள் எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல் பேசுகிருர்கள். தாங்களாகிலும் மற்ற யாராகிலும் குற்றம் செய்தால் அதை மன்னிக்க ஒருவராலும் முடியாது. அடுக்காத வார்த்தையைச் சொன்னல் அது பயன்படாதென்று அறியாமற் போனர்கள். குற்றஞ் செய்தவர்கள் அதன் பயனை அனுபவிக்க வேண்டியவர்களே! குற்றமாக எண்ணமல் செய்தது குற்றமாக முடிந்தால் அதை மன்னிக்கக்கூடும். நான் சொல்லப்போகிறதால் குற்றம் செய்தவர்கள் மன்னிப்பை அடையார்களென்பது எளிதில் விளங்கும்.

**வேலாயுதம் பிள்ளை.**—ஆம்! அம்மணி! குற்றஞ் செய்தவர்கள் அதன் பயனை அனுபவிக்கவேண்டு மென்பது உண்மையே! ஆனதால் குற்றஞ் செய்தவர்களை மன்னித்தல் கூடாது.

வேலாயுதம் பிள்ளை செங்கமலத்தம்மாளைச் சிலவேளை மன்னித்தாலும் மன்னித்திருப்பார். ஞானும்பிகையால் அவருக்கு மனம் கடினமாய்விடுமென்று யாவரும் பயந்தார்கள்.

**சின்னதம்பி பிள்ளை.**—*அம்மா! ஞானம்பிகை ! நீ பரோபகாரச் சிந்தை யுள்ளவளென்று பலரால் கேள்விப்பட்டிருந்தேன். நீ இன்று இவ்விதம் கடினமான மனதுடன் பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது.*

**ஞானம்பிகை.**—*மாமா ! 'தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்' என்றதைத் தாங்கள் கவனிக்கவேண்டும் (என்று அவருக்குச் சொல்லி, வேலாயுதம் பிள்ளையைப் பார்த்து), தந்தையே ! குற்றஞ்செய்தவர்கள் மன்னிப்படையார்களென்பதை அன்று நாம் கேட்ட பிரசங்கத்தைக்கொண்டே மெய்ப்பிக்கவேண்டு மென்கிற ஆசை தூண்டுகிறது. ஆனதால் இங்கிருப்பவர்கள் யாவரும் என் கருத்தை யறிந்து நான் சொல்வது நியாயமோ அல்லது அதற்கு விரோதமானதோ என்றறியும்விதம் நான் கேட்பதற்குத் தாங்கள் பதில் சொல்லவேண்டும். சாத்திரக் கருத்தைச் சொல்லுமுன், நான் ஐந்தாறு வயதாயிருக்கும்பொழுது கற்றுக் கொண்டதைச் சொல்லவேண்டும். தந்தையே ! சிறிய பலகை யொன்றைத் தண்ணீரில் போட்டால் அது என்ன செய்யும் ?*

**வேலாயுதம் பிள்ளை.**—(*நகைத்து*) *அம்மா! என்ன கருத்தைக் கொண்டு இதைக் கேட்கிறாயோ தெரியவில்லை. உன் மனம் ஸந்தோஷமடைய நீ கேட்பதற்கு பதில்சொல்லியே பார்க்கவேண்டும். பலகையைத் தண்ணீரில் போட்டால் அது மிதக்கும்.*

**ஞானம்பிகை.**—*ஒரு சிறிய கல்லைத் தண்ணீரில் போட்டால் ?*

**வேலாயுதம் பிள்ளை.**—*அது முழுகிப்போகும்.*

**ஞானம்பிகை.**—*அப்பலகையில் அக்கல்லை வைத்துத் தண்ணீரில் விட்டால் ?*

**வேலாயுதம் பிள்ளை.**—*பலகை சிறியதாகவும் கல் பெரிதாகவும் இருந்தால், பலகையும் முழுகும். கல் சிறிதாக இருந்து*

பலகை பெரிதாக இருந்தால் பலகையோடு கல்லும் மிதக்கும்.

ஞானம்பிகை.—தந்தையே! இதனால் நாம் என்ன அறிந்து கொண்டோமென்றால், ஒன்றோடொன்று சேர்ந்த பொருள்கள் தங்களுடைய இயற்கையான குணம் கெட்டுச் சேர்ந்ததின் குணத்தைப் பெறுகின்றன. விளங்கச் சொல்ல வேண்டுமாயின், கல் முழுகவேண்டிய குணத்தை உடையதாயிருந்தாலும், அது பலகையோடு சேர்ந்ததால் தன் குணத்தை யிழந்து மிதக்கும் பலகையின் குணத்தைப் பெற்று மிதந்தது. அல்லது தாங்கள் சொல்லிய விதம் கல் பெரியதாயிருந்தால் பலகை மிதக்குங் குணத்தைவிட்டுக் கல்லின் முழுகுங் குணத்தை பெற்றுப் பலகையும் முழுகியது.

வேலாயுதம் பிள்ளை.—ஆம்!

ஞானம்பிகை.—தந்தையே! தாங்கள் பாலுக்கு ஸமானமானவர்கள்.

சின்னதம்பி பிள்ளை.—என் உன் தந்தையைப் பாலுக்கு ஸமான மென்கிறாய்?

ஞானம்பிகை.—தன்னையடுத்தவரைத் தன்னைப்போலாக்கி அவர்களுக்குத் துன்பம் வந்தால் தான் வருந்தும் செயலையுடைய பாலின் குணம் என் தந்தைக்கிருப்பதால் என் தந்தையைப்பாலுக்கு நிகராக்கத் துணிந்தேன்.

சின்னதம்பி பிள்ளை.—நீ சொல்வது விளங்கவில்லை.

ஞானம்பிகை.—விளங்கச் சொல்லுகிறேன். ஜலம் பாலினுடைய நேசத்தை விரும்பி அதனுடன் சேர்ந்தால் பால் தன்னுடைய நட்பை விரும்பிய நீருக்குத் தன்னிறத்தையும் தன் குணமாகிய ருசியையும் கொடுத்துச் சேர்த்துக் கொண்டு பிரிவின்றி இருக்கும். நாம் அப்பாலை அடுப்பில் வைத்துக் காய்ச்சினால் (முதலில் வற்றிப்போகிறது நீரானதால்) நீரில்லாமையைக் கண்ட பால் "ஓ! ஓ! மோசம்

வந்தது. நம்மை யடுத்த நண்பனைக் காணோம். அவன் எங்கே ! எங்கே!'' என்று தேடிப் பொங்கி வரும்பொழுது, நாம் கையால் ஜலத்தை அள்ளித் தெளித்தால் நமது நண்பன் நம்மோடு இருக்கிறான். என்று அடங்கிப்போகும். அதுபோல் என் தந்தையும் தன்னை அடுத்தோரை தன்னைப்போல் அவர்களை மேன்மையாக்குகிற குணம் அவரிடத்திலிருப்பதால், அவரைப் பாலுக்கு ஒப்பாகச் சொன்னேன். பொருத்தமல்லவோ (என்றாள்).

யாவரும் நகைத்து முற்றிலும் பொருத்தம் என்றார்கள்.

**ஞானம்பிகை.**—(வேலாயுதம் பிள்ளையைப் பார்த்து) தந்தையே ! கல்வியோ அல்லது செல்வமோ மேலானது. சிறுவர்களைக் கேட்கும்விதம் தங்களைக் கேட்பதைக் குறித்து மன்னித்துப் பதில் சொல்லவேண்டும்.

**வேலாயுதம் பிள்ளை.**—(நகைத்து) அம்மா ! கல்வியே மேலானது. செல்வம் செலவழிக்கச் செலவழிக்கக் குறையும். கல்வி செலவழிக்கச் செலவழிக்க வளரும்.

**ஞானம்பிகை.**—கல்வி மேலானதென அறிந்தும் முத்துப்பட்டணத்திலும் அகற்கடுத்த ஊர்களிலும் இருக்கும் பெண்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கிறார்களா ?

**வேலாயுதம் பிள்ளை.**—அது அப்பக்கத்தில் சூனியம். *

---

* தற்காலம் பெண்கள் வாசிக்க வேண்டுவது அவசியமென நகரத்தார் பலவிடங்களில் பாடசாலைகள் ஏற்படுத்தி வருகிறார்கள். கண்டனூரில் சில கனவான்கள் பாடசாலை ஏற்படுத்த ஓர் கூட்டங் கூடியபொழுது கல்வியிற் சிறந்த சாஸ்திரியார் ஒருவர் பெண்கள் வாசிப்பது கூடாதென்று போதித்து அநேகருடைய கருத்தை மாற்றிவிட்டதாகக் கேள்விப்பட்டு துக்கப்படுகிறோம். பெண்கல்விக்கே உலகம் பாடுபட சாஸ்திரியார் மட்டும் அதற்கு விரோதமாகப் போதிப்பதால் சாஸ்திரியாருடைய கருத்து ஏதென்று விளங்கவில்லை.

**ஞானம்பிகை.**—தந்தையே! நாம் பிறந்து பிறந்து இறந்து இறந்து போகவேண்டிய காரணம் என்ன ?

**வேலாயுதம் பிள்ளை.**—நாம் செய்யும் கன்மமே நமக்குப் பிறப்பையும் இறப்பையும் கொடுத்துக்கொண்டிருக்கிறதென்று அன்று பிரசங்கியாரால் அறிந்தோம்.

**ஞானம்பிகை.**—அன்று பிரசங்கியாரால் கேள்விப்பட்டதில் இரண்டொன்று எனக்கு நன்றாய் விளங்கவில்லை. ஆனதால் அதையே தங்களைக் கேட்கிறேன். நாம் முன் ஜன்மத்தில் செய்த நல்வினை தீவினையால் கிடைத்த பலனை இப்பிறப்பில் அனுபவித்துவிட்டால், நமக்கு வேறு ஜன்மம் ஏன் வரவேண்டும் ?

**வேலாயுதம் பிள்ளை.**—நாம் பிராரத்துவத்தைப் புசித்துவிட்டாலும் இப்பிறப்பில் செய்யும் ஆகாமியத்தைப் புசிக்க வேறு பிறவி யெடுக்கவேண்டும்.

**ஞானம்பிகை**—அதே எனக்கு விளங்கவில்லை. ஆகாமியம் என்பதென்ன ? அதையே தாங்கள் எனக்கு விளங்கச் சொல்லவேண்டும்.

**வேலாயுதம் பிள்ளை.**—பிராரத்துவத்தைப் புசிக்கும் காலத்தில் உண்டாகும் விருப்பும் வெறுப்புமே ஆகாயமியம். அதுவே மறுப்பிறப்பைக் கொடுக்கும்.

**ஞானம்பிகை.**—தந்தையே! இன்பதுன்பத்தை அனுபவிக்கும் பொழுது உண்டாகும் விருப்பு வெறுப்பு என்றீர்கள். விருப்பு வெறுப்பு என்பதை விளங்கச் சொல்லவேண்டும்.

**வேலாயுதம் பிள்ளை.**—அம்மா! நாம் முன் செய்த கன்மத்துக்கீடாக இன்பத்தை அனுபவிக்க ஒருவர் துணை செய்யுங்கால் நாம் ஸந்தோஷப்படுதலும் நமக்குத் துணை செய்தவர்களுக்கு நன்மையைச் செய்தலும், நாம் முன்செய்த கன்மத்துக்கீடாகத் துன்பத்தை அனுபவிக்கத் துணை செய்த காலத்தில் நாம் துக்கமடைதலும் நமக்குத் துணை

செய்தவர்களிடம் கோபத்தைக் காட்டி அவர்களுக்குக் குற்றஞ் செய்தலுமே விருப்பு வெறுப்பு என்று சொல்லப் பட்டிருக்கிறது.

ஞானாம்பிகை.—நாம் முன்போந்த ஜன்மத்தில் செய்த கன்மத் துக்கீடாகத் துன்பத்தை அனுபவிக்கத் துணை நிற்பவர்களைக் குற்றமாக நடத்தக்கூடாதென்று சொல்லுவது இப்பொழுதே எனக்கு விளங்கியது. ஆம்! "பேறிழவின்பமோடு பிணிமூப்புச் சாக்காடென்னும் ஆறுமுன் கருவிற் பட்டது" என்றிருக்கிறது. நாம் கருவில் அமையும் பொழுதே நாம் இப்பிறவியில அனுபவிக்க வேண்டிய ஸுகதுக்கங்கள் அமைக்கப்பட்டிருபபதால் நாம் ஒருவர் மேல் பழியேற்றி "இவர்கள் இன்னது செய்தார்கள்; இவர்களால் இந்தத் துன்பத்தை அனுபவிக்கிறோம்" என்று சொல்லுதல் நியாயமா? அவ்விதம் சொல்லுவதோடு தீவினையின் பலனை அனுபவிக்கத் துணை செய்தவர்களுக்கு நன்மை செய்வதை விட்டு அவர் விஷயத்தில் நாம் குற்றஞ் செய்யக்கூடாது. குற்றஞ் செய்தால் நாம் மறுஜன்மத்திலும் துன்பமடைய வேண்டியதல்லவா? பலகையோடு சேர்ந்த கல்லின் குணம் மாறியதுபோல அற்பருடைய உறவைக் கொண்டவர்கள் குணம் மாறும். பாலோடு சேர்ந்த நீர் மேலானதுபோல் தங்களைப் போன்றவர்களுடைய ஆதரவைப் பெற்றால் அவர்களுடைய குணம் மேன்மையாகும் (என்றோடிச் செங்கமலத்தம்மாளைக் கையைப் பிடித்து வந்து தன் தந்தையின் காலில் விழச்செய்து) தந்தையே! நான் முத்துப்பட்டணத்தில் பிறந்ததால் கல்வியில்லாமற் போவேன் என்று என்னைக் கல்வி கற்று வரும்படி அனுப்பி எனக்குப் பெரிய நன்மைச் செய்த என் தாயைக் கோபித்துத் தாங்கள் பெருங்குற்றஞ் செய்யப் போகிறீர்களே! குற்றஞ் செய்தவர்களுக்கு மன்னிப்பில்லையே! ஆனதால் அதற்கு பயந்து எங்களை ஆதரியுங்கள் (என்று தானும் அவர் காலில் விழுந்து எழாமலிருந்தாள்).

யாவரும் மலைத்து இதென்ன அதிசயம் என்றிருந்தார் கள்.

வேலாயுதம் பிள்ளை.—அம்மா! ஞானம்பிகை! நீ ஏதேதோ சொல்லி என்னை ஏமாற்றிவிட்டாய் (எழுந்திருவென்று தூக்கிவிட்டார்).

ஞானம்பிகை.—தந்தையே! தாங்கள் என் தாயை மன்னித்து ஆதரிக்காமல் என்னை எழுந்திருக்கச் சொன்னால் நான் எழுந்திருக்கமாட்டேன்.

வேலாயுதம் பிள்ளை.—(செங்கமலத்தம்மாளைத் தூக்கிவிட்டு) உன்னை மன்னித்தேன். நீ இனிமேல் துர்ப்புத்தியைக் கேட்கவேண்டாம்.

செங்கமலத்தம்மாள்.—(எழுந்து ஞானம்பிகையைக் கட்டிப் பிடித்து முகமெல்லாம் முத்தங்கொடுத்து) என் கண் மணி! நான் பழிகாரி! பெரும் பாதகி! உலகம் நிந்திக்க நான் உடலெடுத்தேன். எனக்குப் பிள்ளையில்லையென்றும் என் நாயகன் வேறு விவாகஞ் செய்துகொண்டால் அத னால் குழந்தை யுண்டாய் என் பிள்ளைக் கலி தீருமென் றும் அவரைக் கெஞ்சிக் கெஞ்சி அவருக்கு விவாகம் முடித்துவைத்து, அவருக்குக் குழந்தையுண்டாக அதைக் கொன்றுவிட அக்கொலைபாதகன் சொற்கேட்டுக் கொலை காரியானேன். என்னை மன்னிக்கமாட்டேன் என்றவரை மன்னிக்கும்படி செய்த உன் ஸாமர்த்யத்தை நான் எவ்வி தம் புகழ்வேன் (என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்து மீண் டும் ஞானம்பிகைக்கு முத்தங் கொடுத்து அழைத்துச் சென்றாள்).

பழனியாயி அம்மாள், இந்திராணியம்மாள், மீனம்பாள் முதலிய பெண்பிள்ளைகள் ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்து முத்தங் கொடுத்தார்கள்.

சின்னதம்பி பிள்ளை.—ஞானம்பிகை கோபமாகப் பேசுகிறவள்

போல் அபிநயித்துத் தன் தந்தையைக் குற்றஞ்செய்யாமல் தடுத்து விட்டாள் பார்த்தீர்களா (என்று நகைத்தார்).

யாவரும் ஞானம்பிகையின் ஸாமர்த்யமே ஸாமர்த்யம் என்றார்கள்.

அப்போது ஒருவன் வேலாயுதம் பிள்ளை யருகில் சென்று, "எஜமானே! யாவும் ஸித்தமாக இருக்கிறது" என்றான்.

**வேலாயுதம் பிள்ளை.**—ஆம்! பெருமாள்! நெடுநேரம் ஆய் விட்டது. (என்று யாவரையும் பார்த்து "நாம் சாப்பிட்டு வந்து வார்த்தையாடலாம்," என்றெழுந்தார். யாவரும் எழுந்தார்கள்).

## 23—ம் அத்தியாயம்

வேலாயுதம் பிள்ளை, சின்னதம்பி பிள்ளை, வரதராஜ பிள்ளை, வைத்தியலிங்கம் பிள்ளை, மீனாக்ஷிஸுந்தரம், நல்ல முத்துப் பிள்ளை முதலியவர்களும் கும்பகோணத்திலிருந்து வரத ராஜ பிள்ளையாலழைக்கப்பட்ட ஆண்பிள்ளைகளெல்லாம் ஒரு பக்கமாகவும், பெண்பிள்ளைகளெல்லாம் வேறுபக்கமாகவும் உட்கார்ந்து வார்த்தையாடிக்கொண் டிருக்கும்பொழுது, பெருமாள் என்பவன் வெற்றிலைப் பாக்குத் தட்டுகள் எல்லாம் ஆண்பிள்ளைகள பக்கமிருந்ததால் அதில் ஒன்றை எடுத்துக்கொண்டுபோய்ப் பெண்பிள்ளைகள் இருக்கும் இடத்தில் வைக்கப்போனவன், முத்தம்மாள் உட்கார்ந்திருந்த இடத்தில் கொண்டுபோய் வைத்தான்.

**முத்தம்மாள்.**—(அவனைப் பார்த்து) ஆ! நீயா! இங்கிருப்பது? இவன் கொடிய துன்மார்க்கன் (என்று மற்றப் பெண் பிள்ளைகளிடம் சொன்னாள்).

**வேலாயுதம் பிள்ளை.**—(தன் மனைவி சொல்லியதைக் கேட்டு) முத்து! என் சொன்னாய்? நீ பெருமாளை துன்மார்க்கன் என்று சொல்லியதின் காரணம் என்ன?

**முத்தம்மாள்.**—இப்புண்ணியவான் என்னிடம் தகாத வார்த்தை

களைச் சொன்னான். அவன் சொன்னதைச் சொல்ல வாய்வரவில்லை.

**வேலாயுதம் பிள்ளை.**—அடே! பெருமாள்! என்ன ஸமாசாரம்? நீ என் மனைவியை என்ன சொன்னாய்?

**பெருமாள்.**—எஜமானே! நான் இந்தம்மாளிடம் ஒன்றும் சொல்லவில்லை.

**வேலாயுதம் பிள்ளை.**—முத்து! பெருமாள் ஒன்றும் சொல்லவில்லை என்கிறானே! உன்னிடத்தில் கெடுதலாக எதையாகிலும் சொல்லியிருந்தால், அதை நீ சொல்வது அவசியம். அவனை இப்பொழுதே என்னிடத்திலிருந்து நீக்கிவிடுகிறேன்.

**முத்தம்மாள்.**—தாங்கள் அப்புண்ணியவான் விஷயத்தில் கோபத்தைக் காட்டவேண்டாம். நான் ஏழையாகத் தோசை சுட்டுக் காலம் கழிப்பதைக் கண்டு என் கடையில் வந்து தோசை காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்து, பின் அறியாமையால் தன்னோடு வந்திருக்க வேண்டுமென்றார். அவரை ஒன்றும் செய்யவேண்டாம். என் வினைப்பயனால் நான் கேட்கவேண்டியதை கேட்டேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—அத்தான்! இவ்வித குணமுள்ளவனைத் தாங்கள் வைத்திருப்பது ந்யாயமல்ல.

**வேலாயுதம் பிள்ளை.**—மைத்துனரே! என்னிடத்தி லிருப்பவர்களெல்லாம் யோக்கியரேயன்றி அயோக்கியரல்ல. அவன் ஏதோ அறியாமையாற் செய்துவிட்டான் என்று என் மனைவி அவனை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டதால் அவனை மன்னித்தேன்.

**சின்னதம்பி பிள்ளை.**—முத்தம்மாள் தனக்குக் கெடுதல் செய்ய எண்ணங்கொண்டவனை மன்னிக்கும்படி கேட்டாள். தாய்க்கும் மகளுக்கும் ஒரேவித குணம் இருப்பதைப் பார்த்தீர்களோ!

**சாமியா பிள்ளை.**—'தாய்போல் சேய். நூலைப்போல் சேலை' என்ற பழமொழி இங்கு உண்மையாகக் காண்கிறது.

**சின்னதம்பி பிள்ளை.**—அம்மா! முத்து! நீ முத்துப்பட்டணம் விட்டு இவ்வூருக்கு ஏன் வந்தாய்? அதை நான் அறிய விரும்புகிறேன். நீ சொல்லவேண்டும்.

**முத்தம்மாள்.**—அண்ணா! நான் ஞானாம்பிகையைப் பெற்ற மூன்றாம் மாதம் என் தமக்கை ஸ்தலதரிசனைக்குப் போன பின், வண்டிக்காரனும் மற்றிருவரும் என்னைச் சூதாக மோரிசு கண்டி முதலிய இடங்களுக்கு ஆள் ஏற்றுகிறவனிடம் கொண்டுவந்து விட்டுப் போனார்கள். நான் அதிகம் பயந்து ஆள் ஏற்றும் தலைவனிடம் என்னைக் கொண்டு வந்த விதத்தைச் சொல்லி "என்னை விட்டுவிடவேண்டும். என் தமயன் வைத்தியசாலையில் இருக்கிறார். அவரைப் போய்ப் பார்க்கவேண்டும்" என்று கெஞ்சினேன். அவன் என்னைப் பார்த்து நகைத்து "நாங்கள் பெண்பிள்ளைகளுக்காக ரூபா ஐம்பதும் ஆண்பிள்ளைகளுக்கு இருபத்தைந்தும் கொடுத்து ஆள் சேர்க்கிறோம். இவ்விதம் நாங்கள் பணம் கொடுத்து ஆள்களைக் கொண்டுவந்து அவர்கள் சாக்குபோக்குச் சொல்வதைக் கேட்டு அனுப்பிக்கொண்டிருந்தால் நாங்கள் கொடுத்த பணத்திற்கு என்ன செய்கிறது. நாங்கள் செய்யும் தொழிலும் விருத்தியடையுமல்லவா! போ! போ! பைத்தியக்காரி! நீ என்ன கசப்பு விழுங்கப்போகிறாய்? கரும்பு தின்னக் கைக்கூலியா! நீ மோரீசுக்குப் போனால் பெரும் பணக்காரியாய் விடுவாய்! அப்பொழுது நீ எங்களைப் பார்த்தாலும் பேசமாட்டாய்!" என்றான். நான் "என்னால் நீங்கள் நஷ்டமடைய வேண்டாம். எனக்காக நீங்கள் செலவிட்டதை கொடுத்துவிடுகிறேன். என்னுடைய ஸகோதரன் வைத்தியசாலையில் இருக்கிறார். அவரைப் போய்ப் பார்க்கவேண்டும்" என்று கெஞ்சினேன். அவன் "எங்களுக்கு நேரிட்ட செலவைக்

கொடுக்கிறேன் என்கிருயே. உன் கையில் பணம் இருக்கிறதோ ?" என்றதற்கு, "பணமில்லே. நீங்கள் ஒராளே என்னேடு முத்துப்பட்டணம் அனுப்பினுல் கொடுக்கிறேன்" என்றேன். அவன் நகைத்து "எங்களே ஏமாற்றப் பார்க்கிருயா ? நாங்கள் உன்னே விட்டுவிட்டு ஏமாறிப் போவோமென்று நினேக்கவேண்டாம்" என்ருன். நான் "நீங்கள் என்னே நம்பாமற்போனுல் நான் போட்டிருக்கும் நகைகளேக் கொடுத்துவிடுகிறேன்" என்று என் காதிலிருந்த கம்மலேயும் தாலியோடிருந்த உருவுகளேயும் கொடுத்தேன். அவன் அதையெல்லாம் வாங்கி வைத்துக்கொண்டு, "இந்த நகைகளே யெல்லாம் நீ மோரீசுக்குப் போய்ச் சேர்ந்தவுடன் கொடுக்கிறேன்" என்று என்னேத் துரத்திவிட்டான். நான் அவ்வீட்டிலிருந்த பெண்பிள்ளேயை வசப்படுத்தியே போகவேண்டுமென்று அவளுக்கு என்னிடத்திலிருந்த ரொக்கத்தை யெல்லாம் கொடுத்து "என்னே வெளியில் அனுப்பிவிட வேண்டும்" என்று கெஞ்சினேன். அவள் நான் கொடுத்ததையெல்லாம் எடுத்துக்கொண்டு, என்னேக் கண்டவிதம் பேசி, நான் கொடுத்த ரூபாவையும் வீட்டுக் கெஜமானிடம் கொடுத்தாள். அதன் மேல் ஆள்கள் அதிக ஜாக்கிரதையாகப் பார்த்திருந்தார்கள். நான் அவ்வீட்டுக்குப் போன மூன்ரும் நாள், அவ்வீட்டிலிருந்த பெண்பிள்ளே என்னிடம் வந்து, "இன்று யாவரையும் நாகப்பட்டணம் அழைத்துப்போக இருக்கிருர்கள். அங்குப் போனவுடன் உன்னுடைய ஸமாசாரத்தை எங்களுடைய பெரிய எஜமானுக்குச் சொல்லி, உன்னே உன்னுடைய ஊருக்கு அனுப்பிவிடுவார்கள்" என்று எனக்குத் தைரியம் சொல்லிப் போனுள். அன்றிரவு ஒன்பதரை மணிக்கு என்னேக்கொண்டுபோய் ரெயில் ஏற்றினுர்கள். இரவு பதினெரு மணிக்கு வண்டி நீடாமங்கலம் வந்து நின்றவுடன், எனக்குக் காவலாக இருந்தவர்களில்

ஒரு பெண்பிள்ளை வண்டியிலிருந் திறங்கினுள். நான் அவளை எங்குப் போகிருய் என்று கேட்டேன். அவள் வெளிக்குப் போகவேண்டு மென்றதால், நானும் வருகிறே னென்று அவளோடிறங்கிப்போய்த் திரும்பும்போது, வண் டிபோகிற ஸமயமாயிருந்தது. அவள் என்னைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடிவரும்பொழுது, நான் சேலை அவிழ்ந்துபோகிறது என்றவுடன் என்னைப் பிடித்திருந்த பிடியைவிட்டு விரைவில் வாவென்று வண்டியிலேறினுள். நான் வண்டியிலேருமல் சேலையைக் கட்டிக்கொள்வது போல் அபிநயித்துக்கொண்டிருந்தேன். வண்டி போன பின் ஸ்டேஷனி லிருந்தவர்கள் என்னிடம் டிக்கெட்டு இருக்கிறதா வென்று கேட்டு, நான் இருக்கிறதென்று காட்டியதால், காலைவண்டியில் போகவேண்டும் என்று சொன்னுர்கள். நான் எனக்குள் ஸந்தோஷமடைந்து அங்கு நின்றிருந்தபொழுது, போர்ட்டர் ஒருவன் என்னி டம் வந்து அம்மா! நீங்கள் என் நின்றிருக்கவேண்டும்? ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டில் அவர் தாயார், தங்கை, ஸமு ஸாரம் முதலியவர்கள் இருக்கிருர்கள்'' என்று என்னை அங்கு அழைத்துப்போய் விட்டு, ஸ்டேஷன் மாஸ்டரின் தாயாரை எழுப்பி, எனக்குப் படுத்துக்கொள்ள இடங்கொ டுக்க வேண்டு மென்ருன். அந்த அம்மாள் எழுந்து என் ஸமாசாரத்தைக் கேட்டுப் படுத்துக்கொள்ளச் சொல்லி, காலையிலெழுந்து என்னுடைய இஷ்டம் என்னவென்று கேட்டார்கள்.'' நான் தஞ்சாவூருக்குச் சென்று என் தம யன் வைத்தியசாலையி லிருப்பதால் அவரைப் போய்ப் பார்க்கவேண்டும். ஆனுல் என் கையில் ஒருகாசும் இல்லை'' என்று சொனனதின்மேல் அந்தம்மாள் தன் மகனிடம சொல்லி எனக்கு டிக்கட்டு வாங்கிக்கொடுக்கச் சொன்னுர் கள். அப்புண்ணியவான தஞ்சாவூருக்கு டிக்கெட்டு வாங் கிக் கொடுத்ததோடு என் கையில் ஒரு ரூபாவும் கொடுத்

தார். நான் அந்தம்மாளுக்கு நமஸ்காரஞ்செய்து காலை எட்டேமுக்கால் மணி வண்டியேறி ஒன்பதேமுக்கால் மணிக்குத் தஞ்சாவூர் வந்துசேர்ந்து, அவ்விடத்தில் என்னைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்ற பயத்தோடு என்னை ஒருவரும் கண்டுகொள்ளாமலிருக்க முக்காடு போட்டு முகத்தை நன்றாய் மூடிக்கொண்டு வண்டியிலிருந்திறங்கி "பெண் பிள்ளைகளோடு போகும்பொழுது, அண்ணன் சின்னசாமி பிள்ளையும் என்னை முத்துப்பட்டணத்திலிருந்து கொண்டுவந்த வண்டிக்காரனும் ஓரிடத்தில் நின்று, 'அவள் இதுபரியந்தம் கப்பலேறியிருப்பாள் மோரிசுக்குப் போய் வேறோர் மாப்பிள்ளையை எடுத்துக்கொள்ளட்டும்" என்று அண்ணன் சொல்லவும், வண்டிக்காரன் "தங்களுக்குக் குடல் பிதுங்கியதென்று சொல்லாமற்போனால் அவள் முத்துப்பட்டணத்தை விட்டு வந்திருக்காள்" என்று சொல்லி, இருவரும் நகைத்துக்கொண்டே போய் மேற்கே போகும் வண்டியில் ஏறினார்கள். அவர்கள் பேசிக்கொண்டு போனதைக் கேட்டுத் திடுக்கிட்டு "நம்மை மோசஞ்செய்தே வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்கள். நாம் முத்துப்பட்டணம போனாலும் நமக்குத் துணை ஒருவரும் இல்லாததால் நம்மை அவ்விடத்திலிருக்க விடமாட்டார்களே! நாம் என்ன செய்கிறது. நம்முடைய காலத்தை எவ்விதம் கழிக்கப்போகிறோம்" என்ற யோசனையோடு நான் வந்தவண்டி மீண்டும் கிழக்கே எப்பொழுது போகுமென விசாரிதது, பத்தேகால் மணியென அறிந்து 'நாம் மீண்டும் நீடாமங்கலத்திற்குப் போவதே உத்தமம். ஸ்டேஷன்மாஸ்டர் தாயார் நல்லவளாக இருக்கிறாள்" என்று டிக்கெட்டு வாங்கி நீடாமங்கலம் போய்ச்சேர்ந்தேன். ஸ்டேஷன் மாஸ்டர் தாயார் என்னைக் கண்டு ஆச்சரியப்பட்டு ஏன் திரும்பி வந்தாய் என்று கேட்டார்கள். நான் கேள்விப் பட்டதைச் சொல்லி, நான் எவ்விதம் என் காலத்

தைக் கழிக்கப்போகிறேன் என்று அழுதேன். அந்தம் மாள் என் நாயகன் எங்கிருக்கிறாரென்றும் அவருக்கு ஏன் எழுதக்கூடாதென்றும் கேட்டார்கள். நான் "என்னை வீட்டைவிட்டுத் துரத்த எண்ணங்கொண்டவர்கள் என் நாயகருக்கு என்னென்ன எழுதுவார்களோ? அவர் அவர்கள் சொல்வதைக் கேட்பாரே யொழிய என் வார்த்தையை நம்பமாட்டாரே! நான் எங்காகிலும் சென்று கூத்தரிசி குத்தியாவது என் காலத்தைக் கழிக்கிறேன். தாங்கள் இவ்வூரில் யாரிடத்திலாகிலும் சொல்லி என் வயிறு வளர்க்க உதவிசெய்ய வேண்டும் என்று அந்தம்மாள் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினேன். அந்தம்மாள் பரிதாபப்பட்டு "அம்மா! உன்னை என் மகள்பேரெண்ணி நான் உன்னை ஆதரிக்கக் கூடும். ஆனால் என் மகனை வேறு ஊருக்கு மாற்றியிருக்கிறார்கள். என் மகனுக்குப் பதில் ஆள் வரும் பரியந்தம் நாங்கள் இவ்வூரில் இருப்போம். அதுபரியந்தம் நீ எங்களோடு இருக்கலாம். நான் அதற்குள் இவ்வூரில் எனக்குத் தெரிந்தவர்களை விசாரிக்கிறேன்" என்றார்கள். அடுத்த நாளே ஒருவர் சென்னையிலிருந்து மனைவி மக்களோடு வந்திறங்கினார். அவர்கள் வீட்டில் வேலை செய்யும்படி எனக்குச் சொல்லி எனக்கு இரண்டு பழைய சேலைகளைக் கொடுத்துப் போனார்கள். நான் புது ஸ்டேஷன் மாஸ்டர் மனைவி ஸந்தோஷப்படும் விதம் ஆறுமாதம் வேலை செய்து அவர்கள் மாதம் இரண்டு ரூபாய் சம்பளமாகக் கொடுப்பதை வாங்கி வைத்திருந்தேன். ஒரு நாள் அவர்கள் வீட்டில் சிலருக்குச் சாப்பாடு செய்து அவர்களுக்கு என்னை வட்டிக்கும்படி செய்தார்கள். விருந்தாளியாக வந்தவரில் ஒருவர், என்னைப் பார்த்து ஸ்டேஷன் மாஸ்டரிடம் என் கைபாகத்தைப் புகழ்ந்து வார்த்தையாடியிருந்து, அது முதல் அடிக்கடி ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டுக்கு அவர் இருக்கும்பொழுதும் இல்லாத பொழுதும் வந்து, தனக்கு

ஏதாகிலும் வேண்டுமென்று என்னை அழைப்பதும் என்னைக் கண்டு நகைப்பதுமாக இருந்து, ஒருநாள் ஒருவருமில்லாத காலத்தில் என்னையழைத்து, "நீ வீட்டில் வேலை செய்துகொண்டிருப்பதைப் பார்க்க எனக்குக் கவலையாக இருக்கிறது. நீ ஸம்மதப்பட்டால் ஸ்டேஷன் மாஸ்டருடைய ஸம்மதத்தைப் பெற்று நான் உன்னை அழைத்துப் போகிறேன். உனக்கு நகைகள் முதலானவைகளைக் குறைவறக் கொடுப்பேன்" என்று சொன்னார், நான் அவரிடம் "நீர் நாளை மாலை வந்தால் நான் யோசித்து என் கருத்தைச் சொல்லுகிறேன்" என்று அவரை அனுப்பிவிட்டு, அன்று மாலை நான் கடைக்குப் போய் வந்தவுடன் ஸ்டேஷன் மாஸ்டர் மனைவியை அடுத்து "என்னுடைய நாயகனின் இருப்பிடத்தை அறிந்தவர் ஒருவர் கும்பகோணத்தில் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்டேன். அவரைப் போய்ப் பார்த்து வருகிறேன்" என்றதற்கு அவள் கடுகடுத்து விடைகொடுக்கமாட்டேன் என்றாள். பின் நான் அவளைக் கெஞ்சிக் கேட்டபின் விடை கொடுத்தாள். நான் அப்பொழுதே என்னுடைய துணிகளையெல்லாம் மூட்டை கட்டியெடுத்துக்கெண்டு நீடாமங்கலத்திற்கு ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள ஆலங்குடிக்கு வரும்பொழுது எட்டு மணியாய்விட்டது. இராப்பொழுதை எவ்விடத்தில் கழிப்பதென யோசித்து, அங்கோர் கிழவி சாலையோரத்தில் பலகாரம் விற்றுக்கொண்டிருப்பதைக் கண்டு அவளிடத்தில் படுத்துக்கொள்ள இடங்கேட்டேன். அவள் நான் யாரென்றும் எங்குப்போகிறேன் என்றும் என்ன குலம் என்றும் கேட்டாள். அவள் கேட்பதற்குப் பதில் சொல்லி, "நான் எங்காகிலும் போய் என் வயிற்றை வளர்க்க ஏதாகிலும் செய்யவேண்டும் என்று யோசித்திருக்கிறேன்" என்றேன். அவள் என்னிடத்தில் அன்பாகப் பேசித் தன்னோடிருக்க இஷ்டமிருந்தால் இருக்கலாம் என்றும், தனக்கொருவருமில்லை ஸமீபத்

தில் இல்லையென்றும், தான் பலகாரம் செய்து விற்றுக் காலங் கழிக்கிறவளென்றும் சொல்லி, "நீ என்னோடிருந்தால் என் மகளைபபோல் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றும் சொன்னாள். நான் அவள் கருத்திற்கு உடன்பட்டு அவளுக்கு அதிக தொந்தரவு கொடுக்காமல் நானே அவளுக்கு வேண்டிய பலகாரங்களைச் செய்து கொடுத்துக் கொண்டுவந்தேன். சில மாதங்களுக்குப்பின் அக்கிழவி சுரத்தால் பீடிக்கப்பட்டு நெடுநாள் படுத்த படுக்கையில் இருந்தாள். நான் அவளுடைய மலஜல முதலானதை எடுத்து அவளுக்கு வேண்டிய பத்தியம் பரிகாரங்களைச் செய்து கொடுப்பதோடு, பலகார வியாபாரத்தைதையும் கைவிடாமலிருந்தேன். பெற்ற பெண்ணுயிருந்தாலும் இவ்வளவு செய்யமாட்டாளென்று அக்கம்பக்கத்தா ரெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மூன்று மாதத்திற்குப் பின் அக்கிழவிக்கு முற்றிலும் குணமாய்த் தன் வியாபாரத்தைச் செய்துகொண் டிருந்தாள். அவளோடு இரண்டு வருடங் கழித்தபின் நான் ஒருவாரம் சுரத்தில் படுத்து ஒன்றும் செய்யாமலிருந்தேன். அக்கிழவி எனக்குப் பத்தியங் கொடுப்பதற்கும் என்னை வெளியிலழைத்துக்கொண்டு போகிறதற்கும் சங்கடப்பட்டு, என்னை எந்நேரமும் "இதென்ன இழவு! இதென்ன கல்லெடுப்பு! நான் இவளுக்குப் பணிவிடை செய்ய வேண்டியிருக்கிறதே! நீ எங்காகிலும் போய்விடு, போய்விடு" என்று சொல்லிக்கொண்டிருந்தவள், ஒருநாள் எனக்கு ஒன்றும் கொடுக்காமல் பட்டினியாய்ப் போட்டுவிட்டாள். அவள் நோயாயிருந்தபொழுது நாம் அவளுக்குப் பெற்ற பெண்ணைப்போ லிருந்து வேண்டியதைச் செய்திருந்தோம். நாம் சிலநாள் நோயாயிருக்கும்பொழுது நம்மைப் போய்விடும்படி சொல்லுகிறதோடு, நம்மைப் பட்டினியாகவும் போட்டுவைத்தாளே. இனி இவளோடு இருக்கக் கூடாதென்று என்னுடைய துணிகளை யெல்லாம் எடுத்

துக் கட்டிவைத்துக்கொண்டு "நான் போய்விடுகிறேன். எனக்குச் செலவுக்கு ஏதாகிலும் கொடுக்கிறீர்களா ?" என்று கேட்டதற்கு, அவள் என்னைக் கண்டவிதம் பேசி "செருப்புக் கொடுப்பேன்" என்று காலைத் தூக்கிக் காட்டினாள். கிழவியைப் போல் பலகாரம் விற்கும் அடுத்த வீட்டுப் பெண்பிள்ளை குப்பம்மாள் என்றவள் அவள் சொல்வதைக் கேட்டிருந்து, "எண்டியம்மா ! இப்பெண் பிள்ளை நெடுநாள் உன்னிடத்தில் வேலைசெய்து சிலநாள் நோயாயிருந்தால் அவளைப் போகச் சொல்லுகிறதோடு அவள் இத்தனை நாள் வேலைசெய்ததற்கு ஒன்று மில்லையென்பது நியாயமா ?" என்றாள். அக்கிழவி "அடி குப்பம்மா ! நான் நோயாயிருந்தபொழுது இவள் எவ்வளவு கொள்ளை யடித்துவிட்டாள் ! அது போதாதா ? நான் வேறாகவும் கொடுக்க வேண்டுமா ?" என்றாள். குப்பம்மாள் "அவள் கெட்டாள். நீ என்னோடுவா" என்று என்னை யழைத்துப்போய்த் தன் வீட்டில் வைத்துக்கொண்டாள். சில நாளில் நான் சௌக்யமடைந்து அப்பெண் பிள்ளைக்குத் துணையாய் அவளுடைய வீட்டிலிருந்தேன், நான் கிழவியை விட்டுவந்த சில நாளில் கிழவி மீண்டும் நோயில் படுத்தாள். நான் அவளிடம் போகுமுன் குப்பம்மாளும் அக்கம்பக்கத்தாரும் அவளுக்கு உதவியாயிருந்தார்கள். என்னை அவள் செய்த கொடுமையைக் கண்டு, அவளுக்கு ஒருவரும் உதவி செய்யாமலிருந்ததை நான் கண்டு, அநியாயமாக இறந்து போய் விடுவாளென்று அவளுக்கு உதவி செய்துகொண்டு வந்தேன். அவள் சௌக்கியமடைந்தபின், "நான் போகிறேன்" என்று சொன்னதைக் கேட்டு அவள் என்னைப் பிடித்துக்கொண்டு தன்னை விட்டுப் போகவேண்டாமென்று கெஞ்சினாள். நான் அவளுடைய கெஞ்சுதலுக்கு இரங்கி முன்போல் அவளுடன் இருக்கும்பொழுது, நீடாமங்கலத்தில் எனக்கு ஆசைகாட்

டிப் பேசியவன், ஆலங்குடிக்கு வந்து ஊருக்குள் போகிற வன், என்னைக் கண்டு ஆச்சரியப்பட்டு "நீ இங்கா வந்தி ருக்கிறாய்? நான் அறியாமற் போனேன். நீ கும்டகோ ணத்திற்குப் போயிருக்கிறாய் என்றல்லவோ நினைத்தி ருந்தேன். உன்னுடைய அதிட்டத்தால் உன்னை நான் காண நேரிட்டது. நான் உனக்கு முன் சொன்னது போல் செய்ய ஸித்தமாயிருக்கிறேன்" என்றான். நான் அவனைக் கண்டு கோபித்து "ஓர் ஏழையைக் கண்டு நீர் இவ்விதம் சொல்வது நியாயமல்ல. நான் என்னுடைய காலத்தை இவ்விதம் கழிப்பவளே யன்றி வேறு விதங் கழிப்பவளென்று நினைக்க வேண்டாம். நீர் பேசாமற் போகாவிட்டால் அவமான மடைவீர்" என்று நான் சொல் லியதைக் கேட்டு, "உன்னைப் பார்த்துக்கொள்ளுகி றேன்!" என்று கோபத்தோடு நீங்கினான். நான் அவ னோடு கொரேமாகப் பேசியதைக் கேட்டிருந்த அடுத்த வீட்டுக் குப்பம்மாள் என்னிடம் வந்து, "அம்மா! என்ன வேலை செய்தாய்?" என்றாள். நான் அவன் சொல்லி யது யாவுஞ் சொன்னேன். "அம்மா! அவன் கொடிய துன்மார்க்கன். அவன் அனேக பெண்களைக் கற்பழித் தவன். அவன் பெரிய தனவந்தன். ஆதலால் அவனு டைய எண்ணத்திற்கு உடன்பட்டு அவனுக்கு உதவி செய் வோர் அனேகர் இவ்வூரிலிருப்பதால், உன்னைச் சும்மா விடமாட்டானே என்று" அன்றிரவு தங்களுடைய வீட்டில் வந்து படுத்துக்கொள்ளச் சொன்னாள். அன்றிரவு பத்து மணிக்கு தனவந்தன் இருவரோடு அக்கிழவி வீட்டுக் கருகில் வந்து நின்று, "இவ்விட்டிலிருக்கிறாள். அவளைப் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்றான். அவனோடு வந்தவர்கள், கிழவியை எழுந்திருக்கச் செய்து, "உன்னோ டிருக்கும் பெண்பிள்ளை எங்கே? அவளை வெளியில் வரச் சொல்" என்றார்கள். கிழவி பயந்து, "அப்பா! அப்பெண்

பிள்ளை விளக்கேற்றும் நேரத்தில்தான் நீடாமங்கலத்துக்குப் போய் வருவதாகச் சொல்லிப் போயிருக்கிறாள். நாளை வருவாள்'' என்றாள். அக்கிழவியின் வார்த்தையை நம்பாமல் வீட்டுக்குள் போய்ப் பார்த்துக் கிழவி சொல்வது உண்மையென அறிந்தபின் தனவந்தன் அக்கிழவிக்கு "பெரிய தொகை கொடுக்கிறேன். அவள் வந்தபின் அவளை என்னிடத்தில் ஒப்படைக்கவேண்டும்'' என்று சொல்லிப்போனான். அவர்கள் பேசுவதை நானும் குப்பம்மாளும் கேட்டிருந்தோம். குப்பம்மாள் "அம்மா! நான் சொல்லியது உண்மையானதைப் பார்த்தாயா!'' என்றாள். நான் குப்பம்மாளைக் கட்டிப்பிடித்து "அம்மா! என்னைக் காப்பாற்றியவள் நீயே'' என்று அவளைப் புகழ்ந்தேன். அவள் "நீ இவ்வூரிலிருக்கக் கூடாது. கும்பகோணம் போனால் நீ ஏதாகிலும் தொழில் செய்து வயிறு வளர்த்துக் கொள்ளக்கூடும். நான் உனக்குத் துணையாக வந்து உனக்கு வேண்டியதைச் செய்து வருகிறேன்'' என்று மறுநாள் காலை நாலுமணிக்குக் கிழவியிடத்தில் சொல்லிக்கொண்டு கும்பகோணம் வந்து சேர்ந்தோம். குப்பம்மாள் கும்பகோணத்தில் அநேகரை அறிந்தவளாதலால். எனக்கு ஒரு கடையும் வீடுமாக இருப்பதை அமர்த்திக்கொடுத்து, சில நாள் என்னோடிருந்து நான் தோசை சுட்டு விற்கும்படி ஏற்பாடு செய்து, எனக்கு வேண்டியவைகளை யெல்லாம் வாங்கிக் கொடுத்துப் போனாள். அப்புறம் இரண்டு மூன்று மாததத்துக்கொருதரம் என்னை வந்து பார்த்துப் போவாள். நான் அவள் சொல்லியவிதம் தோசை சுட்டு விற்றுக் காலம் கழித்து வந்தேன்.

முத்தம்மாள் தன் வரலாற்றைச் சொல்லியதைக் கேட்டிருந்த வேலாயுதம் பிள்ளை அதிகம் துக்கப்பட்டார். செங்கமலத்தம்மாள் முத்தம்மாளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு,

காய் ! என் கொடுமையாலல்லவா இத்துன்பத்தை அடைந் தாய் '' என்று வயிற்றில் அறைந்துகொண்டு அழுதாள்.

**வேலாயுதம் பிள்ளை.**—முத்து ! அந்தக் குப்பம்மாள் இப் பொழுது எங்கிருக்கிருள் ? கிழவி உயிரோடிருக்கிருளா ?

**முத்தம்மாள்.**—குப்பம்மாள் ஒரு மாதத்துக்குமுன் என்னை வந்து பார்த்துப் போனுள். கிழவியும் உயிரோடு முன் னிருந்த இடத்திலேயே இருக்கிருள்.

**வேலாயுதம் பிள்ளை.**—(அங்கு நின்றிருந்தவனைப் பார்த்து) அப்பா ! பெருமாள் ! நீ ஒருவனை யனுப்பி இருளாயி அதிக நோயாயிருக்கிருள். என்று குப்பம்மாளையும் அந் தக் கிழவியையும் காலம் போக்காமல் அழைத்துவரச் செய்.

**பெருமாள்.**—நான் விரைவில் அழைத்துவரச் செய்கிறேன் (என்று நீங்கினுன்).

**சின்னதம்பி பிள்ளை**—அத்தான் ! தாங்கள் சிறுவயதுமுதல் கோலாலம்பூரில் செட்டிகள் கடையில் கூட்டாளியாக இரு ந்தையும் பின் நெடுநாள் இவ்வூர்ப்பக்கம் வராமலிருந்த காரணத்தையும் சொல்ல வேண்டுகிறேன்.

**வேலாயுதம் பிள்ளை.**—ஆம் ! நான் கோலாலம்பூரில் வியாபா ரம் செய்துவந்த விஷயத்தை யாவரும் அறிய விரும்புவார் கள். என்னை முதல் முதல் கோலாலம்பூருக்கு அனுப்பும் பொழுது எனக்கு வயது பத்து, நான் ஓர் செட்டி கடையில் சம்பளமில்லாமல் இருந்தேன். நான் இருந்த கடையின் கூட்டாளி வெளியில் போகும்பொழுது, பணம் ரொக்கமாகக் கொண்டுபோவதாக இருந்தால், என்னைத் தூக்கிவரும்படி செய்வார். வீட்டிலிருக்கும் பொழுது பல செட்டிகள் கடைகளிலிருந்து ரொக்கம் வாங்கிவரப் போகி றவர்களோடு நானும் வாங்கிவருவதும் பின் சிட்டையெழு துவதுமாக இருந்து பின் கணக்கெழுதவும் கற்றுக்கொண் டேன். ஆயினும் அடுத்த ஆள்கள் என்னைக் கணக்கெழுத

விடுவதில்லை. அவ்வூரில் ஒரு முகம்மதியர் பெரிய வியாபாரம் செய்து எங்கள் கடையில் பற்று வரவு செய்து வந்தார். அவருக்கு என்னுடைய வயதையொத்த ஒரே ஆண் பிள்ளை உண்டு. அவன் பெயர் மகம்மது காதர். கூட்டாளி அவர் வீட்டுக்குப் பணங் கொண்டுபோகும் பொழுதெல்லாம் என்னை அழைத்துப் போகிறது வழக்கம். நான் அவருடைய வீட்டுக்குப் போனவுடன் மகம்மது காதர் என்னை அழைத்துக்கொண்டு போய், தான் விளையாடும் வஸ்துக்களை எனக்குக் காட்டி என்னைத் தன்னோடு விளையாடும்படி கட்டாயப்படுத்துவான். என்னைக் கூட்டாளி அழைத்துப் போகாவிட்டால் கூட்டாளியை அதிகம் கோபித்துக்கொள்வதோடு, தன் தந்தையிடம் சொல்லி என்னை அழைத்து வரும்படி கட்டாயப்படுத்த வேண்டும் என்பான். ஆனதால் என்னை அடிக்கடி அழைத்துப்போவது வழக்கமாய் விட்டது. மகம்மது காதர் சற்று நேரம் சும்மா இருக்கமாட்டான். அவனுக்கு வீட்டில் உபாத்தியாயரை வைத்துக் கல்வி கற்பிக்கச் செய்திருந்தாலும், அவன் அதிக நேரம் கல்வியில் காலங்கழிக்காமல் விளையாட்டின்மேல் அதிக விருப்பங்கொண்டிருந்தான். அவன் ஒரே பிள்ளையென்று அவன் தந்தை அவனைக் கோபிக்காமல் அவனிஷ்டம் போல் நடக்கவிட்டிருந்தார். எனக்கும் அவனுக்கும் சிநேகம் முற்றியதால் நான்போகும் பொழுதெல்லாம், நான் சாப்பிடக்கூடிய பழம் முதலானவைகளை வாங்கி வைத்திருந்து, எனக்குக் கொடுத்து என்னைச் சாப்பிடும்படி கட்டாயப்படுத்துவான். நான் அவ்வூரில் மூன்று வருடமிருந்து ஊருக்குப் பிரயாணப்படும் பொழுது, மேலாள் எனக்கு நூறு வெள்ளி இனாமாகக் கொடுத்தார். எங்கள் அறையிலிருந்த மற்றக் கடை மேலாள்களும் மற்றும் எங்கள் கடையில் பற்றுவரவு செய்தவர்களும் நான்

அவர்களிடத்தில் நடந்துகொண்டதற்காக இருநூறு வெள்ளி கொடுத்தார்கள். நான் மகம்மது காதர் வீட்டுக்குப் பயணஞ் சொல்லிக்கொள்ளப் போனபொழுது, அவன் என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுது எனக்கு விடை கொடுத்து அவன் தந்தையால் நூறு வெள்ளி ரொக்கமும் ஐம்பது வெள்ளிக்கு ஸாமான்களும் கொடுக்கும்படி செய்தான். நான் என் மேலாளோடு ஊர் வந்து சேர்ந்த பின், ஊரிலிருக்கப் பிடிக்காமல் ஒருவரிடத்தில் மீண்டும் போகப் பிரியப்பட்டேன். முதலாளி என்னுடைய நடத்தையையும் குணத்தையும் என் திறமையையும் அறிந்தவராதலால், நான் என் தாய் தந்தையரோடு இருக்கப் பிரியப்படாமல் போகிறேன் என்பதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்கும் ஆள் வேண்டுமென எனக்கு மூன்று வருடத்திற்கு நூறு வராகன் கொடுப்பதாகச சொல்லிக் கோலாலம்பூருக்கு அனுப்பினர்.

நான் கோலாலம்பூருக்குப் போய் சேர்ந்தவுடன் மகம்மது காதரைப் போய்ப் பார்த்தேன். அவன் கொண்ட ஸந்தோஷத்துக்கு அளவில்லை. அவன் தந்தையும் நல்ல நிலைமையிலிருந்தார். அவரும் என்னைக் கண்டு ஸந்தோஷப்பட்டார். நான் அந்தமுறை புத்தகங்கள் எழுதுவதும் வெளியில் தனித்துச் சென்று பணம் வாங்கி வருவதுமாகிய வேலைகள் செய்துவந்தேன். ஒரு நாள் நானும் என் மேலாளுமாக இருக்கும்பொழுது, ஒரு வயிர வியாபாரி வந்து, அனேக காகித மடிப்புகளிலுள்ள வயிரங்களை என்னுடைய மேலாளுக்குக் காட்டிக்கொண்டிருந்து, அவரோடு வெளியில் சென்றார். அவர்கள் சென்ற நெடு நேரத்துக்குப் பின், நானும் வெளியில் போக வேண்டியதாய்க் கைப்பெட்டியை மூடி எழுந்தபொழுது, ஒரு காகித மடிப்பைக் கண்டு அதை எடுத்துப் பார்த்தேன். அதில் வயிரங்கள் இருக்கக் கண்டு, அதை எடுத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டு நான் வெளியில் சென்று

வயிர வியாபாரியையும் என் மேலாளையும் தேடித் திரிந்தேன். அவர்கள் என் கண்ணுக்கு அகப்படாமையால் மூன்றுமணி நேரத்துக்குப் பின் நான் வீட்டுக்கு வந்தேன். அப்பொழுது என் மேலாள் உட்கார்ந்திருக்கவும், வயிர வியாபாரி அதிக துக்கத்தோடு "ஐயா! இரண்டாயிரம் வெள்ளி பெறுமதியுள்ள இருபது வயிரத்தை இழந்துவிட்டேனே" என்று சொல்லிக்கொண்டிருந்தார். என் மேலாளும் "அது எவ்விதம் போனது" என்று கேட்டார். வயிர வியாபாரி "நான் எவ்விதம் சொல்வேன்? நான் தங்களுக்கு வயிரப் பொட்டணங்களைக் காட்டிப்போனபின் இரண்டிடத்தில் காட்டும்படி நேரிட்டது. எந்த இடத்தில் போனதென்று தெரியவில்லை" என்று துக்கப்பட்டுக் கண் கலங்கினர். அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே வந்து, கைப்பெட்டியைத் திறந்து வயிரத்தை யெடுத்து அவர் கையில் கொடுத்து வயிரம் ஸரியாக இருக்கிறதா பார்த்துக்கொள்ளுங்கள். தாங்கள் இங்கே மறந்து வைத்து விட்டீர்கள்" என்றேன். அவர் என்னை தூக்கி முத்தங் கொடுத்து வயிரமுடியைப் பிரித்துக் காட்டி "உனக்குப் பிரியமானதொன்றை எடுத்துக்கொள்" என்றார். நான் ஒன்றும் வேண்டியதில்லையென்று சொன்னதைக் கேட்ட வயிர வியாபாரி ஒரு பெரிய வயிரத்தை யெடுத்து இதை எடுத்துக்கொள்ளென்று கட்டாயப்படுத்தினர். நான் "ஐயா! தாங்கள் கைமறதியாக வைத்துப் போனதற்காகத் தாங்கள் இவ்வளவு பெரிய வயிரத்தை இழப்பது நியாயமல்ல. தாங்கள் அப்பொட்டணத்தை முற்றிலும் கொடுத்தாலும் நான் விரும்பேன். என்னை மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டேன். அவ்வறையிலிருந்த யாவரும் பார்த்து அதிசயப்பட்டார்கள். அவர் மனவருத்தத்தோடு நீங்கியபின் என் மேலாள் "அவர் கொடுத்ததை ஏன் வாங்கிக்கொள்ள மறுத்தாய்?" என்று கேட்டார்

நான் "ஒன்றை இழந்தாலும் அல்லது முழுமையும் இழந்தாலும் வயிரவியாபாரி ஒரேவிதமான துக்கத்தை அனுபவிப்பார். அவர் துக்கப்பட நான் அதைப் பெற்றுக்கொள்ளுவது எனக்கு நியாயமாகக் காணவில்லை. ஆனதால் மறுத்தேன்" என்றேன். அதுமுதல் என் மேலாளும் அவ்வறையிலிருந்த மற்றக் கூட்டாளிகளும் என்னை அதிக மேன்மையாக நடத்தி வந்தார்கள். நான் அந்தத் தடவை மூன்று வருடமிருந்து ஊருக்குப் பயணமாகும்பொழுது, என் சிநேகன் மகம்மது காதருக்குமட்டும் பயணஞ் சொல்லிக்கொண்டபொழுது, அவர் தகப்பனார் கொடுக்கவந்த இருநூறு வெள்ளியை வேண்டாமென்று மறுத்து அவர் கொடுத்த தின்பண்டங்களைக் மட்டும் பெற்றுக்கொண்டு வந்து, எனக்கு என் மேலாள் வாங்கிக்கொடுத்த ஸாமானைப் பெட்டியில் வைத்துக் கட்டும்பொழுது, என்னுடைய மேலாள் ஒரு பொட்டணத்தைக் கொடுத்து "இதைக் கொண்டு போய் முதலாளிடம் கொடு" என்று சொன்னார். நான் அவ்விதமே முதலாளி வீட்டுக்குப் போய் இறங்கி, பெட்டியைத் திறந்து என் மேலாள் கொடுத்ததை எடுத்துக் கொடுதேன். அவர் அதைப் பிரித்து அதிலிருந்த கடிதத்தை வாசித்துப் பார்த்து என் தந்தையை வரவழைத்து "உன் மகன் செயத வேலையைப் பார்த்தீரா" என்றார். என் தந்தை என்ன என்ன வென்று திடுக்கிட்டுக் கேட்டார். அவர் "உன் மகன் தகாத காரியங்களைச் செய்து அனேகரை மனவருந்தும்படி செய்ததால், மகம்மது காதர் தந்தை இருநூறு வெள்ளியும், ஓர் இரத்தின வியாபாரி நூறு வெள்ளியோடு ஐந்நூறு ரூபாய் பெறத் தகுந்த ஒரு வயிர மோதிரமும், எங்கள் கடை அறையிலிருக்கும் மற்றக் கடை கூட்டாளிகளும் எங்களிடம் பற்றுவரவு செய்பவர்களும் சேர்ந்து இருநூறு வெள்ளியும் கொடுத்திருக்கிறார்கள். வேலாயுதம் ஒருவரிடமும்

பயணஞ் சொல்லிக்கொள்ளாமலும் எவர் கொடுப்பதையும் வாங்கிக்கொள்ளாமலும் திருட்டுத்தனமாக ஓடிவந்துவிட்டான். ஆனால் இவன் ஊருக்குப் பிரயாணப்படுகிறான் என்றறிந்து, இவனை யறியாமல் எங்கள் கடை கூட்டாளியிடம் கொடுத்துப் போனார்களாம். இவ்விதம் திருட்டுத் தனமாக ஓடிவந்தவனுக்கு, எங்கள் கூட்டாளியும் இரு நூறு வெள்ளி ஸாமானுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், அதில் ஐம்பது வெள்ளிக்கே ஸாமான் வாங்கியிருக்கிறது, மற்ற ஸாமான்கள் அநேகம் வெளியாரால் கிடைத்ததென்றும் எழுதியிருக்கிறான்" என்று சொல்லி, வயிர வியாபாரிக்கு நான் செய்ததையும் விளங்கச் சொல்லி, "இவனைச் சும்மா விடக்கூடாது. உடனே கலியாணமென்ற விலங்கை இவனுக்குப் போடவேண்டும். இவன் எங்கள் கடையிலிருந்து இக்காரியத்தைச் செய்துவந்தவனாதலால் இவனுக்குக் கால்விலங்கு எங்களுடைய செலவில் போடவேண்டும். நீர் காலம் போக்காமல் பெண் எங்கிருக்கிறாள் என்று கண்டுபிடியும் இவனை இப்பொழுதும் சும்மா விடக்கூடாது" என்று எழுந்து என் கைவிரலில் அவ் வயிரமோதிரத்தை யணிந்து, என்னைக் கட்டிப் பிடித்து முகமெல்லாம் முத்தங்கொடுத்து, "வீட்டுக்கு நீ கொண்டு வந்த ஸாமானோடு போ! போ"! என்று துரத்தித் தன்னுடைய வண்டிக்காரனை அழைத்து, என் ஸாமானை எடுத்துக் கொண்டு போய் எங்கள் வீட்டில் கொடுத்துவர உத்தரவு கொடுத்தார். நான் கீழ் விழுந்து அவருக்கு நமஸ்காரஞ் செய்து எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். என் தந்தையும் தாயும் என்மேல் அதிக அன்பு காட்டினார்கள். சில வாரங்களில் எனக்கு விவாகம் செய்யவேண்டி, பலவிடத்தில் பெண்தேடி, முடிவாகச் செங்கமலத்தைச் செட்டியார் செலவில் எனக்கு விவாகம் முடித்துவைத்தார்கள். நான் அந்த முறையும் ஒரு வருஷத்துக்குப் பின் கோலா

லம்பூருக்குப் போக வேண்டுமென்று செட்டியாரைக் கேட்டதில் அவர் “ நீ இன்னம் ஒரு வருடம் உன் மனைவி யோடிருந்தே போகவேண்டும் ” என்றார். நான் அவ ருடைய வார்த்தைக்கு விரோதம் செய்யாமல் ஒருவருட மிருந்து கோலாலம்பூருக்குப் புதுக்கூட்டாளியோடு அடுத்தாளாகப் போகப் பிரயாணப்பட்டேன். செட்டியார் என் தந்தையையும் என்னையும் அழைத்து எனக்கு என்ன சம்பளம் வேண்டுமென்று கேட்டார், நான் “ எஜமான் கொடுப்பதெதுவோ அதுவே எனக்குத் திருப்தி ” என்றேன். செட்டியார் நகைத்து “ தம்பி வேலாயுதம் ! நீ நல்ல பேர் எடுத்துக்கொண்டாய் ! உனக்கு இந்தப் பேர் எப்பொழுதும் இருக்கும்படி சண்முகநாதன் துணைசெய்ய வேண்டும. உனக்கு எண்ணூறு வராகன் கொடுக்க யோசித்திருக்கிறேன் ” என்று செட்டிகள் வீட்டு வழக்கப் பிரகாரம் சம்பளச் சீட்டு எழுதச்சொல்லி, சகுனம் பார்த்து என்னையும் கூட்டாளியையும் பயணப்படுத்தி அனுப்பினர்.

நாங்கள் கோலாலம்பூருக்கு வந்து புதுக் கணக்குப் போட்ட மூன்றும் மாதம் முன்னிருந்த கூட்டாளி ஐம்பதினாயிரம் வெள்ளி லாபத்தோடு கணக்கு ஒப்பித்துவிட்டு ஊர் போய்ச்சேர்ந்தார். பழைய கூட்டாளி நீங்கிய ஒரு மாதத்துக்குப்பின் என்னோடிருக்கும் புதுக்கூட்டாளி நோயில் படுத்தார். ஆனதால் நானே மேலாளை அனுஸரித்துக் கடை வேலையைப் பார்த்துவந்தேன். சில மாதங்களுக்குப்பின் அவர் உடனே ஊருக்குப் போகவேண்டுமென்று இங்க்லிஷ் வைத்தியர்கள் சொன்னதால், பதிலாளை எதிர் பார்க்காது அவர் ஊருக்குப் பிரயாணமானர். அவர் போனபின், நான் அறியாதவனயிருந்தும், நானே மேலாளாகக் கடை வேலையை என்னிஷ்டம் போல் செய்தும், வெண்ணிலையினத்தில் அதிகம் கடன் கொடுக்காமலும்

பணத்தை அனுப்புவதும் வருத்துவதுமாகத் தொழில் செய்துகொண்டு வந்தேன். ஊருக்குப்போன கூட்டாளி விரைவில் சுவஸ்தமாய் விடுவாரென்று முதலாளியும் பதிலாள் அனுப்பவில்லை நான் தொழில் நன்ருய்ச் செய்கிறேன் என்று கோலாலம்பூரிலிருந்து போகிறவர்களால் அறிந்து பதிலாள் அனுப்பாமலிருந்தார். ஊருக்குப் போன கூட்டாளி ஒரு வருடத்தில் இறந்தார். அவருக்கு பதில் ஆள் அனுப்ப முடியவில்லையென்று என்னையே மேலாளாக இருந்து வேலையைப் பார்க்கும்படி எழுதியிருந்தார். நான் முதலாளி உத்தரவுபோல் செய்து எனக்கு மூன்று வருடமான பின் பதிலாள் அனுப்பினுர். பதிலாள் வந்த இரண்டாம் மாதம் லக்ஷத்திருபதினுயிரம் வெள்ளி லாபத்தோடு கணக்கு ஒப்பித்துவிட்டு நான் ஒன்றும் ஸாமான் வாங்காமல் எனக்கு வழிக்கு வேண்டியதை மட்டும் வாங்கிக்கொண்டேன். என் சிநேகன் மகம்மது காதரிடமும் மற்றவர்களிடமும் பயணஞ் சொல்லிக்கொண்ட பொழுது அவர்கள் எனக்குக் கொடுத்த தொகையின் மொத்தம் ஆயிரம் வெள்ளியானது. அதை வாங்கிக் கடையில் கொடுத்துவிட்டு ஊர் போய்ச் சேர்ந்து, செட்டிகள் வீட்டு முறைப்படி முதலாளி வீட்டுக்குப் போய் இறங்கி, நான் பிரயாணத்துக்குக் கொண்டுவந்த தொகையில் செலவானது போக மற்றதைப் பையோடும் கொடுத்துக் கோலாலம்பூரிலிருந்து எனக்கு பதிலாக வந்த கூட்டாளி தான் ஒப்புக்கொண்ட தொகைக்காக எழுதிக்கொடுத்த கடிதத்தையும் கொடுத்து, செட்டியாருக்கு நமஸ்காரம் செய்தேன். அவர் என்னை வாரியெடுத்து மார்போடணைத்து முத்தங்கொடுத்து உட்காரச் செய்து, கடிதத்தை வாசித்துப் பார்த்து, அதிக ஸந்தோஷம் அடைந்து "அப்பா! வேலாயுதம்! செட்டிகள் வீட்டு வழக்கம் தெரிந்தவன் நீ ஆதலால் எங்கள் கடைக்கு உன்னுல் கிடைத்த லாபம்

லக்ஷத்திருபதினாயிரம் வெள்ளியாயிருக்க அதில் பதினாயிரத்துக் காயிரம் உன்னைச் சேரவேண்டுமென்றும், அதை இப்பொழுதே எடுத்து வேறு வைத்துக்கொள்ளென்றும் கொலாலம்பூரில் உனக்கு அனேகர் சொல்லியதைக் கேளாமல் உனக்கு இனமாகக் கிடைத்த ஆயிரம் வெள்ளியையுங்கூடக் கடையில் கொடுத்துவிட்டு, ஒன்றும் வாங்கிவராமல் உன் வஸ்திரப் பெட்டியோடு வந்திருக்கிறாயே ! உன்போலும் புனிதர்கள் இருப்பார்களென்று நான் நினைக்கவில்லை. நான் இப்பொழுதே உனக்குக் கிரமமாகச் சேரவேண்டிய தொகையை எடுத்து வைத்துவிடும்படி எழுதிவிடுகிறேன். நான் உனக்குப் பேசியதுபோல் எண்ணூறு வராகன் கொடுக்காமல் மேலாளுக்குக் கொடுக்கப் பேசியிருந்த ஆயிரத்தைந்நூறு வராகனையே நீ மேலாளாக இருந்த நாள்களுக்குக் கொடுப்பேன். நீ உன் அவகாசத்தில் வந்து கணக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீ இனி எந்தக் கடைக்கும் போகக்கூடாது. எங்கள் கடைக்கே போகவேண்டும். நீ வீட்டுக்குப் போ' என்று என்னை அழைத்து வந்து என் வீட்டில்விட்டுப் போனதோடு, என் பெட்டியோடு நான் கொண்டுவந்த மற்ற ஸாமானையும் வண்டிக்காரன் மூலமாக அனுப்பிவிட்டார்.

**சின்னதம்பி பிள்ளை.**—அத்தான் ! பதினாயிரத்துக்காயிரம் தங்களுக்குச் சேரவேண்டு மென்பது எனக்குத் தெரியவில்லை.

**வேலாயுதம் பிள்ளை.**—ஆம் ! உங்களுக்கு அது தெரியாது ஒரு செட்டிக் கடைக்குக் கூட்டாளியாகப் போகிறவனுக்கு, சம்பளம் மூன்று வருடத்துக்கு இவ்வளவென்றும், அக்கூட்டாளி அம்மூன்று வருடம் செய்யும் தொழிலால் கிடைக்கும் லாபத்தில் பதினாயிரத்துக்கு ஆயிரம் வீதம் பங்கென்றும் ஏற்பாடு உண்டு. ஆனதால் அக்கணக்கில் சம்பளத்தோடு, பன்னீராயிரம் வெள்ளி எனக்குக் கிடைத்தது.

**சின்னதம்பி பிள்ளை.**—அத்தான்! தாங்கள் வியாபாரம் விரித்துச் செய்யவில்லை என்றபின் பணம் அனுப்புவதாலும் வருத்துவதாலும் லாபம் அதிகமானதற்குக் காரணம் என்ன?

**வேலாயுதம் பிள்ளை.**—மைத்துனரே! பினங்கிலிருந்து சிங்கப்பூர் பரியந்தம் வழங்குவது வெள்ளியென்ற ஓர் நாணயம். அதினுடைய வெள்ளி விறை இரண்டேகால் ரூபாய். இந்த நாணயம் பர்மா தேசத்தில் வழங்காது. கோலாலம்பூர் முதலிய இடங்களிலிருந்து இரங்கூனுக்குப் பணம் அனுப்ப வேண்டிய காலத்தில், வெள்ளி விலை குறைந்து போகிறது. அதாவது, கோலாலம்பூரிலிருந்து இரங்கூனுக்கு நூறு வெள்ளி அனுப்ப வேண்டுமென்றால், இருநூறு, நூற்றெண்பது, நூற்றெழுபது, நூற்றறுபது என்று குறைந்துபோகும். ஏனெனில் இரங்கூனிலிருந்து வருத்திய அரிசி முதலியவைகளுக்கு யாவரும் பணம் அனுப்ப வேண்டுமென்றால், மலாய்நாட்டில் வெள்ளியை வாங்கி வைத்துக்கொண்டு இரங்கூனில் பணங்கொடுக்க மலாய் நாட்டில் உள்ளவர்களுக்கு இரங்கூனில் பணமிருக்கவேண்டுமே! அங்கு இவர்களுக்குச் சொந்தப் பணம் இல்லாமற் போனால் அனுப்பமுடியாமல் வெள்ளி விலை இறங்கிப் போகும். இதுபோலவே இரங்கூனிலிருந்து பணம் வருத்துங்காலத்தில் வெள்ளி விலை ஏறிப்போகிற துண்டு. அதாவது நூறுவெள்ளி இருநூற்றிருபத்தைந்துக்கே சில ஸமயத்தில் வருகிறதுண்டு. ஆனதால் நான் வட்டிக்குக் கொடுத்துவாங்கப் பிரியப்படாமல், வெள்ளி குறைந்த விலையில் பணம் அனுப்புகிறதும் வெள்ளி கூடிய விலையில் வருத்துகிறதுமாக இருந்தால், நான செய்த வேலையில் அதிக லாபம் கிடைத்தது. இது நிற்க; நான் அம்முறை அதிக ஸந்தோஷமாக இருக்கவேண்டிய காலத்தில் அதிக துக்கப்பட வேண்டியதாயிற்று. நான் கோலாலம்

பூரிலிருந்து வந்த ஒரு வருடத்துக்குப்பின் தாயும் தந்தையும் காலஞ்சென்றார்கள். ஆனதால், நான் அந்த முறை மூன்று வருடம் ஊரிலிருந்து பின் ஆயிரத்தைந்நூறு வராகன் சம்பளத்தோடு மேலாளாகக் கோலாலம்பூருக்குப் போய் நான் கணக்குக் கொடுத்தவரிடம் கணக்கைப் பெற்றுக்கொண்டேன். அவர் கணக்கில் லாபம் ஐம்பதினாயிரம் வெள்ளியே !

நான் என் சிநேகிதர் மகம்மது காதரின் தந்தை இறந்து போனதாகவும், அவரே ஈயம் எடுக்கிற மலைகளை வாங்கி வேலை செய்கிறதாகவும், அவருக்கு அதிக லாபம் கிடைக்கிறதாகவும் கேள்விப்பட்டு அவரைப் பார்க்கப் போயிருந்தேன். அவர் என்னைக் கண்டவுடன் தன் தந்தையின் கதியைச் சொல்லி. நான் அவ்வூருக்கு மீண்டும் வந்ததைக் குறித்து ஸந்தோஷப்பட்டு, எங்கள் கடையில் பற்று வரவு செய்வதாகச் சொல்லி அவ்விதமே செய்து வந்தார். சில மாதங்களுக்குப்பின் அவர் என்னை வரவழைத்து, "நான் சீமையிலிருந்து யந்திரங்கள் அனேகம் வரவழைக்க வேண்டும். அதற்கு ஐந்து லக்ஷம் வெள்ளி வேண்டும்" என்றார். முன்பின் யோசியாமல் நான் கொடுப்பதாக வாக்குக் கொடுத்து வந்து, அனேக செட்டிகள் கூட்டுவைத்துக் கொள்கிறோமென்று சொன்னதைக் கேட்காமல் நானே அவர் கேட்பதைக் கொடுத்து வந்தேன். ஆறு மாதத்தில் அவருக்குப் பெரிய நஷ்டம் வரும் என்று அனேகர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவ்விதம் சொல்லுகிறவர்களெல்லாம் பொறாமையால் சொல்லுகிறார்களென்றே முதலில் நினைத்திருந்து, பின் உண்மையாக முடியுமென்று எனக்கும் காணப்பட்டது. அவர் என்னை ஒருநாள் வரவழைத்து, ஒரு தனித்த இடத்திற்குச் சென்று, என்னைக் கட்டிக்கொண்டு ஓவென்றலறி, "நான் என்ன செய்யப் போகிறேன் ? உன்னையும் கெடுத்துவிட்

டேன். நானும் கெட்டேன். நான் ஒரு வெள்ளைக் காரன் வார்த்தையைக் கேட்டு மோசம் போனேன் " என் றழுதார். எனக்குப் பயம் அதிகம் உண்டாகி, நேரிட்ட தைச் சொல்லும்படி வேண்டினேன். அவர் பரிதாப மாக "நான் அனேக மலைகளையும் நிலத்தையும் விலைக்கு வாங்கி யந்திரங்களை வைத்து வேலை செய்ததில் ஈயம் அதிகம் கிடைக்காம லிருக்கிறது. நான் ஆள்களுக்குச் சம்பளம் கொடுத்து வந்ததால் என் கைமுதலும் உன்னிடத் தில் வாங்கிய தொகையும் மறைந்துவிட்டது. இனிமேல் வேலை செய்ய முடியாதென்று நிறுத்திவிட வேண்டும்" என்றார். நான் அவர் சொல்லியதைக் கேட்டுக் கண்களில் தாரை தாரையாக நீரை வடியவிட்டு, "சற்றும் யோசனை யில்லாது பெருந்தொகையை ஒரு இனத்தில் கொடுத்தது முற்றிலும் மூடத்தனம். இனி என்ன செய்கிறது" என்று நினைத்து, "நான் யோசித்துவந்து சொல்லுகிறேன்" என்று நீங்கினேன். எனக்குப பெருந்தொகை மகம்மது காதரால் நஷ்டமாகப் போகிறபடியால, எங்கள் கடையில் தவணைப் பணம் கடன் கொடுக்காமல் தவணைப் பணம் வேண்டுமென்றார்கள். நான் அவர்கள் கேட்டவண்ணம் அவரவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தவணைப் பணத் தைக் கொடுத்துவந்து, இரங்கூனிலிருந்த பணத்தை யெல்லாம் வரவழைத்து, கேட்கப்போகும் கடன்களுக்குக் கொடுக்கவும் தயாராகப் பணம் வைத்திருந்தேன். அனே கர் என் காதில் விழும்படி "வேலாயுதம் எடுத்த நல்ல பேரெல்லாம் போய் இந்தக் கணகோடு கெட்ட பெயர் எடுத்துக்கொள்ளுவான்" என்று சொல்லிக்கொண்டிருந் தார்கள். சில வாரங்களுக்குப்பின் நான் மகம்மது காத ரிடம் சென்றேன். அவர் "வேலைகளை யெல்லாம் நிறுத் திவிடும்படி ஆள் அனுப்பப்போகிறேன்" என்றார். நானும் "நீர் அனுப்பும் ஆளோடு போய்ப் பார்த்து வருகிறேன்" என்று அவர் அனுப்பிய ஆளோடு வேலை செய்யுமிடம்

சென்று, அங்கிருந்த வெள்ளைக்காரனைப்பார்த்து, "மகம்மது காதருக்குப் பெரிய நஷ்டத்தை உண்டுபடுத்திவிட்டீரே" என்று அவரைக் கேட்டேன். அவர், நான் யாரென்று விசாரித்துக்கொண்டு, "ஐயா! நாங்கள் நிலத்தைப் பரிசோதனை செய்து பார்ப்பதில் நிபுணர்களென்று பேரெடுத்திருக்கிறோம். ஆயினும் அவரவர்கள் அதிர்ஷ்டத்துக்குத் தக்கவாறே முடியும். நாம் என்ன செய்யலாம்? மகம்மது காதர் வேலையை நிறுத்திவிடவேண்டுமென்று அபிப்பிராயப்படுவதாகக் கேள்விப்பட்டேன். அவர் வேலையை நிறுத்திவிடவேண்டு மென்றால், நான் தடைசொல்ல முடியாது. வேலைக்காரரும் சம்பளமில்லாமல் வேலை செய்ய முடியாதென்கிறார்கள். அவர் இன்னும் ஒருமாதம் வேலை செய்து முன்வரும் மண்ணை எடுத்துவிட்டால், அதன்பின் வெறும் ஈயமாகவே அகப்படுமென்று நினைக்கிறேன" என்றார். நான் "சம்பளம் பாக்கி என்ன? அதை நான் கொடுக்கிறேன். வேலையை விடாது செய்யுங்கள்" என்று சொல்லி, சம்பள பாக்கியைக் கொடுத்துப் பின்னும் அவர்கள் வேலை செய்யுமிடம் போய்ப் பார்த்து நானும் அவர்களோடு இருபதுநாள் இருந்தேன். அந்த இருபதாம் நாள் போல் ஸந்தோஷமான நாள் இன்னமொருதரம் எனக்கு வருமென்று நான் நினைக்கவில்லை. அந்த இருபதாம் நாள் வெறும் ஈயக்கட்டியாகவே எடுத்துக்கொண்டிருந்தார்கள். துரையும் அதிக ஸந்தோஷமடைந்து "இனிமேல் மகம்மது காதரைக் குபேரனென்றே சொல்லவேண்டும்" என்று கூத்தாடினார். மற்ற இடங்களிலும் ஈயம் அதிகம் வருகிறதென ஆட்கள் வந்து சொல்லிக்கொண்டிருந்தார்கள. நான் ஸந்தோஷத்தில் முழுகிச் சிலநாள் அவ்விடமிருந்து கோலாலம்பூருக்கு வந்து மகம்மது காதரை ஸந்தோஷப்படுத்தி; அவரை அழைத்துக்கொண்டு ஈயம் வாங்குகிறவர்களிடம் சென்றேன்

அக்காலம் ஈயம் அகப்படாமல் ஈயவிலை ஏறியிருந்தது. ஈயம் வாங்குவோர் எங்களிடம் இருப்பது உண்மையாயின் முன்பணம் கொடுப்போம் என்று எங்களோடு ஈயம் எடுக்குமிடம் வந்து பார்த்து ஸந்தோஷப்பட்டு ஒவ்வொருத்தரும் இரண்டு மூன்று லக்ஷம் வெள்ளி முன்பணங் கொடுத்து வேறொருவருக்கும் ஈயம் விற்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டார்கள். நான் சுருக்கிக் கூறுமிடத்து, மூன்று மாதத்தில் மகம்மது காதர் எனக்குக் கொடுக்கவேண்டியதையெல்லாம் கொடுத்துத் தீர்த்துவிட்டது போக, அவர் பணம் என்னிடத்தில் அதிகம் இருந்தது. மூன் என்னிடதில் தவணைப் பணத்தை வாங்கியவர்களிட மெல்லாம் நான் தவணைப் பணம் கொடுத்துவந்தேன். யாவரும் வேலாயுதம் கைராசியுள்ளவனென்றும் அவன் மண்ணைத் தொட்டாலும் பொன்னுகுமென்றும் புகழ்ந்தார்கள். நான் மூன்றுவருடமிருந்து பிரயாணப்படுங் காலத்தில், மகம்மது காதர் கணக்கைத் தீர்க்கப் போனபொழுது, நான் நூற்றுக்கு ஒருவட்டி போட்டிருப்பதைப் பார்த்து அது கூடாதென்று நூற்றுக்கு மூன்றுவட்டி போட்டுக்கொள்ளச் சொன்னதோடு, ஐம்பதினுயிரம் வெள்ளி கடைக்கு இனுமாகக் கொடுத்து, எனக்கு அதிகம் வெகுமதியளித்துப் பயணங்கூட்டி அனுபபினுர். நான் புது கணக்காளியிடம் இலக்ஷத்தெழுபதினுயிரம் வெள்ளி லாபத்தைக் காட்டி அதில் முதலாளி உத்தரவு பிரகாரம் பதினேழாயிரம் வெள்ளியை யெடுத்து வேறு கடையில் வைத்துவிட்டு அதிக ஸமான்களை சிங்கப்பூரிலிருந்து வரவழைத்து அந்த ஸாமான்களோடு முதலாளி வீடு வந்து சேர்ந்தேன். முதலாளி என்னைக் கட்டியணைத்துக்கொண்டு என்க்ஷேமத்தை விசாரித்து என்னைச் சாப்பிட்டுப் போகும்படி கட்டாயப்படுத்தி வீட்டுக் கனுப்பினுர். மறுநாள் என்னை வரவழைத்து என் ஸாமான்களைத் திறக்காமல் அவ்விதமா

கவே எடுத்துக்கொண்டு போகும்படி சொன்னார். நான் பெட்டியைத் திறந்து அதிலுள்ள அபூர்வமான வஸ்துக்க ளில் அனேகத்தை அவரிடத்தில் எடுத்து வைத்துவிட்டு மற்றதை யெல்லாம் எடுத்துக்கொண்டு வந்தேன். சில மாதங்களுக்குப் பின் மகம்மது காதரிடத்திலிருந்தும் என் னுடைய பணத்தை வைத்திருக்கும் செட்டிக் கடையி லிருந்தும் கடிதங்கள் வந்திருந்தன. அதில் மகம்மது காதர் எழுதியிருந்ததில் தான் நஷ்டமடைந்து ஒன்றுமில்லாமல் போகுங் காலத்தில் நான் கைதூக்கி வைத்ததின் நிமித்தம் தான் ஒரு லக்ஷம்வெள்ளியை என் கணக்கில் கொடுத் திருப்பதாகவும், அதை ஒப்புக் கொள்ளும்படியாகவும் என் னைத் தனித்து ஓர் கடை வைக்கவேண்டுமென்றும் கேட் டுக்கொண்டார். செட்டிகடையிலிருந்து வந்த கடிதத்தில் மகம்மது காதர் கொடுத்த ஒரு லக்ஷம் வெள்ளியை என் கணக்கில் வரவு வைத்திருப்பதாக எழுதியிருந்தது. நான் இவ்விரண்டு கடிதத்தையும் செட்டியாரிடத்தில் கொண்டு வந்து காட்டினேன். அவர் ஸந்தோஷப்பட்டு "மகம்மது காதர் மிகவும் நல்லவன். நீ தனித்துக் கடைவைப்பது அவசியமே! பெருந்தொகையை ஒரு கடையை நம்பி வைப்பது நன்மையல்ல. நீ கடையும் வைக்கவேண்டும் வீடும் கட்டவேண்டும்" என்று அவ்விரண்டையும் அவரே செய்து முடித்தார். நான் ஊரில் மூன்று வருடமிருந்து பின்னும் அவர் கடைக்கே மேலாளாகப் போய் அதிக லாபத்தோடே வந்தேன். நான் இவ்விதம் பல முறை அவர் கடைக்கே போய் வந்தாலும், என் கடையையும் மேல்பார்த்துவந்தேன். எனக்குக் குழந்தையில்லை யென்று என் மனைவி என்னைக் கட்டாயப்படுத்தி என்னுடைய முப் பத்தெட்டாவது வயதில் வேறு விவாகம் முடித்துவைத் தாள். முத்து ஐந்து மாதம் கர்ப்பமா யிருக்கும்பொழுது, என் செட்டியார் கூட்டாளி கோலாலம்பூரில் இறந்து

விட்டாரெனத் தந்தி வந்ததை என்னிடம் காட்டினார். நான் உடனே பிரயாணப்பட்டுப் போனேன். நான் போனபின் முத்துக்குக் குழந்தை பிறந்து இறந்ததென்றும் பின் முத்தும் மோரீசுக்குத் தன் நகைகளோடு ஓடிப் போய் விட்டாளென்றும் செட்டியாராலும் சின்னசாமியிடமிருந்து வந்த கடிதத்தாலும் அறிந்து அதிக துக்கமடைந்திருந்து ஊர்வந்து சேர்ந்தேன். செங்கமலம் என்னைக் கண்டு அழுது அதிக துக்கப்பட்டுக்கொண்டிருந்தாள். நான் அவர்கள் சொல்லியது உண்மையென மதித்திருந்தேன். செட்டியாரும் காலஞ்சென்றார் அவருடைய பிள்ளைகளுக்குள் சச்சரவு உண்டாய், அவர்கள் ஆஸ்தியைப் பிரித்துகொள்ள ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். சில மாதங்களுக்குப் பின் நான் சிலரோடு பேசிக்கொண்டிருக்கும்பொழுது "நான் வேறு விவாகஞ் செய்துகொள்ளப் போகிறேன். பெண்பாருங்கள்" என்று கேலியாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். பல தினங்களுககுப் பின் நான் வெளியிற் போயிருந்த ஸமயத்தில், என் மைத்துனன் சின்னசாமி தன் தமக்கையோடு ஒரறையில் உட்கார்ந்து, "அவர் வேறு விவாகஞ் செய்துகொள்ள எண்ணங்கொண்டால், அவளையும் மோரீசுக்குத் துரத்த எனக்கு வழி தெரியாதோ" என்று சொன்னான். வெளியில் சென்றிருந்த நான் வீட்டுக்குவந்து அவர்கள் வார்த்தையாடிக் கொண்டிருக்கும் அறையில் நுழையப்போனவன், என் மைத்துனன் சொல்லியதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, அவ்வறைக்குள் போகாமல் வெளித்திண்ணையில் போய் உட்கார்ந்து, இவர்கள் மோசஞ்செய்தே முத்தைத் துரத்தியிருக்க வேண்டுமென்ற நம்பிக்கைகொண்டு, அவர்களோடிருக்க மனங்கொள்ளாமல் சில மாதங்களில் கோலாலம்பூருககுப் போக எண்ணி, என் செட்டியாருடைய பிள்ளைகளின கருத்தைக்கேட்டதில், அவர்கள் "கோலாலம்பூர் கடையை ஒடுக்கிச சென்னை ராஜதானியில் கடைவைத்

துக்கொள்ள எண்ணங்கொண்டிருக்கிறோம். எங்களுக்குக் கூட்டாளி வேண்டியதில்லை'' என்றதால், என்னுடைய கடைக்கே போகலாமென்றெண்ணிப் பிரயாணப்பட்டேன். என் மனைவியும் என் மைத்துனனும் "இவ்வளவு துரிதமேன்? வந்து ஒருவருடம் ஆகவில்லையே'' என்றார்கள். நான் அவர்களுடைய கருத்துக்கு உடன்படாமல் கோலாலம்பூருக்குப் போய்ச் சேர்ந்தேன். மகம்மது காதர் என்னைக் கண்டு ஸந்தோஷப்பட்டு, தான் அங்குமிங்கும் வட்டியில்லாமல் வைத்திருந்த ஐந்து இலக்ஷம் வெள்ளியை என்னிடம் வைத்துப் பற்றுவரவு செய்துகொண்டிருந்ததோடு, தன்னைப்போன்ற தனவந்தருடைய பணத்தை யெல்லாம் என்னிடம் வைக்கும்படி செய்தார். மகம்மதியர் வட்டி யேற்றுக்கொள்ளாதவர்க ளாதலால், அவ்வட்டி யெல்லாம் என்னைச் சேரவேண்டியதாயிற்று. நான் நாளடைவில் இனத்தில் கொடுப்பதை அறவே ஒழித்துவிட்டு, செட்டிகளுக்கே தவணையிலும் நடப்பிலுமே கொடுத்துவந்ததில், எனக்கு எவ்விதத்திலும் நஷ்டம் வராமல், மேலும் மேலும் விருத்தியாய் விட்டது. நான் மகம்மது காதர் பணத்துக்கு வீடுமுதலானதும் வாங்கிக் கொடுத்து ஒரு கூட்டாளியை என் கடையில் வைத்து எனக்கடுத்த ஆளாக இருந்த பெருமாளை அழைத்துக் கொண்டு பல ஊர்களைப் பார்த்துக்கொண்டு இவ்வூருக்கு வந்து, ஒரு செட்டிகடையில் இருந்தோம். பின் காவேரி யாற்றில் தீர்த்தமாடப் போனதும் பின் நடந்ததும் நீங்கள் அறிந்ததே! நான் முதல் முதல் ஞானம்பிகையைப் பார்த்தவுடன் அவள் என் மனைவியின் சாயலைப் பெற்றிருக்கிறாள் என்று அவளை என் குமாரத்தியைப்போ லெண்ணினேன். நான் நெடுநாள் இவ்வூரிலிருந்து ஊரைச் சுற்றிக்கொண்டிருக்கும்பொழுது, ஒருநாள் அழகப்பன் என்னை இன்னானென்றறிந்தும் நான் அவனைக் கண்டுகொள்ள

முடியாமற் போனபொழுது, தான் அழகப்பனென்றும் நான் கோலாலம்பூரிலிருந்து ஊருக்கு வரும்பொழுதெல்லாம் என் ஏவலைக் கேட்டுக்கொண்டிருந்தவனென்றும் அவன் சொல்லியபின் அவன் யாரென்றறிந்தேன். அவன் என்னைக் கண்டவுடன் என்னை அழைத்துப்போய் மூத்தைக் காட்டினான். நான் அவளைப் பார்த்து அதிசயப்பட்டு இவள் மோரிசுக்குப் போய்விட்டாள் என்று சொன்னீர்களே! இவள் நெடுநாளாக நம்மைப் பிரிந்திருப்பதால் இவளுடைய நடக்கை எவ்விதமிருக்கிறதோ அதைச் சோதிக்கவேண்டுமென்று பெருமாளை அனுப்பினேன். அவன் நான் சொன்னவிதம் செய்து "அந்தம்மாள் நிலை தவறவில்லை" என்று என்னிடம் சொல்லி, அவள் படும் கஷ்டத்தைக் குறித்து துக்கப்பட்டான்.

சின்னதம்பி பிள்ளை.—அத்தான்! ஞானம்பிகை நேற்றுப் பரியந்தம் தந்தையில்லாமலிருந்தாள். இன்று அவளுக்குத் தந்தை தாய் உண்டானார்கள் என்றீர்களோ, அதன் கருத்தென்ன?

வேலாயுதம் பிள்ளை.—மைத்துனரே! நேற்று நான் சுவாமி மலைக்குப் போயிருந்து வந்தபின், சிறுவர்கள் வீட்டிலிருந்தமையைக் கண்டு அவர்களுக்குத் தின்பண்டங்கள வாங்கிவர வேண்டுமென்று வெளியில் நெடுந்தூரம் சென்று மடியில் காசில்லாமையைக் கண்டு பணமெடுத்துப்போக வீட்டுக்கு வந்து அறைக்குள் சென்றேன். நான் வருவதையறியாது மருத்துவிச்சியும் உண்ணாமுலையம்மாளும் பேசியிருந்தைக் கேட்டு ஞானம்பிகை என் மகளென்று அறிந்தேன். ஆனதால் அவ்விதம் சொன்னேன். நான் சொல்லியது உண்மையல்லவா?

நல்லமுத்துப் பிள்ளை.—ஐயாவே! இந்த ஊரில் அரங்கசாமி செட்டியாருக்குக் கடன் கொடுத்திருந்ததாகச் சொனனீர்களே! அது உண்மையா?

**வேலாயுதம் பிள்ளை.**—*அது உண்மையல்ல ! ஞானும்பிகையை ஏமாற்ற ஏற்படுத்திய கட்டுக்கதை (என்று நகைத்தார்).*

வேலாயுதம் பிள்ளை சொல்லியதைக் கேட்ட யாவரும் ஸந்தோஷ மடைந்தார்கள். ஜானகியம்மாள் தன் நாயகனை அழைத்து "யாவரும் இருக்கும்பொழுதே தாங்கள் பெண் விஷயத்தைக் கேட்க வேண்டும்" என்றாள்.

**சின்னதம்பி பிள்ளை.**—*(தன் மனைவியைப் பார்த்து) எனக்குக் கேட்க பயமாக இருக்கிறது. நீயே முதலில் கேள் : பின் நானும் கலந்துகொள்ளுகிறேன் (என்று வந்து உட்கார்ந்தார்).*

**ஜானகியம்மாள்.**—*(வேலாயுதம் பிள்ளையைப்பார்த்து) அண்ணா! மீனாக்ஷிஸுந்தரத்துக்கு ஞானும்பிகையைக் கொடுத்து எப்பொழுது விவாகஞ் செய்ய யோசித்திருக்கிறீர்கள் ?*

**வேலாயுதம் பிள்ளை.**—*அம்மா ! பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் ஸம்மதப்பட்டால் முழுக் கல்யாணம் முடிவு பெற்றது. ஒரு பக்கத்தார் ஸம்மதித்தால் என்ன சொல்ல வேண்டும் ? அரைக்கல்யாணம் முடிவுபெற்றதென்றே சொல்லவேண்டும். அரசன் மகளைக் கட்டிக்கொள்ளப் பிள்ளை வீட்டார் ஸம்மதித்து விட்டால் அரைக் கல்யாணம் முடிந்ததென்ற விதம கேட்கிறாய். நீங்கள் ஞானும்பிகையை வேண்டாமென்றதால் நானும் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிக்கொண்டிருக்க நான் பெண் கொடுக்க ஸம்மதித்ததுபோல் கேட்கிறாயே (என்றார். யாவரும் நகைத்தார்கள்).*

**சின்னதம்பி பிள்ளை.**—*அத்தான்! தாங்கள் கறுப்பண்ண பிள்ளையாயிருந்தபொழுது கொடுக்கமாட்டேன் என்றீர்கள். இப்பொழுது அவ்விதம் சொல்ல முடியுமோ ?*

**வேலாயுதம் பிள்ளை.**—*மைத்துனரே ! நீர் கேட்பதற்கு நான் பதில் சொல்லாமல் என் குமாரத்தியை பதில் சொல்லச் சொல்லுகிறேன். அவள் இங்க்லிஷ் பாஷை கற்றவளாத*

லால் இங்க்லிஷ்காரர் வழக்கம்போல் அவள் உமது குமாரனை விவாகஞ் செய்துகொள்ளப் பிரியப்படுவாளாயின், பின் அதைக் குறித்து யோசிக்கலாம்.

சின்னதம்பி பிள்ளை.—என்னுடைய அத்தான் தன் மகள் பேசுவதைக் கேட்டு மனம் பூரித்துப் போகிறதால் தன் மகளையே பேசவிடுகிறார். அம்மா! ஞானம்பிகை! நான் அத்தானைக் கேட்பதற்குப் பதில் நீயே சொல்லவேண்டும் என்கிறார்.

ஞானம்பிகை.—மாமா! என் தந்தை என்னை கேட்கச் சொன்னதால், நான் நியாயமாகவே ஓர் அன்னியர் போல் பதில் சொல்லவேண்டும். ஆனதால் தாங்கள் கேட்ட கேள்விகளுக்குக் கறுப்பண்ண பிள்ளைபோலிருந்து சொல்லிய விதம் இப்பொழுதும் சொல்லக்கூடாது (என்றாள். யாவரும் சுலீரென்று நகைத்தார்கள்).

சின்னதம்பி பிள்ளை.—அத்தான்! கேட்டுக்கொண்டீர்களா (என்று நகைத்தார்).

வேலாயுதம் பிள்ளை.—மைத்துனரே! நீர் அவஸரப்படவேண்டாம். ஞானம்பிகையின் கருத்தை முற்றிலும் கேட்டபின் நீர் என்னுடன் பேசவேண்டும்.

சின்னதம்பி பிள்ளை.—ஞானம்பிகை மறைத்து ஒன்றும் பேசவில்லையே! ஏனம்மா! ஞானம்பிகை! இதில் புதை பொருள் ஏதாகிலும இருக்கிறதா?

ஞானம்பிகை.—புதைபொருள் இருக்கிறதோ இல்லையோவென்று தங்களுக்குத் தோன்றவில்லையா? நான் சொல்லியது தங்களுக்கும் மற்றவர்களுக்கும் நியாயமென்று காண்கிறதல்லவா?

யாவரும் முற்றிலும் நியாயம் என்றே ஒப்புக்கொள்ளுகிறோ மென்றார்கள்.

ஞானம்பிகை.—யாவரும் நியாயம் என்று ஒப்புக்கொண்டதால் அதை மாற்ற முடியாது. ஆனதால் என் தந்தை கறுப்

பண்ண பிள்ளையாக விருந்து சொல்லியதற்கு இப்பொழுது எதிரிடையாகவே பதில் சொல்லவேண்டும்; அதாவது முன் அல்லவென்றதை இப்பொழுது ஆம் என்று சொல்ல வேண்டு மென்பதல்லவா தங்களுடைய கட்சி?

**சின்னதம்பி பிள்ளை.**—ஆம்.

**ஞானம்பிகை.**—மாமா! நான் யாவரையும் ஒன்று கேட்கவேண்டும்:—அதாவது, இருவர் வார்த்தையாடும்போது கோபத்தால் ஏதாகிலும் ஒன்றைச் சொல்லிவிடுவார்களாயின், அவர்கள் கோபம் தீர்ந்து ஸமாதானமானபின் முன் பேசியதை மனதில் வைத்துப் பகைமை பாராட்டலாமா?

**யாவரும்.**—கோபத்தால் சொல்லியதை அப்பொழுதே மறந்துவிடவேண்டும்.

**ஞானம்பிகை.**—மாமா! தாங்கள் தனித்தே இதற்குப் பதில் சொல்லவேண்டும்.

**சின்னதம்பி பிள்ளை.**—யாவரும் சொல்லியவிதம் அப்பொழுதே அதை மறந்துவிடவேண்டும்.

**ஞானம்பிகை.**—ஏ. பி. ஸி. என்ற மூவருக்கும் முறையே இரண்டுகாணி, ஐந்துகாணி, ஐம்பதுகாணி நிலம் இருந்தது. இம்மூவரில் தனவந்தன் யார்? ஏழை யார்?

**சின்னதம்பி பிள்ளை.**—இந்தக் கேள்வி என்னத்திற்குக் கேட்கிறாய்?

**நல்லமுத்துப் பிள்ளை.**—ஞானம்பிகையம்மாள் தான் பின் சொல்லப் போகிறதற்கு அத்திவாரம் போடுகிறாள். அத்திவாரம் பலமாயிருந்தால் கட்டடமும் பலமாயிருக்கும் என்பதே ஞானம்பிகையின் கருத்து.

**சாமியா பிள்ளை.**—(சின்னதம்பி பிள்ளையைப் பார்த்து) அத்தான்! தாங்கள் ஞானம்பிகையின் வினவுக்கு விடையளிக்கவேண்டும்.

**சின்னதம்பி பிள்ளை.**—ஞானம்பிகை என்ன சொல்லம் போகிறாளோ பார்க்கலாம். அம்மா! இரண்டு காணி நிலம் வைத்-

திருப்பவன் ஐந்துகாணி நிலம் வைத்திருப்பவனைவிட ஏழை, ஐந்துகாணி நிலமுடையவன் ஐம்பதுகாணி நில முடையவனைவிட ஏழை என்றே சொல்லவேண்டும்.

**ஞானம்பிகை.**—ஆனதால் ஐம்பது காணி நிலமுடையவன் அவ் விருவரையும் ஏழையாக மதிப்பானல்லவா ?

**சின்னதம்பி பிள்ளை.**—ஆம் ! (என்றார். யாவரும் ஆம் ! ஆம் ! என்றார்கள்).

**ஞானம்பிகை.**—மாமா ! ஒருவர் உலக வழக்கத்துக்கு விரோத மாக நடந்தால் மற்றவர்களும் அவ்விதமே நடக்கலாமா ?

**சின்னதம்பி பிள்ளை.**—ஒருவன் தப்பிதமாக நடக்கிறான் என் பதை யறிந்து மற்றவர்களும் நடக்கக்கூடா தென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். (யாவரும் ஆம்! ஆம் ! என்றார்கள்).

**ஞானம்பிகை.**—யாவரும் நியாயமாகவே சொன்னார்கள். என் தந்தை கறம்பண்ண பிள்ளையாக இருந்தபொழுது தன் குமாரத்தியைத் தங்களுடைய குமாரனுக்குக் கொடுக்க ஸம்மதப்பட்டார். அதற்கெதிரிடையாகவே இப்பொழுது சொல்லவேண்டும். அவர் கோபத்தால் கொடுக்கமாட் டேன் என்றதற்கு எதிரிடையாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் கோபத்தால் சொல்லியதை கவனிக்கக்கூடாதென்று தாங்கள் மற்றவர்களோடு ஒப்புக் கொண்டீர்கள் (என்று நகைத்தாள். யாவரும் கலீரென்று நகைத்தார்கள்).

**வேலாயுதம் பிள்ளை.**—(நகைத்து) மைத்துனரே ! நியாயம் விளங்கியதா ? கறப்பண்ண பிள்ளை சொல்லிய விதம் சொல்லக்கூடாதென்றதற்கு என்ன பதில் கிடைத்தது பார்த்தீரா (என்று மீண்டும நகைத்தார்).

**சின்னதம்பி பிள்ளை.**—அத்தான் ! நான் கறப்பண்ண பிள்ளை சொல்லியதைக் குறித்து ஒன்றும் பேசவில்லை. தாங்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லவேண்டும்.

**வேலாயுதம் பிள்ளை.**—மைத்துனரே! நீர் என் மகளையே கேட்க வேண்டும்.

**சின்னதம்பி பிள்ளை.**—அம்மா! ஞானாம்பிகை! நீயே அத்தானுடைய கருத்தைச் சொல்லவேண்டுமாம்.

**ஞானாம்பிகை.**—நான் ஓர் அன்னியரைப்போல் பேசுகிறதால் நான் வெட்கப்படவேண்டிய அவசியம் இல்லை. மாமா! நான் கேட்பதற்குத் தாங்கள் விடையளித்து வரவேண்டும். தங்கள் குமாரன் ஒருவர் வீட்டில் வேலைசெய்திருந்த ஞானாம்பிகையை விவாகஞ் செய்துகொள்ள விரும்பிய பொழுது தாங்கள் ஏன் ஸம்மதிக்கவில்லை?

**சின்னதம்பி பிள்ளை.**—அப்பெண் ஏழையென்றே கூடாதென்றேன்.

**ஞானாம்பிகை.**—ஏழைகளிடத்தில் பெண்ணைக் கொள்கிறதும் தனவந்தரிடத்தில் பெண்ணைக் கொடுக்கிறதுமல்லவா உலக வழக்கம்?

**சின்னதம்பி பிள்ளை.**—அவ்வழக்கத்தை யார் கைக்கொள்கிறார்கள்?

**ஞானாம்பிகை.**—தாங்கள் உலக வழக்கத்தை விட்டாலும் தங்களுக்கு ஒரு பெண் இருந்தால் அப்பெண்ணை ஓர் ஏழைக்குக் கொடுப்பீர்களா?

**சின்னதம்பி பிள்ளை.**—ஏழைக்குக் கொடுக்க ஸம்மதிக்கேன்.

**ஞானாம்பிகை.**—மாமா! தாங்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். தாங்கள் சொல்லியது யாவும் தங்களுக்கு விரோதமாக முடிந்தன. ஏழைகளிடத்தில் பெண்ணைக் கொள்ளவேண்டுமென்றதைத் தாங்கள் அனுஸரிக்காமற் போனீர்கள். ஏழைகளுக்கும் பெண் கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள். உலக வழக்கத்தைத் தாங்கள் தள்ளி நடந்தது போதாதென்று, மற்றவர்களையும் தங்களுடன் சேர்த்து உலக வழக்கத்துக்கு விரோதமாக நடக்க வேண்டுகிறீர்கள். இது நியாயமா?

**சின்னதம்பி பிள்ளை.**—நான் யாரை உலக வழக்கத்துக்கு விரோதமாக நடக்கச் சொன்னேன் ?

**ஞானம்பிகை.**—என்னை வெளிப்படையாகச் சொல்லக் கட்டாயப்படுத்துகிறீர்கள். தனவந்தரிடத்தில் பெண்ணைக் கொடுக்கவேண்டுமென்றும் உலக வழக்கத்தை விட்டு என் தந்தையை ஓர் ஏழைக்கு அவர் பெண்ணைக் கொடுக்கச் சொல்விக் கட்டாயப்படுத்தலாமோ ? தங்களுக்குப் பெண்ணிருந்தால் ஏழைக்குக் கொடுக்கமாட்டேன் என்றீர்களே !

**சின்னதம்பி பிள்ளை.**—எந்த ஏழைக்கு அவர் பெண்ணைக் கொடுக்கச் சொன்னேன் !

**ஞானம்பிகை.**—முன் யாவரும் ஒப்புக்கொண்டது போல் என் தந்தையை நோக்கத் தாங்கள் அவருக்குமுன் ஏழையல்லவா ? ஆனதால் ஏழைக்கல்லவா தனவந்தர் பெண்ணைக் கேட்கிறீர்கள் (என்று நகைத்துப் படிக்கட்டிறங்கி ஓடிவிட்டாள்).

யாவரும் கெக்கலிகொட்டி நகைத்தார்கள்.

**வேலாயுதம் பிள்ளை.**—மைத்துனரே ! என் மகள் சொல்லியது யாவும் நியாயமாகக் காண்கிறதா (என்று நகைத்தார்).

**சின்னதம்பி பிள்ளை.**—அத்தான் ! தாங்கள் ஒரு பொய்யைச் சொன்னால் தங்கள் குமாரத்தி அதைப் பொருந்தச் சொல்லிவிடுவாள் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். (என்று நகைத்தார்).

அங்கிருந்த முத்தம்மாள் தன்மகள் பேசியதைக் கேட்டு தேகம் பூரித்திருந்தாள். மற்றப் பெண் பிள்ளைகள் எல்லாம் அவள் பேசும் திறமைக்கு அதிசயப்பட்டிருந்தார்கள்.

**நல்லமுத்து பிள்ளை.**—தான் கேட்கப்போவதை முன்னறிந்து அதற்கேற்ற கேள்விகளைக் கேட்டு யாவரையும் வாயைத்

திறக்கவிடாமல் செய்த ஞானம்பிகையின் ஸாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா (என்றார்).

மீனாக்ஷிஸுந்தரம் புன்னகையோடிருந்தான்.

அடுத்த நாள் ஆலங்குடியிலிருந்த குப்பம்மாளும் கிழவியும் ஓராண்பிள்ளையோடு வந்ததை முத்தம்மாள் பார்த்து, குப்பம்மாளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, கிழவிக்கும் முகமன் கூறினாள்.

**குப்பம்மாள்.**—அம்மா ! இருளாயி! உனக்கு தேகம் அசௌக்கியமாயிருக்கிறதென்று கேள்விப்பட்டதால் நான்தோசைக்கும் மற்ற பலகாரத்துக்கும் போட்டிருந்த மாவையும் கவனிக்காமல் வைத்துவிட்டு, நானும் என் புருடனும் கிழவியை அழைத்துக்கொண்டு வந்தோம். ஏன் அவ்விதம் பொய்சொல்லி அனுப்பினாய் ?

**முத்தம்மாள்.**—அம்மா ! உன் புருடன் எப்பொழுது வந்தார் ?

**குப்பம்மாள்.**—அவர் வந்து ஏறக்குறைய ஒருமாதம் ஆகிறது.

முத்தம்மாள் அவர்களை அழைத்துப்போய்த் தன் நாயகன் முன்விட்டு, அவர்கள் யாரென்று சொன்னாள். வேலாயுதம் பிள்ளை அவர்களைப் பார்த்து ஸந்தோஷப்பட்டு அவர்கள் ஆயுள் காலமெல்லாம் சௌகரியமாக இருக்க அவர்களுக்கு நிலம் வாங்கிக் கொடுக்கப் பெருமாளுக்கு உத்தரவு அளித்து, மருத்துவிச்சிக்கும் அழகப்பனுக்கும் தாண்டவராயனுக்கும் அவ்விதமே செய்யச்சொல்லி, அவர்கள் கையிலும் பொருள் அதிகம் கொடுத்து, இருளாயி என்றவள் யாரென்று குப்பம்மாளுக்கும் கிழவிக்கும் சொல்லி ஸந்தோஷப்படுத்தினார். அவர்கள் வேலாயுதம் பிள்ளைக்குக் கீழ்விழுந்து நமஸ்காரஞ் செய்து முத்தம்மாளைக் கொண்டாடி நீங்கினார்கள்.

## 24—ம் அத்தியாயம்

வேலாயுதம் பிள்ளை உத்தரவு பிரகாரம் பெருமாள் செய்து வந்த பின்னர், யாவரும் முத்துப்பட்டணம் போகவேண்டுமென்று வேலாயுதம் பிள்ளை சொன்னபொழுது, செங்கமலத்தம்மாள் "நான் தங்கையையும் அவள் நாயகனையும் முன்னுக அழைத்துப் போகிறேன்" என்றாள். அவர் ஸம்மதித்து சாமியா பிள்ளையின் சிறுவர்கள் ஞானம்பிகையை விட்டுப்போகப் பிரியப்படாமலிருந்ததால், சிறுவர்களை ஞானம்பிகையிடம் விட்டு,அவர்களைமட்டும் முன்னதாக அனுப்பி, அவர்கள் சென்ற ஒரு வாரத்திற்குட்பின், வரதராஜ பிள்ளை வீட்டையும் தன் வீட்டையும் பார்த்துக்கொள்ளக் காவல் வைத்து, யாவரோடும் முத்துப்பட்டணம் போய்ச் சேர்ந்தார். வேலாயுதம் பிள்ளையின் வருகையை எதிர்நோக்கியிருந்த நகரத்தாரும் மற்றவர்களும் அவர் வந்ததற்குத் திருவிழா கொண்டாடினார்கள்.

வேலாயுதம் பிள்ளை முத்துப்பட்டணம் வந்து சேர்ந்த சில தினங்களுக்குப் பின், திருமயத்திலிருந்து சின்னசாமி பிள்ளை தன் தாய், தன் மனைவி, தன் தம்பியோடும் வந்தான். சின்னசாமி பிள்ளையும் நடேசனும் வேலாயுதம் பிள்ளையின் கால்களைப் பிடித்துக்கொண்டு "எங்களை மன்னித்து ரக்ஷிக்க வேண்டும்" என்று கதறினார்கள், வேலாயுதம் பிள்ளை அவர்களை உதைத்துத் தள்ளி "அடா துன்மார்க்கர்களா! உங்களையும் மன்னிக்கலாமா! என் கண்முன் வரவேண்டாம். நீங்கள் செய்த ஒவ்வொன்றையும் அறிந்திருக்கிறேன். போய்விடுங்கள்" என்று துரத்தினார். அவ்விடத்திலிருந்தவர்கள், எதையும் வேலாயுதம் பிள்ளைக்குச் சொல்லப் பயந்து, "வேலாயுதம் பிள்ளையின் கோபத்தைத் தணிக்க நம்மால் முடியாது; ஞானம்பிகையே வரவேண்டும்" என்று அவளுக்கு இந்த ஸமாசாரத்தை எட்டவிடவேண்டுமென்று ரகஸ்யமாகப் பேசி, நல்லமுத்துப் பிள்ளையை ஞானம்பிகையிடம் அனுப்பினார்கள். ஞானம்பிகை, நல்லமுத்துப் பிள்ளையால் சின்னசாமி பிள்ளை, நடேசன் முதலா

னவர்களை வேறிடத்தில் அழைத்துப்போய் வைக்கச்செய்து தான் ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் காப்பி கொண்டுவந்து தன் தந்தைக்குக் கொடுக்கப்போனாள்.

**வேலாயுதம் பிள்ளை.**—அம்மா ! ஞானம்பிகை ! நான் காப்பி கேட்கவில்லையே ! ஏன் கொண்டுவந்தாய் ?

**ஞானம்பிகை.**—தந்தையே ! தாங்கள் தாகமாக இருக்கிறீர்களென்றறிந்தே கொண்டுவந்தேன் (என்று லோட்டவைக் கொடுத்தாள்).

**வேலாயுதம் பிள்ளை.**—(அதை வாங்கிச் சாப்பிட்டு) நான் கோபமாகப் பேசியதால் தொண்டை காய்ந்திருக்குமென்று யூகையாக அறிந்துகொண்டு காப்பி கொண்டு வந்ததைப் பார்த்தீர்களா (என்று நகைத்தார்).

**சின்னதம்பி பிள்ளை.**—ஆம் ! நன்றாய்ப் படித்தவள் அல்லவா. கல்வியைவிடச சிறந்த பூஷணம் வேறென்ன இருகிறது ?

**ஞானம்பிகை.**—கல்வியைவிடச் சிறந்த பொருளில்லை என்பது உண்மையே யாயினும், பணத்தைத் தேடி அதைத் தக்கவிதம் உபயோகப்படுத்தாமல் புதைத்துவைத்து விடுவது போல், தங்களுக்கிருக்கும் கல்வியைப் பிரயோஜனப் படுத்தாமல்போகிறார்களே அதற்கு என்ன சொல்லுகிறது?

**வேலாயுதம் பிள்ளை.**—ஆம் ! ஆம் ! அது மிக்க பரிதாபமே !

**ஞானம்பிகை.**—தந்தையே ! நான் பின் பக்கம் சில பெண்பிள்ளைகளோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கும்பொழுது ஓர் அநியாயமான ஸமாசாரத்தைக் கேள்விப்பட்டேன். அதைக் கேட்டது முதல் என்னுடல் துடித்துக்கொண்டிருக்கிறது.

**வேலாயுதம் பிள்ளை.**—என்ன கேள்விப்பட்டாய் ?

**ஞானம்பிகை.**—ஒருவன் பத்து ரூபாய் திருடி நியாயாதிபதி முன கொண்டுபோகப்பட்டு அவன் முப்பத்தாறு அடி புட்டத்தில் படும்படி தீர்ப்புப் பெற்றனும். அவன் புட்டத்தில் உதிரமொழுக அடிப்பட்டு நெடுநாள் வைத்தியசாலை

யிலிருந்து பின் குணப்பட்டு வீட்டுக்கு வந்தான். அவன் அடைந்த தண்டனை போதா தென்று மீண்டும் அவனை யடித்துத் துன்பப்படுத்தி அவன் சுற்றத்தார்கள் துரத்தி விட்டார்களாம்.

**வேலாயுதம் பிள்ளை.**—அது அநியாயமே! அவன் திருடிய தற்கு நியாயாதிபதியால் தண்டனை அடைந்தபின், மீண்டும் தண்டிப்பது அடுக்காது.

**ஞானம்பிகை.**—ஆம்! தந்தையே! நாம் கேட்ட பிரசங்கத்திலும்

"மேலைக்கு வித்துமாகி விளைந்தவை யுணவுமாகி
ஞாலத்து வருமாபோல நாஞ்செயும் வினைகளெல்லாம்"

என்றவிதம் நாம் இப்பிறப்பில் செய்யும் புண்ணிய பாவங்கள் உடனே பக்குவப்பட்டுப் பலனைக் கொடுத்தும், மறுஜனனத்துக்கும் பலனைக் கொடுக்கக் கூடியதாகவு மிருக்கும் என்று சொல்வதை அனுபவத்தில் பார்க்கிறோம். பத்து ரூபாய் திருடியவன் வினை உடனே பக்குவப்பட்டு அதன் பலனை அனுபவித்துவிட்டான். ஆனதால், அவனை மீண்டும் தண்டித்தல் கூடாது.

**சின்னதம்பி பிள்ளை.**—பத்துரூபாய் திருடிய வினையின் பலன் நியாயாதிபதியாலும் பின் வீட்டாராலும் தண்டிக்கப்பட வேண்டுமென்றிருந்ததால், இரண்டிடத்திலும் தண்டிக்கப் பட்டான் என்று சொல்லக்கூடாதா?

**ஞானம்பிகை.**—ஆம்! மாமா! அவன் இரண்டிடத்திலும் தண்டனை அடைய வேண்டுமென்பதே அவன் வினையின்பலன் நியாயாதிபதி அவன் செய்த குற்றத்துக்கு நியாயமாக தண்டித்ததால் நியாயாதிபதிமேல் வினையேறாது. வீட்டில் தண்டித்தவர்களுக்கு வினையேறி அவ்வினையின் பலனை அவனைத் தண்டித்தவர்கள் அனுபவிக்கவேண்டு மல்லவா?

**வேலாயுதம் பிள்ளை.**—ஆம்! வீட்டில் தண்டித்ததால் உண்டாகிய வினையின் பலனை தண்டித்தவர்கள் அனுபவிக்க வேண்டும்.

ஞானம்பிகை.—அவ்விதம் தண்டித்தவர்கள் கல்வியின் பயனை நன்கு உபயோகப்படுத்தவில்லை யென்று காண்கிறது.

“ கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக ”

என்ற செந்நாப் புலவரின் திருவாக்கால் நாம் கற்றறிந்த விதம் நடக்கவேண்டும். அவ்விதம் நடக்காதவர்களுக்குக் கல்வி இருந்தாலும் இல்லாமற்போனாலும் இரண்டும் ஒன்றே. அடிபட்டு நெடுநாள் வைத்தியசாலையிலிருந்து வந்தபின் அவன் சுற்றத்தார் ஒருவேளை சாப்பாடு போடாமலும் அடித்துத் துரத்திவிட்டார்.

“ சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். ”

ஒருவன் தன் சுற்றத்தாரைக் காப்பாற்றுவானானல் அவன் பெற்ற செல்வம் பிரயோசனப்பட்டதென்று சொல்லலாம் என்ற திருவாக்கைக் கவனிக்காமல் அவனைத் துரத்திவிட்டதால் அவன் பின்பக்கம் வந்து நின்று அழுதுகொண்டிருக்கிறான்.

வேலாயுதம் பிள்ளை.—நீ ஏதோ கேள்விப்பட்டதாக வல்லோ சொன்னாய்! அவன் நம்முடைய வீட்டில் வந்து நிற்கிறானா?

ஞானம்பிகை.—ஆம்! தந்தையே! அவன் தன் தாயோடு பின்புறத்தில் நிற்கிறான். அவனுக்கு நேரிட்ட நிர்ப்பாக்கிய ஸ்திதியைப் பார்த்து துக்கத்தால் அவன் நிற்பதைச் சொல்ல மறந்தேன்.

வேலாயுதம் பிள்ளை.—அவன் தன் தாயோடு வந்து நிற்கிறானா?

ஞானம்பிகை.—ஆம்! தந்தையே! அவனையும் அவன் தாயையும் முன்னால் தள்ளிக்கொண்டு அவன் மனைவி நிற்கிறாள்.

வேலாயுதம் பிள்ளை.—ஒருவரும் இல்லாதிருந்தது, பின் அவன் தோன்றினான். அதன்பின் அவன் தாய் வந்தாள். முடிவாக அவன் மனைவியும் வந்ததாகக் காண்கிறது. அவர்

களை வரச்சொல், நாம் நம்மாலியன்ற உதவி செய்து அனுப்பலாம்.

ஞானம்பிகை.—(நல்லமுத்துப் பிள்ளையைப் பார்த்து) அண்ணா! அவர்கள் பின்புறத்தில் நிற்கிறார்கள். அவர்களை நான் அழைக்கிறேன் என்று சொல்லவேண்டாம். முதலாளி என்னைப் பார்த்தவரல்ல! ஆனதால் என் தந்தை அழைப்பதாக அவருடைய ஸகோதரரையும் சேர்த்து அழைத்து வாருங்கள் (என்றாள்).

நல்லமுத்துப் பிள்ளை அவ்விடத்தை விட்டு நீங்கினார்.

வேலாயுதம் பிள்ளை.—ஸகோதரனும் இருக்கிறானா? (என்று நகைத்தார்).

ஞானம்பிகை "ஆம்! தந்தையே! துக்கத்தால் மறதி அதிகம் உண்டாகிறது" என்று சொல்லும்பொழுது, சின்ன சாமி பிள்ளை, அவர் மனைவி, நடேசன் மூவரும் வேலாயுதம் பிள்ளை காலில் விழுந்தார்கள். சின்னசாமி பிள்ளையின் தாய் நின்றிருந்தாள்.

வேலாயுதம் பிள்ளை.—இவர்களை யார் இங்கு வரச்சொன்னது? (என்று கேட்டார்).

ஞானம்பிகை.—"தாங்களே இவர்களை அழைத்து வரச் சொன்னீர்கள். நான் இவர்களைக் குறித்தே தங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தேன்.

"கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்"

ஒருவன் பெருந் துன்பத்தைச் செய்தாலும் நற்குணமுள்ளவர்கள் அவனுக்குத் துன்பமுண்டாகும்படி ஒன்றையும் செய்யமாட்டார்கள் என்ற வாக்கைக் கவனித்தும் நான் இது பரியந்தம் சொல்லியவைகளை நிதானித்தும் அவர்களை ஆதரியுங்கள் (என்றாள்).

யாவரும் கலீரென்று நகைத்தார்கள். வேலாயுதம்

பிள்ளையும் நகைத்து, அவர்களை ஆதரித்துத் தூக்கிவிட்டு ஞானம்பிகையைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தார். சின்ன சாமி பிள்ளை ஞானம்பிகையின் ஒரு கையைப்பிடித்துக்கொண்டு "அம்மா! ஞானம்பிகை! நான் கொடிய துன்மார்க்கன். எனக்காகப் பரிந்து வார்த்தையாடி உன் தந்தையின் மனதைத் திருப்பிய பேருபகாரத்துக்கு நான் என்ன செய்யப்போகிறேன்" என்று கதறியழுதான். நடேசன் மற்றொரு கையைப் பிடித்துக் கொண்டு "ஞானம்பிகை! நான் உன் விஷயத்தில் செய்தவைகளையெல்லாம் மறந்து எனக்கு அடிக்கடி உபகாரத்தையே செய்துகொண்டிருக்கிறாய், நான் இதை எக்காலத்திலும் மறக்கேன்" என்றான். ஞானம்பிகை ஆனந்தக்கண்ணீர் சொரிந்து அவ்விடத்தை விட்டு நீங்கினாள்.

நல்லமுத்துப் பிள்ளை.—பிறருக்கு உபகாரம் செய்யும் நிமித்தமே ஞானம்பிகை பிறந்திருக்கிறாள் (என்றார்).

ஞானம்பிகையின் கல்வியையும் அவளுக்குள்ள சாஸ்திர உணர்ச்சியையும் அவள் சாதுர்யமாகப் பேசுந் திறமையையும் கண்ட யாவரும் இவளை மனைவியாகக் கொள்ளப்போகிற மீனாக்ஷிஸுந்தரமே பாக்கியவான் என்றார்கள்.

சில நாள்களுக்குப் பின் ஞானம்பிகை புஷ்பவதியானாள். அச்சடங்கை வேலாயுதம் பிள்ளை, மிக்க மேன்மையாக நடத்தினார்.

சில வாரங்களுக்குப் பின் சின்னதம்பி பிள்ளை, பெரிய வரிசையைக் கொண்டு மேள வாத்தியத்தோடு வந்து, தன் மகனுக்குப் பெண் கொடுக்கவேண்டுமென்று வேலாயும் பிள்ளையைக் கேட்டார்.

வேலாயுதம் பிள்ளை, "மைத்துனரே! நான் பெண் கொடுப்பதானால் நீர் முன் ஒப்புக்கொண்டவிதம் மாப்பிள்ளையை எங்களிடம் விட்டுவிடவேண்டும்" என்று நகைத்தார்.

அங்கிருந்தவர்கள் யாவரும் "ஆம்! ஆம்! சின்னதம்பி

பிள்ளை ஒப்புக்கொண்ட விதம் செய்யவேண்டியதே" என்றார்கள்.

**சின்னதம்பி பிள்ளை.**—அத்தான்! தங்கள் இஷ்டம் போல் நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

வேலாயுதம் பிள்ளை பிராமணர்களை அழைத்து மூன்று மாதத்துக்குட்பின் முகூர்த்த நாள் நியமிக்கச் சொன்னதில் அவர்கள் அவ்விதமே சுபதினத்தைத் தேடிப்பார்த்து நாள் நியமித்தார்கள். நல்லமுத்துப் பிள்ளையும் சாமியா பிள்ளையும் விவாகத்துக்கு வந்து சேருகிறோமென்று வேலாயுதம் பிள்ளையிடம் விடைபெற்று நீங்கினார்கள். ஞானம்பிகையின் விவாகத்துக்கு வேண்டிய சாமக்கிரிகைகளைச் சேகரித்து, தஞ்சாவூரிலிருந்து ஆள்களைத் தருவித்துக் கொட்டைப்பந்தல் விநோதமாகப் போடுவித்து, ஞானம்பிகையை அறிந்தவர்களுக்கும் தன்னை அறிந்தவர்களுக்கும் திருமணப்பத்திரிகை அனுப்பி யாவரையும் வரும்படி கேட்டுக்கொண்டார். காஞ்சீபுரத்திலிருந்து கோபால கிருஷ்ண பிள்ளை, செந்தில்வேல் பிள்ளை, கூத்தப்பெருமான் பிள்ளை, பெரியண்ண பிள்ளை, வேதவல்லி யம்மாள், கிருஷ்ண வேணி யம்மாள் அவர்கள் பிள்ளைகளும் திருப்பாதிரிப்புலியூரிலிருந்து சங்கரலிங்கம் பிள்ளை, சிவநேசம் அம்மாள், தரங்கன் பாடியிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர், அவர் மனைவி, செல்லம்மாள், நல்லமுத்துப் பிள்ளை, அவர் மனைவி, சாமியா பிள்ளை திருமயத்திலிருந்து சின்னசாமிபிள்ளை, நடேசன் முதலானவர்களும், முத்துப்பட்டணத்திலுள்ள நகரத்தார்களும் நிறைந்த கல்யாண மண்டபத்தில், தாம் தாம் என்ற வாத்திய கோஷ முழங்க, சுபமுகூர்த்தத்தில் மீனாக்ஷிஸுந்தரம் ஞானம்பிகைக்கு மாங்கல்யம் தரித்தான். யாவரும் ஆசீர்வதித்தார்கள். செங்கமலத்தம்மாளும், முத்தம்மாளும் உள்ளம்பூரித்தார்கள். வேலாயுதம்பிள்ளை அடங்கா ஆனந்தமடைந்து விவாகத்துக்கு வந்த பிராமணர்களுடைய மனம் ஸந்தோஷமடையப் பணத்தை வாரிவாரிக் கொடுத்துக்கொண்டிருந்தார். பெண்ணும் பிள்ளையும் பெரியவர்களை வணங்கி ஆசீர்வாதம் பெற்றார்கள்.

தரங்கன்பாடியிலிருந்து வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஞானம்பிகையைப் பார்த்து "அம்மணி! நான் உன் விஷயத்தில் இழைத்த கொடுமை என் மனதைப் புண்படுத்திக்கொண்டிருந்தது. இன்று என் கண் குளிர்ந்தது. என் மனம் மகிழ்ந்தது" என்று ஆசீர்வதித்தார்.

விவாகச் சடங்கு முற்றிலும் நிறைவேறியபின் வேலாயுதம் பிள்ளை ஊர் விருந்து முதலானதும் செய்து, தான் சொல்லியவிதம் பெருந்தனத்தைப் பெண்ணுக்குச சீதனமாகக் கொடுத்தார். வந்தவர்கள் மனமகிழ அவரவர்களுடைய நிலைமைக்குத் தக்கவிதம் மரியாதை செய்தனுப்பினர். ஞானம்பிகையை வளர்த்த உண்ணாமுலையம்மாள் மனமகிழ அவள் அணிந்து கொள்ளத் தகுந்த நகைகளைச் செய்து கொடுத்து, அவள் எப்பொழுதும் ஞானம்பிகையோடு இருக்கும்படி வேண்டினர். வரதராஜ பிள்ளையும் அவர் மனைவி மீனம்பாளையும் தனித்தழைத்து, அவர்களுக்கிருக்கும் சொத்து எவ்வளவென்று அறிந்து, அவர்களைப் பெருந் தனவந்தரென்று யாவரும் மதிக்கத்தக்க விதம் ஏராளமான பூஸ்திதியை வாங்கிக் கொள்ளப் பெருந் தனத்தைக் கொடுத்து, "தம்பி! வரதராஜா! 'வேலாயுதம் பிள்ளை தனவந்தராயும் அவர் எனக்குச் சிறிய தந்தையாயும் இருந்தாலும் என்ன பிரயோஜனம்? எனக்கு அவருடைய ஆஸ்தியைக் கொடுக்கப் போகிறாரா' என்றாய். அப்பொழுது நான் "உனக்குக் கொடுக்கும்படி சொல்லுகிறேன் என்றேன். நான் சொல்லியவிதம் அவர் செய்தார் பார்த்தாயா" என்று நகைத்தார். வரதராஜ பிள்ளையும் அவர் மனைவியும் அதிக சந்தோஷமடைந்து "எங்களுடைய அதிர்ஷ்ட வசத்தால் ஞானம்பிகை எங்களோடிருக்க நேர்ந்தது. அவளால் தாங்கள் எங்களிடத்தில் வந்து, எங்களைப் பெரும் பணக்காரராக்கிவிட்டீர்கள்" என்று அவருக்கு நமஸ்காரஞ் செய்து நின்றார்கள்.

வேலாயுதம் பிள்ளை அவர்களுக்கு ஆசி கூறி, "தம்பி வரதராஜா எனக்கு இப்பக்கம் இருக்கப் பிரியமில்லை ஆன

தால் நான் கும்பகோணத்தில் வாங்கியிருக்கும் வீட்டுக்கடுத்த மனைகளை விலைக்கு வாங்கி முன்னிருக்கும் வீட்டைச் சேர்த்து ஒரு பெரிய மெத்தை வீடாகக் கட்டவேண்டு மென்ற எண்ணம் இருப்பதால் அவ்வேலையை நீ ஒப்புக்கொண்டு முடிக்க வேண்டும்" என்றார். வரதராஜ பிள்ளை குதூகலத்துடன் "ஐயாவே! தாங்கள் எனக்குப் பெருநிதியைக் கொடுத்து என்னைத் தனவந்தனுக்கியதைவிடத் தாங்கள் இப்பொழுது சொல்லியதே என்னை ஆனந்தத்தில் அழுத்தியது. தங்களைவிட்டுப் பிரிய வேண்டுமே என்ற கவலை எனக்கிருந்ததை நீக்கிவிட்டீர்கள். நான் கூடிய சீக்கிரத்தில் அவ்வேலையை முடித்துவிடுகிறேன்" என்று அவரிடம் விடைபெற்று நீங்கினர்.

ஞானம்பிகையின் வேண்டுகோளால் சின்னசாமி பிள்ளைக்குள்ள கடனைத் தீர்த்து அவனுடைய நிலத்தை மீட்டுக் கொடுத்தாராயினும் அவன் நெடுநாள் உயிரோடிராமல் காலஞ்சென்றான். நல்லமுத்துப் பிள்ளை ஞானம்பிகை விஷயத்தில் காட்டிய அன்பை வேலாயுதம் பிள்ளை மறக்காமல் அவர் காலமெல்லாம் ஸௌகரியமாயிருக்க நிலம் வாங்கிக்கொடுத்து அவரை ஸந்தோஷப்படுத்தினர். ஒரு வருடத்திற்குபின் சங்கரலிங்கம் பிள்ளையின் நெருங்கிய பந்துக்களில் ஒருவனுக்குக் கோகிலம்பாளைக் கொடுத்து யாவரும் ஸந்தோஷமடைய விவாகத்தை முடித்துவைத்தார்.

வரதராஜ பிள்ளை சொல்லியவண்ணம கும்பகோணத்தில் பெரிய வீட்டைக் கட்டி முடித்தார். வேலாயுதம் பிள்ளை தன் மகள் மருமகனோடு கும்பகோணத்தில் காலங்கழித்துவந்தார். செங்கமலம் நெடுநாளிருக்காமல் காலஞ்சென்றாள், சில வருடங்களுக்குப்பின் ஞானம்பிகைக்கு இரண்டு ஆண்குழந்தைகளும் ஓர் பெண் குழந்தையும் உண்டாயின. மீனம்பாளும் இரண்டு ஆண் குழந்தைகளையும் மூன்று பெண் குழந்தைகளையும் பெற்றாள். கோகிலம்பாள் மூன்று பெண்குழந்தைகளையும் ஓர் ஆண்குழந்தையையும் பெற்றாள். நடேசன் நெடுநாள்

நன்னடக்கையைக் கைப்பற்றி யிருந்ததை வேலாயுதம் பிள்ளை கண்டு, அவனுக்குச் சின்னசாமி பிள்ளையின் மைத்துனியை விவாகம் முடித்துவைத்தார். ஞானம்பிகை ஒரு சிறிய கண்ணாடிப்பெட்டியில் ஓர் ஜதை கம்மலையும் ஓர் ஜதை காப்பையும் வைத்து, தான் வேலை செய்திருந்த காலத்தில் கிடைத்த வெகுமதி யென்று யாவருக்கும் அவைகளைக் காட்டிக்கொண்டிருந்தாள். வேலாயுதம் பிள்ளை ஞானம்பிகையின் குழந்தைகளையும் மீனம்பாள் குழந்தைகளையும் கோகிலம்பாள் குழந்தைகளையும் பார்க்கும்பொழுதெல்லாம், மீனம்பாள் தன் பெண்களை ஞானம்பிகையின் குமாரர்களுக்கும் கோகிலம்பாள் மகனுக்கும் கொடுக்க வேண்டுமென்றும், ஞானம்பிகையும் கோகிலம்பாளும் தங்கள் பெண்களை மீனம்பாள் குமாரர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் சொல்லிக்கொண்டிருப்பார். ஏழைகளுக்கும் தன் சுற்றத்தாருக்கும் தன் செல்வத்தை உதவி யாவரும் தன்னைப் புகழ

"காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள"

"அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

என்ற திருவாக்கை நிலைநிறுத்தி, தன் மருமகனோடும் தன் மகளோடும் சாஸ்திர விசாரணையில் காலங்கழித்து வந்தார்.
சுபம்.

முற்றிற்று.

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

கடவுள் துணை

# விளம்பரம்.

இரங்கூனில் பேபர் கறென்ஸி ஆபீஸில் பொக்கிஷதாரராக இருந்து இப்பொழுது உபகாரச் சம்பளம் பெற்றிருக்கிற ராய்சாயிப் திரிசிரபுரம் ம. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் இயற்றிய செந்தமிழ்க் கற்பனைக் கதைகள் பெரும்பாலும் இங்க்லிஷ் நாவல்களின் போக்கை அநுசரித்து, சிறுவர்களும் சிறுமியர்களும் எளிதிலறியும் விதம் நாடகசசாயலாய், சம்பாஷணை ரூபமாக எழுதியிருக்கின்றன. தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கங்களையும், நன்னெறியையும், உலக தந்திரங்களையும் அறிய விரும்புவோர்க்கெல்லாம் இக்கதைகள் மிகுந்த பயனளிப்பதோடு, மனக்களிப்பையும் உற்சாகத்தையும் தரும் என்பது நிச்சயம். அன்றியும் ஒவ்வொரு புத்தகத்திலும் பத்தொன்பதாவது அத்தியாயம் தருக்க நெறி பிறழாது சாஸ்திர விசாரணை செய்யும் நன்மையினையும் அதன் உயர்வினையும் காட்டுவதால், அவை அனேகம் பால்யர்களுக்கும் பால்யைகளுக்கும் மிகவும் பயனளிக்கும் என்பதும் நிச்சயமே.


கமலாக்ஷி

இதில் சந்தர்பத்துக்கேற்ற விதம் அழகிய படங்கள் 20 சேர்த்திருக்கின்றன.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இரண்டு பாகமும் ஒன்று சேர்த்த (ராப்பர்) ... | 1 | 8 | 0 |

## விஜயசுந்தரம்

இதில் சந்தர்பத்துக்கேற்ற விதம் அழகிய படங்கள் 20 சேர்த்திருக்கின்றன.

இரண்டு பாகமும் ஒன்று சேர்த்த (ராப்பர்) ... 2 0 0

## ஞானசம்பந்தம்

இரண்டு பாகமும் ஒன்று சேர்த்த (ராப்பர்) ... 1 4 0

## சிவஞானம்

இரண்டு பாகமும் ஒன்று சேர்த்த (ராப்பர்) (அச்சில்).

## ஞானப்பிரகாசம்

இரண்டு பாகமும் ஒன்று சேர்த்த (ராப்பர்) (அச்சில்)

## அரிச்சந்திரன்

ராப்பர் ... 0 10 0

தபால் வர்த்தனை வேறு.

இவை அடியிற்கண்ட இடத்தில் கிடைக்கும்:—

ராய் சாயபு. தி. ம. பொன்னுசாமி பிள்ளை.

102, வரதா முத்தியப்பன் தெரு,

*George Town, Madras.*